673. ஆங்குரைக்க லாம்பொன் மலர்ப்பாதம், அஃதன்றே
ஆங்குரைக்க லாம்பொன் அணிதில்லை – ஆங்குரைத்த
அம்பலத்தும் அண்டத்தும் அப்பாலு மாய்நின்ற
அம்பரத்தும், அண்டத்தும் ஆம்! 17

674. மாயனைஓர் பாகம் அமர்ந்தானை, வானவரும்
மாயவரும் மால்கடல்நஞ்சு உண்டானை – மாய
உருவானை மாலை ஒளியானை, வானின்
உருவானை ஏத்தி உணர். 18

---

*என்று - அவனைப் பலவகையிலும் சொல்லிச் சொல்லி. ஆங்கு - அவ்வாற்றால். பால் ஆர் புனல் பாய் சடை ஆனாள் - பல பக்கங்களிலும் நிறைந்துள்ள நீரில் பொருந்திய சடைப் பூண்டு போல இவள் ஆகிவிட்டாள். சடைப் பூண்டைக் 'கிடை' என்பர். அதனை,*

*நீருட் பிறந்து நிறம் பசியயேனும்*
*ஈரம் கிடையகத் தில்லாகும்[2]*

*என்பதனானும் அறிக. சடைப் பூண்டு வலுவற்ற ஒரு மெல்லிய பொருள். 'காதலால் இவள் அவ்வாறு மெலிந்து விட்டாள்' என்க. இது தலைவியது வேறுபாடு கண்டு வினாய செவிலிக்குத் தோழி 'உண்மை செப்பல்' வகையால் அறத்தொடு நின்றது.*

*673.* **குறிப்புரை :** *இதனுள், "ஆங்கு" என்பனவற்றுள் முன் இரண்டும் அசைகள். ஈற்றில் உள்ளது, அவ்வாறு என்னும் பொருட்டு. "மலர்ப் பாதம்" எனப் பொதுப்படக் கூறப்பட்டதாயினும், சொல்லுவான் குறிப்பால் அது சிவனது மலர்ப் பாதத்தையே குறித்தது. 'சிவனது மலர்ப் பாதத்தை உரைத்து மாற்று அறியப்படும் - பொன் என்றே சொல்லலாம். அஃதன்றே, பொன் என உரைக்கலாம். தில்லையுள் அவ்வாறு - பொன் - என்றே சொல்லப்பட்ட அம்பலத்திலும், அண்டம் முழுவதிலும், அண்டத்திற்கு அப்பாலுமாய் உள்ள அம்பரத்திலும் (சிதம்பரத்திலும் - சிதாகாசத்திலும்), அத்தன்மையதாகிய சிவலோகத்திலும் உள்ளது என இயைத்துக் கொள்க. சிவபெருமானது திருவடிச் சிறப்பினைப் புகழ்ந்தவாறு. திருவடியாவது அவனது சத்தியேயாகலின் அஃது இவ்வகையான புகழ்ச்சிகளுக்கெல்லாம் உரியதாயிற்று. "அப்பாலுமாய்" என்ற உம்மை. 'அண்டமும் ஆய்' என இறந்தது தழுவி நின்றது. அண்டம் இரண்டில் பின்னது சிவலோகம். இதனுள்ளும் மடக்கணி வரவில்லை.*

---

*1. நாலடியார் - 360.*

675. உணரா வளைகழலா, உற்றுன்பாற் சங்கம்;
உணரா வளைகழல ஒட்டி – உணரா
அளைந்தான மேனி அணியாரூ ரேசென்(று)
அளைந்தானை ஆமாறு கண்டு. 19

676. கண்டிறந்து, காயெரியின் வீழ்ந்து கடிதோடிக்
கண்டிறந்து காமன் பொடியாகக் – கண்டிறந்து
கானின் உகந்தாடும் கருத்தர்க்குக் காட்டினான்
கானின்உகந் தாடுங் கருத்து. 20

---

*674. குறிப்புரை : அமர்ந்தான் - விரும்பினான். மாய வரு - இறக்கும்படி வந்த. மால் கடல் - பெரிய கடல். தனிச்சீரில் "மாயம்" என்றது வஞ்சனையை. 'மாயத்து' என்னும் அத்துச் சாரியை அணிநயம் நோக்கித் தொகுக்கப்பட்டது. உருவான் - ஊடுருவிமாட்டான்; 'உட்புகான்' என்றபடி. மாலை ஒளி - மாலைக் காலத்துச் செவ்வான ஒளி. ஒளியான் - ஒளிபோல்பவன். வானின் உருவான, இறைவன் ஆகாயத்தை உருவாக உடையவன். "ஏத்தி உணர்" என்னும் பயனிலைக்கு 'நெஞ்சே நீ' என்னும் எழுவாய் வருவிக்க.*

*675. குறிப்புரை : இரண்டாம் அடி முதலாகத் தொடங்கியுரைக்க. அடி - 2இல் உணரா வளை அறியாமையாகிய கோட்டம். கழல - நீங்க. தனிச் சீரில் "உணரா" என்னும் எச்சத்தை. 'உணர' எனத் திரிக்க. ஒட்டி உணர்தல் - ஒன்றி உணர்தல். அவ்வாறு உணரும் உணர்வில் அணைந்து ஆன மேனி கலந்து விளங்கும் உருவம். அவ்வுருவம் விளங்குகின்ற ஆரூரில் சென்று அணைந்தானை - புற்றுருவாயவனை அணை. புற்று : அதனடியாக 'அணைந்தான்' என்னும் பெயர் பிறந்தது. ஆமாறு கண்டு - அவன் அங்ஙனம் ஆமாற்றைக் கண்டு. அன்பால் உற்று - அன்பால் பொருந்தினமையால். வளை சங்கம் கழலா உணரா - வளையல்களாகிய சங்குகள் கையை விட்டுக் கழன்று, தம் கடமையைத் தாம் உணராவாயின. கடமை - கழலாது கையிற் செறிந்து நிற்க வேண்டுவது. இதுவும் கைக்கிளைத் தலைவியது ஆற்றாமைக் கூற்று.*

*676. குறிப்புரை : 'காமன் (மன்மதன்) கண்டு இறந்து (தனது யோக நிலையைக் கண்டும் நெறி கடந்து) காய் எரியைக் கண்டு கடிது ஓடியும் அதன்கண் வீழ்ந்து இறந்து பொடியாகி, (தான் அங்ஙனம் ஆம்படி) கண் திறந்து (நெற்றிக் கண்ணைத் திறந்து அதன்பின்னும்) கானின் உகந்து ஆடும் கருத்தர்க்கு (முதுகாட்டில் விரும்பி ஆடுகின்ற முதல்வர் முன்) கானின் உகந்து ஆடும் கருத்துக் காட்டினான் (அவர் அங்ஙனம் ஆடுவதன் உண்மையைப் பலரும் உணரச் செய்தான்) உண்மையாவது, முற்றழிப்புக் காலத்தில்*

677. கருத்துடைய ஆதி, கறைமிடற்(று)எம் ஈசன்
கருத்துடைய கங்காள வேடன்; – கருத்துடைய
ஆன்ஏற்றான் நீற்றான் அனலாடி, ஆமாத்தூர்
ஆனேற்றான் ஏற்றான் எரி. 21

678. எரியாடி ஏகம்பம் என்னாதார் மேனி
எரியாடி யேகம்ப மாகும் – எரியாடி
ஈமத் திடுங்காடு தேரும் இறைபணிப்ப,
ஈமத் திடுங்காடு தான். 22

---

*எல்லாரையும் அழித்துத் தன்னை அழிப்பார் இன்றித்தான் ஒருவனேயாய் நிற்றல். இவ்வுண்மையைக் காமனை எரித்துத் தான் அவனால் மயங்குவிக்கப்படாமல் இருந்த செயல் உணர்த்துதலால், 'காமன் எரியின் வீழ்ந்து பொடியாகக் காட்டினான்' என்றார். "கருத்தர்க்கு" என்னும் நான்காவதை, 'கருத்தர்முன்' என ஏழாவதாகத் திரிக்க.*

***677. குறிப்புரை :*** *இரண்டாம் அடியில் உள்ள, "கருத்துடைய கங்காள வேடன்" என்பதை இறுதியிற் கூட்டுக. அடி-1ன் கருத்து - கருணை. தனிச் சீரில் 'கறுத்து' என்பது எதுகை நோக்கி, "கருத்து" எனத் திரிந்து நின்றது. கறுத்து - சினந்து. 'சின விடை' என்றபடி. சினம், இன அடை. ஆமாத்தூர் ஆன் ஏற்றான் - ஆமாத்தூரில் தன்னை வழிபட்ட பசுக்களைக் காக்க ஏற்றுக் கொண்டவன். 'எரி ஏற்றான்' என மாற்றிக் கொள்க. இதுவும் பெயர். அடி-2-ல் கருதுடைய - 'பிறவி துடைப்புண்ணும்படி கங்காள வேடன் ஆயினான்' என்க. 'சிவபிரானது திருமேனியில் தன் உடம்பு தீண்டப் பெற்றவர் பிறப்பறுவர்' என்பது பற்றி இவ்வாறு கூறினார். கங்காளம் பிரம விட்டுணுக்களது எலும்புக் கூடு. இவைகளைச் சிவபிரான் தன் தோள்மேல் தாங்கினான். "கங்காளம் தோள்மேலே காதலித்தான் காணேடி"[1] என்னும் திருவாசகத்தால் அறிக.*

***678. குறிப்புரை :*** *இரண்டாம் அடியில் உள்ள ஏகாரம் தேற்றம். அதன்பின் வந்த "கம்பம்" நடுக்கம் ஆதலின், அஃது இங்குச் சாம்பலாகிச் சிந்துதலைக் குறித்தது. தனிச் சீரில் எரியாடி - தீ எரியப்படுவதாகிய 'ஈ மத்தை' என்பதில் சாரியை நிற்க ஐ உருபு தொகுதல் இலேகினாற்[2] கொள்க. ஈமத்தையும் இடும் காட்டையும் ஆடரங்காகத் தேரும் இறை சிவன் அவன் பணிப்ப - பணித்தலால். ஈமம் - பிணம் சுடும் விறகு. ஈற்றடியில் உள்ள 'காடு'*

---

1. *திருச்சாழல் - 11.*
2. *தொல் - எழுத்து - தொகை மரபு.*

679. தானயன் மாலாகி நின்றான்; தனித்துலகில்
தானயன் மாலாய தன்மையான் – தான்அக்
கரைப்படுத்தான் நான்மறையைக் காய்புலித்தோ லாடைக்
கரைப்படுத்தான்; தன்பாதஞ் சார். 23

680. சாராவார் தாமுளரேல், சங்கரன்; தன் மேனிமேல்
சாராவார் கங்கை உமைநங்கை – சார்வாம்
அரவமது செஞ்சடைமேல்; அக்கொன்றை ஒற்றி
அரவமது செஞ்சடையின் மேல். 24

---

*ஆகுபெயராய் அதன்கண் கிடக்கும் விறகைக் குறித்தது. 'ஈமத்தோடு ஈமமாய் ஒழிவதேயன்றித் தன்னை எடுத்த உயிருக்கு யாதொரு பயனையும் தந்ததாகாது' என்றபடி. முன்னர், "எரியாடியே கம்பம் ஆகும்" என்றது அக்கருத்துப் பற்றியேயாம். ஈற்றில் உள்ள "தான்" என்பதும் தேற்றப் பொருளில் வந்தது. ஏகம்பத்தைக் கச்சியேகம்பம் என்றும் பொருள் கொள்ளலாம்.*

***679. குறிப்புரை :*** *"காய் புலித்தோல் ஆடைக் கரைப் படுத்தான்" என்பது, 'சிவன்' என்னும் அளவாய் நின்றது. அதனை முதலிற் கொள்க. அதன்கண் "கரை" என்றது, ஆடையில் அமைக்கப்படும் கோட்டினை; "கொடுந் தானைக் கோட்டழகும்"* என நாலடியாரிலும் கூறப்பட்டது. "தான்" என்பன பலவற்றிலும் பிரிநிலை ஏகாரம் விரிக்க. 'அயனும், மாலும் ஆக நின்றான்' என்றது. 'அவர்கள் வழியாகப் படைத்தல் காத்தல்களை நிகழ்விக்கின்றான்' என்றபடி. அடி-2ல், 'அயல் உலகில் தனித்து மால் ஆய தன்மையான் - அவ்விருவரின் வேறாய் உயிர்களிடையில் தனி ஒருவனாய்ப் பெரும் பொருளான தன்மையை யுடையவன். மால் - பெருமை. நான்மறையை அக் கரைப்படுத்தான் - நான்கு வேதங்களை ஓரோர் வரம்பிற்கு உட்படுத்தினான். அவ்வரம்புகளாவன 'அறம், பொருள், இன்பம், வீடு' என்பன. 'இவ்வாறு நாற்பொருளைக் கூறும் நான்கு நூல்களே நான்கு வேதங்கள்' எனக் கூறுதல் தமிழ் வழக்கு. இவைகளால் எல்லாம் இறைத் தன்மையை விதந்தவாறு. தன் பாதம் சார் - அவனுடைய திருவடிகளையே (நெஞ்சே) புகலிடமாக அடை.*

***680. குறிப்புரை :*** *'சார்வு' என்பது முன்னர் இரண்டிடங்களில் இறுதிநிலை கெட்டு, "சார்" என நின்றது. சார் ஆவார் தாம் உளரேல் சங்கரன் எவர் ஒருவர்க்கும் சார்வாக (பற்றுக்கோடாக) ஒருவர் உளர் என்றால் அவர் சிவன் ஒருவனே. (முன்னர்ப் பொதுவாகக் கூறிப் பின்னர்ச் சிறப்பாக விதந்தமையால் பன்மை ஒருமைகள் மயங்கின). அஃது எங்ஙனம் எனின்,*

---

* *வெண்பா - 131.*

**681.** மேலாய தேவர் வெருவ எழுநஞ்சம்
மேல்ஆயம் இன்றியே உண்பொழுதின் – மேலாய
மங்கை உமைவந் தடுத்திலளே வான்ஆளும்
அங்கை உமைவந்(து) அடுத்து. **25**

**682.** அடுத்தபொன் அம்பலமே சார்வும் அதனுள்
அடுத்த திருநட்டம் அஃதே – அடுத்ததிரு
ஆனைக்கா ஆடுவதும் மேல்என்பு பூண்பதுவும்
ஆனைக்கா வான்தன் அமைவு. **26**

---

*கங்கையும் உமையும் முறையே அவனது செஞ்சடை. மேலும், மேனிமேலும் அவைகளையே சார்வாகப் பற்றித் தங்கள் ஆரவாரத்தை அடக்கியுள்ளனர். பாம்பு அவனுடைய செஞ்சடைமேல் கொன்றை மாலையை ஒற்றினாற்போல உள்ளது. தனிச்சீரில் உள்ள "சார்வாம்" என்பதை இறுதியிற் சேர்க்க. கங்கையும், உமையும், பாம்பும் அவனையே பற்றுக்கோடாகப் பற்றியுள்ள நிலைமை, 'அனைத்துயிர்கட்கும் பற்றுக் கோடு அவனே' என்பதைக் குறிக்கும் அடையாளங்களாம் - என்பது கருத்து. "அரவம்" இரண்டில் முன்னது ஆரவாரம்; பின்னது பாம்பு.*

***681. குறிப்புரை :*** *அடி-2ல்- ஆயம் இன்றியே - வேறு ஒருவர் துணை யில்லாமலே. 'நீர் உண் பொழுதின்' என்க. இங்ஙனம் உரைத்தற்கு ஏற்ப, முதற்கண் 'எங்கள் பெருமானே' என்பதை வருவித்துக் கொள்க. வான் ஆளும் அம் கை உமை - வானுலகத்தை ஆள்கின்ற அழகிய செய்கையை உடைய உம்மை மேலாய மங்கை உமை வந்து அடுத்து 'வம்' (என்று தடுத்திலளே; (ஏன்?) 'உம்மை நஞ்சு யாதும் செய்யாது - என்னும் கருத்தினாலோ?' என்பது குறிப்பெச்சம். 'வம்' என்பது தடுத்தலை உணர்த்தும். குறிப்பு 'என்று' என்பது சொல்லெச்சம். சிவபெருமானது அளவில் ஆற்றலைப் புலப்படுத்தவாறு. ஈற்றடி எழுத்தொப்புமை மாத்திரையால் மடக்காயிற்று.*

***682. குறிப்புரை :*** *"அடுத்த" மூன்றினுள் முதலது, 'அண்மையில் உள்ள' என்றும், இடையது 'ஏற்புடையது' என்றும், இறுதியது, 'பொருந்தியுள்ள' என்றும் பொருள் தந்தன. சார்வு - இருப்பிடம். "அஃதே" என்பதன்பின்னும், 'அஃதேயும்' என எண்ணும்மை விரிக்க. ஆன் ஐ - இடப உருவான தலைவன்; திரு - இலக்குமி. திருவைப் பொருந்தியுள்ள தலைவன் மாயோன். 'அவனுக்காக ஆடுவது' என்றது, அவன் மத்தளம் முழக்க அதற்கு ஏற்ப ஆடுதல், ஈற்றடியில் உள்ள ஆனைக்கா, தலம். அமைவு - பொருந்திய ஒழுக்கம்.*

**683.** அமைவும் பிறப்பும் இறப்புமாம், மற்றுஉங்(கு)
அமைவும் பரமான ஆதி – அமையும்
திருவால வாய்சென்று சேராது, மாக்கள்
திருவாலவாய்சென்று சேர். 27

**684.** சென்றுசெருப் புக்கால் செல்ல மலர்நீக்கிச்
சென்று திருமுடிவாய் நீர்வார்த்துச் – சென்றுதன்
கண்இடந்(து)அன்றுஅப்புங் கருத்தற்குக் காட்டினான்
கண்இடந்(து) அன்று அப்பாமைப் பார்த்து. 28

**685.** பார்த்துப் பரியாதே; பால்நீறு பூசாதே;
பார்த்துப் பரிந்தங்கம் பூணாதே; – பார்த்திட்(டு)
உடையானஞ் சோதாதே; ஊனாரைக் கைவிட்(டு)
உடையானஞ் சோதாதார் ஊண். 29

---

*683. **குறிப்புரை :** "அமைவு" இரண்டில் முன்னது உலக வாழ்வு. பின்னது (உங்கு - பிறப்பையும், இறப்பையும் கடந்த) வீடுபேறு. பரம் ஆன ஆதி - இவை அனைத்தும் தன்மேலவாகக் கொண்ட முதல்வன்; இறைவன். அவன் அமைந்துள்ள திருவாலவாய்த் தலம் என்க. மாக்கள் - அறிவிலா மக்கள். திருவால் - செல்வத்தால்; செல்வமாகிய காரணத்தால் அவாய்ச் சென்று சேர் - மேலும் மேலும் அவாவி ஓடி. அஃது இருக்கும் இடத்தை நாடி அடைதல். 'இரங்கத்தக்கது' என்பது சொல்லெச்சம். சேர் - சேர்தல்; முதனிலைத் தொழிற்பெயர். 'சேர்வு' என்பதே பாடம் எனினும் ஆம். "ஆம், ஆன" - என்னும் பெயரெச்சங்கள் அடுக்கி, "ஆதி" என்னும் ஒரு பெயர் கொண்டன.*

*684. **குறிப்புரை :** இப்பாட்டுக் கண்ணப்ப நாயனாருக்கு அருள் செய்தமையை விளக்குவதாதல் வெளிப்படை. இதிலும் மடக்கணி வரவில்லை. 'காலால்' என ஆல் உருபை விரித்து ஓதுதல் பாடம் அன்று. ஈற்றடியில் கண் - மற்றொரு கண்ணை. இடத்து அப்பாமைப் பார்த்து - இடந்து அப்பாதபடி உற்று நோக்கி. காட்டினான் - தனது மற்றொரு கண்ணும் ஊறு இன்றி விளங்குதலைக் காட்டினான். கருத்து - உள்ளம். அஃது ஆகுபெயராய் உள்ளத்தின்கண் உள்ள அன்பைக் குறித்தது. எனவே, "கருத்தன்" என்றது 'அன்பன்' என்றதாயிற்று.*

*685. **குறிப்புரை :** "ஊனாரைக் கைவிட்டு" என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. ஊன் - உடம்பு. கைவிடுதல் - பற்று விடுதல். ஊண் - உண்ணும் தொழில். இதனை எழுவாயாக வைத்து, "பரியாது", "பூசாது" முதலியவற்றை*

686. ஊணொன்றும் இல்லை உறக்கில்லை உன்மாலின்
ஊணென்று பேசவோர் சங்கிழந்தாள்; – ஊணென்றும்
விட்டானே! வேள்வி துரந்தானே! வெள்ளநீர்
விட்டானே புன்சடைமேல் வேறு! 30

687. வேறுரைப்பன் கேட்டருளும்; வேதம்நான் காறங்கம்
வேறுரைத்த மேனி விரிசடையாய்! – வேறுரைத்த
பாதத்தாய்! பைங்கண் அரவூர்வாய் பாரூரும்
பாதத்தாய் என்னும் மலர். 31

---

*அதற்குப் பயனிலைகளாக்கி முடிக்க. அப்பயனிலைகளில் உள்ள ஏகாரங்கள் யாவும் தேற்றம். "பரியாது, பூசாது" முதலியன, 'அவைகளைச் செய்யாமலே உண்டாகும்' என்றபடி. அதனால், 'அந்த உணவு நியாயமான உணவாகாது, தண்ட உணவாம்' எனக் கடிந்துரைத்ததாயிற்று. பார்த்தல் - தக்கதை உணர்தல். பரிதல் - அன்பு செய்தல். அங்கம் - உடம்பு. பூணுதற்கு, 'கண்டிகை' என்னும் செயப்படுபொருள் வருவிக்க. அஞ்சு - அஞ்செழுத்து.*

***686. குறிப்புரை :*** *'ஊண் என்றும் விட்டானே" என்பது முதலாகத் தொடங்கி, 'இவள் தன்னை' என்பது வருவித்து உன் மாலின் ஊணால். 'ஊண் இல்லை; உறக்கு இல்லை;' என ஊரார் பேசும்படி சங்கினை இழந்தான்' என இயைத்து முடிக்க. ஏகாரங்கள் விளியுருபு. 'என்றும் ஊண்விட்டான்' என்பது, 'அவன் உண்பதும் இல்லை; உறங்குவதும் இல்லை' என்பதைக் குறித்தது. ஆயினும் தக்கனது அகங்காரத்தை அடக்க வேண்டி அவனது வேள்வியைத் துரந்தான். உறக்கு - உறக்கம். மால் - மயக்கம்; மையல். "மாலின்" என்னும் இன் வேண்டாவழிச் சாரியை. 'மாலாகிய ஊணால்' என்க. மையல் ஊணாக உருவகம் செய்யப்பட்டது. ஓர் - ஒப்பற்ற; சிறந்த. இதுவும் தலைவியது ஆற்றாமையைத் தோழி தலைவற்கு உரைத்து வரைவு கடாயது.*

***687. குறிப்புரை :*** *'எம்பெருமானீர்' என்பது வருவித்து, "வேறு உரைப்பன் கேட்டருளும்" என முடிக்க. வேறு - வேறாக; சிறப்பாக. உரைக்கப்படும் பொருள் ஈற்றில் உள்ள "அலர்" என்பது பழிச்சொல். அஃதாவது தலைவி, "விரிசடையாய்" என்றும், "பாதத்தாய்" என்றும், "அரவு ஊர்வாய்" என்றும் இங்ஙனம் பலவாறு பிதற்றும் பிதற்றுரை. அஃது அவர் அருளாமையால் உண்டாவதாகலின் பழியாயிற்று. வேறு உரைத்த - பிற நூல்களினினும் மேலாய்ச் சிறந்து விளங்கச் சொல்லிய. 'மேனிமேல் விரிந்த சடையாய்' என்க. வேறு உரைத்த பாதம் - ஏனைப் பலரது பாதங் களினின்றும் வேறு பிரித்து வேதாகமங்கள் உயர்த்துக் கூறிய பாதம். அவ்வுயர்வாவது, உயிர்களின்*

**688.** மலர்அணைந்து கொண்டு மகிழ்வாய்உன் பாத
மலர்அணைந்து மால்நயன மாகும் – மலர்அணைந்து
மன்சக் கரம்வேண்ட வாளா அளித்தனையால்
வன்சக்கர் அம்பரனே வாய்த்து. 32

**689.** வாய்த்த அடியார் வணங்க மலரோன்மால்
வாய்த்த அடிமுடி யுங்காணார்; – வாய்த்த
சலந்தரனைக் கொன்றிட்டுச் சங்கரனார் என்னோ!
சலந்தரனாய் நின்றவா தாம். 33

---

*பொருட்டு ஐந்தொழிலையும் செய்தல். ஈற்றடியில் **'பாதத்தாய்' என்பது இடைக் குறைந்து, "பாதத்தாய்"** என நின்றது. 'அரவு பார் ஊரும் பாதத்தாய் ஊர்வாய்' என இயைக்க. ஊர்வாய் - ஊரப்படுவாய் என்னும், அலர் - என்று இவள் சொல்கின்ற பழி. இதுவும் மேலைத் துறை - 'அலர்' என்பது சந்தி வகையால் "மலர்" என வந்தது. அவ்வெழுத்தெல்லாம் பற்றியே "மலர்" என்பது அந்தாதியாயிற்று.*

***688. குறிப்புரை :*** *ஈற்றடியில் சக்கு, 'சக்கர்' எனப் போலியாய் நின்றது. சக்கு - கண். வன் சக்கு - நெருப்புக்கண், அம் பரன் - அழகிய முதல்வன். இவ்வாறான ஈற்றடியை முதலிற் கூட்டுக. மலர் அணைந்து கொண்டு - அன்பர்கள் இடும் மலர்களை மேனிமேல் பொருந்தி ஏற்றுக்கொண்டு. பாத மலர், உருவகம். மால் - திருமால். நயனம் ஆகும் மலர் அணைந்து - தனது கண்ணாகிய மலரைச் சாத்தி, 'அணிந்து' என்பது எதுகை நோக்கி "அணைந்து" எனத் திரிந்து நின்றது. இனி, 'அணைவித்து' எனினும் ஆம். மன் - நிலை பெற்ற. வாள் - படைக்கலப் பொது. ஆல், அசை. 'இது போற்றத் தக்க ஒன்று' என்பது குறிப்பெச்சம். "வாய்த்து" என்பதை, 'வாய்ப்ப' எனத் திரித்து, "வாளா" என்பதன்பின் கூட்டுக.*

***689. குறிப்புரை :*** *அடியார்கள் எளிதில் கண்டு வணங்க, மலரோனும், மாலும் தேடியும் காணாராயினார் என்பதும், 'சலந்தரனைக் கொன்றது போலும் மறக் கருணையை உடையன் ஆயினும், கங்கையைத் தலையில் தாங்கியது போலும் அறக் கருணையை உடையன்; என்பதும் கூறியவாறு. "சலந்தரன்" இரண்டில் முன்னது ஓர் அசுரன். பின்னது சலத்தை (கங்கையை)த் தரித்தவன். 'தாம் சலந்தரனாய் நின்றவா என்னோ' என்க.*

***690. குறிப்புரை :*** *"கழிப்பாலை" இரண்டில் முன்னது ஒரு தலம்; சோழ நாட்டில் காவிரியின் வடகரையது; கொள்ளிடக் கரையது. பின்னது, அனைத்தையும் கழித்து நின்ற இடம்; நிலைமை. தாமென் கழிப்பாலை -*

690. தாம்என்ன நாம்என்ன வேறில்லை தத்துறவில்
தாம்என்னை வேறாத் தனித்திருந்து – தாமென்
கழிப்பாலை சேருங் கறைமிடற்றார்; என்னோ
கழிப்பாலை சேருங் கடன். 34

691. கடனாகக் கைதொழுமின்; கைதொழவல் லீரேல்,
கடல்நாகைக் காரோணம் மேயான் – கடநாகம்
மாளவுரித் தாடுவான் நும்மேல் வல்வினைநோய்
மாளவிரித் தாடுவான் வந்து. 35

692. வந்தார் வளைகழல்வார்; வாடித் துகில்சோர்வார்;
வந்தார் முலைமெலிவார்; வார்குழல்கள் – வந்தார்
சரிதருவார் பைங்கொன்றைத் தாராரைக் கண்டு
சரிதருவார் பைங்கொன்றைத் தார். 36

---

*அலைகள் தாவுகின்ற ஈர நிலமாகிய திருக்கழிப்பாலை. தாம் - கறைமிடற்றார். நாம் - உயிர்கள். தத்து உறவு - ஒருவரை ஒருவர் சார்ந்து நிற்கும் தொடர்பு. 'தாமும், நாமும் பொருளால் வேறாயினும், ஒருவரை ஒருவர் சார்ந்து நிற்கும் தொடர்பில் வேறாகாது ஒன்றாவேம்; அஃதாவது, இருமையில் ஒருமையாவேம் என்றபடி. 'அவ்வாறிருக்கவும், அவர் என்னின் வேறாய்த் தனித்திருப்பது, அனைத்தையும் கழித்து நாம் தனியே நின்ற நிலையில் மட்டுமே அடைய நிற்கின்ற கடன் (முறைமை) என்னோ' என்க. இறைவன் உயிர்களோடு உயிர்க்கு உயிராய் ஒன்றியிருப்பினும் பாசத்தடையால் உயிர்கள் அவனை அடைந்து அவனது இன்பத்தைப் பெறமாட்டாது கிடந்து, பாரத் தடை நீங்கிய பின்பே அவனை யடைந்து இன்புறுதலை விதந்தவாறு.*

***691. குறிப்புரை :*** *கட நாகம் - மதத்தையுடைய யானை. 'காரோணம் மேயானும், ஆடுவானும் ஆகிய பெருமானைத் தொழுமின்; தொழ வல்லிரே. அவன் வந்து உம்முடைய வல்வினை நோய் மாளும்படி இரித்து (ஓட்டி) ஆடும் (உங்களுடன் கலந்து விளங்குவான்)' என ஏற்குமாறு இயைத்து முடிக்க. 'மேயார், ஆடுவார்' எனப் பன்மையாகவும். 'நம்' எனத் தன்மையாகவும் ஓதுவன பாடங்கள் அல்ல.*

***692. குறிப்புரை :*** *மூன்றாம் அடி சிவபெருமானைக் குறித்த தொடராகும். சரிதரு - 'சடையில் நிரம்பி, வெளியேயும் வீழ்கின்ற தார்' என்க. "தாரார்" என்றாராயினும் 'தாரார் முன்' என விரித்து "வந்தார்" என மேலே கூட்டிப் பின், 'அவரைக் கண்டு வளைகழல்வார்' என உரைத்தல் கருத்து என்க. 'சுரிதருவார்', 'ஐங்கொன்றை' என்பன பாடம் அல்ல. வந்தார் - வந்த மகளிர்.*

693. தாரான் எனினும் சடைமுடியான், சங்கரன்அம்
தாரான் தசமுகனைத் தோள்நெரித்துத் – தாராய
நாளுங் கொடுத்தந்த வானவர்கள் தம்முன்னே
வாளுங் கொடுத்தான் மதித்து. 37

694. மதியாருஞ் செஞ்சடையான், வண்கொன்றைத் தாரான்
மதியாரும் மாலுடைய பாகன் – மதியாரும்
அண்ணா மலைசேரார் ஆரோடுங் கூட்டாகி
அண்ணா மலைசேர்வ ரால். 38

695. ஆல நிழற்கீழ் இருப்பதுவும் ஆய்வதறம்
ஆலம் அமுதுசெயல் ஆடுவதீ – ஆலந்
துறையுடையான் ஆனை உரியுடையான், சோற்றுத்
துறையுடையான் சோராத சொல்லு. 39

---

*"வந்தார்" என்பன பலவும் சொற்பொருட் பின்வருநிலையணியாய் வந்தன. இறுதியில், 'பைங்கொன்றைத் தார்போலும் வார் குழல்கள் சரிதருவார்' என இயைத்து முடிக்க. இதன்கண் "தார்" என்றது, தார்போலும் காயை. கொன்றைக் காயை மகளிரது கூந்தலுக்கு உவமையாகக் கூறுதல் வழக்கம். பெருமானது திருமேனி யழகைப் புகழ்ந்தவாறு.*

***693. குறிப்புரை :*** *'சடை முடியான்; சங்கரன்; அம் தாரான்; (அத்தாரினை இப்பொழுது நமக்குத்) தாரான் எனினும், தசமுகனை முதலில் (சினந்து) தோள் நெரித்துப் பின்பு (நன்கு) மதித்து, அந்த வானவர்கள்தம் முன்னே வாழ்நாளும் கொடுத்துத் தார் ஆய (தூசிப் படையில் ஏற்கத் தக்கதாகிய) வாளும் கொடுத்தான்; (ஆகலின் பின்பு தருவான்) என இயைத்து முடிக்க. ஈற்றில் எஞ்சி நின்றது அவாய் நிலை. சிவபெருமான் முன்னே முனிந்தானாயினும் பின்னே திருவுளம் இரங்குபவன் என்பது 'அவன் இராவணனை முன்னே தோள்நெரித்துப் பின்னே அருளியவாற்றால் விளங்கும்' என்றபடி.*

***694. குறிப்புரை :*** *"மதி" மூன்றில் முதலது பிறை; இறுதியது நிறைநிலா. இடையது அறிவு. மால் சிவபிரானைப் பலமுறை வழிபட்டமை பற்றி அறிவு நிறைந்தவனாகக் கூறினார். அண்ணாமலை - திருஅண்ணாமலை. ஆரோடும் - மனைவி, மக்கள் முதலிய சுற்றத்தாரும், மற்றும் நண்பரும் ஆகிய யாரோடும். கூட்டு ஆகி - கூடி வாழும் வாழ்க்கையராகி. அண்ணாமல் - நெருங்காமல்; 'வாழ்விழந்து' என்றபடி. ஐசேர்வார் - மிடற்றில் கோழைவந்து சேரப் பெறுவார். ஆல் - அசை.*

**696.** சொல்லாயம் இன்றித் தொலைவின்றித் தூநெறிக்கண்
சொல்லாய்ப் பெருத்த சுடரொளியாய்ச் – சொல்லாய
வீரட்டத் தானை, விரவார் புரம்அட்ட
வீரட்டத் தானை விரை. **40**

**697.** விரையாரும் மத்தம் விரகாகச் சூடி
விரையாரும் வெள்ளெலும்பு பூண்டு, – விரையாரும்
நஞ்சுண்ட ஆதி நலங்கழல்கள் சேராதார்
நஞ்சுண்ட வாதி நலம். **41**

---

*695. குறிப்புரை :* *"ஆலந்துறை யுடையான் என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. ஆலந்துறை - அன்பில் ஆலந்துறை. பாடல் பெறாது வேறு உளவேனும் கொள்க. 'அவனது சொல் சோராதன - பயனளியாது போகாதன. அவன் இருப்பது ஆல நிழற்கீழ்; ஆய்வது அறம்; அமுது செய்வது ஆலம். (நஞ்சு) ஆடுவது தீ' என்க. 'ஆடுவது' என்பது ஈறு குறைந்து நின்றது, சிவபெருமானது இயல்புகளை விதந்தவாறு. "இருப்பதுவும்" என்றாற்போல ஏனையவற்றிலும் இழிவு சிறப்பும்மை - உயர்ந்தவற்றைத் தாழ்ந்தனபோலக் கூறிப் புகழ்ந்தவாறு.*

*696. குறிப்புரை :* *சொல் ஆயம் - சொற்கூட்டம்; பலவகை மொழிகள். 'அவை இன்றி' என்றது, 'அவைகளைக் கடந்து' என்றபடி.*

*சொற்பதத்தார் சொற்பதமும் கடந்து நின்ற*
*சொலற்கரிய சூழலாய்**

*என அப்பரும் அருளிச் செய்தார். தொலைவு - சேய்மை. சேய்மையின்றி யிருத்தலாவது, 'அங்கு, இங்கு' எனாதபடி எங்கும் நிறைந்திருத்தல். தூநெறி - வீட்டு நெறி. அந்நெறிக்கண் உள்ள சொல், நூல்கள் 'அவைகளால் ஆயப்படும் பெருத்த சுடரொளி' என்க. தனிச்சீரில் உள்ள சொல், புகழ். 'புகழ் பொருந்திய வீரட்டம்' என்க. "வீரட்டம்" இரண்டில் முன்னது தலம். பின்னது வீர அட்டகாசம். அட்டகாசம் - பெருஞ் சிரிப்பு. ஈற்றடியில் 'வீரட்டத்தானை வணங்க' என ஒருசொல் வருவிக்க. விரை - விரைந்து முயல்.*

*697. குறிப்புரை :* *அடி-1-ல் விரை மணம். எம்மலருக்கும் மணம் உண்டு. மத்தம் - ஊமத்தை. விரகு - உபாயம். அது தான் உன்மத்தம் சூடினும் உன்மத்தன் ஆகாமையை விளக்குதல். அடி-2-ல் யாரும் விரை எலும்பு - யாவரும் விரைந்து அப்பால் விலகும் எலும்பு. தனிச்சீரில், 'வீரை' என்பது*

---

* *திருமுறை -6.95.4*

698. நலம்பாயு மாக்க நலங்கொண்டல் என்றல்
நலம்பாயு மானன் குருவ – நலம்பாய்செய்
தார்த்தார்க்கும் அண்ணா மலையா னிடந்...
தார்த்தார்க்கும் அண்ணா மலை. 42

699. மலையார் கலையோட, வார்ஓடக் கொங்கை
மலையார் கலைபோய்மால் ஆனாள்; – மலையார்
கலையுடையான் வானின் மதியுடையான், காவாத்
தலையுடையான் என்றுதொழு தாள். 43

---

*முதல் குறுகி நின்றது. வீரை - கடல். ஈற்றடியை, 'ஆதி நலம் நஞ்சுண்ட' என மாற்றி, 'முதற்கண் விதித்த நன்மைகள் மெலிந்தன' என உரைக்க. முதற்கண் விதித்த நன்மைகள் நல்வினை செய்வார்க்கு வலுப்படுதலும், தீவினை செய்வார்க்கு மெலிவடைதலும் உளவாதல் பற்றி இவ்வாறு கூறினார். "சேராதார்" என்பதில் ஆறாவது விரியாது நான்காவது விரித்தலும் ஆம்.*

***698. குறிப்புரை :*** *(இப்பாட்டு நிரம்பக் கிடையாமல் ஒரு சீர் விடுபட்டுக் கிடைத்தலால் பொருள் காண்டல் அரிது).*

***699. குறிப்புரை :*** *அடி-1-ல் மலை ஆர் கலை - மணி வடங்கள் ஒன்றோடு ஒன்று மோதுகின்ற மேகலை. கொங்கை மலை, உருவகம். அதன்மேல் உள்ள கலை, மேலாடை. மால் - மயக்கம்; மையல். மலை ஆர் கலை - மலைகளில் வாழ்கின்ற மான். வானின், கலை, பிறை. 'தலைகளைக் காவாக உடையான்' என்க. கா - தோளில் சுமக்கப்படும் பொருள். இதுவே, 'காவடி' என வழங்குகின்றது. "கலையுடையான்" என்பன முதலியவற்றைச் சொல்லி அவனைத் தொழுதாள்; அதன் பயனா மால் ஆனாள் - என்க. இதுவும் தலைவியது ஆற்றாமை கண்டு தோழி அஞ்சி உரைத்தது.*

***700. குறிப்புரை :*** *ஈற்றடியில் உள்ள சிராமலை - திருச்சிராப்பள்ளிக் குன்று. அதன் கண் உள்ள இறைவர் யாவர்க்கும் நன்மைதர இருக்கின்றார். சேமம் - நன்மை. "தாள்" மூன்றில் முதலது தாமரைத் தண்டு; இடையது திருவடி. ஈற்றது, முயற்சி, சிர ஆம் அலையாய் - சிரசிலே நீரின் அலையைத் தாங்கியுற்றவனே. சேமத் துணையே - எய்ப்பில் வைப்புப் போல உதவ இருப்பவனே. 'தாளார் (வீடு அடைய முயல்பவர்) ஏத்தும் சிராமலையார்' என்க.*

***701. குறிப்புரை :*** *'அம்பலவா! ஆர்துணையாம் பூவணத்தாய்! பூதப் படைப்பாளி! பொங்கொளியாய்!' என்பன விளி. ஆர் துணையாம் -*

700. தாளார் கமல மலரோடு, தண்மலரும்
தாள்ஆர வேசொரிந்து தாமிருந்து – தாளார்
சிராமலையாய்! சேமத் துணையேஎன்(று) ஏத்தும்
சிராமலையார் சேமத் துளார். 44

701. ஆர்துணையா ஆங்கிருப்ப(து)? அம்பலவா! அஞ்சொலுமை
ஆர்துணையா ஆனை உரிமூடின் – ஆர்துணையாம்
பூவணத்தாய்! பூதப் படையாளி! பொங்கொளியாய்!
பூவணத்தாய் என்னின், புகல். 45

702. புகலூர் உடையாய்! பொறியரவம் பூணி!
புகலூர்ப் புனற்சடையெம் பொன்னே – புகலூராய்!
வெண்காடா! வேலை விட முண்டாய்! வெள்ளேற்றாய்!
வெண்காடா என்பேனோ, நான். 46

---

*யாவர்க்கும் நிறைந்த துணையாகின்ற பூவணம், பாண்டி நாட்டுத் தலம், "அம் சொல் உமை 'பூவணத் தாய்' எனின் - 'பூப்போலும் தன்மையை தாய் என்றல். (நீ) யார் - யாரும் உம்மை தொகுத்தல். துணையா - நிகராகாதபடி. (யானையை உரிப்பார் வேறு ஒருவர் இல்லை). ஆனை உரி மூடின் - யானைத் தோலை உரித்து மூடிக் கொண்டால். ஆங்கு ஆர் துணையா இருப்பது - அவள் (உமை) அப்பொழுது யாரைத் துணையாகப் பற்றி அஞ்சாமல் இருப்பது? சிவபிரான் யானையை உரித்த பொழுது உமை அஞ்சி அகன்றாள் என்பது புராண வரலாறு. புகல் - சொல்லு. 'மூடி' என்பது பாடம் அன்று.*

*702. குறிப்புரை : "புகலூர்" மூன்றில் முதலது திருப்புகலூர்த் தலம். பொறி - படத்தில் உள்ள புள்ளிகள். இடையது - புகுதலையுடைத்தாய்ப் பொங்குகின்ற புனல் என்க. இறுதியது யாவரும் சிறப்பித்துச் சொல்கின்ற கயிலாயம். அதனை, "ஊர்க்கோட்டம்"* என்ற சிலப்பதிகாரத்தாலும் உணர்க. "வெண்காடு" இரண்டில் முன்னது சோழநாட்டுத் தலம். பின்னது, சாம்பலால் வெண்மையைப் பெற்ற சுடுகாடு. "புகலூர் உடையாய்.... வெள்ளேற்றாய்! உன்னை நான் சுடுகாட்டில் ஆடுபவன்" என்று இகழ்வேனோ என்க.*

*703. குறிப்புரை : "நானுடைய" மூன்றும் சொற்பொருட் பின்வருநிலை யணியாயே வந்தன. "காடு" இரண்டில் முன்னது, "நானுடைய காடு" என்றதனால் வினைக்காடாயிற்று. பின்னது, "கனலாடுங் காடு" என்றதனால் முதுகாடாயிற்று. காலங்கள் ஆனார் - தம் தம் காலம் முடியப் பெற்றார். 'நானுடைய மாடே' என்பன முதலான விளிகள் பலவற்றையும் முன்னே*

---

* *காதை - 9, கனாத்திறம் உரைத்தது - 11.*

703. நானுடைய மாடே!என் ஞானச் சுடர்விளக்கே!
நானுடைய குன்றமே! நான்மறையாய்! – நானுடைய
காடுடையாய்; காலங்கள் ஆனார் கனலாடும்
காடுடையாய்! காலமா னாய்! 47

704. ஆயன் றமரர் அழியா வகைசெய்தான்,
ஆயன் றமரர் அழியாமை – ஆயன்
திருத்தினான் செங்கண் விடையூர்வான் மேனி
திருத்தினான் சேதுக் கரை. 48

---

*வைத்து, 'வினைக்காட்டை உடைத் தெறிவாயாக' என முடிக்க. மாடு - செல்வம்.*

*704. குறிப்புரை : அடி-1 இல் ஆயன், நந்தகோபன், அவனுடைய தமரர் (சுற்றத்தார்) அழியா வகை செய்தான் - இந்திரன் பெய்வித்த கல்மழையால் அழியாதபடி வகை செய்து காத்தலின், பின்னொரு காலத்தில் இவ்வாறு செய்தவனாகிய திருமால். அன்று - முன் ஒரு காலத்தில் அமரர் ஆய் அழியாமையாய் - தேவர்கள் நலம் பெற்று, இராவணனால் அழியாமைப் பொருட்டு முன்னின்று. 'அழியாமைக்கு' என உருபு விரிக்க. (அவனை அழித்து) இருத்தினான் - இருக்கச் செய்தான். அவன் அன்றே விடை ஊர்வானது திருமேனியை (சிவலிங்கத்தை) சேதுக் கரையில் திருத்தினார். (செம்மையாக நிறுவி வழிபட்டான்). இராமேச்சரத் தலத்தின் சிறப்புணர்த்தியவாறு.*

*705. குறிப்புரை : அடி-1 இல் 'கரேணுவும்' என்பது "கரை யேனும்" என மருவி நின்றது. கரேணு - யானை. அடி - 2-ல் முதற்கண் கரை, எதுகை நோக்கித் திரிந்த கறை; அதன் பொருள் 'அழுக்கு' என்பது. இரண்டாவது கரையாம் - சொல்ல மாட்டோம்; 'சொல்ல வேண்டுவதில்லை' என்பதாம். அதற்குமுன் 'அது' என்னும் சுட்டுப் பெயர் நீண்டு, "ஆது" என வந்தது. யானையாயினும், மாதரது கருப்பைகள் அழுக்குப் பொருளாயினும்; சேரும் - அதன்கண் சேர்ந்துதான் பிறக்கும். அது கரையாம் - அதனை நாம் செய்ய வேண்டுவதில்லை. யானை தெய்வத் தன்மையுடைய உயிராகக் கருதப்படுவதுடன் பெரிய உருவத்தையும் உடையது. ஆயினும் அது பிறப்பது என்றால் கருப்பையுள் வீழ்ந்து கிடந்துதான் பிறக்கவேண்டும். (ஆகவே, எத்துணைத் தூயோரும், பெரியோரும் 'பிறப்பது' என்றால் கருவில் வீழ்ந்து யோனிவாய்ப் பட்டுத்தான் பிறக்க வேண்டும். அதனால் அதனை நீ வெறுத்தல் உண்மையாயின், கோளிலி எம் ஆதிதன் குறி (இலிங்கம்) கரையேனும் -*

705. கரையேனும் மாதர் கருவான சேரும்
கரையேனும் ஆது கரையாம்; – கரையேனும்;
கோளிலியெம் மாதி குறிபரவ வல்லையேல்
கோளிலியெம் மாதி குறி. 49

706. குறியார் மணிமிடற்றுக் கோலஞ்சேர் ஞானக்
குறியாகி நின்ற குணமே – குறியாகும்
ஆலங்கா டெய்தா அடைவேன்;மேல் ஆடவரம்
ஆலங்கா டெய்தா அடை. 50

---

*எல்லைக்குட்பட்ட சிறுபொருளாயினும் (அதன் பெருமையை உணர்ந்து அதனை நீ) பரவ வல்லையேல், (நீ) கோள் இலி எம் ஆதி குறி - குற்றம் இல்லாதவனாகிய எம் முதல்வனாம் சிவபெருமானால் குறிக்கப்படும் பொருளாவை. 'பிறவிக் கடலினின்றும் எடுக்கப்படுவை' என்றபடி. இறுதிக்கண் 'ஆவை' என்னும் பயனிலை எஞ்சிநின்றது. கோளிலி, சோழநாட்டுத் தலம்.*

*706.* **குறிப்புரை :** *"குறி" மூன்றில் முதலது, உடம்பில் உளதாகின்ற 'மச்சம்' என்னும் அடையாளம். 'சிவபெருமான் திருமேனி முழுதும் சிவந்திருக்க, மிடற்றில் மட்டும் உள்ள நஞ்சுக்கறை மச்சம்போல உள்ளது' என்றபடி. இடையது அடையாளம். 'கறை மிடற்றோடு கூடிய திருமேனி ஞானத்தின் அடையாளமாய் உள்ளது' என்றபடி. அவ்வாறாகி நின்ற குணமாவது அருள். தனிச் சீரில் உள்ள குறி, திருமேனி. ஆலங்காடு, 'திருவாலங்காடு' என்னும் தலம். "எய்தா" இரண்டு, 'எய்தி' என்னும் பொருட்டாய வினையெச்சம். ஈற்றில் ஆல் ஆலம் விழுது. 'ஆட' என்பதில் ஈற்று அகரம் தொகுக்கப்பட்டது. 'எம்பெருமானே' என்பதை முதற்கண் வருவித்து. 'நீ ஞானக் குறியாகி நின்ற குணமே குறியாகியுள்ள ஆலங்காடு என்று நான் அடைவேன். நீ ஆடு. அரவங்கள் உன் மேல் ஆலம் விழுது போல அங்கு ஆட என்முன் வந்து அடை' என முடிக்க. 'உனது திருக்காட்சியைத் தந்தருள வேண்டும்' என வேண்டியவாறு.*

*707.* **குறிப்புரை :** *'சிவபெருமான் மழுப் படையையும், சூலப் படையையும், நெருப்பையும் ஏந்தி யிருத்தல் தன்னை அடைந்தாரது பாசத்தை போக்குமாற்றால் அவர்களது பிறப்பை நீக்குங் குறியாய் இருக்கவும், (நல் ஊழ் இன்மையால்) பிறந்து இறப்பவராகிய மக்கள் 'திருமறைக்காட்டில் எழுந்தருளி யிருக்கும் அழகர்' எனப்படுகின்ற அவரை அடைய மாட்டார்கள்.*

707. அடையும் படைமழுவும், சூலமும் அங்கி
அடையும் பிறப்பறுப்ப தானால் – அடைய
மறைக்காடு சேரும் மணாளர்என்பாற் சேரார்,
மறைக்காடு சேர்மக்கள் தாம். 51

708. தாமேய ஆறு சமய முதற்பரமும்
தாமேய ஆறு தழைக்கின்றார்; – தாமேல்,
தழலுருவர், சங்கரவர், பொங்கரவம் பூண்ட
தழலுருவர் சங்கரர்என் பார். 52

709. பார்மேவு கின்ற பலருருவர்; பண்டரங்கர்;
பார்மேவு கின்ற படுதலையர் – பார்மேல்
வலஞ்சுழியைச் சேர்வர் மலரடிகள் சேர்வார்
வலஞ்சுழியைச் சேரவரு வார். 53

---

*('வேறு எங்கெல்லாமோ சென்று அடைவார்கள்' என்றபடி). ஈற்றடியில் உள்ள "மறைக்காடு" - இடுகாடு.*

***708. குறிப்புரை :*** *தாம் மேய ஆறு சமய முதல் பரமும் - சமயிகள் பலரும் அவரவர் விரும்பிய ஆறு சமயங்கட்கும் முதல்வர்களாய் உள்ள கடவுளர் பலரும். ('பரம்' என்பது ஆரியச் சொல்லாயினும் தமிழில் வடசொல்லாய், சொல் வகையால் அஃறிணையியற் பெயராய், இங்குப் பன்மை குறித்து நின்றது). தாம் ஏய ஆறு தழைக்கின்றார் - சிவபெருமானால் ஏவியவாற்றானே பெருமை பெற்று விளங்குகின்றனர். ('தொழிற் கடவுளர் பலரும் உயிர் இனத்தவர் ஆதலின் அவர் யாவரும் சிவபெருமானது திருவருளானே கடவுள் தன்மை பெற்று அதிகாரத்தில் உள்ளனர்' என்றபடி) தாமேல் - இனி அவரோ (சிவபெருமானாரோ) என்றால். தழுவல் உருவர் - ('தழுவல்' என்பது உகரங்கெட்டு, 'தழல்' என நின்றது). உமாதேவியால் தழுவப்பட்ட உருவத்தை யுடையவர். ('அருளாகிய சத்தியோடு கூடியவர்' என்றபடி). சங்க அரவர் ('சங்க' என்னும் அகரம் தொகுக்கப்பட்டது). அமரரும், அடியவரும் ஆகிய குழாத்தின் துதி ஆரவாரத்தை உடையவர். தழல் உருவர் - நெருப்புப் போலும் திருமேனியை யுடையவர். என்பார் - எனப்படுவார்.*

***709. குறிப்புரை :*** *"பார்" மூன்றில் முதலது பல உலகங்கள். அவைகளில் மேவும் பலராவர் மக்கள், அசுரர், இராக்கதர், நரகர், தேவர், உருத்திரர் முதலியோர். 'கலப்பினால் அவர்களேயாய் நிற்பார்' என்றவாறு. இடையது, பாழ் நிலம், ஈற்றது, நிலவுலகம். வலஞ்சுழி, சோழ நாட்டுத் தலம். ஈற்றடியில்*

710. வாரணிந்த கொங்கை உமையாள் மணவாளா,
வாரணிந்த கொன்றை மலர்சூடீ, – வாரணிந்த
செஞ்சடையாய் சீர்கொள் சிவலோகா, சேயொளியாய்
செஞ்சடையாய், செல்ல நினை. 54

711. நினைமால் கொண்டோடி, நெறியான தேடி
நினைமாலே, நெஞ்சம் நினைய – நினைமால்கொண்(டு)
ஊர்தேடி யும்பரால் அம்பரமா காளாஎன்(று)
ஊர்தேடி என்றுரைப்பான் ஊர். 55

---

*வலம் சுழி - வெற்றியாகிய வட்டம். மூன்றாம் அடியில் உள்ள "வலஞ்சுழியைச் சேர்வார்" என்பதனை எழுவாயாக்கி, முதலிற் கூட்டுக.*

***710. குறிப்புரை :*** *அடி-2-ல் வார் அணிந்த - நீளமாகத் தொடுக்கப்பட்ட. தனிச் சீரில் உள்ள வார் - நீர். ஈற்றடியில் சடை - வேர். 'எப்பொருட்கும் செவ்விய வேராய் உள்ளவனே' என்க. செல்ல நினை - நின் அடியார்களைக் கடைபோக நினை; 'இடையிலே மறந்து விடாதே' என்றபடி. "கடையவனேனை கருணையினாற் கலந்து ஆண்டுகொண்ட விடையவனே. விட்டிடுதி கண்டாய்"* என மாணிக்கவாசகரும் விண்ணப்பித்துக் கொண்டார்.*

***711. குறிப்புரை :*** *அடி-2-ல் "மாலே" என்றது சிவனை விளித்ததே. மால் - பெரியோன். இப்பெயர் இடுகுறியாய்த் திருமாலைக் குறிப்பதாயினும் காரணங் கருதியவழி பெருமை யுடையோர் பலரையும் குறிப்பதே. இதனை முதற்கண் கொண்டு உரைக்க. அடி-1-ல் நினை மால் - (உன்னையே) நினைத்தலால் உண்டாகிய மையல். நெறி- உன்னை அடையும் வழிகள். 'நெஞ்சம் நினை நினைய' என்க. "நினை மால் கொண்டு" எனப் பின்னுங் கூறியது. அடி-1-ல் கூறியதை மீட்டும் கூறிய அனுவாதம். அடி-3-ல் 'ஊர் ஊர்' என்னும் அடுக்குக் குறைந்து நின்றது. உம்பர் ஆர் - தேவர்கள் நிறைந்த. அம்பர் மாகாளம். சோழ நாட்டுத் தலம். என் ஊர் தேடி - எனது ஊரைத் தேடி வந்தவனே. 'என்று இவள் உனது ஊரை (அம்பர் மாகாளத்தை)ச் சொல்வாள்' என்க. இதில் பாடங்கள் பல திரிபுபட்டன. இதுவும் தலைவியது ஆற்றாமை கண்டு செவிலி தலைவனை எதிர்பெய்து கொண்டு கூறியது.*

***712. குறிப்புரை :*** *இடை மருதை நேசத் தார்க்கே - திருவிடை மருதூரை விரும்பும் விருப்பம் உடைய இறைவற்கே. ஏகாரம் தேற்றம் இதனை முதலிற் கொண்டு, ''என்றும்'' என்பதை இதன்பின் கூட்டுக. 'உண்பதுவும் உடைதலையில்' என மாற்றுக. 'மேல் ஊர்வதும் உரகம்' என்க. ஊடுதல்,*

---

* *திருவாசகம் - நீத்தல் விண்ணப்பம் - 1.*

712. ஊர்வதுவும் ஆனேறு உடைதலையில் உண்பதுவும்
ஊர்வதுவும்மேல்லுரகம் ஊடுவர்கொல் – ஊர்வதுவும்
ஏகம்பம் என்றும் இடைமருதை நேசத்தார்க்
கேகம்ப மாய்நின்ற ஏறு. 56

713. ஏறேய வாழ்முதலே, ஏகம்பா, எம்பெருமான்,
ஏறேறி யூரும் எரியாடி, – ஏறேய
ஆதிவிடங் காகாறை கண்டத்தாய் அம்மானே,
ஆதிவிடங் கா;உமைதன் மாட்டு. 57

714. மாட்டும் பொருளை, உருவு வருகாலம்
வாட்டும் பொருளை, மறையானை, – மாட்டும்
உருவானைச் சோதி உமைபங்கார் பங்காம்
உருவானைச் சோதி; உரை. 58

---

*இங்கே வெறுத்தல். ஊடுவர்கொல் - இவைகளை வெறுப்பாரோ! வெறார் (ஆயினும்) ஏறு - ஆண் சிங்கம் நரசிங்கம். கம்பமாய் நின்றது - நடுக்கம் உடையதாய் நின்றுவிட்டது. "நேசத்தார்க்கே" என்னும் ஏகாரத்தால், 'இவ்வாறு மிக எளியாராய்க் காணப்படுகின்றவர்க்கே' என, அவரது ஆற்றல் மிகுதி விளக்கப்பட்டது. திருமால் கொண்ட நரசிங்க அவதாரத்தைச் சிவபெருமான் சரபமாய்த் தோன்றி அழித்தமை புராணங்களில் காணப்படுவது. உரகம் - பாம்பு.*

***713. குறிப்புரை :*** *அடி-1-ல் ஏறு ஏய - தேவர்களில் ஆண்சிங்கம் போல 'வாழ்கின்ற முதலே' என்க. தனிச்சீரில் ஏறு ஏய - உயர்வு பொருந்தக் 'காறையை அணிந்த கண்டத்தை உடையவனே' என்க. காறை - கழுத்தணி; அது விடக் கறையைக் குறித்தது. 'அண்டத்தாய்' என்பது பாடம் அன்று. அடி-3-ல் "ஆதிவிடங்கா" என்பதைக் "கண்டத்தாய்" என்பதன் பின்னர்க் கூட்டுக. ஆதி விடங்கன் முதற்கண் தோன்றிய சுயம்பு மூர்த்தி. 'ஆதி விடம் உமைதன் மாட்டு கா' என இயைத்து, 'முற்காலத்தில் நீ உண்ட நஞ்சினை உமைக்குத் துன்பம் நேராதவாறு காப்பாற்று' என உரைக்க.*

***714. குறிப்புரை :*** *அடி-1-ல் மாட்டும் பொருள் - எல்லாம் வல்ல பொருள். உருவு வருகாலம் - பிறப்பு வருங் காலம். அடி-2-ல் மாட்டும் பொருள் - அந்தப் பிறப்பிலே சேர்க்கும் பொருள். மாட்டும் உரு - நெருப்புப் போல விளங்கும் திருமேனி. நெருப்பை வளர்த்தலை 'மாட்டுதல்' என்றல் வழக்கு. சோதி உமை - அழகிய உமாதேவி. அடி-4-ல் உரு - திருமேனி, சோதி - (மனமே, நீ) ஆராய்; எண்ணு. உரை - துதி.*

715. உரையா இருப்பதுவும் உன்னையே; ஊனில்
உரையாய், உயிராய்ப் பொலிந்தாய், – உரையாய
அம்பொனே சோதி; அணியாரூர் சேர்கின்ற
அம்பொனே சோதியே, ஆய்ந்து. 59

716. ஆய்ந்துன்றன் பாதம் அடைய வரும் என்மேல்
ஆய்ந்தென்றன் பாச மலமறுத் – தாய்ந்துன்றன்
பாலணையச் செய்த பரமா, பரமேட்டி,
பாலணையச் செய்த பரம். 60

717. பரமாய பைங்கண் சிரம்ஏயப் பூண்ட
பரமாய பைங்கண் சிரமே! – பரமாய
ஆறடைந்த செஞ்சடையாய்! ஐந்தடைந்த மேனியாய்!
ஆறுஅடைந்த செஞ்சடைஆய் அன்பு. 61

---

*715. குறிப்புரை : உரையா - உரைத்து; துதித்து. ஊனில் உரையாய் - உடம்பினின்றும் எழுகின்ற சொல்லாய். உரையாய அம்பொன் - மாற்று உரைக்குப் பொருந்திய அழகிய பொன். இதன்பின் உள்ள 'சோதி' என்பதை இறுதியிற் கூட்டுக. அடி-4-ல் அம் பொன் - அழகிய இலக்குமி. ஏ சோதியே - ஏவிய ஒளிவடிவானவனே. ஏவுதல் - இங்கு, வாழ விடுதல். திருவாரூர், இலக்குமி, வழிபட்ட தலமாகும். ஆய்ந்து சோதி - எனது உயிரை அலசித் தூய்மை செய்.*

*716. குறிப்புரை : அடைய - அடைவதற்கு. வரும் - விரும்பி வருகின்ற. என்மேல் ஆய்ந்து - என்னிடத்துப் படிந்துள்ள குற்றங்களை ஆராய்ந்து, அக்குற்றமாகிய, கட்டாம் மலங்களை அறுத்து. 'ஆய்ந்து அளைய' என இயையும். பரமேட்டி - முன்னோனாகிய இறைவன். அடி-4-ல் பால் - ஊழ்; வினை அணைய - அழியும் படி. பரம் - உனது கடமை 'நன்று' என ஒரு சொல் வருவித்து முடிக்க.*

*717. குறிப்புரை : "பரம்" மூன்றில் முன்னது சுமை. இடையது பரம்பொருள். இறுதியது மேன்மை. முதற்கண் உள்ள "பங்கண் சிரம்", இறந்தாரது குழிந்தாழ்ந்த கண்களையுடைய தலை. அவைகளை ஏய (பொருந்த)ப் பூண்ட "சிரமே" என இயைக்க. இச் சிரம் - தலைமை. இரண்டாம் அடியில் உள்ள "பரமய சிரமே" - என்பதற்கு, 'பரம் பொருளாக மதிக்கப் படுபவருள் தலயாயிவனே' என உரைக்க. சிவபெருமானுடைய கண்கள் திங்களும், ஞாயிறுமாய் நிற்றல் பற்றி, 'பைங்கண்' எனப்படுதல் உண்டு. பரமாய ஆறு - மேலான நதி; ஆகாய கங்கையை. ஐந்து அடைந்த*

**718.** அன்பே உடைய அரனே, அணையாத
அன்பே உடைய அனலாடி, – அன்பே
கழுமலத்துள் ஆடுங் கரியுரிபோர்த் தானே
கழுமலத்து ளாடுங் கரி. 62

**719.** கரியார்தாம் சேருங் கலைமறிகைக் கொண்டே
கரியார்தாஞ் சேருங் கவாலி, – கரியாகி
நின்ற கழிப்பாலை சேரும் பிரான்நாமம்
நின்ற கழிப்பாலை சேர். 63

---

*மேனி - 'அயன், அரி, அரன், மகேசுரன், சதாசிவன்' என்னும் மூர்த்தங்கள். "அன்பு" என்பதை 'என் அன்பு' எனக் கொண்டு, ஆறு அடைந்த செஞ்சடையை ஆய் - 'முறைப்படி உன்னை வந்து பற்றிய செவ்விய மூலத்தை ஆராய்' என உரைக்க. சடை - வேர்; மூலம். 'ஆராய்' என்றது, 'ஆராய்ந்து அருள்செய்' எனத் தன் காரியம் தோற்றி நின்றது.*

*718.* **குறிப்புரை :** *அடி-1-ல் 'அந்' என்னும் வட சொல் 'அன்' எனத் திரிந்து, அச்சத்தைக் குறிக்கும் 'பே' என்பதை அடுத்து நின்றது. அன்பே உடைய அரன். வேண்டாத அச்சத்தையுடைய உருத்திரன். வேண்டாத அச்சமாவது, கொடுமை நன்மையாதலை உணராமையால் கொள்கின்ற அச்சம். இஃது உயிர்கள் பால் உள்ளது. அணையாத - நெருங்கக் கூடாத. வன்பேய் - வலிய பேய்களை. உடைய - சுற்றிலும் கொண்ட. அடி-3-ல் கழுமல் - நிறைதல். அன்பே கழுமலத்துள் - அன்பே நிறைந்துள்ள உள்ளங்களில். ஆடும் - நடனம் புரிகின்ற. ஈற்றடியில் உள்ள கழுமலம் - சீகாழி. ஆடும் கரி - பொருந்தியுள்ள சான்று. உயிர்களின் செயல்கள் அனைத்திற்கும் சான்று. 'அரனும், அனலாடியும், கரியுரி போர்த்தானும் ஆகிய அவனே கரி' என்பாலதனை, "கழுமலத்துள் ஆடும் கரி" எனச் சிறப்பித்துக் கூறினார்.*

*719.* **குறிப்புரை :** *"கரியார்" இரண்டில் முன்னது, 'குற்றம் உடையவர்' என்னும் பொருட்டாய்த் தாருகாவன முனிவரைக் குறித்தது. பின்னது 'சான்றாவார்' என்னும் பொருட்டாய்ச் சான்றோரைக் குறித்தது. முதல் அடியில் 'சேர்த்தும்' என்னும் பிறவினைச் சொல் பிறவினை விகுதி தொகுக்கப்பட்டு, 'சேரும்' என வந்தது. கலை மறி - மான் கன்று. தனிச்சீரில் உள்ள "கரி" - சான்று. "கழிப்பாலை" இரண்டில் முன்னது சோழ நாட்டுத் தலம். பின்னது, 'உன்னிடத்தில் உள்ள குற்றங்களை நீக்கும் பான்மையால்' என்றபடி. ஐ, சாரியை. "சேர்" என்பதற்கு. 'நெஞ்சே, நீ' என்னும் எழுவாய் வருவிக்க.*

720. சேரும் பிரான்நாமம் சிந்திக்க வல்லீரேல்
சேரும் பிரான்நாமஞ் சிந்திக்கச் – சேரும்;
மலையான் மகளை மகிழ்ந்தாரூர் நின்றான்,
மலையான் மகளை மகிழ்ந்து. 64

721. மகிழ்ந்தன்பர் மாகாளஞ் செய்ய மகளிர்
மகிழ்ந்தம் பரமாகி நின்றார் – மகிழ்ந்தங்கம்
ஒன்றாகி நின்ற உமைபங்கர், ஒற்றியூர்
ஒன்றாகி நின்ற உமை. 65

722. உமைகங்கை என்றிருவர் உற்ற உணர்வும்,
உமைகங்கை என்றிருவர் காணார்; – உமைகங்கை
கார்மிடற்றம் மேனிக் கதிர்முடியான் கண்மூன்று
கார்மிடற்றம் மேனிக் கினி. 66

---

*720. குறிப்புரை : "சேரும் பிரான்" இரண்டில் முன்னது, யாவாராலும் அடையப்படும் கடவுளாகிய சிவபெருமானைக் குறித்தது. பின்னது, 'யாவரும் வந்து வணங்குகின்ற தலைவன்' எனப் பொருள் தந்தது. இதன்பின் 'என்னும்' என்னும் பண்பு உருபு விரிக்க. 'சிவபிரானுடைய பெயரைச் சிந்தித்தால் யாவாராலும் வணங்கப்படும் தலைமைப் பதவி கிடைக்கும்' என்றபடி. "சிந்திக்க" இரண்டில் முன்னது 'நீவிர் சிந்தித்தால்' எனவும், பின்னது, 'யாவரும் நினைக்கும்படி' எனவும் பொருள் தந்தன. 'அவ்வாறு சிந்திப்பதற்கு அவன் யாண்டுறைவன்' எனின், "ஆரூர் நின்றான்" என முடிக்க. உமை, கங்கை இருவருமே மலையரையன் மகளிர் ஆதலின் "மலையான் மகள்" இரண்டும் தனித்தனி அவருள் ஒவ்வொருவரைக் குறித்தது.*

*721. குறிப்புரை : மா காளம் - பெரிய 'எக் காளம்' என்னும் சின்னம். செய்ய - அதனை ஊத; 'நீர் புறப்பட்டு வர' என்றபடி. அம்பரம் - ஆகாயம்; வெளி 'வெளியாகி நின்றார்' என்பது. 'ஆடையிழந்து நின்றார்' என்பதாம். அங்கம் - உடம்பு. "உமை பங்கர்" என்பது அண்மை விளி. ஈற்றடியில் உள்ள "ஒன்றாகி" என்பது 'ஒன்றுதல் உடையீராகி' என்றபடி. உமை - உம்மை 'உம்மை அன்பர் மகிழ்ந்து' என மேலே கூட்டுக. 'உமது உலாவில் மகளிர் பலர் உம்மைக் கண்டு மையல் கொண்டனர்' எனப் பெருமானது அழகைப் புகழ்ந்தவாறு.*

*722. குறிப்புரை : அடி-2-ல் உம்மை, "உமை" என இடைக் குறைந்து நின்றது. உம்மை - முன் ஒரு காலத்தில். இருவர், அயனும் மாலும். அடி-2ல். கங்கு ஐ என்று - 'எல்லையுட்பட்ட நம்மைப் போலும் ஒருதலைவன்' எனக்*

723. இனியவா காணீர்கள்; இப்பிறவி எல்லாம்
இனியவா ஆகாமை யற்றும் – இனியவா(று)
ஆக்கை பலசெய்த ஆமாத்தூர் அம்மானை,
ஆக்கை பலசெய்த அன்று. 67

724. அன்றமரர் உய்ய அமிர்தம் அவர்க்கருளி,
அன்றவுணர் வீட அருள்செய் தான்; – அன்றவுணர்
சேராமல் நின்ற அடிகள், அடியார்க்குச்
சேராமல் நின்ற சிவம். 68

---

*கருதினமையால். அடி-4-ல் கார்மிடல் தம் மேனிக்கு - கரியதும் வலியதும் ஆகிய தங்கள் உடம்பினிடத்தே கரியமேனி திருமாலுடையது. இனி - இனிக்கும் பொருளாக. உமை, தனிச் சீரில் உ - சிவனது. மை - யாவரும். 'குற்றம்' எனக் கருதுகின்ற. கம் கை - தலையை ஏந்திய கையையும். கார் மிடற்று அம் மேனிக் கதிர் முடியான் கண் மூன்றும் - நீல கண்டத்தையுடைய அழகிய திருமேனியையும், ஒளி பொருந்திய சடை முடியையும் உடைய அவனது மூன்று கண்களையும். அடி-1-ல் உமை, கங்கை என்ற இருவர் உற்ற உணர்வும் - உமையும், கங்கையும் ஆகிய இருமகளிர் அவனையும் பொருந்தியுள்ள அன்பையும். காணார் - அறியாராயினர். 'தம் மேனியில் அறியார் ஆயினர்' என்றதனானே 'வேற்றுரு எடுத்தும் கண்டிலர்' என்பது குறிக்கப் பட்டது. 'இனிப்பு' என்பது இறுதிநிலை குன்றி முதனிலை மாத்திரமாய் நின்றது.*

*723. குறிப்புரை : "இனியவா காணீர்கள்" என்பதை இறுதிக்கண் கூட்டுக. 'இப்பிறவியில்' என ஏழாவது விரிக்க. இனி - இனிமேலும். அவா ஆகாமை - ஆசை வளராமல், ஆக்கை பல - பலவகையான பிறப்புக்களை, இனியவாறு செய்த - நல்ல வகையில் படைத்த. ஆக்கை பல செய்த அன்று அம்மானை இனியவா காணீர்கள் - உங்களுடைய உடம்பு வலுவாயிருந்து பல செயல்களை விரும்பியவாறே செய்த இளமைக் காலத்தில் பெருமானை நல்லவாறாக அறிந்து வழிபாடு செய்யாது விட்டீர்கள். 'இன்று இரங்கி என் பயன்' என்பது குறிப்பெச்சம். இப்பாட்டிற்கு, 'உலகீர், நீவிர்' என எழுவாய் வருவித்துக் கொள்க. ஆமாத்தூர், நடுநாட்டுத் தலம்.*

*724. குறிப்புரை : அன்று அவுணர் - பகைத்த அசுரர்; திரிபுரத்தவர். வீட - அழிய. அருள், மறக் கருணை. தனிச் சீரில், 'உணர்வு' என்பது, "உணர்" என முதல் நிலையளவாய் நின்றது. உணர்வு அன்றச் சேராமல் நின்ற அடிகள் - அறிவு மாறு பாடச் செல்லாதபடி செவ்வே நிற்கின்ற பெருமான்; ஈற்றடி யிலும், 'சேர்வு' என்பது, "சேர்" என முதனிலையளவாய் நின்றது. மல் -*

725. சிவனந்தஞ் செல்கதிக்கோர் கண்சேர்வ தாக்கும்,
சிவனந்தஞ் செல்கதிக்கோர் கண்ணாம்; – சிவனந்தம்
சேரும் உருவுடை யீர் செங்காட் டங்குடிமேல்
சேரும், உருவுடையீர், செல். 69

726. செல்லும் அளவும் சிதையாமல் சிந்திமின்
செல்லும் அளவும் சிவன்உம்மைச் – செல்லும்
திருமீச்சூர்க்(கு) ஏறவே செங்கண்ஏ றூரும்
திருமீச்சூர் ஈசன் திறம். 70

727. திறமென்னும் சிந்தை தெரிந்தும்மைக் காணும்!
திறமென்னும் சிந்தைக்கும் ஆமே? – திறமென்னும்
சித்தத்தீர் செல்வத் திருக்கடவூர் சேர்கின்ற
சித்தத்தீரே! செல்லும் நீர். 71

---

*வளம். மங்கலம். அடியார்களுக்குச் சேர்வாகப் (புகலிடமாக) மங்கலம் நிலைபெற்ற சிவம் என்க. அமரர்க்கு அருளித் திரிபுரத்தவர்க்கு மறக்கருணையே செய்தவனும், யாவர்க்கும் அவரது அறிவு கோட்டம் அடையாதபடி செம்மையனாய் நிற்கின்றவனும் ஆகிய பெருமான் அடியார்கட்குப் புகலிடமாய் நிற்கின்ற சிவமாய் உள்ளான்' என்க.*

*725. குறிப்புரை : அடி-1-ல் அந்தம் செல்கதிக்கு - முடிவில் அடையக் கூடிய கதிக்கு; முத்திக்கு. ஓர் கண் - ஒப்பற்ற கண்; முத்தி நெறிக்கு ஒப்பற்ற கண்ணாவது ஞானம். 'சேர்வதை ஆக்கும்' என்க. அடி-2ல் நம்தம் கதி - நம்முடைய கதி; நாம் அடையக்கூடிய கதி. அதற்குக் கண் ஆதலாவது, வழிகாட்டி யாய் நிற்றல். தனிச்சீரில் அந்தம் சிவன் சேரும் உரு உடையீர் - முடிவில் சிவனை அடையும் குறிக்கோளை உடையவர்களே. ஈற்றடியில் செல் உரு உடையீர் - நினைத்த இடத்தில் செல்லுதற்குரிய உடம்பைப் பெற்றவர்களே. 'செங்காட்டாங்குடிமேல் சேரும்' என முடிக்க. செங்காட்டாங்குடி, சோழ நாட்டுத் தலம்.*

*726. குறிப்புரை : அடி-1-ல் செல்லும் அளவும் - இயலும் அளவும். அடி-2-ல் செல்லும் அளவும் - நீவிர் மேலே செல்லும் அளவும். "உம்மை" என்னும் இரண்டாவதை, 'உம்மொடு' என மூன்றாவதாகத் திரிக்க. மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி உரைக்க. அடி-3-ல் 'திருமீயச்சூர்' என்பது "திருமீச்சூர்" எனக் குறைந்து நின்றது. இது சோழ நாட்டில் உள்ள ஒருதலம். ஏற - இதனை அடைய. ஏறு - இடபம். அடி-4-ல் திரு மீச்சு ஊர் - மங்கலம் மேற்பட்டு மிகுகின்ற 'ஈசன்' என்க.*

728. நீரே, எருதேறும் நின்மலனார் ஆவீரும்
நீரே நெடுவானில் நின்றீரும் – நீரேய்
நெருப்பாய தோற்றத்து நீளாரம் பூண்டீர்
நெருப்பாய தோற்றம் நிலைத்து. 72

729. நிலைத்திவ் வுலகனைத்தும் நீரேயாய் நின்றீர்;
நிலைத்திவ் வுலகனைத்தும் நீரே – நிலைத்தீரக்
கானப்பே ரீங்கங்கை சூடினீர்; கங்காளீர்;
கானப்பே ரீர்கங்கை யீர். 73

---

*727. குறிப்புரை : தனிச் சீர் முதலாகத் தொடங்கியுரைக்க. திறத்தை யுடையது "திறம்" எனப்பட்டது. திறம் - வலிமை - (இடையூறுகளை யெல்லாம் கடக்கும்) வலிமையுடைய சித்தத்தை. (மனத்தை - அத்துச் சாரியை நிற்க ஐயுருபு தொக்கதனை இலேசினால்* கொள்க). 'ஈர் திருக்கடவூர்' என இயைத்து, 'ஈர்க்கின்ற திருக்கடவூர்' என வினைத் தொகையாக்குக. "திருக்கடவூர் சேரும் சித்தத்தீரே" என்றது அத்தலப் பெருமானை விளித்தது. சித்தம் - உள்ளம். நீர் செல்லும் - உமது விருப்பம்போல நீர் திருக்கடவூர் செல்லும். அடி-1-ல் திறம் என்னும் சிந்தை - உண்மையில் வலிமையுடைய உள்ளமானது. உம்மைத் தெரிந்து காணும் - பல பொருள்களையும் விட்டு உம்மை ஆராய்ந்து அறியும். (அவ்வாறின்றி) திறம் என்னும் சிந்தைக்கும் ஆமே - 'யான் வலிமையுடையேன் என வாளா தற்பெருமை பேசிக்கொள்கின்ற உள்ளத்திற்கும் அது கூடுமோ? (கூடாது). 'திறமையுள்ள உள்ளத்திற்கு அடையாளம் சிவபெருமானது பெருமையை உணர்ந்து அவனைப் பற்றுதலே' என்றபடி.*

*728. குறிப்புரை : "நீரேய்... பூண்டீர்" என்பதை முதலிற் கூட்டி, 'எருதேறும் நின்மலனார் ஆவீரும் நீரே; நெருப்பாய தோற்றம் நிலைத்து நெடுவானில் நின்றீரும் நீரே' என இயைத்து முடிக்க. தனிச் சீரில் 'நீறு' என்பது எதுகை நோக்கி "நீர்" என நின்றது. சிவபெருமானது திருமேனி இயற்கையில் நெருப்புப் போன்றதாய், அதன்மேல் நீறு பூசப்பட்டிருத்தலின் அதற்கு நீறு பூத்த நெருப்பு உவமையாயிற்று. 'பூண்டு' என்பது பாடம் அன்று. ஆரம், எலும்பு மாலையும், தலை மாலையும். நிலைத்து - நிலைக்கப் பெற்று, இறைவரது இயல்பை வருணித்தவாறு.*

*729. குறிப்புரை : ஈற்றடியில் உள்ள கானப்பேர் பாண்டி நாட்டுத் தலம். அதனடியாகப் பிறந்த, "கானப்பேரீர்" என்பதை முதலில் வைத்து,*

---

* *தொல் - எழுத்து - தொகை மரபு - 15.*

730. ஈரம் உடைய இளமதியம் சூடினீர்;
ஈரம் உடைய சடையினீர்; – ஈர
வருங்காலம் ஆயினீர்; இவ்வுலகம் எல்லாம்
வருங்காலம் ஆயினீர்; வாழ்வு. 74

731. வாழ்வார் மலரணைவார், வந்த அருநாகம்
வாழ்வார் மலரணைவார்; வண்கங்கை – வாழ்வாய
தீயாட வானாள்வான் வான்கழல்கள் சேராதார்
தீயாட வானாளு மாறு. 75

---

*இவ்வுலகு அனைத்தும் நீரேயாய் நிலைத்து நின்றீர்' எனவும், 'நிலைத்த இவ்வுலகு அனைத்தும் நிலைத்து ஈர, நீரே கானப் பேர் ஈர்ங் கங்கை சூடினீர்; கங்காளீர்; கம் கையீர்' எனவும் இயைத்து உரைக்க. இரண்டாம் அடி முதலில், 'நிலைத்த' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. அதனையடுத்து வந்த "உலகனைத்தும்" என்பதில், 'உலகனைத்திலும்' என ஏழாவது விரிக்க. தனிச் சீரில், நிலைத்து - தேங்கி. ஈர - அழிக்க. இவை கங்கையின் செயல். 'ஈரக் கண்டு' என ஒருசொல் வருவிக்க. கானம் - காடு; கற்பகச் சோலை. 'அவ்விடத்து உள்ள பெரிய, குளிர்ந்த கங்கையை நீரே சூடினீர்' என்க. கம் கையீர் - கபாலத்தைக் கையில் கொண்டுள்ளீர்.*

*730. **குறிப்புரை :** அடி-1-ல் ஈரம் - குளிர்ச்சி. அடி-2-ல் ஈர் அம் - குளிர்ந்த நீர். "சடையினீர்" என்பதை விளியாக்கி முதற்கண் கூட்டுக. "ஈர வருங் காலம் ஆயினீர்" என்பதை இறுதியில் வைத்து உரைக்க. வரும் காலம் - தோன்றும் காலம். வாழ்வு - வாழ்தல்; நிலைத்தல். "வருங்காலம் ஆயினீர்" என்பதை இதன் பின்னும் கூட்டுக. "ஈர வருங்காலம்" என்பதில் ஈர்தல் - பிளத்தல்; அஃதாவது அழித்தல். ''உயிர் ஈரும் வாள்''[1] என்றார் திருவள்ளுவரும். 'உலகத்தில் மூன்று காலமும் நீரேயாயினீர்' - என்றபடி.*

*ஞாலமே, விசும்பே, இவை வந்துபோம் காலமே[2] - என மணிவாசகரும் அருளிச் செய்தார்.*

*731. **குறிப்புரை :** வண் கங்கை வாழ்வாய தீ - வளவிய கங்காதேவி பொருந்தும் இடமாகிய சடைமுடி. "தீ" என்பது உவம ஆகுபெயராய்த் தீப்போலும் சடைமுடியைக் குறித்தது. வான் ஆள்வான் - அண்டம் முழுதையும் ஆள்பவன்; சிவபெருமான் அவன் கழல்கள் சேராதார் நிலைமை பின்னர்க் கூறப்படுதலின் முன்னர்க் கூறப்பட்டவை அவன் கழல்கள்*

---

*1. திருக்குறள்*
*2. திருவாசகம் - திருச்சதகம் - 43.*

**732.** மாறாத ஆனையின்தோல் போர்த்து வளர்சடைமேல்
மாறாத நீருடைய மாகாளர், – மாறா
இடுங்கையர் சேரும் எழிலவாய், முன்னே
இடுங்கையர் சேர்வாக, ஈ. **76**

**733.** ஈயும் பொருளே; எமக்குச் சிவலோகம்
ஈயும் பொருளே! இடுகாட்டின் – ஈயும்
படநாகம் பூணும் பரலோகீர்! – என்னீர்
படநாகம் பூணும் படி. **77**

---

*சேர்ந்தாரது நிலைமையாயின. இதனை, "பிறவிப் பெருங்கடல் நீந்துவர்"[1] என்னும் குறளில் 'சேர்ந்தார்' என்பது போலக் கொள்க. 'அவன் கழல்களைச் சேர்ந்து, மலர் அணைவார் (பிரம தேவர் அப்பதவியில்) வாழ்வார்; மலர் (மலரின்கண் உள்ள திருமகளை) அணைவார் (விட்டுணு மூர்த்தி). வரு நாகம் (பாம்பணையில்) வாழ்வார். (இங்ஙனமாகச் சிலர்) அவன் கழல்களைச் சேராதாராய், தீ ஆட (உடம்பில் தீ மூண்டு எரிய) வான் ஆளும் ஆறு (கூற்றுவன் உலகை இடமாகக் கொள்ளும் வகை) இரங்கத்தக்கது என்க. 'இரங்கத் தக்கது' என்பது சொல்லெச்சம்.*

***732. குறிப்புரை :*** *'மாகாளம்' என்னும் பெயரை உடைய தலங்கள் பல உள்ளன. மாகாளர் அத்தலங்களில் இருக்கும் இறைவர். தனிச் சீரில் மாறா - நீங்காத. அடி-3-ல் இடுங்கை - சோர்தல் வறுமையால் வாடுதல். வறுமையால் வாடுவோர் அறிந்து சேரும் எழிலவாய் (அழகுடையனவாய்) முன்னே இடும் கையர் - விரைவாகக் கொடுக்கும் கையை உடையவர்கள் சேர்வு - புகலிடம். 'மாகாளரை வறியவர்க்கு இடும் கையை உடையவர்களது புகலிடமாக, அறிந்து, (நெஞ்சே, நீ) வறியவர்க்கு ஈதலைச் செய்' - என முடிக்க. "இரப்பவர்க்கு ஈய வைத்தார்; அருளும் வைத்தார்"[2] என அப்பர் அருளிச் செய்ததையும் நோக்குக. ஈதல் தொழில் நெஞ்சுக்கு இல்லையாயினும் ஈய நினைத்தலே ஈதலைச் செய்தற்கு முதல் ஆகலின் அதனைச் செய்தலாகக் கூறினார்.*

***733. குறிப்புரை :*** *'உலகீர், நீவிர்' என்பதை முதலில் வருவித்துக் கொள்க. 'அடி-4-ல் பட - நீவிர் இறந்த பின்பு நாகம் பூணும்படி. புண்ணிய போகத்தை அடையுமாற்றிற்கு. ('படிக்கு' என நான்காவது விரிக்க). அடி-1-ல் பொருள் ஈயும் - உங்கள் பொருளை வறியவர்க்கு ஈயுங்கள். (சிவபெருமானை) எமக்குச்*

---

1. *திருக்குறள்.*
2. *திருமுறை 4.38.10*

734. படியேறும் பார்த்துப் பரத்தோடும் கூட்டி;
படியேறு பார்த்துப் பரன்இப் – படிஏனைப்
பாருடையாய்! பைங்கண் புலியளதாய்! பால்நீற்றாய்!
பாருடையாய்! யானுன் பரம். 78

735. பரமாய விட்டுநின் பாதம் பணிந்தேன்
பரமாய ஆதிப் பரனே – பரமாய
நீதியே நின்மலனே! நேரார் புரம்மூன்றும்
நீதியே செய்தாய்; நினை. 79

736. நினையடைந்தேன் சித்தம் நிலையாகும் வண்ணம்
நினையடைந்தேன் சித்த நிமலா! – நினையடைந்தேன்;
கண்டத்தாய்! காளத்தி யானே கனலாரும்
கண்டத்தாய்! காவாலி! கா. 80

---

*சிவலோகம் ஈயும் பொருளே - 'எங்களுக்குச் சிவலோகத்தை ஈந்தருள்கின்ற பரம்பொருளே' என்றும், (தனிச் சீரில் - 'ஈ உம் இடுகாட்டின்' - என மாற்றிக் கொள்க). ஈ - வண்டுகளின், உம் இடுகாட்டின் - உங்காரம் பொருந்தியுள்ள இடுகாட்டின்கண் ஆடுகின்ற, 'பட நாகம் பூணும் பர போகீர்' என்னீர் என்று சொல்லித் துதியுங்கள்.*

*734. குறிப்புரை : "இப்படி" என்பது முதலாகத் தொடங்கி, அடி-2-ல் (யானோ) படி பார்த்து ஏறும் பரன் - (திடீரென மேலே பறப்பவன் அல்லன்). படிகளைப் பார்த்து ஒவ்வொன்றாகக் கடந்து மேல் ஏறுகின்ற அயலான். (என்னை) பார்த்து படி ஏறும் பரத்தோடும் கூட்டி - உற்றுப் பார்த்துப் பார்த்துத் தாம் மிகுகின்ற உனது மேலான நிலையோடு சேர்த்தருள். அடைபவர் மேல் மெல்ல மெல்லச் சேர்த்தருள் - என்று ஏறும் தன்மையை அடையப்படும் பொருள்மேல் ஏற்றினார். "பார்த்துப் படியேறும் பரன்" - என்றது உயிர்களின் இயல்பை விளக்கியவாறு. 'கூட்டுதி' என்னும் ஏவல் வினைமுற்றின் இகர விகுதி தகர ஒற்று இன்றி, "கூட்டி" என வந்தது, "நன்றுமன் அது நீ நாடாய் கூறி"[1] என்பதிற்போல.*

*735. குறிப்புரை : இரண்டாம் அடியையும் அதன்பின் மூன்றாம் அடியில் உள்ள "நீதியே! நின்மலனே!" என்பதையும் முதலிற் கூட்டியுரைக்க. "பரம்" மூன்றில் முதலது, பாரம்; பற்றுக்கள். ஏனையவை மேன்மை. நேரார் - பகைவர். அடி-4ல் 'தீயே' என்பது "தியே" எனக் குறுகி நின்றது, "திருந்தார்நன்*

---

*1. அகநானூறு - 268..*

737. காவார் பொழிற்கயிலை ஆதீ! கருவேளம்
காவாய்ப் பொலிந்த கடுவெளியே – காவாய
ஏறுடையாய்! என்னை இடைமருதிலேஎன்றும்
ஏறுடையாய்! நீயே கரி. 81

738. கரியானும் நான்முகனு மாய்நின்ற கண்ண!
கரியாருங் கூற்றங் கனியே – கரியாரும்
காடுடையாய்! காலங்கள் ஆனாய் கனலாடும்
காடுடையாய்! காலமா னாய். 82

---

*றென்றென் தியேன்[1] - என்பதிற் போல. தீயே செய்தாய்; அதனை நினை" என்க. 'அமரர்கள் நின் பாதம் பணிய முப்புரத்தை எரித்ததை நினைக' என்றது, 'அதுபோலப் பாதம் பணிந்த எனது மும்மலங்களை நீக்கியருள்' என்பது குறிப்பு.*

***736. குறிப்புரை :*** *சித்த நிமலா - எல்லாம் வல்ல சித்தனாகிய நிமலனே! தனிச் சீரில் அடையுந் தேன் கண்டத் தாய் - உனது திருமுன்பில் வந்த தேன் கலந்த இறைச்சித் துண்டத்தை (கண்ணப்பர் படைத்தது) ஏற்றவனே. 'அடையும்' என்னும் பெயரெச்சத்தில் உகரம் கெட்டது. கனல் ஆரும் கண் - நெருப்புப் பொருந்திய கண்ணையுடைய. 'தந்தாய்' என்னும் விளிப் பெயர் வலிந்து நின்றது. காவாலி - கபாலியே. அடி-2ல் 'நினை அடைந்தேன்' என முன்னர்க் கூறினமையால் அடி-1-ல் "நினையடைந்தேன்" என்பது 'எனது' என்னும் அளவாய் நின்றது.*

***737. குறிப்புரை :*** *அடி-1-ல் "கா" என்பது இளமரக் காக்களையும், "பொழில்" என்பது பெருமரச் சோலைகளையும் குறித்தன. கரு - மூலப் பொருள். அடி-2-ல் கா - கற்பகத் தரு. கடு வெளி - தூய்மையான ஆகாயம். சிதாகாசம். தனிச் சீரில், 'அங்கா' என்பது முதல் குறைந்து "கா" என நின்றது. 'அங்காக்கின்ற வாயை உடைய ஏறி' (இடபம்) என்க. வேறு - தனிச் சிறப்புடைய அடியவனாக. இடை மருது - திருவிடை மருதூர். கரி - எல்லாவற்றுக்கும் சான்று.*

***738. குறிப்புரை :*** *கண் - பார்வை; இங்கு அருள் நோக்கினைக் குறித்தது. 'அருள் நோக்கினால் அரி, அயன் இவர்களது தொழிலை நடத்துவிக்கின்றான்' என்பது கருத்து. தனிச்சீர் ஒழித்து, இரண்டாம் அடியில் ஏனைய பகுதியை இறுதிக்கண் கூட்டுக. அதன்கண், 'கூற்று' (வாக்கு) என்பது, "கூற்றம்" என*

---

*1. யாப்பருங்கலக்காரிகை உதாரணம் - ஆறடிப் பஃறொடை வெண்பா.*

739. ஆன்ஆய ஆய அடலேறே ஆரூர்க்கோன்
ஆனாய னாவமுத மேயானாய் – ஆனாய்
கவர்எலும்போ(டு) ஏந்தி கதநாகம் பூணி
கவலெலும்பு தா;கை வளை. 83

740. வளைகொண்டாய் என்னை மடவார்கள் முன்னே;
வளைகொண்டாய்; மாசற்ற சோதி – வளைகொண்டாய்
மாற்றார் கதுவ மதில்ஆரூர் சேர்கின்ற
மாற்றார் ஊர்கின்ற மயல். 84

---

*வந்தது. "குறித்தேன் கூற்றம்"* எனத் தொல்காப்பியரும் கூறினார். கரி ஆரும் கூற்றம் - உண்மை நிறைந்த வாக்கு. உண்மை மொழியே சான்றாகக் கொள்ளப் படும் ஆதலின் அதனைக் "கரி ஆரும் கூற்றம்" என்றார். உண்மை மொழி, ஞானோபதேசம். கனி - வெளிப்படுத்து, 'வழங்கு' என்றபடி. ஏகாரம், தேற்றம். தனிச்சீரில், கரி யானை, அஃது ஐராவதத்தைக் குறித்தது. ஐராவதம் வழிப்பட்ட காடு வெண்காடு; திருவெண்காடு. கனல் ஆடும் காடு - முதுகாடு. ஈற்றடியில் காலம் (காளம்) - நஞ்சு ஆனாய் - (கண்டத்தினின்று) நீங்காய்.*

***739. குறிப்புரை :*** *அடி-1-ல் உள்ள ஏகாரத்தைப் பிரித்து, 'அடல் ஏறு ஆன் ஆயனே ஆய ஆரூரன் ஆனாய்' எனக் கூட்டி, 'வலிமை பொருந்திய இடபம், ஆன் நிரைமேய்த்த ஆயன் ஆகிய மாயோனேயாக உடைய, திருஆரூர்த் தலைவன் ஆகியவனே' என உரைக்க. அடி-2-ல் 'அன்னாய்' என்பது இடைக் குறைந்து "அனாய்" என நின்றது. அன்னாய் - பல்லுயிர்க்கும் தாயே! உயிர்கட்கெல்லாம் அமுதம்போல இருப்பவனே. தனிச் சீரில் உள்ள "ஆனாய்" என்பதை மூன்றாம் அடி இறுதியிற் கூட்டி, 'இவ்விடத்தை விட்டு நீங்காய்' என உரைக்க. அடி-3-ல் கவர் எலும்பு - பிளவுபட்ட எலும்புகள். ஏந்தி - ஏந்தினவனே. பூணி - பூண்டவனே. அடி-4-ல் உள்ள தொடரை, 'எலும்பு கையினின்றும் கவர்ந்த பிரிநிலைப் பொருளவாய் வந்த ஏகாரங்கள் உயர்வு குறித்து நின்றன. வளையைத் தா என இயைத்து முடிக்க. 'தசை மெலிந்து, அழகிழந்த கை' என்றற்கு 'எலும்புக்கை' என்றாள். 'தார்' என்பது பாடம் அன்று. இதுவும் கைக்கிளைத் தலைவி ஆற்றாமையைத் தோழி இறைவற்குக் கூறிக் குறையிரந்தது.*

***740. குறிப்புரை :*** *"மாசற்ற சோதி" என்பதை முதலிற் கொண்டு, அதன்பின், முதல் அடியில் உள்ள தொடரை, 'என்னை மடவார்கள் முன்னே வளை கொண்டாய்' என மாற்றிக் கூட்டுக. "வளை கொண்டாய்" என்பது.*

---

* *தொல், சொல் - கிளவி யாக்கம்.*

741. மயலான தீரும் மருந்தாகும்; மற்றும்
மயலானார் ஆரூர் மயரார் – மயலான
கண்ணியர்தம் பாகர் கனியேர் கடிக்கொன்றைக்
கண்ணியன்றன் பாதமே கல். 85

742. கலைமான்கை, ஏனப்பூண் காண்கயிலை மானின்,
கலைமான் கறைகாண் கவாலி, – கலைமான
ஆடுவதும், பாடுவதும், காலனைப்பொன் அம்பலத்துள்
ஆடுவதும் ஆடான் அரன். 86

---

*'மெலிவித்தாய்' என்னும் பொருட்டாதலின், ''என்னை'' என்னும் இரண்டாவதற்கு முடிபாயிற்று. அடி-2-ல் வளை கொண்டாய் வளைத்துக் கொண்டாய்; அகப்படுத்திக் கொண்டாய். தனிச் சீரில் வளை - சங்கு; வெற்றிச் சங்கு. 'வெற்றிச் சங்கை உடன் கொண்டு (கைப்பற்றும் முறைகளை) ஆராய்கின்ற மாற்றார் (பகைவர்கள்) கதுவும் (முற்றுகை யிடுகின்ற; ஆயினும் கைப்பற்ற இயலாத) மதில்' என்க. ஆரூர் சேர்கின்ற (திருவாரூரைச் சென்று சேரவேண்டும் என்று எழுகின்ற) ஆர்ந்து (நிறைந்து) ஊர்கின்ற (மீதூர்கின்ற) மயல் (மையலை) மாற்று - நீக்கு. இதுவும் மேலைத் துறை. ஒற்றுமை பற்றித் தலைவியையே தோழி "என்னை" என்றார்.*

***741. குறிப்புரை :*** *மயல். நோக்கத்தால் புலப்படுதல் இயல்பாகலின் அது கண்களை மயலை உடையன போல வைத்து, "மயலான கண்ணியர்" என்றார். இத்தொடர் மகளிரைக் குறித்தல் சொல்ல வேண்டா. பாகு ஆர் - அவர்கட்குச் சருக்கரையை ஒத்தவன். கனி ஏர் - மற்றும் கனியையும் ஒப்பவன். கடி - நறுமணம். கண்ணி - முடியில் அணியும் மாலை. "கடிக்கொன்றைக் கண்ணியான்" என்பது. 'சிவன்' என்னும் அளவாய் நின்றது. கல் - போற்றக் கற்றுக்கொள். ('நெஞ்சே, நீ' - என்பது வருவித்துக் கொள்க). ஏனெனில், அவையே மயல் ஆன - உலகத்தைப் பற்றி மயக்கங்கள் பலவும் தீர்தற்கு உரிய மருந்தாகும். மற்றும் - மேலும். மயல் ஆனார் - சிவபெருமானைப் பற்றிய ஆசை நீங்காதவர்கள். ஆரூர் மயரார் - அவனது திருவாரூரை மறக்க மாட்டார்கள்.*

***742. குறிப்புரை :*** *கலை மானை ஏந்திய ஏனத்தின் (பன்றியின்) கொம்பாகிய பூண் இவற்றுடன் காணப்படுகின்ற கயிலைப் பெரியோனால் (மான் - பெரியோன்). அடி-2ல் மான் (நின் மகள்) கலைக் கறை - ஆடை பற்றிய குற்றத்தில். கவாலி - அவனேயாயினார். (அஃதாவது, உடையில்லாதவள் ஆயினாள். ஆடையின் குற்றம் - ஆடை அணியாமை.*

743. அரனே! அணியாரூர் மூலட்டத் தானே!
அரனே! அடைந்தார்தம் பாவம் – அரனே!
அயனார்தம் அங்கம் அடையாகக் கொண்டாய்;
அயனாக மாக அடை. 87

744. அடையுந் திசைஈசன் திண்டோளா காசம்
அடையுந் திருமேனி; அண்டம் – அடையும்
திருமுடிகால் பாதாளம்; ஆடைகடல் அங்கி
திருமுடிநீர்; கண்கள்சுடர் மூன்று. 88

---

*("கவாலி" என்பதன் பின் 'ஆயினாள்' என்பது எஞ்சி நின்றது. இனி) அரன் - அவன், பொன் அம்பலத்துள் கலைமான, ஆடற்கலையும், பாடற்கலையும் பெருமையுறும் வண்ணம் ஆடுவதும், பாடுவதும் (அல்லது இவளை நோக்குகின்றான் இல்லை. நோக்காவிடினும் இவளது உயிரைக் கொள்ளாத படி) காலனை (யமனை) ஆடுவதும் ஆடான் அழித்தலையும் செய்யான். (நாம் என் செய்வது!) ஈற்றடியில் 'அடுவது, அடான்' என்பன முதல் நீண்டு நின்றன. இது தலைவியது வேறுபாடு கண்டு வினவிய நற்றாய்க்குச் செவிலி அறத்தொடு நின்றது.*

*743. **குறிப்புரை :** "அரன்" மூன்றில் முதலது 'சிவன்' என்னும் அளவாய் நின்றது. இடையது 'அறன்' என்பது எதுகை நோக்கித் திரிந்த பெயர். அறன் - அறவடிவினன்; இறுதியது, அரிப்பவன். மூன்று பெயர்களுமே விளி ஏற்று நின்றன. அயனார் - பிரம தேவர். 'அவரது அங்கம்' என்றது, தலை ஓட்டினை, அடி-3ல் 'அடையாளம்' என்பது, "அடை" எனக் குறைந்து நின்றது. ஈற்றடியில் உள்ள தொடரை, 'அயல் ஆக அடை நாகம்' என மாற்றி, 'அதற்கு மேல் உனது திருமேனியில் அணியப்படும் பொருள் பாம்பு ஆகின்றது. ('அஃது எதற்கு' என்பது குறிப்பெச்சம்).*

*744. **குறிப்புரை :** 'ஈசனது திண் தோள்திசை அடையும்; திருமேனி ஆகாசம் அடையும். திருமுடி (சிறப்பு வாய்ந்த சிரசு) அண்டம் அடையும். கால் பாதாளம் (அடையும்) அவனுக்கு ஆடை கடல். "தூநீர் - வளைநரல் பௌவம் உடுக்கையாக, விசும்பு மெய்யாகத் திசை கையாக"* எனப் பழம் புலவரும் கூறினார். அங்கி (அக்கினி) போலும் அழகிய சடா மகுடத்தில் நீர் (உள்ளது). கண்கள் மூன்று சுடர் - என இயைத்துக் கொள்க. பெருமானது திருவடிவைப் புகழ்ந்தவாறு. ''அடையும்'' என்பதைப் ''பாதாளம்'' என்பதோடும் கூட்டுக.*

---

* *நற்றிணை - கடவுள் வாழ்த்து.*

745. மூன்றரணம் எய்தானே! மூலத் தனிச்சுடரே
மூன்றரண மாய்நின்ற முக்கணனே! – மூன்றரண
மாய்நின்ற சோதி! அணியாரூர் சேர்கின்ற
ஆய்நின்ற சோதி! அறம். 89

746. அறமாய்வ ரேனும் அடுகாடு சேர
அறமானார் அங்கம் அணிவர்; – அறமாய
வல்வினைகள் வாரா வளமருக லாரென்ன;
வல்வினைகள் வாராத வாறு. 90

---

*745. குறிப்புரை : "மூன்று அரணம்" மூன்றில் முதலது முப்புரம். இடையது (அரணம் - பாதுகாவல்) மும்மூர்த்திகள். இறுதியது (அரணம் - சரீரம்) தூலம், சூக்குமம், காரணம் ஆகிய சரீரங்கள். "சோதி" இரண்டில் முன்னது, பொதுவில் 'ஈசுரன்' என்றும், பின்னது சிறப்பாகச் 'சிவன்' என்றும் பொருள் பயந்தன. தூல சூக்கும் காரண சரீரங்களில் நின்று அறிவைப் பயப்பிக்கும் ஈசுரனை முறையே, 'விராட், தைசசன், மகேசுரன்' எனக் குறியிட்டு வழங்குவர் வேதாந்திகள். ஈற்றடியில் ஆய் நின்ற - நுணுகி நின்ற. "சோதி" என்பனவும் விளிகளே. 'நீயே அறம்' என எழுவாய் வருவித்துரைக்க. எனவே, 'உன்னை வணங்குதலே அறம்' என்றபடி.*

*746. குறிப்புரை : "மருகலார்" எனப் பின்னர் வருதலால் முன் இரண்டடிகளும் அவரைப் பற்றியவேயாயின. மருகல், சோழநாட்டுத் தலம். அறம் ஆய்வர் - அற நூலை ஆராய்ந்து விளங்குவார். அறங்களில் ஆசாரம் அல்லது தூய்மையும் ஒன்று ஆகலின், 'அறம் ஆய்வரேனும் அங்கம் (எலும்பை) அணிவர்; இஃது அவர்க்குப் பொருந்துமோ' என ஐயுற்றார் போலக் கூறினார். தூயதல்லாத பொருளைப் பற்றிய போதிலும் அதனால் நெருப்பு வாதிக்கப் படாமைபோல, அவர் எதனாலும் வாதிக்கப்படாமை கூறியவாறு. அடு காடு - சுடு காடு. அறம் ஆனார் - அறுதியாயினார். தனிச் சீரில் உள்ள அறம், சிவதருமம், அது செய்தற்கு அரிதாகலின், "வல்வினைகள்" என்றார். வாரா - வரப்பெற்று. ஈற்றடியில் உள்ள வல்வினைகள். வலிய இருவினைகள். அவை வாராதவாறு சிவதருமம் வாய்க்கப் பெற்று, வளப்பம் பொருந்திய 'திருமருகலர்' எனச் சொல்லித் துதிக்க. "என்ன" என்பது அகர ஈற்று வியங்கோள். 'என்க' எனப் பாடம் ஓதலும் ஆம்.*

*747. குறிப்புரை : "ஆறு" மூன்றில் முதலது கங்கை. இடையது, 'ஆறு' என்னும் எண், இறுதியது, ஆறுதல்; சாந்தம். காலம் ஆறு, பூசா காலங்கள். அமைவு - நிறைவு; திருப்தி. இஃது எண் குணங்களில் வரம்பில் இன்பமாகும்.*

747. ஆறுடையர்; நஞ்சுடையர்; ஆடும் அரவுடையர்;
ஆறுடையர் காலம் அடைவுடையர்; – ஆறுடைய
சித்தத்தீர் செல்வத் திருக்கயிலை சேர்கின்ற
சித்தத்தீர் எல்லார்க்குஞ் சேர்வு. 91

748. சேர்வும் உடையா செழுங்கொன்றைத் தாரார்;நஞ்
சேர்வும் உடையர்; உரவுடையர் – சேரும்
திருச்சாய்க்காட் டாடுவரேல் செய்தக்க, என்னும்
திருச்சாய்க்காட் டேநின் உருவு. 92

749. உருவு பலகொண்(டு) ஒருவராய் நின்றார்;
உருவு பலவாம் ஒருவர்; – உருவு
பலவல்ல; ஒன்றல்ல; பைஞ்ஞீலி மேயார்
பலவல்ல; ஒன்றாப் பகர். 93

---

*'ஆறுதலுடைய சித்தத்தீர்யாவர் அவர் ''ஆறுடையர்'' முதலாகச் சொல்லப்பட்ட அவரது திருக்கயிலை சேர்கின்ற சித்தத்தீர் ஆவீர்; அத்திருக்கயிலையே எல்லார்க்கும் சேர்வு' (புகலிடம்) என முடிக்க.*

*748. குறிப்புரை : "சேர்வு" இரண்டில் முன்னது சேரும் இடம். அவை பல தலங்கள். பின்னது, அடைக்கலமாக அடைதல். அவர், 'திருச்சாய்க்காடு' என்னும் தலத்தில் ஆடுவர் (விளங்கியிருப்பார்) ஆயின், (நெஞ்சே, நீ) செய்தக்கது என்றும் நீன் உருபு (உடம்பை) திருச்சாய்க் கட்டு (நன்றாய வணக்கத்தில் ஏ (ஏவுதலே) பின்னுள்ள "சாய்க்காடு" என்பதில் உள்ள காடு, 'நோக்காடு, வேக்காடு' முதலியவற்றிற் போலத் தொழிற் பெயர் விகுதி. அது வேற்றுமைப் புணர்ச்சியில் ஒற்று இரட்டிற்று. ஏ - ஏவுதல்; முதனிலைத் தொழிற்பெயர்.*

*749. குறிப்புரை : "பைஞ்ஞீலி மேயார்" என்பதனை முதலிற் கொள்க. பைஞ்ஞீலி. சோழநாட்டுத் தலம். அடி-1ல் 'பல கொண்டும்' எனவும், அடி-2ல் 'பலவுமரம்' எனவும், அடி-3-ல் 'பலவும், ஒன்றும்' எனவும் போந்த உம்மைகள் தொகுக்கப்பட்டன. உருவு பல ஆம் ஒருவர் - பொருள்கள் பலவும் ஆகின்ற ஒருவர். அவரது உருவு பலவும் அல்ல; ஒன்றல்ல; (எனவே, 'உருவே இல்லாதவர்' என்பதாம்) அவரைக் குறிக்கும் சொற்கள் பல அல்லவாக, ஒன்றாக (நெஞ்சே, நீ) பகர்.*

*750. குறிப்புரை : அடி-1-ல் பகர் அப் பரி யானை மேல் ஊராதான் - யாவரும் உயர்த்துச் சொல்கின்ற பருத்த யானையை ஊர்தியாகக் கொண்டு அதன்மேல் ஊர்தல் இல்லாதவன். 'இடபத்தையே ஊர்கின்றவன்' என்பதாம்.*

750. பகரப் பரியானை மேல்ஊரா தானைப்
பகரப் பரிசடைமேல் வைத்த – பகரப்
பரியானைச் சேருலகம் பல்லுயிர்க ளெல்லாம்
பரியானைச் சேருலகம் பண். 94

751. பண்ணாகப் பாடிப் பலிகொண்டாய் பாரேழும்
பண்ணாகச் செய்த பரமேட்டி! – பண்ணா
எருத்தேறி ஊர்வாய்; எழில்வஞ்சி எங்கள்
எருத்தேறி ஊர்வாய்; இடம். 95

---

*அடி-2-ல் விளக்கத்தை, 'பகரம்' என்றல் உலக வழக்கு. பரி சடை, 'பரிக்கின்ற சடை' என வினைத்தொகை. தனிச் சீரில் பகரம் - 'ப' என்னும் எழுத்து. அது பாம்பைக் குறிப்பால் சுட்டியது. அடி - பரியான் - தூல நிலையைக் கொண்டவன்; 'உருவு கொண்டு நின்றவன்' என்றபடி. 'விளக்கமான, கங்கை முதலியவற்றைத் தாங்கியுள்ள சடையின்மேல் வைத்த பாம்பைக் கொண்ட உருவு கொண்டு விளங்குபவன்' என்க. அடி-3-ல் சேர் உலகம் - பலவாய்த் திரண்டுள்ள உலகங்கள். அடி-4-ல் பரியான் - (அறியாமையால்) அன்பு செய்யப் படாதவன். அவனைச் சேர்ந்துள்ள உலகமே; சிவலோகம்; பண் - தகுதி வாய்ந்ததாகும். (ஆகவே, 'அதனை அடையவே மக்கள் முயல வேண்டும்') என்பது குறிப்பெச்சம்.*

*751. **குறிப்புரை :** அடி-1ல் பண் - இசை. பலி - பிச்சை. அடி-2ல் பண் - தகுதி. செய்த - ஆக்கிய; படைத்த. அடி-3-ல் 'எருது', "எருத்து" என ஒற்றிரட்டி நின்றது. தனிச் சீரில் பண்ணா - ஏறுதற்கு உரிய வகையில் அமைத்து. 'எருத்துப் பண்ணா ஊர்வாய' என மாற்றிக் கொள்க. அடி-4ல் எருத்து - எருத்தம்; பிடரி. 'எங்கள் எழில் வஞ்சிதன் எருத்து இடமாக ஏறி ஊர்வாய்' என மாற்றி யுரைக்க. வஞ்சி - கொடி போன்றவள். இஃது எருதேறி பிச்சைக்கு வந்த இறைவனைத் தலைவிதன் ஆற்றாமை கண்ட தோழி குறையிரந்தது. 'எருது' என்பன பாடம் அல்ல. "வஞ்சி எருத்தேறி ஊர்வாய்" என்றது, 'இவளை உன்னிடத்துப் பணிகொண்டருள்' என்றபடி.*

*752. **குறிப்புரை :** "எவ்வுயிர்க்கும்" என்பதை முதலிற் கூட்டுக. "ஏகம்பம் மேயார்" என்பது, 'இறைவர்' என ஒரு சொல் நீர்மைத்தாய் நின்று, "இடமாய்" என்னும் பெயரெச்சத்திற்கு முடிபாயிற்று. அடி-2-ல் ஆனார் - நீங்காதவர், 'உள்ளத்தால் நீங்காதவர்' என்க. 'தம்மை உள்ளத்தால் என்றும் நீங்கா தவர்க்குத் தம்மை அண்மையிலிருக்க இடம் ஈந்த இறைவர்' என்க. அடி-4-ல் உள்ள தொடரை, 'எமை ஈங்கு ஓய மலையார்' என மாற்றி உரைத்துக் கொள்க.*

752. இடமாய எவ்வுயிர்க்கும் ஏகம்பம் மேயார்
இடமானார்க்(கு) ஈந்த இறைவர், – இடமாய
ஈங்கோய் மலையார், எழிலார் சிராமலையார்,
ஈங்கோய் மலையார் எமை. 96

753. எமையாள வந்தார் இடரான தீர,
எமையாளும் எம்மை இமையோர், – எமையாளும்
வீதிவிடங் கர்,விடம துண்டகண் டர்,விடையூர்
வீதிவிடங் கர்,விடையூர் தீ. 97

754. தீயான மேனியனே! செம்பவளக் குன்றமே!
தீயான சேராமற் செய்வானே! – தீயான
செம்பொற் புரிசைத் திருவாரூ ராய்என்னைச்
செம்பொற் சிவலோகஞ் சேர். 98

---

*'ஓய' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. ஓய - மெலியும்படி. மலையார் - வருத்தார்; 'வருத்தத்தைத் தீர்ப்பார்' என்பதாம். திருஈங்கோய் மலை, திருச்சிரா மலை இவை சோழ நாட்டுத் தலங்கள்.*

*753. குறிப்புரை : முன்னிரண்டு அடிகளில் மடக்கணி வாராது சொற்பொருட் பின்வருநிலையணியே வந்தது. 'இடரான தீர எமை ஆள வந்தார்' எனவும், 'எம்மையும் எமையாளும் இமையோர்' எனவும் மாற்றுக. வந்தார் - எம்பால் வந்தார். வினைப் பெயர். 'எம்மையும்' என்னும் முற்றும்மை தொகுத்தலாயிற்று. எம்மையும் - எப்பிறப்பிலும். "வீதி" இரண்டில் முன்னது ஒளி, பின்னது தெரு. "விடங்கர்" இரண்டில் முன்னது அழகர்; பின்னது சுயம்பு மூர்த்தி. "விடை" இரண்டில் முன்னது இடபம்; பின்னது விடுத்தல்; ஏவுதல் அது 'ஏவப்படும் பொருள்' எனப் பொருள் தந்தது. "ஊர்" இரண்டில், முன்னது ஏறிச் செல்லுதல்; வினைத்தொகையாய் வந்தது. பின்னது நகரம்; திரிபுரம்.*

*754. குறிப்புரை : "தீ" மூன்றில் முதலது நெருப்பு; இடையது தீமை; இறுதியது ஒளி. புரிசை - மதில். ஈற்றடியில் "பொன்" என்றது பொருளை. செம்பொருள் - மெய்ப்பொருள்; அஃது 'அழியாப் பொருள்' எனப் பொருள் தந்தது.*

*755. குறிப்புரை : முன்னிரண்டடிகளில் சொற்பொருட் பின்வருநிலை யணியே வந்தது. பின் வந்த "சிதையாமல்" என்பது, 'சிதையாமைப் பொருட்டு'. "ஒற்றியூர்" இரண்டில் முன்னது தொண்டை நாட்டுக் கடற்கரைத் தலம்;*

755. சேர்கின்ற சிந்தை சிதையாமல் செய்வானே!
சேர்கின்ற சிந்தை சிதையாமல் – சேர்கின்றோம்;
ஒற்றியூ ரானே! உறவாரும் இல்லைஇனி
ஒற்றியூ ரானே உறும். 99

756. உறுமுந்த முன்னே உடையாமல், இன்னம்
உறுமுந்த முன்னே யுடையா – உறுமும்தம்
ஓரைந்(து) உரைத்துஉற்று உணர்வோ(டு) இருந்தொன்றை
ஓரைந் துரைக்கவல்லார்க் கொன்று. 100

**தனி வெண்பா**

ஒன்றைப் பரணர் உரைத்தஅந் தாதிபல;
ஒன்றைப் பகரில் ஒருகோடி; – ஒன்றைத்
தவிராது உரைப்பார் தளரார்; உலகில்
தவிரார் சிவலோகந் தான்.

*திருச்சிற்றம்பலம்*

---

*பின்னது, பொருந்தி ஊர்கின்ற இடபம், (உன்னைத் தவிர எமக்கு) 'ஆரும் உறவு இல்லை' என்க. உறும் - பொருந்தும். 'அதனால் அதன் மேல் நீ வந்து அருள்' என்பது குறிப்பெச்சம்.*

*756. குறிப்புரை : தனிச்சீர் முதலாகத் தொடங்கி யுரைக்க. தனிச்சீரில் - உறுமும் - சினந்து வருகின்ற. தம் ஓர் ஐந்து - தங்கள் ஐம்புல ஆசைகளை. உற்று - நேர்ந்து. உரைத்து - அவைகட்கு அறிவுரை கூறி (அவை கேட்கும் தம்மையில ஆயினும் தமக்குள் தாம் சொல்லிக் கொள்வதை அவைகள் கேட்பனபோல வைத்துக் கூறினார்). உணர்வோடு இருந்து - மெய்யறிவோடு அமைதியாய் இருந்து. ஒன்றை - ஒன்றாகிய செம்பொருளை. ஓர் ஐந்து உரைக்க வல்லார்க்கு - அஞ்செழுத்தால் துதிக்க வல்லார்க்கு. ஒன்று - அந்தச் செம்பொருள். அடி-1-ல் முன்னே - முதற்கண். உடையாமல் உந்த உறும் - அவ்வைம்புல ஆசைகட்குத் தோலாமல், அவர்களை முன்னோக்கிச் செலுத்த முற்படும். இன்னம் - அதற்குமேல். அடி-2ல் முன் உடையாமுந்த உறும் - அவர்களது ஆற்றல் (அறிவு இச்சை செயல்கள்) சலியாதபடி முற்காப்பாக எப்பொழுதும் பொருந்தியிருக்கும். <u>'அஞ்செழுத்தை ஒருமித்த மனத்துடன் ஓதுபவர்க்கு முதலில் அருட்பேறும், பின்னர் ஆனந்தப் பேறும் உளவாம்'</u> என்றபடி. இவ்வெண்பாவின் ஈற்றடி "ஒன்று" என முடிந்து முதல் வெண்பாவின் முதலோடு சென்று மண்டலித்தல் காண்க.*

***தனிவெண்பா - குறிப்புரை :*** *இறுதியிற் காணப்படும் வெண்பா நூற்பயன் சொல்வதாகப் பிற்காலப் பெரியோரால் செய்து சேர்க்கப் பெற்றது.*

*“பரணர்” என்பதை முதலிற் கூட்டி, “பரணர் ‘ஒன்று’ என்னும் எண்ணினை முதலாக வைத்து அந்தாதியாக உரைத்த பாடல்கள் பல. அவற்றுள் ஒரு பாடலைச் சொன்னாலும் கோடி பாடல்களைச் சொல்லியது போலாகும்; அங்ஙனமாகவே, அவற்றுள் ஒன்றையேனும் விடாமல் முழுவதும் சொல்பவர் இவ்வுலகிலும் தளர்ச்சியடையாது வாழ்வர். பின்பு சிவலோகத்தை அடைதலில் தவறமாட்டார்கள்” என உரைக்க.*

**சிவபெருமான் திருவந்தாதி - II முற்றிற்று**

## 9. இளம்பெருமானடிகள்

*பதினொராந் திருமுறையாசிரியர்களுள் இளம் பெருமானடிகளும் ஒருவராவர். இவர் பாடிய பனுவல் சிவபெருமான் திருமும்மணிக்கோவை யென்பதாகும். பெருமானடிகள் என்பது இறைவனைக் குறித்து வழங்கும் பெயராகும். 'வரியமறையார்' என்னும் முதற் குறிப்புடைய திருக்கடவூர்த் தேவாரத் திருப்பதிகத்திற் பாடல்தோறும் 'அவரெம்பெருமானடிகளே' எனத் திருஞானசம்பந்தப் பிள்ளையார் சிவபெருமானைப் போற்றியுள்ளார் என்றும் இளமைகுன்றா இறைவனாகச் சிவபெருமான் பெற்றருளிய முருகப் பெருமானை இளம்பூரணன் என்ற திருப்பெயராற் சான்றோர் போற்றிப் பரவக் காண்கின்றோம். இளமை குன்றா இறைவன் என்ற இப்பொருளிலேயே இளம் பெருமானடிகள் என்ற பெயரும் முருகக் கடவுளுக்கு வழங்கப் பெற்றிருத்தல் கூடும். கடவுட் பெயரை மக்களுக்கு இட்டழைக்கும் வழக்கப்படி இளம் பெருமானடிகள் என்ற பெயர் பெற்றோரால் இவ்வாசிரியர்க்கு இடப்பட்டதெனக் கொள்ளுதல் பொருந்தும். இனி, பெருமானடிகள் என்னும் பெயருடையார் இருவராக அவர்களுள் இவர் இளையவர் என்பது தோன்ற இளம் பெருமானடிகள் என இவ்வாசிரியர் அழைக்கப் பெற்றாரெனக் கருதுதற்கும் இடமுண்டு. இவ்வாசிரியர் பிறந்த நாடு, ஊர், குலம் முதலியன இவையெனத் தெரிந்து கொள்ளுதற்குரிய சான்றுகள் கிடைக்கவில்லை. இவர் பாடிய திருமும்மணிக்கோவை, திருவெண்காட்டடிகள், அதிராவடிகள் ஆகிய பெருமக்கள் பனுவல்களுக்கு முன்னே தொகுக்கப்பெற்றிருத்தலால் இவர் வாழ்ந்த காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கமுமாமெனக் கூறுதல் பொருந்தும்.*

*அகவல், வெண்பா, கட்டளைக்கலித் துறையாகிய மும்மணிகளால் இயன்றதாய்ச் சிவபெருமானுக்கு அணியும் அழகிய மணிவடமாகத் திகழ்வதாகலின் இவர் பாடிய பனுவல் திருமும்மணிக்கோவையென்னும் பெயர்த்தாயிற்று. இந்நூல் முப்பது பாடல்களையுடையது. பதினொராந் திருமுறையில் இருபத்துநான்காம் பிரபந்தமாக வரிசைப்படுத்தப் பெற்றுள்ளது. இதன் கண்ணுள்ள பாடல்கள் யாவும் சொற்செறிவும் பொருட் செறிவுமுடையனவாய்த் திகழ்கின்றன. நிரம்பிய இலக்கியப் பயிற்சியுடையார்க்கே இப்பாடல்களின் பொருள் இனிது விளங்கும். இறைவனை முன்னிலைப்படுத்தி உரையாடி மகிழும் நிலையிற் பாடிய பாடல்களும் இறைவனைக் கண்டு காமுற்ற தலைவியினது துயர் கிளந்துரைக்கும் அகத்துறைப் பாடல்களும் இம்மும்மணிக் கோவையில் இடம்பெற்றுள்ளன.*

*படைத்தலாகிய முதற்றொழிலையுடைய நான்முகன் இயற்றிய கொடுங்கையொடு திகழும் மாடம் போல்வதாகிய இந்நிலப்பரப்பிலே நிறுவிய தெய்வத்தன்மை வாய்ந்த தகழியினுள்ளிடத்தே செந்நிற மேகம் பொழிந்த மழை வெள்ளமெனத்தக்க பேரளவிற்றாகிய நெய்யினை நிரப்பித் தேவருலகளவும் ஓங்கியொளிர ஏற்றியதும், முத்தின் குளிர்ச்சியை யுடையதாய்த் திகழ்வதும், பெருமலைகளைப் பெயர்த்தெறிவதாகிய கடுங்காற்று வீசினும் சிறிதும் நடுக்கமுறாது சுடர்விட்டொளிர்வதுமாகிய பேரொளி விளக்கினைப் போன்று* (*'சுடர்விட்டுளன் எங்கள் சோதி' என ஆளுடைய பிள்ளையாரும், 'சுடர்க்கொழுந்தைத் துளக்கிலா விளக்கை' என ஆளுடைய அரசும் இறைவனைச் சுடர் விளக்காகப் போற்றிய தொடர்கள் இவண் ஒப்புநோக்கத் தக்கனவாம்) அண்டத்தின் புறத்திலும் அன்பருள்ளத்திலும் நிலைபெற்றுத் தோன்றும் ஆதிமுதல்வனாகிய நினது திருவடி நிழல், உடல்தேய்ந்து நின்னைத் தஞ்சம் புகுந்த திங்கட்செல்வனை அளிக்கத்தக்கன அல்லவோ? அங்ஙனமாகவும் ஒளிதிகழும் வெள்ளிய சங்கினைப் போலும் வெண்ணிற மலர்களின் நிறத்தையுடையதாய் நிலவொளியைப் பரப்பிய திங்கட் கண்ணியை நின்திருமுடிமேல் அணிந்தது எக்காரணத்தால்? எனச் சிவபெருமானை நோக்கி வினவும் நிலையில் அமைந்தது*

***முதல்வன் வகுத்த மதலை மாடத்***
***திடவரை யூன்றிய கடவுட் பாண்டிற்***
***புத்தேள் நிவந்த முத்த மாச்சுடர்***
***எறிவளி யெடுப்பினுஞ் சிறுநடுக் குறாநின்***
***அடிநிழல் அளியவோ வைத்த முடிமிசை***
***இலங்குவளைத் தனிப் போது விரித்த***
***அலங்குகதி ரொலியல் நீ அணிந்த தென்மாறே***

*எனவரும் இத்திரு மும்மணிக் கோவையின் முதற்பாடலாகும். "எம்பெருமானாகிய நீ நின்னைச் சரணடைந்தார்க்கு நின் திருவடி நிழல் தந்து அருள் புரிதலே முறையாகவும் நின்னைத் தஞ்சம் புகுந்த வெண்மதிக்கு திருவடி நிழல் அருளாது அம்மதியை நின் முடிமிசை வைத்தது எது கருதி" என இளம் பெருமானடிகள் சிவபெருமானை நோக்கி வினவிய வினா, "தேய் மதியனாகிய சந்திரன் தன் திருவடியால் முன்னொரு காலத்தில் தேய்க்கப்பட்டு வருந்தியவனாதலின் தன் திருவடி அவனுக்கு மேலும் அச்சத்தைத் தரும் என்ற அருட் குறிப்பின் காரணமாகவே சிவபெருமான் சந்திரனைத் தன் முடிமிசை வைத்தருளினன்" என்ற குறிப்பினை இனிது புலப்படுத்துதல் காண்க.*

*சிவபெருமானது தாழ்சடை குளிர்ந்த கங்கை நீரைத் தன்பாற் கொண்டிருந்தும் நெருப்புப் போலும் செந்நிற முடையதாயொளிர்தலும், அப்பெருமானது கண்டம் ஆலகால நஞ்சினைத் தன்பால் அடக்கியிருந்தும் வானோரமிழ்தினை யொத்துக் கண்டோரது பிணி நீங்கிச் சாவா மூவாப் பெருவாழ்வு தந்து திகழ்தலும், அவ்விறைவனது திருவடிவம் சுடர் விட்டெரியுந் தீயை யொத்த தோற்றமுடையதாயிருந்தும் தளிரினுந் தண்மையுடையதாய்க் கண்டோர் கண்களுக்குக் குளிர்ச்சி தந்து விளங்குதலும், இறைவனுடைய திருவடி கூற்றுவனைச் சினந்துதைத்த பெருவன்மையுடையதாயினும் செந்தாமரை மலரையும் கீழ்ப்படுக்கும் மென்மையும் வனப்புமுடையதாய் மிளிர்தலும் என இங்ஙனம் ஒன்றோடொன் றொவ்வா இயல்பினவாதலை யெண்ணி யுளமுருகிய இளம் பெருமானடிகள், சூலப்படையானாகிய இறைவனை நோக்கி, 'நின் திருவுருவின் இயல்புகளை இனையவென்றறியும் திறனுடையோ மல்லோம்' என்று கூறிப் போற்றுவதாக அமைந்தது,*

***'சடையே, நீரகந்ததும்பி நெருப்புக் கலிக்குமே***
***மிடறே, நஞ்சகந் துவன்றி அமிர்து பிலிற்றுமே***
***வடிவே, முளியெரிகவைஇத் தளிர்தயங்குமே***
***அடியே மடங்கல் மதஞ்சீறி மலர்பழிக் கும்மே***
***அஃதான், றினையவென் றறிகிலம் யாமே முனைதவத்***
***தலை மூன்று வகுத்த தனித்தாட்***
***கொலையூன்று குடுமி நெடுவே லோயே'***

*என்ற பாடலாகும்.*

*"மாதொரு பாகனாகிய பெருமானே, கடல் முகடும் விசும்பும் ஒன்றாய்க் கலந்த ஊழிக் காலப் பெருவெள்ளத்தில் உலகெலாம் மறைய நீ ஒருவனே தனித்து நின்றனையென்பர். அத்தகைய வெள்ளப் பெருக்கினை இப்பொழுது எங்கே மறைத்து வைத்துள்ளாய்? அதனை எங்களுக்குச் சிறிது சொல்வாயாக" என இறைவனை நோக்கி வினவுவதாக அமைந்தது,*

**'வேலை முகடும் விசும்பகடுங் கைகலந்த**
**காலைநீர் எங்கே கரந்தனையால் - மாலைப்**
**பிறைக்கீறா கண்ணுதலா பெண்பாகா ஐயா**
**இறைக் கூறாய் எங்கட்கிது'**

*என்ற பாடலாகும். இதனை வீரசோழியவுரையாசிரியர் தமது உரையில் மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார்.*

*புலியினது தோலை உடையாக உடுத்த சிவபெருமானது திருக்கோலத் தோற்றத்தை யெண்ணிய இவ்வாசிரியர், "செஞ்சடைத் தீ வண்ணரே, இமயத் தரசியாகிய உமையம்மையாரை நீவிர் திருமணக் காலத்திலும் நுமக்குரிய திருமணவுடையாகத் திகழ்ந்தது இப்புலித்தோல் தானோ?" என இறைவனை நோக்கி வினவும் நிலையில்,*

***'இதுநீர் ஒழிமின் இடைதந் துமைஇமை யத்தரசி***
***புதுநீர் மனத்தும் புலியதளேயுடை பொங்குகங்கை***
***முதுநீர் கொழித்த இளமணல் முன்றில்மென் றோட்டதிங்கட்***
***செதுநீர் ததும்பத் திவளஞ்செய் செஞ்சடைத் தீவண்ணரே'***

*என்ற பாடலைப் பாடியுள்ளார். இச்செய்யுள்,*

***'கடும்பகல் நட்ட மாடிக் கையிலோர் கபாலமேந்தி***
***இடும்பலிக் கில்லந் தோறும் உழிதரும் இறைவனீரே***
***நெடும் பொறைமலையர் பாவை நேரிழை நெறிமென் கூந்தற்***
***கொடுங்குழை புகுந்த அன்றுங் கோவணம் அரையதேயோ'***

*எனவரும் திருநாவுக்கரசர் திருப்பாடற் பொருளை அடியொற்றியமைந்த தாகும். இவ்வாறே இத்திருமும்மணிக்கோவையில்,*

***'இவளப் பனிமால் இமையத் தணங்குகற் றைச்சடைமேல்***
***அவளப்புத் தேளிர் உலகிற்கரசி அதுகொண்டென்னை***
***எவளுக்கு நீ நல்ல தியாரைமுன் னெய்திற்றெற் றேயிதுகாண்***
***தவளப் பொடிச் செக்கர் மேனிமுக் கண்ணுடைச் சங்கரனே'***

*எனவரும் பாடலும்,*

***'ஒருத்திதன் தலைச்சென் றாளைக் கரந்திட்டான் உலக மேத்த***
***ஒருத்திக்கு நல்லானாகி மறுப்படுத் தொளித்து மீண்டே***
***ஒருத்தியைப் பாகம் வைத்தான் உணர்வினால் ஐயமுண்ணி***
***ஒருத்திக்கு நல்லனல்லன் ஒற்றியூருடைய கோவே'***

*என்ற திருநேரிசைப் பாடற்பொருளைப் பின்பற்றியமைந்திருத்தல் காணலாம்.*

*சிவவழிபாடு இத்தமிழகத்துத் தோன்றி நிலைபெற்ற தெய்வ வழிபாடு களெல்லா வற்றோடும் நெருங்கிய தொடர்பு உடையதாய்த் தமிழ ரனைவர்க்கும் பொதுவாகிய வழிபாடு என்பதனை,*

**'வேந்துக்க மாக்கடற் சூரன்முன்னாள்பட வென்றிதந்த**
**சேந்தற்குத்தாதை, இவ்வையமளந் தெய்வத்திகிரி**
**ஏந்தற்கு மைத்துனத் தோழன், இன்றேன் மொழிவள்ளி யென்னுங்**
**கூந்தற் கொடிச்சிதன் மாமன்வெம்மால்விடைக் கொற்றவனே'**

*எனவும்,*

**'கொற்றத் துப்பின் ஒற்றை யீன்ற**
**துணங்கையஞ் செல்வத் தணங்குதரு முதுகாட்டுப்**
**பேய்முதிர் ஆயத்துப் பிணவின் கொழுந'**

*எனவும் வரும் பாடற்றொடர்களால் இவ்வாசிரியர் சுவைபெற விளக்கிய திறம் உளங்கொளத்தக்கதாகும்.*

*இனி, இளம்பெருமானடிகள் என்பர் சிலப்பதிகார ஆசிரியராகிய இளங்கோவடிகளாக இருத்தல் கூடுமோ என ஐயுறுவோருமுளர். கடைச் சங்க காலத்திலில்லாத கட்டளைக் கலித்துறை யாப்பும் விநாயகர் வழிபாடும் இவர் பாடிய திருமும்மணிக் கோவையில் இடம் பெற்றிருத்தலாலும் கி.பி. ஒன்பது, பத்தாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த ஆசிரியர்கள் பாடிய பிரபந்தங்களுக்கிடையே இவர் பாடிய மும்மணிக்கோவை முறைப்படுத்தப் பட்டிருப்பதாலும் இதனைப்பாடிய இளம்பெருமானடிகள் இளங்கோவடிகள் அல்லர் என்பதும் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டினிறுதியும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கமுமாகிய காலப் பகுதியில் வாழ்ந்த திருவருட்செல்வர் இளம்பெருமானடிகள் என்பதும் நன்கு தெளியப்படும்.*

## இளம்பெருமான் அடிகள்

*அருளிச்செய்த*

## 24. சிவபெருமான் திருமும்மணிக்கோவை

*அகவற்பா*

*திருச்சிற்றம்பலம்*

757. முதல்வன் வகுத்த மதலை மாடத்து
இடவரை ஊன்றிய கடவுட் பாண்டிற்
பள்ளிச் செம்புயல் உள்விழு துறீஇப்
புத்தேள் நிவந்த முத்த மாச்சுடர்.

எறிவளி எடுப்பினும் சிறுநடுக் குறாநின்
அடிநிழல் அளியவோ வைத்த முடிமிசை
இலங்குவளைத் தனிப்போது விரித்த
அலங்குகதிர் ஒலியல்நீ அணிந்ததென் மாறே. 1

---

*757. குறிப்புரை :* *முதல்வன் - சிற்பம் வல்லாருள் தலையாயவன். மதலை - தூண்களையுடைய 'மாடம்' என்க. மாடம் - உயர்நிலை மாடம். திருக்கோயிலின் உட் கருவறை. ஊன்றிய - அழுந்த வைத்த, கடவுட் பாண்டில் - தெய்வத் தன்மை பொருந்திய வட்டம். இதனைக் 'கூர்மாசனம்' என்பர். 'பாண்டிலாகிய பள்ளி' என்க. பள்ளி - தங்கும் இடம். 'பள்ளியின்கண்' என ஏழாவது விரிக்க. செம்புயல் - மாலைக் காலத்தில் காணப்படுகின்ற சிவந்த மேகம். 'மேகம் போல' எனவும் 'விழுதுபோல' எனவும் உவம உருபு விரிக்க. 'விழுது போல' என்றது இலிங்க வடிவத்தை. புத்தேள் நிவந்த முத்த மாச்சுடர் - கடவுள் தன்மை மேல் எழுந்து தோன்றிய முத்தோளியே. முத்தோளி உவமையாகு பெயர். முத்து, உயர்வாகிய குறிப்புப் பற்றி வந்த உவமை. 'முத்தோளி' என்றது சிவ பெருமானை. சுடர், அண்மை விளி. 'தலங்கள் தோறும் இலிங்க வடிவில் கோயில் கொண்டு விளங்கி அருள் புரிகின்ற பெருமான் என்றபடி. ஏறிவளி - பெருங்காற்று. 'பெருங்காற்று அடிக்கினும் சிறிதும் அசைவுறாத உனது திருவடி அரியவோ' (எளியவோ) என்க. 'எளிய அல்ல ஆயினும் அவற்றை நீ சூட்டிய எங்கள் தலைமேல் மற்றும் உனது குவளை மலர் மாலையைச் சூட்டியது எக்காரணத்தால்' என முடிக்க. ஞான தீக்கை செய்யும் காலத்துக் குவளை மாலையைச் சூட்டுதல் மரபு. "கழுநீர் மாலைக் கடவுள் போற்றி" - என்னும் திருவாசகத்தையும் காண்க. ஒலியல் - மாலை. மாறு, மூன்றாவதன் பொருள்படுவதோர் இடைச்சொல்.*

### *வெண்பா*

758. மாறு தடுத்த மணிக்கங்கை திங்களின்
கீறு தடுப்பக் கிடக்குமே? – நீறடுத்த
செந்தாழ் வரையின் திரள்போல திருமேனி
எந்தாய்நின் சென்னி இடை. 2

### *கட்டளைக் கலித்துறை*

759. இடைதரில் யாம்ஒன் றுணர்த்துவது உண்டிமை யோர்சிமையத்(து)
அடைதரு மூரிமந் தாரம் விராய்நதி வெண்ணிலவின்
தொடைதரு துண்டங் கிடக்கினும் தொண்டர் ஒதுக்கியிட்ட
புடைதரு புல்லெருக் குஞ்செல்லு மோநின் புரிசடைக்கே. 3

---

*758. குறிப்புரை : தனிச்சீர் முதலாகத் தொடங்கி உரைக்க. "செவ்வரை" என்பதில் செம்மை, ஆகு பெயராய் நெருப்பைக் குறித்தது. நீறு அடுத்த செம்மை - நீறு பூத்த நெருப்பு. பெருமான் திருமேனி முழுதும் திருநீறு பூசப்பட்டுள்ளது.*

*தாழ்வன - தங்கியுள்ள (அசையாது நிற்கின்ற) மலை. திரள் - திரட்சியான வடிவம். மாறு - எதிர். 'மாறாத' என ஆக்கம் விரிக்க. தடுத்த - தடுக்கப்பட்ட உலகை அழிக்க எண்ணி வந்த எண்ணத்திற்கு எதிராகத் தடுக்கப்பட்ட கங்கை என்க. 'சடையால் தடுக்கப்பட்ட கங்கை சிறிதும் கீழே ஒழுகாதபடி பிறை தடுத்து நிற்கின்றது போலும் எனத் தற்குறிப்பேற்றமாகக் கூறி வியந்தவாறு. ஒழுகும் தன்மை உடையதாகிய கங்கையை ஒழுகாது வைத்துள்ள தன்மையை.*

*"நில்லாத நீர் சடைமேல் நிற்பித்தானை"* என அப்பரும் வியந்தவாறு காண்க. ஏகாரம், வினாப் பொருட்டு.*

*759. குறிப்புரை : இடைதரின் - வாய்ப்பு அளித்தால். 'உனக்கு உணர்த்துவது' என்க. சினமயம் - கோபுரம். அஃது ஆகுபெயராய் அதனையுடைய நகரத்தைக் குறித்தது. மூரி - பெரிய மந்தாரம். தேவலோகத்துப் பஞ்ச தருக்களில் ஒன்று. அஃது இங்கு அதன் பூவைக் குறித்தது. தொடை - மாலை. நிலவின் மாலை, நிலாக் கதிர்கள். 'மந்தார மலர்கள், நதி பிறை இவைகளோடு கூட, உனது அடியார்கள் இடுகின்ற புல்லிய எருக்கம் பூவும் உனது சடை முடிக்குப் பொருந்துமோ' என்க. 'அன்பர் இடுவன யாதாயினும் அதுவே பெருமானுக்கு மிகு விருப்பத்தைத் தருவது' என்றபடி.*

---

* *திருமுறை - 6.43.1.*

*அகவற்பா*

760. சடையே,
நீரகம் ததும்பி நெருப்புக்கலிக் கும்மே!
மிடறே,
நஞ்சகம் துவன்றி, அமிர்துபிலிற் றும்மே!
வடிவே,
மிளியெரி கவைஇத் தளிர்தயங் கும்மே!
அடியே,
மடங்கல்மதம் சீறி, மலர்பழிக் கும்மே!
அஃதான்று,
இனையஎன் றறிகிலம் யாமே; முனைதவத்
தலைமூன்று வகுத்த தனித்தாள்
கொலையூன்று குடுமி நெடுவே லோயே. 4

*வெண்பா*

761. வேலை முகடும் விசும்பகடும் கைகலந்த
காலைநீர் எங்கே கரந்தனையால் – மாலைப்
பிறைக்கீறா கண்ணுதலா பெண்பாகா ஐயோ
இறைக்கூறாய் எங்கட் கிது. 5

---

*760. குறிப்புரை : ஈற்றயலடி முதலாகத் தொடங்கி உரைக்க. மூன்று தலைகளையும், ஒற்றைக் காலையும் உடைய வேல் திரிசூலம். ஊன்றுதல் - சேர்த்தல். குடுமி - முனை - 'சடை முதலாகச் சொல்லப்பட்டவற்றில் ஒவ்வொன்றும் தோற்றத்திலும், செயலிலும் நேர்மாறாய் உள்ளன. சடை நீர்ப்பாகம் ததும்பி நெருப்பு கொழுந்துவிடும். கழுத்து விடம் பொருந்தி அமிர்தம் வெளிப்படுத்தும். வடிவம் மூண்டெரியும். தீகிடை விட்டுத் தளிர் தயங்கும். ஆகவே, அவைகளை எத்தன்மையுடையன - ஒரு பெற்றியவாகத் துணிய எங்களால் இயலவில்லை' என்பதாம். முளி எரி - பிற பொருள்களையெல்லாம் உலர்த்துகின்ற நெருப்பு. கவைஇ - கவித்து. தளிர் தயங்கும் - தளிர் விளங்கப் பெறும். மடங்கல் - யமன். முனை தவ - போரை மிகுதியாக உடைய 'வேல்' என்க. அஃதான்று - அதுவன்றி. இதனைச் சடை முதலிய எல்லாவற்றின் பின்னும் தனித்தனிக் கூட்டுக.*

*761. குறிப்புரை : 'மாலைப் பிறைக் கீறா!... போர்பாகா!' - என்பதனை முதற்கண் கூட்டியுரைக்க. 'கீற்றன்' என்பது இடைக் குறைந்து 'கீறன்' என நின்று விளியேற்றது. வேலை முகடு - கடலின் உச்சி. விசும்பு அகடு -*

### *கட்டளைக் கலித்துறை*

762. இதுநீர் ஒழிமின் இடைதந் துமையிமை யத்தரசி
புதுநீர் மணத்தும் புலியத ளேயுடை பொங்குகங்கை
முதுநீர் கொழித்த இளமணல் முன்றில்மென் தோட்டதிங்கள்
செதுநீர் ததும்பத் திவளஞ்செய் செஞ்சடைத் தீவண்ணரே. 6

### *அகவற்பா*

763. வண்ணம்,
அஞ்சுதலை கவைஇப் பவள மால்வரை
மஞ்சுமின் விலகிப் பகல்செகுக் கும்மே,
என்னை ?
பழமுடைச் சிறுகலத்(து) இடுபலி பெய்வோள்
நெஞ்சகம் பிணிக்கும் வஞ்சமோ உடைத்தே!
அஃதான்று,
முளையெயிற்றுக் குருளை இன்துயில் எடுப்ப
நடுங்குதலைச் சிறுநிலா விதிர்க்கும் கொடும்பிறைத்(து)
ஏமுறு முதிர்சடை இறைவ
மாமுறு கொள்கை மாயமோ உடைத்தே. 7

---

*வானத்தின் நடுவிடம். கை கலந்த காலை - இவை இரண்டும் ஒன்று படும்படி நீ ஒரு தூணாய் நின்ற காலத்தில் நீரை எங்கே கரந்தனை (உள்ளடக்கி வைத்தாய்?). "ஐயோ" என்றது; 'இதனை அறியாது திகைக்கின்றோம்' என்னும் குறிப்பினது. இறை - சிறிது. "இறைக் கூறாய்" என்பதில் ககர ஒற்று விரித்தல்.*

*762. **குறிப்புரை :** "பொங்கு கங்கை" என்பது முதலாகத் தொடங்கி. "இடை தந்து இதுநீர் ஒழிமின்" என்பதை இறுதியில் வைத்து உரைக்க. "புது நீர்" என்பதில் நீர் - நீர்மை; தன்மை. 'இமையத்தரசியாகிய உமையைப் புதுமணம் கொண்ட பொழுதும் உம்முடைய உடை புலித்தோலாகவே இருந்தது. இது போன்ற தன்மையை அதற்கு ஒரு வாய்ப்புத் தந்து ஒழிப்பீர் என்க. 'முன்றிலின்கண் உள்ள திங்கள்' எனவும், 'திங்களின் மேல் நீர் ததும்புதலால் அத் திங்கள் திவள் அம் (துவளுகின்ற ஓர் அழகைச்) செய்கின்ற (உண்டாக்குகின்ற) சடை' எனவும் உரைக்க. தோட்ட - பூ இதழ்போல அமைந்த. செது நீர் - அலம்புகின்ற நீர். புலித்தோலை வேண்டாம் என்று நீக்கிவிடச் சொல்கிறார்.*

*763. **குறிப்புரை :** "முளையெயிற்றுக் குருளை - சடை இறைவ" என்பதை*

வெண்பா

764. உடைதலையின் கோவை ஒருவடமோ கொங்கை
புடைமலிந்த வெள்ளெருக்கம் போதோ – சடைமுடிமேல்
முன்னநாள் பூத்த முகிழ்நிலவோ முக்கணா
இன்னநாள் கண்ட திவள். 8

---

*முதலிலும், "அஃதான்று" என்பதைச் "செகுக்கும்மே" என்பதன் பின்னும். "என்னை" என்பதை "உடைத்தே" என்பதன் பின்னுமாகக் கூட்டியுரைக்க.*

*'உனது வண்ணம் (நிறம்) உனது ஐந்து தலைகளையும் கவைஇ (மூடி) பவளமால் வரையிடத்துத் தவழும் மஞ்சின் (மேகத்தின்) மின்னல் போல விலகி (இடையிடையே விளங்கி) பகல் ஒளியைச் செகுக்கும். (அழிக்கும்). 'பழங்கலம், முடைக்கலம், சிறுகலம்' எனத் தனித்தனி இயைக்க. கலம் - பிச்சைப் பாத்திரம். முடை - முடை நாற்றம் உடையது. இங்ஙன மாயினும் நெஞ்சகத்தைக் கவரும் அதிசயத்தை உடையது வஞ்சம். இங்கு அதிசயம். இங்ஙனம் ஆதலின் உமது கொள்கை மாயம் உடைத்தாகின்றது. கொள்கை. இங்குத் தன்மை. ஓகாரம் வியப்பு. முறு கொள்கை - முறுகிய (இறுகிய) கொள்கை.*

*குருளை, பாம்புக் குட்டி. அது சீறுதலால் திங்கள் துயிலெழுந்து நடுங்குகின்றது. 'நடுங்குதலையை உடைய பிறை' என்க. நடுங்குதலை. 'தலை நடுங்கல்' என்றல் வழக்கு. விதிர்க்கும் - வீசுகின்ற. கொடு - வளைந்த. பிறைத்து - பிறையை உடையது. 'பிறையை உடையதாய் ஏமுறு சடை' என்க. ஏமுறு - பல பொருள்கட்கும் பாதுகாவலாகப் பொருந்திய.*

***764. குறிப்புரை :** 'முக்கணா' என்பதை முதலிற் கொள்க. இவள் - (உன் மேல் வைத்த காதலால் மெலிகின்ற) இவள். இன்ன நாள் - இன்று. கண்டது - உன்பால் கண்டது. மார்பில் உள்ள தலை மாலையையோ? வெள்ளெருக்கம் பூ மாலையையோ? சடைமேல் உள்ள முதல்நாள் தோன்றும் பிறையையோ? என்க. 'இவற்றுள் ஒன்றேனும் காதலை விளைக்கும் பொருளாய் இல்லையே' என்பது குறிப்பு. "தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்"* - என்பதில் தலைவன், தலைவியர் தம்முள் ஒருவரது இழிபை மற்றவர் தேறாமையும் அடங்கும் ஆதலின் இஃது அவ்வாற்றான் ஆய பெருந்திணைத் தலைவியது ஆற்றாமை கூறித் தோழி தலைவனைக் குறையிரந்தது. "கொங்கை" என்பது மார்பைக் குறித்தது. "கண்டது" - எனச் செயப்படுபொருள் வினைமுதல் போலக் கூறப்பட்டது.*

---

* *தொல் - பொருள் - அகத்திணையியல்*

### *கட்டளைக் கலித்துறை*

**765.** இவள்அப் பனிமால் இமையத் தணங்குகற் றைச்சடைமேல்
அவள்அப்புத் தேளிர் உலகிற்(கு) அரசி அதுகொண்டென்னை
எவளுக்கு நீநல்ல(து) யாரைமுன் எய்திற்(று)எற் றேயிதுகாண்
தவளப் பொடிச்செக்கர் மேனிமுக் கண்ணுடைச் சங்கரனே. **9**

### *அகவற்பா*

**766.** கரதலம் நுழைத்த மரகதக் கபாடத்து
அயில்வழங்கு குடுமிக் கயிலை நாடநின்
அணங்குதுயில் எடுப்பிற் பிணங்குநிலாப் பிணையல்
யாமே கண்டதும் இலமே தாமா
மூவா எஃகமும் முரணும்
ஓவாது பயிற்றும் உலகம்மால் உளதே. **10**

---

*765. குறிப்புரை : ஈற்றடியை முதலிற் கொள்க. "இவள்" என்றது உமாதேவியைச் சுட்டியதும். "அவள்" என்றது கங்காதேவியைச் சுட்டியதும் ஆகும். கங்கையை, 'புத்தேளிர் உலகிற்கு அரசி' என்றது ஆகாய கங்கையாதல் பற்றி. "அது கொண்டு என்னை" என்றது. 'எவள் உயர்ந்தவள், எவள் தாழ்ந்தவள் என்னும் ஆராய்ச்சியில்லை என்றபடி, எவளுக்கு நீ நல்லது? யாரை முன் எய்திற்று? எற்றே? - என்றது. எவள் உனை விரும்புபவள்? முதலிற் கொள்ளப்பட்டவள் யார்? முன்ன ஒருத்தியிருக்கப் பின்னர் ஒருத்தியைக் கொண்டது எதற்கு என்றபடி. இவற்றின்பின் 'என்னும்' என்பதை வருவித்து. 'என்னும் இது கா - என்று எழுகின்ற வினா எழாதபடி பார்த்துக் கொள்' என உரைக்க. 'இந்த வினா எழுந்தால் உன்னால் விடையிறுக்க இயலாது' என்பதாம். 'இருவருள் ஒருத்தி தான் இவனை விரும்புபவள்' என்றலும் ஒருத்தி முன், மற்றொருத்தி பின் எனக் கூறுதலும், இருவருள் ஒருத்தியை 'மிகை' என்றலும் கூடா என்றபடி. 'சிவபிரான் கொள்வன யாவும் உலக நலத்திற்கு இன்றியமையாமை கருதியே' என்பதைக் குறிப்பால் உணர்த்தியவாறு. 'நல்லது' என்றது 'நல்ல பொருள் என்றபடி. 'நல்லை' எனப் பாடம் ஓதுதல் சிறக்கும்.*

*766. குறிப்புரை : "குடுமி" என்றது ஆகுபெயராய்ச் சூலத்தைக் குறித்தது. 'கரதலம் நுழைத்த சூலம்' என்க. சிவ பெருமான் ஏந்தியுள்ள சூலத்தின் மூவிலைகள் உயிர்களின் அறிவு, இச்சை, செயல் இவைகளைப் பிணித்துள்ள ஆணவ மலத்தின் சத்தியைப் போக்கும் ஞானேச்சரக் கிரியைகளாகிய சத்திகள் ஆதல் பற்றி, "மரகதக் கபாடத்து அயில் வழங்கு குடுமி" என்றார்.*

*வெண்பா*

**767.** உளரொளிய கங்கை ஒலிதிரைகள் மோத
வளரொளிதேய்ந்து உள்வளைந்த(து) ஒக்கும் – கிளரொளிய
பேதைக் கருங்கட் பிணாவின் மணாளனார்
கோதைப் பிறையின் கொழுந்து. 11

---

*"ஆணவமாகும் கபாடமும்"[1] எனப் பிற்காலத்தில் சிவப்பிரகாச அடிகளும் கூறினார். "நின் அணங்கு" என்றது கங்கா தேவியை. துயில் எடுத்தல் - எழுப்புதல். 'எழுப்புதல் பிறையை' என்க. பிறையைக் கங்கை எழுப்புதலாவது மிதக்கச் செய்தல். 'மிதக்கச் செய்யும்பொழுது சந்திரனது நிலா ஒளி எங்கும் விளங்குதல் வேண்டுமன்றோ? அங்ஙனம் விளங்க யாம் ஒருபோதும் கண்டதிலம்' என்க. பிணையல் - மாலை. "நிலாப் பிணையல்" என்றது உருவகம். 'இனி, நிலாவாகிய அப் பிணையல் மூவா எஃகமும் (கெடாத சூலப்படையோடு) மூணும் - மாறுபட்டுத் தோன்றுதலும் செய்யும். "இரும்புயர்ந்த மூவிலைய சூலத்தினை"[2] - என்றபடி சூலம் கருநிறமாய் இருத்தலின் நிலவு அதனோடு மாறுபடுவதாயிற்று. ஓவாது பயிற்றும் - உனது சடையில் உள்ள பிறையை இடைவிடாது கண்டு கொண்டிருக்கின்ற. உலகம் மால் உளது - உலகம் திகைப்பை உடையதாகின்றது. 'பிறை என்றும் பிறையாகியே உள்ளதன்றி, வளரவில்லையோ என்க' என்றபடி. "வளருமோ பிள்ளை மதி" - என அம்மை திருவந்தாதியிலும்[3] கூறப்பட்டது.*

***767. குறிப்புரை :*** *தனிச்சீர் முதலாகத் தொடங்கியுரைக்க. 'பேதைப்பிணா, கருங்கட் பிணா' எனத் தனித்தனி இயைக்க. பேதை - 'மடம்' என்னும் பெண்மைக் குணம். பிணா - பெண்மான். அஃது உவமையாகு பெயராய், உமா தேவியைக் குறித்தது. மானினது நோக்குப்போலும் நோக்குடைமை பற்றி மகளிரை 'மான்' என்றல் வழக்கு. கோதைப் பிறை - கொன்றை மாலையை அடுத்துள்ள பிறை. 'பிறையாகிய கொழுந்து' என்க. இன், வேண்டாவழிச் சாரியை. உளர் ஒளி - வீசுகின்ற ஒளி. 'ஒளிய திரைகள்' என இயையும். இயல்பாகவே குறைந்த களையினையும், உள் வளைவையும் உடைய பிறைக்கு அவற்றைச் செயற்கை போலக் கூறியது தற்குறிப்பேற்றம்.*

***768. குறிப்புரை :*** *இப்பாட்டிற்கு 'எங்கள் பெருமானே' என்னும் விளியை முதற்கண் வருவித்துக் கொண்டு, 'கூர் இருள், கொழுந்திரள் தெண்ணிலவு*

---

*1. நால்வர் நான்மணிமாலை - 14.*
*2. திருமுறை - 7.40.3.*
*3. வெண்பா - 36.*

*கட்டளைக் கலித்துறை*

**768.** கொழுந்திரள் தெண்ணில வஞ்சிநின் கூரிருள் வார்பளிங்கின்
செழுந்திரள் குன்றகஞ் சென்றடைந் தால்ஒக்குந் தெவ்வர்நெஞ்சத்(து)
அழுந்திரள் கண்டத் தவளப் பொடிச்செக்கர் மேனிநின்றோர்
எழுந்திரள் சோதிப் பிழம்பும்என் உள்ளத்(து) இடங்கொண்டவே. 12

*அகவற்பா*

**769.** கொண்டல் காரெயிற்றுச் செம்மருப்(பு) இறாலின்
புண்படு சிமையத்துப் புலவுநாறு குடுமி
வரையோன் மருக புனலாள் கொழுந
இளையோன் தாதை முதுகாட்டுப் பொருநநின்
நீறாடு பொலங்கழல் பரவ
வேறாங்கு கவர்க்குமோ வீடுதரு நெறியே. 13

---

*அஞ்சி வார் பளிங்கின் செழுந்திரட் குன்றகம் சென்று அடைந்தால் ஒக்கும் நின், தெவ்வர் நெஞ்சத்து அழுந்து கண்டத்துப் (பிழம்பும்) தவளப் பொடிப் (பிழம்பும்). செக்கர் மேனி நின்று எழும் ஓர் திரட் சோதிப் பிழம்பும் ஏன் உள்ளத்து இடம் கொண்ட' என இயைத்து உரைத்துக் கொள்க.*

*நிலவு, பெருமான் முடிமேல் உள்ளது. கூர் இருள் - உலகத்தில் மிகுந்துள்ள இருள். திருநீற்றினால் பெருமானது திருமேனி பளிங்கு மலைபோல் உள்ளது. அவனது நீல கண்டம் அம்மலையின் ஒருபுடை புகுந்த இருள் போன்றுள்ளது. பெருமானது திருமேனி அவனை வெறுப்பவர்கள் உள்ளங்களில் அழுந்தி அச்சுறுத்துகின்றது. 'அழுந்து' என்பது கடைக் குறைந்து நின்றது. "பிழம்பும்" என்ற உம்மையால் அஃது ஏனைக் கண்டம், பொடி இவற்றுடனும் சென்று இயைந்தது. "உள்ளத்து இடம்" என்னும் ஆறாவதன் தொகையை, 'நிலத்தது அகலம்' என்பது போல ஒற்றுமைக் கிழமைப் பொருட்டாகக் கொள்க.*

***769.*** **குறிப்புரை :** *கொண்டல் - கிழக்குத் திசைக் காற்று. 'இதுவே மழையைத் தரும்' என்பது தமிழ்நாட்டு வழக்கம். கார் - மேகம். எயிற்று மருப்பு - பல்லாகிய கொம்பு. மின்னல் இவ்வாறு உருவகம் செய்யப்பட்டது. எனவே, மேகத்தை யானையாக உருவகம் செய்யாமை ஏகதேச உருவகமாயிற்று. செம்மருப்பு, இல்பொருள் உவமை பற்றி வந்த உருவகம். இறால் - தேன் கூடு. "இறாலின் புண்" என்பதையும் "இறாலாகிய புண்" என விரித்து உருவகமாதல் உணர்க. 'மருப்பால் ஆய புண்' என உருபு விரித்துக் கொள்க. சிமயம் - சிகரம். 'மேகமாகிய யானையது எயிறாகிய மருப்பினால்*

*வெண்பா*

770. நெறிவிரவு கொன்றை நெடும்படற்கீழ்க் கங்கை
எறிதிரைகள் ஈர்த்தெற்ற ஏறிப் – பொறிபிதிர
ஈற்றராக் கண்படுக்கும் இண்டைச் சடைச்செங்கண்
ஏற்றரால் தீரும் இடர். 14

*கட்டளைக் கலித்துறை*

771. இடர்தரு தீவினைக்(கு) எள்கிநை வார்க்குநின் ஈரடியின்
புடைதரு தாமரைப் போதுகொ லாம்சரண் போழருவிப்
படர்தரு கொம்பைப் பவளவண் ணாபரு மாதைமுயங்(கு)
அடைதரு செஞ்சுடர்க் கற்றையொக் குஞ்சடை அந்தணனே. 15

---

*உண்டாகிய இறால் ஆகிய புண் பொருந்திய சிகரங்கள்' என்றபடி. இயல்பாகப் பொருந்தியுள்ள தேன் அடையை, 'யானை மருப்பால் உண்டாகிய புண்' எனச் செயற்கையாகக் கூறியது தற்குறிப்பேற்றம். 'மேகத்தினது எயிறாகிய கொம்பு' என்றது மின்னலை. 'மின்னல் அடிக்கடி தோன்ற அதனிடையே தேனடை காணப்படுவது, அம்மின்னலாய் உண்டான புண்போலத் தோன்றுகின்றது' என்பதாம். சிகரங்களிடை இறந்த விலங்குகளது முடை நாற்றம் மேற்கூறிய புண்ணின் நாற்றமாகக் கூறப்பட்டது. "குடுமி" என்பதும் சிகரமே. 'புண்படு சிகரம் ஆதலின் புலவு நாறு சிகரமாயிற்று' என்பதாம். இமயமாகிய குடுமியை உடைய வரையோன், இமயமலையனயன். புனலாள் - கங்காதேவி. இளையோன் - முருகன். பொருநன் - வீரன். 'முதுகாட்டில் செல்லப் பலரும் அஞ்ச, நீ அஞ்சவில்லை' என்றபடி. வேறாங்கதவர்க்குமோ - வேறுபடுவதாய் இரண்டுபட்டு நிற்குமோ. 'சிவபெருமானது திருவடியைத் துதித்தலுக்கு வேறாக வீட்டு நெறி ஒன்று உளதோ' - என்றபடி.*

***770. குறிப்புரை :*** *நெறி விரவு - ஒழுங்காகப் பொருந்திய 'மாலை' எனப் பொருள் தரும். 'படலை' என்பது ஈற்று ஐகாரம். தொகுக்கப்பட்டு நின்றது. ஏற்றுதல் - மோதுதல். ஏறி - கங்கையை விட்டுக் கொன்றை மாலை மேல் ஏறி. பொறி பிதிர - புள்ளிகள் விளங்கும்படி ஈற்று அரா - சூல் கொண்ட பாம்பு. ஏற்றர் - இடப வாகனத்தையுடையவர். 'ஏற்றாராலே' எனப் பிரிநிலை ஏகாரம் விரித்து. 'அவராலேதான் இடர் தீரும். ஏனையோராலே தீராது' - என உரைக்க. இடர், சிறப்பாகப் பிறவித் துன்பம்.*

***771. குறிப்புரை :*** *"போழருவி" என்பது முதலாகத் தொடங்கி "பவளவண்ணா" என்பதை ஈற்றடியிறுதியில் கூட்டி உரைக்க. போழ்தல்*

*அகவற்பா*

772. அந்த ணாளர் செந்தொடை ஒழுக்கமும்
அடலோர் பயிற்றும்நின் சுடர்மொழி ஆண்மையும்
அவுணர் நன்னாட் டிறைவன் ஆகிக்
குறுநெடுந் தானை பரப்பித் தறுகண்
மால்விடை அடரத் தாள்நிமிர்ந் துக்க
காய்சின அரவுநாண் பற்றி நீயோர்
நெடுவரை நெளிய வாங்கிச்

---

*நிலத்தை அருவி - ஆற்று வடிவாய் உள்ள கங்கா தேவி. கொம்பை அடைதரு செஞ்சுடர்க் கற்றை பருமாமுதை ஒக்கும் சடை - கங்கையைப் பொருந்தியுள்ள சுடர்க் கற்றையை உடைய, பெரிய முதிர்ந்த கட்டினை ஒக்கும் சடை. முதை - முதிர்ந்த காடு. தீவினைக்கு - தீவினை நிமித்தத்தால். எள்கி - பிறரால் இகழப்பட்டு நைவார்க்குச் சரண் நின் ஈரடியின் தாமரைப் போது கொலாம்' என முடிக்க. சரண் - புகலிடம் ஈரடியின் போது, ஈரடியாகிய மலர். இன், வேண்டாவழிச் சாரியை. புடை - பக்கத்திற் பொருந்திய 'இணைந்துள்ள' என்றபடி. 'கொல், ஆம்' என்பன அசைகள். 'தீவினையால் வருந்துபவர்க்குப் புகலிடமாகத் தக்கன சிவபெருமானது இணையடிகளே' என்றபடி.*

*772. **குறிப்புரை :** இப்பாட்டிலும் முதற்கண், 'எங்கள் பெருமானே' என்னும் விளியை முதற்கண் வருவித்துக் கொண்டு, 'நீ அவுணர் நன்னாட்டு இறைவனாகிக் குறுநெடுந்தானை பரப்பிக் காய்சின அரவு நாண் பற்றி ஓர் நெடுவரை நெளிய வாங்கிச் சுடுகணை எரிநிமிர்த்துத் துரந்த ஞான்று (உனது) மால் விடை தாள் நிமிர்ந்து அடர, ஒழுக்கமும், ஆண்மையும் உக்க' என இயைத்து உரைக்க. அந்தணாளர் செந்தொடை, வேதம். அடலோர் - வீரம் உடையோர். சுடர் மொழி, வரமாக வழங்கிய சொல். அதனால் அவுணர்கள் (திரிபுரத்தவர்) அடைந்த ஆண்மை. அந்த ஆண்மை வீரர் பலராலும் பாராட்டிப் பேசப்பட்டது. 'பயிற்றும் ஆண்மை' என இயைக்க. மால்விடை, திருமாலாகிய இடபம். அடர - அது தனது கால்களை நீட்டி உதைக்க. உக்க - சுக்குநூறாகி உதிர்ந்தன. 'உக்கன' என்றே பாடம் ஓதுதலும் ஆம். 'நீ சுடுகணை துரந்ததன்றியும், உனது விடை அடர்ந்ததனாலும் திரிபுரமும், அதன்கண் இருந்தோர் ஆண்மை உருவின்றிச் சிதறி அழிந்தன' எனச் சிவபெருமானது ஊர்தியின் ஆற்றலைப் புகழ்ந்தவாறு. வேத நெறி பிழைத்தமை காரணமாகச் சிவபெருமான் போர் தொடுத்ததை அங்ஙனம் தொடுத்தபின் நிகழ்ந்தது போலக் கூறினார். எனினும், அஃது அதற்கு முன்பே அழிந்தது என்பதே*

சுடுகணை எரிநிமிர்த்துத் துரந்த ஞான்றே. 16

### வெண்பா

773. ஞான்ற புனமாலை தோளலைப்ப நாண்மதியம்
ஈன்ற நிலவோடும் இவ்வருவான் – மூன்றியங்கு
மூதூர் வியன்மாடம் முன்னொருகால் துன்னருந்தீ
மீதூரக் கண்சிவந்த வேந்து. 17

### கட்டளைக் கலித்துறை

774. வேந்துக்க மாக்கடற் சூரன்முன் னாள்பட வென்றிகொண்ட
சேந்தற்குத் தாதையிவ் வையம் அளந்ததெய் வத்திகிரி

---

*கருத்து. இறைவனாகி - 'யான் இறைவன்' என்பதைப் புலப்படுத்தி. குறுமை பூதங்களின் உருவம் பற்றியும், நெடுமை மிகுதி பற்றியும் கூறப்பட்டன. "நிமிர்ந்து" என்பதை 'நிமிர' எனத் திரிக்க. 'சுடுகணையால் எரியை நிமிர்த்து அதனைத் துரத்த ஞான்று' என்க.*

*773. குறிப்புரை : புனம் - கொல்லை; முல்லை நிலம். அஃது ஆகுபெயராய்க் கொன்றைப் பூவைக் குறித்தது. 'ஞான்ற மாலை' என இயையும். ஞான்ற - தொங்கிய. நாள் மதியம் - முதல் நாட்பிறை. இவ்வருவான் - இப்பொழுதே நம்முன் தோன்றுவான். 'வேந்து வருவான்' என்க. மூன்றாய் இயங்கும் மூதூர் திரிபுரம். வியல் மாடம் - அவற்றில் உள்ள மாட மாளிகைகள். 'மாடத்தில் என ஏழாவது விரிக்க. "கண் சிவந்த" என்றது. 'சினந்த' என்றபடி. 'இப்பொழுதே வருவான்' என்றது, தமது அன்பு காரணமாக எழுந்த தெளிவினாலாகும்.*

*774. குறிப்புரை : "வேம் மால் விடைக் கொற்றவன்" என்பதை முதலில் கூட்டியுரைக்க. 'முன்னாள் சூரன் வேம் துக்க மாக்கடல் படவென்றி கொண்ட சேந்தன்' என மாற்றிக் கொள்க. சூரன் இறுதியில் மாவாகி (மாமரம் ஆகி)க் கடல் நடுவில் நின்றான்' என்பர். அஃது உண்மையன்று. 'வேகின்ற துக்கமாகிய பெரிய கடல் நடுவில் பொருந்தினான்' என்பது தான் உண்மை எனச் சொல் நயம்படக் கூறினார். சேந்தன் - முருகன். திகிரி - சக்கரம். 'தெய்வத் திகிரி ஏந்தல்' என்பது 'மாயோன்' என்னும் ஒரு பெயர்த் தன்மைதாய், "அளந்த" என்னும் ஒரு பெயரெச்சத்திற்கு முடிவாயிற்று. 'வள்ளி என்னும் கொடிச்சி' எனவும், 'கூந்தற் கொடிச்சி' எனவும் தனித்தனி முடிக்க. கொடிச்சி - குறத்தி.*

ஏந்தற்கு மைத்துனத் தோழனின் தேன்மொழி வள்ளியென்னும்
கூந்தற் கொடிச்சிதன் மாமன்வெம் மால்விடைக் கொற்றவனே. 18

*அகவற்பா*

775. கொற்றத் துப்பின் பொற்றை ஈன்ற
சுணங்கையஞ் செல்வத் தணங்குதரு முதுகாட்டுப்
பேய்முதிர் ஆயத்துப் பிணவின் கொழுந!நின்
ஏர்கழல் கவைஇ இலங்கிதழ்த் தாமம்
தவழ்தரு புனல்தலைப் படுநர்
அவல மாக்கடல் அழுந்தலோ இலரே. 19

*வெண்பா*

776. இலர்கொலாம் என்றிளைஞர் ஏசப் பலிக்கென்(று)

---

*775. **குறிப்புரை :** கொற்றத் துப்பின் - வெற்றிக்கு ஏதுவான வலிமையை உடையவளும், பொற்றை ஈன்ற - மலையால் (மலையரசனால்) பெறப்பட்டவளும். சுணங்கு அம் செல்வத்து - தேமலின் அழகாகிய செல்வத்தை உடையவளும். (ஐ சாரியை) அணங்கு தரு முதுகாட்டு - அச்சத்தைத் தருகின்ற முதுகாட்டின்கண் வாழ்பவளும். பேய் முதிர் ஆயத்து - பேய்களாகிய முற்றிய சுற்றத்தை உடையவளும் ஆகிய பிணவின் கொழுந - மான்போன்றவளுக்குக் கணவனே. இங்ஙனம் வருணிக்கப்பட்டவள் காடுகிழாள். இவளும் சத்தியின் கூறாதல் பற்றி 'மலையரையனால் பெறப்பட்டவள்' என்றார். பொற்றை - மலை. 'ஒற்றை' என்பது பாடம் அன்று. ஏர் கழல் - அழகிய திருவடியை. கவைஇ - சூழ்ந்து. தாமம் தவழ் தரு புனல் - பூக்கள் மிதக்கின்ற நீர். தலைப் படுநர் - தங்கள் தலையிலே உறப் பெற்றவர்கள். "அழுந்தலோ" என்னும் ஓகாரம் சிறப்பு. 'சிவபெருமானுடைய பாத தீர்த்தம் தலையிலே படப் பெற்றவர்களது துன்பங்கள் நீங்கி யொழியும்' என்பது கூறியவாறு.*

*776. **குறிப்புரை :** இளைஞர் - அறிவு முதிரப் பெறாதவர்கள். இலர் என்று ஏச - 'இவர் யாதோன்றும் இலராகிய நிச்சல் நிரப்புடையர்' என்று சொல்லி இகழும்படி. தெரியின் - ஆராய்ந்து பார்த்தால். குறுந் தெரியல் - சிறிய மாலைக் கண்ணி. ஈண்டு எங்கட்கு உறும் - இப்பிறப்பில் எங்கட்கு நன்மை தருவதாகும். 'அறிவு முதிர்ந்தோர் இகழ்தல் கண்டு யாமும் அது செய்யோம்' என்றபடி.*

*புத்தரோடு பொறியில் சமணும் புறங்கூற*
*நெறிநில்லா*

உலகெலாஞ் சென்றுழல்வ ரேனும் – மலர்குலாம்
திங்கட் குறுந்தெரியல் தேவர்க்காட் செய்வதே
எங்கட் குறும்;தெரியின் ஈண்டு. 20

*கட்டளைக் கலித்துறை*

777. ஈண்டுமுற் றத்தொற்றை மால்விடை ஏறியை அம்முனைநாள்
வேண்டிமுற் றத்திரிந் தெங்கும் பெறாது வெறுங்கைவந்தார்
பூண்டவொற் றைச்செங்கண் ஆரமும் கற்றைச் சடைப்புனலும்
நீண்டஒற் றைப்பிறைக் கீளும்எப் போதுமென் நெஞ்சத்தவே. 21

*அகவற்பா*

---

*ஒத்தசொல்ல உலகம் பலிதேர்ந்து எனது*
*உள்ளம் கவர் கள்வன்*[1]

*எனவும்*

*புத்தரும், சமணரும் புறன் உரைக்கப்*
*பத்தர்கட் கருள்செய்து பயின்றவனே*[2]

*எனவும் ஞானசம்பந்தரும் அருளிச்செய்தார். கோல், ஆம் அசைகள்.*

***777. குறிப்புரை :*** *ஈண்டு முற்றத்து - 'இவ்வுலகமாகிய முற்றத்திலே (வெற்ற வெளியான இடத்திலே) முற்றத் திரிந்து' என இயைக்க. 'முற்றத் திரிந்து, அம் முனைநாள், விசை ஏறியை எங்கும் பெறாது வெறுங் கை வந்தார்' என்க. முனைநாள் - முன்னை நாள். பெறாது - காணப் பெறாமல். 'மாலும், அயனுமாகிய இரு பெருந் தேவர்கள்' என்பதைச் சொல்லாமற் சொல்லக் கருதி அத்தொடரைத் தோன்றா எழுவாயாக வைத்தார். செங்கண் - சிவந்த கண்; நெருப்புக்கண் ஆரம் - எலும்பு மாலை. 'செங்கண்' என்பதிலும் உம்மை விரித்து, 'ஒற்றைச் செங்கண்ணும், பூண்ட ஆரமும் - கீளும் எப்போதும் என் நெஞ்சத்தவே' என இயைத்து முடிக்க. 'மாலும், அயனும் எத்துணை முயன்று தேடியும் காணப்படாத முதல்வன் என் நெஞ்சத்தில் எப்பொழுதும் குடிகொண்டுள்ளான்' எனத் தாம் பெற்ற பேற்றினை வியந்துரைத்தவாறு.*

***778. குறிப்புரை :*** *"எந்தை" என்பது முதலாகத் தொடங்கி, முதல் அடியை இறுதியில் வைத்து முடிக்க. எந்தை, விளி, நீதி இங்குத் தகுதியைக் குறித்தது.*

---

1. *திருமுறை - 1.1.10.*
2. *திருமுறை - 3.4.10.*

778. நெஞ்சிற் கொண்ட வஞ்சமோ உடைத்தே
மடவோர் விரும்புநின் விளையாட் டியல்போ?
மருள்புரி கொள்கைநின் தெருளா மையோ?
யாதா கியதோ? எந்தை நீதியென்(று)
. உடைதலை நெடுநிலா வெறியல்
கடைதலென் றருளிச் சூடிய பொருளே. 22

*வெண்பா*

779. பொருளாக யானிரந்தால் புல்லெருக்கின் போதும்
அருளான்மற் றல்லாதார் வேண்டின் – தெருளாத
பான்மறா மான்மறிக்கைப் பைங்கண் பகட்டுரியான்
தான்மறான் பைங்கொன்றைத் தார். 23

***கட்டளைக் கலித்துறை***

---

*வெறியல் - மாலை. கடைதல் - மார்பின்கண் அசைதல். உடை தலை மாலை மார்பின்கண் அசைதலைத் தகுதியென்று அருளிச் சூடிய பொருள் விளையாட்டியல்போ? தெருளாமையோ? (இவ்விரண்டுமாய் இருத்தல் இயலாது. ஆகையால்) ஒரு வஞ்சமோ உடைத்து என முடிக்க. 'தலை மாலை சூடிக் கொள்ளுதலை ஒரு விளையாட்டாகக் கருதுதல் மடவோர் இயல்பாகும்' என்பார், "மடவோர் விரும்பும் விளையாட்டு" என்றார். தெருளாமையாகிய மருள்புரி கொள்கையோ என மாற்றியுரைத்தல் கருத்து என்க. "அருளி" என்றது, 'உனது செயல்கள் யாவும் அருள் காரணமாகவே நிகழும் ஆதலால் இன்னதோர் அருளைக் கொண்டு' என்றபடி. பொருள் - கருத்து. பழிப்பது போலப் புகழ்தல் வேண்டி "வஞ்சம்" என்றார். ஆகலின், "ஆழ்ந்ததோர் கருத்து" என்பதே அதன் உண்மைப் பொருளாம். ஓகாரம் சிறப்பு. அக்கருத்தாவது, தனது நித்தியத் தன்மையை உயிர்கட்கு உணர்த்துதலாம்.*

***779. குறிப்புரை :*** *"தெருளாத... பகடுரையான்" என்பதை முதலிற் கொள்க. மறி - கன்று. 'தெருளாத மறி, பால் மறா மறி' எனத் தனித்தனி முடிக்க. "தெருளாத" என்றதும், "பால் மறா" என்றதும் குழவிப் பருவத்தைக் குறித்தவாறு. பகடு - யானை. 'பைங்கண் பகடு' என்க. பொருளாக - இன்றியமையாப் பொருளாக. மற்று, அசை. அல்லாதார் - யான் தவிர ஏனையோர். 'பைங்கொன்றைத் தாரையும் தான் மறான்' என்க. உம்மை தொகுத்தலாயிற்று. மறான் - மறுக்க மாட்டான். இது தூது செல்லுமாறு வேண்டி தலைவிக்குத் தோழி தலைவனது அன்பின்மை கூறி இயற்பழித்தது.*

780. தாரிளங் கொன்றைநல் ஏறு கடாவித் தலைமைமிக்க
ஏரிள மென்முலைப் பொன்மலை யாட்டிக்கெற் றேயிவனோர்
பேரிளங் கொங்கைப் பிணாவொடுங் கூடிப் பிறைக்கொழுந்தின்
ஓரிளந் துண்டஞ் சுமந்தையம் வேண்டி உழிதருமே. 24

*அகவற்பா*

781. உழிதரல் மடிந்து கழுதுகண் படுக்கும்
இடருறு முதுகாட்டுச் சீரியல் பெரும
புகர்முகத் துளைக்கை உரவோன் தாதை
நெடியோன் பாகநின்
சுடர்மொழி ஆண்மை பயிற்று நாவலர்க்(கு)
இடர்தரு தீவினை கெடுத்தலோ எளிதே. 25

*வெண்பா*

---

*780. குறிப்புரை :* "இவன் ஓர்" என்பது முதலாகத் தொடங்கியுரைக்க. அங்ஙனம் உரைக்குங்கால் "நல் ஏறு கடாவி" என்பதை "ஐயம் வேண்டி உழிதரும்" என்பதற்கு முன்னர்க் கூட்டுக. "ஓர் பேரிளங் கொங்கைப் பிணா" என்றது கங்கா தேவியை. 'இவன் இத்தகையனாய் இருத்தலால் தலைமை மிக்க பொன் மலையாட்டிக்கு இவன் தனது கொன்றை மாலையை வழங்கியதனால் என்ன பயன்?' என்றபடி. பொன் மலையாட்டி, உமாதேவி. 'அவரே பெருந் தேவி' என்றற்கு "தலைமை மிக்க" என்றார்.

*781. குறிப்புரை :* உழிதரல் மடிந்து - அலைவதினின்றும் ஓய்வு பெற்று. கழுது - பேய். சீர் இயல் பெரும - நடனம் புரிகின்ற பெருமானே. சீர் - தாளம். 'தாளத்திற்கு இசைய நடனம் ஆடுபவன்' என்றபடி. புகர் முகத் துளைக்கை உரவோன், யானை முகக் கடவுள். நெடியோன் பாக - திருமாலை ஒரு பாகத்தில் உடையவனே. நின் சுடர் மொழி ஆண்மை - வேதத்தை ஆளும் தன்மை. அஃதாவது, வேத நெறிப்படி உன்னை மனமொழிமெய்களால் வழிபடுந்தன்மை. "பயிற்றும்" - என்பது தன்வினை, பிறவினை இரண்டற்கும் பொதுவாய் நின்றது. ஓகாரம், சிறப்பு.

*782. குறிப்புரை :* தனிச் சீரிலிருந்து தொடங்கி, ஈற்றடியை இறுதியில் வைத்து உரைக்க. வள்ளன்மையைக் குறிக்கும். 'வள்ளல்' என்பது ஈறு குறைந்து, முதனிலையளவாய் நின்றது. வள்ளன்மையைப் பொருப்பிற்கு ஏற்றினும், பொருப்பற்கு ஏற்றினும் பொருந்தும். எளியம் என்று ஏற்கி இகழாது - 'யாம் சிவனுக்கு செய்யும் அளவிற்குத் தகுதியுடையோமோ' என்று எங்களை

782. எளியமென் றெள்கி இகழாது நாளும்
அளியம்ஆட் செய்தாலும் ஐயோ – தெளிவரிய
வள்கயிலை நீள்பொருப்ப வான்தோய் மதிச்சடையாய்
கொள்கயிலை எம்பாற் குறை. 26

*கட்டளைக் கலித்துறை*

783. குறையாப் பலியிவை கொள்கவென் கோல்வளை யுங்கலையும்
திறையாக்கொண் டாயினிச் செய்வதென் தெய்வக்கங் கைப்புனலில்
பொறையாய் ஒருகடல் நஞ்சுண்ட கண்டா பொடியணிந்த
இறைவா இடுபிணக் காடசெம் மேனியெம் வேதியனே. 27

*அகவற்பா*

784. வேதியர் பெரும விண்ணோர் தலைவ

---

*நாங்களே இகழ்ந்துகொண்டு, அது பற்றி உனக்கு ஆட்செய்தலை ஒழியாது செய்தாலும் நீ எங்கள் பால் உள்ள குறைபாட்டினை கருத்திற் கொள்கின்றாய் இல்லை (கருத்திற் கொண்டு தீர்க்கின்றிலை) என்க. 'கொள்கையிலே' என்பது, "கொள்கயிலை" எனப் போலியாய் வந்தது. 'எம்மாற் குறை' என்பதும் பாடம் அதற்கு, 'குறை-பணி' என்பது பொருளாகும்.*

*783. குறிப்புரை : ''தெய்வக் கங்கை'' - என்பது முதலாகத் தொடங்கியுரைக்க. "கடல்" என வருதலால், "பொறை" என்பது கடலில் உள்ள நீரைக் குறித்தது. "ஆகாயத்தில் உள்ள தெய்வக் கங்கையில் தனது நீர் எழுந்து பாய்வதாகிய ஒரு கடல்" என்க. 'இறைவன்' எனது 'இறையன்' எனவும் வருவும். 'இறையனார்' என்பதை நினைக. விளியேற்குங்கால் 'இறைவன்' என்பது 'இறைவா' என வருதல் போல 'இறையன்' என்பது, இங்கு "இறையா" என வந்தது. 'என் பலியாகிய இவைகளைக் கொள்க. இவற்றை விடுத்து என் வளையையும், கலையையும் கொண்டாய், என் செய்வது!' என்க. பலி - பிச்சை. இது கைக்கிளைத் தலைவி தலைவனை நெருங்கிக் கூறியது.*

*784. குறிப்புரை :* வேதியர் - நிலத் தேவர்; பூசுரர். விண்ணோர் - *வானத் தேவர். நான்முகத்து அண்டம் - பிரமாண்டம். 'அதன் முழு இடத்திலும் நிறைந்துள்ளாய்' என்றற்கு "நான்முகத்து அண்டவாண" என்றார். "நாடு" என்றது உலகத்தை. அது சத்தியலோகம். 'அது செம்பொன் நிறத்தது' என்றற்கு, "செக்கர் நாடு" என்றார். விடை திருமால் ஆதலின் "அதன் பாக" என்றதனானே வைகுந்தத்தில் நிறைந்தமை சொல்ல வேண்டாவாயிற்று.*

ஆதி நான்முகத்(து) அண்ட வாண
செக்கா நான்மறைப் புத்தேள் நாட
காய்சின மழவிடைப் பாகநின்
மூவிலை நெடுவேல் பாடுதும்
நாவலம் பெருமை நல்குவோய் எனவே. 28

*வெண்பா*

785. எனவே உலகெலாம் என்றிளைஞர் ஏச
நனவே பலிதிரிதி நாளும் – சினவேங்கைக்
கார்க்கயிலை நாட களிற்றீர் உரியலாற்
போர்க்கையிலை பேசல்நீ பொய். 29

*கட்டளைக் கலித்துறை*

786. பொய்நீர் உரைசெய்தீர் பொய்யோம் பலியெனப் போனபின்னை
இந்நீர் குடைக்கென்று வந்தீர் [illegible] செய்வதென்னே
செந்நீர் வளர்சடைத் திங்கட் பிளவொடு [illegible] வைத்த
முந்நீர்ப் பவளத் திரள்செக்கர் ஒக்கும் முதலவனே. 30

திருச்சிற்றம்பலம்

*நாவல் [illegible] பெருமை. அது தம்மால் மொழியப்படும் மொழிகள் நிறைமொழிகளாய்ப் பயன் தருதல். எனவே 'நாவலம் பெருமை நிறைமொழிகளாய் நின்று பயன் தருதல், இறைவனது அருளாற்றல் அம் மொழிகளில் கலந்து நின்று இயக்குதலானே' என்பது அறியப்படும். "நல்குவோய்" என்பது முற்று.*

***785. குறிப்புரை :*** *"சின வேங்கைக் கார்க் கயிலை நாட" என்பதை முதலிற் கொள்க. சின வேங்கை - புலி. கார் - மேகம். 'இவைகளையுடைய கயிலை' என்க. "நாடு" என்றது, 'இடம்' என்றபடி. எனவே இளைஞர் - எடுத்துச் சொல்லப் புகுங்கால் உலகியலில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்கள் இகழ்ந்தே கூறும்படி '(நீ) நாளும் நனவே உலகெலாம் பலிதிரிதி' என்க. "நனவே" என்றது, "யாவரும் நன்கறியும்படி" என்றவாறு. 'அதுவன்றி, நீ போர்க்கை களிற்று உரியலால் இலை; 'அங்ஙனமாக - யான் பேரைசுவரியம் உடையவன் - என்று உன்னை நீயே உயர்த்திப் பேசிக் கொள்ளுதல் வேண்டா' என்க. 'ஐசுவரியம் உடையேன்' எனக் கூறிக் கொள்ளுதல். 'என் பெயர் ஈசுவரன்; (இன்னும்) மகேசுரன்' என்று சொல்லிக் கொள்ளுதல். பேசல் - பேசற்க. இனி இதனைத் தொழிற் பெயராக்கி. 'நீ பேசல் பொய்' என முடிக்கினும் ஆம். அன்றி, 'பேசேல்' எனப் பாடம் ஓதலும் ஆம்.*

***786. குறிப்புரை :*** *''செந்நீர் வளர்சடை'' என்பது முதலாகத் தொடங்கியுரைக்க. செந்நீர் - சிவந்த நீர்மை, செந்நிறம். 'வைத்த முதலவன்' என இயையும். 'திரளினது செக்கர்' என ஆறாவது விரிக்க. "நீர்", "செய்தீர்", "அறியீர்" என்பன எள்ளல் பற்றி வந்த பன்மையாகலின் அவை "முதலவனே"*

*என்னும் ஒருமையோடு மயங்கின. “பொய் நீர் உரை செய்தீர்” என்பதை, “செய்வது என்னே” என்பதற்கு முன்னே கூட்டுக. பலி பொய்யோம் - நாள்தோறும் பிச்சைக்கு வருதலைப் பிழையோம். இஃது ஒருநாள் பிச்சைக்கு வந்த இறைவன் கூறியது. அங்ஙனம் கூறியதை நிறைவேற்றாமையால் ‘நீர் பொய் உரை செய்தீர்; செய்வது என்னே’ என்றாள். கடை - தலைவாயில். இது கைக்கிளைத் தலைவி ஆற்றாமையால் தலைவனை எதிர் பெய்துகொண்டு கூறியது. “முதலவனே” என வந்த இதன் இறுதிச் சீர் இதன் முதற் செய்யுள் முதலோடு சென்று மண்டலித்தல் காண்க.*

***சிவபெருமான் திருமும்மணிக்கோவை முற்றிற்று.***

## அதிராவடிகள்

*பதினொராந் திருமுறையில் இருபத்தைந்தாம் பனுவலாகத் தொகுக்கப் பெற்றுள்ள மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவையைப் பாடியவர் அதிராவடிகளாவர். கல்விகேள்விகளில் வல்லவராகிய இவ்வாசிரியர் தனக்குவமை இல்லாதவனாகிய இறைவன் திருவடிகளை இடைவிடாது நினைத்து மனக்கவலை மாற்றியவராதலின் வினைத் துன்பங்களைக் கண்டு துளங்காத சிந்தையுடைய இவரை அதிராவடிகள் என்ற பெயரால் ஆன்றோர் குறித்துப் போற்றுவார் ஆயினர். அதிர்ச்சி - நடுக்கம். அதிரா அடிகள் - துளக்கமில்லாத சிந்தையினராகிய பெரியார். எதிர்காலத்தில் வரக்கடவதாகிய இடையூற்றினை முன்னரே அறிந்து தடுக்கவல்ல நல்ல அறிவினையுடையார்க்கு அவர் நடுங்கும்படி வருவதொரு துன்பமும் இல்லையென்பார்.*

**'எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை**
**அதிர வருவதோர் நோய்'**

*என்றார் திருவள்ளுவர். தெய்வப்புலவர் அருளிய இப்பொய்யாமொழியின் வண்ணம் இடையூறு நீக்குவோராகிய மூத்தபிள்ளையாரைப் பணிந்து பின்வரக்கடவ துன்பங்களை முன்னறிந்து காக்கும் நிலையில் அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறையென்னும் மும்மணிகளால் இயன்ற மும்மணிக்கோவை யென்னும் பாமாலையை மூத்த பிள்ளையார்க்கு அணிந்த இப்புலவர் பெருமானை அதிராவடிகளென அழைத்தமை பெரிதும் பொருத்தமுடையதேயாம். இவ்வாசிரியர் பிறந்த ஊர் குலம் முதலியன இவை எனத் தெரிந்து கொள்ள இயலவில்லை. இவ்வாசிரியர் வாழ்ந்த காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கமுமாமெனக் கொள்ளுதல் ஏற்புடையதாகும்.*

*மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை முப்பது பாடல்களால் இயன்றுளது. இந்நூலின் ஏடுகள் சிதைவு உற்றமையால் இதன்கண் 24 முதல் 30 வரையுள்ள பாடல்கள் ஏழும் கிடைக்கவில்லை. கிடைத்த பாடல்களிலும் சில தொடர்கள் பொருள்விளங்கா நிலையிற் சிதைந்துள்ளன.*

*காமனைக் காய்ந்த கடவுளாகிய சிவபெருமான் பெற்றருளிய புதல்வர் யானை முகக் கடவுளாகிய மூத்த பிள்ளையாராவர். அவருடைய திருவடித் துணையின்றி உயிர்கட்கு வேறு துணையில்லை. தன்னை அன்பினால் வழிபடும் மெய்யடியார்களின் பிறவிப்பிணியைப் போக்கவல்லார் அவர். அவருடைய திருவடியைச் சிந்தித்து வாழ்வார்க்கு மனக்கவலை யில்லை. யாம்*

மூத்தபிள்ளையாருடைய திருவடியை இறுகப்பற்றினோமாதலால் மனக்கவலையால் மதிமயங்கும் இயல்புடையேமல்லேம் என அதிராவடிகள் இத் திருமும்மணிக்கோவையிற் கூறுங்கருத்துக்கள் மூத்தபிள்ளையார் வழிபாட்டினால் மக்கள் அடைதற்குரிய பெருநலங்களை அறிவுறுத்து வனவாகும்.

மூத்தபிள்ளையார் இருகைகளையுஞ் சேர்த்துத் தட்டிச் சப்பாணி கொட்டுதலும், திருமுகம் அசையச் செங்கீரையாடுதலும் ஆகிய பிள்ளை விளையாட்டினை மேற்கொண்டு உலகவுயிர்களுக்கு இன்பஞ்செய்யும் திறத்தை,

**நிலந்துளங்க மேருத் துளங்க நெடுவான்**
**தலந்துளங்கச் சப்பாணிகொட்டும் - கலந்துளங்கொள்**
**காமாரி யீன்ற கருங்கைக் கடதடத்து**
**மாமாரி யீன்ற மணி.**

எனவும்,

**இக்கயங்கொள் மூவலயஞ் சூழேழ் தடவரைகள்**
**திக்கயங்கள் பேர்ந்தாடச் செங்கீரை - புக்கியங்கு**
**தேனாட வண்டாடச் செங்கீரை யாடின்றே**
**வானாடன் பெற்ற வரை**

எனவும் வரும் பாடல்களால் அதிராவடிகள் சுவை பெற விரித்துரைத்துள்ளார். செங்கீரையாடுதலும் சப்பாணி கொட்டுதலுமாகிய பிள்ளைத் தமிழுறுப்புக்களை இத்திரு மும்மணிக்கோவையில் ஆசிரியர் குறிப்பிட்டுப் போற்றுதலால் இவர் வாழ்ந்த காலமாகிய கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலேயே செந்தமிழ் மொழியின் சிறப்புடையப் பனுவலாகிய பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தம் இயற்றப்பெற்று வழங்கியிருத்தல் வேண்டுமென்பது நன்கு துணியப்படும்.

வேத முதல்வனாகிய பிரமனைக் கொன்ற பழியுடையோனுக்குப் புதல்வனாகப் பிறந்ததும் அன்றித் தானே நூலியற்றும் ஆற்றலின்றிப் பரதவர் மகள் புதல்வனாகிய இழிந்தோனொருவன் சொல்லிய கதையினை மேரு மலையிற் கைவருந்த எழுதிய யானைமுகக் கடவுளை யாம் பெரிதும் போற்றுவது எது கருதி? எனப் பழித்துரைப்பது போன்றமைந்தது,

**மின்னெடுங் கொண்ட லந்நெடு முழக்கத்**
**தோவற விளங்கிய துளைக்கைக் கடவுளை**
**யாமிக வழுத்துவ தெவனோ அவனேற்**

**பிறந்ததிவ் வுலகின்பெருமூ தாதை**
**உரந்தரு சிரமரிந் தவற்கே, வரைந்தது**
**மேருச் சிமையத்து மீமிசை**
**வாரிச் செல்வன் மகள் மகன் மொழியே.**

என்ற பாடலாகும். படைத்தற் கடவுளாகிய நான்முகனைச் சினந்த பேராற்றல் மிக்க முழுமுதற் கடவுளின் திருமகனாராகத் தோன்றியவர் மூத்த பிள்ளையாரென்றும் வேதப் பொருளாய் விளங்கும் விநாயகப் பெருமான் தன்னை வழிபடும் மெய்யடியாராகிய வியாச முனிவர்க்கு எளிவந்து தோன்றி அவர் சொல்லிய மாபாரதக் கதையினை மேரு மலையில் எழுதியருளினா ரென்றும் அக்கடவுளது அருமையிலெளிய அழகினை இத்திருப் பாடலில் அதிராவடிகள் போற்றிப் புகழ்ந்துள்ளமை காணலாம். இதன்கண் பழிப்பது போலப் புகழ்தல் என்னும் அணிநலம் அமைந்திருத்தல் காண்க. ஈண்டு 'வாரிச்செல்வன் மகள்' என்றது கடலில் மீன்பிடிக்குந் தொழிலுடைய பரதவனுக்கு மகளாகிய மச்சகந்தியை. பராசுர முனிவர் அவளைக் கூடிய நிலையிற் பிறந்த புதல்வர் வியாச முனிவராதலின் அவரை 'வாரிச் செல்வன் மகள் மகன்' என்றார் ஆசிரியர்.

சிந்தையும், மொழியும் செல்லாத நிலையில் அப்பாற்பட்டுத் திகழ்தலும், ஞாயிறு, திங்கள் தீயென்பவற்றைக் கண்களாகக் கொண்டு உலகத்திற்கு விளக்கந் தருதலும், கல்லால் நீழலில் முனிவர் நால்வர்க்கு அறமுதலாகிய அருமறைப் பொருளைத் தெளிய அறிவுறுத்தலும் ஆகிய சிவபெருமானுக்குரிய இயல்புகளை அவர் பெற்றருளிய மூத்த பிள்ளையார்க்கு இயைத்துரைப்பதாக அமைந்தது.

**மொழியின் மறைமுதலே முந்நயனத் தேறே**
**கழிய வருபொருளே கண்ணே - தெழிய**
**கலாலயனே எங்கள் கணபதியே நின்னை**
**அலாதையனே சூழாதென் அன்பு.**

என்ற பாடலாகும். சிவபெருமானும் அவர் பெற்றருளிய மூத்த பிள்ளையாரும் பொருளால் ஒருவராதலேயன்றிப் பண்பு உறுப்பு செயல் என்பவற்றாலும் ஒருவராயுள்ள இயைபினை இத்திருப்பாடல் அறிவுறுத்தல் காணலாம். இவ்வாறே இம்மும்மணிக்கோவையின் பத்தாம் பாடலும் 'மஞ்சேறு கயிலை மலைகிழவோயே' என விநாயகப் பெருமானைக் கயிலை மலையில் வீற்றிருக்கும் கடவுளாகப் போற்றி அழைக்கின்றது. இக்குறிப்புக்களை ஊன்றி நோக்குங்கால் சிவபெருமானும் மூத்த பிள்ளையாரும் ஒரு பரம்பொருளே யென்றவுண்மையையுணர்ந்து வழிபட்ட திருவருட்செல்வர் அதிராவடிக ளென்பது நன்கு விளங்கும்.

*சிவபெருமான் தன் கையிலுள்ளதோர் மாங்கனியை மூவுலகங்களையும் விரைவிற் சுற்றி வருவார்க்குத் தருவதாகக் கூறினாரென்றும், அதனைக் கேட்ட முருகப் பெருமான் மயில் மீதமர்ந்து, மூவுலகங்களையும் விரைவிற் சுற்றிவரச் சென்றனரென்றும், அந்நிலையில் விநாயகப் பெருமான் எல்லாவுலகமுமாய் விளங்கும் தம் தந்தையாகிய சிவபெருமானை வலம் வந்து அம் மாங்கனியை எளிதிற் பெற்றனரென்றும் வழங்கும் புராணக் கதையினை,*

***சுடர்ப்பிழம்பு தழைத்த அழற்றனி நெடுவேற்***
***சேய்மூ வுலகம் வலம்வர ஏய***
***கொன்றையும் படலந் துன்று சடைக் கிடந்த***
***ஓங்கிருந்தாதையை வளாஅய் மாங்கனி***
***அள்ளற் றீஞ்சுவை யருந்திய***
***வள்ளற் கிங்கென் மனங்கனிந்திடுமே.***

*எனவரும் பாடலில் இந்நூலாசிரியர் குறிப்பிட்டுப் போற்றியுள்ளார். இறைவன் திரிபுரத்தை அழிக்கச் சென்ற பொழுது விநாயகப் பெருமான் துணைபுரிந்த செய்தி இம்மும்மணிக்கோவையில் ஒன்பதாம் பாடலிற் குறிக்கப் பெற்றுளது. விநாயகப் பெருமானது திருமேனியின் தோற்றத்தைக் குறித்து இவ்வாசிரியர் புனைந்துரைப்பன கற்போர்க்குப் பெரிதும் சுவை பயப்பனவாம்.*

## அதிரா அடிகள்

*அருளிச்செய்த*

## 25. மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை

*அகவற்பா*

*திருச்சிற்றம்பலம்*

787. ஒருநெடுங் கங்கை இருங்குறும் பைம்புகர்
மும்முகச் செந்நுதி நாலிணர் வெள்நிணக்
குடற்புலவு கமழும் அடற்கழுப் படையவன்
மதலை மாமதந் துவன்றிய கதனுடைக்
கடதடக் கபோலத் தோரிட மருப்பின்
கரண்டக உதரத்து முரண்தரு குழவிதன்
சேவடி யுகளம் அல்லது
யாவையும் இலம்இனி இருநிலத் திடையே. 1

---

*787. குறிப்புரை :* *இதன் முதல் மூன்று அடிகளும் சிவபெருமானைக் குறித்தன. ''இருங்குறும் பைம்புக... கழுப்படை'' என்னும் தொடர் சிவபெருமான் ஏந்தியுள்ள சூலத்தைக் குறித்தது. இருமை - கருமை. அஃது மையீறு இன்றி நின்றமையின் மெல்லினம் மிகுந்தது. குறுமை - சிறுமை. பசுமை - ஈரம். அது பகைவர் உடலில் பாய்ந்து புலராமையால் ஆயிற்று. புகர் - அழகு. நுதி - முனை. அஃது உதிரத்தால் சிவந்து நின்றது. நாலுதல் - தொங்குதல். நுதியிலே நாறுகின்ற. இணர் - கொத்தாகிய குடல் என்க. நிணம் - கொழுப்பு. குடல் பகைவருடையன. கமழும் - நாறுகின்ற. இவ்வளவும் சூலத்திற்கு அடை. மதலை - மகன். துவன்றுதல் - நெருங்குதல். அஃது இங்கே மிகுந்த பாய்தலைக் குறித்தது. கதன் - கதம், கோபம். கடம் - மதநீர்; தட - பெரிய, கபோலம் - கன்னம். வல மருப்புக் கயாமுகாசுரனை அழிக்க ஒடிக்கப்பட்டது. ஆகலின், "இட மருப்பின்" என்றார். காண்டக உதரம் - கூடை போலும் வயிறு. 'சிற்றுண்டிகள் பலவற்றால் நிரம்பியது' என்றபடி. 'கதனுடைக் குழவி. கபோலக் குழவி, மருப்பிற்குழவி, உதரத்துக் குழவி' என முடிக்க. முரண் - வலிமை. யுகளம் - இணை. யாவையும் - அனைத்துப் பொருள்களின்மேல் உள்ள பற்றுக்களும். ஆகுபெயர். இதன்கண் ஒன்று முதல் நால் அளவான எண்ணலங்காரம் வந்தது. "செந்நுதி வெள்நிணம்" முரண் தொடை.*

*788. குறிப்புரை :* *தனிச்சீர் முதலாகத் தொடங்கியுரைக்க. காமாரி - காமனை அழித்தவன்; சிவபெருமான். 'அன்பர்கள் உள்ளத்தில் கலந்து*

### *வெண்பா*

788. நிலந்துளங்க மேருத் துளங்க நெடுவான்
தலந்துளங்கச் சப்பாணி கொட்டும் – கலந்துளங்கொள்
காமாரி ஈன்ற கருங்கைக் கடதடத்து
மாமாரி ஈன்ற மணி. 2

### *கட்டளைக் கலித்துறை*

789. மணிசிந்து கங்கைதன் மானக் குருளையை வாளரக்கர்
அணிசிந்த வென்றஎம் ஐயர்க் கிளங்கன்றை அங்கரும்பின்
துணிசிந்த வாய்ப்பெய்த போதகத் தைத்தொடர்ந் தோர்பிறவிப்
பிணிசிந்து கான்முனை யைப்பிடித் தோர்க்கில்லை பேதுறலே. 3

### *அகவற்பா*

790. பேதுறு தகையம் அல்லம் தீதுறச்
செக்கர்க் குஞ்சிக் கருநிறத் தொக்கன்

---

*அவற்றை இடமாகக் கொள்கின்ற காமாரி' என்க. கருமை - பெருமை. கடம் - மதம். தட - பெருமை. 'தடத்துக் கடம்' பின் முன்னாக மாற்றியுரைக்க. கடமாகிய மாரி, உருவகம். மணி - இரத்தினம் போலும் பிள்ளை. சப்பாணி கொட்டுதல், குழந்தைகள் தங்கள் இரு கைகளையும் சேர்த்துக் கொட்டும் விளையாட்டு. 'இச்சிறு பிள்ளையின் சப்பாணி கொட்டுக்கு உலகம் அதிரும்' என அதன் ஆற்றலை வியந்தவாறு. 'சக பாணி' "சப்பாணி" என மருவிற்று.*

*789. **குறிப்புரை :** சிவபெருமானுக்கு மகனாகவே கங்கைக்கும் மகன் ஆயினான். மானம் - பெருமை. அரக்கர், திரிபுரத்து அசுரர். அவர்களது அணி படைகள். 'இளங் கன்று' என்பதில் இளமை, பருவத்தைக் குறித்தது; குறையைக் குறித்த தன்று. துணி - துண்டு. போதகம் - யானை. தொடர்ந்தோர் - அன்பு செய்தோர். 'தன்னைத் தொடர்ந்தோர்' என்க. பிணி சிந்து - நோயை அழிக்கின்ற. கான்முனை - பிள்ளை. பேதுறல் - மயங்கல். "பேதுறல் இல்லை" என்றது, 'தெளிவு உண்டாகும்' என்றபடி.*

*790. **குறிப்புரை :** முதல் அடியை 'தீதுறப் பேதுறு தகையமல்லம்' என மாற்றி இறுதியில் வைத்துரைக்க. "குஞ்சி" என்றது சடையை. 'துவக்கு' என்னும் வடசொல் 'தொக்கு' எனத் திரிந்து வந்தது. 'தோல்' என்பது பொருள். தோல், யானைத் தோல். தொக்கன் - அத்தோலைப் போர்த் திருப்பவன். "நாப்பண்" என்றது, 'அவனுக்கும், உமைக்கும் நடுவில்' என்றதாம். பொறி - புள்ளி. தடக்கை - வளைந்த கை - தும்பிக்கை. முரணிய - மற்றைக் கைகளோடு மாறுபட. "கொட்ட" என்பதன்பின் 'விளங்கும்' என ஒரு சொல் வருவிக்க.*

நாப்பண்
புக்கவண் இரும்பொறித் தடக்கையும்
முரணிய பெருந்தோள்
கொட்ட நாவி தேவிதன்
மட்டுகு தெரியல் அடிமணந் தனமே. 4

*வெண்பா*

791. மேய உருமிடற்றர் வெள்ளெயிற்றர் திண்சேனை
ஓய மணியூசல் ஆடின்றே – பாய
மழைசெவிக்காற் றுந்திய வாளமர்க்கண் எந்தை
தழைசெவிக்காற் றுந்தத் தளர்ந்து. 5

---

*'நாபி' என்னும் வடசொல் 'நாவி' எனத் திரிந்து வந்தது. நாபி - கொப்பூழ். அஃது ஆகு பெயராய் வயிற்றைக் குறித்தது. 'வயிறு' என்னும் விதப்பால் 'பெருவயிறு' என்பது பெறப்பட்டது. தே - கடவுள். 'தேவாகிய இதன் அடி மணந்தனம்' என்க. தே, சொல்லால் அஃறிணையாதலின், "இதன்" என்றார். மட்டு உகு தெரியல் - தேனைச் சிந்துகின்ற பூமாலை. மணந்தனம் - கூடினோம். அதனால் 'தீது அடைதலால் பேதுறு தகையமல்லமாயினோம்' என்க. பேதுறல் - வருந்தல். 'அல்லது' என்பது பாடம் அன்று.*

*791. **குறிப்புரை :** 'வாளமர்க்கண். பாய மழை செவிக் காற்று உந்திய, எந்தை தழை செவிக் காற்று உந்த, மேய... திண் சேனை தளர்ந்து ஓய ஊசலாடின்று' என இயைத்துக் கொள்க. உரும் - இடி. அஃது அதனோடு ஒத்த ஓசையைக் குறித்தது. "எயிறு" என்றது கோரப் பல்லை. சேனை, கயமுகாசுரனுடன் வந்தது. ஓய - போரை ஒழியும்படி. மணி ஊசல் - அழகிய ஊசல் போல, "ஆடின்று" என்பதில் 'இன்' என்பதன் ஈற்று னகர மெய் றகர மெய்யாய்த் திரியாதே நின்றது; இது முற்கால வழக்கு. "மழை செவி" என்பதில் 'செவ்வி' என்பது இடைக்குறையாய் வந்தது. சகர ஒற்றுத் தொகுத்தல். பாய - பரவிய. 'பரவிய மழைச் செவ்வியை உண்டாக்கும் இயற்கைக் காற்றை வென்ற எந்தையது தழை செவிக்காற்று உந்தியதனாலே சேனை தளர்ந்து ஓய ஊசலாடின்று' என முடிக்க.*

*792. **குறிப்புரை :** ஊர் வித்தத்தள் - தனது இருப்பிடமாக விந்த மலையைக் கொண்டவள்; துர்க்கை - இவள் உமாதேவியின் கூறாதல் பற்றி 'முருகனை இவளுக்கு மகன்' எனக் கூறுதல் போல. மூத்த பிள்ளையாரையும் 'இவளுக்கு மகன்' என்றார். அரா மருங்கு - பாம்பு போலும் இடை. 'இவள் பெற்ற' என்பதன்பின் "ஓடை நெற்றிச் சந்தம்" என்பதையும், "தாள் இரி"*

### *கட்டளைக் கலித்துறை*

**792.** உந்தத் தளரா வளைத்தனம் முன்னம்மின் ஒடைநெற்றிச்
சந்தத் தளரா ஒருதனித் தெவ்வர்தந் தாளிரியூர்
விந்தத் தளரா மருங்குற் கிளிபெற்ற வேழக்கன்றின்
மந்தத் தளரா மலர்ச்சர ணங்கள் வழுத்துமினே. **6**

### *அகவற்பா*

**793.** மின்னெடுங் கொண்டல் அந்நெடு முழக்கத்து
ஓவற விளங்கிய துளைக்கைக் கடவுளை
யாம்மிக வழுத்துவ தெவனோ அவனேல்
பிறந்ததிவ் வுலகின் பெருமூ தாதை
உரந்தரு சிரமரிந் தவற்கே வரைந்தது
மேருச் சிமையத்து மீமிசை
வாரிச் செல்வன் மகள்மகன் மொழியே. **7**

---

*என்பதையும் கூட்டி, வேழக் கன்று என்பதற்கு அடையாக்குக. உந்த - வெளிப்படுத்த. தளரா வளைத்தன - தளர்ச்சியடையாது எல்லாப் பொருள்களையும் உள்ளடக்குவனவாகிய ஒளிக்கதிர்கள். முன்னம் மின் ஓடை. நெற்றிச் சந்தம் - முன்னே மின்னுகின்ற பட்டத்தையுடைய நெற்றியின் அழகு. தனித்தெவ்வர் தம் தாள் இரி - ஒப்பற்ற பகைவரது முயற்சிகளைப் பின்னிட்டு ஓடும்படி ஓட்டிய. மந்தம் - மெல்ல நடக்கின்ற. (ஆயினும்) தளரா - மெலிவடையாத சரணங்கள் (பாதங்கள்) என்க. வழுத்துதல் - துதித்தல். "வழுத்துமின்" என்றது, 'வழுத்தினால் எந்நலமும் பெறுவீர்' என்னும் குறிப்பினது.*

*793. **குறிப்புரை :** மேகத்தின் முழக்கம் போலும் முழக்கத்துடன் என்றும் ஒரு பெற்றியனாய் விளங்கும் யானைமுகக் கடவுளை (எமக்கு அருளவேண்டி) யாம் மிகவும் துதிக்க வேண்டுவதில்லை. ஏனெனில், அவன் பிறந்தது, இவ்வுலகம் முழுவதையும் படைத்தவனது அகங்கரித்த தலையை அரிந்தவனுக்கு எழுதியது, மேருமலையாகிய ஏட்டில் வலைஞர் தலைவன் மகளுக்கு மகனது மொழியை - என்பது இதன் திரண்ட பொருள். 'தந்தையது ஆற்றல் இவனிடத்தும் உளதாதலும், வலைஞர் தலைவன் பெயரன் சொல்லத்தான் ஏடுஎழுதுவோனாய் இருந்து எழுதிய அருளாளன் ஆதலாலும், ஆற்றலும், அருளும் ஒருங்குடையோர் தம்மையடைந்த எளியவர்க்கு இரங்கியருளலை இயல்பாதலும் யாம் 'உமக்கு அருளுக' என மிகவும் வேண்ட வேண்டுவதில்லை. அவனேயருளுவன் என்பதாம். வலைஞர் தலைவன் மகளுக்கு மகன் வியாத முனிவன்; அவன் மொழி மகாபாரதம்.*

### *வெண்பா*

794. மொழியின் மறைமுதலே முந்நயனத் தேறே
கழிய வருபொருளே கண்ணே – செழிய
கலாலயனே எங்கள் கணபதியே நின்னை
அலாலையனே சூழாதென் அன்பு. 8

### *கட்டளைக் கலித்துறை*

795. அன்பு தவச்சுற்றத்(து) ஆரழல் கொண்டெயில் மூன்றெரிய
வன்புத வத்துந்தை மாட்டுகின் றான்மதஞ் சூழ்மருப்பிற்
கன்பு தவக்கரத் தாளமிட் டோடிக் கடுநடையிட்(கு)
இன்பு தவச்சென்று நீயன்று காத்த தியம்புகவே. 9

---

*'மகா பாரதத்தை வியாத முனிவன் சொல்ல, விநாயகப் பெருமான் சிவபெருமானது ஆணையின் வண்ணம் தாம் முன்பே ஒடித்து வைத்திருந்த தந்தத்தை எழுத்தாணியாகவும், மகாமேரு மலையை ஏடாகவும் கொண்டு எழுதினார்'* என்பது இவ்விதிகாச வரலாறு.*

***794. குறிப்புரை :*** *மறைமொழியின் முதல், பிரணவம். விநாயகர் பிரணவ வடிவாய் உள்ளவர். 'அவர் தோன்றியதே பிரணவத்திலிருந்து' என்பது வரலாறு.* 'மறை மொழியின் முதலே' என மாற்றியுரைக்க. முந் நயனம் - மூன்று கண். ஏறு - ஆண் சிங்கம். கழிய வரு பொருள் - பாசங்கள் யாவும் நீங்கிய பின் கிடைக்கும் பொருள்; முதற் கடவுள். கண்ணே - எங்களுக்குக் கண்போல இருந்து எல்லாவற்றையும் அறிவிப்பவனே. செழியகலாலயனே - பொருள் நிறைந்த கலைகளுக்கெல்லாம் இருப்பிடமாய் உள்ளவனே.*

***795. குறிப்புரை :*** *அன்பு தவச் சுற்றம் - அன்பை மிகுதியாக உடைய சுற்றம்; அது தேவர் குழாம். 'அசுரர்கள் அன்பில்லாதவர்கள்' என்பது கருத்து. சுற்றத்து - சுற்றத்தால்; சுற்றம் காரணமாக. 'எரிய மாட்டுகின்றான்' என இயையும். 'மாட்டுகின்றான்' என்றது இறந்த காலத்தில் நிகழ்காலம். எனவே, 'அன்று மாட்டுகின்றான்' என்றபடி. மாட்டுகின்றான் - எரிக்கின்றான். வன்பு தவத்து - வலிமை மிகுதியால் மாட்டுகின்றான் என்க. அன்று நீ காத்தது இயம்புக - அது பொழுது (வலிமை மிகுந்த) நீ அவனுக்கு என்ன உதவி செய்தாய்? சொல்லுக. 'தந்தை போரில் ஈடுபடும்பொழுது மைந்தர் அவனுக்கு உதவ வேண்டுவது முறைமையன்றோ' என்றபடி 'நீ அன்று அவனுக்கு உதவியது. அவனுடைய தேரினது அச்சை முறித்தது தானோ' எனக் குறிப்பால் பழித்தவாறு. இது பழித்தது போலப் புகழ்ந்தது. 'யாவர்க்கும்*

---

* *காஞ்சிப் புராணம் - வலம்புரி விநாயகப் படலம்.*

### *அகவற்பா*

796. கவவுமணிக் கேடகக் கங்கணக் கவைவல்நா
அறைகழல் அவுணரொடு பொருத ஞான்றுநின்
புழைக்கரம் உயிர்த்த அழற்பேர் ஊதை
வரைநனி கீறி மூரி
அஞ்சேறு புலர்த்தும் என்பர்
மஞ்சேறு கயிலை மலைகிழ வோயே.

---

*முதல்வனாகிய சிவபெருமானது தேரின் அச்சையே நீ முறித்து விட்டாய்' என்றால், உனது ஆற்றல் முன் பிறர் ஆற்றல் என்னாம் என்பதாம். கன் புதவம் - கல்லால் ஆகிய கோபுர வாயிற் கதவு. 'புதவின்கண்' என ஏழாவது விரிக்க. அரசர்கள் பகைவரது ஊரை முற்றுகை யிடும்பொழுது அவர்களது கோட்டை வாயிற் கதவுகளை யானைகளை ஏவி உடைக்கச் செய்வது வழக்கம். அம்முறையில் நீயே வலிய யானையாய் இருத்தலால் திரிபுரத்தசுரன் கோட்டை வாசலின்மேல், "கரத் தாளமிட்டுக் கடுநடையிட்டு ஓடி இன்பு உதவச் சென்று மருப்பின் உதவியது உண்டோ" என்பதும் உடன் கூறியவாறு. மருப்பு - தந்தம்.*

*796. **குறிப்புரை :** ஈற்றடியை முதலிற் கொண்டு உரைக்க. மஞ்சு - மேகம். தந்தையது பொருள் தனயர்க்காதல் பற்றி விநாயகப் பெருமானை, "கயிலை மலை கிழவோன்" என்றார். உனது கேடகமும், கங்கணக்கவையும், வல் நாவும் அவுண ரோடு பொருத ஞான்று என்க. கவவு மணி - முற்றிலும் நிறைந்த இரத்தினம். கேடகம் - வாளோடு ஏந்தும் பலகை. பூணினை, "கங்கணம்" என்றார். கவை - பிளவு. அது தந்தத்தைக் குறித்தது. வல் நா - வலிய நாக்கு. பகைவரை யானை தனது தந்தத்தால் குத்தும் பொழுது அதன் நாவும் அவர்களுக்கு ஊறு விளைவிக்கும். அவுணர், கயமுகாசுரன் படைஞர். அழல் - வெப்பம். பேரூதை - பெருங்காற்று. மூரிச் சேறு - பெருஞ்சேறு; என்றது, கடலின் அடியில் உள்ள சேறு. என்பர் - என்று அறிந்தோர் கூறுவர். பிள்ளையாரது வலிமையை விளக்கியவாறு.*

*797. **குறிப்புரை :** தனிச்சீர் முதலாகத் தொடங்கியுரைக்க. கலை - உடை. கலை சூழ் திரண்டு அகங்கொள் பேரறிவன் - **<u>நூல்களின் ஆய்வுகள் யாவும் ஒருங்குகூடி தங்கள் அகத்தும் கொள்கின்ற பெரிய அறிவு வடிவாய் உள்ளவன்</u>**. உம்பர் - மேலே; உயரத்தில். கால் உயிர்க்கும் கை - மூச்சுக்காற்றை வெளிவிடும் கை; தும்பிக்கை. கரண்டகம் கொள் கால் - கூடை நிரம்பத்தக்க காற்று. 'கை மாசுணம் இணைப்பது ஒக்கும்' - என முடிக்க. மலை சூழ்ந்து இழிகின்ற மாசுணம் - மலையைச் சுற்றிக்கொண்டு கீழ்நோக்கியிறங்கும் பாம்பு.*

### *வெண்பா*

797. மலைசூழ்ந் திழிகின்ற மாசுணம்பொற் பாறைத்
தலைசூழ்ந்து தானினைப்ப தொக்கும் – கலைசூழ்
திரண்டகங்கொள் பேரறிவன் திண்வயிற்றின் உம்பர்க்
கரண்டகங்கொள் காலுயிர்க்குங் கை. 11

### *கட்டளைக் கலித்துறை*

798. காலது கையது கண்ணது தீயது கார்மதநீர்
மேலது கீழது நூலது வெற்பது பொற்பமைதீம்
பாலது தேனது தானது மென்மொழிப் பாவைமுப்பூண்
வேலது வாளது நான்மறைக் கின்ற விடுசுடர்க்கே. 12

---

*பொற் பாறைத் தலை - பொற் குன்றின் உச்சி. தான், அசை. இளைப்பது - இளைப்பாறுவது. பெருமூச்சு விடுவது.*

***798. குறிப்புரை :*** *நான் மறைக்கின்ற - நான் உள்ளத்திலே பொதிந்து வைக்கின்ற சுடர், பிள்ளையார். இதனுள் "கையது, நூலது, வெற்பது, வேலது வாளது" என்பவற்றில் உள்ள "அது" என்பன எல்லாம் பகுதிப் பொருள் விகுதிகள். ஏனைய "காலது" முதலியன பலவும் 'அதனை உடையது' என்னும் குறிப்பு முற்று வினையாலணையும் பெயர்கள். எனவே, "கை காலது, (தும்பிக்கை காற்றை உடையது). கண் தீயது (தீயை உடையது) மதநீர் மேலது. நூல் (முந்நூல்) அதன் கீழது. வெற்பு (மலைபோலும் திருமேனி) "பாவையது" என இதனிடத்தும் துவ் விகுதி விரிக்க. பாவையது - பெண்ணை (வல்லபையை) உடையது. "பாலது, தேனது" என்பவற்றில் உள்ள 'அது' என்பனவும் பகுதிப்பொருள் விகுதிகளே. எனவே 'அது பால்தான், தேன்தான் என்னும் மெல்லிய மொழியையுடைய பாவை' என்பதாம். 'வாள் முப்பூண் வேல் (சூலம்)' என்க.*

***799. குறிப்புரை :*** *நெடுவேற் சேய், முருகன். அவன் மூன்று உலகங்களையும் சுற்றிவருவதற்குமுன் விநாயகர் தம் தாய் தந்தையரை வலம் வந்து மாங்கனியைப் பெற்று உண்ட வரலாறு நன்கறியப்பட்டது. படலை - மாலை, வளாய் - சுற்றி வந்து. அள்ளல் - சாறு.*

***800. குறிப்புரை :*** *ஈற்றடியை முதலிற் கொள்க. வானாடன் - சிதாகாசத்தில் உள்ளவன்; சிவ பெருமான். வரை - மலை போலும் தோற்றத்தையுடைய பிள்ளை. "திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்" எனத் தொடங்கும் கந்த புராணக் காப்புச் செய்யுளால் விநாயகரது பேருருவ நிலையை உணர்க. 'இவ் வலயம்' என இயையும். வலயம் - பூமியை*

*அகவற்பா*

799. சுடர்ப்பிழம்பு தழைத்த அழற்றனி நெடுவேல்
சேய்மூ வுலகமும் வலம்வர வேஅக்
கொன்றையம் படலை துன்றுசடைக் கணிந்த
ஓங்கிருந் தாதையை வளாஅய் மாங்கனி
அள்ளல் தீஞ்சுவை அருந்திய
வள்ளற் கிங்கென் மனங்கனிந் திடுமே. 13

*வெண்பா*

800. இக்கயங்கொள் மூவலயஞ் சூழேழ் தடவரைகள்
திக்கயங்கள் பேர்ந்தாடச் செங்கீரை – புக்கியங்கு
தேனாட வண்டாடச் செங்கீரை ஆடின்றே
வானாடன் பெற்ற வரை. 14

---

*வளைந்துள்ள கடல். கயம்கொள் - ஆழத்தைக் கொண்ட மூ வலயம். மூத்த (பழமையான) வலயம்; வினைத்தொகை. ஏழ் வரைகள் - ஏழு தீவுகளிலும் உள்ள மலைகள். திக் கயங்கள் - திசை யானைகள். 'தட வரைகளும், திக் கயங்களும் பேர்ந்து செங்கீரை ஆடும்படி வானாடன் பெற்ற வரை செங்கீரை யாடின்று' என இயைத்து முடிக்க. "செங்கீரை யாடின்று" என்பதை மேல் "ஊசலாடின்று"[1] என்றது போலக் கொள்க. மேல்[2] சப்பாணி கொட்டற் சிறப்புக் கூறி, இங்குச் செங்கீரை யாடற் சிறப்புக் கூறினார். தேன் - வண்டுகளில் ஒருவகை. தேனும், வண்டும் புகுந்து ஆடுதல் தான் அணிந்த கொன்றை மாலையில் என்க.*

***801. குறிப்புரை :*** *தன்னைப் பெற்ற மெல்லோதி. மெல் ஓதி - மெல்லிய கூந்தலை உடையவள். "சிலம்பின் மகள்" என்றது. 'மலைவாழ் சாதியினள்' என இகழ்ச்சி தோன்றக் கூறியது. மற்று, வினைமாற்று. பெற அவள் பிச்சு உகந்த பிச்சன் - தன்னைப் பெறுவதற்கு அவள் தன் கணவனாகப் பெரிதும் விரும்பப்பட்ட பித்தன். மயங்கல் முன்னோன் - பித்துக் கொள்ளியான முதியோன். (ஆயினும் அவன்) பின் இளைமை மிகக் கற்றவன் - நடனம் ஆடுதலில் வல்லவன். ஐயன் - யாவர்க்கும் தலைவன். அவன் புறங்காட்டிடை ஆடுதலையே விரும்புகின்ற காரணத்தால்தானோ. செற்ற வெண் தந்தத்தவன் (ஒடிக்கப்பட்ட தந்தத்தை உடையவன்) எங்களை இறவா நிலையினராகச் செய்தனன்! தன் அடியவர்களைப் புறங்காடு அடையாவகை செய்து, 'தன்*

---

1. *பாட்டு - 791.*
2. *பாட்டு - 788.*

### *கட்டளைக் கலித்துறை*

801. பெற்றமெல் லோதி சிலம்பின் மகள்பெறப் பிச்சுகந்த
மற்றவள் பிச்சன் மயங்கன்முன் னோன்பின் னிணைமைமிகக்
கற்றவன் ஐயன் புறங்காட் டிடைநடம் ஆட்டுகந்தோ
செற்றவெண் தந்தத் தவன்நம்மை ஆட்கொண்டு செய்தனவே. 15

### *அகவற்பா*

802. செய்தரு பொலம்படை மொய்தரு பரூஉக்குருளை
வெள்ளெயிறு பொதிந்த வள்ளுகிர்த் திரள்வாய்ப்
பெருந்திரட் புழைக்கை
மண்முழை வழங்கும் திண்முரண் ஏற்றின்
பனையடர்ப் பாகன் றனதி ணையடி
நெடும்பொற் சரணம் ஏத்த
இடும்பைப் பௌவம் இனிநீங் கலமே. 16

---

*தந்தை புறங்காட்டு ஆடுதலைத் தவிர்க்க நினைத்தான் போலும்!' என்றபடி. நடனங்களில் சில வகைகள் இணைந்து ஆடுவனவாகவும் இருத்தலின் "இணைமை" என்றார். 'உகத்தலால்' என்பது 'உகந்து' எனத் திரிந்தது. "அஃது ஆற்றாது - எழுவாரையெல்லாம் பொறுத்து"* என்பதிற்போல.*

*802. குறிப்புரை : பொலம் படை - பொன்னால் செய்யப்பட்ட அணிகலக் குழாம். (ஐம்படைத் தாலி என்றல் பொருந்தாது). கூர்மை நோக்கித் தந்தத்தை 'உகிர்' என்றார். யானையின் வாயில் சிறு பற்கள் உள்ளே நிறைந்திருக்க. அதன் தற்காப்புக் கருவியாய் இரு தந்தங்கள் முன்னே நீண்டு வளரும். 'அத்தகைய தந்தத்தையுடைய திரண்ட வாய்', எண் திரள் வாயையும், புழைக் கையையும் உடைய பாகன்' எனக் கொள்க. "மண் முழை வழங்கும் திண் முரண் ஏற்றின் பனை" பெருச்சாளி. ஏறு - விலங்கின் ஆண். பனை - பனந் துண்டம். 'ஏறாகிய பனை' என்க. இன், வேண்டா வழிச் சாரியை. இணை அடி சரணம் - இணைந்த அடியாகிய பாதம். ஏத்த - ஏத்துதலால். 'இடும்பைப் பௌவம் நோக்கி இனி நீங்கலம்' என்க. 'பௌவத்திற்கு' என நான்காவது விரித்துக் கொள்க. இடும்பை, பிறவித் துன்பம்.*

*803. குறிப்புரை : தனிச்சீர் முதலாகத் தொடங்கியுரைக்க. பலன் - பயன். மரங்களின் பயனாகிய கனிகள். அளைந்த - திளைத்த. கடுக்கைத் தாது - கொன்றை மலரின் மகரந்தம். அளைந்து - கலந்து. அலங்கல் மணி - ஒளி*

---

* *திருக்குறள் - 1032.*

### *வெண்பா*

803. அலங்கல் மணிகனகம் உந்தி அருவி
விலங்கல் மிசையிழிவ தொக்கும் – பலன்கனிகள்
உண்டளைந்த கோன்மகுடத் தொண்கடுக்கைத் தாதளைந்து
வண்டணைந்து சோரும் மதம். 17

### *கட்டளைக் கலித்துறை*

804. மதந்தந்த மென்மொழி மாமலை யாட்டி மடங்கல்கொன்ற
மதந்தந்த முக்கண் ணரற்குமுன் ஈன்றவம் மாமலைபோல்
மதந்தந்த கும்பக் குழவிமந் தாரப்பொன் னாட்டிருந்து
மதந்தந்த செம்மலன் றோவையம் உய்ய வளர்கின்றதே. 18

### *அகவற்பா*

805. வளர்தரு கவட்டின் கிளரொளிக் கற்பகப்
பொதும்பர்த் தும்பி ஒழிவின் றோச்சும்
பாரிடைக் குறுநடைத் தோடி ஞாங்கர்
இட்ட மாங்கனி
முழுவதும் விழுங்கிய முளைப்பனைத் தடக்கை
எந்தை அல்லது மற்று யாவுள
சிந்தை செய்யும் தேவதை நமக்கே. 19

---

*வீசுதலையுடைய மணி. விலங்கல் - மலை - 'கொன்றை மலரின் மகரந்தம் பொன் போலவும், வண்டுகள் நீல மணி போலவும் உள்ளன' என்பதாம்.*

***804. குறிப்புரை :*** *"மதம்" நான்கில் முதலது மகிழ்ச்சி; இரண்டாவது வலிமை; மூன்றாவது மதநீர்; நான்காவது மிகுதி. மடங்கல் - நரசிங்கம். "மடங்கல் கொன்ற" என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகை. கும்பம் - மத்தகம். மந்தாரப் பொன் நாடு - 'மந்தாரம்' என்னும் தருக்களையுடைய தேவலோகம். 'தேவலோகத்தில் இருந்து தேவர்கட்குச் செல்வ மிகுதியைத் தந்த செம்மல்' என்க. இஃது அசுரர்கட்கு இடர் இழைத்தலைக் கருத்துட் கொண்டு கூறியது. தேவ லோகத்திலிருந்து 'தேவர்கட்கு அருள் புரிகின்ற அந்தச் செம்மல் வையம் உய்ய இங்கும் வளர்கின்றான்' என்றபடி, வளர்கின்றது தொழிற் பெயர். எனவே, வளர்கின்றது 'போற்றுதலுக்குரியது' என்பது எஞ்சி நின்றதாம். இதன்கண் சொற் பின்வருநிலையணி வந்தது.*

***805. குறிப்புரை :*** *கவடு - கழுத்திடு கயிறு. 'கவட்டினது' என ஆறாவதும், 'பொதும்பரில்' என ஏழாவதும் விரிக்க. தும்பி - தும்பிக்கை. பாரிடை -*

*வெண்பா*

806. கேளுற்றி யான்தளர ஒட்டுமே கிம்புரிப்பூண்
வாளுற்ற கேயூர வாளரக்கர் – தோளுற்
றறுத்தெறிந்து கொன்றழித்தவ் அங்கயற்கண் மீண்டே
இறுத்தெறிந்து கொன்றழித்த ஏறு. 20

*கட்டளைக் கலித்துறை*

807. ஏறு தழீஇயவெம் புத்தேள் மருகவெங் குந்தவள
நீறு தழீஇயஎண் தோளவன் செல்வவண் டுண்ணநெக்க
ஆறு தழீஇய கரதலத் தையநின் றன்னை அல்லால்
வேறு தழீஇத்தொழு மோவணங் காத வியன்சிரமே. 21

---

*நிலவுலகத்தில். இங்கு இது கூறப்பட்டமையால் முதற்கண் "வானிடை" என்பது வருவித்துக் கொள்க. 'குறுநடைத்தாய்' என ஆக்கம் வருவிக்க. ஞாங்கர் - அவ்விடத்து - இட்ட - அன்பர்கள் படைத்த. "ஓச்சும், விழுங்கிய" என்னும் இரு பெயரெச்சங்கள் அடுக்கி, "எந்தை" என்னும் ஒரு பெயர் கொண்டன. 'விண்ணுலகத்திலும், மண்ணுலகத்திலும் உலாவியும், இருந்தும் அருள் புரிகின்ற எந்தை' என்றபடி. பொதும்பர் - மரச்செறிவு. இளமரச்சோலை. ஞாங்கர் - முன்பு.*

***806. குறிப்புரை :*** *"கிம்புரிப்பூண்" என்பது முதலாகத் தொடங்கியுரைக்க. கிம்புரிப் பூண் கேயூரம் - யானையின் தந்தங்களில் இடுகின்ற 'கிம்புரி' என்னும் பூண்போலும் கேயூரம் என்க. கேயூரம் - தோள்வளை. வாள் உற்று - ஒளி பொருந்திய. வாளரக்கர் - கொடிய அசுரர்கள் - அவர்களது தோள்களை முன்னே பற்றி அறுத்தெறிந்து அவர்களைக் கொன்றழித்துப் பின்பு. அக்கயம் கண் மீண்டு அவர்களுக்குத் தலைமை பூண்டு வந்த அந்த யானையின்மேல் (கய முகாசுரன் மேல்) பார்வையைத் திருப்பி, அவனை இறுத்து எறிந்து - துண்டுகளாக்கி வீசிக் கொன்றழித்த ஏறு (ஆண் சிங்கம்). கேள் உற்று - எனக்கு உறவாகப் பொருந்தினமையால், யான் தளர ஒட்டுமோ - கொன்றழித்தல். மீமிசைச் சொல்.*

***807. குறிப்புரை :*** *ஏறு தழுவியது. நப்பின்னையை மணத்தற் பொருட்டு, வெருட்டி விடப்பட்ட காளைகளை அடக்கி வென்றது. எனவே, இங்கு, "புத்தேள்" எனப்பட்டவன் கண்ணபிரானாயினான். அவன் சிவபிரானுக்கு அன்புடையன் ஆகலின் அவனை "எம் புத்தேள்" என்றார். உமாதேவி மாயோனுக்குத் தங்கையாகச் சொல்லப்படுதலின், விநாயகரை, 'அவன் அவதாரமாகிய கண்ணபிரானுக்கு மருகன்' என்றார். எண் தோளவன்*

*அகவற்பா*

808. சிரமே,
விசும்பு போத உயரி இரண்
டசும்பு பொழி யும்மே
கரமே,
வரைத்திரண் முரணிய இரைத்து விழும்மே
புயமே,
திசைவிளிம்பு கிழியச் சென்று செறிக்கும்மே
அடியே,
இடும்தொறும் இவ்வுல கம்பெயரும்மே
ஆயினும்,
அஞ்சுடர்ப் பிழம்பு தழீஇ
நெஞ்சகத் தொடுங்குமோ – நெடும்பணைச் சூரே. 22

---

*சிவபிரான். வண்டு உண்ண நெக்க ஆறு - வண்டுகள் மொய்த்து உண்ணும்படி கசிந்து ஒழுகும் மதநீர்த் தாரை. அவை இரு காதுகளினின்றும் வீழ்ந்து தோள் வழியாகக் கைகளிலும் செல்லுதலால், 'அவற்றைத் தழுவிய கரதலத்தை உடையவர்' என்றார். வணங்காத வியன் சிரம் - 'யாரையும் வணங்காத பெருமையுடைய எமது தலை நின்றன்னை யல்லால் வேறொரு தெய்வத்தைப் பொருந்தி வணங்குமோ' என்க.*

***808. குறிப்புரை :*** *"நெடும் பணைச் சூர்" என்பதை முதலில் வைத்து. அதன்பின், 'அதனது' என்பது வருவித்து அதனை "சிரம்" முதலியவற்றோடு இயைத்து உரைக்க. நெடும் பணைச்சூர் - நெடுக உயர்ந்த. பருத்த. அச்சம் தரும் தெய்வம் ஒன்று. விசும்பு போத உயரி - ஆகாயம் நிறையும்படி உயர்ந்து. அசும்பு - கசிவு; மதநீர். அஃது இரு காதுகள் வழி ஒழுகுதலால். "இரண்டு அசும்பு பொழியும்" என்றார். முரணிய - மாறுபடும்படி. "இரைத்து விழும்" என்றதனால். கரம், தும்பிக்கையாயிற்று. செறிக்கும் - அடைக்கும். இடுந்தொறும் - பெயர்த்து வைக்குந்தோறும். அம் சுடர்ப்பிழம்பு தழீஇ - அழகிய தீயினது உருவம் போன்ற தோற்றத்தைப் பொருந்தி. "அழகிய" என்றதனால் தோற்றம் மாத்திரத்தையே தீப்போலும் தன்மையுடையதன்றிச் சுடுதல் இன்மை பெறப்பட்டது. 'அவற்றொடும் எம் நெஞ்சகத்து ஒடுங்கும்' என முடிக்க. ஒகாரம் வியப்புக் குறிப்பு. இதனால் பிள்ளையாரது பேருருவத் தோற்றம் இனிது விளங்கும்.*

***809. குறிப்புரை :*** *தனிச்சீர் முதலாகத் தொடங்கியுரைக்க. சீர் தந்த மா மதலை - தந்தையாகிய மலையரையனுக்குப் புகழைத்தந்த பெருமையை*

*வெண்பா*

**809.** சூர்தந்த பொற்குவட்டின் சூளிகையின் வானயிர்த்து
வார்தந் தெழுமதியம் மன்னுமே – சீர்தந்த
மாமதலை வான்மதியங் கொம்பு வயிறுதித்த
கோமதலை வாண்மதியங் கொம்பு. **23**

*திருச்சிற்றம்பலம்*

*(இப் பிரபந்தத்தில் இதற்குமேல் உள்ள பாடல்கள் கிடைக்கவில்லை)*

---

*உடைய மகள். வான்மதி - மிகுந்த ஞானமே வடிவானவள். அம் கொம்பு - அழகிய பூங்கொம்பு போன்றவள்; உமை. அவள் வயிற்றின்கண் உதித்த கோ மதலை - தலை மகன். விநாயகக் கடவுள். அவன் முடியில் அணிந்த வாள் மதிக்கொம்பு - ஒளி பொருந்திய பிறைக் கீற்று. சூர் தந்த பொற்குவட்டின் சூளிகையின் அயிர்த்து - 'அச்சத்தைத் தரும் பொன்மாலையினது சிகரத்தின் நெற்றி' என மருண்டு. வார்தந்து எழுவான் மதியம் மானும் - ஊர்தலை மேற்கொண்டு தோன்றிய வானப் பிறையை ஒக்கும் பிள்ளையார் தமது திருமுடியில் அணிந்துள்ள பிறை. அம்முடியை வானத்தில் செல்லும் பிறை, 'பொன்மலையின் சிகரம்' என மயங்கி வந்து பொருந்தியதுபோல் உள்ளது என்பதாம். இது தற்குறிப் பேற்றமும், மயக்க அணியும் சேர்ந்து வந்த சேர்வையணியாகும்.*

## திருவெண்காட்டடிகள்

*திருவெண்காட்டடிகளென்பார் பதினொராந் திருமுறை ஆசிரியர்களுள் ஒருவராவர். இவர் சோழ நாட்டின் கடற்றுறைப்பட்டினமாகிய காவிரிப் பூம்பட்டினத்திற் பிறந்தமையாற் பட்டினத்துப் பிள்ளையாரெனவும் வழங்கப் பெறுவர். இவர்க்குப் பெற்றோர் இட்ட பெயர் திருவெண்காடர் என்பது. செல்வக் குடும்பத்திற் பிறந்து மனைத்தக்க மாண்புடைய மங்கையை மணந்து மனைவாழ்க்கை நடத்திய இப்பெரியார், பிறவி நோய்க்குக் காரணமாகிய அவாவை அறவே நீத்துத் துறவறத்தை மேற்கொண்டமையால் திருவெண்காட்டடிகளெனவும் பட்டினத்தடிகளெனவும் அடிகள் என்ற சொல்லால் போற்றப் பெறுவாராயினர். அடிகள் என்ற இச்சொல் துறவற நெறியில் நின்றார்க்கே சிறப்பாக வுரியதென்பது, “குணவாயிற் கோட்டத்து அரசு துறந்திருந்த, குடக்கோச் சேரல் இளங்கோவடிகட்கு” எனவரும் சிலப்பதிகாரப் பதிகத் தொடராலும் “அடிகள் என்றது துறத்தலான்” என அடியார்க்கு நல்லார் எழுதிய விளக்கவுரையாலும் நன்கு தெளியப்படும்.*

*பதினொராந் திருமுறையுள் திருவெண்காட்டடிகள் இயற்றியனவாகக் கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா ஒருபது என ஐந்து பிரபந்தங்கள் சேர்க்கப் பெற்றுள்ளன. இப்பனுவல்கள் யாவும் சொற்செறிவும் பொருட்பொலிவு முடையனவாய்க் கற்பார்க்கு நவிலுந்தோறும் சுவை பயப்பனவாகவுள்ளன. இப்பிரபந்தங்களை அன்றி அடிகள் பாடியனவாக வேறுபல தனிப்பாடல்கள் பட்டினத்துப் பிள்ளையார் பாடற்றிரட்டு என்ற பெயருடன் வழங்குகின்றன. பதினொராந் திருமுறையில் திருவெண்காட்டடிகள் பாடிய பிரபந்தங்களும் மேற்குறித்த பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடற்றிரட்டிலுள்ள பாடல்களும் சொல்நடை பொருளமைதி என்பவற்றாற் பெரிதும் மாறுபட்டுள்ளன. பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடற்றிரட்டில் ஏகரித்து, ஒப்பாரி, ஒய்யாரம், கலங்கிறண்டா, சவ்வாது, சலவை, சொகுசு, தாவாரம், பல்லாக்கு, பொக்கசம், பொம்மலாட்டம், போச்சுதடி, மாய்கை, மாங்கிஷம், முழித்திருந்து, வங்கிஷம், வேட்டி, வேலை மினக்கிட்டு முதலிய பிற்காலச் சொற்களும் பிழைபட்ட சொல்லுருவங்களாகிய இழிசினர் வழக்குச் சொற்களும் இடம் பெற்றுள்ளன. பதினொராந் திருமுறையில் சேர்க்கப் பெற்றுள்ள திருவெண்காட்டடிகள் பிரபந்தங்கள் ஐந்தும் சங்கச்சான்றோர் மேற்கொண்ட தூய செந்தமிழ் நடையில் அமைந்துள்ளன. எனவே ‘பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடற் றிரட்டு’ என்ற பெயருடன் வழங்கும்*

பாடற் றொகுதி பதினொராந் திருமுறையாசிரியருள் ஒருவராகிய திருவெண்காட்டடிகள் வாக்கல்ல என்பதும் இத்திருப்பாடற்றிரட்டிலுள்ள பாடல்களைப் பாடிய சான்றோர் திருவெண்காட்டடிகளுக்கு நெடுங்காலம் பிற்பட்டுத் தோன்றிய வேறொருவரென்பதும் நன்கு துணியப்படும்.

திருவெண்காட்டடிகளது உண்மை வரலாற்றினை அறிந்து கொள்ளுதற்குரிய சான்றுகள் கிடைக்கவில்லை. அடிகளது வரலாற்றை விரித்துரைக்கும் நோக்கத்துடன் பிற்காலத்தில் இயற்றப்பட்ட நூல் பட்டினத்துப் பிள்ளையார் புராணம் என்பது. பட்டினத்தடிகள் மரபினராய்த் தில்லையில் வாழ்ந்த வணிகர்களது வேண்டுகோளின்படி இப்புராணத்தைப் பாடியதாக இந்நூலாசிரியர் கூறுகின்றார். இவ்வாசிரியரது பெயர் தெரியவில்லை. பட்டினத்தடிகள் வரலாறுகளாகத் தம் காலத்தில் வழங்கிய செய்திகளை இவ்வாசிரியர் இப்புராணத்தில் தொகுத்துக் கூறியுள்ளார்.

இனி, பட்டினத்தடிகள் வரலாற்றொடு தொடர்பு உடையனவாக வழங்கப் பெறுவனவற்றுள் அடிகளுடைய வாய்மொழி கொண்டு துணியத்தக்க வரலாற்றுக் குறிப்புகள் இவையென அறிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும். நெடுங்காலமாக சிவநெறியைக் கடைபிடித்து வந்த பண்புமிக்க பழங்குடியிற் பிறந்தவர் திருவெண்காட்டு அடிகளென்பது,

“ஆளெனப் புதிதின் வந்தடைந்திலம் அத்தநின்
தாளின் ஏவல் தலையின் இயற்றி
வழி வழி வந்த மரபினம்”

என அடிகள் இறைவனை நோக்கித் தம் குடும்ப இயல்பினைத் தெரிவித்துக் கொள்ளுதலாற் புலனாம். தாம் செல்வக் குடும்பத்திற் பிறந்தமையும், மனைத்தக்க மாண்பு உடைய மனைவியொடு கூடி மனையறம் நிகழ்த்தினமையும், இரவலர் பலர்க்கும் வரையாது வழங்கி மக்களும் சுற்றமும் மகிழ வாழ்ந்தமையும், அங்ஙனம் இல்லறத்தில் வாழும் நிலையிலே சிவபெருமானது திருப்பெயராகிய திருவைந்தெழுத்தினை அன்பினால் மறவாது ஓதிச் சித்தத்தைச் சிவன்பால் வைத்து வழிபட்டுவந்தமையும் ஆகிய தம் வாழ்க்கை அனுபவத்தினை,

“யாங்க ளெல்லாம்
பழுதின்றுயர்ந்த எழுநிலை மாடத்தும்
செந்தா துதிர்ந்த நந்தன வனத்தும்
தென்ற லியங்கும் முன்றி லகத்தும்
தண்டாச் சித்திர மண்டப மருங்கிலும்
பூவிரி தரங்க வாவிக் கரையிலும்

*மயிற்பெடை யாலக் குயிற்றிய குன்றிலும்*
*வேண்டுழி வேண்டுழி யாண்டாட் டிட்ட*
*மருப்பினி யன்ற வாளரி சுமந்த*
*விருப்புறு கட்டில் மீமிசைப் படுத்த*
*ஐவகை யமளி யணைமேற் பொங்கத்*
*தண்மலர் கமழும் வெண்மடி விரித்துப்*
*பட்டினுட் பெய்த பதநுண் பஞ்சின்*
*நெட்டணை யருகாக் கொட்டைகள் பரப்பிப்*
*பாயல் மீது பரிபுரம் மிழற்றச்*
*சாயல் அன்னத்தின் தளர்நடை பயிற்றி*
....... ........ ......... ........
....... ........ ......... ........
*மதியென மாசறு வதனம் விளங்கப்*
*புதுவிரை யலங்கல் குழல்மிசைப் பொலியும்*
*அஞ்சொல் மடந்தையர் ஆகந் தோய்ந்தும்*
*சின்னம் பரப்பிய பொன்னின் கலத்தில்*
*அறுசுவை யடிசில் வறிதினி தருந்தாது*
*ஆடினர்க் கென்றும் பாடினர்க் கென்றும்*
*வாடினர்க் கென்றும் வரையாது கொடுத்தும்*
*பூசுவன பூசியும் புனைவன புனைந்தும்*
*தூசு நல்லன தொடையிற் சேர்த்தியும்*
*ஐந்து புலன்களும் ஆர ஆர்ந்தும்*
*மைந்தரும் ஒக்கலும் மகிழ மனமகிழ்ந்*
*திவ்வகை யிருந்தோம் ஆயினும் அவ்வகை*
*மந்திர எழுத்தைந்தும் வாயிடை மறவாது*
*சிந்தை நின்வழிச் செலுத்தலின் அந்த*
*முத்தியும் இழந்திலம் முதல்வ"*

எனத் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில் திருவெண்காட்டடிகள் விரித்துக் கூறியுள்ளார். அளவின்மிக்க பெருஞ் செல்வமுடையாரை உலக மக்கள் குபேரர் எனப் பாராட்டிப் போற்றுதலை இன்றும் காண்கிறோம். நிதியின் கிழவனாகிய அளகை வேந்தனைப் போன்று வளமிகப் பெற்ற திருவெண்காட்டடிகளைப் பின்வந்தோர் குபேரனது அவதாரமென்றே புனைந்துரைத்துள்ளார்கள். அன்னோர் கூற்றினை உபசாரமெனக் கொள்வதல்லது உண்மை வரலாறாகக் கொள்ளுதற்கில்லை.

அடிகட்குப் பெற்றோர் இட்ட பெயர் 'வெண்காடன்' என்பதாகும்.

அடிகள் தமக்கு எளிவந்து அருள்புரிந்த இறைவனை நோக்கி 'வெண்காடனென்னுந் தரத்தினுமாயது நின்னடியாந் தெய்வத் தாமரையே' எனத் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையின் இறுதிப்பாடலில் உளமுருகிப் போற்றியுள்ளார். 'வெண்காடனாகிய என் தரத்திலும் நின் திருவடித் தாமரை எளிவந்து அருள் புரிந்தமைக்கு எளியேன் என்ன கைம்மாறு செய்ய வல்லேன்' என மருதப்பிரானை அடிகள் மகிழ்ந்து போற்றுதலால், அடிகளது பெயர் திருவெண்காடன் என்பது நன்கு புலனாதல் காண்க.

திருவெண்காடர் தரை வழியாகவும் கடல் வழியாகவும் பிறநாடுகட்குச் சென்று பெரும் பொருளை ஈட்டியவரென்பதும், தரை வழியாகச் செல்லுங்கால் கள்வர் முதலாயினாரால் நேரும் துன்பங்களையும் கடல் வழியாகச் செல்லுங்கால் கடல் நடுவே நேரும் இடையூறுகளையும் நன்குணர்ந்தவரென்பதும்,

அருளா வயவர் அம்பிடை நடந்தும்
இருளூறு பவ்வத் தெந்திரந் கடாஅய்த்
துன்றுதிரைப் பரப்பிற் குன்று பார்த் தியங்கியும்

எனவரும் அடிகளது வாய்மொழியால் உய்த்துணரப்படும். அன்றியும் அடிகள் தாம் பாடிய கோயில் நான்மணிமாலை 16-ஆம் பாடலில் உடம்பினை மரக்கலமாக உருவகஞ் செய்து பிறவிப் பெருங்கடலில் அது கவிழும் நிலையினைச் சுவை பெறக் கூறியுள்ளார். முற்றுருவக அணியமைந்த அப்பாடற் பொருளைக் கூர்ந்து நோக்குங்கால் அதனைப் பாடிய திருவெண்காட்டடிகளுக்குக் கப்பல் யாத்திரையில் நிரம்பிய பயிற்சியுண்டென்பது இனிது விளங்கும்.

சேணுயர் மருத மாணிக்கத் தீங்கனியை விளைவித்துக் கொள்ள முயன்ற மேலோராகிய தொண்டரது உழவு முறையையும், அவ்வுழவினில் ஈடுபடாது மனமெனும் புனத்தை வெறும் பாழாக்கிய ஏனைக் கயவரது இழிவையும் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையின் பத்தாம் பாடலில் அடிகள் நயம்பெற விளக்கியுள்ளார். அடிகள் உழவுத் தொழிலையும் நன்றாக உணர்ந்தவ ரென்பதற்கு இப்பாடல் தக்க சான்றாதல் காணலாம்.

திருவெண்காடர் தம் குலம் விளங்குதற்குரிய மக்கட் பேறின்றி வருத்தமுற்றாரென்றும், அவரது துயரைப் போக்கத் திருவுளங் கொண்ட இடைமருதீசனே சிவசருமரென்னும் வேதியர்பால் குழந்தையாக வந்து தன்னைத் திருவெண்காடர்க்கு விற்கும்படி செய்து வெண்காடரால் வளர்க்கப் பெற்றுப் பல விளையாடல்களை நிகழ்த்தி மறைந்தருளினனென்றும்

வழங்கும் கதையினைப் பட்டினத்தடிகள் வரலாறு கூறுவோர் அனைவரும் விடாது கூறி வருகின்றார்கள். இத்தகைய திருவிளையாடல்களை இறைவன் தன்னடியார்க்கு அருள்செய்தற் பொருட்டு எக்காலத்தும் செய்தருள்வா னென்பதிற் சிறிதும் ஐயமில்லை. இதுகொண்டு அடியார் வரலாறுகள் எல்லாவற்றிலும் இறைவனுடைய அற்புத நிகழ்ச்சிகளைப் புகுத்திக் கூறுவதென்பது பிற்காலத் தலபுராண ஆசிரியர்களின் வழக்கமாக நிலைபெற்றுவிட்டது.

> 'மைந்தரும் ஒக்கலும் மகிழ மனமகிழ்ந்து
> இவ்வகை யிருந்தோம்'

எனத் திருவெண்காட்டடிகள் தம் வாழ்க்கை யனுபவத்தினை விரித்துக் கூறினமை முன்னர் விளக்கப் பெற்றதாதலின் அடிகளுக்கு மைந்த ரில்லையென ஒரு தலையாகத் துணிந்து கூறுதற்கு இடமின்மையுணர்க.

உயிர்க்குயிராகிய சிவபெருமானே புறத்தே ஆசிரியத் திருமேனி கொண்டு எழுந்தருளி வந்து மெய்ப்பொருளை அறிவுறுத்தித் திருவெண்காடரை ஆட்கொண்டருளினன் என்பது,

> 'நானே பிறந்து பயன் படைத்தேனயன் நாரணனெங்
> கோனே யெனத் தில்லையம்பலத்தே நின்று கூத்துகந்த
> தேனே திருவுள்ளமாகி யென்தீமை யெல்லாமறுத்துத்
> தானே புகுந்தடியேன் மனத்தேவந்து சந்திக்கவே'

எனவரும் கோயில் நான்மணிமாலைப் பாடலாலும்,

> 'கரத்தினில் மாலவன் கண்கொண்டு நின்கழல் போற்ற நல்ல
> வரத்தினை யீயும் மருதவப்பா மதியொன்று மில்லேன்
> சிரத்தினு மாயென்றன் சிந்தையுளாகி வெண்காடனென்னுந்
> தரத்தினு மாயது நின்னடி யாந்தெய்வத் தாமரையே'

எனவரும் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையின் இறுதிச் செய்யுளாலும் நன்கு புலனாதல் காண்க.

திருவெண்காடர் துறவடைந்தமைக்குக் "காதற்ற வூசியும் வாராது காணுங் கடை வழிக்கே" என்ற தொடர் எழுதப்பட்ட ஓலைச்சீட்டும் அதனுடன் இருந்த காதற்ற வூசியும் காரணமாயின எனக் கூறுங்கதை அவரது மனவியல்புக்கு ஏற்புடையதாகத் தோன்றவில்லை. இத்தொடரே அவரைத் துறவடையத் தூண்டியிருக்குமாயின் இத்தொடர்ப் பொருளைத் தாம் பாடிய பதினொராந் திருமுறைப் பனுவல்களில் யாண்டேனும் அடிகள் சிறப்பாகக் குறிப்பிட்டிருப்பர். இத்தொடர் அடிகள் திருவாக்காகிய பதினொராந்

*திருமுறைப் பிரபந்தங்களில் எங்கும் குறிக்கப்படவில்லை. இத்தொடர்ப் பொருளுக்கு முரணாகச் செல்வம் நிறைந்த மனைவாழ்க்கையிலிருந்து கொண்டே திருவைந்தெழுத்தோதிச் சிவபெருமானை வழிபட்டு இம்மை யின்பமும் வீடுபேறாகிய பேரின்பமும் ஒருங்கெய்தும் நிலையில் தாம் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்த திறத்தினைத் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில் 19-ஆம் பாடலில் அடிகள் தெளிவாக விளக்கியுள்ளார். திருவெண்காடர் மனந்திடுக்குற்ற நிலையில் திடீரெனத் துறவெய்தியவர் அல்லரென்பதும், மனை வாழ்க்கையில் வாழும் முறைப்படி வாழ்ந்து முறையாகத் துறவடைந்தவரென்பதும் அவர் பாடிய பிரபந்தங்களை ஊன்றிப் பயில்வார்க்கு இனிது விளங்கும். திருவெண்காடர் முதலிற் கடும்பற்றுள்ள முடையவராய் வாழ்ந்து தையற்றொழிலாளரும் தமக்கு நண்பராய் நற்பொருளைக் கூறிவந்தவருமாகிய பாணர் செய்த உபாயத்தால் விரைவில் துறவு பெற்றாரெனப் புலவர் புராணமுடையார் கூறுங்கதை,*

*'அறுசுவையடிசில் வறிதினி தருந்தாது*
*ஆடினர்க்கென்றும் பாடினர்க் கென்றும்*
*வாடினர்க்கென்றும் வரையாது கொடுத்தும்*
*......... .......... ............ ..........*
*......... .......... ............ ..........*
*இவ்வகையிருந்தோம்'*

*என அடிகள் தம் வாழ்க்கையனுபவத்தைப் பற்றிக் கூறும் வாய்மொழிக்கு முற்றிலும் முரணாதல் காண்க.*

*இனி, திருவெண்காட்டடிகள் திருவொற்றியூரிற் சிவப்பேறெய்தினர் என வழங்குஞ் செய்தி அடிகளது வரலாற்றோடு தொடர்புடைய தெனவே தெரிகிறது. இக்காலத்தில் திருவொற்றியூர்க் கடற்கரையில் பட்டினத்தடிகள் சமாதி யென்ற பெயருடன் திகழும் கோயில் பிற்காலத்திற் கட்டப்பட்ட தென்றும் அடிகளது உண்மைச் சமாதியைக் கடல் கொண்டதென்றும் கூறுவர் சிலர். திருவொற்றியூரில் இப்பொழுதுள்ள சமாதியின் அமைப்பு முறையினைக் காண்போர் இக்கூற்றினை ஒருவாறு ஒப்புக் கொள்வார்கள். அடிகள் பாடிய பிரபந்தங்கள் ஐந்தினுள் இறுதிக்கண் அமைந்தது திருவொற்றியூர் ஒருபா ஒருபது என்பது பதினொராந் திருமுறைப் பிரபந்தங்களின் வைப்பு முறையினாற் புலனாகின்றது. எனவே அடிகள் திருவொற்றியூரில் தங்கி இறைவனை வழிபட்டிருக்கும் நாட்களில் இப்பிரபந்தத்தைப் பாடிப் போற்றித் திருவொற்றியூரிலேயே சிவபரம் பொருளோடு இரண்டறக் கலந்தனரெனக் கூறுதல் பெரிதும் பொருத்த முடையதேயாகும்.*

திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில்,

'வித்தகப் பாடல் முத்திறத்தடியரும்
திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்
...... ....... ....... ........
விரும்பின கொடுக்கை பரம்பரற்கென்று
புரிகுழற் றேவியைப் பரிவுடன் ஈந்த
பெரிய அன்பின் வரகுண தேவரும்"

என இறைவனது பேரருள் பெற்ற பெருமக்களாகத் தேவார ஆசிரியர் மூவரையும் திருவாதவூரடிகளையும் வரகுண பாண்டியரையும் திருவெண் காட்டடிகள் குறிப்பிட்டுப் போற்றியுள்ளார். இங்குப் 'பெரிய அன்பின் வரகுண தேவர்' என அடிகளாற் பாராட்டிப் போற்றப் பெற்றவர் கி.பி. எட்டாம் நூற்றாண்டின் இறுதியிற் பாண்டி நாட்டையும் சோழநாடு தொண்டை நாடுகளையும் ஆட்சி புரிந்த வேந்தர் பெருமானாகிய முதல் வரகுண பாண்டியராவர். திருவெண் காட்டடிகள் வரகுண பாண்டியரது சிவபக்தியின் திறத்தைத் தம் பாடலிற் குறித்துப் போற்றுதலை நோக்குங்கால் அடிகள் காலத்தில் வரகுண பாண்டியரது அன்பின் திறம் தமிழ் மக்களால் மறவாது போற்றப் பெற்று வந்தமை நன்கு புலனாம். கி.பி. பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பியருளிய பிரபந்தங்களுக்கு முன்னே திருவெண்காட்டடிகள் அருளிய பிரபந்தங்கள் பதினொராந் திருமுறையில் வரிசைப்படுத்தப் பெற்றிருத்தலை நோக்குங்கால் அடிகள் நம்பியாண்டார் நம்பிக்குக் காலத்தால் முற்பட்டவரென்பது நன்கு விளங்கும். ஆகவே திருவெண்காட்டடிகள் வாழ்ந்த காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கமுமாம் எனக் கொள்ளுதல் பொருத்தமுடையதாகும்.

இனி, அடிகள் அருளிச் செய்தனவாகப் பதினொராந் திருமுறையில் கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவிடை மருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபாவொருபது என்னும் ஐந்து நூல்கள் சேர்க்கப் பெற்றுள்ளன. இப்பிரபந்தங்களிலுள்ள பாடல்கள் யாவும் இனிய ஓசையும் விழுமிய பொருளும் உடையனவாய்ப் படிக்குந்தோறும் சுவை நலங்களைத் தந்து இன்பஞ் செய்வனவாகும். முழுமுதற் பொருளாகிய சிவபெருமான் தில்லைச் சிற்றம்பலம், திருக்கழுமலம், திருவிடைமருது, திருக்கச்சி யேகம்பம், திருவொற்றியூர் முதலிய திருத்தலங்களிற் கோயில் கொண்டெழுந்தருளிய சிறப்பும், ஆட்பாலவராகிய மெய்யடியார்களுக்கு இறைவன் அருள் புரியும் திறமும், பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து கரை காணாது நெடுங்காலமாகத்

*துன்புற்றுழலும் உயிர்களை அத்துன்பக்கடலினின்றும் இன்பக்கரையிற் கொண்டு சேர்க்கும் இனிய தெப்பமாகத் திகழ்வது இறைவனது திருவடித் துறையேயாமென்பதும், திருவைந்தெழுத்தாகிய மந்திரத்தினை மறவாது ஓதி இறைவனைச் சிந்தித்து வழிபடுமியல்புடையோர் இல்லறம் துறவறமாகிய எந்த நிலையிலிருந்தாலும் அழிவிலாப் பேரின்பவாழ்வைப் பெற்று இன்புறுவ ரென்பதும், இறைவனடியார்க்குத் தொண்டுபட்டு வீடுதோறும் பிச்சையேற்றுண்டு திரியும் வாழ்வு வேந்தர் வாழ்க்கையினும் மேம்பட்ட பெருமிதத்தை விளக்குமென்பதும், உயிர்களின் நலங்கருதி இறைவன் உலகங்களைத் தோற்றுவித்துக் காத்து ஒடுக்கி அருள்புரிவன் என்பதும் முதலிய உயர்ந்த உண்மைகள் இப்பிரபந்தங்களில் தெளிவாக அறிவுறுத்தப் பெற்றுள்ளன. இப்பனுவல்கள் திருவெண்காட்டடிகளது செந்தமிழ்ப் புலமையினையும் நுண்ணறிவின் மாட்சியினையும் உலகியல் வாழ்வில் அவர் பெற்ற சிறந்த அனுபவங்களையும் திருவருட் பேற்றினையும் இனிது புலப்படுத்துவனவாதல் உணர்ந்து மகிழ்தற் பாலதாகும்.*

## கோயில் நான்மணிமாலை

*சிறந்தோனாய இறைவன் எழுந்தருளியிருக்குமிடம் கோயில் எனப்படும். சிவநெறிச் செல்வர்களாற் கோயில் எனச் சிறப்பித்துப் போற்றப் பெறுவது பெரும்பற்றப் புலியூராகிய தில்லைச் சிற்றம்பலப் பெருங் கோயிலேயாம். உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய இறைவன் அளவில் பேரொளி திகழ ஐந்தொழிற்கூத்தியற்றி எவ்வுயிர்க்கும் அருள்சுரக்கும் பேரருள் நிலையமாகிய தில்லையம்பலத்தைப் போற்றுங் கருத்துடன் திருவெண்காட்டடிகள் பாடிய செந்தமிழ்ப்பனுவல் கோயில் நான்மணிமாலை யென்பதாகும். வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல் என்னும் நால்வகைப் பாக்களும் ஒன்றன்பின் னொன்றாக அந்தாதித் தொடையமையத் தொடுத்துவர வெவ்வேறு நிறமுடைய நால்வகை மணிகளால் தொடுக்கப் பெற்ற மாலை போன்று திகழ்வதாதலின் இது நான்மணிமாலை யென்னும் பெயர்த்தாயிற்று. இது நாற்பது செய்யுட்களாற் பாடப்பெற்றுளது. நான்மணிமாலை யென்னும் செந்தமிழ்ப் பனுவலுக்குரிய மூல இலக்கியமாக நமக்குக் கிடைத்துள்ள பிரபந்தம் இக்கோயில் நான்மணிமாலையே எனக் கூறுதல் பொருந்தும்.*

*''சொல்லின் அளவும் பொருளின் அளவுமாகிய இருவகை எல்லைகளையுங் கடந்து தங்களை மறந்து நின்னையே நினைப்பவர்களாகிய மெய்யடியார்களுடைய தூயவுள்ளத்திலும் செம்பொன்னாலாகிய தில்லை யம்பலத்திலும் திருநடனம் செய்தருளும் சிவபெருமானே, நீ மலையரையன் மகளும் திருமாலின் தங்கையுமாகிய பார்வதியைத் திருமணம் புணர்ந்த நாளில் நினக்குரிய கொன்றைமலர் மாலை, இடபக்கொடி, தமருகப்பறை, கங்கையாறு, விரையாக்கலியென்னும் திருவாணை, அயிராவணமாகிய வெள்ளை யானை, வேதமாகிய குதிரை, வானநாடு, மேருமலை, தில்லைப்பதி என்னும் பத்துறுப்புக்களையும் நினக்குரிய பதினாயிரம் திருப்பெயர்களுடன் புகழ்ந்து பாடித் திருமணப்பந்தரில் தேவர்களுக்கு முன்னே புகுந்து நின்னை அறுகும் மலரும் புனைந்து வாழ்த்திய மெய்யடியார்களாகிய நின் சுற்றத்தார்கள் நினக்குத் திருமணப் பரிசளித்துத் தாம் கலந்து கொண்ட செய்தியினை அங்கு எல்லோருங் காண வைக்கப்பட்டிருந்த வரிநெடும் புத்தகத்தில் எழுதி இருப்பார்களல்லவா? அவர்களுடைய பெயர்கள் வரையப்பெற்ற திருமணப் பட்டோலைப் புத்தகத்திலே அடியேனது பெயரையும் சேர்த்தெழுதும்படி வேண்டிக் கொள்கிறேன். நினது திருவருளாணையிற்படின் கண்ணுக்குப் புலப்படாத சிறிய அணுவும் பேரண்டமாக வளர்ந்து தோற்றும். காட்டில் வாழும் சிறிய கொசுவும் கருடனாக உயர்ந்து பறக்கும் ஆதலால் காலங்கடந்த நினது திருமண*

வாழ்த்தில் எளியேனையும் கலந்து கொள்ளச் செய்வதென்பது நின் திருவருளால் முடியாத செயலன்று என்பதனை அடியேன் நன்குணர்வேன்” எனத் தில்லையம்பலவாணனை நோக்கித் திருவெண்காட்டடிகள் வேண்டிக் கொள்வதாக அமைந்தது கோயில் நான்மணி மாலையிலுள்ள ‘உரையின் வரையும் பொருளின் அளவும்’ என்னும் முதற்குறிப்புடைய அகவலாகும். இதன்கண்,

> “தம்மை மறந்து நின்னை நினைப்பவர்
> செம்மை மனத்தினும் தில்லைமன்றினும் நடம்
> ஆடும் அம்பலவாண”

என அடிகள் இறைவனைப் போற்றிய இத்தொடர்,

> “நினைப்பவர் மனங்கோயிலாக் கொண்டவன்
> அனைத்தும் வேடமாம் அம்பலக்கூத்தன்”

என ஆளுடைய அரசும்,

> “சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும்
> என் சிந்தையுள்ளும் உறைவான்”

எனத் திருவாதவூரடிகளும், அருளிய பொருளுரைகளை நினைந்து கூறிய குறிப்பினதாதல் காண்க.

தில்லையம்பலவன் ஆடல் புரியுங்கால் அப்பெருமான் நிலத்தே யூன்றிய திருவடி கீழுலகம் ஏழினையுங் கடந்து சென்றது. அவனது திருமுடி எல்லா வுலகங்களையும் கடந்து சென்று அண்டத்திற்கு அப்பால் விளங்கியது. இறைவன் வீசியாடுந் தோள்கள் எட்டுத் திசைகளின் புறத்தன. இவ்வழகிய தோற்றத்தை விளக்குவது,

> “அடியொன்று பாதல மேழிற்கும் அப்புறம் பட்டதிப்பால்
> முடியொன்றிவ் வண்டங்க ளெல்லாங் கடந்தது முற்றும்
> வெள்ளைப்
> பொடியொன்று தோளெட்டுத் திக்கின் புறத்தன பூங்கரும்பின்
> செடியொன்று தில்லைச்சிற்றம்பலத் தான்றன் திருநடமே”

என்ற பாடலாகும். உலகமே யுருவாகிய இறைவன் ஆடுங்கால் அவனது கூத்தினைப் பொறுத்துக் கொள்ளும் நோன்மை இவ்வுலகத்திற்கில்லை யென்பது இதன் கருத்து. இப்பாடல்

> “அடிபேரிற் பாதாளம் பேரும் அடிகள்
> முடிபேரின் மாமுகடு பேரும் - கடகம்

*மறிந்தாடு கைபேரின் வான்திசைகள் பேரும்*
*அறிந்தாடும் ஆற்றா தரங்கு”*

*என அம்மையார் அருளிய அற்புதத் திருவந்தாதியை அடியொற்றியமைந்த தாகும்.*

*இறைவனை நினைந்து வழிபடாது தமது வயிறோம்புதற் பொருட்டுப் பிறவுயிர்கட்குத் தீங்கு செய்து வாழ்வோர் உலக நிலையாமையைச் சிறிதும் உணராதவர் என்பதை விளக்குவது.*

*நஞ்சுமிழ் பகுவாய் வெஞ்சின மாசுணம்*
*தன்முதல் முருக்க நென்முதற் சூழ்ந்த*
*நீர்ச்சிறு பாம்புதன் வாய்க்கெதிர் வந்த*
*தேரையை வவ்வியாங்கி யாம்முன்*
*கருவிடை வந்த ஒருநாள் தொடங்கி*
*மறவா மறலி முறைபிறழ் பேழ்வாய்*
*அயிற்றலை யன்ன எயிற்றிடைக் கிடந்தாங்*
*கருள்நனியின்றி ஒருவயி றோம்பற்குப்*
*பல்லுயிர் செகுத்து வல்லிதின் அருந்தி*
*அயர்த்தனம் இருந்தும் போலும் பெயர்த்துநின்*
*றெண்டோள் வீசிக் கண்டோர் உருகத்*
*தொல்லெயில் உடுத்த தில்லை மூதூர்*
*ஆடும் அம்பலக் கூத்தனைப்*
*பாடுதல் பரவுதல் பணிதலோ விலமே.*

*எனவரும் பாடலாகும். “நஞ்சினைக் கக்கும் பிளந்த வாயினையுடைய பெரும்பாம்பு தன் உடலைக் கவ்வி ஈர்க்க நெற்பயிரின் வேரிற் சுற்றிக் கிடக்கும் சிறிய நீர்ப்பாம்பானது தன் வாய்க்கெதிரே வந்த தவளையைக் கவ்வியது போன்று யாங்கள் கருவினின்றும் வெளிப்பட்டுப் பிறந்த நாள் தொடங்கி வாழ்நாள் கொள்ளுதலை மறவாத கூற்றுவனது வாயினுள்ளே வேல் நுதியையொத்து விளங்கும் பற்களினிடையே அகப்பட்டுக் கிடந்து பிறவுயிர்களிடத்துச் சிறிதும் இரக்கமின்றி இழிந்த வயிறொன்றை வளர்த்தற் பொருட்டுப் பலவுயிர்களின் உடம்பினைக் கொன்று தின்று பின்விளைவறியாது அயர்வுற்றிருந்தோம் போலும்; பழமை வாய்ந்த மதிலாற் சூழப்பெற்ற தில்லை மூதூரிலே ஒரு திருவடியையூன்றி மற்றொரு திருவடியைத் தூக்கி எட்டுத் தோள்களையும் வீசிநின்று காண்போர் மனங் கசிந்துருகத் திருக்கூத்தியற்றும் அம்பலவாணனை வாயாற்பாடுதலும் மனத்தாற் பரவுதலும் மெய்யாற் பணிதலுமாகிய இத்திருப்பணிகளுள்*

ஒன்றையுஞ் செய்திலோம்” என உலக மக்களின் நிலையாவாழ்வினை யெண்ணி அடிகள் உளமுருகுந் திறத்தை இப்பாடல் புலப்படுத்தல் காண்க.

“மறையவர் போற்றத் தில்லைமன்றில் ஆடல் புரியும் பெருமானே, உலகு குழைத்துண்ட ஒரு பெருங்கடவுளாகிய திருமாலும் தேடிக்காணா வண்ணம் பாதாளம் ஏழினுங்கீழ் ஆழ்ந்து சென்ற திருவடியும் உலகினைப் படைத்த நான்முகன் அன்னமாய் மேலே பறந்து சென்றுங் காண முடியாத திருமுடியுங் கொண்டு நீ தில்லைப்பதியிற் சிறிய அம்பலத்திலே யாவருங்காண ஆடியருள்வது அதிசயம் விளைப்பதன்று. பொய்மை, அச்சம், பேராசை முதலிய தீக்குணங்களால் நிரம்பப் பெற்றுச் சிறிதும் இடமின்றி ஐம்பொறி களாற் சுழற்றப்பட்டு விரைந்து சுழலும் அணுவினுஞ்சிறிய எனது நெஞ்சத்திலே நுழைந்த, நினது விரித்த செஞ்சடையும் சிவந்தவாயும் திருநீலகண்டமும் நெற்றிக்கண்ணும் தூக்கிய திருவடியும் அஞ்சல் என்று அழைத்த திருக்கையும் புள்ளித் தோலாடையும் தெளிவாக ஒளியுடன் திகழ ஆடியருள்கின்றனை. இச்செயலே எனக்கு அதிசயத்தை விளைக்கின்றது” எனக் கூத்தப் பெருமானை நோக்கி அடிகள் வியந்துரைப்பதாக அமைந்தது. ‘வரையொன்று நிறுவி’ யென்ற முதற்குறிப்புடைய அகவலாகும். இதன்கண் திருமால் தேவர் பொருட்டுப் பாற்கடலைக் கடைந்து அமுதளித்ததும், கடையுகத்தி றுதியில் தோன்றிய பெருவெள்ளப் பரப்பில் உலகம் அமிழாதபடி சேல்மீனின் உருவு கொண்டு தனது சிறிய செதிளினுள்ளே உலகத்தையடக்கிக் காப்பாற்றியதும், ஒரு கற்பத்தில் உலகங்களை யெல்லாந் திரட்டி உண்டதும், குறுமாணுருவனாகி இவ்வுலகை மூவடியால் அளக்கப் புக்குழித் தன்னுடைய ஈரடிகளுக்கு இடனின்றி உலகஞ் சுருங்கத் தான் உயர்ந்து தோன்றியதும் ஆகிய செய்திகள் சுவைபெற விரித்துரைக்கப் பெற்றுள்ளன.

அறிவற்ற செய்கையும் பொய்மையும் கொடிய பிணிகளும் துன்பத் தொகுதியுமாகிய பல சரக்குகளையேற்றித் தீவினையென்னும் மீகாமன் கருப்பையென்னும் பெரிய பட்டினத்தின் துறைமுகத்தை நோக்கிச் செலுத்த ஐம்புலன்களாகிய பெரிய சுறாமீன்கள் தொடர்ந்து தாக்கப் பிறப்பென்னும் பெரிய கடலிற் புகுந்து துன்பமாகிய அலைகளின் பெருக்கினால் நிலை பெயர்ந்தலைந்து குடும்பமென்னும் வலிய பாறையிலே மோதுண்டு நிறையென்ற பாய்மரம் முறிய அறிவென்னும் பாய் கிழிந்து தீமையுற்ற உடம்பாகிய மரக்கலம் கவிழ்ந்து சிதைவுற்று அமிழ்வதன் முன்னே தில்லையம்பலவாணனாகிய நீ நின் திருவருளாகிய பெரிய வடக்கயிற்றைப் பூட்டியிழுத்து நின் திருவடியாகிய நீண்ட கரையிலே சேரும்படி செய்து எங்களை உய்வித்தருளல் வேண்டும் என இறைவனை வேண்டுவதாக அமைந்தது.

*அறிவில் ஒழுக்கமும் பிறிதுபடு பொய்யும்*
*கடும்பிணித் தொகையும் இடும்பை யீட்டமும்*
*இனையன பலசரக் கேற்றி வினையெனும்*
*தொன்மீ காமன் உய்ப்ப அந்நிலைக்*
*கருவெனு நெடுநகர் ஒருதுறை நீத்தத்துப்*
*புலமெனுங் கோண்மீன் அலமந்து தொடரப்*
*பிறப்பெனும் பெருங்கடல் உறப்புகுந் தலைக்கும்*
*துயர்த்திரை யுவட்டிற் பெயர்ப்பிடம் அயர்த்துக்*
*குடும்பம் என்னும் நெடுங்கல் வீழ்த்து*
*நிறையெனுங் கூம்பு முறிந்து குறையா*
*உணர்வெனும் நெடும்பாய் கீறிப் புணரும்*
*மாயப் பெயர்ப்படு காயச் சிறைக்கலம்*
*கலங்குபு கவிழா முன்னம் அலங்கல்*
*மதியுடன் அணிந்த பொதியவிழ் சடிலத்துப்*
*பையர வணிந்த தெய்வ நாயக*
*தொல்லெயி லுடுத்த தில்லை காவல*
*வம்பலர் தும்பை யம்பல வாணநின்*
*அருளெனு நலத்தார் பூட்டித்*
*திருவடி நெடுங்கரை சேர்த்துமா செய்யே.*

*எனவரும் ஆசிரியப்பாவாகும்.*

*நுரையும் அலையும் சுழற்சியும் எல்லையற்ற நீர்த்திவலைகளும் ஒலிக்குங் கடலிடத்தே பெருத்துஞ் சிறுத்தும் எண்ணிலவாய்த் தோன்றி மீளவும் அக்கடலின் கண்ணே அடங்குமாறு போன்று, இயங்குவன நிற்பனவாகிய உலகத் தொகுதியனைத்தும் இறைவனிடத்தே தோன்றி மீளவும் அவன்கண் ஒடுங்குவனவெனவும், தான் ஒன்றினுந் தோன்றி யொடுங்காத தனிமுதற் பொருளாகத் திகழ்வோன் இறைவனெனவும் விளங்கக் கருதிய திருவெண்காட்டடிகள்,*

*நுரையுந் திரையும் நொப்புறு கொட்பும்*
*வரையில் சீகர வாரியுங் குரைகடற்*
*பெருத்துஞ் சிறுத்தும் பிறங்குவ தோன்றி*
*எண்ணில வாகி யிருங்கட லடங்குந்*
*தன்மை போலச் சராசரம் அனைத்தும்*
*நின்னிடைத் தோன்றி நின்னிடை யடங்கும்நீ*
*ஒன்றினுந் தோன்றாய் ஒன்றினும் அடங்காய்.*

என அம்பலத்தாடும் உம்பர் நாயகனாகிய சிவபெருமானைப் போற்றிப் பரவுகின்றார். உலகனைத்தும் இறைவன்பால் தோன்றியொடுங்குவன என்னுங் கருத்தமைந்த இத்தொடரை ஆதாரமாகக் காட்டிப் பிரபஞ்சத்திற்கு இறைவனே முதற்காரணமென்பது அடிகள் கருத்தெனச் சாதிப்பாரும் உளர். அன்னோர் கூறிய வண்ணம் இப்பிரபஞ்சம் இறைவனாகிய முதற்காரணத் திலிருந்து தோன்றியதென்பது உண்மையாயிருக்குமானால் முதல் காரணத்தின் குணங்களோடு ஒத்த குணங்களே அதனிற்தோன்றிய காரியத்திற்கும் உளவாதல் வேண்டுமென்னும் நியமம் பற்றி இறைவனிடத்தி றோன்றிய பிரபஞ்சம் அறிவுடைய சித்துப் பொருளாதல் வேண்டும். உலகம் அறிவற்ற சடப்பொருள் என்பது யாவர்க்கும் உடம்பாடாதலின், சடப் பொருளாகிய அது, சித்துப் பொருளாகிய இறைவனை முதற் காரணமாகக் கொண்டு தோன்றியதெனக் கூறுதல் பொருந்தாது. பிரபஞ்சம் மாயையாகிய உள்பொருளிலிருந்து தோன்றி விரிந்து மீளவும் அதன் கண் ஒடுங்குமென்பதே திருமூலர் முதலிய திருமுறையாசிரியர்களின் துணிபாகும். கிழங்காகிய மூலத்திலிருந்து முளைத்த தாமரையைக் கிழங்கிற்கு ஆதாரமாகிய சேற்றில் முளைத்தது என்ற பொருளிற் 'பங்கஜம்' என வழங்குவது போன்று, மாயையாகிய உள் பொருளிலிருந்து தோன்றி மீளவும் அதன்கண் ஒடுங்குவதாகிய உலகத் தொகுதியை மாயைக்கு ஆதாரமாகிய முதல்வனிடத்துத் தோன்றியொடுங்குவதாகக் கூறுதல் வழக்கியல் மரபாகும். இம்மரபின் படி நீரில் தோன்றி யொடுங்கும் நுரை அலை முதலியவற்றை நீர்க்கு இடமாகிய கடலிலே தோன்றியொடுங்குதல் போல் எனத் திருவெண்காட்டடிகள் உவமையாக எடுத்தாளுதலால், சராசரமாகிய உலகத் தொகுதிக்கு இறைவன் ஆதாரமாவதன்றி முதற் காரணமாகான் என்பதே அடிகள் கருத்தென்பது இனிது புலனாகின்றது. "நின்னிடைத் தோன்றி நின்னிடை யொடுங்கும்'' என்றது மாயைக்குத் தாரகமாதல் பற்றியென்றுணர்க. அக்கருத்து உணர்ந்து கோடற்கன்றே நீரிற்றோன்றி யொடுங்கும் நுரை முதலியவற்றை நீர்க்கிடமாகிய கடலிற்றோன்ற யொடுங்குதல் போல் என்று உவமை கூறினாராகலின், ஆண்டு ஆசங்கைக் கிடமின்மையுணர்க"* (*சிவஞானபோதப் பேருரை, 2-ஆம் சூத்திரம் 2-ஆம் அதிகரணம்) எனச் சிவஞான சுவாமிகள் இத்தொடர்ப் பொருளைத் தெளிவு படுத்தினமை இவண் கருதத்தகுவதாம்.

இங்ஙனமே கோயில் நான்மணிமாலையிலுள்ள பாடல்கள் யாவும் உயர்ந்த நுண்பொருளை யறிவுறுத்தி நிற்றல் அறிந்து மகிழ்தற் பாலதாகும். இந் நான்மணிமாலையிலுள்ள சந்த விருத்தங்கள் அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் யாப்பிற்கு அடிப்படையாக அமைந்துள்ளன. தாளத்தோடு பொருந்த அமைந்த இச்சந்த விருத்தங்களின் யாப்பமைதியினைப் பின்பற்றி

*அடிதோறும் இறுதிக்கண் தொங்கல் என வழங்கும் தனிச்சொற்களைச் சேர்த்து நோக்குங்கால் இத்தகைய திருப்புகழ்ச் சந்தங்கள் உருவாதல் காணலாம்.* (*யாழ்நூல் 388-390-ஆம் பக்கங்களைப் பார்க்க). செந்தமிழ்ப் பாடல்களின் தாளவமைதிக்குச் சிறந்து விளங்கும் இவ்வகைப் பாடல்கள் செந்தமிழ்க் கடவுளாகிய முருகப்பெருமானது பொருள் சேர் புகழைச் சீர்பெற விரித்துரைத்தற்கு ஏற்றனவாக அமைந்தமையால் இவ்வகைப் பாடல்களையே அருணகிரிநாதர் முருகன் புகழ் பாடுதற்குரிய சந்தப் பாடல்களாகத் தெரிந்தெடுத்துக் கொள்வாராயினர். இத்திருப்புகழ் யாப்பு முதன் முதல் இக்கோயில் நான்மணி மாலையிலே கருக்கொண்டு தோன்றிப் பின்னர் அருணகிரிநாதரது வாக்கின் திறத்தால் திருப்புகழ்ப் பாடல்களாக உருப்பெற்று வளர்ந்ததெனக் கூறுதல் பொருந்தும்.*

## பட்டினத்து அடிகள்

*அருளிச்செய்த*

## 26. கோயில் நான்மணிமாலை

*வெண்பா*

*திருச்சிற்றம்பலம்*

810. பூமேல் அயனறியா மோலிப் புறத்ததே
நாமே புகழ்ந்தளவை நாட்டுவோம் – பாமேவும்
ஏத்துகந்தான் தில்லை இடத்துகந்தான் அம்பலத்தே
கூத்துகந்தான் கொற்றக் குடை. 1

***கட்டளைக் கலித்துறை***

811. குடைகொண்டிவ் வையம் எலாங்குளிர்
வித்தெரி பொற்றிகிரிப்
படைகொண் டிகல்தெறும் பார்த்திவர்
ஆவதிற் பைம்பொற்கொன்றைத்

---

*810. வெண்பா, கட்டளைக் கலித்துறை, விருத்தம், அகவற்பா - என்னும் இவை நான்கும் மாறி மாறி அந்தாதியாய் வர நாற்பது செய்யுட்களால் செய்யப்படுவது. "நான்மணி மாலை" என்னும் பிரபந்தமாகும்.*

***குறிப்புரை :*** *மோலி - மௌலி; கிரீடம். புறத்தது - மேலே சென்றுள்ளது. அடிமுடி தேடிய வரலாற்றில் சிவபெருமானது முடி அயனால் அறியப்படாமை கூறப்படுதலின் சிவ பெருமானது மகுடத்தை, "அயன் அறியா மோலி" எனறார். "புறத்தது" என்பதன்பின், 'ஆயின்' என்பது வருவிக்க. "நாமே" என்னும் வினாநிலை ஏகாரம் நாம் நாட்டுவேம் ஆகாமையைக் குறித்து நின்றது. பா மேவும் ஏத்து - 'பா' என்னும் உறுப்புப் பொருந்திய இவ்வாறான செய்யுளே, "பாட்டு" எனப் பெயர் பெறும். எனவே, துதிகளில் பாட்டாய் அமையும் துதிகளே இறைவனுக்கு மிக்க விருப்பத்தைத் தரும் துதியாதல் பெறப்பட்டது. "இடம்" என்றது ஊரை. "இடத்தை" என்பதில் சாரியை நிற்க உருபு தோக்கது. 'அந்த இடத்தில் அம்பலத்தே கூத்து உகந்தான்' என்க. கொற்றம் - வெற்றி. 'குடை அயன் அறியா மோலிப் புறத்ததாயின், அதன் அளவை நாமே புகழ்ந்து நாட்டுவோம்' என வினைமுடிக்க. தில்லையம்பலக் கூத்தப் பெருமானது கொற்றக் குடையின் சிறப்புணர்த்தியவாறு.*

*811.* ***குறிப்புரை :*** *எரி - காய்கின்ற. பொன் - அழகு. திகிரிப் படை -*

தொடை கொண்ட வார்சடை அம்பலத்
தான்தொண்டர்க் கேவல்செய்து
கடைகொண்ட பிச்சைகொண் டுண்டிங்கு
வாழ்தல் களிப்புடைத்தே. 2

**விருத்தம்**

812. களிவந் தமுதூறிக் கல்மனத்தை எல்லாம்
கசியும் படிசெய்து கண்டறிவார் இல்லா
வெளிவந் தடியேன் மனம்புகுந்த தென்றால்
விரிசடையும் வெண்ணீறும் செவ்வான மென்ன
ஒளிவந்த பொன்னிறமும் தொல்நடமும் காட்டும்
உடையான் உயர்தில்லை அம்பலமொன் றல்லால்
எளிவந் தினிப்பிறர்பாற் சென்றவர்க்குப் பொய்கொண்
டிடைமிடைந்த புன்மொழியால் இச்சையுரை யோமே. 3

---

*சக்கராயுதம். இகல்தெறும் - பகைவரை அழிக்கின்ற. பார்த்திவர் - அரசர். பொற்கொன்றை - பொன்போலும் கொன்றை. தொடை - மாலை. கடை - தலைவாயில். அரசர் வாழ்வாயினும் உலக வாழ்வு கவலைகள் பலவுடையதாயும், ஒன்றும் இல்லாதவராயினும் அடியவர் வாழ்வு கவலையற்ற அமைதி வாழ்வாயும் இருத்தல் பற்றி, 'அடியவர் வாழ்வே மகிழ்வைத் தருவது' என்றார்.*

*தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்*
*மனக்கவலை மாற்ற லரிது**

*எனத் திருவள்ளுவரும் கூறினார்.*

***812. குறிப்புரை :*** *'வெளியாய்' என ஆக்கம் வருவிக்க. கண்டறிவர் இல்லா வெளி. அருள் வெளி. "களி வந்து" என்பதில் "வந்து" என்னும் செய்தென் எச்சம் 'வந்தபின்' என்பதன் திரிபு. "விரிசடையும்... காட்டும் அம்பலம். களிவந்து.... அடியேன் மனம் புகுந்தது என்றால் அஃது ஒன்றை உரைத்தல் அன்றி, இனிப் பிறர்பால் சென்று எளிவந்து பொய்கொண்டு.... இச்சையுரைப்போம்" என இயைத்து முடிக்க. வரையறை யின்மையின் சில சீர்கள் ஓரசை குறைந்து வந்தன அன்றி, ஒற்றளபெடையாகப் பாடம் ஓதலும் ஆம். களிப்பைச் செய்திடும் அமிழ்தம் ஊறி கல்மனத்தை உடையோரெல்லாம் கசிந்துருகும்படி செய்து, அறிந்துணர்வார் இல்லாத வெளியில் வந்து*

---

* *திருக்குறள் - 7.*

*அகவற்பா*

813. உரையின் வரையும், பொருளின் அளவும்
இருவகைப் பட்ட எல்லையும் கடந்து
தம்மை மறந்து, நின்னை நினைப்பவர்
செம்மை மனத்தினும், தில்லைமன் றினும் நடம்
ஆடும் அம்பல வாண! நீடு

குன்றக் கோமான் தன்திருப் பாவையை
நீல மேனி மால்திருத் தங்கையைத்
திருமணம் புணர்ந்த ஞான்று, பெரும!நின்
தாதவிழ் கொன்றைத் தாரும், ஏதமில்
வீர வெள்விடைக் கொடியும், போரில்

தழங்கும் தமருகப் பறையும், முழங்கொலித்
தெய்வக் கங்கை ஆறும், பொய்தீர்
விரையாக் கலியெனும் ஆணையும் நிரைநிரை
ஆயிரம் வகுத்த மாயிரு மருப்பின்
வெண்ணிறச் செங்கண் வேழமும் பண்ணியல்

வைதிகப் புரவியும், வான நாடும்,
மையறு கனக மேருமால் வரையும்,
செய்வயல் தில்லை யாகிய தொல்பெரும் பதியும்நின்
ஒருபதி னாயிரந் திருநெடு நாமமும்
உரிமையிற் பாடித் திருமணப் பந்தருள்

---

*அடியவனின் மனம் புகுந்து, விரிந்த சடையும், திருநீறும், செவ்வானத்தைப் போன்ற ஒளி கொண்ட பொன்னிறமும், பழைமையான திருக்கூத்தையும் காட்டும் பெருமானின் தில்லைப்பதி அன்றி, தாழ்வாகிப் பிறர்பால் சென்றார்க்குப் பொய்மையான புகழ்ச்சிச் சொற்கள் அமைந்த மொழிகளால் புகழ்ந்து பாட மாட்டோம்.*

***813. குறிப்புரை :*** *'சொல்லுலகம், பொருளுலகம்' என இருவகைப்பட்ட உலகங்களையும் கடந்தவன் இறைவன் என்பார் "உரையின் வரையும்.... கடந்து" என்றார். "தாம்" என்றது உயிர்களை. நினைத்தல். இங்கு உணர்தல். உயிர்கள் தம்மை உணரும் உணர்வு 'யான்' என்றும் 'எனது' என்றும் இருவகையாக நிகழும். இவ்விருவகை உணர்வும் உள்ள பொழுது இறைவனை உணரும்*

உணர்வு நிகழாது ஆகலின், "தம்மை மறந்து நின்னை நினைப்பவர்" என்றார். "அவரது உணர்வே செம்மை யுணர்வு" என்றமையால். 'தம்மை நினைந்து இறைவனை மறக்கும் உணர்வு கோட்டம் உடைய உணர்வு' என்பதும், 'அவர் மனத்தில் இறைவன் நிற்றல் இல்லை' என்பதும் போந்தன.

> சிறைவான் புனல்தில்லைச் சிற்றம் பலத்தும் என்
> சிந்தையுள்ளும்
> உறைவான்[1]

என்றவாறே, "செம்மை மனத்தினும், தில்லை மன்றினும் - நடம் ஆடும் அம்பலவாண" - என்றார். தாது - மகரந்தம். தார் - மாலை. தழங்கும் - ஒலிக்கின்ற. தமருகம் - உடுக்கை. சிவபெருமானது ஆணை. 'விரையாக்கலி' எனப்படும். 'இரு ஆயிரம் வகுத்த மருப்பு' என்க. கயிலையில் இருக்கும் சிவ பெருமானது யானை 'அயிராவணம்' என்னும் பெயரையும், இரண்டாயிரம் தந்தங்களையும் வெள்ளை நிறத்தையும் உடையது. வைதிகப் புரவி - வேதமாகிய குதிரை. இவைகளே திரிபுரத்தேர்மேல் சென்ற காலத்தில் அத்தேரையிழுத்தன. மாலை, கொடி, பறை, யாறு, ஆணை, யானை, குதிரை, நாடு, மலை, ஊர் - இப்பத்தும் "தசாங்கம்" எனப் பெயர்பெறும். தலைவன் ஒருவனைப் புகழ்வோர் அவனுக்கு உரிய இப்பத்தினையும் புகழ்தல் மரபு. இதனைத் திருவாசகத்துட் காண்க. 'அமரருக்கு முன்னே புகுந்து' என்க. "நறுமுறு தேவர் கணங்களெல்லாம் நம்மிற் பின்பல்லது எடுக்க லொட்டோம்"[2] என்னும் திருவாசகத்தைக் காண்க. 'அறுகு எடுத்தல்' என்பது மங்கலம் கொள்வார்க்கு அறுகம்புல் கொண்டு செய்யப்படும் ஒரு சடங்கு. அஃது இறை வழிபாட்டின் பகுதியாய் வழங்கும். அருக்கியம் முதலியன கொடுத்தலும் இவ்வாறு அமையலாம். மேற்குறித்த அத்திரு வாசகத்தில், "அறுகெடுப்பார் அயனும், அரியும் - அன்றி மற்று இந்திரனோடு அமரர்" என வந்தமை காண்க. தமர் - சுற்றத்தார்; அடியவர். மங்கல வினை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வாழ்த்தல், வரிசையளித்தல் முதலியன செய்தோரது பெயர்களை ஏட்டில் முறையாக எழுதிக்கொண்டு பின்பு அவர்கட்கு மங்கலம் பெற்றோர் சிறப்புச் செய்தல் வழக்கம். அம்முறை பற்றி, 'யான், இப்பிறப்பில் இன்று உள்ளது போல அன்று இருந்திலேன் ஆயினும், ஏதோ ஒரு வகைப் பிறப்பில் அன்று நின் திருமண நிகழ்ச்சியில் இருந்துதான் இருப்பேன்; ஆகையால், என்றும் என்னை எவ்வகையிலும் அறிபவனாகிய நீ நின் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தமர் பெயர்களை எழுதிய வரி நெடும் புத்தகத்து என் பெயரையும் எழுதிக் கொள்ளல் வேண்டும்;

---

1. திருக்கோவையார் - 20.
2. திருப்பொற்சுண்ணம் - 5.

அமரா் முன்புகுந்(து) அறுகு சாத்தியநின்
தமர்பெயர் எழுதிய வரிநெடும் புத்தகத்து
என்னையும் எழுத வேண்டுவன், நின்னருள்
ஆணை வைப்பிற், காணொணா அணுவும்
வானுற நிமிர்ந்து காட்டும்;
கானில்வாய் நுளம்பும் கருடனா தலினே. 4

*வெண்பா*

814. ஆதரித்த மாலும் அறிந்திலனென்(று) அஃதறிந்தே
காதலித்த நாயேற்குக் காட்டுமே; – போதகத்தோற்
கம்பலத்தான், நீள்நாக கங்கணத்தான், தென்புலியூர்
அம்பலத்தான் செம்பொன் அடி. 5

*கட்டளைக் கலித்துறை*

815. அடியொன்று பாதலம் ஏழிற்கும் அப்புறம் பட்ட(து)இப்பால்
முடியொன்(று) இவ் வண்டங்கள் எல்லாம் கடந்தது; முற்றும்வெள்ளைப்
பொடியொன்று தோளெட்டுத் திக்கின் புறத்தன; பூங்கரும்பின்
செடியொன்று தில்லைச்சிற் றம்பலத் தான்தன் திருநடமே. 6

---

*ஏனெனில், நினது அருளாணை தரப்படுமாயின் சிறிய அணுவும் பெரிய மலையாகிவிடும். தாழ்ந்த கொசுகும் உயர்ந்த கருடன் ஆகிவிடும் ஆதலின்' என்றார். "அணுவும் மலையாம்; கொசுகும் கருடனாம்" என்றதனால். 'அன்று நான் இழிந்த பிறப்பிலே இருந்தே னாயினும் உனது அருள்கூடின் உன் அடியார் கூட்டத்தில் ஒருவனாகி யிருப்பேனன்றோ' என வினவியவாறு. "என்" என்றது, 'என் பெயர்' என்னும் பொருட்டு ஆதலின் ஆகுபெயர். கானில்வாய் - காட்டில் பொருந்திய. நுளம்பு - ஒருவகைக் கொசுகு.*

***814. குறிப்புரை :*** *ஆதரித்த மால் - அன்பு செய்து வழிபட்ட திருமால். அவன் அறியாது போயது, தன்முனைப்பால் காண முயன்றதனாலாம். 'அதனையறிந்தவன் ஆதலின், அன்பு மட்டுமே செய்து நிற்கின்ற நாயேற்குத் தன் அடியைக் காட்டியே தீர்வான்' என்றபடி. இதனால், 'எத்தகையோரும் தன் முனைப்புக் கொண்டவழிச் சிவனைக் காண மாட்டார்' என்பது போந்தது. போதகம் - யானை. 'அம்பலத்தான். அஃது அறிந்து தன் செம்பொன் அடியை நாயேற்குக் காட்டும்' என வினை முடிக்க. இனி, 'அஃதறிந்து காதலித்த நாயேன்' என இயைப்பினும் ஆம். இவ்வாறு இயைப்பின் யான் தன்முனைப்புக் கொண்டிலேன் என்பது குறிப்பாற் பெறப்படும்.*

### *விருத்தம்*

816. நடமாடி ஏழுலகம் உய்யக் கொண்ட
நாயகரே! நான்மறையோர் தங்க ளோடும்
திடமாட மதில்தில்லைக் கோயில் கொண்ட
செல்வரே! உமதருமை தேரா விட்டீர்;
இடமாடி இருந்தவளும் விலக்கா விட்டால்
என்போல்வார்க் குடன்நிற்க இயல்வ தன்று;
தடமாலை முடிசாய்த்துப் பணிந்த வானோர்
தஞ்சுண்டா யங்கருதி நஞ்சுண் டீரே. 7

### *அகவற்பா*

817. நஞ்சுமிழ் பகுவாய் வெஞ்சின மாசுணம்
தன்முதல் முருக்க, நெல்முதற் சூழ்ந்த
நீர்ச்சிறு பாம்புதன் வாய்க்கெதிர் வந்த
தேரையை வவ்வி யாங்(கு) யான்முன்
கருவிடை வந்த ஒருநாள் தொடங்கி.

---

*815. குறிப்புரை : "அடி ஒன்று" என்பதில் "ஒன்று" என்றது சாதி பற்றி. செடி ஒன்று - புதர் பொருந்தியதில்லை என்க. "நடம்" என்பது ஆகுபெயராய் அதன் இயல்பை உணர்த்திற்று. இதன்பின் 'இது' என்னும் பயனிலை எஞ்சி நின்றது. நடனத்தின் பெருமையை விளக்கியவாறு.*

*816. குறிப்புரை : இது, சிவபெருமான் நஞ்சுண்ட கருணையைப் பழிப்பது போலப் புகழ்ந்தது. உமது அருமையைத் தேராது (ஆராயாது) விட்டீர். 'உமக்குப் பின் உம்மோடு ஒப்பார் பிறர் கிடைப்பரோ' என்பதை நீர் எண்ணிப் பார்க்கவில்லை - என்றபடி. நல்ல வேளையாக உமையவள் அந்த நஞ்சினை உமது கண்டத்திலே நிறுத்தித் தடுத்திரா விட்டால் என்ன நிகழ்ந்திருக்கும்? என்னைப்போல்வார் அதனை (கண்டத்தில் தடுத்து நிறுத்துதலை)ச் செய்தல் இயல்வதன்று என்க. தஞ்சம். அம்முக் குறைந்து. "தஞ்சு" என நின்றது. தஞ்சம் - அடைக்கலம் புகுதல். உண்ட - அதனை உடைத்தாய் இருந்த. ஆயம் - கூட்டம். கருதி - 'பிழைக்க வேண்டும்' என எண்ணி. "உண்டீரே" என்னும் தேற்றே காரம் வெளிப்படைப் பொருளில் பழித்தலையும், குறிப்புப் பொருளில் புகழ்தலையும் குறிக்கும். மணிவாசகரும்*

*தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெலாம்*
*ஊன்புக்க வேற்காளிக்கு ஊட்டாங்காண் சாழலோ*

*என்றார் ஆகலின். "நடம் ஆடி ஏழ் உலகும் உய்யக் கொண்ட நாயகரே" என்றார்.*

மறவா மறலி முறைபிறழ் பேழ்வாய்
அயில்தலை அன்ன எயிற்றிடைக் கிடந்(து)ஆங்(கு)
அருள்நனி இன்றி ஒருவயி றோம்பற்குப்
பல்லுயிர் செகுத்து வல்லிதின் அருந்தி
அயர்த்தனன் இருந்த போதும், பெயர்த்துநின்று.

எண்டோள் வீசிக் கண்டோர் உருகத்
தொல்லெயில் உடுத்த தில்லை மூதூர்
ஆடும் அம்பலக் கூத்தனைப்
பாடுதல், பரவுதல், பணிதலோ இலனே. 8

*வெண்பா*

818. இலவிதழ்வாய் வீழ்வார்; இகழ்வார்; அவர்தம்
கலவி கடைக்கணித்தும் காணேன்; – இலகுமொளி
ஆடகஞ்சேர் அம்பலத்தே ஆளுடையார் நின்றாடும்
நாடகங்கண் டின்பான நான். 9

---

***817. குறிப்புரை :*** *கூத்தப்பெருமானைப் பாடிப் பரவிப் பணிதல் புரியாத வாழ்வு வாழ்வாகாது என்று பாடுகிறார். மக்கள் யாவரும் கருவில் தோன்றியது முதலே கூற்றுவன் வாயில் இருப்பவர் ஆகின்றனர். அதை நினையாமல் அவர்கள் வயிறு வளர்த்தற்குப் பிற உயிர்களைக் கொல்கின்றனர். இது நஞ்சுடைய நாகத்தின் வாயில் தனது வால் அகப்படப்பட்ட நீர்ப்பாம்பு வயல் நீரில் வாழ்கின்ற தவளையைப் பிடித்து விழுங்க முயல்வதை ஒக்கும். அடி 10-ல் "இருந்தும் போலும்" எனக் காணப்படுவது பாடம் அன்று. 'இருந்த போதும்' என்பது பாடமாயின், ஈற்றடியில் "பணிதலோ விலனே" எனப் பாடம் கொண்டு, 'இவைகளை யான் ஒழிந்திலேன்' எனவும், "இருந்தேன் போலும்" என்பது பாடமாயின் 'பாடுதல்' முதலியவற்றைச் செய்திலேனாய் இருந்தேன்' எனவும் பொருள் கொள்ளுதல் வேண்டும். "போலும்" என்பது அசையாகும். முருக்க - அழிக்க. நெல் - நெற்பயிர். மறலி - கூற்றுவன். 'என்னை மறவா மறலி' என்க. அயில் தலை அன்ன எயிறு - வேலின் முனை போன்ற கூர்மையயுடைய பற்கள். அருள் - உயிர்கள் மேல் இரக்கம். "நனி" என்பது இளமையைச் சிறப்பித்தது. அயர்த்தல் - மறத்தல்.*

***818. குறிப்புரை :*** *"அவர்தம் கலவி கடைக் கணித்தும் காணேன்" என்பதை இறுதிக்கண் கூட்டியுரைக்க. இலவு இதழ் - இலவ மரத்தின் காய்போலும் சிவந்த இதழ். வாய். ஏழன் உருபு. வீழ்வார் - விருப்பம் வைப்பார். 'சிலர் வீழ்வார்; சிலர் இகழ்வார்' நான் அதைக் கடைக்கண்ணாலும் பார்க்க மாட்டேன். எனவே 'விரும்புவதோ, இகழ்வதோ - எதுவும் இலேன்'*

### *கட்டளைக் கலித்துறை*

819. நானே பிறந்த பயன்படைத் தேன்;அயன் நாரணனெம்
கோனே எனத்தில்லை அம்பலத் தேநின்று கூத்துகந்த
தேனே திருவுள்ள மாகியென் தீமையெல் லாமறுத்துத்
தானே புகுந்தடி யேன்மனத் தேவந்து சந்திக்கவே. 10

### *சந்த விருத்தம்*

820. சந்து புனைய வெதும்பி, மலரணை
தங்க வெருவி, இலங்கு கலையொடு
சங்கு கழல, நிறைந்த அயலவர்
தஞ்சொல் நலிய மெலிந்து, கிளியொடு
பந்து கழல்கள் மறந்து தளிர்புரை
பண்டை நிறமும் இழந்து, நிறையொடு
பண்பு தவிர, அனங்கன் அவனொடு
நண்பு பெருக விளைந்த இனையன;
நந்தி முழவு தழங்க, மலைபெறு
நங்கை மகிழ, அணிந்த அரவுகள்
நஞ்சு பிழிய முரன்று, முயலகன்
நைந்து நரல, அலைந்த பகிரதி
அந்தி மதியொ டணிந்து திலைநகர்
அம்பொன் அணியும் அரங்கின் நடம்நவில்
அங்கண் அரசை அடைந்து தொழுதிவன்
அன்று முதல் எதிர்இன்று வரையுமே. 11

---

*என்பதாம். இவ்வாறு இருத்தலே 'புறக்கணித்தல்' எனப்படும். அவர் - அத்தகைய இதழினையுடைய மகளிர். ஆடகம் - பொன். 'நான், கலவி கடைக்கணித்தும் காணேன்' என வினை முடிக்க. இதனால் திருநடனத்தின் ஆனந்தத்தது சிறப்புக் கூறப்பட்டது.*

*819. குறிப்புரை : "நானே பிறந்த பயன் படைத்தேன்" என்பதை இறுதிக்கண் கூட்டியுரைக்க. 'எம் கோனே' என்று சொல்லித் துதிப்பவர் அயனும், மாலும். என - என்று துதிக்கும்படி ''தேன்'' என்றது சிவபெருமானை. "தேனே" என்னும் பிரிநிலை ஏகாரம், 'யான் வேண்டாமல் இருக்கவும் தானாகவே திருவுள்ளம் செய்தான்' எனப் பொருள் தந்தது. 'தானே திருவுள்ளம் செய்து, தானே புகுந்தான்' என்க.*

***820. குறிப்புரை :** "நந்தி முழவு தழங்க" என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. தழங்க - ஒலிக்க. 'நஞ்சு பிழிய முரன்று' என இயைத்து, "முரன்று"*

*அகவற்பா*

821. வரையொன்று நிறுவி, அரவொன்று பிணித்து,
கடல்தட ஆகம் மிடலொடும் வாங்கித்
திண்டோள் ஆண்ட தண்டா அமரர்க்(கு)
அமிர்துணா அளித்த முதுபெருங் கடவுள்!
கடையுகஞ் சென்ற காலத்து, நெடுநிலம்

ஆழிப் பரப்பில் ஆழ்வது பொறாஅ(து)
'அஞ்சேல்' என்று செஞ்சே லாகித்தன்
தெய்வ உதரத்துச் சிறுசெலுப் புரையில்
பௌவம் ஏழே பட்டது பௌவத்தோ(டு)
உலகு குழைத் தொரு நாள் உண்டதும்

---

*என்பதையும் ஏனையவற்றோடு இயைய, 'முரல' எனத் திரிக்க. முரல - மூச்சொலி செய்ய. நரல - ஓலம் இட. 'முழவு தழங்க, நங்கை மகிழ, அரவுகள் நஞ்சு பிழிய முரல, முயலகன் நைந்து நரல நடம் நவில் அரசு' என்க. பிழிய - வெளிப்பட. எதிர் இன்று - 'அன்று' எனக் குறிக்கப்பட்ட அந்த நாளுக்கு எதிராய் வந்த இந்தநாள். 'இவள் வெதும்பி, வெருவி, கழல, மெலிந்து, மறந்து, இழந்து, தவிர, பெருக நிற்றலால் விளைந்தன இனையன' என இயைத்து வினை முடிக்க. சந்து புனைய - (உடல் வெப்பத்தைத் தணித்தற் பொருட்டு யாம் - தோழியர்) சந்தனத்தைப் பூச 'அதனால் மேலும் வெதும்பி' என்க. மலர் அணை முள்போலத் தோன்றுதலால் வெருவினார். கலை - உடை. சங்கு - சங்க வளையல், அயலவர் சொல், அலர். நலிய - வருத்த. "கிளியொடு" என்னும் ஒடு எண் ஓடு. நிறை - நெஞ்சுரம். பண்பு பெண் தன்மையாகிய நாணம், அனங்கன் - மன்மதன். அவனொடு நண்பு பெருகுதலாவது, 'ஒன்று என்மேல் அம்பு தொடாதே; அல்லது ஒன்று அவர்மேல் அம்பு தொடு' என இன்சொற் சொல்லி வேண்டுதல். "பெருக" என்னும் வினையெச்சம் காரணப் பொருட்டாகலின், அதற்கு, 'பெருக நிற்றலால் என உரைத்தல் பொருந்துவதாயிற்று. 'இனையனவே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுக்கப்பட்டது. அதனால் 'இவை விளைந்ததைத் தவிரக் கண்ட பயன் ஏதும் இல்லை' என்பது போந்தது. இது கைக்கிளைத் தலைவியது வேறுபாடு கண்டு வினவிய செவிலிக்குத் தோழி பட்டாங்குச் சொல்லி அறத்தொடு நின்றது. பகிரதி - கங்கை. 'தில்லை' என்பது சந்தம் நோக்கி இடைக் குறைந்து நின்றது. 'தொழுத' என்னும் பெயரெச்சத்தின் ஈறு தொகுத்தலாயிற்று.*

***821. குறிப்புரை :*** *"நம்ப, மன்று கிழவோனே" என்பவற்றை முதற்கண் கூட்டுக. "கடவுள்" என்பதும் அவற்றை அடுத்து நிற்கும் விளி. தட ஆகம் -*

உலகம் மூன்றும் அளந்துழி ஆங்கவன்
ஈரடி நிரம்பிற்றும் இலவே; தேரில்
உரைப்போர்க் கல்ல தவன்குறை வின்றே;
இனைய னாகிய தனிமுதல் வானவன்
கேழல் திருவுரு ஆகி, ஆழத்(து)

அடுக்கிய ஏழும் எடுத்தனன்; எடுத்தெடுத்து
ஊழி ஊழி கீழுறுக் கிளைத்தும்
காண்பதற் கரியநின் கழலும், வேண்டுபு
நிகில லோகமும் நெடுமறைத் தொகுதியும்
அகில சராசரம் அனைத்தும் உதவிய

பொன்னிறக் கடவுள் அன்ன மாகிக்
கண்டி லாதநின் கதிர்நெடு முடியும்
ஈங்கிவை கொண்டு, நீங்காது விரும்பிச்
சிறிய பொதுவின் மறுவின்றி விளங்கி
ஏவருங் காண ஆடுதி; அதுவெனக்(கு)

அதிசயம் விளைக்கும் அன்றே; அதிசயம்
விளையாதும் ஒழிந்த தெந்தை! வளையாது
கல்லினும் வலிஅது நல்லிதிற் செல்லாது
தான்சிறி தாயினும் உள்ளிடை நிரம்ப
வான்பொய், அச்சம், மாயா ஆசை

மிடைந்தன கிடப்ப, இடம்பெறல் அருமையில்
ஐவர் கள்வர் வல்லிதிற் புகுந்து
மண்மகன் திகிரியில் எண்மடங்கு சுழற்ற
ஆடுபு கிடந்த பீடில் நெஞ்சத்து
நுழைந்தனை புகுந்து தழைந்தநின் சடையும்

செய்ய வாயும் மையமர் கண்டமும்,
நெற்றியில் திகழ்ந்த ஒற்றை நாட்டமும்,
எடுத்த பாதமும் தடுத்தசெங்கையும்,
புள்ளி ஆடையும் ஒள்ளிதின் விளங்க
நாடகம் ஆடுதி; நம்ப! கூடும்

வேதம் நான்கும் விழுப்பெரு முனிவரும்
ஆதி நின்திறம் ஆதலின், மொழிவது
பெரியதிற் பெரியை என்றும் அன்றே!
சிறியதிற் சிறியை என்றும் அன்றே!

45 நிறைபொருள் மறைகள் நான்கும்நின் அறைகழல்
இரண்டொடும் அறிவினில் ஆர்த்து வைத்த
மறையவர் தில்லை மன்றுகிழ வோனே! 12

---

*விசாலித்த உடம்பு. 'ஆகத்தில்' என உருபு விரிக்க. மிடல் - வலிமை. ஆண்ட - பயன்படுத்திய. தண்டா - நீங்காத. "கடையுகஞ் சென்ற" என்பது முதல் "குறைவின்றே" என்பது முடிய உள்ள பகுதி திருமாலின் சிறப்புக் கூறியது. "கடையுகம்" என்பதை 'யுகக் கடை' என மாற்றிக் கொள்க. சேல் - மீன். "செஞ்சேல்" என்பதில் செம்மை செப்பத்தைக் குறித்தது. 'ஆகியபின்' என்பது 'ஆகி' எனத் திரிந்து நின்றது. 'ஏழும்' என்னும் முற்றும்மை தொகுத்தாலாயிற்று. ஏகாரம் தேற்றம். "பட்டது" என்னும் ஒருமை அத்தொழில் மேல் நின்றது. 'படுத்தது' என்பது விகுதிகுன்றி, "பட்டது" என நின்றது. 'ஓர் உக முடிவில் 'சோமுகன்' என்னும் அசுரன் வேதத்தைக் கவர்ந்து கொண்டு கடலுள் ஒளிந்து கொள்ளத் திருமால் அவனை அழித்தற்குக் கொண்ட அவதாரமாகிய மச்சத்தின் வாய்க்குள் ஏழு கடல்களும் அடங்கிவிட்டன' என அதன் பெருமை கூறியவாறு. இதன் பின் உலக உண்டதும், மூவுலகையும் ஈரடியாலே அளந்ததும் ஆகிய திருமால் பெருமையையே கூறினார். 'ஒருநாள் உண்டதும் பௌவத்தோடு உலகு குழைத்து' என்க. 'இத்தகைய பெருமைகளை உடையனாயினும் பிறத்தல், இறத்தல் முதலிய குறைகளையும் அவன் உடையனாயினும் அவற்றைப் பலர் அறியார்' என்றற்கு "உரைப்போர்க்கல்லது அவன் குறைவு இன்றே" என்றார். உரைப்போர் - உணர்ந்து சொல்வோர். கேழல் - பன்றி. கிளைத்தல் - தோண்டுதல். நிகிலம், அகிலம் - எஞ்சுதல் இன்மை. சரம் - இயங்கியற் பொருள், அசரம் - நிலையியற் பொருள், பொன்னிறக் கடவுள் - இரணியகருப்பன்; பிரம தேவன்; இங்குக் கூறிய பெருமைகளையெல்லாம் உடைய பெரிய தேவர்களாகிய மாலும், அயனும் வேற்றுருக் கொண்டு ஊழி ஊழி தேடியும் அறியப்படாத, எல்லை காண்பரிய அடியும், முடியும் தில்லையில் ஒரு சிறிய மன்றினுள் ஆடுதல் எனக்கு அதிசயத்தை விளைக்கின்றது. ஆயினும் அதிசயம் விளைக்கவும் இல்லை. ஏனெனில், அம்மன்றினும் மிகச் சிறியதும், ஆயினும் அசுத்தப் பொருள்களை மிக உடையதும், அதனோடு கூட, ஒருவர் அல்லர்; ஐவர் கள்வரால், ஒருவன் குயவன் சுழற்றுகின்ற அச்சக்கரத்தின் வேகம்போல எண்மடங்கு வேகத்துடன் சுழலும்படி சுழற்றச் சுழல்வதுமாகிய என் நெஞ்சினுள்ளே நுழைந்து உனது உறுப்புக்களெல்லாம் நன்கு விளங்க ஆடுகின்றாய்; (இது அதிசயம் விளையாமைக்குக் காரணம், இரண்டும் மிக மிக அதிசயமேயாகலின் அதிசயம் விளையாமற் போகவும் இல்லை). இதனாலன்றோ உன்னைப்*

### *வெண்பா*

822. கிழவருமாய், நோய்மூப்புக் கீழ்ப்பட்டுக் காமத்(து)
உழவரும்போய் ஓயுமா கண்டோம்; – மொழிதெரிய
வாயினால் இப்போதே, மன்றில் நடமாடும்
நாயனார் என்றுரைப்போம் நாம். 13

### *கட்டளைக் கலித்துறை*

823. நாமத்தி னால்என்தன் நாத்திருத் தேன்;நறை மாமலர்சேர்
தாமத்தி னாலுன் சரண்பணி யேன்;சார்வ தென்கொடுநான்?
வாமத்தி லேயொரு மானைத் தரித்தொரு மானைவைத்தாய்,
சேமத்தி னாலுன் திருத்தில்லை சேர்வதோர் செந்நெறியே. 14

---

*"பெரியதினும் பெரியை" என்றும், "சிறியதினும் சிறியை" என்றும் வேதங்களும் சொல்கின்றன. பெரியவர்களும் சொல்கின்றார்கள். "அணோரணீயாந்; மஹதோ மஹீயாந்" என்பது கடோபநிடதம். வான் - பெரிய. மாயா - கெடாத. மிடைந்தன - நெருங்கின; இது முற்றெச்சமாய் நின்றது. ஐவர் கள்வர்; ஐம்புல ஆசை. மண் மகன் - குயவன். திகிரி - சக்கரம். தடுத்த - 'அஞ்சற்க' என அபயம் தந்தகை.*

***822. குறிப்புரை :*** *'நெஞ்சே' என்பதை முதற்கண் வருவித்து, "காமத்து உழவரும்" என்பதை அதன்பின்னும். "நாம்" என்பதை, "மொழிதெரிய" என்பதன் பின்னும் கூட்டி யுரைக்க. "கண்டோம்" என்பதன் பின்னும், "ஆதலால்" என்பது வருவிக்க. உழவர் - முயல்பவர். கிழவர் - முதியோர். நோய் மூப்பு. உம்மைத் தொகை. அதன்பின் நான்காவது விரிக்க. கீழ்ப் படுத்தலைக் கூறுதற் பொருட்டு "மூப்பு" என மீண்டும் அநுவதித்தார். மொழி தெரிய - நமது சொல் மற்றவர்களுக்கும் விளங்கும்படி. நாயனார் - தலைவர். 'எப்பொழுதும் உரைப்போம்' என்றபடி. அவ்வாறு உரையாதோர் "வாளா மாய்ந்து மண்ணாகிக் கழிவர்"* நாம் அவ்வாறின்றி 'மன்றில் நடம் ஆடும் நாயனார்' என்று எப்பொழுதும் சொல்லியிருப்போமானால் இவ்வுடம்பு நீங்கியபின் அவன் திருவடியை அடைவோம் - என்பது கருத்து.*

***823. குறிப்புரை :*** *மூன்றாம் அடியை முதற்கண் வைத்து உரைக்க. "மான்" இரண்டில் முன்னது மான் கன்று; பின்னது பெண். வாமம் - இடப் பக்கம் "வைத்தாய்" என்பது விளி, 'உன்றன் நாமத்தினால்' என்க. நாமம் - பெயர். அஃது அஞ்செழுத்து மந்திரம். அதனைப் பயில்கின்ற நா குற்றத் தினின்றும் நீங்கும் ஆகலின், 'அவ்வாறு செய்து அதனைத் திருத்தாமல் இருக்கின்றேன்'*

---

* *திருமுறை - 5.90.3*

### *சந்த விருத்தம்*

824. நெறிதரு குழலை அறலென்பர்கள்;
நிழலெழு மதியம் நுதலென்பர்கள்
நிலவினும் வெளிது நகையென்பர்கள்
நிறம்வரு கலசம் முலையென்பர்கள்;
அறிகுவ தரிதிவ் விடையென்பர்கள்
அடியிணை கமல மலரென்பர்கள்;
அவயவம் இனைய மடமங்கையர்
அழகியர்; அமையும்; அவரென்செய ?
மறிமழு வுடைய கரனென்கிலர்;
மறலியை முனியும் அரனென்கிலர்;
மதிபொதி சடில தரனென்கிலர்;
மலைமகள் மருவு புயனென்கிலர்;
செறிபொழில் நிலவு திலையென்கிலர்;
திருநடம் நவிலும் இறையென்கிலர்;
சிவகதி அருளும் அரசென்கிலர்;
சிலர்நர குறுவர் அறிவின்றியே.

---

*என்றார். நறை - தேன். தாமம் - மாலை. சரண் - திருவடி. 'உன்னைச் சார்வது' என்க. சார்வது - அடைவது. என்கொடு - எதை வழியாகக் கொண்டு என்றது. 'எதுவும் வழியாதற்கில்லை' என்றபடி. 'கொண்டு' என்பது, "கொடு" என மருவிற்று. சேமம் - நம்மை 'ஒன்றும் செய்யாத எனக்கு உன் திருத்தில்லையை அடைவதாகிய ஒரு வழிதான் உள்ளது' என்க. "நெறியே" என்னும் ஏகாரம் பிரிநிலை. அதன்பின் 'உளது' என்பது எஞ்சிநின்றது.*

***824. குறிப்புரை :*** *பின் வருவன பலவற்றோடும் இயையுமாறு, "குழலை" என்பதில் 'ஐ சாரியை' என வைத்து. 'குழல் அறல்' என்பர்கள் என அங்ஙனம் கூறுவார் கூற்றாக்கியே உரைக்க. குழல் - கூந்தல். அறல் - நீரோடையிற் காணப்படும் கருநுண் மணல். நெறி - நெறிப்பு. இங்கு உரைத்தது போல்வே "நுதல்" முதலியன எழுவாயாகவும், மதியம் முதலியன பயனிலையாகவும் அமைந்து உரைப்பவர் கூற்றாகி வருதல் காண்க. நிழல் - ஒளி "மதி" என்றது பிறையை. 'இனைய ஆன' என ஆக்கம் வருவிக்க. 'மடமங்கையர், அவர் கூறுமாறே அழகியராதல் அமையும்; 'ஆயினும், அவர் என் செய உளர்!' என்க. 'அவர்களால் ஆவது ஒன்றில்லை; அதனால் அவர்களது அழகைச் சொல்லிக் கொண்டிருப்பதால் பயனில்லை' என்பதாம். மடமங்கையரை மேற்கூறியவாறு பலபடப் புகழ்கின்ற சிலர், தில்லைக் கூத்தப் பெருமான்*

### *அகவற்பா*

825. அறிவில் ஒழுக்கமும், பிறிதுபடு பொய்யும்
கடும்பிணித் தொகையும், இடும்பை ஈட்டமும்
இனையன பலசரக் கேற்றி, வினையெனும்
தொல்மீ காமன் உய்ப்ப, அந்நிலைக்
கருவெனும் நெடுநகர் ஒருதுறை நீத்தத்துப்

புலனெனும் கோள்மீன் அலமந்து தொடர,
பிறப்பெனும் பெருங்கடல் உறப்புகுந்(து) அலைக்கும்
துயர்த்திரை உவட்டின் பெயர்ப்பிடம் அயர்த்துக்
குடும்பம் என்னும் நெடுங்கல் வீழ்த்து
நிறையெனும் கூம்பு முரிந்து, குறையா

உணர்வெனும் நெடும்பாய் கீறிப் புணரும்
மாயப் பெயர்ப்படு காயச் சிறைக்கலம்
கலங்குபு கவிழா முன்னம், அலங்கல்
மதியுடன் அணிந்த பொதியவிழ் சடிலத்துப்
பையர வணிந்த தெய்வ நாயக!

தொல்லெயில் உடுத்த தில்லை காவல!
வம்பலர் தும்பை அம்பல வாண!நின்
அருளெனும் நலத்தார் பூட்டித்
<u>திருவடி நெடுங்கரை சேர்த்துமா செய்யே.</u> 16

---

*தொடர்பாக ஒன்றையேனும் சொல்கின்றிலர். மறி - மான்கன்று. தான் - தரித்தவன். புயன் - தோள்களையுடையவன். அவர் நரகிற்கு ஏதுவான செயல்களையே செய்து போவர் ஆதலின், 'நரகு உறுதலைத் தவிரமாட்டார்' எனவும், 'அதற்குக் காரணம் அறிவின்மையே' எனவும் கூறினார்.*

*825. குறிப்புரை : "அலங்கல் மதியுடன்... அம்பலவாண" என்னும் தொடரை முதற்கண் வைத்து உரைக்க. இடும்பை - துன்பம். இனையன - இவை போல்வன. எனவே, இங்குக் குறிக்கப்படுகின்ற மரக்கல வாணிபம் நஞ்சும், கள்ளும், கொலைக் கருவிகளும் போன்ற தீப்பொருள் வாணிப மாகின்றதேயன்றி, நற்பொருள் வாணிபமாகவில்லை. மீகாமன் - மாலுமி. உய்ப்ப - செலுத்த - கரு - உடம்பு தோன்றுதற்கு முதலாய் உள்ள வித்தும், நிலமும். அவைதாம் பலவாகலின், பல துறைமுகப்பட்டினங்களாக உருவகம் செய்யப்பட்டன - 'அந்தத்' துறைகள் பலவற்றில் ஒருதுறைப் பிறப்பாகிய கடலில் புகுந்து என்க. நீத்தம் - நீர். புலன் - ஐம்புல ஆசை. கோள்மீன் -*

### *வெண்பா*

826. செய்ய திருமேனிச் சிற்றம் பலவருக்(கு)என்
தையல் வளைகொடுத்தல் சாலுமே; – ஐயன்தேர்
சேயே வருமளவில் சிந்தாத மாத்திரமே
தாயே! நமதுகையில் சங்கு. 17

### *கட்டளைக் கலித்துறை*

827. சங்கிடத் தானிடத் தான்தன தாகம் சமைந்தொருத்தி
அங்கிடத் தாள்,தில்லை அம்பலக் கூத்தற்(கு); அவிர்சடைமேல்
கொங்கிடத் தார்மலர்க் கொன்றையென் றாயெங்கை நீயுமொரு
பங்கிடத் தான்வல்லை யேல்;இல்லை யேலுன் பசப்பொழியே. 18

---

*முதலை. அலமந்து - பல திசையாகச் சூழ்ந்து சூழ்ந்து. அலைக்கும் - மனத்தைக் கவற்றுகின்ற. துயர்த்திரை - துன்பமாகிய அலைகளின் உவட்டு - மோதல்கள். பெயர்ப்பு இடம் அயர்த்து - பெயர்ந்து அடைய வேண்டிய இடத்தை மறந்து. அடைய வேண்டிய இடம் வீடு. கல் - பாறை 'கல்லின் வீழப்பண்ணி' என்க. நிறை - மனம் ஒருநெறியில் நிற்றல். கூம்பு - பாய்கள் கட்டப்படும் தூண். கீறி - கிழிக்கப்பட்டு. 'கீறிக் கவிழா முன்னம்' என இயைக்க. மாயப் பெயர்ப் படுகாயம் - பொய்யாய் இருந்தும், 'மெய்' என வஞ்சனையான பெயரொடு பொருந்திய உடம்பு. சிறைக் கலம் - உண்மையில் சிறையாய். தோற்றத்தில் கரைசேர்ப்பதுபோலக் காணப்படுகின்ற மரக்கலம். கலங்குபு - நிலைகலங்கி. அலங்கல் - கொன்றை மாலை. வம்பு அலர் - நறுமணத்துடன் மலர்கின்ற தார் - கயிறு. நடுக்கடலில் கவிழும் நிலையில் உள்ள மரக்கலங்களைத் தரையில் நாட்டப்பட்டுள்ள தூணில் பிணிக்கப்பட்டுள்ள கயிற்றைக் கொண்டுபோய்க் கட்டியீர்த்துக் கரைக்குக் கொணர்வது அக்கால வழக்கம். இப்பாடலில் அமைந்துள்ள முற்றுருவகத்தின் சிறப்பு அறிந்து மகிழத்தக்கது. **'இவ்வுடம்பு வீழ்வதற்குள் உயிர் உன் திருவடியை அணைதலாகிய சீவன் முத்தி நிலையைத் தந்தருளல் வேண்டும்' என்பதாம். 'அங்ஙனம் அடையாதே உடம்பு வீழுமாயின், அடுத்த பிறப்பில் செல்ல வேண்டி வரும்' என்பது கருத்து**.*

***826. குறிப்புரை :*** *நற்றாய்க்கு மகளாயினாளை அவளோடு தனக்குள்ள கேண்மை பற்றி, "என் தையல்" என்றார். சாலும் - பொருந்தும். இதன்பின் 'ஏனெனில்' என்பது வருவிக்க. ஐயன் - சிற்றம்பலத்தான். சேயே - தொலைவில் தானே. ஏகாரம் பிரிநிலை. மகளைப் பெற்ற நற்றாய்க்குத் தோழியே மகளுக்குச் செவிலித்தாய் ஆதலாலும், தோழி தலைவியை, 'அன்னாய்' என்றல் வழக்கு*

ஆதலாலும் "தாயே" என்றாள், "நமது கையில் உள்ள சங்கு சிந்தாத மாத்திரமே" என்றதனால், 'சிந்துநிலையை அடைந்து விட்டன' என்றதாம். 'உலர்ப்புறத்துத் தலைவனைக் காதலித்தாராகக் கூறப்படும் மகளிர் பொதுமகளிரே யல்லது, குல மகளிரல்லர் என்பதை,

''வழக்கொடு சிவணிய வகை யான'' என்னும் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் உரைத்த உரையான் உணர்க. அங்ஙனம் ஆதலின் இங்குச் செவிலி நற்றாய்க்கு இவ்வாறு கூற அமைவதாயிற்று. இனி, இறைவன் மேலவாய் வரும் அகத்துறைப் பாடலின் உள்ளுறைப் பொருள் தலைவியராவார் பக்குவான்மாக்களும், பிறர் அபக்குவான்மாக்களும், பாசங்களுமே யாதலாலும் அவ்வுள்ளுறை நோக்கில் இஃது அமைவுடையதேயாம். இது கைக்கிளைத் தலைவியது வேறுபாடு கண்டு ஐயுற்று வினவிய நற்றாய்க்குச் செவிலி அமைவு கூறும் முகத்தால் அறத்தொடு நின்றது. 'முதியாராகிய நாமே அந்நிலையை அடைவோம் என்றால், இளையளாகிய நம் மகள் இந்நிலையை அடைந்தது வெகுளத் தக்கதோ' என்றபடி.

**827. குறிப்புரை :** சங்கு இடத்தான் - 'பாஞ்சசன்னியம்' என்னும் சங்கினை இடக் கையிலே உடையவன்; திருமால். அவனை இடப்பாகத்திலே உடையவன் சிவபெருமான்; அம்பலவாணன். ஆகம் - திருமேனி. திருமேனியில் ஒருத்தி (உமை) அவனுக்குச் சமைந்து அந்த இடப்பாகத்தையே பற்றியிருக்கின்றார். இந்நிலைமையில் அவளுக்கு நீ தங்கை யாகும்படி. 'அவ்வம்பலவாணனுடைய முடிமேல் உள்ள கொன்றைமலர் மாலை எனக்கு வேண்டும்' என்கின்றாய். அதனை நீ விடாப்பிடியாய் விரும்புவதாயின், மால் உமை என்னும் அவ்இருவரைப் போல நீயும் அந்த இடப்பாகத்தை உனக்கு உரியதாகப் பற்றிக் கொள்ளும் வல்லமையிருக்கு மாயின் விரும்பு; அஃது இல்லையேல், உன் விருப்பத்தை விட்டொழி. "பசப்பு ஒழி'' என்றது. 'விருப்பத்தை ஒழி' என்றதேயாம். 'திருமாலையும், உமையையும், தனது சத்திகளாக உடையவன் சிவபெருமான்' என்பதும், 'ஏனையோர்க்கு அந்நிலை கூடா' என்பதும் இங்கு மறைமுகமாக விளக்கப்பட்டது. கொங்கு இடு அத்தார் - தேனைச் சொரிகின்ற அந்த மாலை. "எங்கை" என்பதன்பின் (என) என்று ஒரு சொல் வருவித்து, 'அவள் உன்னை - என் தங்கை - என்று சொல்லும்படி' என உரைக்க. இது, தன்னைத் தூதுவிடக் கருதிக் குறிப்பாற் சில கூறிய கைக்கிளைத் தலைவியைத் தோழி அருமை கூறி ஆற்றுவித்தது. "கொன்றை" என்பதன் பின் 'வேண்டும்' என்பது எஞ்சிநின்றது. "வல்லையேல்" என்பதன்பின், 'வேண்டு' என்பது வருவிக்க.

## விருத்தம்

828. ஒழிந்த தெங்களுற வென்கொ லோ!எரியில்
ஒன்ன லார்கள்புரம் முன்னொர்நாள்
விழுந்தெ ரிந்துதுக ளாக வென்றிசெய்த
வில்லி தில்லைநகர் போலியார்
கழிந்த உந்தியில் அழுந்தி மேகலை
தொடக்க நின்றவர் நடக்கநொந்(து)
அழிந்த சிந்தையினும் வந்த தாகிலுமொர்
சிந்தை யாயொழிவ தல்லவே. 19

---

*828. குறிப்புரை :* இப்பாட்டு மேற் பலவிடத்தும் வந்தன போலப் பாடாண் கைக்கிளையாகாது, "சொல்லெதிர் பெறான் சொல்லி யின்புறல்"* என்னும் ஆண்பாற் கைக்கிளையாய அகப்பாட்டு. இதிற் சிவபெருமான் பாட்டுடைத் தலைவன் மட்டுமே. கிளவித் தலைவன் வேறுகொள்ளப்பட்டான். "எங்கள் உறவு" என்றது, தலைவியது கருத்து வேறானமைக்குக் காரணத்தை ஆராய்ந்தது. வென்றி செய்த - வெற்றி படைத்த. தில்லை நகர் போலியார் - தில்லைத் தலத்தைப் போல அருமையுடையவர்; தலைவி. சுழிந்த - நீர்ச் சுழி போன்ற. தொடக்க நின்று - பிணிக்கநின்று. அழிந்த சிந்தை - கெட்டே போன மனம். இன்னும் வந்ததாகிலும் - ஒருகால் உயிர்த் தெழுந்து திரும்பிவந்தது என்றாலும்; அஃது ஒன்றாயிராது பலவாய்ச் சிதறுவதாம். 'ஆகவே இனி உய்வது அரிது' என்பது குறிப்பெச்சம். 'அழுந்தி, நின்று, நொந்து, அழிந்த சிந்தை' என்க. "ஒழிவது" என்பதில் ஒழி, துணிவுப் பொருண்மை விகுதி. அல்ல என்பது ஒருமைப் பன்மை மயக்கம்.

*829. குறிப்புரை :* அல்லல் வாழ்க்கை, உடல் ஓம்பும் வாழ்க்கை. வல்லிதின் - திறமையாக. செலுத்துதற்கு - நடத்துதற் பொருட்டு மேற்கொள்ளப்படும் பலவகையான தொழில்கள் இங்குக் குறிக்கப்பட்டன. உழந்து - உழுது. கார் - மழை. கிளை உடன் தவிர - சுற்றத்தார் பலரும் இல்லத்திலே இருந்துவிடத் தான் மட்டும். 'பதி' என வழங்கி, 'எந்த ஊர் நல்ல ஊர்' என ஆராய்ந்து சென்று, அருளாவயவர் - இரக்கம் காட்டாத படைவீரர். அம்பிடை நடத்தல் போர்க்களத்து உலவுதல். பவ்வம் - கடல். எந்திரம் - மரக்கலம். கடாஅய் - செலுத்தி. குன்று - நீருள் நின்று மரக்கலத்தை உடைக்கும் மலைகள். சோற்றுக் கடன் - படைவீரர் தாம் போர் இல்லாது

---

* தொல் - பொருள் - அகத்திணையியல்

*அகவற்பா*

829. அல்லல் வாழ்க்கை வல்லிதின் செலுத்தற்குக்
கைத்(து)ஏர் உழந்து கார்வரும் என்று
வித்து விதைத்தும், விண்பார்த் திருந்தும்,
கிளையுடன் தவிரப் பொருளுடன் கொண்டு
முளைமுதிர் பருவத்துப் பதியென வழங்கியும்,

அருளா வயவர் அம்பிடை நடந்தும்,
இருளுறு பவ்வத்(து) எந்திரங் கடாஅய்த்
துன்றுதிரைப் பரப்பிற் குன்றுபார்த் தியங்கியும்,
ஆற்றல் வேந்தர்க்குச் சோற்றுக்கடன் பூண்டும்,
தாள்உழந் தோடியும், வாளுழந் துண்டும்,

அறியா ஒருவனைச் செறிவந்து தெருட்டியும்,
சொற்பல புனைந்தும், கற்றன கழறியும்
குடும்பப் பாசம் நெடுந்தொடர்ப் பூட்டி
ஐவர் ஐந்திடத் தீர்ப்ப நொய்தில்
பிறந்தாங் கிறந்தும், இறந்தாங்கு பிறந்தும்

---

*உண்டு இருக்கும் கடன். இது போர்வந்த காலத்தில் போர்க்களம் புகுந்து வஞ்சியாது பொருது வெல்லுதல், அல்லது உயிர்கொடுத்தலால் தீரும். தாள் உழந்து ஓடி - கால் கடுக்க ஓடித் தூது உரைத்தல். வாள் உழந்து - வாட்படை பயிற்றுவித்து. அறியா… தெருட்டி - கல்வி கற்பித்து புனைதல் - கவி யாத்தல். கற்றன கழறி - தான் அறிந்தவற்றைப் பலரும் அறிய அவைக்களத்து விரித்துரைத்து. பாச நெடுந்தொடர் (சங்கிலி) பூட்டி ஈர்ப்பவர் ஐவர் - ஐம்புலக் குறும்பர். ஆங்கு, உவம உருபுகள். அவை, 'எல்லாம் வினைகளின் பயன்' என்பது பற்றி வந்தன. கொப்புள் - நீர்க் குமிழி, ஒப்பின்மை, கணத்தில் தோன்றி கணத்தில் மறைதலில் பிற பொருள்கள் யாவும் ஒப்பிலவாதல் பற்றி வந்தது. உலப்பு இல் அளவில்லாத 'எண்பத்து நான்கு நூறாயிரம்' என்பது வகை, அல்லது சாதியாகலின் விரி அளவில்லனவாம். கலக்கம் - வேறுபாடு. "மயங்கியும்" என்னும் உம்மை இழிவு சிறப்பு. 'மயங்கினாலும், கண்ணிடைப் பொறித்தும், மனத்திடை அழுத்தியும், (வாக்கிடை) உரைக்க உறுதவம் (யான்) செய்தனன். தான் - இந்நிலைமை. நான்முகன் பதத்தினும் மேல் நிகழ் பதமாகும் (இந்தப்) பெறுதற்கரியதோர் பேறு பெற்றேற்கு உறுதற்கரியதும் உண்டோ' என முடிக்க. "அரியதும்" என்னும் உம்மை உயர்வு சிறப்பு. "நெய்*

கணத்திடைத் தோன்றிக் கணத்திடைக் கரக்கும்
கொப்புட் செய்கை ஒப்பில் மின்போல்
உலப்பில் யோனிக் கலக்கத்து மயங்கியும்
நெய்யெரி வளர்த்துப் பெய்முகிற் பெயல்தரும்
தெய்வ வேதியர் தில்லை மூதூர்

ஆடகப் பொதுவில் நாடகம் நவிற்றும்
கடவுட் கண்ணுதல் நடம்முயன் றெடுத்த
பாதப் போதும், பாய்புலிப் பட்டும்,
மீதியாத் தசைத்த வெள்ளெயிற் றரவும்,
சேயுயர் அகலத்(து) ஆயிரங் குடுமி

மணிகிடந் திமைக்கும் ஒருபே ராரமும்,
அருள்பொதிந் தலர்ந்த திருவாய் மலரும்,
நெற்றியில் திகழ்ந்த ஒற்றை நாட்டமும்
கங்கை வழங்கும் திங்கள் வேணியும்
கண்ணிடைப் பொறித்து மனத்திடை அழுத்த,ஆங்(கு)

உள்மகிழ்ந் துரைக்க உறுதவஞ் செய்தனன்
நான்முகன் பதத்தின் மேல்நிகழ் பதந்தான்;
**உறுதற் கரியதும் உண்டோ!**
**பெறுதற் கரியதோர் பேறுபெற் றேற்கே.** 20

---

*எரி... வேதியா" - 'கற்று ஆங்கு எரி ஓம்பிக் கலியைவாராமே செற்ற'* தில்லைவா ழந்தணர். புலி - புலித்தோல்; ஆகுபெயர். யாத்து அசைத்த - கச்சாக இறுக்கிக் கட்டிய. ஆயிரங் குடுமிப் பேராரம், ஆதிசேடனாகிய பாம்பு. உறுதவம் - மிக்க தவம்.*

***830.** குறிப்புரை :* *பெற்றோர் - நற்றாயர். பிழைத்து - அவர்களுக்குத் தப்பி. சுற்று - சுற்றிலும். ஒற்றைக்கை மா - தும்பிக்கையை உடைய விலங்கு; யானை. மறுக - வருந்த. மான் தேர் - குதிரைகள் பூட்டிய தேர். விதப்பினால், 'வேதமாகிய குதிரைகள்' என்பது பெறப்பட்டது. கோ மறுகு - இராச வீதி. 'பேதையர்' என்பதை, "பேதைகள்" - என அஃறிணையாக உபசரித்தார். பேதையர் - மகளிர். இதனால், கூத்தப் பெருமானது தேர் விழாவின் சிறப்புக் கூறியவாறு. பெற்றோரும், செவிலியரும் தடுத்தல், 'சென்று காணின், அவனது காதல் வலையில் வீழ்ந்து, பிறிதொன்றற்கும் உழவார்' என்னும் அச்சத்தினாலேயாம். இதனால், 'காந்தத்தை நோக்கிச் செல்லும்*

---

* *திருமுறை 1.80.1*

*வெண்பா*

830. பெற்றோர் பிடிக்கப் பிழைத்துச் செவிலியர்கள்
கற்றோட ஓடித் தொழாநிற்கும்; – ஒற்றைக்கைம்
மாமறுகச் சீறியசிற் றம்பலத்தான் மான்தேர்போம்
கோமறுகிற் பேதை குழாம். 21

*கட்டளைக் கலித்துறை*

831. பேதையெங் கேயினித் தேறியுய் வாள்!பிர மன்தனக்குத்
தாதை,தன் தாதையென் றேத்தும் பிரான்,தண் புலிசைப்பிரான்
கோதையந் தாமத்தண் கொன்றை கொடான்,நின்று கொல்லவெண்ணி
ஊதையும், காரும் துளியொடும் கூடி உலாவி யவே. 22

---

*இரும்புபோலக் கடவுளை நோக்கிச் செல்வதே உயிர்கட்கு இயல்பு' என்பதும், 'அதனைச் செயற்கையாகிய பாசத் தளைகளே குறுக்கிட்டுத் தடுத்துத் துன்புறுத்துகின்றன' என்பதும் ஆகிய உண்மைகள் புலப்படுத்தப்பட்டவாறு அறிக.*

*831. குறிப்புரை : "பேதை எங்கே இனித் தேறி உய்வாள்" என்பதை இறுதியில் வைத்து உரைக்க. பிரமன்றனக்குத் தாதை, திருமால். அவனால் 'தனக்குத் தாதை' என்று ஏத்தப்படும் பிரான் சிவபிரான். கோதை, தாமம் - ஒரு பொருட் சொற்கள். அவை தம்மில் சிறிது வேறுபாடுடைய. ஊதை - வாடைக் காற்று. கார் - மேகம். "ஊதையும், காரும் துளியொடு கூடி உலாவிய" என்றது, 'காலம் கார்காலமாயிற்று' என்றவாறு. தலைவியரைப் பிரிந்து சென்ற தலைவர் கார்காலத்தில் வந்து கூடுவர் ஆகலின், 'அவ்வாற்றால் களிப்பு எய்துகின்ற மகளிரைக் காணுந்தோறும் இவள் ஆற்றாமை மிகுவாள்' என்பது பற்றி, "பேதை எங்கே இனித் தேறி உய்வாள்!" என்றாள். இது கைக்கிளைத் தலைவிக்குத் தோழியாயினாள் பருவ வரவு கண்டு கவன்றுரைத்தது. ஒற்றைக் கைம்மா - யானை. மான்தேர் - குதிரை பூட்டிய தேர்.*

*832. குறிப்புரை : இது மடல் மா ஊரத் துணிந்த தலைவன் 'அஃது இயலுமோ' எண்ணிக் கவன்று கூறியது. மடல் மா ஊர்பவன் தலைவியது உருவத்தை அவளேபோலத் தோன்றும்படி நன்கு எழுதிய கிழியைக் கையில் கொண்டு ஊர்தல் வேண்டும். அதற்கு, 'இவளது அவயவங்கள் எழுதுதற்கு அரியனவாய் உள்ளனவே' எனக் கவன்று கூறினான். எனவே, இதுவும் நேரே அகப்பாட்டாம். இங்கும் கூத்தப் பெருமான் பாட்டுடைத் தலைவர் மட்டுமே.*

*சலதி - கடல். கடலில் தோன்றிய விடத்தை அதன்கண் வாழ்வதாகக்*

### விருத்தம்

832. உலவு சலதி வாழ்விடம் அமரர் தொழவு ணாவென
நுகரும் ஒருவர் ஊழியின் இறுதி யொருவர் ஆழிய
புலவு கமழ்க ரோடிகை உடைய புனிதர் பூசுரர்
புலிசை யலர்செய் போதணி பொழிலின் நிழலின் வாழ்வதோர்
கலவ மயில னார்சுருள் கரிய குழலி னார்குயில்
கருது மொழியி னார்கடை நெடிய விழியி னாரிதழ்
இலவின் அழகி யாரிடை கொடியின் வடிவி னார்வடி
வெழுதும் அருமை யாரென திதய முழுதும் ஆள்வரே. 23

### *அகவற்பா*

833. ஆளெனப் புதிதின்வந் தடைந்திலம் அத்தநின்
தாளின் ஏவல் தலையின் இயற்றி
வழிவழி வந்த மரபினம் மொழிவதுன்
ஐந்தெழுத் தவையெம் சிந்தையிற் கிடத்தி
நனவே போல நாடோறும் பழகிக்

---

*கூறினார். ஊழியின் இறுதி; சங்கார கால முடிவு. 'அது பொழுது சிவபிரானைத் தவிரப் பிறர் ஒருவரும் இல்லை' என்றற்கு. "ஊழியின் இறுதி ஒருவர்" என்றார். ஆழிய - ஆழ்ந்த கரோடிகை - தலைஒடு. 'புலால் கமழும் தலையோட்டை யுடையராயினும் தூயரே' என்றற்கு, "புனிதர்" என்றார். பூசுரர், தில்லைவாழந்தணர். 'புலிசைப் பொழில்' என இயையும். "வாழ்வது" என்றது மயிலை. கலவம் - கலாபம்; தோகையை பொழிலிடத்தே கண்டான் ஆகலின், "பொழிலின் நிழலில் வாழ்வது ஓர் மயிலை ஒத்தவர்" என்றான். தனது நன்கு மதிக்கற்பாடு, தோன்ற, ஒருத்தியையே பலவிடத்தும் பன்மைச் சொல்லாற் கூறினான். 'குயில் எனக் கருதும் மொழி' என்க. கடை நெடியவிழி என்றது குழை அளவும் சொல்லும் விழி என்றவாறு. இலவு - இலவங்காய். இன், உவம உருபு. "அழகியார்" எனச் சினைவினை முதல்மேல் ஏற்றப்பட்டது. "வடிவினார்" என்பதும் அது. 'ஆறு சென்ற வியர்' என்பதில் பெயரெச்சம் காரணப் பொருட்டாய் நின்று காரியப் பெயர் கொண்டாற்போல, இங்கு, "எழுதும் அருமை" என்பதில் பெயரெச்சம் பண்பிப் பொருட்டாய் நின்று, பண்புப் பெயர் கொண்டது. ஆழிய புலவு கமழ் - ஆழமுள்ள முடை நாற்றம் வீசுகின்ற.*

*833. **குறிப்புரை :** இதனுள் "உளர்தரும்" என்பது முதல் "எட்டாய்" என்பது முடிய உள்ள பகுதி சிவபெருமானது அருமை கூறியது. 'அத்துணை*

கனவிலும் நவிற்றும் காதலேம் வினைகெடக்
கேட்பதும் நின்பெருங் கீர்த்தி மீட்பது
நின்னெறி அல்லாப் புன்னெறி படர்ந்த
மதியில் நெஞ்சத்தை வரைந்து நிதியென
அருத்திசெய் திடுவ துருத்திர சாதனம்

காலையும் மாலையும் கால்பெயர்த் திடுவதுன்
ஆலயம் வலம்வரு தற்கே சால்பினில்
கைகொடு குயிற்றுவ தைய நின்னது
கோயில் பல்பணி குறித்தே ஓயாது
உருகி நின்னினைந் தருவி சோரக்

கண்ணிற் காண்பதெவ் வுலகினும் காண்பனவெல்லாம்
நீயே யாகி நின்றதோர் நிலையே நாயேன்
தலைகொடு சார்வதுன் சரண்வழி அல்லால்
அலைகடல் பிறழினும் அடாதே அதனால்
பொய்த்தவ வேடர் கைத்தகப் படுத்தற்கு

வஞ்சச் சொல்லின் வார்வலை போக்கிச்
சமயப் படுகுழி சமைத்தாங் கமைவயின்
மானுட மாக்களை வலியப் புகுத்தும்
ஆனா விரதத் தகப்படுத் தாழ்த்தும்
வளைவுணர் வெனக்கு வருமோ உளர்தரு

நுரையுந் திரையும் நொப்புறு கொட்பும்
வரையில் சீகர வாரியும் குரைகுடல்
பெருத்தும் சிறுத்தும் பிறங்குவ தோன்றி
எண்ணில வாகி இருங்கடல் அடங்கும்
தன்மை போலச் சராசரம் அனைத்தும்

---

*அரியனாகிய நீ எளியனாய்த் தில்லை அம்பலத்தில் ஆடுகின்றாய்' என்றார். அதனால், "உளர் தரும்" என்பது முதல் இறுதி முடிய உள்ள பகுதி முதற்கண் கூட்டி உரைக்கற் பாலதாயிற்று. அதனுடன், "அத்த, ஐய" என்பவற்றையும் முதலிற் கொள்க. பின்பு, "வழி வழி வந்த மரபினம்" எனக் கூறுவதால், "புதிதின் 'ஆள்' என வந்து அடைந்திலம்" என்றது தம் முன்னோரையும் உளப்படுத்துத் தம் மரபு நிலை கூறியதேயாயிற்று. இதனால், அடிகள் வழி வழிச் சைவராதல் விளங்கும். இத்தகையோரையே 'பழவடியார்' என்பர். தம் காலத்தில் சைவராகின்றவர், 'புத்தடியார்' ஆவர். தம் பழமையை அடிகள் பின்னரும்*

நின்னிடைத் தோன்றி நின்னிடை அடங்கும்நீ
ஒன்றினும் தோன்றாய் ஒன்றினும் அடங்காய்
வானோர்க் கரியாய் மறைகளுக் கெட்டாய்
நான்மறை யாளர் நடுவுபுக் கடங்கிச்
செம்பொன் தில்லை மூதூர்
அம்பலத் தாடும் உம்பர்நா யகனே. 24

*தொடர்ந்து விளக்குதல் காண்க. தாளின் ஏவல் - காலால் ஏவிய பணி. ஏவல் ஏவப் பட்டதனைக் குறித்தலால் ஆகுபெயர். "சிந்தையிற் கிடத்தி" என்பதை, "மொழிவது" என்பதன்பின் கூட்டுக. 'நாள்தோறும் பழகி நனவேபோலக் கனவிலும் நவிற்றும் காதலெம்' எனக் கூட்டுக.*

*துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்*
*நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்[1]*

*என்று அருளிச் செய்தது இந்நிலையையேயாம். தொழிற் பெயர் எழுவாயாய் நிற்கும் பொழுது தொழில் முதல் நிலைகள் பயனிலையாய் வருதல் உண்டு. அதனை அம்முதனிலைப் பொருளவாய உருபுகளை ஏற்ற பெயர்களும் பயனிலைகளாடிய வரும். அவ்வாற்றால் "நெஞ்சத்தை" என்பது போல ஏனைய "அஞ்செழுத்தவை கீர்த்தி, சாதனம், நிலை" என்பவற்றிலும் இரண்டாவது விரிக்க. கேட்டது. "மொழிவது, செய்திடுவது, காண்பது" என்பன தொழிற் பெயர்கள். நவிற்றுதலுக்கு அவற்றை என்னும் செயப்படுபொருள் வருவித்து அதனை வேறு தொடராக்குக. 'வரைந்து மீட்பது' என மேலே காட்டுக. அருத்தி - விருப்பம். சால்பு - பெருமை. குயிற்றுதல் - செய்தல்.*

*சாதனம் - மணி. குயிற்றுவது - செய்வது. 'பணியாதல் குறித்தே' என ஆக்கம் வருவிக்க. சரண் வழி - திருவடிகளை அடையும் வழி. "காப்பின் ஒப்பின்"[2] என்னும் சூத்திரத்துள் "செலவின்" என்பதும் கூறப்பட்டமையால் வழி என்பதும் இரண்டாவதன் தொகையாம். அல்லால் என்பதற்கு முன்னே இவை என்பதும் பின்னை 'பிறிது' என்பதும் வருவித்து, 'இவையல்லால் அடாது' என்க. அடாது - வந்து பொருந்தாது. ஏகாரம் தேற்றம். 'தம் கைத்தாக அகப்படுத்தற்கு' என, 'தம்' என்பதும், ஆக்கமும் வருவிக்க. "வேடர்" என்பது, 'வேடம் உடையவர், வேடர்' என இரட்டுற மொழிய நின்றது. கைத்து - கைப்பொருள். "சொல்லின் வலை, சமயப் படுகுழி" என்பன உருவகங்கள்.*

1. *திருமுறை - 3.22.1.*
2. *தொல் - சொல் - வேற்றுமையியல்*

### *வெண்பா*

834. நாயனைய என்னைப் பொருட்படுத்தி நன்களித்துத்
தாயனைய னாயருளும் தம்பிரான் – தூயவிரை
மென்துழாய் மாலொடயன் தேட வியன்தில்லை
மன்றுளே ஆடும் மணி. 25

### *கட்டளைக் கலித்துறை*

835. மணிவாய் முகிழ்ப்பத் திருமுகம் வேர்ப்பஅம் மன்றுக்கெல்லாம்
அணிவாய் அருள்நடம் ஆடும் பிரானை அடைந்துருகிப்
பணியாய் புலன்வழி போம்நெஞ்ச மேயினிப் பையப்பையப்
பிணியாய்க் கடைவழி சாதியெல் லோரும் பிணமென்னவே. 26

---

*இன், வேண்டாவழிச் சாரியை. படுகுழி, வீழ்ந்தழியும் குழி. அமைவயின் - வாய்ப்பு நேரும்பொழுது. "மானுட மாக்கள்" என்பதும் உருவகம். "வலியப் புகுத்தும் விரதம்" என்றமையால் மேல், "சமயம்" எனப்பட்டன. சமணமும், மீமாஞ்சமும் ஆயின. இவற்றுள் மீமாஞ்சக மதம், "கங்கை ஆடில் என்! காவிரி ஆடில் என்!"[1] எனத் தொடங்கும் திருப்பதிகத்துள்ளும். "விரதமே பரமாக வேதியரும் சரதமாகவே சாத்திரங் காட்டினார்"[2] எனத் திருவாசகத்துள்ளும்,*

> *ஆதிமறை ஓதி, அதன்பயன்ஒன் றும் அறியா*
> *வேதியர்சொல் மெய்யென்று மேவாதே*[3]

*எனச் சாத்திரத்துள்ளும் விலக்கப்பட்டமை காண்க. வளைவுணர்வு - கோணலான அறிவு. ஓகாரம். எதிர்மறை. இதனுள் "நுரையும், திரையும்" என்பது முதலாகப் போந்த அடிகளைச் சிவஞானபோதத்து இரண்டாம் சூத்திர மாபாடியத்துள் பிரம முதற்காரணவாத மறுப்பில் எடுத்துக் காட்டி இதன் உண்மைப் பொருளைத் தெளிவுபடுத்தியிருத்தல் காண்க. நொப்புறு கொட்பு - கலங்களை யுடைய சுழல். வரையின் சீகரம் - மலைபோன்ற அலைகள். வாரி. சங்கு முதலியன வருவாய். குரை - ஒலிக்கின்ற.*

***834. குறிப்புரை :*** *'மாலும், அயனும் தேடிக் காணா ராயினும் மன்றுளே ஆடுகின்றான்' என்றபடி. 'தம் பிரான்' என்பது 'தமக்குப் பிரான்' என்னும் பொருளதாயினும் இங்கு பொதுப்படத் 'தலைவன்' என்னும் அளவாய் நின்றது. 'மணி, என்னை அளித்து அருளும் தலைவன்' என முடிக்க. அளித்து - காத்து. வியன் - பெருமை. மன்று - பொன்னம்பலம்.*

---

1. *திருமுறை - 5.*
2. *போற்றித் திருஅகவல் - 50, 51*
3. *நெஞ்சுவிடு தூது - கண்ணி - 116.*

### *விருத்தம்*

836. என்நாம் இனிமட வரலாய் செய்குவ
தினமாய் வண்டுகள் மலர்கிண்டித்
தென்னா எனமுரல் பொழில்சூழ் தில்லையுள்
அரனார் திருமுடி அணிதாமம்
தன்னா லல்லது தீரா தென்னிடர்
தகையா துயிர்கரு முகிலேறி
மின்னா நின்றது துளிவா டையும்வர
வீசா நின்றது பேசாயே. 27

### *அகவற்பா*

837. பேசு வாழி பேசு வாழி
ஆசையொடு மயங்கி மாசுறு மனமே
பேசு வாழி பேசு வாழி
கண்டன மறையும் உண்டன மலமாம்
பூசின மாசாம் புணர்ந்தன பிரியும்

நிறைந்தன குறையும் உயர்ந்தன பணியும்
பிறந்தன இறக்கும் பெரியன சிறுக்கும்
ஒன்றொன் றொருவழி நில்லா வன்றியும்
செல்வமொடு பிறந்தோர் தேசொடு திகழ்ந்தோர்
கல்வியிற் சிறந்தோர் கடுந்திறல் மிகுந்தோர்.

---

*835. **குறிப்புரை :** முகிழ்ப்ப - முறுவல் சிறிதே அரும்ப. புலன் வழிப் போம் - ஐம்புல வழியினின்றும் நீங்கு, கடை வழி - இறுதிக் காலத்தில் பிணம் என்ன - முன்பு சொன்ன பெயராலே சுட்டாமல், பிணம் என்னும் பெயராலே சுட்டும்படி. சாதி - சாவாய்.*

*836. **குறிப்புரை :** 'மடவரலாய், கருமுகில் ஏறிமின்னா நின்றது; துனி வாடையும் வர வீசாநின்றது; அரனார் திருமுடி அணி தாமந்தன்னாலல்லது என் இடர் தீராது; உயிர் தகையாது; (அவரோ அதைத் தருவதாய் இல்லை) இனி நாம் என் செய்குவது பேசாய்' என இயைத்துக் கொள்க. இது, பருவம் கண்டு ஆற்றாளாய கைக்கிளைத் தலைவி தூது விடக் கருதித் தோழியை நோக்கிக் கூறியது. "மடவரலாய்" என்றது தோழியை. தகையாது - தகைக்க (தடுக்க)ப்படாது. துனி வாடை - துன்பம் தருகின்ற வாடைக் காற்று.*

*837. **குறிப்புரை :** இதனுள் முதல் மூன்று அடிகள் இரட்டைத் தொடை. இடையே ஒருதொடர் மடுக்கப்பட்டமையால் அடுக்கு இசைநிறையாகாது*

கொடையிற் பொலிந்தோர் படையிற் பயின்றோர்
குலத்தின் உயர்ந்தோர் நலத்தினின் வந்தோர்
எனையர் எங்குலத்தினர் இறந்தோர் ஏனையவர்
பேரும் நின்றில போலுந் தேரின்
நீயுமஃ தறிதி யன்றே மாயப்

பேய்த்தேர் போன்றும் நீப்பரும் உறக்கத்துக்
கனவே போன்றும் நனவுப்பெயர் பெற்ற
மாய வாழ்க்கையை மதித்துக் காயத்தைக்
கல்லினும் வலிதாக் கருதிப் பொல்லாத்
தன்மையர் இழிவு சார்ந்தனை நீயும்

நன்மையில் திரிந்த புன்மையை யாதலின்
அழுக்குடைப் புலன்வழி இழுக்கத்தின் ஒழுகி
வளைவாய்த் தூண்டிலின் உள்ளிரை விழுங்கும்
பன்மீன் போலவும்
மின்னுபு விளக்கத்து விட்டில் போலவும்

ஆசையாம் பரிசத் தியானை போலவும்
ஓசையின் விளிந்த புள்ளுப் போலவும்
வீசிய மணத்தின் வண்டு போலவும்
உறுவ துணராது செறுவுழிச் சேர்ந்தனை
நுண்ணூல் நூற்றுத் தன்னகப் படுக்கும்

அறிவில் கீடத்து நுந்துழி போல
ஆசைச் சங்கிலிப் பாசத் தொடர்ப்பட்டு
இடர்கெழு மனத்தினோ டியற்றுவ தறியாது
குடர்கெழு சிறையறைக்(கு) உறங்குபு கிடத்தி
கறவை நினைந்த கன்றென இரங்கி

மறவா மனத்து மாசறும் அடியார்க்(கு)
அருள்சுரந் தளிக்கும் அற்புதக் கூத்தனை
மறையவர் தில்லை மன்று ளாடும்
இறையவன் என்கிலை என்நினைந் தனையே. 28

---

*பொருள் நிலையாய், வலிசெய்தற் பொருட்டாயிற்று. "வாழி" என்பன அசை. இவைகளை இறுதியிற் கூட்டியுரைக்க. நான்காவது முதல் ஏழு முடிய உள்ள அடிகளில், காலம் காரணமாகப் பொருள்கள் மிக விரைவில் நேர் மாறான*

*நிலைகளை அடைதல் கூறும் முகத்தால் அவற்றது நிலையாமை விளக்கப்பட்டது. ஒன்று ஒன்று - அது அது. இதில் முற்றும்மை தொகுக்கப்பட்டது. ஒரு வழி - ஒரு நிலையில். "அது அது" எனப்பட்டவை அனைத்தும் தொக்குப் பன்மையாதலின் "நில்லா" என்றார். "பிறந்தோர், திகழ்ந்தோர்" முதலிய எட்டிலும் "ஆகியும்" என்பதை விரித்து அவைகளை "இறந்தோர்" என்பதோடு முடித்து, 'இறந்தோராகிய எம் குலத்தினர் எனையர்!' என்க. தேசு - புகழ். நலத்தினின் வந்தோர் - நல்லொழுக்கத்தில் பொருந்தினோர். எனையர் - எத்துணையர்! என்றது, 'எண்ணிலர்' என்றபடி. "தேரின்" என்பதை, "அனையவர்" என்பதற்கு முன்னே கூட்டுக. "பேரும்" என்னும் உம்மை இழிவு சிறப்பு. "போலும்" என்பது உரையசை. உலகர் பலரையும் குறியாது, "எம் குலத்தினர்" என்றார். தாம் நன்குணர்ந்தமையைக் குறித்தற்கு. "நீயும் அஃது அறிந்தனை யன்றே" என்றது. 'அறிந்தும் இழிவு சார்ந்தனை' என அதன் மடமையை உணர்த்தற்கு. ஆகவே, அவ்விடத்து, 'அறிந்தும்' என்பது வருவிக்க. பேய்த் தேர் - கானல். "நனவுப் பெயர் பெற்ற" என்றது, 'அப்பெயர் நீடு நில்லாதது' என்றற்கு. மாயம் - கடிதின்மறைவது. 'பொல்லாத தன்மையரது இழிவினை நீயும் சார்ந்தனை, என்க. "இழிவு" என்பது அதனை உடைய செயலை உணர்த்தலின் ஆகுபெயர். "சார்ந்தனை" என்பதன்பின், 'அதனால்' என்பது வருவிக்க. ஆதலின் - ஆகிவிட்டமையால். இழுக்கம் - சகதி 'புலன்வழியாகிய இழுக்கம்' என்க. ஒழுகி - நடந்து தூண்டிலில் உள்ள இரையை விரும்பிச் சென்று இறக்கின்ற மீன் 'சுவை' என்னும் புலனால் கெடுதற்கும், விளக்கு ஒளியை 'இரை' என ஓடி வீழ்ந்து இறக்கும் விட்டில் 'ஒளி' என்னும் புலனால் கெடுதற்கும், நீரில் மூழ்கும் யானை அதனின்றும் கரையேறாது அதனாலே மயங்கி வந்து வலையில் விழும் என்பர் ஆதலின் அஃது 'ஊறு' என்னும் புலனால் கெடுதற்கும், 'இது வேடர்கள் வஞ்சனையால் இசைக்கும் இசையால் மயங்கி வந்து வலையில் விழும்' என்பர் ஆதலின் இஃது 'ஓசை' என்னும் புனலால் கெடுதற்கும், பூக்களின் மணத்தை நுகரச் சென்று அவற்றினுள் வீழ்கின்ற வண்டுகள் அம்மலர்கள் குவிந்த பொழுது உள்ளே கிடந்து இறத்தலின் அவை 'நாற்றம்' என்னும் புலனால் கெடுதற்கும் உவமையாயின. 'அசுணம் விலங்கு' என்பாரும், 'வண்டுகள் மலர்த்தேனில் வீழ்ந்து இறத்தல் பற்றிச் சொல்லப்படுவது' என்பாரும் உளர். விளக்கம் - விளங்கல். ஆகுபெயராய் அதனையுடைய விளக்கைக் குறித்தது. செறு உழி - கொல்லும் இடம். தன் அகப்படுத்தல் - தன்னையே தான் கட்டுக்குள் அகப்படுத்திக் கொள்ளுதல். 'உலண்டு' என்னும் பூச்சி தனது வாய் நூலால் தன்னையே தான் சுற்றிக் கொள்ளும் என்பது சங்க இலக்கியங்களில் சொல்லப்படுவது. "கீடம்" என்பது புழுவாயினும் இங்கு அது பூச்சியையே குறித்தது. "நுந்துழி" என்பதும் அவ்வுலண்டிற்கு ஒரு பெயர்*

### *வெண்பா*

838. நினையார் மெலியார் நிறையழியார் வாளாப்
புனைவார்க்குக் கொன்றை பொதுவோ – அனைவீரும்
மெச்சியே காண வியன்தில்லை யானருளென்
பிச்சியே நாளைப் பெறும். 29

### *கட்டளைக் கலித்துறை*

839. பெறுகின்ற எண்ணிலித்தாயரும் பேறுறும் யானுமென்னை
உறுகின்ற துன்பங்க ளாயிர கோடியும் ஒய்வொடுஞ்சென்(று)
இறுகின்ற நாள்களு மாகிக் கிடந்த இடுக்கணெல்லாம்
அறுகின் றனதில்லை யாளுடை யான்செம்பொன் னம்பலத்தே. 30

### *விருத்தம்*

840. அம்பலவர் அங்கணர் அடைந்தவர் தமக்கே
அன்புடையர் என்னுமிதென் ஆனையை யுரித்தே
கம்பலம் உவந்தருளு வீர்மதனன் வேவக்
கண்டருளு வீர்பெரிய காதலறி யாதே

---

*போலும். குடர் கெழு சிறை - தாயின் கருப்பை சிறைக்கு - சிறைக்கண். வேற்றுமை மயக்கம். உறங்குபு கிடத்தி - உறங்கிக் கிடக்கின்றாய். ‘ஆயினும் - இறையவன் - என்கிலை; அஃதொழிந்து, அவ் இறைவனைப் பேசு’ என முடிக்க.*

***838. குறிப்புரை :*** *பிச்சி - பித்தி; பித்துக்கொண்டவள். அஃதாவது, ‘காதல் மீதூர்வால் இடையறாது நினைந்தும், அதனால் உடல் மெலிந்தும், நிறையழிந்தும் நிற்பவள். தில்லைப் பெருமான் அனைவர் நிலையையும் நன்கு அறிந்து அவரவர் நிலைக்கு ஏற்ப அருள்புரிபவன் ஆகலின் அவனது அருளை இவளே பெறுவாள்; அஃதாவது, அவன் தனது கொன்றை மாலையை இவளுக்கே தருவான். ஆகையால், இவளைப் போல அன்பில்லாதவர்கள் பலர் அவனது கொன்றை மாலையை விரும்புதற்கு அஃது என்ன, அன்பருக்கின்றி எல்லார்க்கும் பொதுவோ’ என ஒருத்தியைத் தலைவியாகக் கொண்ட தோழி பிற மகளிரைக் காமக் கிழத்தியராக வைத்து இகழ்ந்தாள். இதன் உள்ளுறை, ‘அன்பர் அல்லார்க்குத் தில்லைப் பெருமானது அருள் கிட்டாது’ என்பதாம்.*

***839. குறிப்புரை :*** *பெறுகின்ற தாயர் - வரும் பிறப்புக்களில் என்னைப் பெற்றெடுக்க இருக்கின்ற தாய்மார்கள். பேறு உறும் யான் - அவர்கள் பெறும் பேறாக அவர்களை அடைகின்ற யான். ஒய்வு - துடிப்புக்களெல்லாம்*

வம்பலர் நிறைந்துவசை பேசவொரு மாடே
வாடையுயிர் ஈரமணி மாமையும் இழந்தென்
கொம்(பு)அல மருந்தகைமை கண்டுதக வின்றிக்
கொன்றையரு ளீர்கொடியிர் என்றருளு வீரே. 31

*அகவற்பா*

841. அருளு வாழி அருளு வாழி
புரிசடைக் கடவுள் அருளு வாழி
தோன்றுழித் தோன்றி நிலைதவக் கரக்கும்
புற்புதச் செவ்வியின் மக்கள் யாக்கைக்கு
நினைப்பினுங் கடிதே இளமை நீக்கம்

அதனினுங் கடிதே மூப்பின் தொடர்ச்சி
அதனினுங் கடிதே கதுமென மரணம்
வாணாள் பருகி உடம்பை வறிதாக்கி
நாணாள் பயின்ற நல்காக் கூற்றம்
இனைய தன்மைய திதுவே யிதனை.

---

*அடங்குதல். இறுகின்ற நாள்கள் - இறக்கின்ற நாள்கள். இவைகள் யாவும் துன்பங்களாய். நான் தில்லையம்பலத்திலே சென்று கூத்தப் பெருமானைக் கண்டு தொழுகின்ற இந்த நேரத்திலே அடியோடு ஒருங்கு நீங்குகின்றன. ''தாயர்'' என்னும் உயர்திணையும், ''யான்'' என்னும் தன்மையும் இடுக்கண்களாய் அடங்கினமையால், "அறுகின்றன" என்பதிலே முடிந்தன.*

***840. குறிப்புரை :*** *இது கைக்கிளையாதலின் செவிலி தலைவனை மாலை யிரத்தலாய் வந்தது. 'தில்லைக் கூத்தரே' என்பதை முதலில் வருவித்து, 'நீர் ஆனையை உரித்து அதன் தோலைக் கமலமாகப் போர்த்துக் கொண்டு மகிழ்ச்சி யடைந்தீர்; மன்மதன் எரிந்தொழியப் பார்த்தீர்; இவளது காதலின் இயல்பு அறியாமல் வம்பலர் (பிறரைத் தூற்றும் இயல்புடையோர்) நிறைந்து (தெருவில் கூடிக் கொண்டு) வசை பேசவும், மாடே (ஒருபக்கம்) வாடைக் காற்று இவளுடைய உயிரை வாங்கவும், அழகையும் இழந்து வருந்துகின்ற இவளது நிலையைக் கண்டு இரக்கம் இல்லாமல், கொன்றைமாலையை 'தாரேன்' என்கின்றீர். அதற்குமேல் எங்களை, 'நீவிர் கொடியீர்' என வைகின்றீர். உம்மை அறிஞர்கள் - யாவரும் எளிதில் அடைய அம்பலத்திலே நிற்கின்றார் - என்றும், அம்கணர் (கருணை மிகுந்தவர்) - என்றும், தம்மைச் சார்ந்தவர்களிடத்திலே அன்பு செய்பவர் - என்றும் இவ்வாறெல்லாம் புகழ்கின்றது என்னோ!' என உரைக்க. இதுவும் பழித்ததுபோலப் புகழ்ந்தது*

"கொடியீர்" என்பது சிலேடை. கம்பலம் - போர்வை. மதனன் - காமம். ஒரு மாடு - ஒரு பக்கம்.

*841. குறிப்புரை :* "வேய்முதிர்... ஆதிவானவனே" என்னும் பகுதியை முதலிலும், அதனை அடுத்து, "புரிசடைக் கடவுள், பெரும்" என்பவற்றையும் வைத்து, "அருளு வாழி" என்பவற்றை இறுதியிற் கூட்டி யுரைக்க. புரிசடை - முறுக்கிய சடை. வேய் - மூங்கில். புல்லென - 'கயிலை பொலிவிழக்கும்படியும், ஒளி எறிக்கின்ற வானகம் வெறுமை யாகும்படியும், இவ்வுலகம் உய்யும்படியும் அம்பலம் பொலியும்படியும் அருநடம் குயிற்றும் என்க. குயிற்றும் - செய்கின்ற. ஆதி வானவன் - முதற் கடவுள். "புரிசடைக் கடவுள்" என்பதும் விளி. 'பருகியபின்' என்பது, 'பருகி' எனத் திரிந்து நின்றது. வாழ்நாள் முடிவைக் குறிக்கொண்டு நோக்கி வருதல் பற்றிக் கூற்றுவனை வாழ்நாளைப் பருகுவோனாகக் கூறினார். "கூற்றம் அளந்து நும் நாள் உண்ணும்"* எனப் பிறவிடத்தும் கூறப்பட்டது. "உடம்பை வறிதாக்கி" என்றது, 'உயிரைப் பிரித்தெடுத்து' என்றபடி. நாள்நாள் - பல நாளும். பயிலுதல் - அத் தொழிலையே செய்தல். நல்குதல் - இரங்குதல். 'வறிதாக்கிப் பயின்ற கூற்றம்' என்க. "இனைய தன்மையது" என்றது, 'இதன் இயல்பு இது ஆதலின் அஃது ஒருவராலும் மாற்றப்படாது' என்றபடி. "கூற்றமாகிய இது இனைய தன்மையதே" என மாற்றிக் கொள்க. மரணத்தின் இயல்பை விளக்குதற்கு, இடையே கூற்றத்தின் இயல்பு கூறினார் ஆகலின். பின்னர், "இதனை" என்றது, முன்னர்க் கூறிவந்த மக்கள் யாக்கையே யாயிற்று. "நன்று, தீது" என்பன ஓர் இனத்துப் பல பொருள்கள் மேல் தனித்தனிச் சென்று, பன்மையொருமை மயக்கமாய் வந்தன. ஒன்றினும் படாது வருவன, துரும்பு கிள்ளுதல். வாளாமுகம், முடி, கால் முதலியவைகளைத் தடவல் போல்வன. இவைகளை, 'நினையாது செய்வன' என்பர். 'என்ற' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. களித்தலும், கலுழ்தலும் விருப்பு வெறுப்புக்களைக் குறிக்க. "களிப்ப, கலுழ்ப" என்பன. அவ்வச் செயப்படு பொருள்மேல் நின்றன. 'ஒன்று ஒன்றாக என ஆக்கம் விரிக்க. எதிர் காலப் பொருளவாய 'உணர' என்னும் எச்சங்கள் "உணர்வுழி" எனத் திரிந்து நின்றன. ஒன்று ஒன்றாக - தனித் தனியாக. ஒன்றாக - ஒரு தொகுதியாக. தெளிவுழி - ஆராயும் பொழுது. 'தெரிவுழி' எனப் பாடம் ஓதுதல் சிறக்கும். தேறல் செல்லேம் - தெளிய மாட்டேம். மற்று, அசை 'இதுவே மனத்தின் செய்கை' என்க. "செய்கை" என்றது தன்மையை. 'வினைகள் வந்து பயன் தரும் முறைமைகளை யெல்லாம் அறியும் ஆற்றல் மனித மனத்திற்கு இல்லை' என்றபடி. அளிய - எளிய 'மனத்தின் தன்மை இதுவாக. உனது இயல்பை நோக்கும் பொழுது, நீயும் யாராலும் அறிதற்கு மிக அரியை'

* நாலடியார் - 7.

எனதெனக் கருதி இதற்கென்று தொடங்கிச்
செய்தன சிலவே செய்வன சிலவே
செய்யா நிற்பன சிலவே யவற்றிடை
நன்றென்ப சிலவே தீதென்ப சிலவே
ஒன்றினும் படாதன சிலவே யென்றிவை

கணத்திடை நினைந்து களிப்பவுங் கலுழ்பவும்
கணக்கில் கோடித் தொகுதி அவைதாம்
ஒன்றொன் றுணர்வுழி வருமோ வனைத்தும்
ஒன்றா உணர்வுழி வருமோ என்றொன்று
தெளிவுழித் தேறல் செல்லேம் அளிய

மனத்தின் செய்கை மற்றிதுவே நீயே
அரியை சாலவெம் பெரும தெரிவுறில்
உண்டாய்த் தோன்றுவ யாவையும் நீயே
கண்டனை அவைநினைக் காணா அதுதான்
நின்வயின் மறைத்தோ யல்லை யுன்னை

மாயாய் மன்னினை நீயே வாழி
மன்னியுஞ் சிறுமையிற் கரந்தோ யல்லை
பெருமையிற் பெரியோய் பெயர்த்தும் நீயே
பெருகியுஞ் சேணிடை நின்றோ யல்லை
தேர்வோர்க்குத் தம்மினும் அணியை நீயே.

நண்ணியும் நீயொன்றின் மறைந்தோ யல்லை
இடையிட்டு நின்னை மறைப்பது மில்லை
மறைப்பினும் அதுவும்
நீயே யாகி நின்றதோர் நிலையே, அஃதான்று
நினைப்பருங் காட்சி நின்னிலை யிதுவே

நினைப்புறுங் காட்சி எம்நிலை யதுவே
இனிநனி இரப்பதொன் றுடையன் மனமருண்டு
புன்மையின் திளைத்துப் புலன்வழி நடப்பினும்
நின்வயின் நினைந்தே னாகுதல் நின்வயின்
நினைக்குமா நினைக்கப் பெறுதல் அனைத்தொன்றும்

நீயே அருளல் வேண்டும் வேய்முதிர்
கயிலை புல்லென எறிவிசும்பு வறிதாக
இம்ப ருய்ய அம்பலம் பொலியத்
திருவளர் தில்லை மூதூர்
அருநடங் குயிற்றும் ஆதிவா னவனே. 32

### *வெண்பா*

842. வானோர் பணிய மணியா சனத்திருக்கும்
ஆனாத செல்வத் தரசன்றே – மாநாகம்
பந்திப்பார் நின்றாடும் பைம்பொன்னின் அம்பலத்தே
வந்திப்பார் வேண்டாத வாழ்வு. 33

### *கட்டளைக் கலித்துறை*

843. வாழ்வாக வும்தங்கள் வைப்பாக வும்மறை யோர்வணங்க
ஆள்வாய் திருத்தில்லை அம்பலத் தாயுன்னை அன்றியொன்றைத்

---

*என்பதாம். "உண்டு" என்பது உண்மைத்தன்மையைக் குறித்தது. "யாவையும்" என்பதில் 'யாவற்றையும்' என இரண்டாவது விரிக்க. "கண்டனை" என்பதன் பின், 'ஆயினும்' என்பது வருவிக்க. "அது" என்றது அதன் காரணத்தை. 'அவை நின்னைக் காணாமை, அங்ஙனம் அவற்றின் கண்களை நீ மறைத்ததனாலன்று; இனி, நீ தானும் மாயாய் - மறைந்திலை. மன்னினை - வெளிப்பட்டே நிற்கின்றாய். வாழி, அசை. "மன்னியும்" என்னும் உம்மை. 'மன்னியதன்மேலும்' என எதிரது தழுவி நின்றது. சிறுமையிற் கரந்தோய் அல்லை - சிறியதினும் சிறியதாய் மறைத்து நிற்றல். மட்டும் அன்று பெயர்த்தும் - மாறாக பெருமையிற் பெரியோய் நீயே. பெருமை - பெரியது; ஆகுபெயர். பெருகியும் - அவ்வாறு. பெரிதாயினாயேனும் சேணிடை நின்றோய் அல்லை. மிக உயரத்திலே நீ இருக்கவில்லை. தேர்வோர்க்கு - உன்னைத் தேடுபவர்கட்கு. தம்மினும் நீ அணியையே - அவரினும் பார்க்க நீ அண்மையில் உள்ளவனே. அவர்கள் உயிரினுள் நிற்பவன். (ஆயினும் அவர்கள் உன்னைக் காணாமல் தேடுகின்றனர் ஆயினும்) நீ ஒன்றில் மறைந்து நிற்க வில்லை. உன்னைப் புலப்பட ஒட்டாது மறைப்பதொரு பொருளும் இல்லை. இருப்பதாயின், அதுவும் நீயே ஆகின்ற நிலைமையை உடையாய். நினைவைக் கடந்த தோற்றத்தையுடைய உனது நிலைமை இது. ஆயினும், நினைவையே உடையேனாகிய எனது நிலைமை இது. அஃதாவது நீ எத்துணை எளியனாய் இருப்பினும் உன்னைக் காணாமல் இருப்பதேயாகும். அதனால் உன்னிடத்தில் யான் இரந்து கேட்பது ஒன்றை உடையேன். அஃது யாது எனின், நான் எந்தச் செயலைச் செய்தாலும் (அவை உன்னைவிட்டுத் தனியே இல்லாமையால்) உன்னையே நினைத்துச் செய்தனவாகக் கொள்ளுதலாகிய நினைப்பை நீ கொள்ளப் பெறுதலாம். அன்னதொரு வரத்தை நீ எனக்கு அருளல் வேண்டும். அருளு! அருளு!! அருளு!!! என முடிக்க. "வாழி" என்பன அசைகள். "தோன்றுழி" என்பதில் "உழி" காலம் உணர்த்தி நின்றது. தவ - கெட. 'கறங்கும்' என்பது பாடம் அன்று. புற்புதம் - நீர்க்குமிழி 'உன்னை*

மறைப்பதொரு பொருள் இருக்குமாயின் அதுவும் நீயே' என்றது. திரோதான சத்தியாய் நின்று மறைத்தல் பற்றி.

**842. குறிப்புரை :** "அன்றே" என்னும் தேற்றச் சொல்லை இறுதிக்கண் கூட்டுக. செல்வம், இந்திர பதவிச் செல்வம். பந்தித்தல் - கைகள். கழுத்து, வயிறு இவைகளைச் சுற்றிக் கட்டுதல். வேண்டாத - விரும்பாத. விரும்பாமைக்குக் காரணம், நிலையாமையும், துன்பமும் மயக்கமும் நிறைந் திருத்தலுமாகும்.

**843. குறிப்புரை :** "மறையோர், தங்கள்" என்பவற்றை முதலிற் கூட்டுக. மறையோர், தில்லைவாழந்தணர். "ஆள்வாய், அம்பலத்தாய்" என்பன விளிகள். வைப்பு - சேம நிதி. 'உன்னையன்றி ஒரு தெய்வத்தை வணங்குபவர். தெய்வமாகக் கொண்டு வணங்குவது. நீ நஞ்சினை உண்ணாதிருப்பின் அன்றே இறந்து போயிருப்பாரையன்றோ? அதனை அவர் அறியார்' என இயைத்து முடிக்க.

ஆரணி துங்கன், நாரணி பங்கன், அருணேசன்
தாரணி அஞ்சும் காரண நஞ்சம் தரியானேல்,
வாரணர் எங்கே, சாரணர் எங்கே, மலர்மேவும்
பூரணர் எங்கே, நாரணர் எங்கே போவாரே*

என்றார் சைவ எல்லப்ப நாவலர். அசைவைக் குறிப்பதாகிய "சடிலம்" என்பது முன்னர் அலைகளையும், பின்னர் அவற்றையுடைய கடலையும் குறித்தலால் இருமடி யாகுபெயர்.

**844. குறிப்புரை :** இது கைக்கிளைத் தலைவிதன் தோழி ஆயத்தாரை முன்னிலைப்படுத்தி வெறிவிலக்கியது.

வணங்கும் - துவள்கின்ற. வல்லி - கொடி. வறிது - காரணம் இல்லாமல். 'இவள் உணங்கி மெலிய' என மாற்றுக. தான், உம் அசைகள். உணங்குதல் வற்றுதல். மெலிதல் - வலிமை குன்றுதல். இடர்க்கு, துன்பத்திற்கு உறுதுணையாக. ஊதை - வாடைக் காற்று. எரி தூவுதல் - வெப்பத்தைத் தருதல் "மெலியப் பெறும், உலவப் பெறும்" என்பன அவ்வத் தொழிலை உடையளாதலையும், உடைத்தாதலையும் குறித்தன. அடுத்து - இவைகளைச் சார்ந்து "சடை அரவோடு பிணங்கி ஆடும்படி நடனம் ஆடுகின்ற பித்தர், பித்தர்" எனப் பிதற்றுகின்றாள். 'அப்படிப் பிதற்றக் கேட்டும் உங்கள்

* அருணைக் கலம்பகம்

தாழ்வார் அறியார் சடிலநஞ் சுண்டிலை யாகிலன்றே
மாள்வார் சிலரையன் றோதெய்வ மாக வணங்குவதே. 34

### *விருத்தம்*

844. வணங்குமிடை யீர்வறிது வல்லியிடை யாள்மேல்
மாரசர மாரிபொழி யப்பெறு மனத்தோ
டுணங்கியிவள் தானுமெலி யப்பெறும் இடர்க்கே
ஊதையெரி தூவியுல வப்பெறும் அடுத்தே
பிணங்கியர வோடுசடை ஆடநட மாடும்
பித்தரென வும்மிதயம் இத்தனையும் ஓரீர்
அணங்குவெறி யாடுமறி யாடுமது வீரும்
மையலையும் அல்லலையும் அல்லதறி யீரே. 35

### *அகவற்பா*

845. ஈரவே ரித்தார் வழங்கு சடிலத்துக்
குதிகொள் கங்கை மதியின்மீ தசைய
வண்டியங்கு வரைப்பின் எண்தோள் செல்வ
ஒருபால் தோடும் ஒருபால் குழையும்
இருபாற் பட்ட மேனி எந்தை.

---

*இதயங்களில் இவள் பிதற்றலின் காரணத்தை நீவிர் அறியவில்லை. (நீவிர் எப்படி அறிவீர்:) தெய்வத்தைக் குறித்து வெறியாடுதற்கு வேண்டிய செம்மறியாட்டையும், மதுவால் மயக்கப்படுகின்ற மயக்கத்தையும், மற்றும் பல உழைப்பையும் அல்லது வேறு ஒன்றையும் நீவிர் அறிய மாட்டீர்' என்க. இத்தனையும் - 'இவ்வளவுதானும்' என இழிவுசிறப்பும்மை.*

*845. **குறிப்புரை :** 'வேரி வழங்கு ஈரத்தார்ச் சடிலம்' என்க. வேரி - தேனை. வழங்கு - ஊற்றுகின்ற - ஈரம் - குளிர்ச்சி. வரைப்பு - எல்லை. வண்டுகள் தோளில் புரளும் மாலையின் தேனை உண்ண வந்து இயங்குகின்றன. தோடு பெண்பாற்கு உரியதும், குழை ஆண்பாற்கு உரியதும் ஆகலின் மேனி இருபாற்பட்டதாயிற்று. தேன் - வண்டு வகைகளில் ஒன்று - சிறை - பக்கம். அமளி - அணை. "மங்கையர் பருக" என இயையும் 'இமையா நாட்டத்து அமையா நோக்கத்தால் பருக' என்க. அமையா நோக்கம் - தெவிட்டாத பார்வை. "அதுவே" என்னும் பிரிநிலை ஏகாரம் அதன் சிறப்புணர்த்தி நின்றது. கதுமென - விரைவாக. தெறுசொலாளர் - கடுஞ்சொற்களையுடைய கால தூதுவர். உறுசினம் - மிக்க கோபம் திருகி -*

ஒல்லொலிப் பழனத் தில்லை மூதூர்
ஆடகப் பொதுவில் நாடகம் நவிற்றும்
இமையா நாட்டத் தொருபெருங் கடவுள்
வானவர் வணங்கும் தாதை யானே
மதுமழை பொழியும் புதுமந் தாரத்துத்

தேனியங் கொருசிறைக் கானகத் தியற்றிய
தெய்வ மண்டபத்(து) ஐவகை அமளிச்
சிங்கஞ் சுமப்ப ஏறி மங்கையர்
இமையா நாட்டத் தமையா நோக்கம்
தம்மார்பு பருகச் செம்மாந் திருக்கும்

ஆனாச் செல்வத்து வானோர் இன்பம்
அதுவே எய்தினும் எய்துக கதுமெனத்
தெறுசொ லாளர் உறுசினந் திருகி
எற்றியும் ஈர்த்தும் குற்றம் கொளீஇ
ஈர்ந்தும் போழ்ந்தும் எற்றுபு குடைந்தும்

வார்ந்துங் குறைத்தும் மதநாய்க் கீந்தும்
செக்குரல் பெய்தும் தீநீர் வாக்கியும்
புழுக்குடை அழுவத் தழுக்கியல் சேற்றுப்
பன்னெடுங் காலம் அழுத்தி இன்னா
வரையில் தண்டத்து மாறாக் கடுந்துயர்

நிரயஞ் சேரினுஞ் சேர்க உரையிடை
ஏனோர் என்னை ஆனாது விரும்பி
நல்லன் எனினும் என்க அவரே
அல்லன் எனினும் என்க நில்லாத்
திருவொடு திளைத்துப் பெருவளஞ் சிதையாது

---

*முறுகப் பெற்று. குற்றம் - மண்ணுலகில் செய்த குற்றங்கள். கொளீஇ - கொளுவி; எடுத்தெடுத்துக் கூறி. மத நாய் - வெறி நாய். தீ நீர் - உலோகங்களை உருக்கிய நீர். அழுவம் - பள்ளம்; குழி "இன்னா" என்பதன்பின் 'செய்யும்' என ஒருசொல் வருவிக்க. வரை இல் - எல்லையில்லாத. "உரையிடை" என்பதை, "விரும்பி" என்பதன் பின்னர்க் கூட்டுக. திரு - இவ்வுலகச் செல்வம். முன்பு - வலிமை. முன்பின் - வலிமையை உடைய. பழகுதல் - பலநாள் வாழ்தல். கழி மூப்பு - இளமை. கழிய வரும் மூப்பு - ஆண் தகைக் குரிசில் -*

இன்பத் தழுந்தினும் அழுந்துக அல்லாத்
துன்பந் துதையினும் துதைக முன்பின்
இளைமையொடு பழகிக் கழிமூப்புக் குறுகாது
என்றும் இருக்கினும் இருக்கவன்றி
இன்றே இறக்கினும் இறக்க வொன்றினும்

வேண்டலும் இலனே வெறுத்தலும் இலனே
ஆண்டகைக் குரிசில்நின் அடியரொடு குழுமித்
தெய்வக் கூத்தும்நின் செய்ய பாதமும்
அடையவும் அணுகவும் பெற்ற
கிடையாச் செல்வங் கிடைத்த லானே. 36

*வெண்பா*

846. ஆனேறே போந்தால் அழிவுண்டே அன்புடைய
நானேதான் வாழ்ந்திடினும் நன்றன்றே – வானோங்கு
வாமாண் பொழிற்றில்லை மன்றைப் பொலிவித்த
கோமானை இத்தெருவே கொண்டு. 37

---

*ஆளும் தகைமையை உடைய தலைவர். 'குரிசிலாகிய நினக்கு அடியராயினாரோடும் குழுமி' என்க. அடைதல் - அடைக்கலமாய் புகுதல். அணுகுதல் - அகலாதிருத்தல். 'ஒரு பெருங் கடவுளே! எனக்கு மிகப் பெரிய இன்பங்கள் வரினும் வருக; மிகப்பெரிய துன்பங்கள் வரினும் வருக. எந்த ஒன்றினும் விருப்போ, வெறுப்போ கொள்கிலேன், எதனால் எனின், யாவர்க்கும் கிடைத்தற்கரிய மிகப் பெரிய செல்வம் எனக்குக் கிடைத்துவிட்டதனால்' என வினைமுடிவு செய்க.*

***846. குறிப்புரை :*** *இது கைக்கிளைத் தலைவியின் காமம் மிக்க கழிபடர் கிளவி. அஃதாவது காமம் மிகுதியால் வாய்க்கு வந்தன பிதற்றல். கழி படர் - மிக்க துன்பம். 'ஆனேறே! தில்லை மன்றைப் பொலிவித்த கோமான்மேல் அன்புடைய நானே (இறவாது) உயிர் வாழ்ந்தாலும் உனக்கு நல்லதுதானே? (அவ்வாறிருக்க, நீ ஒருநாள் போந்ததுபோலப் பல நாளும் அவனை இத்தெருவே கொண்டு போந்தால் உனக்கு அழிவது (கெடுவது) ஏதேனும் உண்டோ' என உரைத்துக் கொள்க. இஃது இறைவனது ஊர்தியை எதிர்பெய்து கொண்டு கூறியது. "அன்புடைய" என்பதற்குமுன், 'அவன்மேல்' என ஒரு சொல் வருவிக்க. "நானே" என்னும் பிரிநிலை ஏகாரம் அவள் தன்னை இழித்துக் கூறியதனை உணர்த்திற்று. தான், அசை 'ஏனையோர்*

***கட்டளைக் கலித்துறை***

**847.** கொண்டல்வண் ணத்தவன் நான்முகன்
இந்திரன் கோமகுடத்
தண்டர்மிண் டித்தொழும் அம்பலக்
கூத்தனுக் கன்பு செய்யா
மிண்டர்மிண் டித்திரி வாரெனக்
கென்னினி நானவன்றன்
தொண்டர்தொண் டர்க்குத் தொழும்பாய்த்
திரியத் தொடங்கினனே. **38**

---

*போல நான் உயர்ந்தவன் அல்லாவிடினும், அவன்மேல் அன்புடையளேயன்றோ என்றபடி. நன்று - அறம்; புண்ணியம். 'வாமம்' என்பது ஈற்று அம்முக்குறைந்து நின்றது. வாமம் - அழகு.*

***847. குறிப்புரை :*** *கோ - தலைமை. மிண்டர் - நெஞ்சுரம் உடையவர் மிண்டி - நெருங்கி (கலாய்த்து)த் திரிவார். திருமாலும், நான்முகனும், இந்திரனும், மற்ற தேவர்களும் அம்பலப் பெருமானிடம் அன்பு கொள்ளாமல் செருக்குடன் திரிகிறார்கள். ஆனால் 'நான் தொழும்பாய்த் திரியத் தொடங்கினன். ஆலையால் இனி எனக்கு என்ன குறை' என்க. இதனுள் வழி எதுகை வந்தது.*

***848. குறிப்புரை :*** *"(நான்) உடற்கு அன்பு செய்து அலைவேன்; (இதனை விடுத்துத்) தில்லை யம்பலம் மேவிய சிவனை நினைக்கும் தலமே இனி (எனக்குச்) சதுராவது" என முடிவு கொள்க. அங்கம் - உறுப்புக்கள். தொடர நரைத்து - நாள்தோறும் தொடர்ந்து நரை தோன்றப் பெற்று முன்பு - இளமைக் காலத்தில் ஒன்றும் - (அங்கம்) ஒன்றேனும். ஒன்றியிடாது - வசப்படாது. "தளிவு தலைக்கொண்டு" என்பதை, "கண்டு" என்பதன்பின் கூட்டுக. 'வெறுப்பை மேற்கொண்டு' என்பது இதன் பொருள். புன்புலை வாரிகள் - அற்பமான இழிந்த நீர்கள்; கோழை, சிறுநீர் முதலியன. நடை கெட - நடத்தல் இல்லாதொழிய. ('இடம் பெயராது கிடந்து' என்றபடி). கொண்ட பெண்டிர் - மனைவியர். 'தொல்லை பொறாது' என்க. நடலை - துன்பம். விழும் உடல் - இறுதியில் வீழ்ந்தொழிகின்ற உடம்பு. நரக உடல் - இழிவாலும், துன்பத்தாலும் நரகம் போல்வதாகிய உடம்பு. மிடல் - வலிமை. விரகு - திறமை. 'அவன் பொன்றியிடா வகை' என்க. திடம் - உறுதி. 'திடமாக' என ஆக்கம் வருவிக்க. அருள்காரணமாகத் தரப்பட்ட வரத்தினது திடம்.*

### *சந்த விருத்தம்*

**848.** தொடர நரைத்தங்க முன்புள வாயின
தொழில்கள் மறுத்தொன்று மொன்றி யிடாதொரு
சுளிவு தலைக்கொண்டு புன்புலை வாரிகள்
துளையொழு கக்கண்டு சிந்தனை ஓய்வொடு
நடைகெட முற்கொண்ட பெண்டிர் பொறாதொரு
நடலை நமக்கென்று வந்தன பேசிட
நலியிரு மற்கஞ்சி உண்டி வேறாவிழு
நரக உடற்கன்பு கொண்டலை வேனினி
மிடலொடி யப்பண் டிலங்கையர் கோனொரு
விரலின் அமுக்குண்டு பண்பல பாடிய
விரகு செவிக்கொண்டு முன்புள தாகிய
வெகுளி தவிர்த்தன்று பொன்றி யிடாவகை
திடமருள் வைக்குஞ் செழுஞ்சுடர் ஊறிய
தெளியமு தத்தின் கொழுஞ்சுவை நீடிய
திலைநக ரிற்செம்பொன் அம்பல மேவிய
சிவனை நினைக்குந் தவஞ்சது ராவதே. **39**

---

*அதற்குக் காரணமான அருள்மேல் ஏற்றப்பட்டது. ஊறிய - உள்ளுள் சுரக்கின்ற, "சுடர், சுவை" என்பன பின் வந்த "சிவன்" என்னும் ஒரு பொருள்மேல் வந்த பெயர்கள். நீடிய - 'நிலை பெற்ற அம்பலம்' என்க. சதுர் - திறமை.*

*849. **குறிப்புரை :** கடவுள் ஆழி - தெய்வத் தன்மை யுடைய சக்கரம். இயக்கர் கோன் - யட்சர் தலைவன்; குபேரன். மாநிதி இரண்டு சங்கநிதி, பதும நிதி. "செல்வம்" இரண்டில் பின்னது திருவருள். மாணி - பிரமசாரி; மார்க்கண்டேயர். கோண் முறை - பற்றிக் கொண்டு செல்லும் முறை. வலித்து - துணிந்து. தெறிக்க - துள்ளி விழும்படி. 'மாணிக்கு உயிர் அளித்த' என்க. அரவம் - ஓசை. இடையின்றி - காலம் தாழ்த்தாமல். ஒல் அனல் - வல்லதாய தீ 'கரும்பொடு பூப் பொழி பட' என்க. கிழித்தென - கிழித்தாற்போல. விலங்கல் விண்டு விழுந்தென - மலை பிளந்து வீழ்ந்தாற்போல; 'விழ' என ஒருசொல் வருவிக்க. பரிகலம் - உண்ட கலம்; என்றது 'மிச்சில்' என்றபடி முதல் - தாள்; திருவடி "உண்டல்" என்றது உண்ண அமர்ந்ததைக் குறித்தது. நொய்தில் - எளிதாக. கை வளம் - வள்ளன்மை உளை - பிடரி மயிர், சிங்கம், நரசிங்கம் சேவகம் வீரம், வரி - புள்ளிகள் எறுழ் வலி - மிக்க*

*அகவற்பா*

849. சதுர்முகன் தந்தைக்குக் கதிர்விடு கடவுள்
ஆழி கொடுத்த பேரருள் போற்றி
முயற்சியொடு பணிந்த இயக்கர்கோ னுக்கு
மாநிதி இரண்டும் ஆனாப் பெருவளத்
தளகை ஒன்றும் தளர்வின்றி நிறுவிய

செல்வங் கொடுத்த செல்வம் போற்றி
தாள்நிழல் அடைந்த மாணிக் காக
நாண்முறை பிறழாது கோண்முறை வலித்துட்
பதைத்துவருங் கூற்றைப் படிமிசைத் தெறிக்க
உதைத்துயிர் அளித்த உதவி போற்றி

குலைகுலை குலைந்த நிலையாத் தேவர்
படுபேர் அவலம் இடையின்று விலக்கிக்
கடல்விடம் அருந்தின கருணை போற்றி
தவிராச் சீற்றத் தவுணர் மூவெயில்
ஒல்லனல் கொளுவி ஒருநொடிப் பொடிபட

வில்லொன்று வளைத்த வீரம் போற்றி
பூமென் கரும்பொடு பொடிபட நிலத்துக்
காமனைப் பார்த்த கண்ணுதல் போற்றி
தெய்வ யாளி கைமுயன்று கிழித்தெனக்
கரியொன் றுரித்த பெருவிறல் போற்றி

பண்டு பெரும்போர்ப் பார்த்தனுக் காகக்
கொண்டு நடந்த கோலம் போற்றி
விரற்பதம் ஒன்றில் வெள்ளிமலை எடுத்த
அரக்கனை நெரித்த ஆண்மை போற்றி
விலங்கல் விண்டு விழுந்தென முன்னாள்

சலந்தரற் றடிந்த தண்டம் போற்றி
தாதையை எறிந்த வேதியச் சிறுவற்குப்
பரிகலங் கொடுத்த திருவுளம் போற்றி
நின்முதல் வழிபடத் தன்மகன் தடிந்த
தொண்டர் மனையில் உண்டல் போற்றி

வெண்ணெய் உண்ண எண்ணுபு வந்து
நந்தா விளக்கை நுந்துபு பெயர்த்த

தாவுபல் எலிக்கு மூவுல காள
நொய்தினில் அளித்த கைவளம் போற்றி
பொங்குளை அழல்வாய்ப் புகைவிழி ஒருதனிச்

சிங்கங் கொன்ற சேவகம் போற்றி
வரிமிடற் றெறுழ்வலி மணியுகு பகுவாய்
உரகம் பூண்ட ஒப்பனை போற்றி
கங்கையுங் கடுக்கையுங் கலந்துழி ஒருபால்
திங்கள் சூடிய செஞ்சடை போற்றி

கடவுளர் இருவர் அடியும் முடியும்
காண்டல் வேண்டக் கனற்பிழம் பாகி
நீண்டு நின்ற நீளம் போற்றி
ஆலம் பில்குநின் சூலம் போற்றி
கூறுதற் கரியநின் ஏறு போற்றி

ஏகல் வெற்பன் மகிழும் மகட்கிடப்
பாகங் கொடுத்த பண்பு போற்றி
தில்லை மாநகர் போற்றி தில்லையுட்
செம்பொன் அம்பலம் போற்றி அம்பலத்
தாடும் நாடகம் போற்றி என்றாங்

கென்றும் போற்றினும் என்தனக் கிறைவ
ஆற்றல் இல்லை ஆயினும்
போற்றி போற்றிநின் பொலம்பூ அடிக்கே. 40

*திருச்சிற்றம்பலம்.*

---

*வலிமை. உரகம் - பாம்பு. ஒப்பனை - அலங்காரம், கடுக்கை - கொன்றை. வேண்ட - விரும்பும்படி. ஆலம் - நஞ்சு. பில்குதல் - சிந்துதல். ஏகல் வெற்பு - மிகப் பெரிதாகிய மலை. 'முற்றக் கூறிப் போற்ற ஆற்றல் இல்லை' என்க. பொலம் பூ அடி - பொற்பூப்போலும் திருவடிகள். "போற்றி போற்றி" என்னும் சொற்கள் பொருள் உணர்த்தாது. தம்மையே தாம் உணர்த்தி நின்றன. அவற்றைச் செயப்படுபொருளாக்கி, அவற்றின் பயன் 'ஆக்குவன்' என ஒரு சொல் வருவித்து, "ஆயினும்" என்பதற்கும், "பூவடிக்கு" என்பதற்கும் முடிபாக்கி முடிக்க. "பூவடிக்கு" என்பதில் 'பூ' என்பது இதன் முதற் செய்யுளின் முதலோடு சென்று மண்டலித்தல் காண்க.*

***கோயில் நான்மணிமாலை முற்றிற்று.***

## திருக்கழுமல மும்மணிக்கோவை

கழுமலம் என்பது சீகாழிக்குரிய பன்னிரண்டு பெயர்களுள் ஒன்று. இறைவன் கோயில் கொண்டெழுந்தருளிய திருக்கழுமலம் என்னும் சீகாழிப்பதியை அகவல், வெண்பா, கலித்துறையாகிய மூவகைப் பாக்களாற் போற்றிப் பரவிய பாமாலையாதலின் இது திருக்கழுமல மும்மணிக்கோவை யென்னும் பெயர்த்தாயிற்று. 'திருவளர்பவளப் பெருவரை' யெனத் தொடங்கும் பாடலை முதலாகக் கொண்டு திகழும் இப்பனுவலில் இப்போது பன்னிரண்டு பாடல்களே கிடைத்துள்ளன. பன்னிரண்டாம் பாடலின் இறுதிச்சீர் முதற் பாடலின் முதற்சீரோடு மண்டலித்து முடியாமையாலும் மும்மணிக்கோவையென்னும் பிரபந்தம் முப்பது பாடல்களால் அமைதல் வேண்டுமென்பது பாட்டியல் மரபாதலாலும் இந்நூலின்கண் 13 முதல் 30 வரையுள்ள பதினெட்டுப் பாடல்களும் ஏடுகளின் சிதைவால் மறைந்து போயினவெனக் கருத வேண்டியுள்ளது.

இனி, ஆ. சிங்காரவேலு முதலியாரவர்கள் எழுதிய உரையுடன் வெளிவந்த பட்டினத்துப் பிள்ளையார் பிரபந்தவுரைப் புத்தகத்தில் திருக்கழுமல மும்மணிக்கோவைக்குரிய 13 முதல் 30 வரையுள்ள பதினெட்டுப் பாடல்களும் உரையுடன் வெளியிடப் பெற்றுள்ளன. இப்பாடல்கள் பதினெட்டும் ஆறுமுக நாவலரவர்களாலும் பின் வந்தவர்களாலும் வெளியிடப் பெற்ற பதினொராந் திருமுறைப் பதிப்புக்களில் இடம்பெறவில்லை. இவற்றின் சொல் நடையையும் பொருளமைதியையும் மேற்போக்காக நோக்குங்கால் இவை திருவெண்காட்டடிகள் வாக்கெனவே சொல்லத் தோன்றும். இப்பாடல்களில் அருட்கலாமதி, அன்னசத்திரம், இரத குளிகை, உபகரணம், கஸ்தூரி, கருடதியானம் சந்திரவிம்பம், பாநு, பூதசாரதநு, பூதமகாதநு, பூத பரிணாமம், வயிடூரியம், வித்துருமம் முதலிய வடசொற்களும், பணம் காசு, நங்குரம் முதலிய பிற்காலச் சொல் வழக்குகளும் உள்ளன. திருவெண்காட்டடிகள் பாடிய ஏனைப் பிரபந்தங்களில் ஒரே விடங்களில் வடசொல் விரவப் பெற்றிருத்தல் உண்மையாயினும் இங்கெடுத்துக் காட்டியன போன்ற புதிய வழக்குகள் அப்பிரபந்தங்களில் இல்லையென்பது அவற்றைப் பயில்வார்க்கு நன்கு புலனாம். ஆகவே உரைப் பதிப்பிற் காணப்படும் பதினெட்டுப் பாடல்களும் பிற்காலத்துப் புலவரொருவராற் பாடிச் சேர்க்கப்பட்டனவெனக் கொள்ளுதலே பொருத்தமுடையதாகும். அடிகள் அருளிய பனுவல்களை ஓதியின்புறும் புலவரொருவர் திருக்கழுமல மும்மணிக்கோவையிற் சிதைந்து மறைந்த பதினெட்டுப் பாடல்களுக்கீடாகத் தாம் பதினெட்டுப் பாடல்களைப் பாடிச்

சேர்த்து அப்பனுவலை நிறைவு செய்த திறம் வியந்து பாராட்டத் தக்கதாகும்.

பிரமபுரத்துறை பெம்மானாகிய இறைவன் பெரிய பெருமாட்டியுடன் தோணி மீது வீற்றிருந்தருளுந் திருக்கோலத்தை அழகிய சொல்லோவியமாகப் புனைந்து காட்டுவது இம்மும்மணிக் கோவையின் முதற்பாடலாகும். சிவபாத விருதயர் பெற்ற தவப் புதல்வராகிய தளர்நடைப் பருவத்து இளங்குழந்தை, பிரம தீர்த்தத்துள் முழுகி மந்திரம் செபிக்கும் தம் தந்தையைக் காணாது, பசியால் வருந்தி அம்மே அப்பா என அழைத்து அழுத ஓசையைக் கேட்டுத் தோணி புரத்தில் எழுந்தருளிய பெருமான், பெரிய பெருமாட்டியாகிய உமை யம்மையாருடன் விடையின் மீதெழுந்தருளிப் பிரமதீர்த்தக் கரையை யடைந்து அங்கு நின்று அழுதுகொண்டிருந்த பிள்ளைக்கு ஞானப்பாலடி சிலைக் குழைத்தூட்டியருளிய செய்தியையும், அங்ஙனம் ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்தர் எச்சில் மயங்கிட நினக்கு இதனைக் கொடுத்தார் யாவர் என வெகுண்டுரைக்கும் தம் தந்தையை நோக்கி ‘எம்மை யிது செய்தபிரான் இவனே’ எனக் கையாற் சுட்டிக்காட்டித் ‘தோடுடைய செவியன்’ என்னுந் திருநெறிய தமிழால் அடையாளங்களுடன் வெளியிட்டருளிய திறத்தையும்,

தாதையொடு வந்த வேதியச் சிறுவன்
தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த
அன்னாயோ வென்றழைப்ப முன்னின்று
ஞானபோனகத் தருளட்டிக் குழைத்த
ஆனாத்திரளை அவன் வயினருள
அந்தணன் முனிந்து தந்தா ரியாரென
அவனைக் காட்டுவன் அப்ப வானார்
தோடுடைய செவிய னென்றும்
பீடுடைய பெம்மானென்றும்
கையிற் சுட்டிக் காட்ட
ஐயநீ வெளிப்பட் டருளினை ஆங்கே

என அடிகள் இம்முதற்பாடலின் உளங்குழைந்து போற்றியுள்ளார்.

‘ஆரணம் நான்கிற்கும் அப்பாலவன்’ ‘அந்தக் கரணங்கடந்த அரும்பொருள்’ என மாற்ற மனங்கழிய நின்ற இறைவனது திறத்தினை விரித்துரைத்த அடிகள், தம் உயிர்க்குயிராகிய இறைவனை நினைத்தற்குத் தடையாயுள்ள மனமாசுகளைக் களைந்து இறைவன் வீற்றிருத்தற்குத் தக்கதாகத் தம் நெஞ்சத்தினைத் தூய்மைப்படுத்திய திறத்தை விரித்துரைப்பது.

கருமுதற் றொடங்கிப் பெருநாளெல்லாம்

*காமம் வெகுளி கழிபெரும் பொய்யெனும்*
*தூய்மையில் குப்பை தொலைவின்றிக் கிடந்ததை*
*அரிதின் இகழ்ந்து போக்கிப் பொருதிறன்*
*மையிருள் நிறத்து மதனுடை அடுசினத்து*
*ஐவகைக் கடாவும் யாப்பவிழ்த் தகற்றி*
*அன்புகொடு மெழுகி அருள்விளக் கேற்றித்*
*துன்ப இருளைத் துரந்து முன்புறம்*
*மெய்யெனும் விதானம் விரித்து நொய்ய*
*கீழ்மையிற் றொடர்ந்து கிடந்தவென் சிந்தைப்*
*பாழறை யுனக்குப் பள்ளியறை யாக்கிச்*
*சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவிசு*
*எந்தை நீ இருக்க இட்டனன் இந்த*
*நெடுநில வளாகமும் அடுகதிர் வானமும்*
*அடையப் பரந்த ஆதி வெள்ளத்து*
*நுரையெனச் சிதறி இருசுடர் மிதப்ப*
*வரைபறித் தியங்கும் மாருதங் கடுப்ப*
*மாலும் பிரமனும் முதலிய வானவர்*
*காலம் இதுவெனக் கலங்கா நின்றுழி*
*மற்றவர் உய்யப் பற்றிய புணையாய்*
*மிகநனி மிதந்த புகலி நாயக*
*அருள்நனி சுரக்கும் பிரளய விடங்கநின்*
*செல்வச் சிலம்பு மெல்லென மிழற்ற*
*அமையாக் காட்சி யிமையக்*
*கொழுந்தையும் உடனே கொண்டிங்கு*
*எழுந்தருளத்தகும் எம்பெருமானே.*

*எனவரும் பாடலாகும். தாழ்ந்த குணங்களிலே பிணிப்புற்றுக் கிடந்த எம் மனமாகிய பாழறையிலே கருவுற்ற நாள்முதலாக இன்றுவரை கழிந்த காலங்களிலெல்லாம் காமம் வெகுளி பொய் என்னும் இக்குற்றங்களால் விளைந்த தீமையாகிய இழிந்த குப்பைகள் மூடிக் கிடந்தவற்றை அரிதின் நீக்கி, எதிர்த்துத் தாக்கும் வன்மைமிக்க ஐம்புலன்களாகிய கடாக்கள் கட்டப்பட்டு நின்றனவற்றைக் கட்டவிழ்த்துத் துரத்தி, அவற்றாற் புழுதியான அவ்விடத்தை அன்பெனும் நீரால் மெழுகித் தூய்மைசெய்து, அருளாகிய விளக்கை ஒளிபெற ஏற்றிவைத்து, துன்பமாகி இருளைப்போக்கி, வாய்மையாகிய மேற்கட்டியை மேலே விரித்து, என் சிந்தையாகிய அறையை எந்தையாகிய நீ இனிதமர்தற்கு ஏற்ற பள்ளியறையாகச் செய்து, அதன் நடுவே அகத்தாமரையாகிய பூந்தவிசினை இட்டு வைத்துள்ளேன். எம்பெருமானாகிய*

*நீ நின்செல்வச் சிலம்பு மெல்லென மிழற்ற உமையம்மையாருடன் அடியேனது உள்ளமாகிய இவ்விடத்திலே எழுந்தருளுதல் வேண்டும் என அடிகள் புகலி நாயகனை வேண்டுகின்றார். இவ்வேண்டுகோள் உலக மக்கள் மனந்திருந்தி இறைவனை வழிபட்டுய்யும் முறையினை நன்கு அறிவுறுத்துவதாகும். சீகாழியாகிய திருத்தலம் ஓர் ஊழிக்காலத்திலே தேவர் முதலியோர்க்குப் பற்றுக்கோடாகி ஊழிப்பெருவெள்ளத்திலே தோணியாய் மிதந்த வரலாறு இப்பாடலில் 14 முதல் 21 வரையுள்ள அடிகளில் விரித்துரைக்கப் பெற்றமை காண்க.*

*“மாதொருபாகனாகிய பெருமானே, நினது திருவுள்ளக் குறிப்பால் இவ்வுலகம் தோன்றிய நாள் தொடங்கி வேறு வேறியல்பினவாகிய பலவகைப் பிறப்புக்களிலும் உயர்திணை மக்களாகவும் அஃறிணை உயிர்களாகவும் தோன்றிய யாரும் யாவையுமாகிய உயிர்த் தொகுதியில் எனக்குத் தனித்தனியே தந்தையாகியும் தாயாகியும் வந்து உறவு கொள்ளாதவர் ஒருவருமில்லை. யானும் அவ்வுயிர்களுக்குத் தந்தையாகியும் தாயாகியும் பிறந்து உறவு கொள்ளாததுமில்லை. உலகில் யான் பிறவாத இடமுமில்லை; இறவாத இடமுமில்லை. எனது உடம்பைத் தின்னாத உயிர்களுமில்லை. அவற்றின் உடம்புகளை யான் தின்னத் தவறியதுமில்லை. இங்ஙனமே காலமெல்லாங் கழிந்தன. இவ்வாறு நெடுங்காலமாகப் பிறவிச் சுழலில் தடுமாறும் பழக்கம் பெற்ற யான், இனி இதற்குச் சோர்ந்து இளைக்கும் இயல்புடையனல்லேன். சோதியாய் விளங்கும் நினது திருநாமமாகிய திருவைந்தெழுத்தினை உணர்ந்தோதும் அருள் நூல்களைப் பயின்றேனல்லேன். அந்நூல்களைப் பயின்ற ஆசிரியர்களை அடைந்து கேட்டு அறிந்தவனும் அல்லேன். நாயேன் இங்ஙனம் நின்னை வழிபடுதற்குரிய தகுதியற்றவனாயினும் எனக்கு ஓய்வான காலத்தில் அடியேன் நின்னை நினைந்து இட்டது பச்சிலையாயினும் அதனை நறுமண மலராகவும், யான் நின்னை நினைந்து சொல்வது பிழைமலிந்த சொல்லாயினும் நின்னை வழிபடுதற்குரிய திருமந்திரமாகவும் கொண்டு எளியேனைப் பிறப்பிறப்பென்னும் பெருங்கடலில் ஆழாதவண்ணம் நின் திருவடியாகிய நெடுங்கரையிற் சேர்த்துக் காத்தல் அருளாளனாகிய நினக்குரிய கடமையாகும்” எனக் கழுமல வாணனை நோக்கி அடிகள் வேண்டிக் கொள்வதாக அமைந்தது ‘அருள் நனிபழுத்த’ என்னும் முதற் குறிப்புடைய அகவலாகும்.*

*இறைவனது திருவருளாகிய கண்ணின் உதவியைப் பெறுதற்கு முன் இல்லன உளவாய் உள்ளன காணாது தாம் அறியாமையாகிய இருளிற்பட்டு அல்லற்பட்ட தன்மையையும், திருவருளாகிய ஞானநாட்டம் பெற்ற பின்பு அசத்தாகிய உலகத் தொகுதி மறைய இறைவனாகிய மெய்ப்பொருள்*

*எங்குமாய் விளங்கித் தோன்றிய தன்மையினையும் இப்பிரபந்தத்தின் பத்தாம் பாடலில் அடிகள் தெளிவாக விளக்கிய திறம் படித்துணர்ந்து மகிழத் தக்கதாம்.*

*போதும் பெறாவிடிற் பச்சிலையுண்டு புனலுண்டெங்கும்*
*ஏதும் பெறாவிடில் நெஞ்சுண்டன்றேயிணை யாகச் செப்பும்*
*சூதும் பெறாமுலை பங்கர்தென் தோணி புரேசர்வண்டின்*
*தாதும் பெறாத அடித்தா மரைசென்று சார்வதற்கே.*

*எனவரும் திருப்பாடல், 'யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை' என்ற திருமந்திரப் பொருளை அடியொற்றி இறைவனடி சேர்தற்கென யாவரும் மேற்கொள்ளுதற்குரிய எளிய வழிபாட்டு முறையை விளக்குதல் காண்க.*

## பட்டினத்து அடிகள்

*அருளிச்செய்த*

## 27. திருக்கழுமல மும்மணிக்கோவை

***அகவற்பா***

*திருச்சிற்றம்பலம்*

850. திருவளர் பவளப் பெருவரை மணந்த
மரகத வல்லி போல ஒருகூ(று)
இமையச் செல்வி பிரியாது விளங்கப்
பாய்திரைப் பரவை மீமிசை முகிழ்த்த
அலைகதிர்ப் பரிதி ஆயிரந் தொகுத்த.

வரன்முறை திரியாது மலர்மிசை இருந்தெனக்
கதிர்விடு நின்முகங் காண்தொறுங் காண்தொறும்
முதிரா இளமுலை முற்றாக் கொழுந்தின்
திருமுகத் தாமரை செவ்வியின் மலரநின்
தையல் வாணுதல் தெய்வச் சிறுபிறை

இளநிலாக் காண்தொறும் ஒளியொடும் புணர்ந்தநின்
செவ்வாய்க் குமுதஞ் செவ்வி செய்யநின்
செங்கைக் கமலம் மங்கை வனமுலை
அமிர்த கலசம் அமைவின் ஏந்த
மலைமகள் தனாது நயனக் குவளைநின்

பொலிவினொடு மலர மறையோர்
கழுமலம் நெறிநின்று பொலிய
நாகர் நாடு மீமிசை மிதந்து
மீமிசை உலகங் கீழ்முதல் தாழ்ந்திங்(கு)
ஒன்றா வந்த குன்றா வெள்ளத்(து)

உலகம்மூன் றுக்குங் களைகண் ஆகி
முதலில் காலம் இனிதுவீற் றிருந்துழித்
தாதையொடு வந்த வேதியச் சிறுவன்
தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த
'அன்னா யோ'வென் றழைப்பமுன் நின்று

ஞான போனகம் அருளட்டிக் குழைத்த
ஆனாத் திரளை அவன்வயின் அருள
அந்தணன் முனிந்து 'தந்தார் யார்'என

'அவனைக் காட்டுவன் அப்ப வானார்
தோஒ டுடைய செவியன்' என்றும்
பீஇ டுடைய பெம்மான் என்றும்
கையில் சுட்டிக் காட்ட
ஐயநீ வெளிப்பட் டருளினை ஆங்கே. 1

---

*850. குறிப்புரை : இம்முதற் பாட்டில் தோணியப்பர் ஆளுடைய பிள்ளையார்க்கு அருள்புரிந்த வரலாறு சுருக்கமாகச் சொல்லப்படுகின்றது.*

*பவளப் பெருவரையைப் பற்றிப் படர்ந்த ஒரு மரகதக் கொடி போல உமையம்மை தனது ஒரு கூற்றில் விளங்கச் சிவபெருமான் விளங்குகின்றான். திரு - அழகு. முகிழ்த்த - முளைத்த. அலை கதிர் - வீசுகின்ற ஒளிக்கதிர்களை யுடைய. 'பரிதி ஆயிரம் இருந்தென' என இயையும். தொகுத்த வரல் முறை - அக்கதிர்களை முழுமையாகப் பெற்ற உதயமாகி வருகின்ற முறை. மலர் மிசை - தாமரை மலரின் மேலிடத்தில். உனது முகமாகிய பகலவனைக் காணுந்தோறும் உமையம்மைதன் திருமுகமாகிய தாமரை மலரும் காலத்தைப் பொருந்தி மலரவும், (கொழுந்து - உமை) அவளது நெற்றியாகிய பிறையைக் காணுந்தோறும் உனது வாயாகிய செவ்வாம்பல் மலரவும், உனது கைகளாகிய செந்தாமரை மலர்கள் அவளது தனங்களாகிய அமிர்த கலசத்தைத் தாங்கவும், அவளது கண்களாகிய குவளை மலர்கள் உனது திருமேனியின் ஒளியாகிய நிலவினால் மலரவும் 'இங்ஙனமாக நீ வீற்றிருந்துழி' என்க. 'கழுமலம்' என்னும் தலம் அன்றோடு அழிந்தொழியாது நிலைத்து நின்று வழி வழி விளங்க வேண்டிச் சிவபெருமான் மேற்கூறியவாறு வீற்றிருந்தருளினான். 'எப்பொழுது' எனின், நாகர் நாடும் (தேவர் உலகமும்) முதலில் மேலே மிதந்து, பின் உள்ளே மூழ்கி அடிநிலையிற்போய்விடும் படி மண்ணும், விண்ணும் வேறுவேறாகாது ஒன்றாகும்படி ஊழி வெள்ளம் பெருகிவந்த காலத்தில் அவ்வெள்ளத்தின் மேல் வீற்றிருந்தருளினார். உலகம் மூன்றிற்கும் களைகணாகி (பற்றுக்கோடாகி) வீற்றிருந்தருளினான். உலகம் முழுதும் மறைந்து போயினமையால் அக்காலம் அநாதி காலத்தோடு ஒத்தது. முதல் இல் காலம் - அநாதி காலம். உலகம் நிலை தடுமாறிற்றாயினும் அவன் இனிதே வீற்றிருந்தருளினான். அவ்வாறு அவன் அன்று வீற்றிருந்தவாறே இன்றும் அக்கழுமல நகரில் தோணியில் தோணியப்பனாய் வீற்றிருக்கின்றான். வீற்றிருந்துழி - அவ்வாறு அவன் வீற்றிருக்கும் இடத்தில். (திருக்கோயிலில்) "தாதையொடு வந்த வேதியச் சிறுவன்" என்க. "பசி வருத்த" என்றதும், அது காரணமாகப் பால் வேண்டித் தாயாரை மட்டுமே "அன்னாயோ" என அழைத்தார் என்றதும். 'குழந்தைமையை விளக்கிய உபசார மொழி' எனக் கொண்டு, நீருள் மூழ்கிய தந்தையாரைக் காணாமையால் சுற்றும், முற்றும்*

*வெண்பா*

**851.** அருளின் கடலடியேன் அன்பென்னும் ஆறு
பொருளின் திரள்புகலி நாதன் – இருள்புகுதுங்
கண்டத்தான் என்பாரைக் காதலித்துக் கைதொழுவார்க்(கு)
அண்டத்தார் தாமார் அதற்கு. 2

---

*பார்த்து அழுத பிள்ளையார், திருத்தோணிச் சிகரத்தைப் பார்த்து, "அம்மே! அப்பா!!" என்று இருவரையுமே அழைத்தருளி அழுதருளினார், என அருளிச் செய்தார் சேக்கிழார்[1]. இங்கு "ஞான போனகம்" என்றதைச் சேக்கிழார் "எண்ணரிய சிவஞானத்து இன்னமுதம்" எனவும், அடிசில் எனவும் கூறி விளக்குகின்றார். அதுவேறாயாம். இங்கு அருள் என்றது திருமுலைப் பாலை 'ஞான போனகத்தை அருளோடு அட்டிக் குழைத்த திரள்' என்க, அட்டுதல் - கலத்தல். திரள் - உருண்டை. ஆனா - நீங்காத. 'போனகத்தில் அருளை அட்டி' எனினும் ஆம். காட்ட - காட்டும்படி. 'பிள்ளையார் கையிற் சுட்டிக் காட்டிய போதிலும் தந்தையார் கண்டிலர் என்றே சேக்கிழார் கூறினார். இடையே இரண்டடி முச்சீர் பெற்று வந்தமையால், இஃது இணைக்குறள் ஆசிரியப்பா.*

***851. குறிப்புரை :*** *'அடியேனுடைய அன்பாகிய ஆறாயும், பொருளின் திரளாயும் உள்ள புகலி' நாதன், - இருள் புகுதும் கண்டத்தான் - என்பாரைக் காதலித்துக் கை தொழுவார்க்கு அருளின் கடல். (ஆகலான்) அதற்கு அண்டத்தார்தாம் ஆர்' என இயைத்துக் கொள்க.*

*புகலி நாதன். சீகாழியில் எழுந்தருளியுள்ள சிவபெருமான். 'கடல், ஆறு, திரள்' என்பன உருவகங்கள். பொருளாவது ஞானம். "ஞானத் திரளாய் நின்ற பெருமான்"[2] என ஞானசம்பந்தரும் அருளிச் செய்தார். 'இருள் புகுதும் கண்டத்தான்' என்பார், 'நீலகண்டன்' முதலிய பல பெயர்களைச் சொல்லிச் சீகாழிப் பெருமானைத் துதிக்கும் அடியார்கள் 'அவர்களைக் கைதொழுவார்க்கே சீகாழிப் பெருமான் அருட் கடலாய் இருந்து பேரருள் புரிகின்றான்' என்பதாம். அதற்கு - அந்தப் பேற்றை விரும்புதற்கு. அண்டத்தார்தாம் - தேவராயினும். ஆர் - என்ன உரிமையுடையர். 'அடியார்க்கு அடியராயினார்க்கு உரித்தாகிய சீகாழிப் பெருமானது திருவருள் தேவர்களாலும் பெறுதற்கரிது' என்பதாம். "அருளின்" என்பதில் இன், வேண்டா வழிச் சாரியை.*

---

1. *பெரிய புராணம் - திருஞானசம்பந்தர் புராணம் - 63.*
2. *திருமுறை - 1.69.3.*

*கட்டளைக் கலித்துறை*

852. ஆரணம் நான்கிற்கும் அப்பா லவனறி யத்துணிந்த
நாரணன் நான்முக னுக்கரி யான்நடு வாய்நிறைந்த
பூரணன் எந்தை புகலிப் பிரான்பொழில் அத்தனைக்கும்
காரணன் அந்தக் கரணங் கடந்த கருப்பொருளே. 3

*அகவற்பா*

853. கருமுதல் தொடங்கிப் பெருநாள் எல்லாம்
காமம் வெகுளி கழிபெரும் பொய்யெனுந்
தூய்மையில் குப்பை தொலைவின்றிக் கிடந்ததை
அரிதின் இகழ்ந்து போக்கிப் பொருதிறல்
மையிருள் நிறத்து மதனுடை அடுசினத்(து)
ஐவகைக் கடாவும் யாப்பவிழ்த் தகற்றி
அன்புகொடு மெழுகி அருள்விளக் கேற்றித்
துன்ப இருளைத் துரந்து முன்புறம்
மெய்யெனும் விதானம் விரித்து நொய்ய
கீழ்மையில் தொடர்ந்து கிடந்தஎன் சிந்தைப்

---

*852. **குறிப்புரை :** ஆரணம் - வேதம். "எந்தை புகலிப்பிரான்" என்பதை முதலிற் கொள்க. நடுவாய் - உள்ளீடாய். பொழில் - உலகம். அந்தக்கரணம் - உட் கருவி. அவை மனம் முதலியன. கருப் பொருள் - உயிர் நாடியான பொருள், இது புகலிப் பிரானது மாண்பினை வகுத்தருளிச் செய்தவாறு.*

*853. **குறிப்புரை :** அடி-11 'பாழ் அறையாய்க் கிடந்த சிந்தையை உனக்குப் பள்ளியறையாக்கி' என்க. அடி-1 கருமுதல் தொடங்கி (தாய் வயிற்றில் கருவாய் இருந்த காலம் முதல்) அது பாழ் அறையாய்க் கிடந்தது. 'பாழ் அறை' என்றது, உதவாக் குப்பைகள் நிரம்பிக் கிடந்த இடம். அப்பொருள்கள் காமம், வெகுளி முதலியன. காமம் - ஆசை. அக்குப்பைகளை அகற்றியவாறும், பின்பு தூய்மை செய்யப்பட்டவாறும் தொடர்ந்து கூறப்பட்டன. மை இருள் நிறம் - மை போலும் பேரிருளை ஒத்த நிறம். இதைக் கடாக்களுக்குக் கூறியது இன அடை. கடா - எருமைக் கடா. இஃது உருவகம். முருட்டுக் குணம் பற்றி ஐம்புல ஆசைகள் எருமைக் கடாக்களாக உருவகிக்கப்பட்டன. மதன் - மதம்; செருக்கு. யாப்பு - கட்டு. அருள் - ஞானம். இருள் - அஞ்ஞானம் துன்ப இருள் - துன்பத்திற்கு ஏதுவான இருள். அஞ்ஞானம் துன்பத்திற்கு ஏதுவாதல் கூறினமையின் ஞானம் இன்பத்திற்கு ஏதுவாதல் சொல்லாமே பெறப்பட்டது. மெய் - வாய்மை. "சிந்தை" இரண்டிடல் முன்னது 'சித்தம்' என்னும் அந்தக்*

பாழறை உனக்குப் பள்ளியறை யாக்கிச்
சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவி(சு)
எந்தைநீ இருக்க இட்டனன் இந்த
நெடுநில வளாகமும் அடுகதிர் வானமும்
அடையப் பரந்த ஆதிவெள் ளத்து

நுரையெனச் சிதறி இருசுடர் மிதப்ப
வரைபறித் தியங்கும் மாருதம் கடுப்ப
மாலும் பிரமனும் முதலிய வானவர்
காலம் இதுவெனக் கலங்கா நின்றுழி
மற்றவர் உய்யப் பற்றிய புணையாய்

மிகநனி மிதந்த புகலி நாயக
அருள்நனி சுரக்கும் பிரளய விடங்கநின்
செல்வச் சிலம்பு மெல்லென மிழற்ற
அமையாக் காட்சி இமயக்
கொழுந்தையும் உடனே கொண்டிங்(கு)

எழுந்தரு ளத்தகும் எம்பெரு மானே. 4

---

*கரணம். பின்னது இருதயம். தவிசு - ஆசனம். அடு கதிர் - வெங்கதிர்; ஞாயிறு. - அடைய - இடைவெளியின்றி ஒன்றாகும்படி. ஆதி வெள்ளம் - முன்பு ஒரு பிரளயத்தில் தோன்றிய வெள்ளம். 'இரு சுடர்களும் அந்த வெள்ளத்தில் நுரை போல மிதக்க' என்க. வரை பறித்து இயங்கும் மாருதம் கடுப்ப - மலைகளை யெல்லாம் புரட்டி வீசும் காற்று கடுவேகமாய் அடிக்க. காலம் - முடிவு காலம். மற்று, அசை. புணையாய் - புணைபோல 'வானவர் பலரும் திருக்கழுமலப் பெருமானைச் சார்ந்து பிழைத்திருந்தனர்' என்பதாம். விடங்கன் - அழகன். பிரளய அழகன், தோணியப்பன். "உடனே கொண்டு" என்பதில் ஏகாரத்தை மாற்றி, 'உடன் கொண்டே' என உரைக்க. 'என் சித்தம் முன்பு பாழ் அறையாய்க் கிடந்தது போல இல்லாமல் பள்ளியறையாகும்படி செய்துள்ளேன் ஆதலின் அதில் நீ உன் துணைவியுடன் வந்து இருக்கத் தகும்' என்பதாம். பாழ் அறையாய்க் கிடந்தது அஞ்ஞான நிலையில். பள்ளியறை யானது மெய்ஞ்ஞான நிலையில். எனவே, இறைவன் அஞ்ஞானிகளது உள்ளத்தில் புகாது, மெய்ஞ்ஞானிகளது உள்ளத்தில் புகுதல் கூறப்பட்டதாம். ஈற்றயலின் அயலடியும் முச்சீராய் வந்தமையின் இதுவும் இணைக் குறளாசிரியப்பா.*

***854. குறிப்புரை :*** *"வாழும்" என்பது 'செய்யும்' என் எச்சம். "இருக்கும்" என்பது 'செய்யும்' என முற்று. தான், அசை ஏனைய வெளி. விண்ணோர்க்கு*

*வெண்பா*

854. மானும் மழுவுந் திருமிடற்றில் வாழுமிருள்
தானும் பிறையுந் தரித்திருக்கும் – வானவர்க்கு
வெள்ளத்தே தோன்றிக் கழுமலத்தே வீற்றிருந்தென்
உள்ளத்தே நின்ற ஒளி. 5

*கட்டளைக் கலித்துறை*

855. ஒளிவந்த வாபொய் மனத்திருள் நீங்கவென் உள்ளம்வெள்ளம்
தெளிவந்த வாவந்து தித்தித்த வாசிந்தி யாததொரு
களிவந்த வாஅன்பு கைவந்த வாகடை சாரமையத்(து)
எளிவந்த வாநங் கழுமல வாணர்தம் இன்னருளே. 6

*அகவற்பா*

856. அருள்பழுத் தளிந்த கருணை வான்கனி
ஆரா இன்பத் தீராக் காதல்
அடியவர்க் கமிர்த வாரி நெடுநிலை
மாடக் கோபுரத்(து) ஆடகக் குடுமி
மழைவயிறு கிழிக்கும் கழுமல வாணநின்

---

*மிகப்பெரிய நீர்ப்பெருக்கான வெள்ளத்தில் காட்சி நல்கி, சீர்காழியில் வீற்றிருந்து என் உள்ளத்தில் நின்ற ஒளியானது மான், மழு, கழுத்தில் கருநிறம், பிறைச்சந்திரன் ஆகியவற்றை அணிகலனாகக் கொண்டு விளங்கும்.*

***855. குறிப்புரை :*** *"மனத்து" என்பதனோடும் பின் வரும் "என்" என்பதைக் கூட்டி முதலிற் கொள்க. ஒளி - ஞானம். "ஆறு" என்பன பலவும் செய்யுள் முடிபாய்க் கடை குறைந்து 'ஆ' என நின்றன. அவை அனைத்திலும் எண்ணும்மை விரித்து அவற்றை 'வியப்பு' என ஒரு சொல் வருவித்து முடிக்க. "கழுமல வாணர்தம் இன்னருள் எளிவந்தவாறு" என மாற்றிக் கொள்க. பொய் - திரிபுணர்ச்சி. வெள்ளத்தெளி - மிகுதியான தெளிவு. சிந்தியாதது ஒரு களி - எதிர்பாராத ஒரு பெருமகிழ்ச்சி. கைவருதல் - இடர்ப்பாடின்றி இனிது நிகழ்த்துதல். கடை சார் அமையம் - முடிவு கிட்டும் காலம்; இறுதிக் காலம்.*

***856. குறிப்புரை :*** *'மிகக் கனிந்த' என்றற்கு "அருள் பழுத்து அளிந்த" என்றும், 'பிறிதொருவகைக் கனியன்று' "கருணை வான்கனி" என்றும் ஈரிடத்து எடுத்துக் கூறினார். "கனி, காதல், வாரி" என்பனவும் "வாண, யோகி, எந்தை" என்பனபோல விளிகளே. காதல் - பேரன்பு. மாணிக்கவாசகர், "என்னுடை அன்பே" என்றதுபோல இவரும் இறைவனை, 'தீராக் காதலே' என விளித்தார். வாரி - கடல். குடுமி - சிகரம். மழை - மேகம். காட்சி - தோற்றம். "இருந்த"*

வழுவாக் காட்சி முதிரா இளமுலைப்
பாவையுடன் இருந்த பரம யோகி
யானொன் றுணர்த்துவன் எந்தை மேனாள்
அகில லோகமும் அனந்த யோனியும்
நிகிலமுந் தோன்றநீ நினைந்தநாள் தொடங்கி

எனைப்பல யோனியும் நினைப்பரும் பேதத்(து)
யாரும் யாவையும் எனக்குத் தனித்தனித்
தாய ராகியுந் தந்தைய ராகியும்
வந்தி லாதவர் இல்லை; யான்அவர்
தந்தைய ராகியுந் தாய ராகியும்

வந்தி ராததும் இல்லை, முந்து
பிறவா நிலனும் இல்லை அவ்வயின்
இறவா நிலனும் இல்லை பிறிதில்
என்னைத் தின்னா உயிர்களும் இல்லை
யான்அவை

தம்மைத் தின்னா தொழிந்ததும் இல்லை
அனைத்தே காலமும் சென்றது; யான்இதன்
மேல்இனி
இளைக்குமா றிலனே நாயேன் ?
நந்தாச் சோதிநின் அஞ்செழுத்து நவிலுந்

தந்திரம் பயின்றதும் இலனே தந்திரம்
பயின்றவர்ப் பயின்றதும் இலனே ஆயினும்
இயன்றஓர் பொழுதின் இட்டது மலராச்
சொன்னது மந்திர மாக என்னையும்
இடர்ப்பிறப் பிறப்பெனும் இரண்டின்

கடற்ப டாவகை காத்தல்நின் கடனே. 7

---

*என்னும் சினைவினை முதல் மேலதாய், "யோகி" என்பதனோடு முடிந்தது. பரமயோகி - மேலான யோகி. "பாவையுடன் இருந்த யோகி" என்றது சிவபெருமானது அதிசய நிலையை வியந்ததாம். "அகிலம், நிகிலம்" என்பன எஞ்சாமைப் பொருளை உணர்த்தும் வட சொற்கள். யோனி - பிறப்பு வகையின் உட்பிரிவுகள். நிகலமும் - அனைத்துப் பொருள்களும். இறைவன் செய்வன எல்லாம் சங்கற்ப மாத்திரையான் ஆதல் பற்றி, "நினைந்த நாள்"*

வெண்பா

857. கடலான காமத்தே கால்தாழ்வார்; துன்பம்
அடலாம் உபாயம் அறியார்; – உடலாம்
முழுமலத்தை ஒர்கிலார் முக்கட் பெருமான்
கழுமலத்தைக் கைதொழா தார். 8

---

என்றார். "யாரும், யாவையும்" எனத் திணை விராய் எண்ணப்பட்டன. சிறப்புப் பற்றிப் பின் பல இடத்திலும் உயர்திணை முடிபு கொண்டன. "அவர்" என்பதிலும், "எனக்கு" என்பதிற்போல, 'அவர்க்கு' என நான்காவது விரிக்க. பின் வந்த "தந்தையர், தாயர்" என்பன பொருட்பன்மை பற்றாது இடப் பன்மை பற்றியும், காலப்பன்மையும் பற்றி வந்த பன்மை யாகலின் அவை "யான்" என்னும் ஒருமையோடு மயங்கின. "நிலன்" என்பன உலகங்கள். "பிறிதில்" என்றது. 'இன்னும் கூறில்' என்றபடி. அனைத்து - அத்தன்மைத்து. 'அனைத்தேயாய்' என ஆக்கம் விரிக்க. "இலனே" என்னும் ஏகார வினை எதிர்மறுத்து நின்றது. எனவே, 'திண்ணமாக இளைத்து நிற்கின்றேன்' என்ற தாம். இதன்பின் 'ஆயினும்' என்பது வருவிக்க. நந்தா - கெடாத. சோதி - ஒளி, ஞானம் 'சோதியாகிய அஞ்செழுத்து' என்க. சோதியின் காரணம் சோதியாக உபசரிக்கப்பட்டது. 'அஞ்செழுத்தை நவிலும் தந்திரம்' என்க. தந்திரம் - நூல்; என்றது அதன்கண் கூறப்பட்ட நெறிமுறைகளை, 'பயின்றவரொடு' என ஒடு உருபு தொகுக்கப்பட்டது. அதனானே "பயின்றவர்" என்பதன்பின், பகர ஒற்று மிக்கது. "இயன்றதோர் பொழுது" என்றது, "சொன்னது" என்பத னோடும் இயையும் அதனால் 'கட்டளையின்றி, நேர்ந்த பொழுது செய்யும் இயல்பினேன்' என்றவாறாம். "இட்டது மலரா" என்றதானால், 'இடப்பட்டன மலரல்லாத பிறவாம்' என்பதும், "சொன்னது மந்திரமாக" என்றதனால், 'சொல்லப் பட்டன மந்திரம் அல்லாத பிறவாம்' என்பதும் பெறப்பட்டன. 'இரண்டாகிய கடல்' என்க. இன், வேண்டாவழிச் சாரியை 'நீ அருள் பழுத்து அளித்த கனியாதல் பற்றி இதனை உனக்கு உணர்த்துவேனாயினேன்' என்பது கருத்து.

*857. குறிப்புரை :* "முக்கட் பெருமான்" என்பது முதலாகத் தொடங்கியுரைக்க. "கடலான" என்பதில் ஆக்கம். உவமை குறித்து நின்றது. 'துன்பத்தை அடல் ஆம் உபாயம்' என்க. அடல் - அழித்தல். முழு மலம் - பெரிய அசுத்தம். ஓர்கிலார் - எண்ண மாட்டார். எனவே, 'அதில் பற்றுச் செய்து துன்புறுவர்' என்றபடி. காழியைக் கைதொழாதவர் காமத்தில் மிகுதியாக மூழ்குபவர். துயரினை வெல்லும் வழியை அறியார். உடலாகிய முழுமலத்தையும் ஆராய்ந்தறியார். எனவே காழிப் பெருமானைக் கைதொழுது நற்கதி பெறவேண்டும்.

*கட்டளைக் கலித்துறை*

**858.** தொழுவாள் இவள்வளை தோற்பாள் இவளிடர்க் கேஅலர்கொண்(டு)
எழுவாள் எழுகின்ற தென்செய வோஎன் மனத்திருந்தும்
கழுமா மணியைக் கழுமல வாணனைக் கையிற்கொண்ட
மழுவா ளனைக்கண்டு வந்ததென் றாலொர் வசையில்லையே. 9

*அகவற்பா*

**859.** வசையில் காட்சி இசைநனி விளங்க
முன்னாள் நிகழ்ந்த பன்னீ ருகத்து
வேறுவேறு பெயரின் ஊறின் றியன்ற
மையறு சிறப்பின் தெய்வத் தன்மைப்
புகலி நாயக இகல்விடைப் பாக

அமைநாண் மென்தோள் உமையாள் கொழுந
குன்று குனிவித்து வன்தோள் அவுணர்
மூவெயில் எரித்த சேவகத் தேவ
இளநிலா முகிழ்க்கும் வளர்சடைக் கடவுள்நின்
நெற்றியில் சிறந்த ஒற்றை நாட்டத்துக்

---

*858. **குறிப்புரை :** “கழுமல வாணன” எனப் பின்னர் வருதலால் முதற்கண் வாளா “தொழுவாள்” என்றாள். “இவள்” எனப் பின்னும் கூறியது, அவளது அவல மிகுதியை உணர்த்தற்கு. “இடர்க்கு” என்பது போலும் நான்கன் உருபேற்ற பெயராகலின், அதற்கு, ‘இடர் தீர்தற் பொருட்டு’ என உரைக்க. அலர் - ஊரார் தூற்றும் பழிச்சொல், “கொண்டு” என்றது ‘அதனைப் பொருட்படுத்தாது’ என்றபடி. ‘எழுகின்றது என் செயவோ’ - என்றது, ‘இவள் இவ்வாறு எழுந்து செல்வதால் பயன் அடையப்போகின்றாளா’ என்றபடி. இவளது எழுச்சி கழுமல வாணனைக் கண்டு வந்ததாய் முடியுமாயின் ஓர் வசையில்லை என்க. அஃது இயலாது ஆதலின் மேலும் வசைதான்’ என்பது குறிப்பெச்சம் ‘மனந் திருந்தும்’ என்பது பாடம் அன்று. இது கைக்கிளைத் தலைவி தலைவன் உள்வழிச் சேறல். செவிலி இரங்கிக் கூறியது.*

*859. **குறிப்புரை :** வசை இல் காட்சி - குற்றம் இல்லாத தோற்றம். அஃது என்றும் ஒருபடித்தாய் இருத்தல். ‘காட்சியால்’ என உருபு விரிக்க. இசை - புகழ். சீகாழித் தலம் பன்னிரு யுகங்களில் யுகத்திற்கு ஒன்றாக பன்னிரு பெயரைப் பெற்றது. அப்பெயர்களாவன பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தாராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சைவயம், கழுமலம்’ என்பன. இவை ஞானசம்பந்தர் பாடல்கள்*

காமனை விழித்த மாமுது தலைவ
வானவர் அறியா ஆதி யானே
கல்லா மனத்துப் புல்லறிவு தொடர
மறந்து நோக்கும் வெறுங்கண்நாட் டத்துக்
காண்தொறும் காண்தொறும் எல்லாம் யாண்டை

யாயினும் பிறவும் என்னதும் பிறரதும்
ஆவன பலவும் அழிவன பலவும்
போவதும் வருவதும் நிகழ்வதும் ஆகித்
தெண்ணீர் ஞாலத்துத் திரண்ட மணலினும்
எண்ணில் கோடி எனைப்பல வாகி

இல்லன உளவாய் உள்ளன காணாப்
பன்னாள் இருள்வயிற் பட்டேன் அன்னதும்
அன்ன தாதலின் அடுக்கும் அதென்னெனின்
கட்புலன் தெரியாது கொட்புறும் ஒருவற்குக்
குழிவழி யாகி வழிகுழி யாகி

ஒழிவின் றொன்றின் ஒன்றுதடு மாற
வந்தாற் போல வந்த(து) எந்தைநின்
திருவருள் நாட்டம் கருணையின் பெறலும்
யாவையும் எனக்குப் பொய்யெனத் தோன்றி
மேவரும் நீயே மெய்யெனத் தோன்றினை

ஓவியப் புலவன் சாயல்பெற எழுதிய
சிற்ப விகற்பம் எல்லாம் ஒன்றித்
தவிராது தடவினர் தமக்குச்
சுவராய்த் தோன்றுந் துணிவுபோன் றனவே. 10

---

*பலவற்றில் எடுத்தோதி அருளப்பட்டிருத்தல் காண்க. மை - குற்றம். அமை நாண் தோள் - மூங்கில் நாணத் தக்க தோள். சேவகம் - வீரம். மாமுது தலைவன் - பெரிய, பழைய தலைவன். ஆதியான் - முதற் கடவுள். கல்லா உளம் - கல்வியைக் கல்லாத மனம். 'அதன்கண் தோன்றும் புல்லறிவு' என்க. தொடர - தொடர்ந்து நிகழ்தலால். மறந்து - ஆன்றோர் உரைகளை மறந்து. வெறுங் கண் - கல்வியறிவொடு கூடாத கண். இதனை, "புண்" என்றார் திருவள்ளுவர். 'தண்' என்பது பாடம் அன்று. நாட்டம் - பார்வை. 'நாட்டத்தினால்' என மூன்றாவது விரிக்க. 'யாண்டை எல்லாமாயினும்' என மாற்றிக்கொள்க. "பிற" என்பதன்பின்னும் 'ஆயின்' என்பது வருவித்து 'பிறவாயினும்' என்க. தனித் தனிச் சுட்டிக் கூறலின் "என்னது, பிறரது" என*

ஒருமையாற் கூறினார். 'வெறுங்கண் நாட்டத்துக் காண்டொறும் என்றதும், பிறரதும் ஆவன' என்க. எனவே, 'அஃது உண்மையன்று' என்றதாயிற்று. 'ஆவன ஆகிய பலவும் அழிவனவேயன்றி, ஒன்றேனும் நிலைத்திருப்பதன்று' என்பதாம். பின் வந்த "பலவும்" என்பதற்குமுன் 'அவை' என்பது வருவிக்க. "போவது" முதலிய மூன்றும் இறப்பு, எதிர்வு, நிகழ்வு ஆகிய கால நிகழ்ச்சிகளைக் குறித்தன. தெள் நீர், கடல் நீர். 'நீரால்' என உருபு விரிக்க. "ஞாலம்" என்றது கரையை உளவாதல் - தோன்றுதல். காணா - காணப் படாது. துவ்விகுதி தொகுத்தலாயிற்று. 'இல்லன உள்ளன போலவும், உள்ளன இல்லன போலவும் தோன்ற' என்க. இருள் - அறியாமை என்றது நிலையாததே. அடுக்கும் - பொருந்தும். 'அஃது' என்னும் ஆய்தம் தொகுக்கப்பட்டு 'அது' என நின்றது. என் எனின் - எவ்வாறு எனின். கொட்புறுதல் - சுழலுதல். ஒன்றின் - ஒரு பொருளில். ஒன்று - அதனின் வேறாய ஒன்றின் உணர்வு. தடுமாற - திரிவுபட. 'ஒழிவின்றி தடுமாற' என்க. 'இன்றி' என்னும் வினையெச்சத்து ஈற்று இகரம் செய்யுளுள் உகரமாய்த் திரிந்தது. 'கட்புலன் இல்லா ஒருவனது தடுமாற்றம் அவன் கண்பெற்றுழி நீங்குதல்போல, வெறுங் கண் நாட்டத்தால் எனக்கு உண்டாய தடுமாற்றம். நினது அருள் நாட்டம் பெற்றவழி நீங்குவதே' என்பார். "அன்னதும் அன்னதே அடுக்கும்" என்றார். கருணையின் - நீ அருளுதலின். (வழங்கினமையால்) மேவரும் - விரும்பத் தகும். விகற்பம் - வேறுபாடு. துணிவு - உண்மையுணர்வு 'போன்றது என' என்பது 'போன்றென' எனக் குறைந்து நின்றது. ஓவிய வகைகள் கட்புலனுக்கு வேறு வேறு பரிமாணம் உடைய வேறு வேறு பொருள்களாய்த் தோன்றுமாயினும் மெய்ப் புலனுக்கு ஓவியந் தோன்றாது அவற்றிற்கு நிலைக்களமாகிய சுவர் ஒன்றே தோன்றுதல் போல, மருள் நாட்டத்திற்கு அவ்வப் பொருளும் தனித் தனியே நிலை பெறும் பொருள்கள் தோன்றுமாயினும் திருவருள் நாட்டத்தில் திருவருளாகிய ஒன்றினையே பற்றுக் கோடாகப் பற்றி நிலைபெறுதல் தோன்றும்' என்றபடி.

***860. குறிப்புரை :*** "இன வேகம்" என்பது முதலாகத் தொடங்கியுரைக்க. இனம் - கூட்டம். வேகம் - விரைந்த செலவு. கலியான் இமிரும் பல் நா - ஆரவாரத்தோடு ஒலிக்கின்ற பல நாக்குக்கள். 'இமிரும்' என்னாது, 'நிமிரும்' எனினும் ஆம். 'பாம்புகளின் பல நாக்குக்களை யுடைய சடை' என்க. பூம் புகலி - அழகிய சீகாழி. இகழிப் போது எனவே எழுந்திருந்தாள் - 'கொன்றை பூ மாலை' என்று சொல்லிக் கொண்டே புறப்பட்ட இவள். என் செய்வாள் - என்ன செய்து அதனை அடைவாள். (ஒன்றையும் மாட்டுவாளல்லள்;

### வெண்பா

860. எனவே எழுந்திருந்தாள் என்செய்வாள் இன்னம்
சினவேறு காட்டுதிரேல் தீரும் – இனவேகப்
பாம்புகலி யால்நிமிரும் பன்னாச் சடைமுடிநம்
பூம்புகலி யான்இதழிப் போது. 11

### கட்டளைக் கலித்துறை

861. போதும் பெறாவிடில் பச்சிலை
உண்டு; புனலுண்டெங்கும்
ஏதும் பெறாவிடில் நெஞ்சுண்டன்
றேஇணை யாகச்செப்பும்
சூதும் பெறாமுலை பங்கர்தென்
தோணி புரேசர்வண்டின்
தாதும் பெறாத அடித்தா
மரைசென்று சார்வதற்கே. 12

திருச்சிற்றம்பலம்

---

*ஆகையால், இவள் மாட்டு அன்புடையவர்களே!) இன்னம் சின ஏறு காட்டுதிரேல் தீரும் - இனியொரு முறையும் முன்பு அப்புகலிப் பெருமானை இங்குச் சுமந்து வந்த சினவிடையைக் காட்டுவீர்களாயின் இவள் நோய் தீரும் (அஃதறியாது வேறு பரிகாரங்களை நீவிர் செய்து பயன் என்!) இது கைக்கிளைத் தலைவியது வேறுபாடு கண்டு வெறியாட்டெடுத்த நற்றாய் செவிலித் தாயரை நோக்கித் தோழி அறத்தொடு நின்றது. "எழுந்திருந்தாள்" என்பது ஒருசொல்.*

***861. குறிப்புரை :*** *காய் கனிகளை நோக்கப் போது (பூ) எளிதாகலின், "போதும்" என்னும் உம்மை இழிவு சிறப்பு. "ஏதும்" என்னும் உம்மையும் அப்பொருட்டு. 'எங்கும் பச்சிலை உண்டு; புனல் உண்டு' என்க. "அன்றே" என்பது தேற்றம். செப்பு - கிண்ணம். சூது - சூதாடு கருவி 'இவை இணையாகப் பெறா முலை' என்க. முலை, சினையாகுபெயர். இணை - ஒப்பு. 'வண்டு பெறாத' என இயையும். இன் தாது - இனிய மகரந்தம். 'தேனே யன்றித் தாதும் பெறாத தாமரை' என்க. எனவே, 'தாமரை போல்வது அல்லது தாமரை அன்றென்ற வாறாம். ஆகவே, 'வண்டு தாதும் பெறாத தாமரை' என்றது விபாவனையாம் 'அடித் தாமரை சென்று சார்வதற்குப் போதும் பெறாவிடில் பிற உண்டு?' என்க.*

*(இப்பிரபந்தத்தில் இன்னும் 18 பாடல்கள் இருக்க வேண்டும். ஆயினும் நல்ல பதிப்புக்களில் இந்த 12 பாடல்களே உள்ளன. ஆனூர் சிங்காரவேல் முதலியார் பதிப்பதில் எஞ்சிய பாடல்கள் காணப்படுவதாகவும், அவைகளை அறிஞர்கள் 'ஆசிரியர் வாக்கல்ல' என்று கருதுவதாகவும் சென்னைச் சைவ சித்தாந்த சமாஜத்து 1940 ஆம் ஆண்டுப் பதிப்பில் குறிப்புத் தரப்பட்டுள்ளது. ஆனூர் சிங்காரவேல் முதலியார் பதிப்புக் கிடைக்கவில்லை).*

***திருக்கழுமல மும்மணிக்கோவை முற்றிற்று.***

# திருவிடைமருதூர் மும்மணிக்கோவை

சிவபெருமான் கோயில் கொண்டருளிய திருவிடைமருதென்னும் திருப்பதியை அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறையென முறைப்படத் தொடுத்த முப்பது செய்யுட்களாற் போற்றிப்பரவிய பனுவலாதலின் இது திருவிடைமருதூர் மும்மணிக்கோவை யென்னும் பெயர்த்தாயிற்று.

'தெய்வத்தாமரை செவ்வியின் மலர்ந்து' எனத் தொடங்கும் இப்பிரபந்தத்தின் முதற்பாடல் உமையொருபாகராகிய அர்த்தநாரீச்சுரர் திருக்கோலத்தின் இயல்பினை அழகுற விரித்துரைக்குந்திறம் படிக்குந் தோறும் இன்பந்தருவதாகும்.

அடியார்கள் பிறிதொன்றில் ஆசையின்றிப் பருகி மகிழ்தற்குரிய பெருந்தேனாக இறைவன் விடைமருதில் வீற்றிருந்து அருள்புரியும் சிறப்பினையும் அத்திருப்பதியை அடைந்து இறைவனை வழிபட்டதனால் தாம் பெற்ற பெருநலங்களையும் அடிகள் விரித்துரைப்பதாக அமைந்தது.

வருந்தேன் இறந்தும் பிறந்தும் மயக்கும் புலன்வழிபோய்ப்
பொருந்தேன் நரகிற் புகுகின்றிலேன்புகழ் மாமருதிற்
பெருந்தேன் முகந்துகொண் டுண்டு பிறிதொன்றி லாசையின்றி
இருந்தேன் இனிச்சென் றிரவேன் ஒருவரை யாதொன்றுமே.

எனவரும் பாடலாகும். 'அந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த, பொந்தைப் பரவி நாம் பூவல்லி கொய்யாமோ' என்ற திருவாசகத் தொடர்ப் பொருளை உளங்கொண்ட திருவெண்காட்டடிகள் இப்பாடலில் 'புகழ்மாமருதிற் பெருந்தேன்' என இடைமருதீசனைப் போற்றியதிறம் நினைந்து மகிழத்தகுவதாம்.

"இடைமருதினை இடமாகக் கொண்டு எழுந்தருளிய என் தந்தையே, அடியேன் பிறவிச்சுழியில் அகப்பட்டுத் தடுமாறும் போது யானுற்ற துன்பத்தினையும் என்னைப் பெறும் நிலையில் என் தாயுற்ற துன்பத்தினையும் உள்ளவாறு அறிவார் உயிர்க்குயிராகிய நின்னைத்தவிர வேறு யாருளர்? பெருகிய துன்பந்தருவதாகிய இப்பிறவிச் சுழலிற்பட்டு யான் இனிப்பிறக்கும் வலியுடை யேனல்லேன் நின்னை உறுதுணையாகப் பற்றி வழிபடும் ஒரு நெறியைத் தவிரப் பிறவி நோய் களைதற்குப் பிறதொரு வழியும் இல்லை. மீண்டு வாராவழி அருளும் நின் திருவருள் நெறியில் ஒழுகுதற்கு விருப்பு வெறுப்பற்ற ஒருமை மனம் வேண்டும். ஐம்புல வேடர்களின் ஆணைவழி கட்டுப்பட்டு நின்று தானல்லாதவற்றைத் தானெனக் கருதும் மயக்க

*நிலையினையுடையது என்மனம். இம்மனத்தைக் கொண்டு நின்னை நினைந்து போற்றுதல் எங்ஙனம் இயலும்? கல்லைத் தெப்பமாகக் கொண்டு கடலைக் கடக்க வெண்ணிய பேதையர் என்னைத்தவிர வேறு யாருளர்? பிறப்பெனும் பெருங்கடலை அடியேன் கடத்தலும் வேண்டும். அங்ஙனங் கடத்தற்கு உறுதுணையாக நின்னை நினைத்தலும் வேண்டும். ஒரு நெறியில் நின்று நின்னை நினைந்து போற்றும் வண்ணம் என் மனத்தை நீ திருத்தி யருளுதல் வேண்டும்" எனத் திருவெண் காட்டடிகள் இடைமருதீசனை வேண்டுவதாக அமைந்தது இம்மும்மணிக்கோவையின் நான்காம் பாடலாகும். ''அவனருளாலே அவன்றாள் வணங்கி'' எனத் திருவாதவூரடிகள் அருளியவண்ணம் இறைவனை நினைந்து போற்றுதற்கும் அவனருள் வேண்டும் என்ற உண்மை இப்பாடலில் நன்கு அறிவுறுத்தப் பெற்றமை காணலாம்.*

*"செல்வத்துடன் வாழ்ந்திருக்கின்றோமெனச் செருக்குற்று இரவலர்க்கு உதவாது தன்னுயிரைப் பாதுகாத்தலொன்றையே குறிக்கொண்டு தன்னால் ஏனையுயிர்கள் படுந் துன்பத்தினைச் சிறிதும் பொருட்படுத்தாது இம்மைப் பயனும் மறுமைப் பயனும் இல்லையென்று துணிந்து தாம் விரும்பியவாறு செய்தொழுகி மின்னலைப்போல் தோன்றி யழியும் இயல்பினவாகிய உலகியற் செல்வத்தை நிலைபேறுடையதாக விரும்பித் தன்னையும் ஒப்பற்ற பெருந்தலைவராக மதித்து வாழ்தல் கீழ்மக்கள் வாழ்வாகும். இறைவனுடைய திருவடிகளைப் பற்றி நின்று உலகியலில் நேரும் இடையூறுகளைக் கண்டு அஞ்சுதலைவிடுத்து மக்கள் மனைவி சுற்றம் செல்வம் என்பவற்றைப் பொருளெனக் கருதாது இறைவனது திருவருளையே பொருளாக எண்ணி இந்திர பதத்தால் அடையும் பெருஞ்செல்வமும் எட்டுச் சித்திகளும் தாமே வந்த காலத்தும் அவற்றை மறுத்தொதுங்கிக் கிழிந்த கந்தையும் ஒட்டிட்டுத் தைத்த கோவணமும் அறுந்த கீளுடையுமாகக் கிடைத்தவற்றை யுடுத்துச் சிதைவுற்ற ஓடொன்றை உண்கலனாகக் கையில் ஏந்தித் தம்மை நோக்கி வந்து பிச்சையிடுவோர் உளராயின் அவர் தந்தவற்றை நின்ற நிலையிலேயே யுண்டு தரையையே பாயாகக்கொண்டு நீங்காத சாந்தம் என்னும் மனையைக் கூடி எவ்வுயிர்களையும் தம்மக்களெனக் கருதி யாவரிடத்தும் ஒப்ப அன்பு செய்தல் அருட்செல்வர்களாகிய கடவுட்டொண்டர்களின் உயர்ந்த வாழ்வாகும். இவ்விருவகை வாழ்க்கையினையும் ஆராய்ந்து நோக்குங்கால், விலங்குகளது காலின் குளம்படியாகிய சிறிய பள்ளத்தில் தங்கிய நீரும் ஊழிக்காலத்தில் அளப்பரியதாய்ப் பொங்கிய பெரும் கடல் நீரும் நீரென்ற பொதுமையான் தம்முள் ஒக்குமாயினும் அளவாற் சிறிதும் ஒவ்வாதனவாம். ஆதலின் சிவனடி யார்களுக்குத் தொண்டுபட்டு அவர்கள் குணத்துடன் நெடுங்காலம் பழகி அன்னோர் காலாலிட்ட பணியைத் தலையாலே செய்து அத்தொண்டி*

னாலுளதாம் பேற்றினை அடைந்து இன்புறுதலொன்றைத் தவிரப் பெறத்தக்கபேறு பிறிதொன்றுமில்லை” என அடிகள் இடைமருதீசனைப் பணிந்து போற்றுவதாக அமைந்தது, இம் மும்மணிக் கோவையின் ஏழாம் பாடலாகும். இதன்கண் தாம் மேவன செய்தொழுகும் கயவர் வாழ்வும் இறைவனது அருள் வழியொழுகும் மெய்த்தொண்டர் வாழ்வும் இன்னவென அடிகள் விளக்கிய திறம் அடிகளது செம்மை மனத்தின் சிறப்பினை இனிது புலப்படுத்தல் காணலாம்.

சேணுயர் மருதமாணிக்கத் தீங்கனியாகிய சிவபோகத்தை விளைக்குந் தொழிலினராகிய தொண்டரது உழவின் திறத்தையும், அவ்வுழவினை மேற்கொள்ளாது மனமெனும் புனத்தை வறும் பாழாக்கித் தமக்கும் பிறர்க்கும் பயனின்றிக் கழியும் ஏனையோரது இழிவையும் புலப்படுத்துவது, இம் மும்மணிக்கோவையின் பத்தாம் பாடலாகும். மனமெனும் புனத்தில் முளைத்துள்ள வஞ்சனையாகிய மரத்தை வேருடன் அகழ்ந்து நீக்கி, அன்பெனும் பாத்திகோலி மெய்மையாகிய எருவிட்டுப் பத்தியென்னும் விதையை விதைத்து, ஆர்வமாகிய நீரைப் பாய்ச்சி, ஐம்பொறிகளென்ற பட்டி மாடுகள் உள்ளே நுழையாதபடி சாந்தமாகிய வேலியை அமைத்துக் காக்க, ஞானமெனும் முளை முளைத்தெழுந்து அருளாகிய பசுந்தளிர்கள் தளிர்த்து விளங்க, ஒழியாத காமம் வெகுளியாகிய களைகளைக் களைந்தெறிந்து சேமமாகக் காத்துவரும் நிலையில் அப்பயிர் செம்மையாக வளர்ந்து மெய் மயிர் முகிழ்த்துக் கண்ணீரரும்பிக் கடிமலர் மலர்ந்து திருவைந்தெழுத்தெனுங் காய் தோன்றி, நீலகண்டமும் முக்கண்ணும் எட்டுத் தோள்களும் ஐந்து திருமுகமும் பவளம் போலும் செந்நிறமுடையதாய் வெள்ளை நீறுபூசி அறுசுவையதனினும் மிக்க சுவையுடையதாய்க் காணினும் கேட்பினும் கருதினும் இனிமை தருவதாய் நிலவெல்லையைக் கடந்து உயர்ந்த மருத மாணிக்கமென்னும் இனிய கனி மெல்ல மெல்ல முற்றிப் பழுத்து எளிதிற் கைவரப் பெற்றுத் தொண்டவுழவராகிய மெய்யடியார்கள் அக்கனியினை இனிதின் அருந்திச் செம்மாந்திருப்பார்கள். இங்ஙனமாகவும் சிலர் தம் மனமாகிய புனத்தைப் பண்படுத்தாது வெறும் பாழாக்கிக் காமக் காடுமூடி ஐம்புல வேடர்கள் ஆறலைத்துத் திரியவும் சிற்றின்பமாகிய கானல்நீர் ஓடவும் கல்லாவுணர்வாகிய மானினம் வருந்தியுழலவும் ஆசையெனும் விதை விழுந்து யானெனப் பெயர் கூறப்பட்ட நச்சு மரமாக முளைத்து நீண்டு வளர்ந்து பொய்மையாகிய கிளைகளை எம்மருங்கும் விட்டுப் பாவமாகிய தழைகளைத் தழைத்துப் பூவென்று சொல்லும்படி கொடுமையென்ற அரும்புகளை யீன்று தீமை மலர்ந்து துன்பமாகிய பல காய்களைக் கொத்தாகத் தாங்கிப் பின்பு அவை மரணமெனும் கனியாகப் பழுத்து உதிர நரகிடை வீழ்ந்து தமக்கும் பிறர்க்கும் பயனின்றிக் கணப்பொழுதில் இறந்தொழிகின்றார்கள் என உருவக

அணியமைய இப்பாடலில் அடிகள் விரித்துக் கூறியுள்ளார். இதன்கண் தொண்ட உழவரது அரிய முயற்சியாக அடிகள் வெளியிட்டருளிய செய்திகள்,

மெய்ம்மையால் உழவைச்செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப் பொறையெனு நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக்கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பராகிற் சிவகதி விளையுமன்றே.

எனவரும் திருநாவுக்கரசர் திருப்பாடற்குச் சிறந்த விளக்கவுரைப் பகுதியாக அமைந்தமை ஒப்புநோக்கி யுணரத்தகுவதாகும்.

உயிர் எவ்வியல்பினது என ஆராயப்புகுந்து தத்துவ சோதனை செய்து தம்மியல்பினை யுணராது வருந்திய அடிகள், இறைவனது திருவருள் நாட்டம் பெற்றவுடனே உயிராகிய உம்மையும் இறைவனையும் உணரப் பெற்ற திறத்தை விரித்து உரைப்பது, 'மேவிய புன்மயிர்த் தொகையோ' எனத் தொடங்கும் பதின்மூன்றாம் பாடலாகும். ''நாடி, எலும்பு, நரம்பு முதலிய உடலுறுப்புக்களுள் உயிராகிய யான் யார்? என்று என்னைத் தேடிப் பார்த்தும் என்னைத் தெளிய அறிந்து கொண்டேனல்லேன். இவ்வாறு தம்மைப் பற்றி ஆராய்ந்தறிகின்ற ஆராய்ச்சியறிவின் கண்ணே இதனைத் தெளிவிப்பதாகிய அறிவு வேறு உண்டென்று ஆராய்ந்து நோக்கி அவ்வாறு நாடுங்கால் விளங்கித் தோன்றும் இறைவனது திருவடி ஞானத்தால் அம்முதல்வனையும் உணர்ந்து அவனது பேரறிவினுள்ளே தாம் அடங்கி நின்று அங்ஙனம் அறியும் பொருளாகிய தம்மையும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அங்ஙனம் உணரும் பயிற்சி பெறாதார் உயிராகிய தம்மை அறிய வல்லுநரல்லர் என்பதனை,

நாடியோ என்போ நரம்புசீக் கோழையோ
தேடி யெனையறியேன் தேர்ந்தவகை - நாடி அரன்
தன்னாலே தன்னையுங் கண்டு தமைக்காணார்
என்னாம் என அறிவார் இன்று

எனவரும் வெண்பாவில் ஆசிரியர் மெய்கண்ட தேவநாயனார் தெளிவாக விளக்கியுள்ளார். இவ்வெண்பா திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில் வரும் 'மேவிய புன்மயிர்த் தொகையோ' என்ற முதற் குறிப்புடைய திருப்பாடற் பொருளை அடியொற்றி யமைந்த தென்பது இவ்விரு செய்யுட்களையும் ஒப்புநோக்கி யுணர்வார்க்கு இனிது விளங்கும். "நின்னைக் காணாமாந்தர், தன்னையுங் காணாத் தன்மையோரே" என ஓதியவாற்றான் "ஏனைப் பசு பாசங்களும் சிவஞானத்தானன்றி அறியப்படா வென்பது

போதரும்'' என்றும், ''ஆன்மா பிற வுயிர்களைத் தனித்த முதலாய்ப் பிரித்தறியுமாறு இல்லையாயினும் சிவத்தைத் தரிசிக்கும்வழித் தான் அதுவாய் நின்று தன்னையறியுமாறு போலப் பிறவுயிர்களையும் அச்சிவத்தின் வண்ணமாய்க் கண்டறிதல் அமைவுடைத்தென்பது,

'என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டேன்
நின்னிலை யனைத்தையுங்கண்டேன் என்னே
நின்னைக் காணாமாந்தர்
தன்னையுங் காணாத் தன்மையோரே'

என்பதனாற் புலனாம்'' என்றும் சிவஞான முனிவர் இத்திருப்பாடற் பொருளை இனிது விளக்கியுள்ளார். சிவரூபத்தால் ஆன்ம தரிசனமும் சிவதரிசனத்தால் ஆன்ம சுத்தியும் ஆமாறு கூறிற்று இப்பாடல் எனக் கொள்ளுதல் பொருந்தும்.

சிவபெருமானை நினையாமலும் திருவைந்தெழுத்தினை முறைப்படி ஓதாமலும் பச்சிலையும் நீருங்கொண்டு வழிபாடு செய்யாமலும் வேறு யாராகவோ நினைக்கும் புறச்சமயத்தாருள்ளத்திலும் இடைமருதீசன் பொன்னார் திருவடியே நண்ணி அருள் வழங்கும். ஆறு சமயத்தார் செய்யும் வழிபாடுகளெல்லாம் இடைமருதீச னொருவனையே வந்து சார்வன என்னும் உறுதியுடையவர் திருவெண்காட்டடிகளென்பது,

ஓராதே யஞ்செழுத்து முன்னாதே பச்சிலையும்
நேராதே நீரும் நிரப்பாதே - யாராயோ
எண்ணுவா ருள்ளத் திடைமருதர் பொற்பாதம்
நண்ணுவா மென்னுமது நாம்.
அன்றென்றும் ஆமென்றும் ஆறு சமயங்கள்
ஒன்றொன்றோ டொவ்வா துரைத்தாலும் - என்றும்
ஒருதனையே நோக்குவா ருள்ளத் திருக்கும்
மருதனையே நோக்கி வரும்

எனவரும் மும்மணிக்கோவை செய்யுட்களால் இனிது புலனாம். இப்பாடல்கள்

'எங்கேனும் யாதாகிப் பிறந்திடினுந் தன்னடியார்க்
கிங்கேயென் றருள் புரியும் எம்பெருமான்'

என ஆளுடைய பிள்ளையாரும்,

'விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ்செய்து
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாகும்'

*"ஆறுசமயத் தவரவரைத் தேற்றுந் தகையன"*

*"ஆறொருவ ருள்குவா ருள்ளத்துள்ளே*
*அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந்தோன்றும்"*

*என ஆளுடைய அரசரும் அருளிய பொருளுரைகளை இனிது புலப்படுத்தி அடிகளது சமயப் பொதுமையை நன்கு அறிவுறுத்துவனவாதல் காண்க.*

*உயிர்களது நலங்கருதி உடல், கருவி, உலகு, நுகர்பொருள் என்பவற்றைத் தந்தருளிய இறைவன், தன் அருளாரின்பப் பெருவாழ்வை எவ்வுயிர்க்கும் உரியதாக அமைத்து வைத்துள்ளானாதலின், அவன்பால் ஒரு சிறிதும் குற்றமில்லை. அப்பெருமானை நினைந்து போற்றி அவனருளால் இடர்ப் பகைகளைக் களைந்து கூற்றுவனது ஆற்றலை யழித்து இறப்பையும் பிறப்பையும் இகழ்ந்து வானோரது பசுவாகிய காமதேனுவின் கன்றைப் போன்று கவலையற்றுத் திரியும் பேரின்ப வாழ்வினைப் பெறும் வசதி, எல்லா மக்களுக்கும் பொதுவாக இறைவனால் அளிக்கப்பெற்றுளது. அவ்வசதியைப் பயன்படுத்திக் கொள்ளாத தீவினையாளர் கண்ணதே குற்றம். அஃது எவ்வாறென்றால், அறுசுவையுடன் கூடிய நல்ல உணவு சமைக்கப் பெற்றிருக்கவும் அதனைப் புசியாது ஒருவன் பசியால் வருந்துதல் அவ்வுணவின் குற்றமன்று. நல்ல மணப் பொருள் விரவிய இன் சுவைத் தண்ணீர் இருக்கவும் நீர் வேட்கையுடையானொருவன் அந்நீரைப் பருகாது வருந்துதல் நீரின் குற்றமன்று. நன்னிழலைத்தரும் குளிர் பூஞ்சோலை வழியிடையேயிருக்க அவ்வழியே செல்வானொருவன் அதன்கண் தங்கி இளைப்பாறாது உடல் வியர்க்கக் கடுவெயிலில் நடந்து வருந்துதல் நிழலின் குற்றமன்று என இவ்வாறு சார்ந்தவர்க்கு நலஞ் செய்யும் சங்கரனாகிய இறைவன் எவ்வுயிர்க்கும் தன்னருளை உரிமைப்படுத்தி வைத்துள்ள திறத்தையும் அப்பெருமானை நினைந்து உய்தி பெறாத தீவினையாளர்களது அறியாமையையும் கூறி இரங்குவதாக அமைந்தது, இம்மும்மணிக் கோவையின் பதினாறாம் பாடலாகும்.*

*இறைவனது திருநாமமாகிய திருவைந்தெழுத்தை யோக ஞானங்களால் முதிர்ந்த துறவிகள் ஓதினாலும் அன்றி மனைவி மக்களொடு வாழும் ஏனையோர் ஓதினாலும் அவ்விரு திறத்தாரும் இறைவனருளில் திளைத்த லுறுதியென்பது திருவெண்காட்டடிகள் கருத்தாகும். உடல் வலியிற் சிறந்தானொருவனால் உயர வீசியெறியப்பட்டு விரைந்து சென்ற கல்லும், வலியில்லாதானொருவனால் வீசப்பட்டுத் தாமதித்து மேலே சென்ற கல்லும் நிலத்தின் இயல்பாகிய ஈர்ப்பாற்றலால் நிலத்தின்கண் ஒருங்கு விழக் காண்கின்றோம். அதுபோல இறைவனது திருநாமமும் தன்னையோதுவாரது*

ஞானத்தின் வன்மை மென்மை காரணமாக மாறுபடாது தனக்கு ஆதாரமாகிய இறைவனருளால் ஈர்க்கப்பட் ஓதுவாரனைவர்க்கும் ஒப்ப நலஞ் செய்யுஞ் சிறப்புடைத் தென்பதனை,

வல்லா னொருவன் கைம்முயன் றெறியினும்
மாட்டா ஒருவன் வாளா எறியினும்
நிலத்தின் வழாஅக் கல்லேபோல்
நலத்தின் வழார்நின் நாமம் நவின்றோரே.

எனவருந் தொடரால் அடிகள் விளக்கிய திறம் வியந்து போற்றத்தக்கதாகும்.

இறைவனை வழிபட்டு வரம் பல பெற்று வானவர் முனிவர் அடியார்கள் இன்னின்னாரெனக் குறித்துப் போற்றுவது, இம்மும்மணிக்கோவையின் இருபத்தெட்டாம் செய்யுளாகும். இதன்கண்,

வித்தகப் பாடல் முத்திறத் தடியரும்
திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்
அத்தகு செல்வத் தவமதித் தருளிய
சித்தமார் சிவ வாக்கிய தேவரும்

எனச் சைவ சமய குரவர் நால்வரையும் பெருஞ்செல்வத்தைத் துறந்த செம்மனச் செல்வராகிய சிவவாக்கிய தேவரையும் குறித்துப் போற்றிய அடிகள்,

“வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்தும்
ஓடும் பல்நரி யூளைகேட் டரனைப்
பாடின வென்று படாம்பல வளித்தும்
குவளைப் புனலில் தவளை அரற்ற
ஈசன் றன்னை யேத்தின வென்று
காசும் பொன்னுங் கலந்து தூவியும்
வழிபடும் ஒருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை யெள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலும் அவன் இப் பிறப்புக்கென்ன
இடித்துக் கொண்டவன் எச்சிலை நுகர்ந்தும்
மருத வட்டத் தொருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி
உம்மைப் போல எம்மித் தலையும்
கிடத்தல் வேண்டுமென் றடுத்தடுத் திரந்தும்
கோயில் முற்றத்து மீமிசைக் கிடப்ப

*வாய்த்த தென்று நாய்க்கட்ட மெடுத்தும்*
*காம்பவிழ்ந் துதிர்ந்த கனியுருக் கண்டு*
*வேம்புகட் கெல்லாம் விதானம் அமைத்தும்*
*விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று*
*புரிகுழற் றேவியைப் பரிவுடன் கொடுத்த*
*பெரிய அன்பின் வரகுண தேவர்"*

*எனச் சிவபத்திச் செல்வராகிய வரகுண தேவர் செய்த பேரன்பின் செயல்களை விரித்துரைத்துப் போற்றியுள்ளார். இங்குப் புகழ்ந்து போற்றப் பெற்ற பெரிய அன்பின் வரகுணதேவராவார்,*

*"புயலோங் கலர் சடை யேற்றவன் சிற்றம்பலம் புகழும்*
*மயலோங் கிருங்களியானை வரகுணன்"*

*எனவும்,*

*"வரகுணனாந் தென்னவன் ஏத்து சிற்றம்பலத்தான்"*

*எனவும் திருவாதவூரடிகளாற் போற்றப் பெற்ற முதல் வரகுண பாண்டியர் ஆவார்.*

## பட்டினத்து அடிகள்

*அருளிச்செய்த*

## 28. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை

***அகவற்பா***

*திருச்சிற்றம்பலம்*

862. தெய்வத் தாமரைச் செவ்வியின் மலர்ந்து
வாடாப் புதுமலர்த் தோடெனச் சிவந்து
சிலம்புங் கழலும் அலம்பப் புனைந்து
கூற்றின் ஆற்றல் மாற்றிப்போற் றாது
வலம்புரி நெடுமால் ஏன மாகி.

நிலம்புக்(கு)
ஆற்றலின் அகழத் தோற்றாது நிமிர்ந்து
பத்தி அடியவர் பச்சிலை இடினும்
முத்தி கொடுத்து முன்னின் றருளித்
திகழ்ந்துள தொருபால் திருவடி; அகஞ்சேந்து

மறுவில் கற்பகத் துறுதளிர் வாங்கி
நெய்யில் தோய்த்த செவ்வித் தாகி
நூபுரங் கிடப்பினும் நொந்து தேவர்
மடவரல் மகளிர் வணங்குபு வீழ்த்த
சின்னப் பன்மலர் தீண்டிடச் சிவந்து

பஞ்சியும் அனிச்சமும் எஞ்ச எஞ்சாத்
திருவொடும் பொலியும் ஒருபால் திருவடி
நீலப் புள்ளி வாளுகிர் வேங்கைத்
தோலின் கலிங்கம் மேல்விரித் தசைத்து
நச்செயிற் றரவக் கச்சையாப் புறுத்துப்

பொலிந்துள தொருபால் திருவிடை இலங்கொளி
அரத்த ஆடை விரித்துமீ துறீஇ
இரங்குமணி மேகலை ஒருங்குடன் சாத்திய
மருங்கிற் றாகும் ஒருபால் திருவிடை
செங்கண் அரவும் பைங்கண் ஆமையுங்

கேழற் கோடும் வீழ்திரள் அக்கும்
நுடங்கு நூலும் இடங்கொண்டு புனைந்து
தவளநீ றணிந்ததோர் பவளவெற் பென்ன

ஒளியுடன் திகழும் ஒருபால் ஆகம்
வாரும் வடமும் ஏர்பெறப் புனைந்து

செஞ்சாந் தணிந்து குங்குமம் எழுதிப்
பொற்றா மரையின் முற்றா முகிழென
உலகேழ் ஈன்றும் நிலையில் தளரா
முலையுடன் பொலியும் ஒருபால் ஆகம்
அயில்வாய் அரவம் வயின்வயின் அணிந்து

மூவிலை வேலும் பூவாய் மழுவுந்
தமருகப் பறையும் அமர்தரத் தாங்கிச்
சிறந்துள தொருபால் திருக்கரஞ் செறிந்த
சூடகம் விளங்கிய ஆடகக் கழங்குடன்
ஒம்மென் பந்தும் அம்மென் கிள்ளையும்

தரித்தே திகழும் ஒருபால் திருக்கரம்
இரவியும் எரியும் விரவிய வெம்மையின்
ஒருபால் விளங்குந் திருநெடு நாட்டம்
நவ்வி மானின் செவ்வித் தாகிப்
பாலிற் கிடந்த நீலம் போன்று

குண்டுநீர்க் குவளையின் குளிர்ந்து நிறம்பயின்று
எம்மனோர்க் கடுத்த வெம்மைநோய்க் கிரங்கி
உலகேழ் புரக்கும் ஒருபால் நாட்டம்
நொச்சிப் பூவும் பச்சை மத்தமும்
கொன்றைப் போதும் மென்துணர்த் தும்பையும்

கங்கை யாறும் பைங்கண் தலையும்
அரவும் மதியும் விரவத் தொடுத்த
சூடா மாலை சூடிப் பீடுகெழு
நெருப்பில் திரித்தனைய உருக்கிளர் சடிலமொடு
நான்முகம் கரந்த பால்நிற அன்னம்

காணா வண்ணங் கருத்தையுங் கடந்து
சேணிகந் துளதே ஒருபால் திருமுடி,
கடவுட் கற்பின் மடவரல் மகளிர்
கற்பக வனத்துப் பொற்பூ வாங்கிக்
கைவைத்துப் புனைந்த தெய்வமாலை

நீலக் குழல்மிசை வளைஇமேல் நிவந்து
வண்டும் தேனும் கிண்டுபு திளைப்பத்

திருவொடு பொலியும் ஒருபால் திருமுடி;
இனைய வண்ணத்து நினைவருங் காட்சி
இருவயின் உருவும் ஒருவயிற் றாகி

வலப்பால் நாட்டம் இடப்பால் நோக்க
வாணுதல் பாகம் நாணுதல் செய்ய
வலப்பால் திருக்கரம் இடப்பால் வனமுலை
தைவந்து வருட மெய்ம்மயிர் பொடித்தாங்
குலகம் ஏழும் பன்முறை ஈன்று

மருதிடங் கொண்ட மருத வாண
திருவடி பரவுதும் யாமே நெடுநாள்
இறந்தும் பிறந்தும் இளைத்தனம் மறந்தும்
சிறைக்கருப் பாசயம் சேரா
மறித்தும் பிறவா வாழ்வுபெறற் பொருட்டே. 1

---

*862. குறிப்புரை : இத்திருப்பாட்டு திருவிடை மருதூர்ப் பெருமானை மாதொரு பாதி (அர்த்தநாரி) வடிவினனாக வருணித்து விளித்துக் கருத்தை விண்ணப்பிக்கின்றது.*

*அடி-17 "ஒரு பால் திருவடி" என்பதை முதலில் வைத்து, 'மலர்ந்து, சிவந்து, புனைந்து, நிமிர்ந்து, அருளித் திகழ்ந்துளது' என்க. தெய்வத் தாமரை - தேவலோகத் தாமரை. 'அதனது செவ்விபோல' என்க. செவ்வி - மலரும் நேரம். அஃது ஆகுபெயராய், அப்பொழுது மலரும் மலர்ச்சியைக் குறித்தது. 'இன்' உவம உருபு. வாடா மலர் - கற்பக மலர் தோடு - இதழ். இது பண்பு பற்றிய உவமையாய் வந்தது. அலம்ப - ஒலிக்க; இவ் எச்சம் இதன் காலத்தை உணர்த்தி நின்றது. எனவே - 'ஒலிக்கும் இடத்துத் தான் கழலைப் புனைந்து' என ஆற்றல் பற்றிக் கொள்ளப்படும். இரண்டும் மாறி மாறி ஒலியாது, ஒருங்கொலித்தல் பற்றி இவ்வாறு கூறினார். இது மற்றொருபால் திருவடிக்கும் ஒக்கும். கூற்று - கூற்றுவன். யமன், 'நெடுமால் போற்றாது ஏனமாகி அகழ' என்க. 'திருவடி, போற்றிக் காணத் தக்கதல்லது, முயன்று காணத் தக்கதன்று' என்றற்கு, "போற்றாது" என்றார். "தொழுவார்க்கே யருளுவது சிவபெருமான் எனத்தொழார்" எனச் சேக்கிழாரும் அருளிச் செய்தார். நிமிர்ந்து - அப்பாற்பட்டு.*

*அடி-17 "ஒரு பால் திருவடி" என்பதை, "மறுவில் கற்பகத்து உறு தளிர்" என்பதற்கு முன்னே வைத்து, 'சேந்து, செவ்வித்தாகி, நொந்து, சிவந்து திருவொடும் பொலியும்' என்க. அகம் - உள்ளிடம். சேந்து - சிவந்து.*

*கற்பகத்தின்கண்' என உருபு விரிக்க. வழுவழுப்புத் தோன்றுதற் பொருட்டு. நெய்யில் தோய்த்தல் கூறப்பட்டது. செவ்வி - பக்குவம். நூபுரம் - சிலம்பு. "கிடப்பினும்" என்னும் அனுவாதத்தால் கிடத்தல் பெறப் பட்டது. மட வரல் மகளிர் - மடப்பம் (இளமை) வருதலை உடைய மகளிர். வீழ்த்த - தூவிய. சின்னம் - சிறுமை. எஞ்ச - தோற்க. இது மென்மை மிகுதியைக் கூறியது. எஞ்சாத் திரு - குறையாத அழகு. பொலியும் - விளங்கும்.*

*அடி-21 "ஒருபால் திருஇடை" என்பதை, "நீலப் புள்ளி" என்பதற்கு முன்னே கூட்டி, 'விரித்து அசைத்து, யாப்புறுத்துப் பொலிந்துளது' என்க. வாள் - கூர்மை. உகிர் - நகம். 'புள்ளியையும், உகிரையும் உடைய வேங்கை' என்க. கலிங்கம் - உடை அசைத்து - உடுத்தி. யாப்பு உறுத்து - இறுகக் கட்டி.*

*அடி-24 "ஒருபால் திருஇடை" என்பதை, "இலங்கொளி" என்பதற்கு முன்னே கூட்டி, 'விரித்து, உறீஇ சாத்திய மருங்கிற்று ஆகும்' என்க. அரத்தம் - செம்மை. ஆடை - பட்டாடை. உறீஇ - உறுவித்து; பொருந்தப் பண்ணி. இரங்கு - ஒலிக்கின்ற. மணி மேகலை - இரத்தினங்களால் ஆகிய வடங்களின் தொகுதி. மருங்கிற்று - பக்கங்களை உடையது.*

*அடி-29 "ஒருபால் ஆகம்" என்பதை செங்கண் அரவும்" என்பதற்கு முன்னே கூட்டி, "இடம் கொண்டு" என்பதை 'இடம் கொள' எனத் திரித்து, 'அரவும், ஆமையும், கோடும், அக்கும், நூலும் இடம் கொளப் புனைந்து வெற்பென்னத் திகழும் என்க. ஆகம் - மார்பு. ஆமை - ஆமை ஓடு; ஆகுபெயர் கேழல் - பன்றி, அக்கு - எலும்பு. நுடங்குதல் - துவளுதல். நூல், முந்நூல் தவளம் - வெண்மை நீறணிந்தது ஓர் பவள வெற்பு. இல்பொருள் உவமை.*

*அடி-34 "ஒருபால் ஆகம்" என்பதை, "வாழும் வடமும்" என்பதற்கு முன்னே கூட்டி, 'புனைந்து, அணிந்து, எழுதித் தளரா முலையுடன் பொலியும்' என்க. வார் - கச்சு. வடம் - மணி வடங்கள். ஏர் - அழகு. "புனைந்து" முதலிய மூன்றும், 'புனையப்பட்டு, அணியப்பட்டு, எழுதப்பட்டு' எனச் செயப் பாட்டு வினைப்பொருளாய் நின்றன. 'குங்குமத்தால்' என மூன்றாவது விரித்து, 'கோலம் எழுதி' என்க. "பொற்றாமரை" என்பதும் இல்பொருள் உவமை முகிழ் - அரும்பு.*

*அடி-38 "ஒரு பால் திருக்கரம்" என்பதை "அயில் வாய் அரவம்" என்பதற்கு முன்னே கூட்டி, 'அணிந்து தாங்கிச் சிறந்துளது' என்க. அயில் - கூர்மை. வாய் - பல்; ஆகுபெயர். வயின் வயின் - முன்கை. முழங்கை. தோள் ஆகிய இடங்கள். அணிந்து - பூண்டு. பூ வாய் - மெல்லிய வாய். கூர்மை மிகுதியால் மெல்லிதாயிற்று. தமருகம் - உடுக்கை. அமர்தர - பொருந்த.*

*அடி-41 "ஒரு பால் திருக்கரம்" என்பதை "செறித்த" என்பதற்கு முன்னே கூட்டி, 'விளங்கித் தரித்துத் திகழும்' என்க. செறிந்த - அழுந்தப் பற்றிய. சூடகம் - கங்கணம். "விளங்கி" என இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் ஏற்றப்பட்டது. கழங்கு - கழற்சிக் காய் அளவாகச் செயற்கை யாகச் செய்யப்பட்ட விளையாட்டுக் கருவி. ஓம்மெனல் - உயர எளிதல் அம் மெல் கிள்ளை - அழகுபட மெல்லப் பேசும் கிளி.*

*அடி-42, 43 ஒரு பால் திருநெடு நாட்டம் இரவியும், எரியும் விரவிய வெம்மையின் விளங்கும்' என்க. இரவி - சூரியன். எரி - அக்கினி இவையிரண்டும் சிவபெருமானுடைய இரண்டு கண்கள். எனவே, மேல், "நாட்டம்" என்றது பன்மைப் பொருட்டாய் இவ்விரு கண்களையும் குறித்தது. இரவியும், எரியும் வெம்மையோடு கூடி விளங்கும் என்க.*

*அடி-48 "ஒருபால் நாட்டம்" என்பதை "பாலிற் கிடந்த" என்பதற்கு முன்னே கூட்டி, 'நீலம் போன்று குவளையிற் குளிர்ந்து, இரங்கிப் புரக்கும்' என்க. நவ்வி, மானின் வகை. நீலம் - நீல மணி "கிடந்த" என்றது, 'தனது நிறம் வேறுபடாது கிடந்த' என்றபடி. 'நீல மணியைச் சோதித்தற்கு அதனைப் பாலில் இட்டால், பாலையும் நீலநிறமாகத் தோற்றுவித்துத் தான் நிறம் மாறாதிருப்பதே முழுமையான நீலம்' என்பர். எனவே, "பாலிற் கிடந்த நீலம்" என்றது 'முழுநீலம்' என்றதாம். குண்டு - ஆழம். "நிறம் பயின்று" என்பதை, "நீலம் போன்று" என்பதன் பின் கூட்டுக. எம்மனோர் - எம்மைப்போலும் அடியவர். "இரங்கி" என்றது, சிறப்புக் கருணை காட்டுதலை. 'ஏழும்' என்னும் முற்றும்மை தொகுக்கப்பட்டது. ஏழுலகத்தையும் புரத்தல் பொதுக் கருணை.*

*அடி-57 "ஒருபால் திருமுடி" என்பதை, "நொச்சிப் பூவும்" என்பதற்கு முன்னே கூட்டி, 'பூவும், மத்தமும், போதும், தும்பையும் தொடுத்த மாலை சூடி, விரவி, சடிலமொடு கடந்து, சேண் இகந்து உளது' என்க. மத்தம் - ஊமத்தை. "பச்சை" என்றது முதலுக்காகிய அடை. மத்தமும், தும்பையும் அவற்றது பூவைக் குறித்தலால் முதலாகுபெயர்கள். 'யாறு' முதலிய நான்கும் விரவி' என்க. விரவி - விரவப்பட்டு. அன்றி, 'இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் ஏற்றப்பட்டது' எனினும் ஆம். சூடா மாலை - பிறரால் சூடப் பெறாத மாலை, பீடு கெழு - 'பெருமை பொருந்திய சடிலம்' என்க. நெருப்பின் - நெருப்பால். உருக்கிளர் - நிறம் விளங்குகின்ற. சடிலம் - சடை. 'சடிலமொடு உளது' என்க. கருத்தையும் - யாவர் கருத்தையும் சேண் இகந்து - ஆகாயத்தின் நீங்கி.*

*அடி-63 "ஒருபால் திருமுடி" என்பதை, "பேணிய" என்பதற்கு முன்னே கூட்டி, 'மகளிர் வாங்கி வைத்துப் புனைந்த மாலை வளைஇ, மேல் நிவந்து,*

*வெண்பா*

**863.** பொருளுங் குலனும் புகழுந் திறனும்
அருளும் அறிவும் அனைத்தும் – ஒருவர்
கருதவென் பார்க்குங் கறைமிடற்றாய் தொல்லை
மருதாவென் பார்க்கு வரும். 2

---

*திளைப்பப் பொலியும்' என்க. பேணிய - 'போற்றிக் காத்த கற்பு' என்க. தெய்வ மகளிர் ஆதலின் அவரது கற்பு, "கடவுட் கற்பு" எனப்பட்டது. பொற்பூ - பொன்னால் ஆகிய பூ. புனைந்த - தொடுத்த. வளைஇ - சுற்றப்பட்டு. நிவந்து - உயர்ந்து. 'தேன் என்பதும் ஒருவகை வண்டேயாம். கிண்டுபு - கிளறி. திளைப்ப - இன்புற. திரு - அழகு. இதுகாறும் "ஒருபால், ஒருபால்" எனக் கூறிவந்தவற்றுள் முன்னவையெல்லாம் வலப்பாலையும், பின்னவையெல்லாம் இடப்பாலையும் குறித்தன. இங்கு அடி-61-ல் 'வண்ணம்' என்றது தன்மையை. நினைவருங் காட்சி, நினைத்தற்கு இயலாத (மனத்தைக் கடந்த) தோற்றம். இரு வயின் உரு - இரண்டிடத்தில் வேறு வேறாய் இருத்தற்குரிய வடிவங்களை ஒரு வயிற்று ஆகி - ஓர் இடமே உடையதாம்படி ஆகி. "வாணுதல்" என்பது பின்னர் வருதலால் முன்னர் 'ஆண்' என்பது வருவித்து, 'வலப்பால் ஆண் பாகம் இடப்பால் வாணுதல் பாகத்தை நோக்க, அது நாணுதல் செய்ய' என்க. தைவரல், வருடல் இரண்டும் ஒருபொருட் சொற்களாயினும் சிறிதே பொருள் வேற்றுமையுடையன. 'கரம் வருட, மெய் மயிர் பொடித்து என்க. மெய், இருபால் மெய்யும். ஆங்கு - அவ்வாறு. 'அவ்வாறு உலகம் ஈன்று' என்றதனால், 'மேலெல்லாம் பலபடக் கூறிவந்தவாறு, இருவயின் உருவும் ஒருவயிற்று ஆக இயைவன் எல்லாம் உயிர்கள் மாட்டு வைத்த கருணை காரணமாக மேற்கொண்ட செயற்கையாவன அல்லது, தமக்கே இயல்பாக உடைய இயற்கையல்ல' என்பது கூறப்பட்டதாம்.*

*போகியாய் இருந்து உயிர்க்குப்*
*போகத்தைப் புரிதல் ஓரார்*

*எனச் சாத்திரம் கூறிற்று. சிறைக் கருப்பாசயம் - கருப்பாசய மாகிய சிறை; உருவகம். ஆசயம் - தங்குமிடம். கருப்பம் - கரு கருப்பாசயம் - கருப்பம் தங்கியிருக்குமிடம்; கருப்பப் பை.*

***863. குறிப்புரை :*** *குலம் - குடி "ஒழுக்கம் உடைமை குடிமை" என்ப ஆகலின், குலமாவது ஒழுக்கமேயாம். திறன் - கருதியதை முடிக்கும் ஆற்றல். அருள் - எல்லா உயிர்களிடத்தும் காட்டும் இரக்கம். இதனை யுடையார்க்கு*

*கட்டளைக் கலித்துறை*

**864.** வருந்தேன் இறந்தும் பிறந்தும் மயக்கும் புலன்வழிபோய்ப்
பொருந்தேன் நரகிற் புகுகின்றி லேன்புகழ் மாமருதிற்
பெருந்தேன் முகந்துகொண் டுண்டு பிறிதொன்றில் ஆசையின்றி
இருந்தேன் இனிச்சென் றிரவேன் ஒருவரை யாதொன்றுமே. 3

*அகவற்பா*

**865.** ஒன்றினோ டொன்று சென்றுமுகில் தடவி
ஆடுகொடி நுடங்கும் பீடுகெழு மாளிகைத்
தெய்வக் கம்மியர் கைம்முயன்று வகுத்த
ஓவநூல் செம்மைப் பூவியல் வீதிக்
குயிலென மொழியும் மயிலியல் சாயல்

மான்மாற விழிக்கும் மானார் செல்வத்(து)
இடைமரு திடங்கொண் டிருந்தளந்தை
சுடர்மழு வலங்கொண் டிருந்த தோன்றல்
ஆரணந் தொடராப் பூரணபுராண
நார ணன் அறியாக் காரணக் கடவுள்

---

*பொருளும் நற்சார்பும், புகழும், திறனும், இறைவனது அருளும் தானே கிடைக்கும் 'ஒருவரும்' என்னும் இழிவு சிறப்பும்மை தொகுக்கப்பட்டது. கருதா - விரும்பாத. என்பு ஆர்க்கும் - எலும்பைப் பூணுகின்ற. தொல்லை - பழைமை; அநாதி. வரும் - கிடைக்கும்.*

***864. குறிப்புரை :*** *'இறந்தும், பிறந்தும், வருந்தேன்' என்க. "புகழ் மா மருதில்.... இருந்தேன்" என்பதை முதற்கண் வைத்து உரைக்க.*

***865. குறிப்புரை :*** *அடி-30 "இறைவ" என்பதையும், அடி-33 "நஞ்சுபொதி.... கண்ணுதலோயே" என்பதையும் அடி-12 "யோக நாயக" என்பதன் பின்னர்க் கூட்டி யுரைக்க.*

*'ஒன்றினொடு ஒன்று சேர்ந்து' என ஒருசொல் வருவிக்க. 'முகிலைத் தடவி' எனவும், 'மாளிகையில் வகுத்த' எனவும் கொள்க. செம்மை வீதி, பூ இயல் வீதி' எனத் தனித் தனி இயையும். பூ இயல் - அழகு விளங்குகின்ற. "மான் ஆர்" என்பதில் 'மான்' என்னும் அஃறிணையியற் பெயர் இங்குப் பன்மைப்பாலதாய் உவம ஆகுபெயராகி மகளிரைக் குறித்தது. வீதி ஆர் - வீதியின்கண் நிறைந்த. மாற - தோற்க. புராணன் - பழையோன். சோதி - திரட்சியான ஒளி. சுடர் - கதிர் "யோகம்" என்பது வீட்டு நெறியைக் குறித்தல்*

சோதிச் சுடரொளி ஆதித் தனிப்பொருள்
ஏக நாயக யோக நாயக
யானொன் றுணர்த்துவ துளதே யான்முன்
நனந்தலை யுலகத் தனந்த யோனியில்
பிறந்துழிப் பிறவாது கறங்கெனச் சுழலுழித்

தோற்றும் பொழுதின் ஈற்றுத் துன்பத்(து)
யாயுறு துயரமும் யானுறு துயரும்
இறக்கும் பொழுதில் அறப்பெருந் துன்பமும்
நீயல தறிகுநர் யாரே ? அதனால்
யானினிப் பிறத்தல் ஆற்றேன் அஃதான்(று)

உற்பவம் துடைத்தல் நிற்பிடித் தல்லது
பிறிதொரு நெறியின் இல்லையந் நெறிக்கு
வேண்டலும் வெறுத்தலும் ஆண்டொன்றற் படரா
உள்ளமொன் றுடைமை வேண்டும் அஃதன்றி
ஐம்புலன் ஏவல் ஆணைவழி நின்று

தானல தொன்றைத் தானென நினையும்
இதுவென துள்ளம் ஆதலின் இதுகொடு
நின்னை நினைப்ப தெங்ஙனம் முன்னம்
கற்புணை யாகக் கடல்நீர் நீந்தினர்
எற்பிற ருளரோ இறைவ; கற்பம்

கடத்தல்யான் பெறவும் வேண்டும் கடத்தற்கு
நினைத்தல்யான் பெறவும் வேண்டும் நினைத்தற்கு
நெஞ்சுநெறி நிற்கவும் வேண்டும் நஞ்சுபொதி
உரையெயிற் றுரகம் பூண்ட
கறைகெழு மிடற்றெங் கண்ணுத லோயே. 4

---

*வழக்கு. நனந்தலை - அகன்ற இடம். அனந்தம் - முடிவின்மை, அளவின்மை யோனி - பிறப்பு வகை. “பிறந்துழிப் பிறவாது” என்றது ‘எல்லா யோனிகளிலும் பிறந்து’ என்றபடி. கறங்கு - காற்றாடி. தோற்றும் பொழுது - பிறக்கும் பொழுது. ஈற்றுத் துன்பத்து - கருவுற்ற பொழுதில் உளவாகின்ற துன்பங்களில் யாய் - என் தாய். அறப் பெரிது - மிகப் பெரிது. அஃதான்று - அதுவன்றி. என்றது, ‘பிறவித் துன்பத்தை ஆற்றாமையேயன்றி, வேறும் இடர்கள் உள’ என்றபடி, ‘பிறப்பில் பெருமானாகிய உன்னைப் பற்றும் நெறியிலல்லது, பிறந்தும், இறந்தும் உழல்கின்ற ஏனைத் தேவரைப் பற்றும்*

### வெண்பா

**866.** கண்ணென்றும் நந்தமக்கோர் காப்பென்றும் கற்றிருக்கும்
எண்ணென்றும் மூல எழுத்தென்றும் – ஒண்ணை
மருதவப்பா என்றுமுனை வாழ்த்திலரேல் மற்றுக்
கருதவப்பால் உண்டோ கதி. 5

---

நெறிகளில் பிறவியறுதல் கூடாது' என்பார்.

> உற்பவம் துடைத்தல் நிற்பிடித் தல்லது
> பிறிதொரு நெறியின் இல்லை

என்றார். "சிவனலால் முத்தியிற் சேர்த்துவார் இலை" என்றார் காஞ்சிப் புராணத்திலும்*. அந்நெறிக்கு - அந்நெறியில் நிற்றற்கு. ஆண்டு - அதனைப் பற்றுமிடத்து. தொகுக்கப்பட்ட இழிவு சிறப்பும்மையை விரித்து, 'ஒன்றிலும் வேண்டலும், வெறுத்தலும் படரா ஓர் உள்ளம் உடைமை வேண்டும்' என்க. அடி-27 'எனது உள்ளம் அஃதன்றி, நின்று, நினையும் இது; ஆதலின் இதுகொடு நின்னை நினைப்பது எங்ஙனம்' என்க. 'அஃது, இது' என்பன, 'அன்னது, இன்னது' என்னும் பொருளவாய் நின்றன. இன்னதாகிய உள்ளத்தைக் கொண்டு உன்னுடைய நெறியில் நிற்கக் கருதினேன் யான் ஆதலின், "கற்புணையாகக் கடல்நீர் நீந்தினர் எற் பிறர் உளரோ" என்றார். கருதினர் - கருதி முயன்றவர். 'என்னையன்றிப் பிறர் உளரோ' என்றார். கருதினர் - கருதி முயன்றவர். 'என்னையன்றிப் பிறர் உளரோ' என்க. 'எனது மடமை யிருந்தவாறு இது' என்றபடி. 'இங்ஙனமாயினும் வேண்டும்; வேண்டும்; வேண்டும்' என்க. கற்பம் - பிறந்து இறந்துவரும் நெடுங்காலம், 'நின்னை நினைத்தல்' என்க. 'நெஞ்சு நிற்கவும்' என இயைக்க. காரணம், காரியம் இரண்டனுள் காரியங்களை முன்னரும், 'காரணங்களைப் பின்னருங் கூறியது முதலாவதாகிய நெஞ்சு நிலைபெறுதலே இல்லாத யான் பின்னர் விளையத் தக்கனவாகிய பயன்களைப் பெறுதல் எவ்வாறு' எனத் தமது எளிய நிலையை வெளிப்படுத்தி, 'எனக்கு அருள்புரிதல் வேண்டும்' என வேண்டிக் கோடற் பொருட்டு. உறை - துளி. 'நஞ்சு உறை பொதி எயிற்று உரகம்' என்க. உரகம் - பாம்பு.

**866. குறிப்புரை :** "நத்தமக்கு, மூலம்" என்பவற்றை முன்னருங் கூட்டிப் பொருள் கொள்க. மூல எண் - முதற் கருத்து. மூல எழுத்து - அக்கருத்தைத் தோற்றுவிக்கின்ற நாதம். மூலமாவனவற்றைக் கூறவே பின் பின் அவை வழியாகத் தொடர்ந்து தோன்றும் எண்ணும் எழுத்தும் அடங்கின. ஒண் ஐ

---

* திருநெறிக் காரைக்காட்டுப் படலம் - 29.

### *கட்டளைக் கலித்துறை*

867. கதியா வதுபிறி தியாதொன்றும் இல்லை களேபரத்தின்
பொதியா வதுசுமந் தால்விழப் போமிது போனபின்னர்
விதியாம் எனச்சிலர் நோவதல் லாலிதை வேண்டுநர்யார்
மதியா வதுமரு தன்கழ லேசென்று வாழ்த்துவதே. 6

### *அகவற்பா*

868. வாழ்ந்தனம் என்று தாழ்ந்தவர்க் குதவாது
தன்னுயிர்க் கிரங்கி மன்னுயிர்க் கிரங்கா(து)
உண்டிப் பொருட்டாற் கண்டன வெஃகி
அவியடு நர்க்குச் சுவைபலபகர்ந்தே
ஆரா உண்டி அயின்றன ராகித்

தூராக் குழியைத் தூர்த்துப் பாரா
விழுப்பமும் குலனும் ஒழுக்கமும் கல்வியும்
தன்னிற் சிறந்த நன்மூ தாளரைக்
கூஉய்முன் நின்றுதன் ஏவல் கேட்குஞ்
சிறாஅர்த் தொகுதியின் உறாஅப் பேசியும்

---

*- எல்லாம் வல்ல தலைவன். 'ஐயாகிய மருதவப் பன்' என்க. அப்பால் - இவ்வுடல் நீங்கிய பின்பு. கருத - 'அடையற் பாலது இது' எனத் துணிதற்கு.*

***867. குறிப்புரை :*** *"கதியாவது பிறிது யாதொன்றும் இல்லை" என்பதை மூன்றாம் அடியின் இறுதியிற் கூட்டுக. "பிறிது" என்பதன்முன், பின் வருகின்ற கழலைச் சுட்டு வதாகிய 'அஃது' என்பது வருவித்து, 'அஃதன்றிப் பிறிதியா தொன்றும் இல்லை; அதனால்' என உரைக்க. களேபரம் - உடம்பு. 'களேபரமாகிய பொதி' என்க. இன், வேண்டாவழிச் சாரியை. "பொதியாவது" என்பதில் 'ஆவது' என்பது எழுவாய் வேற்றுமைச் சொல்லுருபாய் வந்தது. "சுமந்தால் விழப் போம்" என்பது, 'நாம் விழாமல் போற்றிக் காத்துச் சுமந்தாலும் நில்லாது விழவே செய்யும்' என்றபடி. 'சுமந்தாலும்' என்னும் உயர்வு சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. "போம்" என்றது, 'செய்யும்' என்றபடி.*

***868. குறிப்புரை :*** *இப்பாட்டு, அடியரல்லார் செல்வச் செருக்கால் இறுமாந்து கண்டபடி வாழும் செல்வ வாழ்க்கையின் இழிவினையும், அடியராயினார் திருவருளில் அடங்கி நெறிநின்று வாழும் வறுமை வாழ்க்கையின் உயர்வையும் ஒப்பிட்டுத் தெரிக்கின்றது.*

*பழிமலைந் தெய்திய ஆக்கத்தின், சான்றோர்*
*கழிநல் குரவே தலை*

பொய்யொடு புன்மை புல்லர்க்குப் புகன்றும்
மெய்யும் மானமும் மேன்மையும் ஒரீஇ
தன்னைத் தேறி முன்னையோர் கொடுத்த
நன்மனைக் கிழத்தி யாகிய அந்நிலைச்
சாவுழிச் சாஅந் தகைமையள் ஆயினும்

மேவுழி மேவல் செய்யாது காவலொடு
கொண்டோள் ஒருத்தி உண்டிவேட் டிருப்ப
எள்ளுக் கெண்ணெய் போலத் தள்ளாது
பொருளின் அளவைக்குப் போகம்விற் றுண்ணும்
அருளில் மடந்தையர் ஆகம் தோய்ந்தும்

ஆற்றல்செல் லாது வேற்றோர் மனைவயின்
கற்புடை மடந்தையர் பொற்புநனி கேட்டுப்
பிழைவழி பாராது நுழைவழி நோக்கியும்
நச்சி வந்த நல்கூர் மாந்தர்தம்
விச்சையிற் படைத்த வெவ்வேறு காட்சியின்

அகமலர்ந் தீவார் போல முகமலர்ந்(து)
இனிது மொழிந்தாங்(கு) உதவுதல் இன்றி
நாளும் நாளும் நாள்பல குறித்(து)அவர்
தாளின் ஆற்றல் தவிர்த்தும் கேளிகழ்ந்து
இகமும் பரமும் இல்லை என்று

பயமின் றொழுகிப் பட்டிமை பயிற்றி
மின்னின் அனையதன் செல்வத்தை விரும்பித்
தன்னையும் ஒருவ ராக உன்னும்
ஏனையோர் வாழும் வாழ்க்கையும் நனைமலர்ந்து
யோசனை கமழும் உற்பல வாவியில்

பாசடைப் பரப்பில் பால்நிற அன்னம்
பார்ப்புடன் வெருவப் பகுவாய் வாளைகள்
போர்த்தொழில் புரியும் பொருகா விரியும்
மருதமும் சூழ்ந்த மருத வாண
கருதியும் தொடராச் சுருதி நாயக

பத்தருக் கெய்ப்பினில் வைப்பென உதவும்
மூர்த்தித் தாள மூவா முதல்வநின்
திருவடி பிடித்து வெருவரல் விட்டு

மக்களும் மனைவியும் ஒக்கலும் திருவும்
பொருளென நினையா(து)உன் னருளினை நினைந்து

இந்திரச் செல்வமும் எட்டுச் சித்தியும்
வந்துழி வந்துழி மறுத்தனர் ஒதுங்கிச்
சின்னச் சீரை துன்னல் கோவணம்
அறுதற் கீளொடு பெறுவது புனைந்து
சிதவல் ஓடொன் றுதவுழி எடுத்தாங்(கு)

இடுவோர் உளரெனின் நிலையில்நின் றயின்று
படுதரைப் பாயலிற் பள்ளி மேல் ஓவாத்
தகவெனும் அரிவையைத் தழீஇ மகவெனப்
பல்லுயிர் அனைத்தையும் ஒக்கப் பார்க்கும்நின்
செல்வக் கடவுள் தொண்டர் வாழ்வும்

பற்றிப் பார்க்கின் உற்றநா யேற்குக்
குளப்படி நீரும் அளப்பருந் தன்மைப்
பிரளய சலதியும் இருவகைப் பொருளும்
ஒப்பினும் ஒவ்வாத் துப்பிற் றாதலின்
நின்சீர் அடியார் தஞ்சீர் அடியார்க்(கு)

அடிமை பூண்டு நெடுநாட் பழகி
முடலை யாக்கையொடு புடைபட் டொழுகியவர்
காற்றலை ஏவலென் நாய்த்தலை ஏற்றுக்
கண்டது காணின் அல்லதொன்(று)
உண்டோ மற்றெனக் குள்ளது பிறிதே. 7

---

*நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே*
*கல்லார்கண் பட்ட திரு*

*என்பன பொது மறைத் திருமொழி*.*

*"உயிர்" இரண்டும் ஆகுபெயராய் அவற்றது துன்பத்தைக் குறித்தன. வெஃகி - விரும்பி. அவி - அடப்படுவன.*

*அடுநர்க்குச் சுவை பல பகர்தலாலது, 'இதை இதை இன்று சமை, இப்படி இப்படிச் சமை' எனக் கட்டளையிடுதல். ஆரா உண்டி - வயிறு நிறையினும் சுவை மிகுதியால் மனம் நிறையாது அளவின்றி உண்ணும் உணவு. தூராக் குழி - தூர்க்கும் பொழுது தூர்ந்து விட்டது போலத் தோன்றிப் பின்*

---

* *திருக்குறள் - 657, 408.*

வெறிதாகி, ஒரு நாளும் தூராத குழி; வயிறு. பரா - பாராது இதனை, "கல்வியும்" என்பதன்பின்னர்க் கூட்டுக. விழுப்பம் - சில காரணங்களால் தமக்கு அமைந்த பெருமை. குலம் - குடிப் பிறப்பு. ஒழுக்கம் - முன்னோர் ஒழுகி வந்த நல்லொழுக்கம். கல்வி - பெற்றோராலும், ஆசிரியாராலும் வற்புறுத்திக் கற்பிக்கப்பட்ட கல்வி. இவைகளைப் பாராது அஃதாவது, 'இவை வீணாவதை எண்ணாமல் நன்மூதாளரை உறாப்பேசி' என்க. உறாப் பேசுதல் - அன்பால் உளம் பொருந்துதல் இன்றிப் பேசுதல். எனவே கடிந்து பேசுதலாம். கூவுதல் - அழைத்தல். "கூய்" என்பதை, 'கூவ' எனத் திரிக்க. 'தொகுதியைப் பேசுதல் போலப் பேசி' என்பதாம். இன், உவம உருபு. புன்மை - கீழான செய்திகள். தன் புல்லர் - தனக்கு நண்பராய் உள்ள அற்பர், 'அற்பர்' என்றதனால், அத்தகையோரே அவருக்கு நண்பராதல் குறிக்கப்பட்டது. தேறி - தெளிந்து; கைவிடாது காப்பாற்றுவான்' என நம்பி. 'அந்நிலையில்' என உருபு விரித்து, அதன்பின் "கொண்டோள் ஒருத்தி" என்பதைக் கூட்டுக. கொண்டோள் - கொள்ளப்பட்டோள். 'ஆயினும் அவள்பால் மேவுழி மேவல் செய்யாது' என்க. மேவுழி - செல்ல வேண்டிய காலத்தில். உண்டி வேட்டு இருத்தற்கு, 'அவள்' என்னும் எழுவாய் வருவிக்க. எள்ளைக் கொடுத்து, அதன் அளவுக்கு எண்ணெய் வாணிபரிடம் எண்ணெய் பெறுதல் அக்காலத்து வழக்கம். அவ்வாணிபர் அந்த எள்ளின் அளவுக்குச் சிறிது மிகுதியாகவும் எண்ணெய் கொடுக்க உடன்படார். தள்ளாது - பொருள் கொடுப்பின் யாரையும் விலக்காமல், 'அன்பு உண்டாகக் காரணம் இல்லையாயினும், அருளேனும் உண்டாகப் பெறுவரோ எனின் அஃதும் இல்லை' என்றற்கு, விலை மாதரை "அருள் இல் மடந்தையர்" என்றார். ஆற்றல் - ஆற்றுதல்; பொறுத்தல். பொறுக்கப்படுவது ஆசையின் வேகம். இதனை, "கேட்டு" என்பதன் பின்னர்க் கூட்டுக. வேற்றோர் - அயலார். பிழை வழிபாராது - குற்றமான நெறியாதலை நோக்காமல். நச்சி - விரும்பி. நல்கூர் வறுமையுற்ற. விச்சையின் படைத்த - அவர்களது அறிவில் பதியும்படி தோற்றுவித்த, காட்சி - மெய்ப்பாடுகள். தாளின் ஆற்றல் - நடப்பனவாகிய கால்களின் உரம். கேள் - சுற்றம், இகம் - இம்மை. அது இம்மைக்கண் எய்தற் பாலதாகிய புகழைக் குறித்தது. பரம் - மறுமை. பயம் இன்று - பயன் இல்லாமல். பட்டிமை - கட்டுப்பாடின்றி வேண்டியவாறே ஒழுகும் தன்மை. பயிற்றி - பலகாலும் மேற்கொண்டு. "ஒருவர்" என்பது உன்னுவார் கருத்துப் பற்றி வந்ததாகலின் அது முன்னர்ப் போந்த ஒருமைச் சொற்களோடு இயையாது வேறு நின்றது. நனை - அரும்பு. உற்பலம் - நீலோற்பலம், பாசடை - பசுமை யான இலை. பார்ப்பு - குஞ்சு. "மருதம்" இரண்டில் முன்னது வயல், நிலம். வைப்பு - சேம நிதி. முத்தித் தாள - முத்தியாகிய திருவடியை உடையவனே. மூவா - அழியாத. "மருத வாண, சுருதி நாயக, முத்தித் தாள, முதல்வ" என்பவற்றை முதற்கண்

### *வெண்பா*

869. பிறிந்தேன் நரகம்; பிறவாத வண்ணம்
அறிந்தேன் அநங்கவேள் அம்பில் – செறிந்த
பொருதவட்ட வில்பிழைத்துப் போந்தேன் புராணன்
மருதவட்டம் தன்னுளே வந்து. 8

### *கட்டளைக் கலித்துறை*

870. வந்திக்கண் டாயடி யாரைக்கண் டால்மற வாதுநெஞ்சே
சிந்திக்கண் டாயரன் செம்பொற் கழல்திரு மாமருதைச்
சந்திக்கண் டாயில்லை யாயின் நமன்தமர் தாங்கொடுபோய்
உந்திக்கண் டாய்நிர யத்துன்னை வீழ்த்தி உழக்குவரே. 9

---

*கொண்டு உரைக்க. ஒக்கல் - சுற்றம். திரு - செல்வம் "மறுத்தனர்" என்பது முற்றெச்சமாய் நின்றது. சின்னம் - சிறுமை. சீரை - மரவுரி. துன்னல் - கீளோடு சேர்த்துத் தைத்தல் - அறுதல் - நெய்யப்பட்ட பின் வேறு வேறாய் நீங்குதல். பெறுவது - கிடைத்த ஒன்று. சிதவல் - உடைதல். உதவுழி - கிடைக்குமிடத்தில். படுதரைப் பாயல் - எதிர்ப்பட்ட நிலமாகிய பாயல். தகவு - தகுதி; ஒன்றிலும் பற்றின்மை. கடவுள் - தெய்வத் தன்மை. பிரளய சலதி - ஊழிக் காலத்தில் எங்கும் பொங்கி பரக்கும். கடல், இதுவும் ஆகுபெயரால் நீரையே குறித்தது. 'குளப்படி நீரும், சலதி நீரும் ஆகிய இருவகைப் பொருளும்' என்க. துப்பிற்று - வலிமையுடையது. முடலை யாக்கை - பல முறுக்குக்களையுடைய உடம்பு. புடைபட்டு - பக்கத்தில் பொருந்தி. கால் தலை - பாதமாகிய இடம். ஏவல் - ஏவப்படும் பணிகள். 'ஏற்றுச் செய்து' என ஒரு சொல் வருவிக்க 'அவர் கண்டது நான்காணின் அல்லது எனக்கென்று பிறிது உண்டோ' என உரைக்க. 'அடியவர்க்கு அடிமையாதலிற் சிறந்த செல்வம் பிறிது இல்லை' என்பதை உணர்த்துவார். முதற்கண் அடியார் அல்லாதாரது இழிவையும், அடியாரது உயர்வையும் விரித்து ஒப்பிட்டுக் காட்டினார்.*

***869. குறிப்புரை :*** *அநங்க வேள் - மன்மதன். 'செறிந்த வில், பொருத வில், அட்ட வில்' - எனத் தனித்தனி இயைக்க. பொருத - போர் செய்த. அட்ட - கொன்ற; கொன்றது போலும் துன்பத்தைச் செய்த. புராணன் - பழையோன். "புராணன் மருத வட்டம் தன்னுளே வந்து" என்பதை முதலிற் கொள்க.*

***870. குறிப்புரை :*** *"கண்டாய்" நான்கும் முன்னிலை யசைகள். முதல் மூன்று அடிகளில் முதற்கண் நின்ற சீர்களில் வந்த ககர ஒற்றுக்கள்*

*அகவற்பா*

871. உழப்பின் வாரா உறுதிகள் உளவோ
கழப்பின் வாராக் கையற வுளவோ,
அதனால்
நெஞ்சப் புனத்து வஞ்சக் கட்டையை
வேரற அகழ்ந்து போக்கித் தூர்வுசெய்து

அன்பென் பாத்தி கோலி முன்புற
மெய்யெனும் எருவை விரித்(து)ஆங்(கு) ஐயமில்
பத்தித் தனிவித் திட்டு நித்தலும்
ஆர்வத் தெண்ணீர் பாய்ச்சிநேர் நின்று
தடுக்குநர்க் கடங்கா(து) இடுக்கண் செய்யும்

பட்டி அஞ்சினுக்(கு) அஞ்சியுட் சென்று
சாந்த வேலி கோலி வாய்ந்தபின்
ஞானப் பெருமுளை நந்தாது முளைத்துக்
கருணை இளந்தளிர் காட்ட அருகாக்
காமக் குரோதக் களையறக் களைந்து

சேமப் படுத்துழிச் செம்மையின் ஓங்கி
மெய்ம்மயிர்ப் புளகம் முகிழ்த்திட்(டு) அம்மெனக்
கண்ணீர் அரும்பிக் கடிமலர் மலர்ந்து,
புண்ணிய
அஞ்செழுத் தருங்காய் தோன்றி நஞ்சுபொதி

காள கண்டமும் கண்ணொரு மூன்றும்
தோளொரு நான்கும் சுடர்முகம் ஐந்துமாய்ப்
பவளநிறம் பெற்றுத் தவளநீறு பூசி
அறுசுவை யதனினும் உறுசுவை உடைத்தாய்க்
காணினுங் கேட்பினுக் கருதினுங் களிதரும்

---

*ஈற்றடியோடு எதுகை பொருந்த வேண்டி விரிக்கப்பட்டன. "நெஞ்சே" என்பதை முதலில் வைத்து, 'அடியாரைக் கண்டால் வந்தி; அரன் செம்பொற்கழல் மறவாது சிந்தி; மாமருதைச் சந்தி; இல்லையேல் நமன் தமர் உன்னைக் கொடுபோய் நிரயத்து உந்தி வீழ்த்தி உழக்குவர்' என இயைத்து உரைக்க. வந்தி - வணங்கு; சந்தி - நேர்நின்று காண். தாம், அசை. உந்தி - பின்னின்று தள்ளி. உழக்குவர் - அலைப்பர்.*

சேணுயர் மருத மாணிக்கத் தீங்கனி
பையப் பையப் பழுத்துக் கைவர
எம்ம னோர்கள் இனிதினி தருந்திச்
செம்மாந் திருப்பச் சிலர்இதின் வாராது
மனமெனும் புனத்தை வறும்பா ழாக்கிக்

காமக் காடு மூடித் தீமைசெய்
ஐம்புல வேடர் ஆறலைத் தொழுக
இன்பப் பேய்த்தேர் எட்டா(து) ஓடக்
கல்லா உணர்வெனும் புல்வாய் அலமர
இச்சைவித் துதிர்த்துழி யானெனப் பெயரிய

நச்சு மாமரம் நனிமிக முளைத்துப்
பொய்யென் கவடுகள் போக்கிச் செய்யும்
பாவப் பல்தழை பரப்பிப் பூவெனக்
கொடுமை அரும்பிக் கடுமை மலர்ந்து
துன்பப் பல்காய் தூக்கிப் பின்பு

மரணம் பழுத்து நரகிடை வீழ்ந்து
தமக்கும் பிறர்க்கும் உதவா(து)
இமைப்பிற் கழியும் இயற்கையோர் உடைத்தே. 10

---

***871. குறிப்புரை :*** *உழப்பு - முயற்சி. உறுதி - நன்மை. கழப்பு - நெடுநீர்மை; மடி கையறவு - துன்பம். "முயற்சி திருவினை யாக்கும்; முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்"* என்பதனை முதல் இரண்டு அடிகளால் வலியுறுத்திக் கூறினார்; தாம் முயற்சியால் இன்பம் எய்தியதையும், சிலர் மடிமையால் துன்பம் எய்துதலையும் நிறுவுதற்கு. இப்பாட்டு முழுவதும் 'நன்று தீது' என்னும் இருவகையான் ஆகிய முற்றுருவம் ஆதலை அறிக. அதனால் - அதனை யறிந்தமையால், 'அகழ்தல் முதலியவற்றைச் செய்தோம்' என்பதாம். புனம் - கொல்லை. வஞ்சர் கட்டை - பிறரை வஞ்சித்தலாகிய பெருமரம், மெய் - வாய்மை. பத்தி - இறையன்பு. ஆர்வம் - சிவானந்த வேட்கை. பட்டி அஞ்சு, கட்டுக்கு அடங்காத ஐம்புல ஆசையாகிய யானைகள். சாந்தம் - பொறுமை. ஞானம் - மெய்யுணர்வு நந்தாது - கெடாமல். கருணை - திருவருள் அருகா - பயிரின் பக்கமாய் முளைக்கின்ற காமக் குரோதங்களைக் கூறவே இனம் பற்றி உலோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய ஏனை நான்கும் உடன் கொள்ளப்படும். சேமப் படுத்துழி - பாதுகாவல் செய்த.*

---

* *திருக்குறள் - 616.*

### வெண்பா

**872.** உடைமணியின் ஓசைக் கொதுங்கி அரவம்
படமொடுங்கப் பையவே சென்றங்(கு) – இடைமருதர்
ஐயம் புகுவ தணியிழையார் மேல்அனங்கன்
கையம் புகவேண்டிக் காண். **11**

---

பொழுது. செம்மையின் ஓங்கி - (பத்தியாகிய மரம்) நன்றாக வளர்ந்து. முகிழ்த்தல் - அரும்பெடுத்தல். அம்மென - அழகாக "அரும்பி" என்றது, 'போதாகி' என்றபடி. கடி - மணம்; அஃது இங்குப் பக்குவத்தைக் குறித்தது. புண்ணியம் - சிவபுண்ணியம். 'அதனைத் தருகின்ற அஞ்செழுத்து' என்க. 'அஞ்செழுத்துத் தானே சிவபெருமானாய்த் தோன்றி நின்றது' என்றபடி. காள கண்டம் - கரிய மிடறு. சுவை, அவற்றையுடைய உணவைக் குறித்தது. "இனிது இனிது" என்னும் அடுக்குக் காலப்பன்மை பற்றி வந்தது. உறு - மிக்க. "மருத மாணிக்கம்" என்பது 'சிவபிரான்' என்னும் அளவாய் நின்றது. 'இனி யருந்தி' எனப் பாடம் ஓதி, 'இப்பொழுதே அருந்தி' என உரைத்தலும் ஆம். 'பாழாக்கிக் கழியும் இயற்கையோர் ஆகின்றனர்; அத்தகையோரையும் உடையது இவ்வுலகம்' என முடிக்க. ஆறு அலைத்தல் - வழிப் பறி செய்தல். இன்பப் பேய்த்தேர் - உலக இன்பமாகிய கானல். புல்வாய் - மான். பாலை நிலத்தில் தோன்றுகின்ற கானலை நீர் என்று நினைத்து விடாய், தணியப் பருகுதற்கு ஓடி ஓடி எய்த்தல் மான்களுக்கு இயல்பு. இச்சை - ஆசை. உதிர்த்தல் - தூவுதல். "யான்" என்பதைக் கூறவே, 'எனது' என்பதும் கொள்ளப்படும். மாமரம் - பெரிய மரம். பொய் - பொய் கூறுதல். கவடுகள் - கிளைகள், கொடுமை - வெகுளி. கடுமை - கடுஞ்சொல்லும், வன்செயலும், தூக்கி - காய்த்துத் தொங்கவிட்டு "தூக்கி, பழுத்து" என்னும் செய்தென் எச்சங்களை, 'தூக்க, பழுத்து' எனச் செயவென் எச்சங்களாகத் திரிக்க. இறுதிக்கண், 'இவ்வுலகம்' என ஒரு சொல் வருவித்து முடிக்க.

***872. குறிப்புரை :*** உடை மணி - மேகலையில் உள்ள மணிகள். அவை மகளிர் ஐயம் இட வரும்பொழுது ஒலிக்கும். அவ்வொலியை இடியின் தோற்றமோ என ஐயுற்றுப் பிச்சைக்குச் செல்லும் பெருமான் அணிந்துள்ள பாம்புகள் தம் படங்களைச் சுருக்கிக் கொள்ளும். அம்பு உக - அம்புகள் சிந்த. காண், முன்னிலை யசை. இடைமருதர் பசிக்கு உணவு வேண்டிப் பிச்சைக்குச் செல்கிலர். தாருகாவனத்து முனிவர் பத்தினியர் மையற்பட வேண்டியே பிச்சைக்குச் செல்கின்றார் என்பதாம்.

***873. குறிப்புரை :*** உருத்திர சாதனம் - உருத்திராக்கம். வீணீர் - பயனில்லாது திரிகின்றவர்களே. இதனை முதற்கண் வைத்து, 'மருதப்பிரான்

### *கட்டளைக் கலித்துறை*

873. காணீர் கதியொன்றுங் கல்லீர் எழுத்தஞ்சும் வல்லவண்ணம்
பேணீர் திருப்பணி பேசீர் அவன்புகழ் ஆசைப்பட்டுப்
பூணீர் உருத்திர சாதனம் நீறெங்கும் பூசுகிலீர்
வீணீர் எளிதோ மருதப் பிரான்கழல் மேவுதற்கே. 12

### *அகவற்பா*

874. மேவிய புன்மயிர்த் தொகையோ அம்மயிர்
பாவிய தோலின் பரப்போ தோலிடைப்
புகவிட்டுப் பொதிந்த புண்ணோ புண்ணிடை
ஊறும் உதிரப் புனலோ கூறுசெய்(து)
இடையிடை நிற்கும் எலும்போ எலும்பிடை

முடைகெழு மூளை விழுதோ வழுவழுத்து
உள்ளிடை ஒழுகும் வழும்போ மெள்ளநின்
றூரும் புழுவின் ஒழுங்கோ நீரிடை
வைத்த மலத்தின் குவையோ வைத்துக்
கட்டிய நரம்பின் கயிறோ உடம்பினுள்

பிரியா தொறுக்கும் பிணியோ தெரியா(து)
இன்ன தியானென் றறியேன் தெரியா
ஏதினுந் தேடினன் யாதினுங் காணேன்,
முன்னம்
வரைத்தனி வில்லால் புரத்தைஅழல் ஊட்டிக்

---

*கழல் மேவுதற்கு உமக்கு எளிதோ! (அன்று; ஆதலால் நீவிர்) கதி என்றும் காணீர் - காணமாட்டீர்'* என்க. *'செயற்பாலனவற்றைச் செய்கிலீர்; நீவிர் பயன் பெறுதல் எங்ஙனம்'* என்றபடி.

***874. குறிப்புரை :*** *'பதியியல்பை மட்டுமன்று; ஏனைப் பசு, பாசங்களது இயல்பையும் உள்ளவாறு உணர்தல் திருவருள் வழியால் வரும் சிவஞானத்தாலன்றிக் கூடாது'* என்பதையும், *'சிவஞானத்தால் அறிகின்றுழி, முன்னர்ப் பதியியல்பை உணருமாற்றானே ஏனைப் பசு, பாசங்களது இயல்பும் உள்ளவாறு உணரப்படும்'* என்பதையும் இப்பாடல் இனிது விளக்குகிறது.

*'வரைத் தனி வில்லால்... கங்கை நாயக! நின்னைக் காணா மாந்தர் தம்மையும் காணாத் தன்மையோரே; என்னை? (நான் ஞான நாட்டம் பெறுதற்கு) முன்னம், -* மயிர்த் தொகையோ? தோலின் பரப்போ? புண்ணோ?

கண்படை யாகக் காமனை ஒருநாள்
நுண்பொடி யாக நோக்கியண் டத்து
வீயா அமரர் வீயவந் தெழுந்த
தீவாய் நஞ்சைத் திருவமு தாக்கி
இருவர் தேடி வெருவர நிமிர்ந்து

பாலனுக் காகக் காலனைக் காய்ந்து
சந்தன சரள சண்பக வகுள
நந்தன வனத்திடை ஞாயிறு வழங்காது
நவமணி முகிழ்த்த புதுவெயில் எறிப்ப
எண்ணருங் கோடி இருடிகணங் கட்குப்

புண்ணியம் புரக்கும் பொன்னி சூழ்ந்த
திருவிடை மருத பொருவிடைப் பாக
மங்கை பங்க கங்கைநா யகநின்
தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்
மாயப் படலங் கீறித் தூய.

ஞான நாட்டம் பெற்றபின் யானும்
நின்பெருந் தன்மையுங் கண்டேன் காண்டலும்
என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டேன்
நின்னிலை அனைத்தையும் கண்டேன் என்னை
நின்னைக் காணா மாந்தர்

தம்மையுங் காணாத் தன்மை யோரே. 13

---

*உதிரப் புனலோ? எலும்போ? மூளை விழுதோ? வழும்போ? புழுவின் ஒழுங்கோ? மலத்தின் குவையோ? நரம்பின் கயிறோ? ஒறுக்கும் பிணியோ? - 'இன்னது யான்' என்று தெரியாது ஏதினும் தேடினேன்; யாதினும் காணேன்; (அதனால்) என்னையே (யான்) அறிந்திலேன். நின் திருவருள் கிடைத்த பொழுது (அதனால்) மாயையாகிய திரையைக் கீறி, ஞான நாட்டம் பெற்றபின் நின் பெருந் தன்மையுங் கண்டேன்; காண்டலும் என்னையுக் கண்டேன்; பிறரையும் கண்டேன்' என ஏற்குமாற்றான் இயைத்துப் பொருள் காண்க.*

*மேவிய - உடம்பு முழுதும் பொருந்திய. புன் மயிர் - குறு உரோமங்கள். பாவிய - பரந்த, பொதிந்த - மூடிய. புண் - சீயும், சினையும். கூறு - துண்டு. முடை - முடை நாற்றம். விழுது - நெகிழ்ச்சியுடைய திரள், வழும்பு - நிணம்; கொழுப்பு. நீர் - சிறுநீரும், வெயர்வையும். "மலம்" என்பது உடல் அழுக்கையும்*

குறிக்கும். 'நரம்பாகிய கயிறு' என்க. இன், வேண்டாவழிச் சாரியை. 'ஏதினும்' என்பது, 'யாதினும்' என்பதன் மரூஉ. வரை - மேருமலை. தனி - ஒப்பற்ற. புரம், திரிபுரம். கண் படையாக - கண்ணையே படைக்கலமாகக் கொண்டு. பொடி - சாம்பல். வீயா - இறவாத. 'அமரர்' என்பது 'மரித்தல் இல்லாதவர்' என்னும் பொருளது ஆதலின் இங்கு அது வாளா பெயராய் வந்தது. அமுது - உண்ணும் உணவு. 'உண்டதனால் ஊறு எதுவும் நிகழ்ந்திலது' என்றற்கு 'உணவாக்கி' என்றார். வெருவா - அச்சங் கொள்ள. சரளம் - தேவ தாரு. வகுளம் - மகிழ். முகிழ்த்த - தோற்று வித்த. புது வெயில் - அதிசய வெயில். இருடி கணங்கட்கு ஆன புண்ணியம் தவம். 'புரக்கும் பெருமான்' என்க. இனி, 'புரக்கும் இடைமருது' என்றலும் ஆம். தெய்வத் திருவருள் - தெய்வத் தன்மையைத் தரும் திருவருள். உரிமையாக்கிக் கொள்ளுதலை. 'கைக்கொள்ளுதல்' என்றும் 'கைப்பற்றுதல்' என்றும் கூறும் வழக்கம் பற்றி, "கைவந்து" என்றார். 'கையின்கண் வந்து' என உருபு விரிக்க. படலம் - மறைப்பு. 'பசுக்களும், பாசங்களும் பதியின்கண் வியாப்பியமே யாகலின், வியாபகமாகிய பதியை உணரவே, அதன்கண் வியாப்பியமாகிய பசுக்களும், பாசங்களும் தாமாகவே உணரப்படும்' என்க. அது கடலுள் மூழ்கி அதன் ஆழத்தைக் காண்பவர் அதனானே அக்கடலின்கண் உள்ள பொருள்களையும் நன்குணர்தலில் வைத்து உணர்ந்து கொள்க. கடல் ஆழத்தைக் காண முயலாமல் கடலில் உள்ள பொருள்களை மட்டுமே பெற்றொழிதலன்றி அனைத்தையும் பெறாமைபோலப் பதியை உணர முயலாமல் பசுபாசங்களை மட்டும் உணர்வோர் அவற்றது இயல்பினை ஒருபுடையாக உணர்தலன்றி முற்ற உணராமை பற்றி,

> நின்னைக் காணா மாந்தர்
> தம்மையுங் காணாத் தன்மை யோரே

என்றார் 'தன்னையும்' என்பது பாடம் ஆகாமையை, மாதவச் சிவஞான யோகிகள் சிவஞான போத மாபாடியத்துள் இதனை எடுத்துக்காட்டிய இடத்தில்* காணும் பாடம் பற்றி யறிக. முதற்கண் போந்த ஓகாரங்கள் தெரிநிலைப் பொருள்.

**875. குறிப்புரை :** ''ஓராது'' முதலிய நான்கும் எதிர்மறை வினையெச்சங்கள். அவைகளில் உள்ள ஏகாரங்கள் பிரிநிலைப் பொருள். ஓர்தல், இங்கு அறிதல். அதற்கு 'நூற்பொருளை' என்னும் செயப்படுபொருள் வருவிக்க. நேர்தல் - சாத்த உடன்படுதல். எந்தத் திருமுழுக்கும் நீரால் நிரம்புதல் பற்றி, "நீரும் நிரப்பாதே" என்றார். யார் ஆயோ - என்ன இயைபு

---

* சூ - 6 - பிண்டப் பொழிப்பு விளக்கம்.

### வெண்பா

875. ஓராதே அஞ்செழுத்தும் உன்னாதே பச்சிலையும்
நேராதே நீரும் நிரப்பாதே – யாரையோ
எண்ணுவார் உள்ளத் திடைமருதர் பொற்பாதம்
நண்ணுவாம் என்னுமது நாம். 14

### கட்டளைக் கலித்துறை

876. நாமே இடையுள்ள வாறறி வாமினி நாங்கள்சொல்லல்
ஆமே மருதன் மருத வனத்தன்னம் அன்னவரைப்
பூமேல் அணிந்து பிழைக்கச்செய் தாரொரு பொட்டுமிட்டார்
தாமே தளர்பவ ரைப்பாரம் ஏற்றுதல் தக்கதன்றே. 15

---

*உடையேமாகியோ, 'நண்ணுவாம் என்னும் அது யார் ஆயோ' என்க. செயற்பாலனவற்றுள் ஒன்றையும் செய்யாமலே, 'நண்ணுவாம்' எனக் கூறுதற்கு யாதோர் இயையும் இல்லை - என்றபடி. ''அது'' என்பது, என்று சொல்லுதலாகிய அத்தொழிலையே குறித்து நிற்றலால் அஃது, "யாராய்" என்னும் வினையெச்சத்தோடு முடிந்தது.*

***876. குறிப்புரை :*** *இப்பாட்டு அகத்திணைப் பொருளில் 'மெய் தொட்டுப் பயிறல்' என்னும் துறை பற்றித் தலைவன் கூற்றாய் அமைந்தது. மருத வனத்து அன்னம் அன்னவர் தலைவி. மேல் - தலைமேல். அணிந்து - அலங்கரித்து. 'மேல் பூவால் அணிந்து' என்க. பிழைக்கச் செய்தார் - அணிந்தவர்கள் தம் செயல் குற்றமாகும்படி செய்தார்கள். 'அன்னம் அன்னவரது இடை எவ்வாறு உள்ளது' என்பதை (அது பூவைச் சுமக்காது என்பதை) நாம் மட்டுமே அறிவோம். (அவர்கள் அறியார்கள்) இனி நாங்கள் அவர்களுக்குச் சொல்லலாமோ! (கூடாது) பூவை அணிந்ததற்குமேல் நெற்றியில் ஒரு பொட்டும் முன்பே மெலிகின்றவர்மேல் மேலும் சுமையை ஏற்றல் தக்கதன்று. (தலைவன் இவ்வாறு கூறி, 'இதற்கு மேல் தலையில் உள்ள மலர்களை நாடி வண்டுகள் வருகின்றனவே' எனக் கூறி, அவைகளை ஓட்டுவான்போலத் தலைவியை நெருங்கி அவளது மெய்யைத் தீண்டுவான்).*

> *அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு*
> *நல்ல படாஅ பறை*

*என்னும் திருக்குறள் இங்கு நினைவுகூரத் தக்கது. "தளர்பவரை" என்னும் இரண்டன் உருபை ஏழன் உருபாகத் திரிக்க.*

***877. குறிப்புரை :*** *அன்றினர் - பகைத்தவர் நுண்பொடி, தோளுக்கு அடை, "கயிலை நடந்தனைய" என்பது முதலியன மால்விடைக்கு அடை*

*அகவற்பா*

877. அன்றினர் புரங்கள் அழலிடை அவியக்
குன்றுவளைத் தெய்த குன்றாக் கொற்றத்து
நுண்பொடி அணிந்த எண்தோள் செல்வ
கயிலைநடந் தனைய உயர்நிலை நோன்தாள்
பிறைசெறிந் தன்ன இருகோட் டொருதிமில்

பால்நிறச் செங்கண் மால்விடைப் பாக
சிமையச் செங்கோட் டிமையச் செல்வன்
மணியெனப் பெற்ற அணியியல் அன்னம்
வெள்ளைச் சிறுநகைக் கிள்ளைப் பிள்ளை
குயிலெனப் பேசும் மயிலிளம் பேடை

கதிரொளி நீலங் கமலத்து மலர்ந்தன்ன
மதரரி நெடுங்கண் மானின் கன்று
வருமுலை தாங்குந் திருமார்பு வல்லி
வையம் ஏழும் பன்முறை ஈன்ற
ஐய திருவயிற் றம்மைப் பிராட்டி

மறப்பருஞ் செய்கை அறப்பெருஞ் செல்வி
எமையா ளுடைய உமையாள் நங்கை
கடவுட் கற்பின் மடவரல் கொழுந
பவள மால்வரைப் பனைக்கைபோந் தனைய
தழைசெவி எண்தோள் தலைவன் தந்தை

பூவலர் குடுமிச் சேவலம் பதாகை
மலைதுளை படுத்த கொலைகெழு கூர்வேல்
அமரர்த் தாங்குங் குமரன் தாதை
பொருதிடம் பொன்னி புண்ணியம் புரக்கும்
மருதிடங் கொண்ட மருத வாண

---

*"கயிலை நடந்தனைய" இல்பொருள் உவமை. 'நடந் தனையதாள்' என்க. எனவே 'நடந்தாற் போலும் நடையை யுடையதாள்' என்பதாம். தாள் - பாதம். நோன் - வலிய. உயர்நிலை - ஓங்கி நிற்கும்தாள். கோடு - கொம்பு. திமில் - முகப்பு. சிமையம் - சிகரம். "செங்கோடு" என்பதில் செம்மை ஆகுபெயராய்ப் பொன்னைக் குறித்தது. கோடு - சிகரம். மணி - மாணிக்கம். இமயச் செல்வன் பெற்ற அன்னம், உமாதேவி 'கிள்ளைப் பிள்ளை, மயில் இளம்பேடை, மானின் கன்று, வல்லி' என்பனவும் அப்பெருமாட்டியையே குறித்தன. "வல்லி" என்பது தவிர ஏனைய உருவகங்கள். "குயில் எனப் பேசும்" என்றாரேனும் பேசுமிடத்து*

நின்னது குற்றம் உளதோ நின்னினைந்(து)
எண்ணருங் கோடி இடர்ப்பகை களைந்து
கண்ணுறு சீற்றத்துக் காலனை வதையா
இறப்பையும் பிறப்பையும் இகந்து சிறப்பொடு
தேவர் ஆவின் கன்றெனத் திரியாப்
பாவிகள் தமதே பாவம் யாதெனின்
முறியாப் புழுக்கல் முப்பழங் கலந்த
அறுசுவை யடிசில் அட்டினி திருப்பப்
புசியா தொருவன் பசியால் வருந்துதல்
அயினியின் குற்றம் அன்று வெயிலின்வைத்(து)
ஆற்றிய தெண்ணீர் நாற்றமிட் டிருப்ப
மடாஅ ஒருவன் விடாஅ வேட்கை
தெண்ணீர்க் குற்றம் அன்றுகண் ணகன்று
தேன்துளி சிதறிப் பூந்துணர் துறுமி
வாலுகங் கிடந்த சோலை கிடப்பு
வெள்ளிடை வெயிலிற் புள்ளிவெயர் பொடிப்ப
அடிபெயர்த் திடுவான் ஒருவன்
நெடிது வருந்துதல் நிழல்தீங் கன்றே. 16

---

எழும் குரலே அங்குக் கருதப்பட்டது. 'மொழியாற் கிள்ளை, சாயலால் மயில், கண்ணால் மான்கன்று' என்க. இடையே "குயில் எனப் பேசும்" என உவமை யணி வந்தது. வருமுலை - வளர்கின்ற தனம். "தாங்கும்" என்பது மார்பிற்கு அடை. வல்லி - கொடி போன்றவர், உவம ஆகுபெயர். நீலம் - நீலப் பூ கமலம் - தாமரைப் பூ. 'நீலப் பூ தாமரைப் பூமேல் பூத்தது போலும்' என்பது இல்பொருள் உவமை. அது முகத்தின்மேல் கண் விளங்குதலுக்கு உவமை, மதர் - களிப்பு. அரி - செவ்வரிகள். ஐய - அழகிய. பணைக் கை - பருத்த துதிக்கை. 'கையொடு' என உருபுவிரிக்க. "பவள மால் வரை பனைக் கையோடு போந்தனைய" - என்பது இல்பொருள் உவமை. தலைவன்; கணபதி, சிவபெருமானுக்கு உள்ளவை விநாயகருக்கும் இருத்தல் பற்றி, "எண்தோள் தலைவன்" என்றார். பதாகை - கொடி. 'கூர்வேற் குமரன்' என இயையும். 'அமரரைத் தாங்கும்' என உருபுவிரிக்க. தாங்குதல், அசுரரால் இன்னற்படா வண்ணம் காத்தல். "தாங்கும்" என்றதை இறந்த காலத்தில் வந்த நிகழ்கால மாகக் கொள்ளலும் பொருந்தும். பொருதல் - மோதுதல். 'கரையைப் பொருதிடும்' என்க. பொன்னி - காவிரி நதி. அது பல வளங்களையும் தருதலால் புண்ணியங்களைப் புரப்பதாயிற்று. தேவர் ஆ - காமதேனு. 'அஃது

### வெண்பா

878. அன்றென்றும் ஆமென்றும் ஆறு சமயங்கள்
ஒன்றொன்றோ டொவ்வா துரைத்தாலும் – என்றும்
ஒருதனையே நோக்குவார் உள்ளத் திருக்கும்
மருதனையே நோக்கி வரும். 17

---

*எல்லார்க்கும் எல்லாம் வழங்குதாகலின், அதன் கன்றிற்குக் கிடையாதது ஒன்று இல்லை' என்பது கருத்து. "யாது" என்பது, 'எத்தன்மையது' என்னும் பொருட்டு. வதையா - வதைத்து முறியாப் புழுக்கல் - உடைபடாத அரிசியால் ஆக்கப்பட்ட சோறு. அயினி - உணவு; அது சோற்றைக் குறித்தது. விளாவிய நீர் காய்ச்சப் படாத நீரில் உள்ள குற்றத்தை உடைத்தாம் ஆகலின், அக்குற்றம் இன்மையைக் குறித்தற்கு, "ஆற்றிய தெண்ணீர்" என்றார். 'நெருப்பில் வைத்துக் காய்ச்சினும் குற்றம்படும்' என்றற்கு, "வெயிலின் வைத்து" என்றார். நாற்றம் - நறுநாற்றம். மடுத்தல் - வாய்மடுத்தல். வேட்கை - தாகம்; "விடாவேட்கை" என்றாராயினும் 'வேட்கை விடாமை' என்றலே கருத்து. கண் அகன்று - இடம் பரந்து. துணர் - கொத்து. துறுமி - செறிந்து. வாலுகம் - வெண்மணல். 'நிழலிற் செல்லாமல் வருந்துதல்' என்க. தீங்கு - குற்றம்.*

*'செல்வ! பாக! கொழுந! தலைவன் தந்தை! குமரன் தாதை! மருதவாண! (உலகில் சிலர் துயர் உறுதல்) நின்னது குற்றம் யாது மில்லை; நின் நினைந்து காலனை வதைத்துச் சிறப்பொடு திரியாப் பாவம் பாவிகள்தமதே; அஃது எத்தன்மைத்து எனின், அடிசில் அட்டு இனிதிருப்ப ஒருவன் புசியரது வருந்துதல் அயினியின் குற்றம் அன்று; தெண்ணீர் இருப்ப, ஒருவன் மடாது வேட்கை விடாமை தெண்ணீர்க் குற்றம் அன்று; சோலை கிடப்ப, ஒருவன் நிழலிற் புகாது வெயிலில் வருந்துதல் நிழல்தீங்கன்று' என இயைத்து, 'இவை போலும் தன்மைத்து' என முடிக்க.*

***878. குறிப்புரை :*** *"உரைத்தாலும்" என்பதன்பின், 'அவ்வுரைகள் அனைத்தும்' என்னும் எழுவாய் வருவித்துக் கொள்க. ஒரு தனையே - ஒருவனாகிய (தன்னோடு ஒப்பது பிறிதொன்று இல்லாதவனாகிய) தன்னையே, 'உண்மையான மெய்ப்பொருள் திருவிடைமருதூர்ப் பெருமானே யாகையால், மெய்ப்பொருளை ஆயப் புகுந்த சமயங்கள் பலவும் தான் தான் அறிந்த அளவில் அம்மெய்ப்பொருளைப் பற்றிக் கூறும் கூற்றுக்கள் தம்முள் ஒவ்வாது இகலியிருப்பினும் அவை அனைத்தும் அப்பெருமானைப் பற்றிக் கூறும் கூற்றாகவே அமையும்' என்பதாம். இஃது யானையின் ஒவ்வோர் உறுப்பை மட்டும் கையால் தடவி முடித்து, 'அவ்வவ்வுறுப்புக்களே யானை' எனக் கருதிக் கொண்டு யானையின் இயல்பைப் பற்றிக் குருடர்கள் தம்முள்*

### *கட்டளைக் கலித்துறை*

879. நோக்கிற்றுக் காமன் உடல்பொடி யாக நுதிவிரலால்
தாக்கிற் றரக்கன் தலைகீழ்ப் படத்தன் சுடர்வடிவாள்
ஒக்கிற்றுத் தக்கன் தலையுருண் டோடச் சலந்தரனைப்
போக்கிற் றுயர்பொன்னி சூழ்மரு தாளுடைப் புண்ணியனே. 18

---

*இகலியுரைக்கும் உரைகள் யாவும் யானையின் இயல்பேயாதல் போல்வதாம். "அன்று" என்றல், எதிர்ப் பக்கத்தவர் கூறும் உரையை மறுப்பவர் கூறுவது. "ஆம்" என்றல், தம் பக்கத்தவர் கூறும் உரையை உடன்படுவார் கூறுவது. ஆறு சமயங்களாவன மெய்ப்பொருளை ஆயப்புகுந்த ஆறு சமயங்கள். அவை 'உலகாயதம், பௌத்தம், சமணம், சாங்கியம், தருக்கம், ஏகான்ம வாதம்' - என்பன. உலகாயதம், "உலகமே மெய்ப்பொருள்" எனவும், பௌத்தம், ''நிலையாமையே மெய்ப்பொருள்'' எனவும், சமணம், ''வினையே மெய்ப்பொருள்" எனவும், சாங்கியம், "உயிரே மெய்ப்பொருள்" எனவும், தருக்கம், "உயிரினும் சிறிதே உயர்ந்தது மெய்ப்பொருள்" எனவும், ஏகான்ம வாதம், "தன்னோடுஒத்த ஒன்றோ, கீழான ஒன்றோ, தனக்கென்று ஓர் இயல்போ இல்லாதது மெய்ப்பொருள்" எனவும் கூறும். பிற சமயங்களின் மெய்ம்மைகள் எல்லாம் இவற்றுள்ளே அடங்குமாற்றையும், இவை அனைத்தும் சிவநெறிமெய்ம்மையுள் அடங்குதலையும் அறிந்து கொள்க.*

***879. குறிப்புரை :*** *"நோக்கிற்று, தாக்கிற்று" முதலிய நான்கும் நோக்கியது, தாக்கியது முதலிய பொருளவாய், அவ்வத் தொழிலைக் குறித்தன. அவற்றிற் கெல்லாம் வினைமுதல் இறுதிக்கண் உள்ள ''புண்ணியன்'' என்பது. 'புண்ணியம்' என்பது பாடமாயின் அதுவும் உபசார வழக்கால் புண்ணிய னையே குறித்து நிற்கும். அரக்கன், இராவணன், ஒக்கிற்று - உயர எடுத்தது. மருது - மருதூர். நுதி - நுனி. நுதி விரல் - விரல் நுதி; இலக்கணப் போலி மொழி. 'உயிர் போக்குதல்' என்பது 'அழித்தல்' என்னும் பொருட்டாய் நிற்றலின் அது, "சலந்தரனை" என்னும் இரண்டாவதற்கு முடிபாயிற்று.*

***880. குறிப்புரை :*** *அடி - 76. "முதல்வ"என்பதை, "திரிபுராந்தக" என்பதன் பின்னர்க் கூட்டி, 'முதல்வன் - முழுமுதற் கடவுள்' என்க. அடி - 4 'வாட்கண் அரிக்கண்' எனத் தனித் தனி இயைக்க. வாட்கண் - வாள் போலும் கண். அரி - செவ்வரி. அடி 7, மூவா - கெடாத, இடையே கெடும் முதல்வரின் நீக்குதற்கு மூவர் முதல்வ என்றார். அடி-8 பணைத்த - பெருத்த. அறியாமை பற்றி அம்மக்களை "மாக்கள்" என்றார். கை மேல் நிமிர்த்தல், இருகைகளையும் வானத்தை நோக்க நீட்டுதல். கால் ஒன்று முடக்குதலாவது, ஒரு கால் அடியை எடுத்து மற்றொரு காலின் துடை மேல் ஊன்றுதல். ஐவகை நெருப்பு -*

*அகவற்பா*

880. புண்ணிய புராதன புதுப்பூங் கொன்றைக்
கண்ணி வேய்ந்த ஆயிலை நாயக
காள கண்ட கந்தனைப் பயந்த
வாளரி நெடுங்கண் மலையாள் கொழுந
பூத நாத பொருவிடைப் பாக

வேத கீத விண்ணோர் தலைவ
முத்தி நாயக மூவா முதல்வ
பத்தி யாகிப் பணைத்தமெய் யன்பொடு
நொச்சி யாயினுங் கரந்தை யாயினும்
பச்சிலை இட்டுப் பரவுந் தொண்டர்

கருவிடைப் புகாமற் காத்தருள் புரியும்
திருவிடை மருத திரிபு ராந்தக
மலர்தலை உலகத்துப் பலபல மாக்கள்
மக்களை மனைவியை ஒக்கலை ஒரீஇ
மனையும் பிறவும் துறந்து நினைவரும்

காடும் மலையும் புக்குக் கோடையில்
கைம்மேல் நிமிர்த்துக் காலொன்று முடக்கி
ஐவகை நெருப்பின் அழுவத்து நின்று
மாரி நாளிலும் வார்பனி நாளிலும்
நீரிடை மூழ்கி நெடிது கிடந்தும்

சடையைப் புனைந்துந் தலையைப் பறித்தும்
உடையைத் துறந்தும் உண்ணா துழன்றும்
காயுங் கிழங்குங் காற்றுதிர் சருகும்
வாயுவும் நீரும் வந்தன அருத்தியுங்
களிருங் கல்லிலுங் கண்படை கொண்டும்

தளர்வுறும் யாக்கையைத் தளிர்வித்(து)
ஆங்கவர்
அம்மை முத்தி அடைவதற் காகத்
தம்மைத் தாமே சாலவும் ஒறுப்பர்;
ஈங்கிவை செய்யாது யாங்கள் எல்லாம்

பழுதின் றுயர்ந்த எழுநிலை மாடத்துஞ்
செழுந்தா துதிர்ந்த நந்தன வனத்துந்
தென்றல் இயங்கும் முன்றில் அகத்துந்

தண்டாச் சித்திர மண்டப மருங்கிலும்
பூவிரி தரங்க வாரிக் கரையிலும்

மயிற்பெடை ஆலக் குயிற்றிய குன்றிலும்
வேண்டுழி வேண்டுழி ஆண்டாண் டிட்ட
மருப்பின் இயன்ற வாளரி சுமந்த
விருப்புறு கட்டில் மீமிசைப் படுத்த
ஐவகை அமளி அணைமேல் பொங்கத்

தண்மலர் கமழும் வெண்மடி விரித்துப்
பட்டின்உட் பெய்த பதநுண் பஞ்சின்
நெட்டணை யருகாக் கொட்டைகள் பரப்பிப்
பாயல் மீமிசைப் பரிபுரம் மிழற்றச்
சாயல் அன்னத்தின் தளர்நடை பயிற்றிப்

பொற்றோ ரணத்தைச் சுற்றிய துகிலென
அம்மென் குறங்கின் ஒம்மென் கலிங்கம்
கண்ணும் மனமுங் கவற்றப் பண்வர
இரங்குமணி மேகலை மருங்கில் கிடப்ப
ஆடர வல்குல் அரும்பெறல் நுசுப்பு

வாட வீங்கிய வனமுலை கதிர்ப்ப
அணியியல் கமுகை அலங்கரித் ததுபோல்
மணியியல் ஆரங் கதிர்விரித் தொளிர்தர
மணிவளை தாங்கும் அணிகெழு மென்தோள்
வரித்த சாந்தின்மிசை விரித்துமீ திட்ட

உத்தரீ யப்பட் டொருபால் ஒளிர்தர
வள்ளை வாட்டிய ஒள்ளிரு காதொடு
பவளத் தருகாத் தரளம் நிரைத்தாங்(கு)
ஒழுகி நீண்ட குமிழொன்று பதித்துக்
காலன் வேலும் காம பாணமும்

ஆல காலமும் அனைத்தும்இட் டமைத்த
இரண்டு நாட்டமும் புரண்டுகடை மிளிர்தர
மதியென மாசறு வதனம் விளங்கப்
புதுவிரை அலங்கல் குழன்மிசைப் பொலியும்
அஞ்சொல் மடந்தையர் ஆகந் தோய்ந்துஞ்

சின்னம் பரப்பிய பொன்னின் கலத்தில்
அறுசுவை அடிசில் வறிதினி தருந்தா(து)

ஆடினர்க் கென்றும் பாடினர்க் கென்றும்
வாடினர்க் கென்றும் வரையாது கொடுத்தும்
பூசுவன பூசியும் புனைவன புனைந்தும்
தூசின் நல்லன தொடையிற் சேர்த்தியும்
ஐந்து புலன்களும் ஆர ஆர்ந்து
மைந்தரும் ஒக்கலும் மனமகிழ்ந் தோங்கி
இவ்வகை இருந்தோம் ஆயினும் அவ்வகை
மந்திர எழுந்தைந்தும் வாயிடை மறவாது
சிந்தை நின்வழி செலுத்தலின் அந்த
முத்தியும் இழந்திலம் முதல்வ! அத்திறம்
நின்னது பெருமை அன்றோ! என்னெனின்
வல்லான் ஒருவன் கைம்முயன்று எறியினும்
மாட்டா ஒருவன் வாளா எறியினும்
நிலத்தின் வழாஅக் கல்லேபோல்
நலத்தின் வழார்நின் நாமம்நவின் றோரே. 19

---

*பஞ்சாக்கினி. அவை நான்கு திசையிலும் மூட்டப்பட்ட நான்கு தீக்களோடு நடுவண் தீயாகக் கருதிக் கொள்ளப்படும் பகலவன். அழுவம் - பள்ளம்; குண்டம். வார் பனி - ஒழுகுகின்ற பனி, கண் படை - துயிலுதல். தளர்வுறும் யாக்கையைத் தளர்வித்து - தானே மெலிவதாகிய உடம்பைத் தாங்கள் வலிதின் மெலிவித்து, அம்மை - மறுமை. தம்மை ஒறுத்தலாவது, உடலை வாட்டும் முகத்தால் உயிரை வருத்துதல். தாது - மகரந்தம். முன்றில் - இல்முன். தண்டா - நீங்காத. ஆல - ஆடும்படி, குயிற்றிய - செய்யப்பட்ட. குயிற்றிய குன்று - செங்குன்று; கட்டு மலை, மருப்பு - யானைத் தந்தம். வாள் அரி - கொடிய சிங்கம். படுத்த - இடப்பட்ட. அமளி - படுக்கை. அணை - மெத்தை. ஐ வகை அமளி ஆணை - பஞ்ச சயனம். அவை மயிலின் மெல்லிறகு, அன்னத்தின் மெல்லிறகு; இலவம் பஞ்சு, செம்பஞ்சு, வெண்பஞ்சு - இவை அடைக்கப் பட்ட மெத்தை. 'அணைமேல் விரித்து' என இயையும். 'மலர் போலக் கமழும்' என்க. மடி - துணி. பட்டு - பட்டால் ஆகிய உறை. பதப் பஞ்சு - கொட்டி எடுத்துப் பதம் ஆக்கிய பஞ்சு. நுண் பஞ்சு - இலவம் பஞ்சு. 'பஞ்சின் கொட்டைகள்' என்க. நெட்டணை - பஞ்ச சயனங்களைத் தாங்குகின்ற நீண்ட மெத்தை. கொட்டைகள் - தலையணைகள். பாயல் - படுக்கை. 'இவ்வாறான பாயல்' என்க. 'பாயல் மீமிசைத் தோய்ந்து' என இயையும். பரிபுரம் - காலில் அணிந்த சிலம்பு. அன்னத்தின் நடையைத் தாம் பயிற்றி என்க. பயிற்றுதல் - நிகழ்வித்தல், தோரணம், இடைக்கு உவமை,*

*அம் - அழகிய. மெல் - மெல்லிய. குறங்கு - துடை. "ஓம்" என்பது மெல்லென ஒலிக்கும் ஒலிக்குறிப்பு. 'குறங்கின்கண் ஓம் என்னும் கலிங்கம்' என்க. கலிங்கம் - உடை. கவற்ற - ஏக்கறும்படி செய்ய. பண் வர இரங்கும் - பல பண்களும் தோன்ற ஒலிக்கின்ற. நடை வேறுபாட்டால் மேகலையின் ஒலி வேறுபடுவனவாம். மருங்கு - இடை; அரும் பெறல் நுசுப்பு - அரிதில் காணப் பெறும் இடை' 'அல்குலின் மேலதாகிய நுசுப்பு' என்க. வனம் - அழகு. கதிர்ப்ப - அழகு விளங்க. ஆரம் - கழுத்துச் சரம், வளை, இங்குத் தோள் வளை. தோள் வரித்த சாந்து. தோள்களை அலங்கரித்த சந்தனம். உத்தரியம் - மேலாடை. வள்ளை - வள்ளைத் தண்டு; நீரிற் கிடப்பது. இது காதிற்கு உவமையாகும். 'வள்ளையை வாட்டிய' என்க. வாட்டிய - தோற்கச் செய்த. உருவக வகையால் பவளம் இதழையும், தரளம் (முத்து) பற்களையும், குமிழ் மூக்கினையும் குறித்தன. குமிழ் - குமிழம் பூ. நாட்டம் - கண். அவை காமத்தை மிகுவிக்கும் முகத்தால் ஆடவரது உயிரைப் போக்குவன போறல் பற்றிக் காலனது (கூற்றுவனது) வேல் முதலிய மூன்றும் ஒருங்கமைந்தனவாகக் கூறப்பட்டன. மிளிர்தல் - சிவத்தல். அம் சொல் - அழகிய சொல். ஆகம் - மார்பு. சின்னம் - ஓவியம். வறிது - சிறிது, அருந்தா - அருந்தி. சிறிதே அருந்துதல் பசியின்மையால். வாடினர் - வறியவர். வரையாது கொடுத்தல் - 'இன்னார், இனியார்' என்று வேற்றுமை பாராது எல்லார்க்கும் வழங்குதல். தூசு - நல் ஆடை. 'அவற்றுள்ளும் நல்லன' என்க. தொடை - மாலை. 'தொடையின்கீழ்' எனவும், 'மைந்தரொடும், ஒக்கலோடும்' எனவும் உருபுகள் விரிக்க. ஆர - நிரம்ப. ஆர்ந்து - நுகர்ந்து. ஒக்கல் - சுற்றம். "இவ்வகை யிருந்தேமாயினும்" என்றமையால், "இவ்வகையிருந்தேயாக வேண்டும்" என்பது நியமம் ஆகாமை விளங்கும். அந்த முத்தி - மேல் தம்மைத் தாமே ஒறுப்பவர் விரும்பிய தாகக் கூறப்பட்ட முத்தி. இனி, 'முத்திகளில் எல்லாம் முடிவான பரமுத்தி' என்றலும் ஆம். "வாயிடை" என்பதன் பின், 'வைத்தலை' என ஒரு சொல் வருவிக்க. "வல்லான் ஒருவன்... கல்லே போல்" என்பதை "அந்த முத்தியும் இழந்திலம்" என்பதற்கு முன்னே கூட்டுக. அடி-29 "யாங்கள் இவ்வகை யிருந்தேமாயினும் அந்த முத்தியும் இழந்திரம்" என்றதனால், 'தம்மைத் தாமே ஒறுப்பவர் அவ்வாறு ஒறுப்பினும் அந்த முத்தியைப் பெறுகிலர்' என்பது பெறப்பட்டது. பல வகையிலும் உடலை வருத்தி நோற்றல் மன ஒருக்கத்தின் பொருட்டேயாம். அவ்வாற்றால் மனம் ஒருங்குதலின் பயன், மந்திர எழுத்து ஐந்தும் வாயிடை மறவாது சிந்தை சிவன்வழிச் செலுத்தலே யாகலின் தம்மைத் தாமே ஒறுத்தும் அது செய்யாதார் அந்த முத்தியை அடைவாரல்லர்' எனவும், 'முன்னைப் புண்ணிய மிகுதியால் இம்மையில் மனம் ஒருங்கப் பெற்றோர் உடல் வருந்த நோலாதே, மாறாக, ஐந்து புலன்களும் ஆர ஆர்ந்தும் அந்த முத்தியையும் இழவாது*

*பெறுவர்' எனவும் 'எவ்வாற்றானும் சிவனை நினைதலே முத்தி சாதனம்' என்பதும், 'எனவே, எதனைச் செய்யினும் அச்சா தனத்தைப் பெறாதார் முத்தியாகிய பயனைப் பெறுமாறு இல்லை' என்பதும் உணர்த்தியவாறு. அப்பர், இக்கருத்தை, "கங்கை யாடில் என், காவிரி யாடில் என்"* என்பது முதலாக எடுத்துக் கூறி, "எங்கும் ஈசன் எனாதவர்க்கு இல்லையே" என நியமித்து அருளிச் செய்தார். அதனால் அவர் அங்குக் கங்கை ஆடுதல் முதலியவற்றையும், இங்கு இவ்வாசிரியர், "மக்களை, மனைவியை, ஒக்கலை ஒரீஇக் காடும், மலையும் புகுந்து கடுந்தவம் புரிதலையும் இகழ்ந்தார் என்னற்க. மற்று, எவ்வாற்றானும் சிவனை நினைத்தலே சாதனம் ஆதலையே வயிறுத்தினர் என்க.*

*அவைதிகருள் சமணரும் வைதிகருள் மீமாஞ்சகரும் இங்குக் கூறியவாறு, 'தம்மைத் தாம் ஒறுப்பதே முத்தி சாதனம்' என்பர். அது பற்றியே இங்கு வைதிகர் புரியும் தவங்களாக் கூறிவந்தன பலவற்றுக்கு இடையே அடி-20, 21 தலையைப் பறித்தல், உடையைத் துறத்தல், உண்ணாது உழலல், கல்லில் கண் படைகொள்ளல் ஆகிய சமணர் தவங்களையும் கூறினார்.*

*கல் ஒன்றை வல்லான் ஒருவன் கைம் முயன்று எறிதல், மக்களை, மனைவியை, ஒக்கலை ஒருவுதல் முதலியவற்றைச் செய்வோர் ஐந்தெழுத்தை ஓதுதற்கும், மாட்டா ஒருவன் வாளா எறிதல், அவற்றைச் செய்ய மாட்டாது ஐம்புலன்களை ஆர நுகர்வார் ஐந்தெழுத்தை ஓதுதற்கும் உவமைகள். 'கல்லின் இயல்பு, யாவர் உயர எறியினும் தப்பாது நிலத்தில் வீழ்தல் ஆதல் போல, ஐந்தெழுத்தின் இயல்பு, யாவர் ஓதினும் முத்தியிற் சேர்த்தல்' என்பது இவ்வுவமைகளால் விளக்கப் பட்டது. இதனை,*

*சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு*
*நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.*

*என்னும் குறளிற் போந்த உவமையோடு வைத்துக் காண்க.*

***அடி-77:*** *அத்திறம் - ஐம்புலன்களையும் ஆர நுகர்ந்தும் அந்த முத்தியையும் யாம் இழவாது பெறுதலாகிய கூறுபாடு. என் எனின் - எங்ஙனம் எனின். 'நின் நாமம் நவின்றோர் நலத்தின் வழார் ஆகலின்' என முடிக்க. 'ஆகலின் என்பது சொல்லெச்சம். எனவே, "வழார்" என்றது, 'வழாதவாறு' நீ அருளுகின்றாய்' என்றதாம்.*

*'சிவனை நினையாது பிறவற்றையெல்லாம் செய்வோர் அச்செயல்களுக்கு உரிய பயன்களைப் பெறுதலோடு ஒழிவதல்லது, பிறவி நீங்குதலாகிய முத்தியைப் பெறார்' என்பது கருத்து. இதனை,*

---

* *திருமுறை - 5.99.*

*வெண்பா*

881. நாமம்நவிற் றாய்மனனே நாரியர்கள் தோள்தோய்ந்து
காமம் நவிற்றிக் கழிந்தொழியல் – ஆமோ
பொருதவனத் தானையுரி போர்த்தருளும் எங்கள்
மருதவனத் தானை வனைந்து. 20

---

*பரசிவன் உணர்ச்சி யின்றிப்*
*பல்லுயிர்த் தொகையும் என்றும்*
*விரவிய துயர்க் கீ றெய்தி*
*வீடுபே றடைது மென்றல்*
*உருவமில் விசும்பின் தோலை*
*உரித்துடுப் பதற்கொப்பென்றே*
*பெருமறை பேசிற் றென்னில்*
*பின்னும்ஓர் சான்றும் உண்டோ*

*எனக் கந்த புராணத்திலும்*[1]

*மானுடன் விசும்பைத் தோல்போற்*
*சுருட்டுதல் வல்ல னாயின்*
*ஈனமில் சிவனைக் காணாது*
*இடும்பைதீர் வீடும் எய்தும்;*
*மானமார் சுருதி கூறும்*
*வழக்கிவை ஆத லாலே*
*ஆனமர் இறையைக் காணும்*
*உபாயமே யறிதல் வேண்டும்*

*எனக் காஞ்சிப் புராணத்திலும்*[2] *கூறப்பட்ட உபநிடதப் பொருள் பற்றி யறிக.*

***881. குறிப்புரை :*** *“நாமம் நவிற்றாய்” என்பதற்கு முன் ‘அவன்’ என்பது வருவித்து, அத்தொடரை இறுதிக்கண் கூட்டுக. நவிற்றாய் - சொல்லு. “காமம்” என்பது அதன்வழி நிகழ்வதாகிய கலவியைக் குறித்தது. “தோய்ந்து நவிற்றி” என்பது, ‘ஓடி வந்து’ என்பதுபோல செய்யும் செயலை வகுத்துக் கூறியதாம். பொருத - போர் செய்த. வனத்து ஆனை - காட்டு யானை. வளைந்து - வலம் வந்து.*

***882. குறிப்புரை :*** *“பொன் அலர்ந்த” என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. பொன் அலர்ந்த - பொன் போல மலர்ந்த. தளை - தளைக்கப்பட்டது; மாலை. வளைதல் - வலிமை யிழத்தல். ‘பசியின்*

---

1. *தட்ச காண்டம் - உபதேசப் படலம் - 25.*
2. *சனற்குமாரப் படலம் - 43.*

### *கட்டளைக் கலித்துறை*

882. வளையார் பசியின் வருந்தார் பிணியின் மதன னம்புக்(கு)
இளையார் தனங்கண் டிரங்கிநில் லாரிப் பிறப்பினில்வந்(து)
அளையார் நரகினுக் கென்கட வார்பொன் னலர்ந்தகொன்றைத்
தளையார் இடைமரு தன்னடி யார்அடி சார்ந்தவரே. 21

### *அகவற்பா*

883. அடிசார்ந் தவர்க்கு முடியா இன்பம்
நிறையக் கொடுப்பினுங் குறையாச் செல்வம்
மூலமும் நடுவும் முடிவும் இகந்து
காலம் மூன்றையுங் கடந்த கடவுள்
உளக்கணுக் கல்லா ஊன்கணுக் கொளித்துத்(து)

துளக்கற நிமிர்ந்த சோதித் தனிச்சுடர்
எறுப்புத் துளையின் இருசெவிக் கெட்டாது
உறுப்பில்நின் றெழுதரும் உள்ளத் தோசை
வைத்த நாவின் வழிமறுத் தகத்தே
தித்தித் தூறும் தெய்வத் தேறல்.

---

*வளையார்; பிணியின் வருந்தார்' என மாற்றிக்கொள்க. தனம் - மகளிர் கொங்கை. இரங்குதல் - ஆற்றாது வருத்தல், "பொழுதுகண்டிரங்கல்"[1] என்றது காண்க. அளைதல் - உலகியலில் ஈடுபடுதல். என் கடவார் - என்ன கடமை யுடையாராவர்! 'யாதொரு கடமையும் உடையவர் ஆகார்' என்பதாம்.*

***883. குறிப்புரை :*** *'செல்வம், சுடர், ஓசை, தேறல், நாற்றம், முளை' - என்பன உருவக வகையால் திருவிடைமருதூர் இறைவனையே, குறித்தனவாய், விளியேற்று நின்றன. "கொடுப்பினும் குறையாச் செல்வம், (திருவருள்) ஊன் கண்ணுக்கு ஒளித்து, உளக்கண்ணுக்கு விளங்கித் துளக்கற நிமிர்ந்த சுடர். இருசெவிக்கு எட்டாது உள்ளத்திற்குக் கேட்கும் ஓசை, நாவில் தித்தியாது மனத்தில் தித்திக்கும் தேறல், (தேன்) மூக்கிற்கு மணக்காமல் அறிவிற்கு மணக்கும் நாற்றம், அனைத்தும் தன்னினின்றும் முளைத்தலன்றித் தான் ஒன்றினின்றும் முளையாத முளை ஆகியவை அதிசய உருவகங்கள். அதிசய உருவகம் புறனடையாற் கொள்ளப் படும்.[2] மூலம் - முதல். "காலம் மூன்றையும் கடந்த கடவுள்"என்றதனால், கால வயப்பட்டுத் தோன்றி நின்று மறையும் கடவுளரும் இருத்தல் பெறப்பட்டது. "கடவுள்" என்பதும் விளியே. இகந்து - இகத்தலால். துளக்கற நிமிர்ந்த - அசை வில்லாது. ஓங்கி எரிகின்ற. 'என்பு',*

---

1. *திருக்குறள்*
2. *தண்டியலங்காரம் - உருவக அணி.*

துண்டத் துளையில் பண்டைவழி யன்றி
அறவில் நாறும் நறிய நாற்றம்
ஏனைய தன்மையும் எய்தா தெவற்றையும்
தானே ஆகி நின்ற தத்துவ
தோற்றுவ எல்லாம் தன்னிடைத் தோற்றித்

தோற்றம் பிறிதில் தோற்றாச் சுடர்முளை
விரிசடை மீமிசை வெண்மதி கிடப்பினும்
இருள்விரி கண்டத்(து) ஏக நாயக
சுருதியும் இருவரும் தொடர்ந்துநின் றலமர
மருதிடம் கொண்ட மருதமா ணிக்க

உமையாள் கொழுந ஒருமூன் றாகிய
இமையா நாட்டத் தென்தனி நாயக
அடியேன் உறுகுறை முனியாது கேண்மதி
நின்னடி பணியாக் கல்மனக் கயவரொடு
நெடுநாட் பழகிய கொடுவினை ஈர்ப்பக்

கருப்பா சயமெனும் இருட்சிறை அறையில்
குடரெனும் சங்கிலி பூண்டு தொடர்ப்பட்டுக்
கூட்டுச்சிறைப் புழுவின் ஈட்டுமலத் தழுந்தி
உடனே வருந்தி நெடுநாட் கிடந்து
பல்பிணிப் பெயர்பெற் றல்லற் படுத்துந்

தண்ட லாளர் மிண்டிவந் தலைப்ப
உதர நெருப்பில் பதைபதை பதைத்தும்
வாதமத் திகையின் மோதமொத் துண்டும்
கிடத்தல் நிற்றல் நடத்தல் செல்லா(து)
இடங்குறை வாயிலின் முடங்கி இருந்துழிப்

பாவப் பகுதியில் இட்டுக் காவல்
கொடியோர் ஐவரை ஏவி நெடிய
ஆசைத் தளையில் என்னையும் உடலையும்
பாசப் படுத்திப் பையென விட்டபின்
யானும் போந்து தீனுக் குழன்றும்

பெரியோர்ப் பிழைத்தும் பிறர்பொருள் வௌவியும்
பரியா தொழிந்து பல்லுயிர் செகுத்தும்
வேற்றோர் மனைவியர் தோற்றம் புகழ்ந்தும்
பொய்பல கூறியும் புல்லினம் புல்லியும்
ஐவருங் கடுப்ப அவாயது கூட்டி

ஈண்டின கொண்டு மீண்டு வந்துழி
இட்டுழி இடாது பட்டுழிப் படாஅது
இந்நாள் இடுக்கண் எய்திப் பன்னாள்
வாடுபு கிடப்பேன் வீடுநெறி காணேன்
நின்னை அடைந்த அடியார் அடியார்க்(கு)
என்னையும் அடிமை யாகக் கொண்டே
இட்டபச் சிலைகொண் டொட்டிநன்(கு) அறிவித்
திச்சிறை பிழைப்பித் தினிச்சிறை புகாமல்
காத்தருள் செய்ய வேண்டும்
தீத்திரண் டன்ன செஞ்சடை யோனே. 22

---

*'எற்பு' என்று ஆய பொழுது அஃது எதுகை நோக்கி, 'எறுப்பு' என ஓர் உகரமும், பகர ஒற்றும் விரியப் பெற்றது. 'அங்கம்' என்னும் வடசொல்லின் மொழி பெயர்ப்பாக, உடம்பு இங்கு "உறுப்பு" எனப்பட்டது. உயிரினுள்ளே எழுகின்ற ஓசையை ஒற்றுமை பற்ற உடம்பினின்றும் எழுவதாகக் கூறினார். உள்ளத்து ஓசை, மனத்தால் உணரப்படும் ஓசை. வைத்த - 'சுவைக்கு' என்று வைக்கப்பட்ட தெய்வத் தேறல் - தெய்வத்தன்மையுடைய தேன். துண்டம் - மூக்கு. 'வழியிலன்றி' என உருபு விரிக்க. நறிய நாற்றம் - நறுமணம் ஏனைய தன்மை - ஏனைய பொருள்களின் தன்மை. அவை மேற்கூறிய செல்வம் முதலியனபோல உள்ள பொருள்களின் தன்மை. எய்தாது - அடையாமல். அடையாவிடினும் எல்லாப் பொருள்களும் தானேயாகி நின்ற. தத்துவன் - மெய்ப் பொருளாய் உள்ளவன். இறைவன் சார்பு இல்லையாயின் யாதொரு பொருளும் நிலைக்கமாட்டாது. அஃது அகர உயிர் இன்றேல் அக்கரங்கள் இல்லையாமாறு போலும்[1] அதனால் எப்பொருளும் நிலைபெறுதற் பொருட்டு அவற்றில் அவையே தானாகிக் கலந்து நிற்கின்றான். அங்ஙனம் அவன் கலந்து நிற்பினும் யாதொரு பொருளாலும் தாக்கப்படாமையால், "ஏனைய தன்மையும் எய்தாது எவையும் தானே யாகி நின்ற தத்துவன்" என்றார். "தானே" என்பது வேறு முடிபு கொள்ளு தலால் இடவழுவின்று. உம்மை இறந்தது தழுவிய எச்சம். தத்துவ - தத்துவனே. "ஏனைய தன்மையும்... தத்துவ" என்பதைப் பின்வரும் "முளை" என்பதன் பின்னர்க் கூட்டி யுரைக்க. இனி, 'அவ்வாறு ஓதுதலே பாடம்' என்றலும் ஆம். தோற்றுவஎல்லாம் - தோன்றற்பாலன எல்லாவற்றையும் தோற்றி - தோற்றுவித்து. "முளை" என்பதற்கு 'முளையாய் உள்ளவனே' என்பதே பொருளாகலானும், அங்ஙனமாகும் பொழுது 'முளை' என்பது படர்க்கையேயாகவானும், 'நின்னிடைத் தோற்றி' என்னாது "தன்னிடைத் தோற்றி" என்றார். "தோற்றம்*

---

1. *சிவஞான போதம் - சூ.2. அதி.1.*

தோற்றா” என்பது “உண்ணலும் உண்ணேன்” என்பது போல நின்றது. சுடர் - விளங்குகின்ற. ‘வெண்மதி இருக்கவும் இருள் விரிதல் வியப்பு என்றபடி, இருவர் மாலும், அயனும் இது தொகைக்குறிப்பு. மாணிக்க - மாணிக்கனே! மாணிக்கம் போல்பவனே. ஈற்றடியை. “தனி நாயக” என்பதன்பின் கூட்டுக. உறு குறை - உன்பால் இரக்கின்ற குறை, மதி, முன்னிலை யசை. இருட் சிறை - இருளுக்கு இருப்பிடம். தொடர்ப்பட்டு - கட்டுப் பட்டு. கூடு, தாயது வயிறாகிய கூடு. கூட்டுச் சிறை உருவக உருவகம். ‘சிறைக்கண் புழுவினுடனே அழுந்தி வருந்தி’ என இயைக்க. ‘புழுவினுடனே’ என்றதனால், அங்குப் புழுக்கள் மலந்திருத்தல் பெறப்பட்டது. பிணிப் பெயர், ‘வயிற்று வலி, தலைவலி, முடக்கு வாதம்’ முதலிய பெயர்கள். ‘அப்பெயர்களால் வந்து வருத்தும் தண்டனாளர்’ என்க. தண்டனாளர், தலைவன் விதித்த தண்டனையைச் செய்பவர்கள். “தண்டனாளர்” என்பதும் உருவகம். மிண்டி - நெருங்கி, அலைப்ப - துன்புறு விக்க. உதரம் - தாயது வயிறு. ‘பதை பதைத்தல்’ என்னும் இரட்டைக் கிளவி செய்யுள் நோக்கி மிக்குவிரிந்தது. வாதம் - பிரசூத வாயு; குழந்தையைத் தாய் வயிற்றினின்றும் வெளி யேற்றும் காற்று. மத்திகை - குதிரையை அடித்து ஓட்டும் சவுக்கு. இதுவும் உருவகம். இனி இவ்வாறு வருவன பிறவும் அவை. ‘அது மோத’ என்க. கிடத்தல் முதலியவற்றிற்குப் போதிய இடம் இல்லாத இல்லம்; தாய் வயிறு. ‘இடம் குறைய வாய்ந்த இல்’ என்க. துன்பத்திற்குக் காரணமாதல் பற்றிய பாவத்தையே கூறினாராயினும் புண்ணியமும் உடன் கொள்ளப்படும். ‘கருவிற்றானே பாவ புண்ணியங்களாகிய பிராரத்தங்கள் அமைக்கப் படுகின்றன’ என்றபடி. காவல் ஐவர் - திருவருளிற் செல்ல ஒட்டாமல் காத்து நிற்கின்ற ஐவர்; ஐம்புலன்கள். தளை - விலங்கு. பாசப்படுத்தல் - தடைப் படுத்தல். பையென - மெல்ல. ‘தாய் வயிற்றினின்றும் வெளியில் விட்டபின்’ என்க. தீன் - தின்னப்படுவது. உண்ணப்படுவதனையும் இழிவு பற்றித் தின்னப்படுவனவாகக் கூறினார். ‘தீதினுக்கு’ என்பது பாடம் அன்று. ‘பெரியோரைப் பிழைத்தல்’ என இரண்டாவது விரித்து, அதனை நான்காவதாகத் திரிக்க. பிழைத்தல் - தவறு இழைத்தல். பரியாது - இரங்காமல். தோற்றம் - அழகு. புகழ்தல், விரும்புதலாகிய தன் காரணம் தோற்றி நின்றது. புல்லினம் - புல்லர் கூட்டம். புல்லர் - அற்பர். புல்லுதல் - தழுவுதல். கடுத்தல் - சினத்தல். அஃது சினந்து ஏவுதலாகிய காரியத்தைக் குறித்தது. அவாயது - விரும்பியது. இது சாதியொருமை. ‘அவாவது’ என்பது பாடம் அன்று. ஈண்டின் - கிடைத்தவை. மீண்டு வருதல் உறைவிடத்திற்கு. உறைவிடம் ஒன்றால் இல்லாமல் பல ஊரும், பல நாடுமாக அலைதலால், இன்று வைத்த இடத்தில் நாளை வையாமல், இன்று இருந்த இடத்தில் நாளை இல்லாமல் ஊர் பெயர்ந்தும், நாடு பெயர்ந்தும் உழன்று, ‘இந்நாள்

### வெண்பா

884. சடைமேல் ஒருத்தி சமைந்திருப்ப மேனிப்
புடைமேல் ஒருத்தி பொலிய – இடையேபோய்ச்
சங்கே கலையே மருதற்குத் தான்கொடுப்ப(து)
எங்கே இருக்க இருள். 23

### கட்டளைக் கலித்துறை

885. இருக்கும் மருதினுக் குள்ளிமை யோர்களும் நான்மறையும்
நெருக்கும் நெருக்கத்தும் நீளகத் துச்சென்று மீளவொட்டாத்

---

*வரை' என ஒரு சொல் வருவிக்க. வீடு நெறி - இத்துன்பம் நீங்கும் வழி. ஒட்டி- துணையாய் நின்று. நன்கு - நல்லது, 'நன்கை அறிவித்து' என்க. இச்சிறை - இவ்வுடம்பாகிய சிறை. பிழைப்பித்து - தப்புவித்து, இனி இதுபோலும் சிறையில் புகாமல் காத்து அருள்செய்ய வேண்டும்' என்க.*

***884. குறிப்புரை :*** *இப்பாட்டு, கைக்கிளைத் தலைவியது முதுக்குறைவுடைமையைத் தோழி முன்னிலைப் புறமொழியால் அவளைப் பழிப்பாள் போன்று புகழ்ந்து கூறியது.*

*சமைந்து - அமைந்து. புடை - பாகம், "இவள்" என்பதை, "பொழிய" என்பதன்பின் கூட்டுக. "சங்கே, கலையே" என்னும் ஏகாரங்கள் எண்ணுப் பொருள். சங்கு - சங்க வளையல், கலை - உடை. "எங்கே இருக்க" என, 'இடம் இல்லாதவனைக் காதலிக்கின்றாள்' என இகழ்வாள்போலக் கூறினாளாயினும், 'எவ்விடமும் அவன் இடமேயாதலை அறிந்தே காதலிக் கின்றாள்' என உள்ளுறையாகப் புகழ்ந்தாள் என்க.*

***885. குறிப்புரை :*** *மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி "மருதினுக்குள் இருக்கும்" என்பதை இறுதியில் வைத்து உரைக்க. 'ஒட்டாது' என்னும் எதிர்மறை வினையெச்சம் துவ்வீறு கெட்டு நின்றது. நெருக்கம் நெருக்கத்திலும் தளராது நீளச் சென்று கருவறையை அடைந்து காண்கின்றவர்கள் அன்பர்கள். 'அவர்களை இன்புறுத்தும் வகையால் மீண்டு போக ஒட்டாது ஒண்சுடர் வீற்றிருக்கும்' என்க. திருக்கு - நன்மைக்கு மாறான குணம். செவ்வே - நேராக ஒருக்குதல் - ஒருமுகம் ஆக்கல், ஒருக்கம் - ஒருங்கிய நிலை. முளைக்கின்ற - வெளித் தோன்றுகின்ற.*

***886. குறிப்புரை :*** *"எழுநிலை மாடத்து - திருமரு தமர்ந்த தெய்வச் செழுஞ்சுடர் - அருள்சுரந்து அளிக்கும் அற்புதக் கூத்த" என்பதை முதற்கண் கொண்டு உரைக்க. ஒருவரைப் புகழுமிடத்து அவர் செய்த அருஞ்செயல்களைக் கூறிப் புகழினும் அச்செயல்களை அவர்க்கு அடையாக்கியும் வினைப் பெயராக்கி அவரை விளித்துப் புகழினும் அமைதல்*

திருக்கும் அறுத்தைவர் தீமையுந் தீர்த்துச்செவ் வேமனத்தை
ஒருக்கும் ஒருக்கத்தின் உள்ளே முளைக்கின்ற ஒண்சுடரே. 24

*அகவற்பா*

886. சுடர்விடு சூலம் ஏந்தினை என்றும்
விடையுகந் தேறிய விமல என்றும்
உண்ணா நஞ்சம் உண்டனை என்றும்
கண்ணாற் காமனைக் காய்ந்தனை என்றும்
திரிபுரம் எரித்த சேவக என்றும்

கரியுரி போர்த்த கடவுள் என்றும்
உரகம் பூண்ட உரவோய் என்றும்
சிரகரம் செந்தழல் ஏந்தினை என்றும்
வலந்தரு காலனை வதைத்தனை என்றும்
சலந்தரன் உடலம் தடிந்தனை என்றும்

---

*பற்றி இங்கு மருதப் பிரானை அவ்வெல்லாவகையாலும் தாம் புகழ்தலைப் புலப்படுத்தினார். உண்ணா நஞ்சம் - ஒருவரும் உண்ணலாகாத நஞ்சம். சேவகம் - வீரம். உரகம் - பாம்பு. உரவோய் - ஆற்றல் உடையவனே. சிரம் ஏந்திய கரம் வேறாயினும் சாதி பற்றி "சிரகரம் தழல் ஏந்தினை" என்றார். வலம் - வெற்றி. தரு - தனக்குத் தானே தந்துகொள்கின்ற. வியந்த - தன்னைத் தான் வியந்து கொண்ட அரக்கன், இராவணன். உக்கிரம் - சினம். குறளன் - பூதமாகிய முயலகன். 'நின்வயிற் சொல்லி' என ஒரு சொல் வருவிக்க. சொல் அளவு - சொல் செல்லக் கூடிய அளவு. 'சொல்லளவே' எனப் பிரிநிலை ஏகாரம் விரிக்க. 'நின் பெருமை அளப்பரும் அளவதாயினும்' என மாற்றி வைத்து உரைக்க. 'ஆயினும் இயன்ற அளவு கொண்டு நின்னை நோக்குவன்' என்க. நோக்குதல் மனத்தால். "கொண்டு" என்பது ஆன் உருபின் பொருள் படுவதோர் இடைச்சொல். 'என்னை அல்லற்படுத்தாது இடுக்கண்களையாய்' என மாற்றியுரைத்து, அதன்பின் 'ஏன்எனில்' என்பது வருவித்து, 'அவன்றனக்கும் நின் அருள் பிழைத்தின்றே' என முடிக்க. 'நின்' என்பதின்றி வாளா 'அருள்' என்பது பாடம் அன்று "உறங்க" என்பதன்பின் 'அம்மாடம்' என்பது வருவிக்க. உகைத்தல் - பெயர்த்தல். "சுடர்" என்பதும் விளி. பொல்லாமை, சிவவேடம் புனையாது புத்த வேடத்தோடே யிருந்தமை.*

*887. குறிப்புரை :* ***'இன்று இருந்து, நாளை இறத்தல்' என்பது பொதுப்பட நிலையாமையைக் குறித்தது. அஃது அனைவர்க்கும் பொதுவாயினும் அதற்கிடையே நிலையாய பயனைத் தேடிக் கொள்பவர் வல்லுநராய் உயர்த்துக் கூறப்படுவர்****. அப்பயனைத் தேடிக் கொள்ளாமல் இன்று இருந்து நாளை இறத்தலை மட்டுமே உடையோர் மக்களாக மதிக்கப்படார் ஆதலின்*

அயன்சிரம் ஒருநாள் அரிந்தனை என்றும்
வியந்தவாள் அரக்கனை மிதித்தனை என்றும்
தக்கன் வேள்வி தகர்த்தனை என்றும்
உக்கிரப் புலியுரி உடுத்தனை என்றும்
ஏனமும் அன்னமும் எட்டா தலமர

வானம் கீழ்ப்பட வளர்ந்தனை என்றும்
செழுநீர் ஞாலஞ் செகுத்துயிர் உண்ணும்
அழல்விழிக் குறளனை அமுக்கினை என்றும்
இனையன இனையன எண்ணிலி கோடி
நினைவருங் கீர்த்தி நின்வயின் புகழ்தல்

துளக்குறு சிந்தையேன் சொல்லள வாதலின்
அளப்பரும் பெருமைநின் அளவ தாயினும்
என்தன் வாயில் புன்மொழி கொண்டு
நின்னை நோக்குவன் ஆதலின் என்னை
இடுக்கண் களையா அல்லல் படுத்தா(து)

எழுநிலை மாடத்துச் செழுமுகில் உறங்க
அடித்துத் தட்டி எழுப்புவ போல
நுண்துகில் பதாகை கொண்டுகொண் டுகைப்பத்
துயிலின் நீங்கிப் பயிலும் வீதித்
திருமரு தமர்ந்த தெய்வச் செழுஞ்சுடர்

அருள்சுரந் தளிக்கும் அற்புதக் கூத்த
கல்லால் எறிந்த பொல்லாப் புத்தன்
நின்நினைந் தெறிந்த அதனால்
அன்னவன் தனக்கும் அருள்பிழைத் தின்றே. 25

---

*அவர்களை, "புன்தலைய மாக்கள்" என்றார். உடம்பின் புன்மையை அதன் முதன்மை உறுப்பாகிய தலைமேல் வைத்துக் கூறினார். அனைவர் உடம்பும் புன்மை யுடையவேயாயினும் அவ்வுடம்பு பயனுடைய உடம்பாக மாறும் பொழுது அதன் புன்மையும் மாறிவிடுகின்றது. 'பயனை எய்தாது, இருந்து இறத்தலை மட்டுமே செய்பவர்' என்பது தோன்ற, "இன்று இருந்து நாளை இறக்கும் தொழில் உடையர்" என்றார்.*

*பெயர்த்தும் செத்துப்*
*பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே*[1]

*என அப்பரும் அருளிச் செய்தார்.*

---

*1. திருமுறை - 6.95.6.*

*வெண்பா*

887. இன்றிருந்து நாளை இறக்கும் தொழிலுடைய
புன்தலைய மாக்கள் புகழ்வரோ – வென்றிமழு
வாளுடையான் தெய்வ மருதுடையான் நாயேனை
ஆளுடையான் செம்பொன் அடி. 26

*கட்டளைக் கலித்துறை*

888. அடியா யிரந்தொழில் ஆயின ஆயிரம் ஆயிரம்பேர்
முடியா யிரங்கண்கள் மூவா யிரம்முற்றும் நீறணிந்த

---

*நத்தம்போற் கேடும், உளதாகும் சாக்காடும்*
*வித்தகர்க் கல்லால் அரிது*[1]

*என்னும் திருக்குறளும் இங்கு நினைக்கத்தக்கது. வாள் - படைக்கலம். 'மாக்கள் ஆளுடையான் அடி புகழ்வரே' என இயைத்து முடிக்க. 'ஆளுடையான் அடி புகழ்வாரே உண்மை மக்களாவார்; அது செய்யாதார் மக்களே போல் தோன்றும்*[2] *மாக்களே' என்பதை இங்ஙனம் கூறினார்.*

***888. குறிப்புரை :*** *'நெஞ்சே! மருதாளியைப் பற்றிக் கொண்டு, (அவனுக்கு) - அடி ஆயிரம், தொழிலாயின ஆயிரம், பேர் ஆயிரம், முடி ஆயிரம், கண்கள் மூவாயிரம், தோள் (வலம் ஆயிரம், இடம் ஆயிரம் ஆக) இரண்டாயிரம் - என்று இராப் பகல் படியாய்' என இயைத்துரைக்க. படித்தல் - சொல்லுதல்; 'இங்ஙனம் சொல்லின், அது தோத்திரமாகிப் பயன் தரும்' என்பது கருத்து. 'ஆயிரம்' என்பது பன்மை குறித்து நின்றதாகலின் "தோள் இரண்டாயிரம்" என்றது இழுக்கிற் றில்லை அப்பர்பெருமானும் பின்பு,*

*ஆயிர ஞாயிறு போலும்*
*ஆயிரம் நீண்முடி யானும்*

*எனக் கூறுகின்றவர் அதற்கு முன்னே,*

*ஆயிரம் பொன்வரை போலும்*
*ஆயிரந் தோளுடை யானும்*[3]

*என அருளிச் செய்தமை காண்க.*

*'நீறு அணிந்த தோள், தொடி கொண்ட தோள்' எனத் தனித்தனி*

---

*1. திருக்குறள் - 235.*
*2. திருக்குறள் - 1071.*
*3. திருமுறை - 4.4.8.*

தொடியா யிரங்கொண்ட தோளிரண் டாயிரம் என்றுநெஞ்சே
படியாய் இராப்பகல் தென்மரு தாளியைப் பற்றிக்கொண்டே. 27

*அகவற்பா*

889. கொண்டலின் இருண்ட கண்டத் தெண்தோள்
செவ்வான் உருவிற் பையர வார்த்துச்
சிறுபிறை கிடந்த நெறிதரு புன்சடை
மூவா முதல்வ முக்கட் செல்வ
தேவ தேவ திருவிடை மருத

---

*இயைக்க. தொடி - வீர வளை. இதனை,*

*வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்*
*களம் படக் கடந்த கழல்தொடித் தடக்கை*[1]

*என்பதனால் அறிக.*

***889. குறிப்புரை :*** *'கண்டத்திலும், தோளிலும், உருவிலும் அரவு ஆர்த்து' ஆர்த்து - ஆர்க்க (கட்ட)ப்பட்டு. இவ் எச்சம் எண்ணுப் பொருளில் வந்தது. நெறி தரல் - நெறிப்புக் காட்டுதல். மூவா - அழியாத. பூசத் தீர்த்தம் - தைப் பூச நாளில் மூழ்கும் தீர்த்தம். இஃது இத்தலத்தின் சிறப்பு.*

*ஈசன் எம்பெரு மான்இடை மருதினில்*
*பூசம்நாம் புகுதும்புன லாடவே*

*என அப்பரும் அருளிச் செய்தார். புரக்கும் - தன்னிடத்தில் வைத்துக் காக்கின்ற 'பொன்னி' என்க. 'பொன்னியது துறை' என ஆறாவது விரிக்க. 'அயிராவணத் துறை' என்பது பெயர். அயிராவணம், கயிலையில் உள்ள யானை. அஃது இரண்டாயிரம் தந்தங்களை உடையது. இடைமருதீசர் இத்துறையில் ஆடுவது மேற் குறித்த பூச நாளில். "பெரும" என்பதை, "கௌரி நாயக" என்பதன் பின் கூட்டுக. சுரந்து - சுரத்தலால். பதம் - பதவி 'வரம் பல பெற்றோர் அடி - இனைய தன்மையராகிய எண்ணிலர்' என இயையும். கவுள் - தன்னம்; காது 'கண்' என்பது பாடம் அன்று. கடம் - மத நீர். புழைக் கை - தும்பிக்கை. சுரி சங்கு - வளைந்த சங்கு. 'வானத்தை முறையாகச் சிருட்டித்த' என்க. தாருகனைச் செற்ற வீரக் கன்னி காளி. வானோர் தலைவன் - இந்திரன். அருக்கர் - சூரியர். இடையில் ஐராவதம், சூரியர், சந்திரன், சுருதி இவர் ஒழிய, இந்திரன் முதல் இருநிதிக் கிழவன் (குபேரன்) ஈறாகச் சொல்லப்பட்ட எழுவரும் திக்குப் பாலகர்கள். ஈசானன் உருத்திரர் வகையைச்*

---

*1. புறநானூறு - 91.*

மாசறு சிறப்பின் வானவர் ஆடும்
பூசத் திருத்தம் புரக்கும் பொன்னி
அயிரா வணத்துறை ஆடும் அப்ப
கயிலாய வாண கௌரி நாயக
நின்னருள் சுரந்து பொன்னடி பணிந்து

பெரும்பதம் பிழையா வரம்பல பெற்றோர்
இமையா நெடுங்கண் உமையாள் நங்கையும்
மழைக்கவுட் கடத்துப் புழைக்கைப் பிள்ளையும்
அமரர்த் தாங்கும் குமர வேளும்
சுரிசங் கேந்திய திருநெடு மாலும்

வான்முறை படைத்த நான்முகத் தொருவனும்
தாருகற் செற்ற வீரக் கன்னியும்
நாவின் கிழத்தியும் பூவின் மடந்தையும்
பீடுயர் தோற்றத்துக் கோடிஉருத் திரரும்
ஆனாப் பெருந்திறல் வானோர் தலைவனும்

செயிர்தீர் நாற்கோட் டயிரா வதமும்
வாம்பரி அருக்கர் தாம்பன் னிருவரும்
சந்திரன் ஒருவனும் செந்தீக் கடவுளும்
நிருதியும் இயமனும் சுருதிகள் நான்கும்
வருணனும் வாயுவும் இருநிதிக் கிழவனும்

எட்டு நாகமும் அட்ட வசுக்களும்
மூன்று கோடி ஆன்ற முனிவரும்
வசிட்டனும் கபிலனும் அகத்தியன் தானும்
தும்புரு நாரதர் என்றிரு திறத்தரும்
வித்தகப் பாடல் முத்திறத் தடியரும்

திருந்திய அன்பின் பெருந்துறைப் பிள்ளையும்
அத்தகு செல்வம் அவமதித் தருளிய
சித்த மார்சிவ வாக்கிய தேவரும்
**(1)**வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்தும்

**(2)**ஓடும் பல்நரி ஊளைகேட் டரனைப்
பாடின என்று படாம்பல அளித்தும்
**(3)**குவளைப் புனலில் தவளை அரற்ற
ஈசன் தன்னை ஏத்தின என்று
காசும் பொன்னுங் கலந்து தூவியும்

(4)வழிபடும் ஒருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை எள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலும் அவன்அப் பிறப்புக் கென்ன
இடித்துக் கொண்டவன் எச்சிலை நுகர்ந்தும்
(5)மருத வட்டத் தொருதனிக் கிடந்த

தலையைக் கண்டு தலையுற வணங்கி
உம்மைப் போல எம்மித் தலையும்
கிடத்தல் வேண்டுமென் றடுத்தடுத் திரந்தும்
(6)கோயில் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்த தென்றுநாய்க் கட்டம் எடுத்தும்

(7)காம்பவிழ்த் துதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதானம் அமைத்தும்
(8)விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழல் தேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய அன்பின் வரகுண தேவரும்

இனைய தன்மையர் எண்ணிறந் தோரே
அனையவர் நிற்க யானும் ஒருவன்
பத்தி என்பதோர் பாடும் இன்றிச்
சுத்த னாய்இன்னுந் தோன்றாக் கடையேன்,
நின்னை

இறைஞ்சிலன் ஆயினும் ஏத்திலன் ஆயினும்
வருந்திலன் ஆயினும் வாழ்த்திலன் ஆயினும்
கருதி யிருப்பன் கண்டாய் பெரும
நின்னுல கனைத்தினும் நன்மை தீமை
ஆனவை நின்செய லாதலின்

நானே அமையும் நலமில் வழிக்கே. 28

---

*சேர்ந்தவன் ஆதலின், மேல், "கோடி உருத்திரர்" எனப்பட்டோருள் அடங்கினான். முனிவர், மகலோக வாசிகள், வசிட்டன் முதலிய மூவரும் மண்ணுலக முனிவர்கள், தும்புரு, நாரதன் இருவரும் சிவபெருமான் அருகிலிருந்து வீணையிசைக்கும் பேறு பெற்றவர். "தும்புரு நாரதர்" என்பது உம்மைத் தொகை. 'உமையவள் முதலாக, தும்புரு நாரதர் ஈறாகச் சொல்லப்பட்டோர் யாவரும் அடைந்த பெருமைகள் யாவும் சிவபெருமானை வழிபட்டுப் பெற்றனவே என்றபடி. இவ்வாற்றால்,*

'சிவபெருமான் அனைவராலும் வழிபடப்படுபவனே யன்றித் தான் ஒருவரையும் வழிபடுதல் இல்லாதவன்' என்பதும் இனிது விளக்கப்பட்டது. இவை அனைத்தும் ஆகமப் பிரமாணத்தால் பெறப்பட்டன. இனி நாட்டு வரலாறாகிய காட்சிப் பிரமாணத்தால் பெறப்பட் டோரையும் கூறுகின்றார்.

"வித்தகப் பாடல்" என்றது தேவாரத் திருப்பதிகங்களை. வித்தகம் - திறல். அது கல்லை மிதப்பித்தலும், எலும்பைப் பெண்ணாக்குதலும், முதலை யுண்ட பாலனை மீட்டலும் போன்றன. பிள்ளை - ஞான புத்திரன். சிவபெருமானே குருவாகி வந்து உபதேசிக்கப் பெற்றவர். இங்ஙனம் ஓரொரு சொல்லாலே சமயாசாரியர்களது வரலாறுகளைச் சுருங்கக் கூறினார். "அத்தகு" என்பது பண்டறி சுட்டு. அத்தகு செல்வம் - உலகர் பலரும் விரும்பும் பொருட் செல்வம். அதனை அவமதித்தமை கூறவே, அருட் செல்வத்தை மதித்தமை பெறப்பட்டது. சிவ வாக்கியர் பதினெண் சித்தருள் தலையாயவராகச் சொல்லப்படுவர். இவருக்குப்பின் இங்குச் சொல்லப்படுகின்ற வரகுணதேவர் பண்டை வரகுண பாண்டியன். இவனே மேல் "பெருந்துறைப் பிள்ளை" - எனக் குறிக்கப்பட்ட மாணிக்கவாசகரைத் தனக்கு அமைச்சராகக் கொண்டிருந்தவன். இவனும், மாணிக்கவாசகரும் காலத்தால் மூவர் முதலிகளுக்கு முற்பட்டவராயினும், திருமுறைகள் வகுக்கப்பட்ட காலத்தில் திருப்பதிகங்களையே முதற்கண் கண்டெடுத்து வகுத்துப் பின்பு ஒரு சமையத்தில் பிற திருமுறைகள் வகுக்கப்பட்டமையால் மாணிக்க வாசகர் மூவருக்குப் பின் நான்காமவராக எண்ணப்பட்டு வரும் முறை இவர்களை மூவருக்குப் பின்னர்க் கூறினார். அங்ஙனம் கூறுகின்றவர் வரகுணன் அரசன் ஆகலின் சித்தராகிய சிவவாக்கியரை அவனுக்கு முன் வைத்துக் கூறினார். 'இவ்வரகுணன் பத்திப் பெருக்கால் பித்துக் கொண்டவர் செயல்போலச் சிலவற்றைச் செய்தான்' என்பது செவி வழிச் செய்தி. இவனது பத்தி மிகுதி விளங்குதற் பொருட்டு அச் செய்திகளை இவ்வாசிரியர் தம் பாடலில் பொறித்தார். அவை வருமாறு :

1) உண்மையாகவே களவு செய்த ஒருவனைக் காவலர் கண்டுபிடித்துக் கையில் விலங்கு பூட்டிக் கொணர்ந்த பொழுது அரசனது பத்தியை அறிந்த அவன் வழியில் இருந்த ஒரு சுடுகாட்டில் கீழே விழுந்து புரண்டு உடம்பெங்கும் சாம்பலைப் பூசிக் கொண்டவனாய்ச் சிரித்து 'அரஹர' என்று சொல்லி செல்ல அதனைக் கண்டு இவ்வரசன், "இவ் அடியவரைக் 'கள்வன்' என்றல் தகாது" என்று சொல்லி விடு வித்து விட்டான்.

2) எப்பொழுதும், 'சம்போ, சங்கர, மகாதேவ' என்று சொல்கின்ற இவன் காதில் ஒரு நாள் நள்ளிரவில் காட்டில் குறுநரிகள் ஊளையிட்ட சத்தம்

*கேட்க, 'சம்பு' என்றும், 'சம்புகம்' என்றும் பெயர் பெற்றுள்ள அவைகள் சம்புவைப் பாடித் தோத்திரிக்கின்றன - எனக் கருதி, அவைகள் பனியின் குளிரால் வருந்தாதபடி ஏவலரை ஏவிப் போர்வைகள் போர்க்கக் கட்டளையிட்டான்.*

*3) ஒரு சமையம் பெருமழை பெய்து ஓய்ந்தபின் தவளைகள் பல ஒருங்கே கத்த, அந்த ஓசையை அவை 'அரஹர! அரஹர!' எனச் சிவபெருமானைத் துதிப்பதாகக் கருதி அவைகளுக்குப் பரிசாக இரத்தினங்களையும், பொன்னையும் நீர் நிலைகளில் சென்று இறைக்கும்படி ஏவலர்களைக் கொண்டு செய்வித்தான்.*

*4) ஒரு சமையம் சிவாலயத்தில் உள்ள சிவபெருமானது திருமஞ்சனத்திற்கு வேண்டிய எண்ணெயின் பொருட்டு அர்ச்சகன் ஒருவனிடம் செக்கில் இடும்படி அரசனது பண்ட சாலையிலிருந்து கொடுத்தனுப்பிய எள்ளில் அவ்வர்ச்சகன் சிறிது எடுத்துத் தின்னுவதைக் கண்டு சிலர் அவனைப் பிடித்துக் கொண்டுபோய் இவ்வரசனுக்குக் காட்ட, இவன் அவனை விசாரித்த பொழுது அவன், 'திருமஞ்சன எண்ணெய்க்கு வைத்த எள்ளைத் தின்றவர் அடுத்த பிறப்பில் திருமஞ்சன எண்ணெய் ஆட்டும் செக்கினை இழுக்கும் எருதுகளாகப் பிறப்பர்' என்பது சாத்திரம். அப்பிறப்பை நான் அடைய விரும்பி இந்த எள்ளைத் தின்றேன் - என்று சொல்ல, இவன், 'நானும் அப்பிறப்பை அடைய வேண்டும்' என்று சொல்லி அவன் வாயிலிருந்து சிறிது எள்ளை எடுத்துத் தின்றான்.*

*5) திருவிடை மருதூர் வீதியில் கிடந்த ஒரு தலை யோட்டினை இவன் கண்டு, 'இஃது இங்ஙனம் இங்குக் கிடத்தலால் இத்தலையைப் பெற்றிருந்தவர் சிவலோகத்தை அடைந்திருத்தல் திண்ணம் என்று கருதி, அத்தலை யோட்டினிடம் சென்று, 'எனது தலையோடும் இவ்வாறு கிடக்க அருள்செய்வீர்' எனக் குறையிரந்தான்.*

*6) சிவாலயத்தின் முன் ஓரிடத்தில் நாயின் மலம் இருக்கக் கண்டு அதனைத் தானே சென்று எடுத்து அப்புறப் படுத்தி ஆலயத்தைத் தூய்மை செய்தான்.*

*7) வேப்ப மரம் ஒன்றின்கீழ் அதன் கனிகள் உதிர்ந்து கிடக்க அவை சிவலிங்கம் போலக் காணப்படுதலைக் கண்டு, 'இனி வேப்பமரங்களில் எதுவும் வெயிலில் உலர்தலும், மழையில் நனைதலும் கூடா' என்று அவைகட்கெல்லாம் நல்ல பந்தல்களை இடச் செய்தான்.*

*8) திருவிடை மருதூரில் இவன் மணந்துகொண்ட பெண்ணை அவள்*

*வெண்பா*

**890.** வழிபிழைத்து நாமெல்லாம் வந்தவா செய்து
பழிபிழைத்த பாவங்கள் எல்லாம் – பொழில்சூழ்
மருதிடத்தான் என்றொருகால் வாயாரச் சொல்லிக்
கருதிடத்தாம் நில்லா கரந்து. **29**

---

*அழகு மிகுந்திருத்தலை நோக்கி, 'இவள் மருதவாணருக்கு ஆகட்டும்' என்று சொல்லி இரவிலே திருவிடை மருதூர்க் கோயிலிலே கொண்டு போய் விட்டான். பெருமான் அவளைச் சிவலிங்கத்தில் மறையும்படி செய்து, அவன் செயலை ஊரார் அறிதற் பொருட்டு அவளது வலக்கை மட்டும், இலிங்கத்தில் வெளியில் காண வைத்தான். அதனால் இச்செய்தி ஊரெங்கும் பரவ இவன் கோயிலில் சென்று, 'இக் கை நான் பற்றிய கை' என்று ஏற்கவில்லையோ என்றான். அதனால் பெருமான் அக் கையையும் மறைத்துவிட்டான்.*

*இச்செவிவழிச் செய்திகள் பழைய திருவிளையாடற் புராணத்து, 'வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய திருவிளையாடல்' கூறுமிடத்தில் சிறிது வேறுபாடுகளுடன் கூறப்பட்டன. இப்பாண்டியனது வரலாறு இத்திருவிடை மருதூர்த் தலத் தோடு தொடர்புடையதாய் இருத்தலால் ஆசிரியர் இவற்றை யெல்லாம் இங்கு எடுத்தோதினார். 'இவற்றால் எல்லாம் அறியப்படுவது வரகுண பாண்டியன் பெரிய சிவபத்தன்' என்பது என்பார்.*

*'பெரிய அன்பின் வரகுண தேவர்' என்றார். இம்மன்னனை இவனது பத்தியைக் கருத்துட் கொண்டு மாணிக்க வாசகர் தமது திருக்கோவையாரில் குறித்திருக்கின்றார். திருமுறைகளை வகுத்தமைத்த நம்பியாண்டார் நம்பிகளும் தமது கோயில் திருப்பண்ணியர் திருவிருத்தத்துள் குறித்தார்.*

*மிகப் பிற்காலத்தில் கல்வெட்டுக்களில் 'வரகுணன்' என்னும் பெயருடைய இருவர் பாண்டியர் குறிக்கப் பட்டுள்ளனர். அவருள் எவனையும் இப் பெரிய அன்பின் வரகுண தேவராகத் துணிதற்குச் சிறிதும் ஆதாரம் இல்லை. ஆயினும் இக்கால ஆராய்ச்சியாருள் ஒரு சிலர், பெயர் ஒன்றே பற்றி, 'அவ் இருவருள் ஒருவனே இப் பெரிய அன்பின் வரகுண தேவர்' எனக் கூறுகின்றார்கள். அங்ஙனம் கூறுவோருள் ஒருசாரார், 'முதல் வரகுணனே இங்குக் குறிக்கப்பட்டான்' என்றும், மற்றொருசாரார், 'இரண்டாம் வரகுணனே இங்குக் குறிக்கப்பட்டான்' என்றும் கூறித் தம்முள் மாறுபடுவா. அம்மாறுபாடுதானே, 'அவ்இருவருள் எந்த ஒருவனையும், இங்குக் குறிக்கப்பட்ட வரகுண தேவர்' எனத் துணிவதற்கு ஆதாரம் இன்மையைக் காட்டுவதாகும்.*

### *கட்டளைக் கலித்துறை*

**891.** கரத்தினில் மாலவன் கண்கொண்டு நின்கழல் போற்றநல்ல
வரத்தினை ஈயும் மருதவப் பாமதி ஒன்றுமில்லேன்
சிரத்தினு மாயென்றன் சிந்தையு ளாகிவெண் காடனென்னும்
தரத்தினு மாயது நின்னடி யாந்தெய்வத் தாமரையே. **30**

*திருச்சிற்றம்பலம்*

---

*'அனையவர் ஒருபால் நிற்க' என்க. பாடு - பெருமை. "ஓர் பாடும் இன்றி" என்பதை, 'பாடு ஒன்றும் இன்றி' என மாற்றிக் கொள்க. ஒன்று - சிறிது. இன்றி - இன்மையல்ல. சுத்தன் - பரிசுத்தன். ஆணவமலம் நீங்கப் பெற்றவன். இன்னும் - அநாதி தொட்டு இன்றுகாறும். 'இன்னும் சுத்தனாய்த் தோன்றாத கடையேனாய் உள்ளேன்' என்க. தோன்றாத - பிறவாத. "சுத்தனாய்த் தோன்றாத" எனவே, அசுத்தனாய்த் தோன்றினமை பெறப்பட்டது. படவே, 'அவர்போலப் பெரும் பதம் பிழைய வரம் பெறல் கூடாதவனா கின்றேன்' என்பதாம். இவ்வாற்றால் யான் நின்னை இறைஞ் சுதல் முதலியவற்றைச் செய்யேனாயினும் அவற்றைச் செய்ய விரும்பும் அளவில் உள்ளேன் என்க. கண்டாய், முன்னிலையசை. உலகனைத்தும் அவனுடையன என்பது கூறுவார் "நின் உலகனைத்தும்" என்றாராயினும். 'உலகனைத்தும்' என வாளா கூறிப் போதலே கருத்து. "நன்மை தீமை" என்னும் பண்புகள் அவற்றையுடைய பொருள்மேல் நின்றன. "ஆனவை" என்பது எழுவாய் உருபு. "ஆனவை" என்றாராயினும். 'ஆனவை உறவாதல்' என்றலே கருத்து. 'நற்பொருளோடு தீப் பொருளையும் உண்டாக்குதல் உனது கருத்தாகின்ற நிலைமையில் தீமைக்கு இடம் நான் ஒருவனே போதும்;' (பிறரோ, பிறிதோ வேண்டா) என முடிக்க.*

*என்னை வகுத்திலையேல் இடும்பைக் கிடம்*
*யாது சொல்லே*

*என அப்பரும் அருளிச் செய்தார். எனது 'இயல்பு இதுவாயினும் கருதியிருத்தல் ஒன்றே பற்றி எனக்கும் அருள்புரிதல் வேண்டும்' என்பது குறிப்பால் உணர்த்தப்பட்டது.*

***890. குறிப்புரை :*** *"நாமெல்லாம்" என்பதை முதலிற் கொள்க. வழி - நல்வழி. பிழைத்து - தவறி. வந்தவா - தாமாக எதிர்வந்த செயல்களை. செய்து - நன்று தீது ஆராயாமலே செய்து. 'பழியாகப் பிழைத்த' என்க. பிழைத்த -*

*தவறாக ஒழுகிய. மருது - திருவிடை மருதூர். "கருதிடத்தான்" என்பதில் தான் அசை. கரந்து - மறைந்து. 'மறைந்து அருவமாயும் நில்லாது போம்' என்க.*

***891. குறிப்புரை :** 'மாலவன் கண்கரத்தினில் கொண்டு' என்க. 'கண்ணைப் பறித்தெடுத்து' என்ற படி, 'மதி ஒன்றும் இல்லேனது' என ஆறாவது விரிக்க. ஒன்றும் - சிறிதும். தாம் - மேன்மை; என்றது புகழை. 'மருத அப்பா, நின் அடியாம் தாமரை சிரத்தினும் ஆய், சிந்தையுளாகித் தரத்தினும் ஆயது' என இயைத்து முடிக்க. 'இது நின் கருணை இருந்தவாறு' என்பது குறிப்பெச்சம்.*

***திருவிடைமருதூர் மும்மணிக்கோவை முற்றிற்று.***

## திருவேகம்பமுடையார் திருவந்தாதி

*அந்தாதித் தொடையமைய நூறு பாடல்களைத் தன்னகத்தே கொண்டு திகழும் இந்நூல், காஞ்சி நகரிலுள்ள திருவேகம்பம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளிய சிவபெருமானைப் போற்றிப்பரவுவதாகலின் திருவேகம்ப முடையார் திருவந்தாதியென்னும் பெயர்த்தாயிற்று. இப்பனுவல் இறைவனது திருவருட்டுணைகொண்டு பாடப் பெற்றதென்பதும், இவ்வந்தாதி நூறு பாடல்களால் இயன்றமைபற்றி இதற்குப் பதிற்றுப்பத்து என அடிகள் பெயரிட்டனரென்பதும்,*

*காட்டிவைத்தார் தம்மை யாங்கடிப் பூப்பெய்யக் காதல்வெள்ளம்*
*ஈட்டிவைத்தார் தொழும் ஏகம்பர் ஏதும் இலாத எம்மைப்*
*பூட்டி வைத்தார் தமக் கன்பது பெற்றுப் பதிற்றுப் பத்துப்*
*பாட்டி வைத்தார் பரவித் தொழுதாம் அவர் பாதங்களே.*

*என வரும் இந்நூல் 99-ஆம் பாடலால் இனிது விளங்கும்.*

*“திருக்கச்சி யேகம்பத்தில் எழுந்தருளிய பெருமானே, மெய்ஞ்ஞானத்தால் நின்னை வழிபட்டொழுகும் மெய்த்தொண்டர்கள் செல்லும் ஞானநெறி யிதுவென உணர்ந்திலேன். சரியை கிரியையாகிய கைத்தொண்டு செய்து நின்கழல் போற்றும் அடியார்கள் தொண்டினை உவந்து மேற்கொண்டேனல்லேன். உடல் வளர்க்கும் உணவினையே விரும்பிப் பொய்யேயுன்னைப் போற்றிப் புறமே திரியும் இத்தொண்டனேனாகிய எளியேனது பணியையும் ஏற்றுக்கொள்வாயோ” என அடிகள் திருவேகம்பப் பெருமான் முன்னின்று குறையிரந்து வேண்டுவதாக அமைந்தது,*

*மெய்த்தொண்டர் செல்லும் நெறியறியேன் மிக நற்பணிசெய்*
*கைத்தொண்டர் தம்மிலும் நற்றொண் டுவந்திலன் உண்பதற்கே*
*பொய்த்தொண்டு பேசிப் புறம்புறமே உன்னைப் போற்றுகின்ற*
*இத்தொண்டனேன்பணி கொள்ளுதியோகச்சி யேகம்பனே*

*எனவரும் இத்திருவந்தாதியின் முதற்பாடலாகும்.*

*சிவபெருமானுக்குத் தொண்டுபட்டதன் பயன் அவனடியார்களுக்குப் பணிசெய் தொழுகுதலே யென்பதும், அடியார்களது திருவடித்தூளியைத் தலைமேற்கொள்வார் உள்ளம் தெளிவு பெறுமாதலால் அவர்கள் சிவனருள் பெறுதல் ஒருதலையென்பதும், சிவபெருமான் திருவடியை வணங்குதற்கே தம் தலையினைப் பயன்படுத்தும் பெரு வேட்கையுடைய மெய்யடியார் களோடு இணங்கிப் பழகுவதன்றி ஏனையரோடு தாம் நெருங்கிப் பழகுவது*

இல்லையென்பதும், பிறதெய்வங்களை இறைவனாக எண்ணிப் புலமை மிக்கோர் பாடும் செய்யுட்பொருள் முடிவில் ஏகம்பவாணனாகிய முழுமுதற் பொருளைச் சென்று சார்வதால் நூலென மதிக்கப்படுவது அன்றிச் சார்தலில்லையாயின் அவ்வாறு மதிக்கப்படாதென்பதும் ஆகிய வுண்மைகளை இவ்வந்தாதியில் 3, 4, 7-ஆம் பாடல்களில் திருவெண் காட்டடிகள் முறையே குறிப்பிட்டுள்ளார். இச்செய்யுட்களை நோக்குமிடத்து அடியார்க்குத் தொண்டுபட்டு வாழ்தலில் அடிகள் மேற்கொண்டிருந்த மனவுறுதி நன்கு புலனாதல் காணலாம்.

பகைவேந்தரைப் பொருதுவெல்லும் ஆற்றல் மிக்க நால்வகைச் சேனைகளையுடைய பெருவேந்தராயினும் எவ்வுயிர்க்கும் இறைவராகிய ஏகம்பவாணரது திருவருள் வண்ணமாகத் திகழும் திருநீற்றினைத் தம் நெற்றியில் அணிந்து அப்பெருமானை வழிபாடு செய்யாராயின் அவ்வேந்தரது அரசியலாட்சியும் அவர்தம் வீரம் நியாயம் கொடை முதலியவற்றுக்கு அடையாளமாக முழங்கும் முரசும் இவ்வுலகில் நிலைபெறா என்பதனை,

அன்றும் பகையடர்க்கும் பரிமாவும் மதவருவிக்
குன்றும் பதாதியும் தேரும்குலவிக் குடைநிழற் கீழ்
நன்றும் பொலியினும் கம்பர்நன்னீறு நுதற்கிலரேல்
என்றும் அரசும் முரசும் பொலியா இரு நிலத்தே

எனவரும் பாடலால் அடிகள் தெளிவாகக் கூறியுள்ளார். இத்திருப்பாடல், திருவெண்காட்டடிகள் காலத்தில் தமிழகத்தையாண்ட மன்னர்களிற் சிவநெறியைக் கடைப்பிடித் தொழுகாதவர்கள் அடைந்த தோல்வியையும் சிவநெறியைக் கடைப்பிடித்து ஒழுகியவர்கள் பெற்ற வெற்றியையும் குறிப்பான் அறிவுறுத்துவதாய், உலகியலில் மக்கள் பெறும் வெற்றிக்கெல்லாம் உறுதுணையாய் விளங்குவது இறைவனது திருவருளே யென்ற உண்மையைப் புலப்படுத்தி நிற்றல் அறிந்து மகிழத்தக்கதாம்.

நிலத்தேவர் எனப் போற்றப்பெறும் தலைமையைப் பிறப்பினாலடைந்து வேதங்களை மறவாதோதி வேள்விகளை முறைப்படி செய்து வந்தாலும், திருவேகம்பப் பெருமானைப் பண்டைக் குலத்தை மறந்த தொண்டர்களோடும் கூடித் தொழும் திருவருள் நலம் வாய்க்கப் பெறாதவர்கள், காடுகளில் வேட்டையாடித் திரியும் வேடுவர்களோடு வைத்து எண்ணப்படும் தாழ்வுடையராவரென்பது அடிகள் கருத்தாகும்.

நிலத்திமை யோரில் தலையாய்ப்பிறந்து மறையொடங்கம்
வலத்திமைப் போதும் பிரியா எரிவளர்த்தாலும் வெற்பன்

குலத்துமை யோர்பங்கர் கச்சியுளேகம்பங் கூடித் தொழும்
நலத்தமையாதவர் வேட்டுவர்தம்மின் நடுப்படையே.

எனவரும் பாடலில் இக்கருத்துப் புலனாதல் காண்க.

சீலமின்றி அறிவின்றிக் கொலைகளவு முதலிய தீமை புரிந்தொழுகும் கீழ்ச்சாதி மக்களாயினும் ஏகம்ப வாணனாகிய இறைவனுடைய திருவடிக்கு அன்புடைய தொண்டராயின் அவர்களே யாவர்க்கும் மேலாகிய உத்தமராகப் போற்றத் தக்காரென்பதனை,

படையால் உயிர்கொன்று தின்று பசுக்களைப் போலச்செல்லும்
நடையால் அறிவின்றி நட்பிடைப் பொய்த்துக் குலங்களினும்
கடையாய்ப் பிறக்கினுங் கச்சியுளேகம்பத் தெங்களையா
ளுடையான் கழற்கன்பரேல் அவர் யாவர்க்கும் உத்தமரே.

என்ற பாடலில் அடிகள் குறிப்பிட்டுள்ளார். இறைவனடிக்குத் தொண்டு பூண்டொழுகுபவர் முன்னர் எத்தகைய குற்றமுடையராயினும் அவர்கள் இறைவனுக்கு ஆட்பட்ட பின்னர் அக்குற்றங்களெல்லாம் எரி முன்னர்ப் பஞ்சுத்துய் போல வெந்து நீறாக, எல்லா நற்பண்புகளும் பெற்று மேம்படுவாராதலின் 'ஆளுடையான் அடிக்கு அன்பரேல் அவர் யாவர்க்கும் உத்தமரே' என்றார். இத்திருப்பாடல்,

'அங்கமெலாங் குறைந் தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங்
கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் நாம் வணங்குங் கடவுளாரே'

எனத் திருநாவுக்கரசடிகளார் அருளிய பொருளுரையைத் தன்னகத்துக் கொண்டு திகழ்கின்றது.

திருவேகம்பப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு குடும்ப வாழ்க்கையில் தலைவன் தலைவி யென்பவர்களது அன்பின் திறத்தைப் புலப்படுத்துவனவாக அமைந்த அகத்துறைப் பாடல்கள் பல இத்திருவந்தாதியில் இடம் பெற்றுள்ளன. இப் பாடல்கள் திருவாதவூரடிகள் திருவாய் மலர்ந்தருளிய திருச்சிற்றம்பலக் கோவையை நினைவுபடுத்துவன வாகவுள்ளன.

உடன்போக்கில் தலைவனொடு சென்ற தலைவியைத் தேடிச் சென்ற செவிலித்தாய், தன் மகளும் அவள் காதலனும் போலவே வழியில் எதிர்ப்பட்ட காதலர்களாகிய அயலார் இருவரைக் கண்டு 'நும்மையொத்த அன்பினராகிய இருவர் இவ்வழியே போகக் கண்டீரோ' என வினவுகின்றாள்.

அதுகேட்ட தலைமகன், 'இறைவன் ஊர்ந்தருளும் ஆனேற்றினையொத்த ஆற்றல் மிக்க தலைமகனைக் கண்டேன். நும்மால் வினவுப்பட்ட இருவருள் மற்றொருவரை என்னுடன் வரும் மானோக்கினளாகிய இம்மங்கையைக் கேட்டுத் தெரிந்து கொள்மின்' என மறுமொழி கூறுகின்றான். இவ்வழகிய காட்சியை,

துணையொத்த கோவையும் போலெழிற் பேதையுந் தோன்றலுமுன்
இணையொத்த கொங்கையொ டேயொத்த காதலொ டேகினரே
அணையத்தர் ஏறொத்த காளையைக் கண்டனம் மற்றவரேல்
பிணையொத்த நோக்குடைப் பெண்ணிவள் தன்னொடும்
பேசுமினே.

எனவரும் பாடல் நன்கு புனைந்துரைத்தல் காணலாம். இப்பாடல்,

மீண்டா ரெனவுவந் தேன்கண்டு நும்மையிம் மேதகவே
பூண்டா ரிருவர்முன போயினரே, புலியூரெனைநின்
றாண்டா னருவரை யாளியன்னானைக் கண்டேனயலே
தூண்டா விளக்கனையாய் என்னையோ அன்னை சொல்லியதே.

எனவரும் திருச்சிற்றம்பலக் கோவையை யடியொற்றி அன்பினைந்திணை யொழுகலாற்றுக்குரிய தலைவனது உள்ளத்து நிறையை நன்கு புலப்படுத்துவதாகும்.

இவ்வந்தாதியில் 38 முதல் 44 முடியவுள்ள பாடல்களில் மாதொரு பாகராகிய அர்த்த நாரீச்சுரர் திருக்கோலத்தியல்பு விரித்துரைக்கப் பெற்றுளது. இறைவன் கோயில் கொண்டருளிய திருத்தலங்களாக இவ் அந்தாதியில் அறுபத்தொன்பது தலங்கள் குறிக்கப் பெற்றுள்ளன. அவற்றுள், இமயம், கொல்லி, பொதியம், விந்தம், மந்தரம், மகேந்திரம், கருங்குன்றம், வெண்குன்றம், செங்குன்றம், நெடுங்குன்றம், நற்குன்றம், திருவிற்பெரும்பேறு, புலிவலம், வில்வலம், திருக்காரிகரை, திருப்போந்தை, முக்கோணம் என்பவை வைப்புத் தலங்களெனக் கொள்ளத்தக்கன.

உடன்போக்கிற் சென்ற தலைவன் தன்னுடன் வரும் தலைவிக்குக் காஞ்சி நகரத்தின் எழில் நலங்களைக் காட்டிக் கூறுவனவாக அமைந்தன 75 முதல் 85 வரையுள்ள பாடல்களாம். காஞ்சி நகரத்தின் எழில்வளம் அந்நகரிலுள்ள திருக்காமக்கோட்டம், கச்சி அறச்சாலை, ஊரகம், பாடகம் முதலிய திருக்கோயில்கள் ஆகியவற்றைத் திருவெண்காட்டடிகள் தாம் நேரிற் கண்ட வண்ணம் இத்திருப்பாடல்களிற் சொல்லோவியஞ் செய்துகாட்டிய திறம் உணர்ந்து மகிழத் தக்கதாகும்.

*உடன்போக்கில் தலைவியை உடனழைத்துச் சென்ற தலைவன் காஞ்சி நகரத்தை யடைந்து அங்கு உமையம்மையார் வெண்மணலாற் சிவலிங்கம் அமைத்து இறைவனை வழிபட்ட காலத்துப் பெருவெள்ளம் பெருக்கெடுத்து வரக் கண்டு அஞ்சித் தான் வழிபடும் சிவலிங்கத் திருமேனிக்கு ஊறுநேரா வண்ணம் தழுவிக்கொள்ள, அந்நிலையில் உமாதேவியாரது தனத்தழும்பும் வளைத்தழும்பும் தன் திருமேனியில் விளங்கச் சிவபெருமான் குழைந்து காட்டிய பேரன்பின் திறத்தைத் தன்னுடன் வரும் தலைவிக்கு எடுத்துரைத்து 'இத்தகைய திருவேகம்பத் திருக்கோயிலை இறைஞ்சப் பெற்றமையால் இவ்வுலகில் மக்கட் பிறப்பினாலடைதற்குரிய பெரும்பயனை நாம் பெற்றுள்ளோம்' என உள் மகிழ்ந்துரைப்பதாக அமைந்தது.*

*தளராமிகு வெள்ளங் கண்டுமை யோடித் தமைத்தழுவக்*
*கிளையார் வளைக்கை வடுப்படும் ஈங்கோர் கிறிபடுத்தார்*
*வளமாப் பொழில் திரு வேகம்பம் மற்றிது வந்திறைஞ்சி*
*உளரா வதுபடைத்தோம் மடவாய் இவ்வுலகத்துளே.*

*என்ற பாடலாகும். அன்பின் திறத்தாற் பிரிவின்றியுடன் சென்ற காதலர்கள், பிரியா நங்கையாகிய பெருமாட்டியார் வழிபட அன்பேயுருவாகிய பெருமான் அவர்க்கு அருள் செய்த திருக்கோயிலாகிய திருவேகம்பத்தைக் கண்டு வழிபட்டு மகிழ்ந்த திறம் இத்திருப்பாடலில் இனிது புலனாதல் காண்க.*

## பட்டினத்து அடிகள்

*அருளிச்செய்த*

## 29. திருஏகம்பமுடையார் திருவந்தாதி

***கட்டளைக் கலித்துறை***

*திருச்சிற்றம்பலம்*

**892.** மெய்த்தொண்டர் செல்லும் நெறியறி யேன்மிக நற்பணிசெய்
கைத்தொண்டர் தம்மிலும் நற்றொண் டுவந்திலன் உண்பதற்கே
பொய்த்தொண்டு பேசிப் புறம்புற மேயுன்னைப் போற்றுகின்ற
இத்தொண்ட னேன்பணி கொள்ளுதி யோ ?கச்சி ஏகம்பனே. 1

---

***892. குறிப்புரை :*** *மெய்த் தொண்டர், பயன் கருதாது பணி செய்பவர். அவர் செல்லும் நெறி, "தன் கடன் அடியேனையும் தாங்குதல்; என் கடன் பணி செய்து கிடப்பதே"* எனக் கொண்டு ஒழுகுதல். 'மனத் தொண்டு, வாய்த் தொண்டு, கைத்தொண்டு ஆதலின் அது செய்பவரை, "மிக நற்பணி செய் கைத்தொண்டர்" என்றும் 'பயன் கருதியாவது அவருடன் கூடி அப்பணியைச் செய்திலேன்' என்பார், "கைத்தொண்டர் தம்மிலும் நற்றொண்டு உவந்திலேன்" என்றும் கூறினார். உவத்தல் - மகிழ்தல், அது மகிழ்ச்சியோடு செய்தலாகிய தன் காரியம் தோன்ற நின்றது. உண்பதற்கு - பயன்கொள்ளுதற் பொருட்டு. பயன் கொள்ளுதற் பொருட்டுத் திருத்தொண்டினை உயர்த்துப் பேசுதலால், அதனைப் பொய்த் தொண்டு பேசுதலாகக் கூறினார். மனத்தின்கண் உள்ள பொய்ம்மை அதன் வழிச் செய்யப்படும் தொண்டினையும் சார்வதாகும். "புறம் புறம்" என்னும் அடுக்குப் பன்மைப் பொருட்டாய், "எப்பொழுதும்" எனப் பொருள் தந்தது. புறமே போற்றுதலாவது மெய்த் தொண்டிற்கு ஏதுவான மெய்யன்பு உள்ளத்தில் இன்றிப் பொதுவான அன்பினால் போற்றுதல். 'இவ்வாறு உன்னைப் போற்றினும் யானும் உன் அடியவருள் ஒருவனே' என்பார் தம்மை. "இத்தொண்டனேன்" என்றும், 'மெய்த்தொண்டர் செய்யும் பணியையன்றி, என்போன்ற தொண்டர் செய்யும் பணியை நீ விரும்புவாயோ' என்பார், "இத்தொண்டனேன் பணி கொள்ளுதியே" என்றும் கூறினார். "கச்சி ஏகம்பனே" என்பதை முதலிற் கொள்க.*

***893. குறிப்புரை :*** *ஆகம் - திருமேனி. ஆதரித்து - விரும்பி. ஏனைய வெளி. ஐவாய் நாகம் - ஐந்து தலைகளைக் கொண்ட பாம்பு. போகம் - நுகர்பொருள்.*

---

*1. திருமுறை - 5.19.9.*

893. ஏகம்ப னேயென்னை ஆள்பவ னேயிமை யோர்க்கிரங்கிப்
போகம்பன் னாளும் கொடுக்கின்ற நாயக பொங்கும்ஐவாய்
நாகம்பொன் னாரம் எனப்பொலி வுற்றுநல் நீறணியும்
ஆகம்பொன் மாமலை ஒப்பவ னேயென்பன் ஆதரித்தே. 2

894. தரித்தேன் மனத்துன் திகழ்திரு நாமம் தடம்பொழில்வாய்
வரித்தேன் முரல்கச்சி ஏகம்ப னேயென்றன் வல்வினையை
அரித்தேன் உனைப்பணி யாதவர் ஏழைமை கண்டவரைச்
சிரித்தேன் உனக்கடி யாரடி பூணத் தெளிந்தனனே. 3

895. தெளிதரு கின்றது சென்றென் மனம்நின் திருவடிவில்
அளிதரு நின்னருட் கையம் இனியில்லை அந்திச்செக்கர்
ஒளிதரு மேனியெம் ஏகம்ப னேயென் றுகந்தவர்தாள்
தளிதரு தூளியென் றன்தலை மேல்வைத்த தன்மைபெற்றே. 4

896. பெற்றுகந் தேனென்றும் அர்ச்சனை செய்யப் பெருகுநின்சீர்
கற்றுகந் தேனென் கருத்தினி தாக்கச்சி ஏகம்பத்தின்
பற்றுகந் தேறும் உகந்தவ னேபட நாகக்கச்சின்
சுற்றுகந் தேர்விடை மேல்வரு வாய்நின் துணையடியே. 5

---

*894. குறிப்புரை : தரித்தேன் - தாங்கினேன். 'உன் திருநாமம் மனத்துத் தரித்தேன்' என்க. வரித்தேன் - இசைபாடும் 'தேன்' என்னும் வண்டுகள். 'தரித்தேன்; அதனால் என் வல்வினையை அரித்தேன்' என உரைக்க. ஏழைமை - அறியாமை. சிரித்தேன் - இகழ்ந்தேன். தரித்தேன் - பொதிய வைத்தேன். அரித்தேன் - போக்கினேன்.*

*895. குறிப்புரை : 'அந்திச் செக்கர்... தம்மை பெற்று என் மனம் நின் திருவடிவில் சென்று தெளிதருகின்றது; இனி நின் அளிதரு அருட்கு ஐயம் இல்லை' - என இயைத்து முடிக்க. "தெளி தருகின்றது" - என்பதன்பின், 'அதனால்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. அளிதரல் - கனிதல். "தெளிதரு, அளிதரு" என்பவற்றில் 'தரு' துணைவினை. அருட்கு - அருள் கிடைத்தற்கு. 'திருவடிவம்' என்பது பாடமாயின், 'திருவடிவத்தின் கண்' என ஏழாவது விரித்துக் கொள்க. தளி - கோயில். மாலையில் மிளிரும் செவ்வானம் போலப் பெருமானின் திருமேனி விளங்குகிறது.*

*896. குறிப்புரை : "கச்சி ஏகம்பத்தின்" என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. கச்சி, நகரம், ஏகம்பம், அந்நகரத்தின்கண் திருத்தலம் உள்ள ஓர் இடம். பற்று - நீங்காதிருத்தல். உகந்து - விரும்பி ஏறும் - இடபமும். உம்மை இறந்தது தழுவியது. இடபத்தை உகந்தமையாவது, அது செய்த பிழையைப் பொறுத்து அதற்கு அருள்செய்தது. அது செய்த பிழையாவது, திருமாலின்*

**897.** அடிநின்ற சூழல் அகோசரம் மாலுக்(கு) அயற்(கு)அலரின்
முடிநின்ற சூழ்முடி காண்பரி தாயிற்றுக் கார்முகிலின்
இடிநின்ற சூழ்குரல் ஏறுடை ஏகம்ப யாமெங்ஙனே
வடிநின்ற சூலப் படையுடை யாயை வணங்குவதே. **6**

**898.** வணக்கம் தலைநின் திருவடிக் கேசெய்யும் மையல்கொண்டோர்
இணக்கன்றி மற்றோர் இணக்கறி வோமல்லம் வல்லரவின்
குணக்குன்ற வில்லி குளிர்கச்சி ஏகம்பம் பாடினல்லால்
கணக்கன்று மற்றொரு தேவரைப் பாடும் கவிநலமே. **7**

---

*ஊர்தியாகிய கருடனது செருக்கை இறைவன் ஆணையின்றித் தானே ஒறுத்து அடக்க முயன்றது. இவ்வரலாற்றைக் காஞ்சிப் புராணத் தழுவக் குழைந்த படலத்திற் காண்க. இங்ஙனம் இறைவன் அருள் செய்யும்படி இடபம் வழிபட்ட ஓர் இலிங்கம் திருவேகம்பத் திருக்கோயில் தீர்த்தக் கரையில் இருத்தல் காணலாம். சுற்று - சுற்றிக் கட்டுதல். ஏர் - அழகு. 'நின் துணையடியே என்றும் அற்சனை செய்யப் பெற்று உகந்தேன்; என்கருத்து இனிதாக நின்பெருகு சீர் கற்று உகந்தேன்' என இயைத்துக் கொள்க. 'இனி எனக்கு என்ன குறை' என்பது குறிப்பெச்சம். உகந்தேன் - மேலும் மேலும் விரும்பினேன். சீர் - புகழ். நாகக் கச்சு - பாம்பாகிய இடைக்கச்சு. சுற்று உகந்து - பாம்புச் சுற்றை விரும்பி.*

***897. குறிப்புரை :*** *"கார்முகிலின்... ஏகம்ப" என்பதை முதலிலும், "மாலுக்கு" என்பதை அதன்பின்னும், "எங்ஙனே" என்பதை இறுதியிலும் கூட்டியுரைக்க. சூழல் - இடம். அகோசரம் - அகப்படாதது. "ஆயிற்று" என்பதை அகோசரத் திற்கும் கூட்டுக. "சூழ்முடி" என்பதை, 'முடிசூழ்' என மாற்றி 'முடியும் இடம்' என உரைக்க. வடி - கூர்மை. 'மாற்கும், அயற்குமே நின் வடிவம் காண்பரிதாய பொழுது யாங்கள் உன் வடிவத்தைக் கண்ட வணங்குவது எங்ஙன்' என்பது இதன் திரண்ட பொருள். இங்ஙனம் கூறினாராயினும், 'மாலும், அயனும் அகங்காரத்தால் அளந்து காணப் புக்கார் ஆதலின் அவர்க்கு அரிதாயிற்று, யாம் அவ்வாறின்றி அன்பினால் வணங்க வருகின்றேம் ஆதலின் எமக்கு நின் வடிவம் எளிதே' என்பது இதன் குறிப்புப் பொருளாம். இல்லையேல், 'வணங்குதல் இயலாது' என்றே கூறியதாய்விடும். அடிநின்ற சூழல் - திருவடி இருந்த இடம். அயற்கு - நான்முகனுக்கு.*

***898. குறிப்புரை :*** *'(எம்) தலை வணக்கம் நின் திருவடிக்கே செய்யும்; (யாம்) மையல் கொண்டோர் இணக்கன்றி மற்றோர் இணக்கறிவோமல்லம்; (எம்) கவி நலம், வல் அரவின் குணக் குன்ற வில்லியாகிய நின் குளிர் கச்சி ஏகம்பம் பாடின் அல்லால் மற்றொரு தேவரைப் பாடும் கணக்கு அன்று' என இயைத்து உரைத்துக்கொள்க. "மையல்" என்றது இங்குத் திருவருட்*

**899.** நலந்தா நானொன்று சொல்லுவன் கேண்மின்நல் லீர்களன்பு
கலந்தர னார்கச்சி ஏகம்பம் கண்டு கனல்திகிரி
சலந்தரன் ஆகம் ஒழிக்கவைத் தாய்தக்கன் வேள்வியெல்லாம்
நிலந்தர மாகச்செய் தாயென்று பூசித்து நின்மின்களே. **8**

**900.** மின்களென் றார்சடை கொண்டலென் றார்கண்டம் மேனிவண்ணம்
பொன்களென் றார்வெளிப் பாடுதன் பொன்னடி பூண்டுகொண்ட
என்களென் றாலும் பிரிந்தறி யார்கச்சி ஏகம்பத்தான்
தன்களென் றாருல கெல்லாம் நிலைபெற்ற தன்மைகளே. **9**

---

*பித்தினை. இதனைத் தத்துவத்துறையில் 'சிவராகம்'* என்பர். 'இணங்கு' என்னும் முதனிலை வலித்தல் பெற்றுப் பெயராயிற்று. மற்றோர் - பிறர். அரவின் குணக் குன்ற வில் - பாம்பாகிய நாணினையுடைய மலையாகிய வில், கணக்கு - முறைமை. கணக்கு உடையதனை, "கணக்கு" என்றார். நலம் - இன்பம். இங்ஙனம் தம் அடிமைத் திறத்தை வலியுறுத்தவாறு.*

***899. குறிப்புரை :*** *"நல்லீர்கள்" என்னும் விளியை முதற்கண் கொள்க. 'உங்கள் செயல் நலம் தர' என வினைமுதல் வருவித்துக் கொள்க. கனல் திகிரி - நெருப்புப் போலும் கொடிய சக்கரம். "எல்லாம்" என்பது எஞ்சாமை குறித்து நின்றது. நிலம் தரமாக - பூமி யளவாக; தரைமட்டம் ஆகும்படி. எதுகை கெடுதலையும் நோக்காது, 'நிரந்தரமாக' என ஓதுதல் பாடம் அன்று.*

***900. குறிப்புரை :*** *'கச்சி ஏகம்பத்தானைத் தன் பொன்னடி பூண்டு பிரிந்தறியார்' எனத் தொகுக்கப்பட்ட இரண்டன் உருபை விரித்து மாறிக் கூட்டிப் பின்னும், "தன்கண்" என்றார் என்பதை இறுதியில் வைத்து உரைக்க. 'சடை மின்கள்' என்றார்; 'கண்டம் கொண்டல்' என்றார்; 'மேனி வண்ணம் புலப்பாடு பொன்கள்' என்றார்; கொண்ட என்கள் என்றாலும், உலகெல்லாம் நிலைபெற்ற தன்மைகள் தன்கள் என்றார் - என்பது இப்பாட்டின் முதன்மைப் பொருள். சடை - மின்னல். கண்டம் - கொண்டல். மேனி வண்ணம் - பொன் என்று கூறுகிறார்.*

*"மின்கள்" என்பதற்கு ஏற்ப, 'சடைகள்' என உரைக்க. உறுப்பின் பன்மையால் புலப்படும் பலவாயின. "பொன்கள்" என்னும் பன்மை அதன் சாதி பற்றி வந்தது. அச்சாதியாவன. 'எவன்' என்னும் வினாப் பெயர் 'என்' என்று ஆகி, 'கள்' விகுதி ஏற்று "என்கள்" என வந்தது. 'எவைகள்' என்பது இதன் பொருள். 'கொண்ட எவைகள் என்றாலும்' என்றது, 'அவன் கொண்ட கோலங்களை எந்த எந்தப் பொருட்கு ஒப்பாகக் கூறியபோதிலும்' என்றவாறு. 'உண்மை, - உலகம் முழுவதிலும் நிலைபெற்றுள்ள தன்மைகள் எல்லாம்*

---

**சிவஞானபோத மாபாடியம் - சூ-2. அராக தத்துவம்*

**901.** தன்மையிற் குன்றாத் தவத்தோர் இமையவர் தாம்வணங்கும்
வன்மையிற் குன்றா மதிற்கச்சி ஏகம்பர் வண்கயிலைப்
பொன்மயிற் சாயலுஞ் சேயரிக் கண்ணும் புரிகுழலும்
மென்மையிற் சாயும் மருங்குலும் காதல் விளைத்தனவே. 10

**902.** தனமிட் டுமைதழு வத்தழும் புற்றவர் தம்மடியார்
மனம்விட் டகலா மதிற்கச்சி ஏகம்பர் வான்கயிலைச்
சினம்விட் டகலாக் களிறு வினாவியொர் சேயனையார்
புனம்விட் டகலார் பகலாம் பொழுதும்நம் பூங்கொடியே. 11

---

*தன்கள்' - (அவனுடைய தன்மைகளே) - என்பதாம். 'தன்னகள்' என்பதில் அகரம் தொகுக்கப்பட்டது. தன்ன - தன்னுடையன.*

***901. குறிப்புரை :** இப்பாட்டு அகப்பொருள் ஐந்திணைப் பாங்கற் கூட்டத்தில் தலைவன் பாங்கன் கழற்றெதிர் மறுத்தல் துறையது.*

*'தவத்தோரும், இமையவரும் ஏகம்பர்' என்க. தாம், அசை, வன்மையிற் குன்றாமை மதிலுக்கு அடை. "ஏகம்பரது வண் கயிலைப் பொன்" என்றது தலைவியை. பொன் - திருமகள் போல்வாள். 'பொன்னினது சாயல் முதலியன, காதல் நோயை விளைத்தன' என்றான். மயிற் சாயல் - மயிலினது சாயல் போலும் சாயல், சேயரி - செவ்வரிகள். புரி - புரிந்த குழல் - கூந்தல், 'மென்மையின்' என்பது எதுகை நோக்கி, 'மென்மயின்' எனப் போலியாய் வந்தது. சாய்தல் - மெலிதல். மருங்குல் - இடை. குன்றா - குறைவுபடாத.*

***902. குறிப்புரை :** இதுவும் அகப் பொருள் துறையதே. துறை, பாங்கியிற் கூட்டத்தில் தோழி தலைவியை மெலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்தல்.*

*'கயிலையில் வந்து வினாவி' என்க. 'களிறு வினாவலாவது, அம்பு தைக்கப்பட்ட களிறு ஒன்று இவ்வழி யாகப் போகக் கண்டீரோ' என வினாவுதல். இது தலைவன் தோழியோடு பேசத் தொடங்குதற்கு ஒரு வழியாகும். தொடர்ந்து நிகழ்த்தும் பேச்சினிடையே கண்ட தலைவனது குறிப்பையே தோழி தலைவியிடம் "புனம் விட்டு அகலார்" எனக் குறித்தாள். 'அவர்க்கு நான் என்ன சொல்வது' என்பது குறிப்பெச்சம். சேய் - முருகன். ஆம் பொழுதும் - "சேயனையார்" என்பது 'தலைவர்' என்னும் அளவாய் நிற்றலின், ஓர் என்பதற்கு முடிவாயிற்று. முடியும் காலம் வரையில், "நம்" என்பதை 'நம் புனம்' என முன்னே கூட்டுக.*

***903. குறிப்புரை :** 'பூங்கொத்தும், இரு தழையும் ஆர் பொழில்' இரு - பெருமை. பெரியன. ஆர் - நிறைந்த. 'பொற்பு ஆர் கயிலை' என இயையும்.*

903. பூங்கொத் திருந்தழை யார்பொழில் கச்சியே கம்பர்பொற்பார்
கோங்கத் திருந்த குடுமிக் கயிலையெம் பொன்னொருத்தி
பாங்கொத் திருந்தனை ஆரணங் கேபடர் கல்லருவி
ஆங்கத் திருந்திழை ஆடிவந் தாற்கண்(டு) அடிவருத்தே. 12

904. வருத்தந் தரும்மெய்யுங் கையில் தழையும்வன் மாவினவும்
கருத்தந் தரிக்கும் நடக்கவின் றைய கழல்நினையத்

---

*'கோங்கத்தொடு' என உருபு விரிக்க. கோங்கு, ஒருவகை மரம். ஆர் அணங்கு - அரியளாகிய தேவ மாது. "ஆர் அணங்கே" என்பதை முதலிற் கொண்டு உரைக்க. எம் பொன் ஒருத்தி பாங்கு ஒத்து இருந்தனை - எங்கள் பொன் போல்பவளாகிய மகள் ஒருத்தியின் தன்மை யோடே ஒத்த தன்மையை உடையவளாய் இருக்கின்றாள். (ஆகையால்) 'இப்பொழுது அருவி ஆடி வரச் சென்றுள்ள அவள் இங்கு வந்தபின் நீ செல்' என்க. ஆங்கு - அம்மலை யிடத்தில். திருந்து, இழை - திருத்தமான அணிகலன்களையுடையவள். 'படர் கல் அருவி ஆடி வந்தால்' என இயையும். படர் - ஒடுகின்ற. அருவி. கல் - மலை. "அடி வருத்து" என்பது, 'உன் பாதத்தை நோகச் செய்' எனப் பொருள் தந்து, 'நடந்து செல்' என்னும் கருத்தை உணர்த்திற்று. இவ்வாற்றால் இப்பாட்டுப் பாங்கி மதியுடன் பாட்டின்பின் ஒருசார் ஆசிரியர் வேண்டும் 'நாண நாட்டம்' என்பதில், 'வேறுபடுத்திக் கூறல்' என்னும் துறையது. இரும் - பெரிய. ஆரணங்கு - திருமகள்.*

*அஃதாவது, தலைவி அருவியாடும் ஆரவாரத்தில் தோழியர் கூட்டத்தினின்றும் பிரிந்து சென்று தலைவனொடு கூடி வந்தபொழுது அவள் முன்னையினும் மிக்க மகிழ்ச்சியும், பொலிவும் உடையவளாய் இருத்தலைக் கண்டு அவளது செயலை நன்கு உணர்ந்து கொண்ட தோழி தான் அங்ஙனம் உணர்ந்துகொண்டதைத் தலைவிக்குக் குறிப்பால் உணர்த்து வாளாய், அவள் நாணும்படி, அவளைத் தான் தன் தலைவியாக உணராமல், வரையுரை தெய்வமாக உணர்ந்தாள் போலக் கூறுதல். அங்ஙனம் கூறுதலால் தலைவி தனது புதுநலத்தினையும், அதன் காரணத்தையும் தோழி தெரிந்து கொண்டாள் என அறிந்து நாணமுற்று, ஏதேனும் கூறுவாள். தனது களவொழுக்கத்தைத் தோழிக்கும் மறைத்து ஒழுகிய தலைவி பின் மறையாது தோழிக்குக் கூற உடன்படுதல் இக்கூற்றிற்குப் பயன்.*

***904. குறிப்புரை :*** *"ஐய" என்பதை முதலிலும், "நடக்க" என்பதை இறுதியிலும் கூட்டியுரைக்க. மெய் - உடம்பு. அது வருத்தந் தருதற்குக் காரணம் வேட்டையாடி வருதல். தழை - பூவும், பச்சிலையும் விரவ, அழகிய*

திருத்தந் தருளும் திகழ்கச்சி ஏகம்பர் சீர்க்கயிலைத்
துருத்தந் திருப்பதன் றிப்புனம் காக்கும் தொழிலெமக்கே. 13

**905.** எம்மையும் எம்மைப் பணிகொள்ளும் கம்பர் எழிற்கயிலை
உம்மையும் மானிடம் இப்புனத் தேவிட்டு வந்தமைந்தர்
தம்மையும் மானையும் சிந்தையை நோக்கம் கவர்கவென்றோ
அம்மையும் அம்மலர்க் கண்ணும் பெரியீர் அருளுமினே. 14

---

*மேகலாபரணம்போலக் கைவன்மையால் தொடுக்கப் பட்டதொரு உடை வகை. இஃது இளமகளிரது கண்ணையும், கருத்தையும் கவர்வதாய் இருக்கும். வேட்டையாடி வருபவன் கையில் நாணில் வைத்துத் தொடுக்கப்பட்ட வில், அல்லது ஈட்டி முதலிய கருவிகள் இருக்க வேண்டுவதுபோய், இளமகளிரது மனத்தைக் கவரும் தழை யிருத்தலைச் சுட்டி, 'உம் வினா பொய்யாக வினாவும் வினாவாகும்' என்பதைத் தோழி தலைவனுக்குக் குறிப்பால் உணர்த்தி நகைப்பாள், "வருத்தம் தரும் மெய்யும், மா வினவும் கருத்தும், (இடையே) கையில் தழையும்" தம்முள் ஒவ்வாதனவாய் உளவே - என்பாள். "கருத்து அந்தரிக்கும்" என்றாள். "கருத்து" என்பதிலும் 'கருத்தும்' என எண்ணும்மை விரிக்க. 'வேறுபாடு' என்னும் பொருட்டாகிய 'அந்தரம்' என்னும் வடமொழிப் பெயர் அடியாக, "அந்தரிக்கும்" என்னும், வினைமுற்றுப் பிறந்தது. அந்தரிக்கும் - வேறுபடா நின்றன. 'இன்று அந்தரிக்கும்' என இயைக்க. இன்று இப்பொழுது. திரு - திருவருள் 'கயிலையில் எமக்கு இப்புனம் காக்கும் தொழில் (உளது); அதைத் தவறவிடுவது எமக்குத் தொழில் அன்று; ஆதலின் நீவிர் இவ்விடம் விட்டு அப்பால் நடக்க' என "தொழில்" என்பதன்பின் 'உளது' என்பது எஞ்சி நின்றது. 'தீமை, பிழை' முதலிய பொருள்களைத் தருவதாகிய 'துர்' என்னும் வடமொழி இடைச்சொல் ஈற்றில் உகரம் பெற்று வந்தது. 'நிர்' என்பது 'நிரு' என வருதல்போல. இப்பாட்டு, தலைவன் பாங்கியை மதியுடன் படுத்தலில் கெடுதி வினாதலுள் வேழம் வினாதல் துறையது. தோழி இங்ஙனம் இகழ்ந்துரைத் தாளாயினும் தலைவியது நிலைமையைக் குறிப்பால் உணர்ந்து இருவரும் ஒரு மனத்தராயதை உணர்ந்தே விடுவாள்.*

***905. குறிப்புரை :*** *எம்மையும் - எப்பிறப்பிலும். கம்பர் - ஏகம்பர். உம்மையும் - (எம்மோடு) உங்களையும். மானிடம் - மக்கட் பிறப்பு. 'மானிடமாக' என ஆக்கம் விரிக்க. விட்ட - விட்டன. வாழவிட்டன. வாழ்வோர் பலராதல் பற்றி விட்டதாகிய தொழிலும் பலவாயின. 'கயிலையில் இப்புனத்தே விட்டன' என்க. 'விட்டு' என்பது பாடம் அன்று. 'இங்கு வந்த*

**906.** அருளைத் தருகம்பர் அம்பொற் கயிலைஎம் ஐயர்அம்பு
இருளைக் கரிமறிக் கும்மிவர் ஐயர் உறுத்தியெய்ய
வெருளக் கலைகணை தன்னொடும் போயின வில்லிமைக்கு
மருளைத் தருசொல்லி எங்கோ விளையுண்டிவ் வையகத்தே. **15**

**907.** வையார் மழுப்படை ஏகம்பர் ஈங்கோய் மலைப்புனத்துள்
ஐயார் வருகலை ஏனங் கரிதொடர் வேட்டையெல்லாம்
பொய்யான ஐயர் மனத்த(து)எம் பூங்கொடி கொங்கைபொறாப்
பையார் அரவிடை ஆயிற்று வந்து பரிணமித்தே. **16**

---

*மைந்தர் தம்மையும்' என்க. 'சிந்தையைக் கவர்தல்' என்பது 'வசப்படுத்துதல்' என்னும் பொருட்டாகலின் அது 'தம்மை, மானை' என்னும் இரண்டாம் வேற்றுமைகட்கு முடிபாயிற்று. மானைச் சிந்தை கவர்தல், அதன் நோக்கினும் சிறந்த நோக்கு ஆதலால். அம் மை - அழகிய மை. 'மையும், கண்ணும் நோக்கத்தால் கவர்க என்றோ' என இயைக்க "பெரியீர்" என்றது தோழியை. இதனை முதலிற் கொள்க. இப்பாட்டு, பாங்கியைத் தலைவன் மதியுடம்படுத்தலில் பிற வினாதல் துறையது.*

*906. **குறிப்புரை :** இப்பாட்டுத் தலைவன் தலைவி தோழியுடன் இருக்கும் பொழுது சென்று 'கலைமான் ஒன்று கணைதைத்த உடலுடன் இவ்வழியாகச் சென்றதோ' என, அதுபற்றி அவரை நோக்கி, வினாயதற்குத் தோழி தலைவியை நோக்கிக் கூறியது.*

*"மருளைத் தரு சொல்லி" என்பது தோழி தலைவியை விளித்தது. மருள் - மயக்கம். சொல்லி - சொல்லை உடையவளே. 'எம் ஐயர் (தமையன் மாருடைய) அம்பு கரியை (யானையை) மறிக்கும். (எய்த இடத்திற்றானே மடிந்து விழச் செய்யும்; இவர் ஐயர் (இவர் அவர்களினும் மேலானவர் - வேடரினும் சிறந்த அரசர். இவர் தம் அம்பை ஒரு மான்மீது) உறுத்தி எய்ய, (ஆழமாகப் பாயும்படி எய்ய) அந்த மான் அந்தக் கணையையும் பறித்துக் கொண்டு எங்கோ போய்விட்டது. போயின வில்லிமைக்கு (அப்படிப் போய்விடும்படி எய்த இவரது வில் வீரத் தன்மைக்கு) இவ் வையகத்து எங்கோ விலை உண்டு' எனக் கூறித் தோழி நகையாடினாள். வில்லிமை - வில்லின் வன்மை. வெருள - அஞ்ச. கலை - கலைமான்.*

*கம்பர் - ஏகம்பர். இருள் கரி - இருள்போலும் யானை. ஐக் கரிய - தலைமை யானை. வெருள் - அச்சம் மிகுந்த. 'எம் ஐயர் அம்பு தலைமை யானையை அங்கேயே வீழ்த்தும். இவ்ஐயர் அம்பு எய்ய, அச்சம் மிகுந்த ஒரு மான் அந்த அம்பையும் பறித்துக்கொண்டு ஓடிவிட்டது' என்றாள்.*

**908.** பருமுத் துதிர்த்திடும் சீர்மத்த யானை நுதல்பகுந்திட்(டு)
உருமொத்த திண்குரற் சீயம் திரிநெறி ஓங்குவைவாய்ப்
பொருமுத் தலைவேற் படைக்கம்பர் பூங்கயி லைப்புனத்துள்
தருமுத் தனநகை தன்நசை யால்வெற்ப சார்வரிதே. 17

---

***907. குறிப்புரை :*** *வை ஆர் - கூர்மை பொருந்திய. 'ஐயர்' என்பது நீட்டல் பெற்று "ஐயார்" என வந்தது. 'ஐயார் தொடர் வேட்டை' என இயையும். "ஐயார், ஐயர்" என்றவை தலைவனை. 'கலையையும், ஏனத்தை கரியையும் தொடர் வேட்டை' என்க. பொய் ஆன - பொய் ஆயின. 'ஐயர் மனத்தது ஒவ்வொன்றாகப் பரிணமித்து வந்து, முடிவில் பூங்கொடி இடையாயிற்று' என்க. பின் வந்த "ஐயர்" என்பது 'அவர்' என்னும் சுட்டுப் பெயரளவாய் நின்றது. இப்பாட்டின் துறையும் முன் பாட்டின் துறையே.*

*இருவரும் உள்வழிச் சென்ற தலைவன் முதற்கண், 'இவ்வழியாக, அம்பு தைத்த உடலுடன் மான் ஒன்று போயிற்றா' எனறு அவர்களை வினாவினான்; விடை யில்லை; பின்பு காட்டுப் பன்றி போயிற்றா?' என்றான். விடையில்லை; பின்பு 'யானை போயிற்றா' என்றான்; விடையில்லை. (அதனால் அவன் பின்பு அவர்களை நெருங்கிச் சென்று, 'என்ன, ஒருவர் வந்து வினவினால் யாதும் விடைசொல்லா திருக்கின்றீர்கள்? உங்களைப் பார்க்கும் பொழுது - உங்களுக்கு இடை யிருக்கின்றதா - என்று ஓர் ஐயம் எழுகின்றது. இருக்கின்றதா? இல்லையா? சொல்லுங்கள்' என்றான். அதைக் கேட்ட தோழி மேற்காட்டியவாறு சொல்லி நகையாடினாள். தொடர்தல் - பின்பற்றிச் செல்லல். 'இவர் முதற்கண் குறித்த மான், பன்றி, யானை இவைகளைப் பின்பற்றிச் சென்று ஆடிய வேட்டைகள் எல்லாம் வெறும் பொய்யாகிவிட்டன. அவ்வேட்டைகள் முதலில் மானாய் இருந்தது, பன்றியாகப் பரிணமித்து, பின் பன்றி யானையாகப் பரிணமித்து, முடிவில் எங்கள் பூங்கொடி போல உள்ள உனது இடையாகி நிலைபெற்றது' எனக் கூறி நகைத்தாள். மனத்தது மனத்தில் உள்ள கருத்து. எனவே, 'அஃதே உண்மை' என்றும், 'முன்னர்க் கூறியன எல்லாம் பொய் என்றும் ஆயின. இடை சிறிதாய், மெல்லிதாதலின் அது பெரியவாய், வலியவாய கொங்கை களைத் தாங்கலாற்றாது வருந்திற்று. பை ஆர் - படம் பொருந்திய அரவு. இடை - பாம்பு போலும் இடை.*

***908. குறிப்புரை :*** *"வெற்பு" என்பதை முதலிற் கொள்க. 'முத்து உதிர்த்திடும் நுதல்' என்க. சீர் - அழகு. 'மத யானை' என்பது, "மத்த யானை" என விரித்தல் பெற்றது. நுதல் - நெற்றி. பகுந்திட்டு - பிளந்திட்டு. உரும் ஒத்த - இடியோடு ஒலித்த. சீயம் - சிங்கம். நெறி - வழி. ஓங்கு - மலைமேல் இருத்தலால் ஓங்கிக் காணப்படுகின்ற. 'ஒங்கு கயிலை' என இயையும். முத்தலை வேல் - சூலம்.*

**909.** அரிதன் திருக்கண் இடநிரம் பாயிரம் போதணிய
அரிதன் திருவடிக்(கு) அற்சித்த கண்ணுக் கருளுகம்பர்
அரிதன் திருக்கங் குலியால் அழிந்த கயிலையல்லிங்(கு)
அரிதென் றிருப்பதெம் பால்வெற்ப எம்மையர்க் கஞ்சுதுமே. 18

**910.** அஞ்சரத் தான்பொடி யாய்விழத் தீவிழித் தன்புசெய்வோர்
நெஞ்சரத் தாழ்வுகந் தோர்கச்சி ஏகம்பர் நீள்கயிலைக்
குஞ்சரத் தாழ்வரை வீழநுங் கொம்புய்யக் கும்பமுழ்கும்
வெஞ்சரத் தாரன வோவல்ல வோவிவ் வியன்முரசே. 19

---

*கம்பர் - ஏகம்பர். நகைதன் நசை - நகையினை உடையாளது விருப்பம். ஆல், அசை 'வெற்ப, (உனக்குப் பிற யாவும் எளிய எனினும்) புதைத்துள் முத்தன்ன நகையாள்மேல் நசை சார்வரிது' என முடிக்க. நிரம்புதல் கூடாமையால் நசையும் கொள்ளுதல் கூடாதாயிற்று. இது தன்பால் வந்து குறையிரந்த தலைவனைத் தலைவியது அருமை சொல்லி அகற்றியது. அருமையாவது, தோழி இச்செய்தியைத் தலைவிக்குத் தெரிவித்தற்குச் செவ்வியருமை. அருமை இன்றாயினும் உள்ளது போலச் சொல்லி அகற்றுதல்; அவனது காதலின் மிகுதி அறிதற்பொருட்டாம்.*

***909. குறிப்புரை :*** *"வெற்ப" என்பதை முதலிற் கொள்க. நிரம்பு ஆயிரம் போது அணிய அரி தன் திருக்கண் இட நிரம்பு - ஆயிரம் போது அணிய திருமால் தன் கண்ணையே இட்டமையால் எண் நிரம்பிய ஆயிரம் மலரைச் சாத்த. பறித்து அரி திருவடி வினைகளை அரித்தொழிக்கின்ற திருவடி. 'மற்றை மலருக்காக அருள்செய்யாது கண்ணாகிய மலருக்கு அருள் செய்தான்'; அஃதாவது, 'கண்ணைப் பறித்துச் சாத்தியதற்கு மகிழ்ந்து அருள்செய்தான்' என்க. கம்பர் - ஏகம்பர். மூன்றாம் அடியில் உள்ள அரி - பகைவன்; இராவணன். திருக்கு - அவனது முறையற்ற செயல்; கயிலை மலையைப் பெயர்த்தது அங்குலி - விரல். 'கம்பர் திருக்கு அழித்த கயிலை' என்க. அல் - இரவு 'கயிலையில் இங்கு நீவிர் அவ்எம்பால் இருப்பது அரிது' என்று எம் ஐயர்க்கு அஞ்சுதும் - என முடிக்க. ஐயர் - தமையன்மார். களவொழுக்கத்தில் ஒழுகிய தலைவன், 'தலைவி இற்செறிக்கப்படுதல் காரணமாக அது கூடாது' எனக் கருதி, 'ஒரு நாளை இரவு உங்கள் இல்லத்தில் விருந்தினனாக வருவேன்' என 'அதுவேண்டா' எனத் தோழி விலக்கியது இது. இது, 'விருந்திறை விலக்கல்' எனப்படும். தலைவன் வேண்டுதல், 'விருந்திறை விரும்பல்' எனப்படும். இப்பாட்டில், 'மடக்கு' என்னும் சொல்லணி வந்தது.*

***910. குறிப்புரை :*** *"அம் சரம்" என்றது, 'பூவாகிய அம்பு' என்றபடி. நெஞ்சு அரம் - மனமாகிய தடம். தாழ்வு - தங்குதல். தாழ் வரை - மலைச் சாரல்.*

911. சேய்தந்த அம்மை உமைகண வன்திரு ஏகம்பத்தான்
தாய்தந்தை யாயுயிர் காப்போன் கயிலைத் தயங்கிருள்வாய்
வேய்தந்த தோளிநம் ஊச லொடும்விரை வேங்கைதன்னைப்
பாய்தந்து பூசலுண் டாங்கொண்ட தோகைப் பகடுவந்தே. 20

912. வந்தும் மனம்பெறிற் பொன்னனை யீர்மன்னும் ஏகம்பர்தம்
முந்தும் அருவிக் கயிலை மலையுயர் தேனிழிச்சித்
தந்தும் மலர்கொய்தும் தண்தினை மேயுங் கிளிகடிந்தும்
சிந்தும் புகர்மலை கைச்சுமிச் சாரல் திரிகுவனே. 21

---

*(இவ்வியன் முரசு) குஞ்சரம் வீழ, நும் கொம்பு உய்யக் கும்பம் மூழ்கும் வெஞ்சரத்தார் - யானை கீழே வீழ்ந்தொழியும்படியும், உம் பூங்கொம்பு போலும் மகள் தப்பிப் பிழைக்கும்படியும் யானையின் மத்தகத்தில் மூழ்கிய, கொடிய அம்பினையுடைய அவருடையனவோ? அல்லவோ? 'குஞ்சரந் தாழ்வரை' என்பது எதுகை நோக்கி. கும்பம் - யானை மத்தகம். வலிந்து நின்றது.*

*இது, களவொழுக்கத்தில் களிறு தரு புணர்ச்சியால் ஒருவனுக்கு உரியளாகிவிட்ட தலைவி தன் இல்லத்தில் மணமுரசு முழுங்குதலைக் கேட்டு, 'இம்முரசொலி என் தலைவர் மணத்தனவோ, பிறர் மணத்தனவோ' என ஐயுற்றுக் கலங்கியது*[1].

***911. குறிப்புரை :*** *"வேய் தந்த தோளி" என்பதை முதலிற் கொள்க. அது தோழி தலைவியை விளித்தது. தந்த, உவம உருபு. சேய் - முருகன். 'சேயை' என இரண்டாவது விரிக்க. "கைப் பகடு வந்து" என்பதை, "தயங்கியருள்வாய்" என்பதன் பின்னரும், "பூசல் உண்டாம்" என்பதை இறுதியிலும் கூட்டி யுரைக்க. தயங்கு - நிறைந்த. வினா - வாசனை. வேங்கை - வேங்கை மரம். ஊசல் வேங்கை மரக் கிளையில் கட்டப்பட்டிருப்பதால், "ஊசலொடும் வேங்கைதன்னைப் பாய்தந்து கொண்டதோ" என்றாள். கை - தும்பிக்கை. பகடு - யானை. பூசல் - ஆரவாரம். உண்டாம் - உண்டாகாநின்றது. இரவுக் குறிக்கண் தலைவன் வந்தமையறிந்த தோழி அதனைத் தாய் அறியாவாறு தலைவிக்குக் கூறியது. இது, வரவுணர்ந்துரைத்தல்*[2] *எனப்படும்.*

***912. குறிப்புரை :*** *"பொன் அனையீர்" என்பது, தலைவனை தோழியை விளித்தது. அதனை முதலிற் கொள்க. பொன் - இலக்குமி. மனம் பெறில் - இசைவு கிடைக்குமாயின் 'கயிலை மலையின்கண்' என ஏழாவது விரிக்க.*

---

1. *திருக்கோவையார் - 297*
2. *திருக்கோவையார் - 160*

**913.** திரியப் புரமெய்த ஏகம்ப னார்திக ழுங்கயிலைக்
கிரியக் குறவர் பருவத் திடுதர ளம்வினையோம்
விரியச் சுருள்முத லானும் அடைந்தோம் விரைவிரைந்து
பிரியக் கதிர்முத்தின் நீர்பெற்ற தென்னங்குப் பேசுமினே. 22

**914.** பேசுக யாவர் உமைக்கணி யாரென்று பித்தரெங்கும்
பூசுகை யார்திரு நீற்றெழில் ஏகம்பர் பொற்கயிலைத்
தேசுகை யார்சிலை வெற்பர் பிரியும் பரிசிலர்அக்
கூசுகை யாதுமில் லாக்குலை வேங்கைப் பெயர்நும்மையே. 23

---

*சிந்தும் - எதிர்ப்பட்ட வரை அழிக்கின்ற. புகர் மலை - முகத்தில் புள்ளிகளை யுடைய மலை போலும் யானை. கைச்சல் - கட்டுதல்; அடக்குதல்; இது தலைவன் பாங்கியை மதியுடம்படுத்தற்கண் குறையுற்று நின்றது[1].*

*913. குறிப்புரை : திரி அப்புரம் - வானத் திரிகின்ற அந்த மதில்கள். 'கயிலைக் கிரியில் உள்ள அக்குறவர்' என்க. பருவம் - மூங்கில்கள் முதிர்ந்து முத்தினைச் சொரியும் காலம். இது தரளம் - சேர்ந்து வைக்கின்ற முத்து. வினையோம் - முயற்சியுடைய யாங்கள். (இவ்வாறு தோழி, தலைவி முதலானவர்களைத் தன்னோடு உளப்படுத்துக் கூறினாள்). விரியச் சுருள் முதல் - பின் விரிதற் பொருட்டு முன்னே சுருண்டு இருக்கும் இலைகளை யுடைய இள மூங்கில், 'கயிலை சாரலில் உள்ளோர் முற்றிய மூங்கிலினின்றும் பெறுகின்றோம்' எனத் தலைவன் தலைவியை வரைதற்கு முலைவிலையாகத் தருவதாகக் கூறிய முத்துத் திரளைத் தோழி, 'அஃது எங்கட்கு அரியது ஒன்றன்று' என இகழ்ந்து கூறினார். இவ்வாறு தோழி இகழ்ந்து கூறியதன் கருத்து. 'எம் தமர்க்கு உனது (தலைவனது) குல நலம், கல்வி, பண்பு முதலியவைகளை அறிவிப்பின் - அவை காரணமாக அவர் வரைவுடம்படுத்தலல்லது, விலைக்குக் கொடுப்பதாயின் இவர்கட்கு ஏழ் பொழிலைக் கொடுப்பினும் நிரம்பாது ஆதலின் உடன்படார்' எனக் கூறுதலாம்.[2] "விரைவிரைந்து" இரட்டைக் கிளவி. நீர் பிரிய அங்குக் கதிர் முத்தின் பெற்றது என் - வரைபொருட் பிரிதலாக நீர் பிரிதற்கு அங்கு (நும் இடத்தில் - கயிலை மலைச் சாரலில்) பெறும் முத்தினால் அடையத் தக்க பயன் யாது? 'பெறுவது' எனற்பாலது, "பெற்றது" என இறந்த காலமாக ஓதப்பட்டது. இது தலைவன் வரைபொருட் பிரிதலில் தோழி தலைவற்குத் தலைவியது முலைவிலை பற்றிக் கூறியது. 'முத்துக்கள் எமக்கு அரியவல்ல' என்றற்குத் தோழி முத்தினை இளமூங்கிலே தங்கட்குத் தருவதாகக் கூறினாள். பிரிய - பிரிதலால். 'பிரிதலால் கிடைக்கும் முத்து' என ஒரு சொல் வருவிக்க.*

---

1. *திருக்கோவையார் - 63*
2. *திருக்கோவையார் - 266*

**915.** பெயரா நலத்தெழில் ஏகம்ப னார்பிறை தோய்கயிலைப்
பெயரா திருக்கப் பெறுகிளி காள்புன மேபிரிவின்
துயரால் வருந்தி மனமுமிங் கோடித் தொழுதுசென்ற(து)
அயரா துரையும்வெற் பற்(கு)அடி யேற்கும் விடைதம்மினே. **24**

---

*914. குறிப்புரை : 'யாவர் பித்தர் (அவர்) உமை - கணியார் - என்று பேசுக' என மாற்றி இறுதியிற் கூட்டி, அதன்பின், 'யாம் அவ்வாறு பேசோம்' என்னும் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க. 'கணி' என்பது வேங்கை மரத்திற்கும், சோதிடனுக்கும் பெயர் ஆதலால், "கணியார்" என்றது சிலேடை. பூசுகை ஆர் - பூசுதலைப் பொருந்திய. தேசு - அழகு. கை ஆர் - கையில் பொருந்திய. சிலை - வில் 'தேசு சிலை, கை ஆர் சிலை' எனத் தனித் தனி இயைக்க. வெற்பர் பிரியும் பரிசு இலர் - தலைவர் இது பொழுது இவ்விடம் விட்டும் பிரிந்து போகும் தன்மையை உடையர் அல்லர் (ஆகையால் வேங்கை மரங்களே! நீங்கள், 'தலைவர் பிரிவார்' எனச் சோதிடம் கூறுவதால், உம்மைப் பித்தர்கள்தாம் சிறந்த சோதிடர் என்று கூறுவார்கள்; நாங்கள் அவ்வாறு கூறமாட்டோம். ஆயின் 'உண்மை யாது' எனில்) 'கொலை செய்யக் கூசுதல் 'சிறிதும் இல்லாத, நன்மையைக் குலைக்கின்ற வேங்கைகள் (புலிகள்) என்பதே உங்கள் பெயர். அத்தன்மையையுடைய உங்களை, 'வருவதறிந்து கூறும் சோதிடர்' என்று யாவர் சொல்வார்! வேங்கை மரம் பூக்கும் காலத்தில் தினைகளும் அறுவடை செய்யும் காலத்தை அடையும். அதனால் வேங்கைகள் பூத்தால் தினைப் புனங் காக்கத் தினைப் புனங்களில் பரண் அமைத்துத் தங்கியிருந்த மகளிரும் ஊருக்குள் உள்ள தங்கள் இல்லத்தை அடைந்து விடுவர். ஆகவே, வேங்கைகள் பூத்தால் களவொழுக்கத்தில் ஒழுகுவோர் கவலை யடைவர். மகளிர் தலைவனுக்குத் தாங்கள் தினைப்புனத்தை விட்டு இல்லம் சென்றுவிடுவதாக அறிவித்து, விரைவில் தலைவியை வரைந்து கொள்ள வற்புறுத்துவர். அவ்வாறு வற்புறுத்துதல் 'வரைவு கடாதல்' எனப்படும். அங்ஙனம் தலைவனை வரைவு கடவா எண்ணிய தோழி தலைவன் கேட்கும் படி வேங்கை மரங்களை நோக்கி ஏதோ கூறுபவள் போல இவ்வாறு நகையுண்டாகக் கூறி வரைவு கடாயினாள். வேங்கைகள் காலம் அல்லாக் காலத்தில் பூத்ததுபோலக் கூறித் தினை முதிர்வுரைத்து வரைவு கடாயினாள்* 'வேங்கை' என்னும் பெயருடைய உங்களைப் பித்தர்கள், 'கணியார்' என்று பேசட்டும்; நாங்கள் அவ்வாறு பேசோம் - என்றாள்.*

*915. குறிப்புரை : பெயரா நலத்து எழில் - என்றும் மாறாதிருக்கும் அழகினால் உண்டாகும் எழுச்சி. ஏகம்பனார் காலத்தைக் கடந்தவர் ஆதலின் அவரது நலம் என்றும் பெயரா நலமாம். 'கயிலையினின்றும், தினையை அறுத்த பின்னும் அதன் தாள்களில் தங்கிப் பெயராதிருக்கப் பெறுகின்ற*

**916.** தம்மைப் பிறவிக் கடல்கடப் பிப்பவர் தாம்வணங்கும்
மும்மைத் திருக்கண் முகத்தொழில் ஏகம்பர் மொய்கயிலை
அம்மைக் கருங்கண்ணி தன்னொடின் பந்தருந் தண்புனமே
எம்மைக் கவலை செயச்சொல்லி யோவல்லி எய்தியதே. **25**

**917.** இயங்குந் திரிபுரம் எய்தவே கம்பர் எழிற்கயிலைத்
தயங்கும் மலர்ப்பொழில் காள்தையல் ஆடரு வித்தடங்காள்

---

*கிளிகளே! யான் பிரிவினால் வருந்திச் சென்றதைப் பின்பு இங்குவரும் வெற்பற்கு (தலைவற்கு) அயராது (மறவாமல்) உரையுங்கள்; அடியேனுக்கும் விடை தாருங்கள்' என்று, தலைவன் சிறைப்புறமாகத் தோழி பிரிவருமை கூறி வரைவு கடாயினாள்[1] புனமே பிரிவின் துயர் - இப்புனத்தையே அடியோடு பிரிதலால் வரும் துன்பம். "மனமும்" என்னும் உம்மை உயர்வு சிறப்பு. இங்கு உலாவிக்கொண்டே, "ஓடி" எனச் சினைவினை முதல்மேல் நின்றது. தொழுது. மீட்டும் கூட்டு விக்க வேண்டித் தெய்வத்தைத் தொழுது, தன்னின் வேறாகாமை பற்றித் தலைவியைத் தோழி "அடியேன்" எனத் தான் என்றே கூறினாள்.*

***916. குறிப்புரை :*** *'தம்மைத் தாம் பிறவிக் கடல் கடப்பித்துக் கொள்ள விரும்புபவர் வணங்கும் ஏகம்பர்' என்க. எனவே, 'ஒருவர் தம்மைத் தாம் பிறவிக் கடலினின்றும் கடப்பித்துக் கொள்ளுதற்கு ஏகம்பரை வணங்குதல் தவிர வேறு வழியில்லை' என்பது பெறப்பட்டது. "மும்மை" என்றது, 'மூன்று' என்றே பொருள் தந்தது. 'கயிலையில் இன்பந்தரும் புனம்' ஏழாவதன் தொகையாகக் கொள்க. 'அ' என்னும் சுட்டுக் கருங்கண்ணியைச் சுட்டிற்று. மை, கண்ணிற்கு அடை. கருங்கண்ணி, தலைவி. தன், சாரியை, 'கருங்கண்ணியோடு சேர்ந்திருந்து முன்பெல்லாம் இன்பத்தைத் தந்து கொண்டிருந்த தண்புனமே' எனத் தலைவன் தினைப் புனத்தை விளித்துக் கூறினான். வல்லி எய்தியது - கொடிபோலும் தலைவி உன்பால் வந்தது. எம்மைக் கவலை செயச் சொல்லியோ - (முதலில் இன்பத்தைத் தந்து பின்பு) எம்மைக் கவலைப்படுத்தச் சொல்லித்தானே? 'அவ்வாறு இருத்தல் இயலாது; எம் வினைதான் இவ்வாறு ஆயிற்றுப்போலும்' என்பது குறிப்பெச்சம். இது தினை அறுக்கப்பட்டபின் அப்புனத்திற்குச் சென்ற தலைவன் அங்குத் தலைவி முதலானோர் இல்லாமல் புனம் வெறிச்சோடிக் கிடத்தலைப் பார்த்து வருந்திக் கூறியது. 'வறும்புனங் கண்டு வருந்தல்' என்னும் துறை[2] 'வருங்களம் நாடி மறுகல்' எனவும் கூறுவர்.*

***917. குறிப்புரை :*** *இயங்கும் - வானத்தில் திரிகின்ற. திரிபுரம் - மூன்று*

---

1. *திருக்கோவையார் - 144*
2. *திருக்கோவையார் - 146*

முயங்கு மணியறை காள்மொழி யீரொழி யாதுநெஞ்சம்
மயங்கும் பரிசுபொன் னார்சென்ற சூழல் வகுத்தெமக்கே. 26

918. வகுப்பார் இவர்போல் மணத்துக்கு நாள்மணந் தன்னொடின்பம்
மிகுப்பார்கள் ஆருயிர் ஒன்றாம் இருவரை விள்ளக்கள்வாய்
நெகுப்பால் மலர்கொண்டு நின்றார் கிடக்க நிலாவுகம்பர்
தொகுப்பால் மணிசிந் தருவிக் கயிலையிச் சூழ்புனத்தே. 27

---

*கோட்டைகள். தயங்கும் - விளங்குகின்ற. (கயிலை கண் தயங்கும் என்க). 'தட அருவிகாள்' என மாற்றிக் கொள்க. தட - பெரிய. முயங்கும் - நாங்கள் தழுவும் இடமாகிய. மணி அறை - அழகிய பாறை. 'நெஞ்சும் ஒழியாது மயங்கும் பரிசாக' என ஆக்கம் வருவிக்க. பரிசு - தன்மை 'எம் நெஞ்சம்' என உரைக்க. பொன்னார் - பொன் போல்பவர்கள். பொன் - திருமகள். சூழல் - இடம். 'எமக்கு வகுத்து மொழியீர்' என இயைக்க. வகுத்து மொழியில் - விவரமாகச் சொல்லுதல். இது வறும்புனம் கண்டு வருந்தும் தலைவன் கண்டவற்றொடு கவன்றுரைத்தது. ஆடுதலைப் பொழிலுக்கும் கூட்டுக. 'அவர் ஆடும் பொழில் ஆதலாலும், அவன் ஆடும் அருவி ஆதலாலும், யாம் முயங்கும் அறை ஆதலாலும் உம்பால் அவர்கள் சொல்லியே சென்றிருப்பர்' என்பது குறிப்பு.*

*918. குறிப்புரை :* *இது, தோழி, 'இனிக் களவொழுக்கம் வெளிப்பட்டுத் தீமை பயக்கும்' எனக் கூறி வரைவு கடாவத் தலைவன் மேலும் களவை நீட்டிப்பான் வேண்டி வரைவுடன்படாது மறுத்தது. "கள்வாய்" என்பது முதலாகத் தொடங்கியுரைக்க. நெருப்பு - நெகிழ்வு. அது மலர் மலருங் காலத்தைக் குறித்தது. ஆல் உருபைக் கண்ணுரு பாகத் திரித்துக் கொள்க. 'அருவிகள் தம்பால் மலர்களை வேண்டி நின்றார்க்கு மணிகளைச் சிந்தும் கயிலை' எனவும், 'கம்பர் கயிலை' எனவும் தனித்தனி இயைக்க. 'கயிலையில் இப்புனத்தில்' என உரைக்க. 'ஆர் உயிர் ஒன்றாம் இருவரை (அஃது அறியாது) விள்ள - இருவராகிப் பிரிய வைத்து மணத்துக்கு நாள் வகுப்பவரும், மணத்தோடு கூட்டியே இன்பத்தை மிகுப்பவரும் இவரே போலும்' என இயைத்துக் கொள்க. 'உடலால் இருவர் போலத் தோன்றினும் உயிர் ஒன்றேயாய் உள்ளார்க்கு மணம் என்ன வேண்டுகின்றது?' எனத் தலைவன் தங்கள் களவொழுக்கத்தின் சிறப்பைப் புலப்படுத்தி வரைவுடன்படாது மறுத்தான். 'இவரே போலும்' என்பது "இவர்போல்" எனத் தொகுத்தல் பெற்றது. 'இவர்' என்றது தோழி வழியாக ஆயத்தாரை. 'அருவிகள் மலர் வேண்டினார்க்கு மணி சிந்தும் கயிலை' என்றதனால், 'மணம் வழியாக அன்பைப் பெற வேண்டினார்க்கு, பிறப்பிலே உண்டான அன்பைத் தருவது யாம் வாழிடம்' எனத் தலைவன் இறைச்சிப் பொருள் கூறினான், அங்ஙனம்*

**919.** புனங்குழை யாதென்று மென்தினை கொய்ததும் போகலுற்ற
கனங்குழை யாள்தற் பிரிய நமக்குறும் கையறவால்
மனங்குழை யாவரும் கண்கனி பண்பல பாடுந்தொண்டர்
இனங்குழை யாத்தொழும் ஏகம்பர் இக்கயி லாயத்துள்ளே. 28

**920.** உள்ளம் பெரியரல் லாச்சிறு மானுடர் உற்றசெல்வம்
கள்ளம் பெரிய சிறுமனத் தார்க்கன்றிக் கங்கையென்னும்
வெள்ளம் பெரிய சடைத்திரு ஏகம்பர் விண்ணரணம்
தள்ளம் பெரியக்கொண் டார்தம் அடியவர் சார்வதன்றே. 29

---

*கூறுதல் தலைவர்க்கும் உரித்தாகலின்.*

*919. குறிப்புரை : "மனங் குழையா" என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. மனம் குழையா - மனம் கசிந்து. அன்பு நீர் சிந்துதல் பற்றிக் கண்களை "அருங் கண்" என்றார். கண் கனிதலாவது, நீரைச் சொரிதல். கண் கனி பண் - கண்கள் கனிதற்கு ஏதுவான இசைகள். முன்னர் மனம் குழைதல் கூறப்பட்டமையால், "குழையாத் தொழும்" என்றது, உடல் குழைந்து தொழுதலை. 'ஏகம்பரது இக்கயிலாயம்' என்க. 'புனம் குழையாது' என்று தினை கொய்தது - 'புனம் இதற்குமேல் பசுமை பெற்றுத் தழைக்க மாட்டாது' என்று அறிந்து தினைக் கதிர்களைக் குறவர்கள் கொய்தது. கணம் குழையாள் தன் பிரியவும் - கனமாகிய குழையை அணிந்த தலைவி புனத்தை விட்டுப் பிரிந்து இல்லத்தில் இருக்கச் செய்தற்கும் ஆம். (உம்மை மாற்றி யுரைக்கப்பட்டது). குறவர் தம் இயல்பிலே தம் தொழிலைச் செய்தாராயினும் அதனால், நமக்குக் கையுறவு உறும் - செயல் அறும் அளவில் துன்பம் உறா நின்றது. (இதனை அவர்கள் அறிய மாட்டார்கள்) ஆல், அசை.*

*920. குறிப்புரை : ஈற்றடியின் பாடம் பிழைபட்டு, வேறாய்க் காணப்படுகின்றது. தள் அம்பு - வில்லினின்றும் எய்யப்படுகின்ற அம்பினை. விண் அரணம் எரியக் கொண்டார் - ஆகாயத்தில் உலாவிய கோட்டைகள் (திரிபுரங்கள்) எரிந்தழியும்படி கைக் கொண்டவர். 'சிறு மானுடர் உற்ற பொருட் செல்வம் அவரைப் போலும் சிறுமனத்தை உடையவர்கட்கு அடையப்படும் பற்றுக் கோடாவதன்றித் திரிபுரத்தை எரித்தவராகிய சிவபெருமானுக்கு அடியவராயினரால் அடையப்படுவதன்று' என முடித்துக் கொள்க. "பொருட் செல்வம் பூரியார் கண்ணு முள"[1] ஆதலின் அஃது ஒன்றையே விரும்பி, அருட் செல்வத்தை விரும்பாதாரைச் "சிறுமானுடர்" எனவும், "சிறுமனத்தார்" எனவும் கூறினார். கள்ளம், இரப்பார்க்கு, 'இல்லை' எனக் கூறிக் கரக்கும் கரவு. 'சிவனடியார்க்குப் பொருட் செல்வம் செல்வமாய்த்*

---

*1. திருக்குறள் - 241*

**921.** அன்றும் பகையடர்க் கும்பரி மாவும் மதவருவிக்
குன்றும் பதாதியுந் தேருங் குலவிக் குடைநிழற்கீழ்
நின்றும் பொலியினுங் கம்பர்நன் னீறு நுதற்கிலரேல்
என்றும் அரசும் முரசும் பொலியா இருநிலத்தே. 30

---

*தோன்றாது' என்றபடி. எனவே, அதனை ஈட்டவும், காக்கவும் அவர் முயலாமை கூறப்பட்டதாம்.*

***921. குறிப்புரை :*** *அன்றும் - மாறுபடுகின்ற. பகை - பகைவர்; ஆகுபெயர். அடக்கும் - வெல்கின்ற. பரிமா - குதிரை. மத அருவிக் குன்று - யானை - பதாதி - காலாட்படை. நால்வகைப் படைகளும் இங்குக் கூறப்பட்டன. கம்பர் - ஏகம்பர். நல் நீறு - திருநீறு. நுதல் - நெற்றி. திருநீறு நெற்றியில் இல்லாதவர் சிவன்பால் அன்பில்லாதவரே. அதனால் அவர் பெற்ற செல்வம் அவர் முன்செய்த பசுபுண்ணியத்தால் கிடைத்து ஆகலானும், பசுபுண்ணியம் நிலையற்றது ஆகலானும் 'அச்செல்வம் நிலையாது' என்றார்.*

> *கூத்தாட் டவைக்குழாத் தற்றே, பெருஞ்செல்வம்*
> *போக்கு மதுவிளிந் தற்று*[1]

*என்பதில் கூத்தாட்டோடு உவமிக்கப்பட்டது பசு புண்ணியங்களே. சிவனடியார்கட்குச் சிவபுண்ணியத்தால் வரும் செல்வம் சிவபுண்ணியங்கள் நிகழ்தற் பொருட்டுச் சிவனருளால் தரப்படுவதாகலின், 'அஃது என்றும் இருநிலத்தே பொலியும்' என்பதாம்.*

> *நீறில்லா நெற்றிபாழ்*[2]

*எனவும்,*

> *நம்ப னடியவர்க்கு நல்காத் திரவியங்கள்*
> *பம்புக்காம்; பேய்க்காம்; பரத்தையர்க்காம் - வம்புக்காம்;*
> *கொள்ளைக்காம்; கள்ளுக்காம்; கோவுக்காம்; சாவுக்காம்;*
> *கள்ளர்க்காம்; தீக்காகுங் காண்*[3]

*எனவும் போந்த ஔவையார் நீதி மொழிகளையும் காண்க. நம்பன் - சிவபெருமான். பம்புக்கு - வாளாத் தொகை பண்ணிக் குவித்தற்கு. பம்புதல் - நிரப்புதல், பேய்க்கு - புதைந்து வைத்தபின் பூதம் காத்தற்கு. வம்பு - அடா வழக்கு. கொள்ளை - கூட்டக் கொள்ளைக்காரர் செயல். கள்ளர் - ஒளிந்து நின்று களவு செய்பவர். கோ - அரசன் உரியவர் இல்லாத காரணத்தாலும்,*

---

1. *திருக்குறள் - 332*
2. *நல்வழி*
3. *தனிப்பாடல்*

**922.** நிலத்திமை யோரில் தலையாய்ப் பிறந்து மறையொடங்கம்
வலத்திமைப் போதும் பிரியார் எரிவளர்த் தாலும்வெற்பன்
குலத்துமை யோர்பங்கர் கச்சியுள் ஏகம்பங் கூடித்தொழும்
நலத்தமை யாதவர் வேட்டுவர் தம்மின் நடுப்படையே. **31**

---

*புதையலாகக் கிடைத்தலாலும் சிலரது பொருள்கள் அரசனுக்கு உரியதாகும். இதனை "உறுபொருள்"* என்றார் திருவள்ளுவர். சாவுக்கு ஆம் - வலிந்து பறிக்கும் கள்வர் செய்யும் கொலைக்கு ஏதுவாம். முரசு - வெற்றி முரசு.*

*922. குறிப்புரை : நிலத்து இமையோர் - பூசுரர்; அந்தணர். தலை - தலைமை. அது குடிச் சிறப்பாம். மறை - வேதம். அங்கம் - வேதாங்கம். வலத்து - வலிமை பெற்று. 'வல்லராய்' என்றபடி. "பிரியம்" என்பதை முற்றெச்சமாக்கி அதனை, ''வளர்த்தாலும்'' என்பதனோடு முடிக்க. "வளர்த்தாலும்" என்னும் உம்மை சிறப்பு. 'குலத்து உதித்த' என ஒருசொல் வருவிக்க. ஏகம்பம் - ஏகம்பர் எழுந்தருளியிருக்கும் இடம். கூடி - அடைந்து. நலம் - நன்மை; ஞானம் அஃது அதனாலாகிய செயலைக் குறித்தது. 'நலத்துக்கண்' என ஏழாவது விரிக்க. அமையாதவர் - பொருந்தாதவர். 'வேட்டுவர்தம் படையின் நடு' என மாறிக் கூட்டுக. நடுவண் நிற்பவரை 'நடு' என்றது ஆகுபெயர். 'நிலத்து இமையோராயினும் ஏகம்பம் கூடித் தொழும் நலத்துக்கண் பொருந்தாதவர் வேட்டுவருள் தலையாய வேட்டுவர்' - என்பதாம். வைதிக அந்தணர்கள் வேள்வியிற் செய்யப்படும் கொலையை, 'கொலையன்று' என விலக்குதல், சிவபெருமானை முன்னிட்டுச் செய்யின் ஓராற்றாலேனும் அமைவுடையதாம்; அவ்வாறு செய்யாதவழி அவர் வேள்விக்கண் செய்யும் கொலைக்கும், வேட்டுவர் செய்யும் கொலைக்கும் இடையே யாதும் வேறுபாடில்லை' என்பதாம்.*

*கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்*
*புன்மை தெரிவா ரகத்து*

*என்னும் திருக்குறளின் உரையில் பரிமேலழகர் "கொலை வினையர் - என்றதனால், அத்திருக்குறளில் வேடரும், அவரோடு ஒப்பவரும் செய்யும் கொலை கடியப்பட்டதன்றி, வேள்விக்கண் செய்யப்படும் கொலை விலக்கப்பட்டிலது" என்பதுபட உரை கூறினார். அக்கருத்துச் சிவனை முன்னிட்டுச் செய்யப்படும் வேள்விக்கே ஓராற்றால் பொருந்தும்' என்பது இங்குக் கூறப்பட்டது. பரிமேலழகர் கூறிய கருத்து அவரால் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட தாகாது, வைதிக அந்தணர்களது பழமையான கருத்தே யாதலின் அது பற்றி இவ்வாசிரியர் இங்ஙனம் அருளிச் செய்தார். இதனால் திருநெறியின் முறைமை இனிது விளங்குவதாம். "தலையாய்ப் பிறந்தும்...*

---

* *திருக்குறள் - 756*

**923.** படையால் உயிர்கொன்று தின்று பசுக்களைப் போலச்செல்லும்
நடையால் அறிவின்றி நாண்சிறி தின்றி ஒகும் குலத்தில்
கடையாய்ப் பிறக்கினும் கச்சியுள் ஏகம்பத் தெங்களையாள்
உடையான் கழற்கன்ப ரேலவர் யாவர்க்கும் உத்தமரே. **32**

---

*வேட்டுவர்" என்றதனால், "பிறப்பு ஒழுக்கங் குன்றக் கெடும்"* என்றல் பொருந்தாது; பிறப்பு என்னும் பிறப்பே" - என்று பிணங்கு வாரது கூற்றும் தகர்க்கப்பட்டதாம்.*

***923. குறிப்புரை :*** *இப்பாட்டு, முன் பாட்டின்பொருட்கு மறுதலையாய பொருளை வற்புறுத்துகின்றது. படை - கொலைக் கருவி. "கொன்று தின்று" என்றது; 'கொல்லுதல், தின்னுதல் ஆகிய இரண்டினுள் ஒன்றே செய்யினும் பாதகமாயினும், இரண்டையுமே செய்து' என்றபடி. பசுக்கள், ஆறாவது அறிவில்லாமை பற்றி வந்த உவமை. 'ஆறாவது அறிவு உண்டு' என வாதிக்கின், "பிறிதின் நோய் தன் நோய்போல் போற்றாமையால்" 'அஃது இருந்தும் பயனில்லை' என்பார். "பசுக்களைப் போலச் செல்லும் நடையால் அறிவின்றி" என்றார். "மாக்களே பிறிதின் நோய் தம் நோய்போல் போற்றாது பிற உயிர்களைக் கொன்று தின்னும்" என்பது கருத்து. அறிவுளதாயினும் இக்காரணத்தால் - அறிவிலர் - என நல்லோரால் பழிக்கப்படுதல் பற்றிச் சிறிதும் நாணம் உறாமல் தாம் செய்வதே செய்வர் - என்றற்கு, "நாண் சிறிதின்றி" என்றார். 'சிறிதும்' என்னும் இழிவு சிறப்பும்மை தொகுக்கப் பட்டது. 'நாண் இன்மையும் மாக்களது இயல்பே' என்றபடி. 'இக்காரணங் களால் இகழப்படும் குலம்' என்றற்கு "நகும் குலம்" என்றும், 'அவற்றுள்ளும் கடைப்பட்ட குலம்' "கடை யாய்ப் பிறக்கினும்" என்றும் கூறினார். யாவர்க்கும் உத்தமர் - யாவரினும் மேலானவர். "அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே" என அருளிச்செய்தது காண்க. இறுதிக்கண் "கடையாய்ப் பிறக்கினும்" என உம்மை கொடுத்து ஓதியதனால், 'மேற் கூறப்பட்டன வெல்லாம் கடியப்படாதன அல்ல; கடியத் தக்கனவே' என்பதும், 'அவற்றைக் கடிந்து, ஆளுடையான் கழற்கு அன்பாராதல் பொன்மலர் நாற்ற முடைத்தாய வழிப் பெரிதும் பயன்படுதல் போலப் பயனுடையராகச் செய்யும்' என்பதும், 'அவற்றைக் கடியாது ஆளுடையான் கழற்கு அன்பராயின் பொன்மலர் நாற்றம் உடைத்தாகாதாயினும் பொலிவுடைத்தா மாறுபோல ஆவர்' என்பதும் கூறியவாறாம். "ஆ உரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்" என அப்பரும் உம்மை கொடுத்தே ஓதியருளினமை காண்க. மற்றும்,*

*கொல்வா ரேனும், குணம்பல நன்மைகள்*
*இல்லா ரேனும் இயம்புவ ராயிடின்*

---

* *திருக்குறள் - 134*

**924.** உத்துங்க யானை உரியார் விரலால் அரக்கன்சென்னி
பத்துங்கை யான இருபதுஞ் சோர்தர வைத்திலயம்
ஒத்துங்கை யாலவன் பாடக் கயிலையின் ஊடுகைவாள்
எத்துங்கை யானென் றுகந்தளித் தார்கச்சி ஏகம்பரே. 33

**925.** அம்பரம் கால்அனல் நீர்நிலம் திங்கள் அருக்கன்அணு
வம்பரங் கொள்வதொர் வேழத் துரியவன் தன்னுருவாம்
எம்பரன் கச்சியுள் ஏகம்பத் தானிடை யாதடைவான்
நம்பரன் தன்னடி யாரறி வார்க்கு நற்றுணையே. 34

---

*எல்லாத் தீங்கையும் நீங்குவ ரென்பரால்*
*நல்லார் நாமம் நமச்சி வாயவே*

*குலமில ராயினுங் குலத்திற் கேற்பதோர்*
*நலம் மிகக் கொடுப்பது நமச்சி வாயவே.*

*என்றாற்போல வரும் இடங்களிலும் உம்மை கொடுத்தே ஓதியருளுதல் காண்க.*

***924. குறிப்புரை :*** *உத்துங்கம் - உயரம். உரி - தோல். வைத்து - அழுத்தி இலயம் - தாளம். 'ஒற்றும், எற்றும்' என்பன எதுகை நோக்கி, "ஒத்தும், எத்தும்" எனத் திரிந்து நின்றன. கையால் பாடியது, கைவிரலால் வீணையின் நரம்பைத் தெறிந்து இசையை எழுப்பியது. கயிலையின் ஊடு அளித்தார்' என்க, "ஊடு" என்பது ஏழாவதன் பொருள்பட வந்தது "என்று" என்பதை, 'என்ன' எனத் திரித்து, 'என்று ஆகும்படி' என உரைக்க. எற்றுதல், இங்கு வெட்டி அழித்தலைக் குறித்தது. எனவே, "எற்றும்" என்பது 'அழிக்கும்' என்றதாய், அத்தகைய ஆற்றல் பெற்றமையை உணர்த்திற்று. 'யாவரையும் வெல்லும் வாட்படையை அளித்தருளினான்' என்றபடி. 'பிழை பற்றி ஒறுப்பினும், வழிபட்ட பின் அருள்புரிபவர் கச்சி ஏகம்பர்' என்றவாறு.*

***925. குறிப்புரை :*** *"வம்பரம்.... வேழத்து உரியவன், அம்பரம்... அணு தன் உருவாம் எம் பரன், கச்சியுள் ஏகம்பத்தான், தன் அடியார் இடையாது அடைவான். நம் பரன்' என இயைத்து, இவை அனைத்தையும் எழுவாயாக்கி, "அறிவார்க்கு நறுந் துணை" என முடிக்க. முதலில் அட்ட மூர்த்தங்கள் சொல்லப்பட்டன. அம்பரம் - வான். அணு - ஆன்மா. வம்பர் தீயோர்; அசுரர், அம் கொள் வேழம் - (அவர்கள்) அழகிதாகக் கொண்ட யானை. 'கயாசுரன்' என்றபடி. உரி - தோல் "என் பரன்" என்பதில் "எம்" என்றது அடியார்களையும், "நம்பரன்" என்பதில் "நம்" என்றது அனைத்துயிர் களையுமாகும். இடையாது - தளர்ச்சியடையாதபடி. அடைவான் - முன்வந்து*

**926.** துணைத்தா மரையடி யும்பவ ளத்திரள் நன்குறங்கும்
பணைத்தோள் அகலமுங் கண்டத்து நீலமும் அண்டத்துமின்
பிணைத்தா லனசடை யுந்திரு முக்கணும் பெண்ணொர்பக்கத்(து)
அணைத்தார் எழிற்கம்பர் எங்கள் பிரானார்க்(கு) அழகியவே. **35**

**927.** அழகறி விற்பெரி தாகிய ஏகம்பர் அத்தர்கொற்றம்
பழகறி விற்பெரி யோர்தமைப் பற்றலர் பற்றுமன்பின்
குழகறி வேற்பினுள் ஒன்றறி யாரறி யாமைத்தெய்வம்
கிழகெறி யப்பட் டுலந்தார் உலகிற் கிடந்தனரே. **36**

---

*காப்பான். அறிவார்க்கு - தன்னை மெய்ப்பொருளாக அறிபவர்க்கு. நறுந்துணை - நல்ல துணை; பிறவிக் கடலினின்றும் கைகொடுத்து முத்திக் கரையில் ஏற்றும் துணை.*

***926. குறிப்புரை :*** *'எங்கள் பிரானார்க்கு, துணைத் தாமரை அடியும்.... முக்கணும் அழகிய' என்க. துணை - இணை. குறங்கு - துடை. பணை - பருத்த "தோள்" என்பதிலும் எண்ணும்மை விரிக்க. அகலம் - மார்பு. 'மின்னலை அண்டத்தில் (வானத்தில்) பிணைத்தாலன்ன சடை' என்க. திருச்சென்னி உயரத்தில் இருத்தலால் "அண்டத்தில் பிணைத்தாலன்ன" என்றார். அழகிய - மிக அழகாய் உள்ளன. அழகு - தனிமையிலும், தொகைமையிலும் தோன்றுவது.*

***927. குறிப்புரை :*** *"அழகு அறிவினும் பெரிதாகிய" என்றது அழகினைப் புகழ்ந்த புகழுரை. இறைவர் அறிவிற் பெரியர் (முற்றறிவுடையவர்) என்பது நன்கறியப்பட்டதாகலின், 'அஃதேபோல் அழகிலும் பெரியவர் என்பது உணர்த்தியவாறு. "பெரிதாகிய" என்னும் பெயரெச்சம் "ஏகம்பர்" என்னும் இடப்பெயர் கொண்டது. என்னை? 'அவளது அழகு ஆடவர் கண்ணைக் கவர்கின்றது' என்றலேயன்றி, 'அவள்கண்ணதாகிய அழகு ஆடவர் கண்ணைக் கவர்கின்றது' என்றலும் வழக்காதலின், அத்தர் - தலைவர். கொற்றம் - வெற்றி. அஃது அதனால் உண்டாகிய "பொருள்சேர் புகழின்" மேல் நின்றது. 'கொற்றத்தின்கண்' என ஏழாவது விரிக்க. 'பழகு பெரியோர்' என இயைக்க. 'அன்பாகிய குழகினையுடைய அறிவு' என்க. இன், வேண்டாவழிச் சாரியை. குழகு - அழகு. 'அறிவுக்கு அழகு அன்பு' என்றபடி. ஏற்பு - ஏற்கும் வழிகள். 'இறைவனிடத்து அன்பை ஏற்கும் வழிகள் பல உளவாக அவற்றினுள் ஒன்றையும் அறியார்' என்றபடி. 'ஒன்றும்' என்னும் இழிவு சிறப்பும்மை தொகுக்கப்பட்டது. 'அறியாமையால்' என ஆல் உருபு விரிக்க. 'கீழ்' எனப் பொருள் தருவதாகிய 'கிழக்கு' என்பதில் ககர ஒற்று எதுகை நோக்கிக் குறைக்கப்பட்டது. உலந்தார் - இறந்தார். 'பயன் இன்றி இறந்தார்' என்பதாம்.*

**928.** கிடக்கும் ஒருபால் இரைக்கின்ற பாம்பொரு பால்மதியம்
தொடக்குண் டிலங்கும் மலங்குந் திரைக்கங்கை சூடுங்கொன்றை
வடக்குண்டு கட்டத் தலைமாலை வாளால் மலைந்தவெம்போர்
கடக்கும் விடைத்திரு ஏகம்பர் கற்றைச் சடைமுடியே. **37**

**929.** கற்றைப் பவளச் சடைவலம் பூக்கமழ் கொன்றையந்தார்
முற்றுற் றிலாமதி யின்கொழுந் தேகம்பர் மொய்குழலாம்
மற்றைத் திசையின் மணிப்பொற் கொழுந்தத் தரங்கழுநீர்
தெற்றிப் பொலிகின்ற சூட்டழ காகித் திகழ்தருமே. **38**

---

*'பற்றலரும், அறியாரும் ஆகியோர் அறியாமையால் சிவநெறியினின்றும் அப்பால் - சிறு தெய்வங்கள் பால் தூக்கியெறியப்பட்டுப் பயன் இன்றி உலகில் உலந்துகிடந்தார்' என வினை முடிக்க. "உலந்தார்" முற்றெச்சம்.*

***928. குறிப்புரை :*** *"வாளால் மலைந்த" என்பது முதலாகத் தொடங்கி, "சடைமுடிக்கண்" என ஏழாவது விரித்து, 'ஒருபால் பாம்பு கிடக்கும்; ஒருபால் மதியம் இலங்கும்; கங்கை அலங்கும்; கொன்றை வடமும், தலைமாலையும் சூடப்பட்டிருக்கும்' என முடிக்க. தொடக்குண்டு - கீழே விழாமல் சிக்குண்டு. 'பாம்பும், மதியும் பகைப் பொருளா யினும் அவரது முடியில் பகையின்றி வாழும்' என்பது கருத்து. அலங்கும் - அலையும். 'வடங் குண்டு' என்பது, எதுகை நோக்கி வலிந்து நின்றது. குண்டு கட்டு அத் தலை - ஆழ்ந்த கண்களையுடைய அந்தத் தலை; 'உலந்தார் தலை' என்றபடி. தசை முதலாயின இன்மையால் கண்கள் ஆழ்ந்து தோன்றுவ வாயின. "கட்டு" என்றது சாதியொருமை. சுட்டு, உயிரின்மையைக் குறித்தது. 'குண்டு கட்டுத் தலை' எனப் பாடம் ஓதலும் ஆம். 'வாளால் மலை வெம்போரும்' எனச் சிறப்பும்மை விரிக்க. கடக்கும் - வெல்லும். 'போர் விடை' என்றபடி.*

***929. குறிப்புரை :*** *"ஏகம்பர்" என்பதை "வலம்" என்பதற்கு முன்னே கூட்டி, அத்தொடரை முதற்கண் கொள்க. 'ஏகம்பர் வலம் கற்றைப் பவளச் சடையும் கமழ் கொன்றைப் பூ அம் தாரும், முற்றுற்றிலா மதியின் கொழுந்தும், மற்றைத் திசையில் (இடப் பக்கத்தில்) மொய் குழல் ஆம் - அடர்ந்த கூந்தலிலே பொருந்திய; மணிப்பொற் கொழுந்து - மணிகளாலும், பொன்னாலும் இயன்ற தளிர்களும், கழுநீர் தெற்றி அத்தரம் பொலிகின்ற - குவளை மலரை நெருங்க வைத்து அந்த அளவு சிறப்பாக விளங்குகின்ற. சூட்டு - தலைவி சூட்டும் அழகாகித் திகழ்தரும் என உரைக்க. அர்த்த நாரீசுர வடிவத்தைப் புகழ்ந்தவாறு.*

***930. குறிப்புரை :*** *"செல்வக் கம்பர்" என்பதை முதலிற் கொண்டு, 'அணங்குக்கு இடப்பாலது மதர்த்து நீலம் கனி கருமலர்க்கண்ணும், மொய்*

**930.** தருமருட் டன்மை வலப்பாற் கமலக்கண் நெற்றியின்மேல்
திருமலர்க் கண்பிள விற்றிக ழுந்தழல் செல்வக்கம்பர்
கருமலர்க் கண்ணிடப் பாலது நீலங் கனிமதர்த்து
வருநுதற் பொட்டணங் குக்குயர்ந் தோங்கும் மலர்க்குழலே. **39**

**931.** மலர்ந்த படத்துச்சி ஐந்தினுஞ் செஞ்சுடர் மாமணிவிட்(டு)
அலர்ந்த மணிக்குண் டலம்வலக் காதினில் ஆடிவரும்
நலந்திரு நீள்வயி ரம்வெயிற் பாய நகுமணிகள்
கலந்தசெம் பொன்மக ரக்குழை ஏகம்பர் காதிடமே. **40**

---

*குழலும்' எனவும் 'நுதற் பொட்டும் (திகழும்)' எனவும் இயைத்துக் கொள்க. "அருள் தன்மை" என்பது, எல்லா உயிர்கள் மேலும் கொள்ளும் அருள் தன்மைக்கு அடையாளமாகிய சடையைக் குறித்தது. "அருள் தன்மையை உடைய வலப்பால்" என உடம்பொடு புணர்த்துக் கூறியதால், வலப்பால் சடையுண்மை பெறப்பட்டது. கமலக் கண் - செந்தாமரை மலர்போலும் கண். இது செங்கண் ஆதலைக் குறித்தது. 'நெற்றியின்மேல் உள்ள கண்' என இயைக்க. பிறவின் - (கீழிருந்து மேற் செல்லும்) கீற்றுப் போல்வதாய்த் தழல் திகழும் என்க. அணங்குக்கு இடப்பாலது - உமைக்கு உரியதாகிய இடப் பக்கத்தில் உள்ளது. மதர்த்து நீலம் கனி கருமலர்க் கண்ட களிப்புடையதாய் நீலம் மிகுந்த நீலமலர் போலும் கண்ணும், மலர்க் குழலும் மற்றும் நுதலிற் பொட்டும் திகழும் என்க. முன்னர்ப் போந்த ''திகழும்'' என்பதை பொட்டிற்கும் கூட்டுக. 'இடப்பாலது' என்பதை 'கண், குழல்' என்பவற்றோடு தனித்தனி இயைக்க. இப்பாட்டின் கருத்தும் முன்பாட்டின் கருத்தேயாம்.*

***931. குறிப்புரை :*** *"வலக் காதினில்" என்றது போல, "காதிடம்" என்பதை மாற்றி, 'இடக் காதினில்' என விரித்துக் கொள்க. படம், பாம்பின் படம். "வயிரம் வெயிற் பாய" எனச் சினைவினை முதல்மேல் நின்றது. நகும் - ஒளிவீசுகின்ற "குண்டலம், மகரக்குழை" என்னும் இரண்டிற்கும் தனித் தனி, 'உள்ளது' பயனிலை அவாய் நிலையாய் நின்றன. 'ஆடி வரும் நலம்' என இயையும். மகரக் குழை மகளிர் அணிவதாதலை, "மகரப் பகுவாய் தாழ மண்ணுறுத்து" என்னும் திருமுருகாற்றுப்படையாலும்* உணர்க. "நலத்திரு" என்பது மெலிந்து நின்றது.*

***932. குறிப்புரை :*** *"வலம்" என்பதை முதலிலும், "இடம்" என்பதை, "தாதலைக்கும்" என்பதற்கு முன்னும் கூட்டுக. காது குண்டலத்தால் தோளை அலைக்கின்றது. பவளக் குன்றம், பொன்மலை இவற்றின் பின், 'போல' என உவம உருபு விரிக்க. போது - பகலவன். அவனை அலைத்தலாவது, சுற்றிவரச்*

---

** அடி - 25.*

**932.** காதலைக் கும்வலத் தோள்பவ ளக்குன்றம் அங்குயர்ந்து
போதலைக் கும்பனிப் பொன்மலை நீற்றின் பொலியகலம்
தாதலைக் குங்குழல் சேர்பணைத் தோள்நறுஞ் சாந்தணிந்து
சூதலைக் கும்முலை மார்பிடம் ஏகம்பர் சுந்தரமே. **41**

**933.** தரம்பொற் பழியும் உலகட்டி எய்த்துத் தரந்தளரா
உரம்பொற் புடைய திருவயி றாம்வலம் உம்பர்மும்மைப்
புரம்பொற் பழித்தகம் பர்க்குத் தரத்திடு பூண்முலையும்
நிரம்பப் பொறாது தளரிள வஞ்சியும் நேர்வுடைத்தே. **42**

---

*செய்தல். 'போது அலைக்கும் பொன்மலை' என்க. பனி, நீற்றுக்கு உவமை, "உயர்ந்து" என்பதன் பின் 'நிற்கும்' என்பதும், 'அகலம்' என்பதன்பின் 'விளங்கும்' என்பதும் எஞ்சி நின்றன. அகலம் - மார்பு. "பொன்மலை" என்றது அதன் அகலத்தை. பணை - மூங்கில். "அணிந்து" என்பதன்பின் 'விளங்க' என்பது வருவிக்க. சூது - சூதாடு கருவி. 'முலை சூது அலைக்கும்' என்க. அலைத்தல் - வருத்துதல். சுந்தரம் - அழகு. சுந்தரம் 'ஏகம்பர் சுந்தரம், வலத் தோள் பவளக் குன்றம்போல உயர்ந்து விளங்கும்; வல மார்பு பனிப் பொன்மலை அகலம்போல நீற்றின் விளங்கும். மூங்கில் போலும் இடத்தோள் சாந்தணிந்து விளங்கும்; இடமார்பு முலை சூது அலைக்கும்' என்பதாம்.*

***933. குறிப்புரை :*** *'உம்பர் மும்மைப்புரம் பொற்பு அழித்த கம்பர்க்கு வலம்' என மாற்றி, முதற்கண் வைக்க. உம்பர்ப் புரம் - வானத்தில் உலாவும் கோட்டைகள். தரம் - தகுதி. பொற்பு அழிதல் - அழகு அழிதல். 'அட்டு' என்பது, 'அட்டி' எனத் திரித்து நின்றது. அட்டு - அழித்து. 'எய்த்துத் தளரா உரம்' என்க. உரம் - மார்பு. "தரம் தளரா" எனக் குணவினை குணிமேல் நின்றது. 'உரம் வயிறாம்' என்க. வயிறாதலாவது, வயிறோடு ஒப்பதாம். உத்தரத்து - இடப் பக்கத்தில். இடு பூண் - இடப்பட்ட அணிகலங்களை யுடைய. நிரம்பப் பொறுத்தல் - கடைபோகத் தாங்குதல். வஞ்சி - கொடி. இஃது உவம ஆகுபெயராய், இடையைக் குறித்தது. 'உத்தரத்தில் முலையும், வஞ்சியும் நேர்தலை உடைத்து அவரது அழகு' என ஒரு சொல் வருவித்து முடிக்க என்க. நேர்தல் - பொருந்துதல்.*

***934. குறிப்புரை :*** *"ஆடை" என்பது, 'துணி' என்னும் அளவாய் நின்றது. ஈற்றடியை முதலிற் கூட்டி, அதன்பின் "வலம்" என்பதில் 'வலத்தின்கண்' என ஏழாவது விரித்துச் சேர்க்க. புலி - புலித் தோல். உரகம் - பாம்பு. வீக்கி - இறுகக் கட்டி. கட்டி - கட்டப்பட்டு. முஞ்சி வடம் - தருப்பைக் கயிறு. மற்றை அல்குல் - இடப்பக்கத்தில் உள்ள பிருட்டத்தில். காஞ்சி - பலவாகிய மணிவடங்களின் தொங்கல்கள். 'காஞ்சியின்கண் தொடுத்த' என்க. அரசிலை - அரசிலை வடிவாகச் செய்து கோக்கப்பட்டவை. "கோவணம்" என்பதன்*

934. உடைப்புலி ஆடையின் மேலுர கக்கச்சு வீக்கிமுஞ்சி
வடத்தொரு கோவணந் தோன்றும் அரைவலம் மற்றையல்குல்
தொடக்குறு காஞ்சித் தொடுத்த அரசிலை தூநுண்துகில்
அடல்பொலி ஏறுடை ஏகம்பம் மேய அடிகளுக்கே. 43

935. அடிவலப் பாலது செந்தா மரையொத் ததிர்கழல்சூழ்ந்
திடிகுரற் கூற்றின் எருத்திரு வைத்த திளந்தளிரின்
அடியிடப் பாலது பஞ்சுற அஞ்சுஞ் சிலம்பணிந்த
வடிவுடைத் தார்கச்சி ஏகம்பம் மேய வரதருக்கே. 44

936. தருக்கவற் றான்மிக்க முப்புரம் எய்தயன் தன்தலையை
நெருக்கவற் றோட மழுவாள் விசைத்தது நெற்கனென்றும்
பருக்கவற் றாங்கச்சி ஏகம்பர் அத்தர்தம் பாம்புகளின்
திருக்கவற் றாலிட் டருளும் கடகத் திருக்கரமே. 45

---

*பின் உள்ள "தோன்றும்" என்பதை, "துகில்" என்பதன் பின்னும் கூட்டுக.*

***935. குறிப்புரை :*** *"கச்சி ஏகம்பம் மேய வரதருக்கு வலப்பாலது ஆகிய அடி. கழல் சூழ்ந்து, கூற்றின் எறாத்து இற வைத்தது; இடப்பாலது ஆகிய அடி பஞ்சு உற இளந்தளிரின் அஞ்சும்; மற்றும் சிலம்பு அணிந்த வடிவுடைத்து" என இயைத்துக் கொள்க. அதிர் கழல் - ஒலிக்கின்ற வீரக்கழல். சூழ்ந்து - சூழப்பட்டு. இடி குரல் - இடிக்கின்ற குரல். எருத்து - பிடரி. இற - ஒடியும்படி. "வைத்தது" எனச் செயப்படுபொருள் வினை முதல்போலக் கூறப்பட்டது. வடிவு - அழகு. ஆர் கச்சி - பல வளங்களும் நிறைந்த கச்சி, வரதர் - வரத்தைக் கொடுப்பவர். "கற்றைப் பவளச் சடை" என்னும் பாட்டு முதலாக இதுகாறும் 7 பாடல்களில் இறைவரது மாதொரு பாதி வடிவமே புகழப்பட்டது.*

***936. குறிப்புரை :*** *'திருக்கரம் முப்புரம் எய்து, மழு வாள் விசைத்தது' என வினை முடிக்க. தருக்கிற்கு ஏதுவாம் பொருள்களின் பன்மை பற்றித் தருக்கினை, "தருக்கு அவற்றால்" எனப் பன்மையாற் கூறினார். "தலை ஐ" என்பதை, 'ஐந்தலை' என மாற்றிக்கொள்க. 'நெருக்கு அவற்றினின்றும் ஓட' என ஐந்தாவது விரித்து, "ஓட" என்பதற்கு, 'சில' என்னும் வினை முதல் வருவித்துக் கொள்க. 'தக்கன் வேள்வியில், பிரமனும் தலை வெட்டப்பட்டான்' என வரலாறு உண்டு.*

*''அரி அயன் தலை வெட்டி வட்டாடினார்'' என்னும் அப்பர் திருமொழியில் அரியது தலையும் வெட்டப்பட்டதாக வந்துள்ளது. தக்கன் வேள்விப் பொழுதில் அயன் ஐந்தலை யுடன் இருந்ததாகக் கொள்க. அன்றி,*

**937.** கரத்தத் தமருகத் தோசை கடுத்தண்ட மீபிளப்ப
அரத்தத்த பாதம் நெரித்திட் டவனி தலம்நெரியத்
தரத்தத் திசைகளுக் கப்புறம் போர்ப்பச் சடைவிரித்து
வரத்தைத் தருகம்பர் எல்லியும் ஆடுவர் மாநடமே. **46**

**938.** நடனம் பிரானுகந் துய்யக்கொண் டானென்று நான்மறையோர்
உடன்வந்து மூவா யிரவர் இறைஞ்சி நிறைந்தஅன்பின்
கடனன்றி மற்றறி யாத்தில்லை அம்பலங் காளத்தியாம்
இடமெம் பிரான்கச்சி ஏகம்பம் மேயாற் கினியனவே. **47**

---

*'ஐ - அழகு' எனினும் ஆம். மழு வாள் - மழுவாகிய படைக்கலம். விசைத்தது - வீசிற்று. நெற்கள் - நெற்பயிர்கள். 'பருப்பிக்க' என்பதில் பிறவினை விகுதி தொகுக்கப்பட்டு, "பருக்க" என வந்தது. அன்றி, 'பருத்தற்கு ஏதுவாய் வலியுடைத்து' எனினும் ஆம். 'ஏகம்பராகிய அத்தர்' என்க. அத்தர் - அப்பர். திருக்கு - முறுக்கு. 'பாம்புகளின் திருக்கு அவற்றால் ஆக்கி' என ஒரு சொல் வருவித்துக் கொள்க. கடகம் - தோள்வளை. மழுவை வீசும் வலிமை தோளுக்கு ஆதல் பற்றிக் கடகத்தையே கூறினார்.*

***937. குறிப்புரை :*** *'வரத்தைத் தரு கம்பர் தமருகத்து ஓசை அண்ட மீப் பிளப்ப, பாதம் அவனி தலம் நெரிய நெரித்திட்டு, திசைகளுக்கு அப்புறம் போர்ப்பச் சடை விரித்து எல்லியும் மா நடம் ஆடுவர்' என இயைத்து முடிக்க. அவ்வோசை - தமருகத்தினின்றும் எழுந்த அந்த ஓசை. கடுத்து - மிகுந்து. மீ - மேலிடம். அரத்தம் - சிவப்பு. அரத்தத்தை - சிவந்த நிறத்தை யுடைய. அவனி தலம் - பூ தலம். 'தரத்து ஆக' என ஒரு சொல் வருவிக்க. தாம் - மேன்மை. எல்லி - இரவு. 'பகலே அன்றி இரவும்' என உம்மை இறந்தது தழுவிற்று. எனவே, 'எப்பொழுதும்' என்றதாம். திருநடனத்தை வியந்தவாறு.*

***938. குறிப்புரை :*** *'கச்சி ஏகம்பம் மேயாற்கு இனியனவான இடம் மூவாயிரவர் இறைஞ்சி, (காரணம்) அன்பு அன்றி மற்று அறியாத் தில்லையம்பலமும், (அத்தன்மைத்தாகிய) காளத்தியுமே' என்க. 'நம் பிரான் (உலகம்) உய்ய நடன் உகந்து கொண்டான் என்று இறைஞ்சி' என இயைக்க. 'நம் பெருமான் உலகம் உய்ய நடனம் ஆடுதற்கு இத் தில்லையம்பலத்தையே இடமாக உகந்து கொண்டான்' என்று அவ்வருளை நினைந்து மூவாயிரவர், பிறிது காரணம் இன்றி, அன்பே காரணமாக அப்பெருமானை இறைஞ்சு கின்றனர் என்றபடி. உலக நலம் கருதினாராயினும் அது தந்நலம் கருதல் அன்மையின் 'அன்பே காரணமாக' என்றார். கண்ணப்ப நாயனாரது வழிபாட்டிற்கு அன்பன்றிப் பிறிது காரணம் இல்லாமை உலகம் அறிந்ததாகலின் அதனை எடுத்தோதாது, குறிப்பால் தோன்ற வைத்து, வாளா,*

**939.** இனியவர் இன்னார் அவரையொப் பார்பிறர் என்னவொண்ணாத்
தனியவர் தையல் உடனாம் உருவர் அறம்பணித்த
முனியவர் ஏறும் உகந்தமுக் கண்ணவர் சண்டியன்புக்
கினியவர் காய்மழு வாட்படை யார்கச்சி ஏகம்பரே. **48**

---

*"காளத்தி" என்றார். 'அம்பலமும், காளத்தியும்' என எண்ணும்மை விரிக்க. 'உமை யம்மை வழிபாட்டிற்கு அன்பன்றி வேறு காரணம் உண்டு கொலோ' என்னும் ஐயத்திற்கே இடம் இல்லாமையால், அங்ஙனம் அன்பே காரணமாக "என்றும் ஏத்தி வழிபடப்படும்"[1] பெருமான் கச்சி ஏகம்பப் பெருமான் என்பது உடம்படு புணர்த்தலால் தோன்ற, "ஏகம்பம் மேயாற்கு இனியனவான இடம் அன்பின் கடன் அன்றி மற்று அறியாத தில்லையம்பலமும், காளத்தியுமே" என்றார். இதனால் பயன் கருதாது செய்யும் நிட்காமிய வழிபாடே சிறப்புடைத்தாதல் குறித்தவாறு. நடன் - நடம். மகரத்திற்கு னகரம் போலி.*

***939. குறிப்புரை :*** *"கச்சி ஏகம்பர்" என்பதை முதலிற் கூட்டி, அதன்பின், "அவரை ஒப்பார் பிறர்" என்பதையும் சேர்க்க "இன்னார்" என்பது, 'இன்ன சிறப்பியல்பை உடையவர்' என்னும் பொருட்டாய், ஒருவரையே வரைந்துணர்த்தும் குறிப்பு வினைப்பெயர். தனியர் - ஒப்பற்றவர். "முனியவர்" என்பது, 'முனிவர்' என்பதில் ஓர் அகரம் விரிந்து நின்ற பெயர். சண்டி - சண்டேசுர நாயனார். "மழுவாள்" என்பது ஒரு பெயராய், "படை" என்பதனோடு இருபெயரொட்டாய்த் தொக்கது. "இடைச்சொற் கிளவி"[2] என்பதுபோல, "தையல் உடனாம் உருவர்" என்றதனால், 'அருள் உடையர்' என்பதும், "அறம் பணித்த முனியவர்" என்பதனால் "யாவர்க்கும் முதல் ஆசிரியர்" என்பதும், "ஏறும் உகந்தவர்" என்பதனால், தாம்பணித்த அறத்தை நடத்துபவரும் தாமே" என்பதும், (ஏறு - அறவிடை. "ஏறும்" என்னும் சிறப்பும்மை "உகந்தவர்" என்பதனோடே இயையும். "உகந்த" என்றாராயினும் 'உகந்தவர்' என்பதே கருத்து என்க). "முக்கண்ணர்" என்பதனால், 'உலகிற்கு முச்சுடராயினும் ஒளி வழங்குபவர்' என்பதும், "சண்டீசர் அன்புக்கு இனியவர்" என்பதனால், 'தம்மையே உண்மை உறவாகக் கொள்பவர்க்கு இனியர்' என்பதும் குறிக்கப்பட்டன. "மழுவாட் படையார்" என்பது சண்டிக்கு உதவியவாற்றைக் குறித்தது.*

***940. குறிப்புரை :*** *"இத்தனை" என்பன மூன்றும், 'மிகுதி' என்னும் பொருளையே குறித்தன. தனை - தன்னை; இது பன்மை யொருமை மயக்கம். வரவு - வருகை. "எங்கு அறிந்தேன்" என்றது, 'எங்கும் அறிந்திலேன்' என்னும் பொருளைக் குறிப்பால் உணர்த்தின. அவர் மகனார் முருகப் பெருமான்.*

---

*1. திருமுறை - 7.6.11.*
*2. தொல் - சொல் - பெயரியல்*

940. பரவித் தனைநினை யக்கச்சி ஏகம்பர் பண்ணும்மையல்
வரவித் தனைஎன எங்கறிந் தேன்முன் அவர்மகனார்
புரவித் தனையடிக் கக்கொடி தாய்விடி யாவிரவில்
அரவித் தனையுங்கொண் டார்மட வார்முன்றில் ஆட்டிடவே. 49

941. இடவம் கறுக்கெனப் பாயுமுஞ் சென்னி நகுதலைகண்
டிடவஞ் சுவர்மட வாரிரி கின்றனர் ஏகம்பத்தீர்
படமஞ்சு வாயது நாகம் இரைக்கும் அதனுக்குமுற்
படவஞ் சுவரெங்ங னேபலி வந்திடும் பாங்குகளே. 50

---

*அவர் புரவு - அவரால் புரக்கப்படுவதொன்று; அஃது அவர் கொடியாகிய கோழி. அடித்தல் - அழைத்தல். அழித்தலை. 'அடித்துக் கொண்டேன்' என்றல் வழக்கு. அழைத்தல் பகலவனை. 'இரவில் மடவார் முன்றிலில் ஆட்டிட அரவு இத்தனையும் கொண்டார்' என்க. 'ஆடும் பாம்பை ஆட்டுவார், இனிய இசை வழியாக ஆட்டுவர் ஆதலின், ஏகம்பர் அரவம் பூண்டதும் அவற்றை ஆட்டுவார்போல இசையால் மடவாரை மயக்குதற்கே' என, அவர்பால் மையல் கொண்டாள் ஒருத்தி மயங்கிக் கூறினாள். அவர் ஆடுவது இரவிலே யாகலின், 'ஆட்டுவதும் இரவிலே' என்றாள்.*

***941. குறிப்புரை :*** *'பிச்சைக்குச் செல்லும் பொழுது முருட்டுக் காளைமேல் ஏறி, வெற்றெலும்பாய் உள்ள தலையை அணிந்து, ஐந்தலை நாகத்தை மேலெல்லாம் பூண்டு கொண்டு சென்றால் பெண்கள் எப்படி அஞ்சாது வந்து இடுவர்' என்பது இதன் திரண்ட பொருள். இடவம் - இடபம். 'கறுக்கென' என்பது காலை. விரைவு உணர்த்துவதோர் 'என' என் எச்சம். இரிகின்றனர் - ஓடுகின்றார்கள். 'படத்தின்கண் அஞ்சு வாய்களை உடைய தாகிய நாகம்' என்க. 'அதனுக்கு அஞ்சுவர்' என இயையும். பாங்குகள் - தன்மைகள். 'எங்ஙன் உளவாகும்' என ஒரு சொல் வருவித்து முடிக்க.*

***942. குறிப்புரை :*** *இது திருவேகம்பரது பலியேல் கோலத்தைக் கண்டு மையல் உற்றாள் ஒருத்தியது கூற்று. "கொண்டீர்" என்பன விளிகள். பாங்கு உடை கோள் புலி அதள் கொண்டீர் - பக்கங்களில் பொருந்தும் உடையைக் கொள்ளுதலைப் புலித் தோலாகக் கொண்டவரே. பாரிடங்கள் - பூதங்கள். தாம், அசை. குடை கொள்ள - குடையை ஏந்திப் பிடிக்க. தடக் கமலம் - பொய்கையில் உள்ள தாமரைக் கொடி. பூங் குடை கொள்ள - பூவாகிய குடையைப் பிடிக்க. இஃது உருவகம். 'பலிகொள்ள வந்தீர்போல வந்தீர்; (ஆயினும் உண்மை அதுவன்று;) இடை கொள் அக்கலை கொள்ளவே ஈங்கு வந்தீர்' என்க. கலை - உடை 'கலைகொள்ளவே' எனப் பிரிநிலை ஏகாரம் விரிக்க, இன்று இடைகும் - இன்று யாம் உமக்குத் தோற்கின்றோம். 'ஆதலின்*

**942.** பாங்குடை கோள்புலி யின்னதள் கொண்டீர்நும் பாரிடங்கள்
தாங்குடை கொள்ளப் பலிகொள்ள வந்தீர் தடக்கமலம்
பூங்குடை கொள்ளப் புனற்கச்சி ஏகம்பம் கோயில்கொண்டீர்
ஈங்கிடை கொள்ளக் கலைகொள்ள வந்தீர் இடைகுமின்றே. **51**

**943.** இடைக்குமின் தோற்கும் இணைமுலை யாய்முதி யார்கள் தஞ்சொல்
கடைக்கண்நன் றாங்கச்சி ஏகம்பர் ஐயங் கொளக்கடவும்
விடைக்குமுன் தோற்றநில் லேநின் றினியிந்த மொய்குழலார்
கிடைக்குமுன் தோற்றனர் சங்கிது வோதங் கிறித்துவமே. **52**

---

*திருவுளம் இரங்கிக் கலையினைத் தாரும்' என்பது குறிப்பெச்சம். 'தடங்கமலம், இடைக்கும்' என்பன பாடம் அல்ல.*

***943. குறிப்புரை :*** *இது, கைக்கிளைக்கண் தலைவி தலைவனை எய்த மாட்டாமையைத் தோழி கூறி அவளை விலக்கியது. இஃது அகப் புறக் கைக்கிளையாகாது, பாடாணிடத்து வரும் புறப்புறக் கைக்கிளையாதலின் இதன்கண் இன்னோரன்ன துறைகள் வரப் பெறும் என்க. மின் - மின்னல். முதியார்கள்தம் சொல் கடைக்கண் நன்றாம் - பெரியோர்கள் சொல்லும் சொல்லின் பயன் காரிய முடிவில் விளங்கும் (தொடக்கத்தில் தெரியாது; ஆகவே, என் சொல்லின் பயன் இப்பொழுது உனக்குத் தெரியாது; செய்து பார்த்தால் தெரியும்) ஐயம் - பிச்சை. கடவுள் விடை - செலுத்தி வரும் இடபம். தோற்ற - அவர் கண் காண. நில்லேல் - நிற்காதே. (ஏனெனில்) இந்த மொய்குழலார் இனிமுன் நின்று சங்க வளையங்களை இழந்தனர். தம் கிறித்துவம் - அவரது பொய்த்தன்மை; வஞ்சனை ஓ இது - ஆ! இது. கிடைத்தல் - எதிர்ப்படுதல். 'கிடைக்கும் முன் தோற்றனர்' என்றது, 'அம்பு படும் முன் தலை துணிந்தது என்றல்போல, 'காரியம் முந்துறூஉம் காரண நிலை' என்னும் அதிசய அணி.*

***944. குறிப்புரை :*** *கிறி - பொய்; வஞ்சனை. அது, 'பலியிடுமின்; பலியிடுமின்' எனக் கூறுதல். சதிரால் - பெருமையுடன், மிடுக்குடன். 'இத்தகைய நடை பிச்சை யேற்பாருக்கு இயைவதன்று' என்பது கருத்து, விடங்கு பட - அழகு உண்டாக. குறி - தாள அறுதி. 'குறி பலவற்றொடு' என ஒடு உருபு விரிக்க. அன்றி, "குறி" என்பது ஆகுபெயராய் அதனை யுடைய பாட்டைக் குறித்தது. என்றலும் ஆம். 'ஏகம்பர் பிச்சை யேற்றுக் கொண்டு வர குழலார் மெலிவுற்றனர்' என்க. நெறி - நெறிப்பு. 'நெறி குழல், பல குழல், வார் குழல்' எனத் தனி இயையும். வெள் வளை - சங்க வளையல். தாயர்கள் - செவிலித் தாயர். தெருவில் சிந்திப்போன வளையல்களைத் தாயர் தேடுதல், தம் மகளிர் முதலியோரது மானத்தைக் காத்தற் பொருட்டாம். இது, கண்டோர் கூற்று.*

**944.** கிறிபல பேசிச் சதிரால் நடந்து விடங்குபடக்
குறிபல பாடிக் குளிர்கச்சி ஏகம்பர் ஐயங்கொள்ள
நெறிபல வார்குழ லார்மெலி வுற்ற நெடுந்தெருவில்
செறிபல வெள்வளை போயின தாயர்கள் தேடுவரே. **53**

**945.** தேடுற் றிலகள்ள நோக்கந் தெரிந்தில சொற்கள்முடி
கூடுற் றிலகுழல் கொங்கை பொடித்தில கூறுமிவள்
மாடுற் றிலமணி யின்மட வல்குலும் மற்றிவள்பால்
நாடுற் றிலவெழில் ஏகம்ப னார்க்குள்ளம் நல்கிடத்தே. **54**

---

*945. **குறிப்புரை :** இது, காமம் சாலாப் பெதும்பைப் பருவத்தளாயினும் கச்சி ஏகம்பர்பால் காதல் கொண்டாள் ஒருத்திதன் செவிலித் தாய், 'இவளது பருவம் இன்மை காரணமாக அப்பெருமான் இவளை நினையான் ஆகலின், இவள் ஆற்றுமாறு என்னை' எனக் கவன்று கூறியது. இஃது உண்மையில், சத்தி நிபாதம் இன்மையால் உலகியலின் நீங்கப் பெறாதவரும் சில வேளைகளில் அவ்வியலிற்றானே ஞான வேட்கை உடையராதலையும், ஆயினும் அது கடைபோகாமையையும் குறிக்கும். ''தெருளாதான் மெய்ப்பொருள் கண்டாற்றால்''* என்றார் திருவள்ளுவரும்.*

*"இவள்" என்பதை நோக்கம் முதலியவற்றிற்கும் வருவிக்க. நோக்கம் - பார்வை. கள்ளம் தேடுற்றில - உள்ளக் குறிப்பை மறைக்கும் நிலைமை பிறரால் ஆராயப்படும் தன்மையை அடையவில்லை. சொற்கள் தெரிந்தில - பேசும் சொற்கள் பொருள் இனிது விளங்கவில்லை. முடி - தலையில், குழல் கூடிற்றில - மயிர்கள் யாவும் நீண்ட வளர்ந்து முனை ஒக்க ஒன்று கூடவில்லை. கொங்கை பொடித்தில - கொங்கைகள் புளகம் கொள்ளும் அளவிற்கு வளரவில்லை. "மணி" என்றதும் இவளையே. மடம் - இளமை. இவள் மாடு உற்றில - இவளது இரண்டு பக்கங்களிலும் உயர வளரவில்லை. 'பருவம் எய்தின் இவையெல்லாம் உளவாம்' என்றபடி. மற்று, அசை, நல்கு இடத்து - அருள் பண்ணும் பொழுது. 'ஏகம்பனார்க்கு இவள்பால் உள்ளம் நாடுற்றில' என்க. உள்ளம் - உள்ளத்தில் எழும் எண்ணங்கள், ஆகுபெயர். 'இனி என் செய்வது' என்பது குறிப்பெச்சம்.*

*946. **குறிப்புரை :** மறையவன், மார்க்கண்டேயர், "கூற்றைக் குமைத்த கூற்றம்'' என்றது, 'கால காலன்' என்றபடி. பொன், வெண்பொன், 'திருக்கடவூர்க் கால காலனும், திருமறைக்காட்டு அமிர்தும் ஆகிய இறைவன் பொருந்தியிருக்கும் கயிலை மலையாவது, மலைமகள் என்றும் புல்கும் கச்சி ஏகம்பம்' என இயைத்து முடிக்க. திருவேகம்பத்தின் சிறப்புணர்த்தியவாறு.*

---

** திருக்குறள் - 249*

**946.** நல்கும் புகழ்க்கட வூர்நன் மறையவன் உய்யநண்ணிக்
கொல்கின்ற கூற்றைக் குமைத்தவெங் கூற்றம் குளிர்திரைகள்
மல்கும் திருமறைக் காட்டமிர் தென்றும் மலைமகள்தான்
புல்கும் பொழிற்கச்சி ஏகம்பம் மேவிய பொன்மலையே. **55**

**947.** மலையத் தகத்தியன் அர்ச்சிக்க மன்னி வடகயிலை
நிலையத் தமரர் தொழவிருந் தான்நெடு மேருவென்னும்
சிலையத்தன் பைம்பொன் மதில்திரு ஏகம்பத் தான்திகழ்நீர்
அலையத் தடம்பொன்னி சூழ்திரு வையாற் றருமணியே. **56**

**948.** மணியார் அருவித் தடமிம யங்குடக் கொல்லிகல்லின்
திணியார் அருவியின் ஆர்த்த சிராமலை ஐவனங்கள்

---

*947. குறிப்புரை :* *மலயம், 'மலையம்' எனப் போலியாயிற்று. 'மன்னித் தொழ இருந்தான்' என இயையும். மலயம் - பொதிய மலை. 'நந்தி பெருமான் காரணத்தால் திருஐயாறும், அம்மை வழிபடும் ஏகம்பத்தோடு ஒத்ததாகும்' என்றற்கு, "திருஐயாற்று அருமணி" என்பதையும் உடன் கூறினார். 'வடகயிலை நிலையத்து இருந்தானே ஏகம்பத்தானும், ஐயாற்று அருமணியுமாய் இருந்தான்' என்னாது, 'ஏகம்பத்தானும், ஐயாற்று அருமணியும் ஆனவனே வடகயிலை நிலையத்து இருந்தான்' என்றது, தெளிவு மிகுதற் பொருட்டு.*

*948. குறிப்புரை :* *'ஏகம்பர் பருப்பதம் இமயம், கொல்லி, சிராமலை, விந்தம்' என்க. இறைவர் எழுந்தருளியுள்ள சிறந்த சில மலைகளைக் குறித்தவாறு. தட - பெரிய 'குடக்கு' என்பது ஈறுகெட்டுப் புணர்ந்தது. குடக்கு - மேற்கு. ஐவனம் - மூங்கில். நெல் 'ஐவனங்களையும், அருவியையும் உடைய சாரல்' எனவும், 'கிளி ஒப்பும் சாரல்' எனவும் இயைத்துக் கொள்க. 'தினையைக் கவர்கின்ற கிளியை மடவார் ஒப்பும்' வேண்டும் சொற்கள் வருவித்துக் கொள்க. பருப்பதம் - மலை.*

*949. குறிப்புரை :* *பருப்பதம் - திருப்பருப்பதம். (ஸ்ரீ சைலம்) இந்திர நீலம் - இந்திர நீலப் பருப்பதம். இவற்றோடு திருப்பரங்குன்றம் இவை மூன்றும் தேவாரம் பெற்றவை. மகேந்திரமலை திருவாசகத்தில் சொல்லப்பட்டது. மந்தர மலை புராணங்களால் புகழப்பட்டது. இப்பாட்டும் முன்னைப் பாட்டோடு ஒத்தது. மருப்பு - தந்தம். "மருப்பது, நெருப்பது" என்பவற்றில் "அது", பகுதிப்பொருள் விகுதி. அவற்றை அடுத்துள்ளவை 'அங்கு' என்பன. ஆர் - பொருந்திய. வெள்ளைத் தந்தம் பொருந்திய கருங் குன்று, யானை. வில் ஆர் - ஒளி பொருந்திய. ஆகுதி, வேள்வித் தீயில் சொரியப்படும் பொருள்கள். இருப்பது - இருக்கும் இடம். 'ஏகம்பத்து எம்*

அணியார் அருவிக்கவர்கிளி ஒப்பும்இன் சாரல்விந்தம்
பணிவார் அருவினை தீர்க்குமே கம்பர் பருப்பதமே. 57

949. பருப்பதம் சார்தவழ் மந்தரம் இந்திர நீலம்வெள்ளை
மருப்பதங் கார்கருங் குன்றியங் கும்பரங் குன்றம்வில்லார்
நெருப்பதங் காகுதி நாறும் மகேந்திரம் என்றிவற்றில்
இருப்பதங் காவுகந் தான்கச்சி ஏகம்பத் தெம்மிறையே. 58

950. இறைத்தார் புரமெய்த வில்லிமை நல்லிம வான்மகட்கு
மறைத்தார் கருங்குன்றம் வெண்குன்றம் செங்குன்ற மன்னற்குன்றம்
நிறைத்தார் நெடுங்குன்றம் நீள்கழுக் குன்றமென் தீவினைகள்
குறைத்தார் முதுகுன்றம் ஏகம்பர் குன்றென்று கூறுமினே. 59

---

*இறை பருப்பதம் முதலிய மலைகளில் இருப்பிடம் அவ்விடத்ததாக உகந்தான்' என வினை முடிக்க.*

***950. குறிப்புரை :*** *"இறைந்தார்.... மறைந்தார்" என்பதை "ஏகம்பர்" என்பதற்கு முன்னே கூட்டுக. இறைத்து ஆர் வில் இமை. மிகுதியாக விசைத்து நிறைந்த வில்லின் தொடுப்பு; அம்புக் கூட்டம், 'அதனை இமவான்மகட்கு மறைத்தார்' என்றது தாம் தனியே சென்று போர் செய்தார்' என்றபடி. "கருங்குன்றம்" முதலிய நான்கும் ஏனைக் கழுக்குன்றம், முதுகுன்றம் போலச் சில தலங்கள் போலும்! 'குன்று' எனப் பெயர் பெற்ற தலங்களைக் கூறியவாறு.*

***951. குறிப்புரை :*** *'முன் ஏகம்பம் நினைந்து, (பின்) திருக் குற்றாலம் முதலிய தலங்களை அடைந்து வணங்குங்கள்; துதியுங்கள்; தெளியுங்கள்' என்க. "தொண்டர்", விளி. "என்று" எண்ணிடைச் சொல்.*

***952. குறிப்புரை :*** *நியமம் - பரிதிநியமம். நீர்ப் பனை வார் பொழில் - கடற் கரையில் பனை மரங்கள் நீள்கின்ற பொழிலையுடைய. பாச்சில், திருப்பாச்சிலாச்சிராமம். அதிகை - திருவதிகை. நினைவு ஆர் தருநெஞ்சின் - நினைதல் பொருந்திய நெஞ்சினோடு. நீர் - நீவிர்.*

***953. குறிப்புரை :*** *விரும்பிச் சென்று போற்றி வணங்குகின்ற திருவாவடுதுறை, திருநல்லூர், கடம்பூர், கடம்பந்துறை, புன்கூர், பராய்த்துறை, எதிர்கொள்பாடி ஆகிய கச்சிஏகம்பன் எழுந்தருளி அருள்பாலிக்கின்ற சிவத்தலங்களை வழிபட்டு மகிழுங்கள்.*

***954. குறிப்புரை :*** *நின்று - என்றும் நிலைபெற்று நின்று ஏர் தரு கச்சி. அழகைத் தருகின்ற கச்சி. நிலாவிய - விளங்குகின்ற தலங்கள் அண்ணாமலை*

951. கூறுமின் தொண்டர்குற் றாலம்நெய்த் தானம் துருத்தியம் பர்
தேறுமின் வேள்விக் குடிதிருத் தோணி புரம்பழனம்
ஆறுமின் போல்சடை வைத்தவன் ஆரூர் இடைமருதென்
றேறுமின் நீரெம் பிரான்கச்சி ஏகம்பம் முன்நினைந்தே. 60

952. நினைவார்க் கருளும் பிரான்திருச் சோற்றுத் துறைநியமம்
புனைவார் சடையோன் புகலூர் புறம்பயம் பூவணம்நீர்ப்
பனைவார் பொழில்திரு வெண்காடு பாச்சில் அதிகையென்று
நினைவார் தருநெஞ்சி ன்நீர்கச்சி ஏகம்பம் நண்ணுமினே. 61

953. நண்ணிப் பரவுந் திருவா வடுதுறை நல்லம்நல்லூர்
மண்ணில் பொலிகடம் பூர்கடம் பந்துறை மன்னுபுன்கூர்
எண்ணற் கரிய பராய்த்துறை ஏர்கொள் எதிர்கொள்பாடி
கண்ணிப் பிறைச்சடை யோன்கச்சி ஏகம்பம் காண்மின்சென்றே. 62

954. சென்றே விண்ணுறும் அண்ணா மலைதிகழ் வல்லம்மென்பூ
வின்தேறல் பாய்திரு மாற்பேறு பாசூர் எழிலழுந்தூர்
வன்தே ரவன்திரு விற்பெரும் பேறு மதிலொற்றியூர்
நின்றேர் தருகச்சி ஏகம்பம் மேயார் நிலாவியவே. 63

---

*முதலியன என்க. தேறல் - தேன் அழுந்தூர் - திருவழுந்தூர். இஃது இப்பொழுது 'தேரழுந்தூர்' என வழங்குகின்றது. வன் தேரவன் - திரிபுரத்தை எரித்தற்கு ஏறிச் சென்ற வலிய தேரை உடையவன். திருவில் பெரும் பேறு - 'திருவில்' என்னும் பெயராகிய பெரிய பேற்றைப் பெற்ற தலம்; திருவிற்கோலம் இஃது இப்பொழுது 'கூவம்' என வழங்கு கின்றது. ஒற்றியூர் - திருஒற்றியூர்.*

***955. குறிப்புரை :*** *திருப்புலிவலம், வில்வலம் இவை வைப்புத் தலங்கள். கொச்சை - சீகாழி. இது முன்பு 'திருத் தோணிபுரம்' எனச் சொல்லப்பட்டது. (60) திருப்பனங்காடு - பனங்காட்டூர். 'புறவார் பனங்காட்டூர், வன்பார்த்தான் பனங்காட்டூர்' என இரண்டு தலங்கள் உள்ளன. 'அலாய்' என்று - 'நீ அணுகற்பாலை அல்லை' என்று கூற்றுவனை நோக்கி ஏகம்பர் கூறுவார். 'ஏகம்பர் ஆலயம் திருஓத்தூர்' முதலியன என்க.*

***956. குறிப்புரை :*** *'அங்கு' என்பன யாவும் அசைகள். ஆலை ஆர் - கரும்பு ஆலைகள் நிறைந்த. கருகாவை - திருக்கருகாவூர். திருக்காரிகரை ஒரு வைப்புத் தலம். வேலை - கடல். திருஊறல் இப்பொழுது 'தக்கோலம்' என வழங்குகின்றது. திருப்போந்தை - திருப்பனந்தாள். முக்கோணம் - திரிகோண மலை; இலங்கைத் தலம். இத்தலங்களில் எல்லாம் ஏகம்பனைக் கண்டு வழிபடுங்கள் என்றவாறு. கடுக்கை - கொன்றை.*

**955.** நிலாவு புகழ்த்திரு வோத்தூர் திருஆமாத் தூர்நிறைநீர்
சுலாவு சடையோன் புலிவலம் வில்வலம் கொச்சைதொண்டர்
குலாவு திருப்பனங் காடுநன் மாசுறல் கூற்றம்வந்தால்
அலாயென் றடியார்க் கருள்புரி ஏகம்பர் ஆலயமே. **64**

**956.** ஆலையங் கார்கரு காவைகச் சூர்திருக் காரிகரை
வேலையங் கேறு திருவான்மி யூர்திரு ஊறல்மிக்க
சோலையங் கார்திருப் போந்தைமுக் கோணம் தொடர்கடுக்கை
மாலையன் வாழ்திரு வாலங்கா டேகம்பம் வாழ்த்துமினே. **65**

**957.** வாழப் பெரிதெமக் கின்னருள் செய்யும் மலர்க்கழலோர்
தாழச் சடைத்திரு ஏகம்பர் தம்மைத் தொழாதவர்போய்
வாழப் பரற்சுரம் ஆற்றா தளிரடி பூங்குழலெம்
ஏழைக் கிடையிறுக் குங்குய பாரம் இயக்குறினே. **66**

---

*957. **குறிப்புரை :** இப்பாட்டு உடன் போக்கி, செவிலி புலம்பல் துறையது. பூங்குழல் எம் ஏழை - பூவை யணிந்த கூந்தலை யுடைய எங்கள் பெண்ணை, இயக்குறின் - தலைவன் நடத்திச் சென்றால், ஏகம்ப நாதரை வணங்காதவரே சென்று வாழ்தற்குரிய அந்தப் பரங்கற்கள் நிறைந்த பாலை நிலத்தின் கொடுமையை அவளது மாந்தளிர் போலும் பாதங்கள் பொறுக்க மாட்டா. குயபாரம் (தன பாரம்) இடையை ஒடித்து விடும். 'நாங்கள் எங்ஙனம் ஆற்றுவோம்' என்பது குறிப்பெச்சம். தாழ் - நீண்டு தொங்குகின்ற. தம், சாரியை. சுரம் - பாலை. பரல் - பரற் கற்கள்.*

*958. **குறிப்புரை :** இப்பாட்டுத் தோழி தலைவனைப் போக்கு உடன்படுவித்தது. "ஐய" என்பதை முதலிற் கொள்க. அக் கடம் - அந்தப் பாலை நிலம். உன்பின் வரப்பெறுகின்ற வண்மையினால், இக்கொடிக்கு (கொடி போன்றவளாகிய இவளுக்கு) ஏகம்பனார் கச்சியைச் சூழ்ந்து உறும் தண் பணை என்று கொள்' என முடிக்க. துறுகின்ற - நெருங்குகின்ற இளையோர் - இளம் பெண்கள். குறுகின்ற - பறிக்கின்ற. தண்பணை - குளிர்ந்த மருத நிலம்.*

*959. **குறிப்புரை :** இதுவும் உடன் போக்கில் செவிலி புலம்பல் துறையது. 'பாலை தீச்சில (உடையது;) வேய் வெடி படும்' என இயைக்க. கடுங் கதிரின் - கடுமையான பகலவனது கிரணங்களால், கள்ளித் தீ - கள்ளிச் செடிகள் காய்ந்து எரிகின்ற தீ. (அத்தீயால்) வேய் - மூங்கில். உலறி - காய்ந்து விள்ளும் வெடி படும் - பிளக்கின்ற வெடியோசை முழங்கும். "பாலை படும்" என, இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் ஏற்றப்பட்டது. 'அதில்*

958. உறுகின்ற வெவ்வழல் அக்கடம் இக்கொடிக் குன்பின்வரப்
பெறுகின்ற வண்மையி னாலைய பேரருள் ஏகம்பனார்
துறுகின்ற மென்மலர்த் தண்பொழிற் கச்சியைச் சூழ்ந்திளையோர்
குறுகின்ற பூங்குவ ளைக்குறுந் தண்பணை என்றுகொள்ளே. 67

959. கொள்ளுங் கடுங்கதி ரிற்கள்ளி தீச்சில வேயுலறி
விள்ளும் வெடிபடும் பாலையென் பாவை விடலைபின்னே
தெள்ளும் புனற்கச்சி யுள்திரு ஏகம்பர் சேவடியை
உள்ளும் அதுமறந் தாரெனப் போவ துரைப்பரிதே. 68

960. பரிப்பருந் திண்மைப் படையது கானர் எனிற்சிறகு
விரிப்பருந் துக்கிரை ஆக்கும்வெய் யேன்அஞ்சல் செஞ்சடைமேல்
தரிப்பருந் திண்கங்கை யார்திரு வேகம்பம் அன்னபொன்னே
வரிப்பருந் திண்சிலை யேயுமர ராயின் மறைகுவனே. 69

---

*என் பாவை போவது உரைப்பரிது' என முடிக்க. விடலை - காளைப் பருவத்தன். 'ஏகம்பர் சேவடியை உள்ளும் அது (நினைக்கின்ற அந்தச் செயலை) மறந்தவர்கள் போவது போலப் போவது' என்க. உரைப்ப அரிது - சொல்ல ஒண்ணாது. 'ஆயினும் நிகழ்ந்து விட்டதே! என்ன செய்ய! என்பது குறிப்பெச்சம்.*

***960. குறிப்புரை :*** *இப்பாட்டு உடன் போக்கில் இடைச் சுரமருங்கில் தலைவி தமர்க் கண்டு கலங்கத் தலைவன் தேற்றியது. "செஞ்சடைமேல்... அன்ன பொன்னே" என்பதை முதலிற் கொள்க. பரிப்பரு - தாங்குதற்கரிய. "படையது" என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. "கானர் எனில் - இந்நிலத்து மாக்கள் எனில், பருந்துக்கு இரையாக்கும் கொடியேனாவேன். உமர் எனின் மறைகுவன்; அஞ்சல்" என முடிக்க. கானர் - வேடர்.*

***961. குறிப்புரை :*** *'பொன் அணங்காகிய என் அணங்கு' என்க. பொன் அணங்கு - அழகிய பெண். என் அணங்கு - என் பெண். தன் வரிப் பந்து - தனம் போன்றுள்ள, வரிந்து செய்யப்பட்ட பந்து. தலைவி தான் அன்று பின்மாலையில் தலைவனுடன் போக முடிவுசெய்து விட்டமையால் முன் மாலை யில் செவிலியிடம் கழங்கும், பந்தும் கொடுத்து ஆசை தீர அவளைக் கட்டியணைத்துக் கொண்டாள். அதனை அப்பொழுது செவிலி அறியாமையால் விடிந்த பின் அதனை நினைத்துப் புலம்பினாள். இற் பிரிந்து - இலத்தினின்றும் பிரிந்து, எங்கே ஒல்லும் - எப்படி இயலும்! 'ஒல்கும்' என்பது பாடமன்று. எனவே, இதுவும் செவிலி புலம்பல் துறை.*

961. வனவரித் திண்புலி யின்னதள் ஏகம்ப மன்னருளே
எனவரு பொன்னணங் கென்னணங் கிற்கென் எழிற்கழங்கும்
தனவரிப் பந்துங் கொடுத்தெனைப் புல்லியும் இற்பிரிந்தே
இனவரிக்கல்லதர் செல்வதெங் கேயொல்லும் ஏழைநெஞ்சே. 70

962. நெஞ்சார் தரவின்பம் செய்கழல் ஏகம்பர் கச்சியன்னாள்
பஞ்சார் அடிவைத்த பாங்கிவை ஆங்கவள் பெற்றெடுத்த
வெஞ்சார் வொழியத்தன் பின்வர முன்செல் வெடுவெடென்ற
அஞ்சா அடுதிறற் காளைதன் போக்கிவை அந்தத்திலே. 71

963. இலவவெங் கான்உனை யல்லால் தொழேஞ்சரண் ஏகம்பனார்
நிலவுஞ் சுடரொளி வெய்யவ னேதண் மலர்மிதித்துச்

---

*962. **குறிப்புரை :** இஃது உடன் போக்கில், செவிலி பின் தேடிச் சேறலில் 'சுவடுகண்டிரங்கல்' துறை. நெஞ்சு ஆறுதல் பெற இன்பம் செய்கின்ற கழல்களை உடைய ஏகம்பரின் கச்சியைப் போன்றவள். பஞ்சு ஆர் அடி - பஞ்சு நிறைந்த பாதம் உடையவள். பாங்கு - இடம். ஆங்கு - அவ்விடம். 'அவள் பின் செல முன் செல் காளை போக்கு இவை' என முடிக்க. 'அந்தத்தில் உள' என வேறு முடிபாக்குக. வெம் சார்வு - விருப்பம் உள்ள சுற்றம். வெடுவேடு என்றல், விரைவுக் குறிப்பு.*

*963. **குறிப்புரை :** 'ஏகம்பனார் நிலவும் சுடரொளி வெய்யவனே' என்பதை முதலிற் கூட்டி, அதன்பின், 'உனை அல்லால் சரண் தொழேம்; செல் சுரத்துள் தளிரடி செலவும், வெங்கான்பருக்கை குளிர உறு துணைக்கு உன் உலவும் கதிர் தணிவித்தருள்' என இயைத்து முடிக்க. இது, உடன் போக்கில் 'நற்றாய் சுடரோடு இரத்தல் (அல்லது) கரம் தணிவித்தல்' என்னும் துறை. இலவம் - இலவ மரம். வெய்யவன் - பகலோன். 'ஏகம்பரனாரது சுடர் ஒளிபோலும் ஒளியையுடைய வெய்யோன்' என்க. 'மலர்பால் மிதித்துச் செல்ல' என உவம உருபு விரிக்க. பருக்கை - பருக்கைக் கற்கள். 'அவை சுடாது குளிரும்படி உன் கதிர் தணிவித்தருள்' என்க. தலைவியை, 'தாமரை மலரில் உள்ள திருமகள் போன்றவள்' எனக் கூறும் கருத்தால் தாமரை மலர்மேல் விருப்பமுடைய பகலவனுக்குத் துணை' என்றாள். 'வன் துணைக்கு - உன் துணையை வேண்டி' என உரைத்து அதனை உனையல்லால் சரண் தொழேம்' என முடிப்பினும் ஆம்.*

*964. **குறிப்புரை :** இப்பாட்டை, "மீண்டார் என உவந்தேன் கண்டு நும்மை" என்னும் திருக்கோவையார்ப் பாட்டோடு* ஒப்புநோக்கிக் காண்க.*

---

** பாட்டு - 244*

செலவும் பருக்கை குளிரத் தளிரடி செல்சுரத்துன்
உலவுங் கதிர்தணி வித்தருள் செய்யுன் உறுதுணைக்கே 72

964. துணையொத்த கோவையும் போலெழில் பேதையும் தோன்றலுமுன்
இணையொத்த கொங்கையொ டேயொத்த காதலொ டேகினரே
அணையொத்த ஏறொத்த காளையைக் கண்டனம் மற்றவரேல்
பிணையொத்த நோக்குடைப் பெண்ணிவள் தன்னொடும் பேசுமினே. 73

---

*"துணை" என்பதிலும் எண்ணும்மை விரித்து, 'துணையும், ஒத்த கோவையும் போல் பேதையும், தோன்றலும் முன் ஏகினரே' என நிரல் நிறையாக இயைத்துக் கொள்க. துணை - செவிலியால் காணப்பட்ட தலைவி. கோ - அவள் தலைவன். பேதை - செவிலி தன் பெண்ணாகிய தலைவி. தோன்றல் - அவள் தலைவன். "ஏகினரே" என்றது வினா. இருவரது காதலும் இணை யொத்ததாய் இருந்ததைச் செவிலி தன் பெண்ணின் இரு கொங்கைகளும் இணையொத்திருப்பதுபோல் இருந்தது' என விளக்கினாள். "கொங்கையொடே" என்பதை "ஒத்த" என்பதனோடே முடிக்க. முன் இரண்டடிகளும் செவிலிதன் வினா. பின் இரண்டடிகளும் எதிர் வந்த தலைவன் கூற்று. அத்தர் - ஏகம்பர். ஏறு - அவரது ஊர்தியாகிய இடபம். "இவள்" என்றது, எதிர் வந்த தலைவன் தன் தலைவியைச் சுட்டியது. "காளையைக் கண்டனம்; நீவிர் சொல்கின்ற மற்றொருவரைப் பற்றி இவளைக் கேட்டுப் பாருங்கள்" என்றான் எதிர் வந்த தலைவன், இதனால், எதிர் வந்த தலைவன் தன்னைப் போல வந்த தலைவனை மட்டும் நோக்கியதன்றி, அவளுடன் வந்த தலைவியை நோக்கவில்லை' என்பது புலனாகி, அவன் தன் தலைவியையன்றிப் பிறிதொரு பெண்ணின் முகத்தை நோக்காத பெருந்தன்மையை விளக்கி நிற்கின்றது. பிணை - பெண்மான்.*

***965. குறிப்புரை :*** *இப்பாட்டுப் புணர்ந்ததுடன் வந்தோரை வினவிய செவிலித் தாயை அவர்கள் மீள (திரும்பிச் செல்லும்படி) உரைத்தது. மின் நலிக்கும் இடை - மின்னலைத் தோற்றத்தால் நலிவிக்கும் இடை. வணக்கத்து இடை - துவளுதலை யுடைய இடை. இடையாள் - செவிலியால் தேடப்படும் தலைவி. மீளி, அவள் தலைவன். நென்னல் - நேற்று. பாக்கை - பாக்கம். 'எந்த மனையில் (இல்லத்தில்) கண்டீர்' எனச் செவிலி வினாவினாள். பின்னர் - இங்குத் தங்கிய பின்பு, போக்கரு - செல்லுதற் கரிய. அவர், செவிலியால் தேடப்பட்ட இருவர், அரி - திருமால். "சென்று வைகுவர்" என்றதனால், 'நீவிர் மீளுக' என்பது குறிப்பெச்சமாயிற்று.*

***966. குறிப்புரை :*** *'கார் மயிலே! ஏகம்பனார் சிவாலயம் துவரத் துலங்கு விண்மேல் கவரச் சூலம் துலங்கு கொடி திளைக்கும் கச்சி இன்னும் காண்'*

**965.** மின்நலிக் கும்வணக் கத்திடை யாளையும் மீளியையும்
நென்னலிப் பாக்கைவந் தெய்தின ரேலெம் மனையிற்கண்டீர்
பின்னரிப் போக்கருங் குன்று கடந்தவர் இன்றுகம்பர்
மன்அரி தேர்ந்து தொழுங்கச்சி நாட்டிடை வைகுவரே. **74**

**966.** உவரச்சொல் வேடுடைக் காடுகந் தாடிய ஏகம்பனார்
அவரக்கன் போன விமானத்தை ஆயிரம் உண்மைசுற்றும்
துவரச் சிகரச் சிவாலயம் சூலம் துலங்குவிண்மேல்
கவரக் கொடிதிளைக் குங்கச்சி காண்கினுங் கார்மயிலே. **75**

---

*என இயைத்து முடிக்க. இப்பாட்டு, தலைவியை உடன்கொண்டு சென்ற தலைவன் அவளுக்குத் தன் நகர் காட்டியது. உவரச் சொல் வேடு - வெறுக்கப் பேசும் வேடர் இனம். அவ்வரக்கன், இராவணன். இஃது இடைக் குறைந்து நின்றது. இராவணன் வான்வழியாகச் சென்றது புட்பக விமானம். அது குபேரனுடையது. அதன் சுற்றளவுபோல ஆயிர மடங்கு சுற்றளவுடையது ஏகம்பனார் ஆலயத்தின் சிகரம், 'அச்சிகரத்தை யுடைய ஆலயத்தின் மேல் சூலம் துலங்கு கொடி திளைக்கும் கச்சி' என்க. சிவாலயத்தின் மேல் பறக்கும் கொடியில் இடபத்தோடு சூலமும் எழுதப் பட்டிருக்கும். "இனனும்" என்றது, 'நன்றாக' என்றபடி. துவர - மிகவும். கார் மயில் - கார் காலத்தில் ஆடும் மயில். இஃது உவம ஆகுபெயர்.*

***967. குறிப்புரை :*** *இப்பாட்டு, முன்பாட்டின் துறையை அடுத்து வரும் பதிபரிசு உரைத்தல் துறையது. பதி - நகர். பரிசு - அதன் தன்மை. உரைத்தவன் தலைவன். 'கச்சியின் வாய் நெல் நடுவோர் ஒலியும், நெல் குவிப்போர் ஒலியும், கரும்பு ஆலையின் ஒலியும் கடலின் ஒலியே ஒக்கும்' என்க.*

***968. குறிப்புரை :*** *இது, தலைமகளை உடன்கொண்டு சுரத்திடைச் சென்ற தலைமகன் அப்பால் தன் நகர்ப் பொழில் கண்டு உவந்து கூறியது. நேர்த்து அமையாமை விறல் - தன்னோடு ஒத்தது பிறிதில்லாத வெற்றி. 'விறலை உடைய, கொடிய வேடரது சுரம்' என்க. 'வேடரது சுரம்' என்பதில் ஆறாவது வாழ்ச்சிக் கிழமைக் கண் வந்தது. 'நுமதூர், எமதூர்' முதலியனபோல, 'கண்ணின் இமை தீந்தன' என்க. "பொன்னே" என்பது, தலைவன் தன் தலைவியை விளித்தது. பகடு - யானை. 'சிவபெருமான் யானையை உரித்துப் போர்த்த காலத்தில் அதனைப் பார்க்க அஞ்சி உமையம்மையே அப்பால் சென்றார்கள்' என்பது புராணம். 'நம் நல் ஊழ் கொணர்ந்து சேர்த்தமையால்' என்க. இமைப் போது - இமைகளாகிய இதழ்கள். போது, ஆகுபெயர். அணி - அழகு 'அணியோடு' என ஒடு உருபு விரிக்க. சீதம் - குளிர்ச்சி. சிறந்தன*

**967.** கார்மிக்க கண்டத் தெழில்திரு ஏகம்பர் கச்சியின்வாய்
ஏர்மிக்க சேற்றெழில் நெல்நடு வேரொலி பொன்மலைபோல்
போர்மிக்க செந்நெல் குவிப்போர் ஒலிகருப் பாலையொலி
நீர்மிக்க மாக்கட லின்னொலி யேயொக்கும் நேரிழையே. 76

**968.** நேர்த்தமை யாமை விறற்கொடு வேடர் நெடுஞ்சுரத்தைப்
பார்த்தமை யாலிமை தீந்தகண் பொன்னே பகட்டுரிவை
போர்த்தமை யாலுமை நோக்கருங் கம்பர்கச் சிப்பொழிலுள்
சேர்த்தமை யாலிமைப் போதணி சீதஞ் சிறந்தனவே. 77

**969.** சிறைவண்டு பாடுங் கமலங் கிடங்கிவை செம்பழுக்காய்
நிறைகொண்ட பாளைக் கமுகின் பொழிலிவை தீங்கனியின்

---

*மிக்கன. 'தீந்துபோன இமைகள் குளிர்ச்சி மிகுந்தன' என்பதாம். 'கண் தீந்த, சீதம் சிறந்தன' எனச் சினைவினை முதல்மேல் நின்றன. சுரம் - பாலை நிலம். பகடு - யானை. உரிவை - தோல்.*

***969. குறிப்புரை :*** *இதுவும் முன் போந்த, "கார் மிக்க கண்டத்து" என்னும் பாட்டோடு ஒத்தது. "நன்னுதலை" என்னும் விளியை முதலிற் கொண்டு, 'இவை கமலக் கிடங்கு; இவை கமுகின் பொழில்; உவை வாழைப் பொதும்பு; ஏகம்பனார் கச்சி நாடு எங்கணும் இவ்வண்ணமாம்' என முடிக்க. கிடங்கு - அகழி. பழுக்காய் - பாக்கு மரக் காய். பொறை - சுமை. பொதும்பு - பொதும்பர்; சோலை, நறை - தேன்.*

***970. குறிப்புரை :*** *இப்பாட்டுக் கச்சி மாநகரின் பொய்கைச் சிறப்பைப் புகழ்ந்தது. "ஏகம்பனார் - இப்பொய்கையுள்" என்பதை முதலிற் கொண்டு, 'நீலமும், ஆம்பலும் 'நன்னுதலால் கண்ணும், வாயும் இவ்வாறு' எனப் போய்ப் பூப்ப, வள்ளை என்று எல்லாம் காது ஒப்பு என்ன வீறிடும் என இயைத்து முடிக்க. நன்னுதலார் - மகளிர். 'இவ்வாறு ஆவன' என ஒரு சொல் வருவிக்க. போய் - வளர்ந்து, "மன் இதழ் ஆர்" என்பது நீலத்திற்கு அடை. 'வள்ளை யென்று' என்பதில் "என்று" பெயர்ப்பட வந்த எச்சம், 'மங்கலம் என்று ஓர் ஊர்' வீறிடும் - சிறந்து நிற்கும். "பொன்" என்பது உவம ஆகுபெயராய் நெருப்பைக் குறித்தது.*

***971. குறிப்புரை :*** *"எங்களை ஆட் கொள்வார்... ஏரி களப் பரப்பிலும், கிடங்கு இட்ட நன்னீரிலும் வாளைகளொடு கயல் மேய்கின்றன" என முடிக்க. உள் வார் - உள்ளே நீண்டு செல்கின்ற இடம். நெருங்குதல் - நிரம்புதல். கிடங்கு - அகழி. 'கிடங்கில் இட்ட' என உருபு விரிக்க. இடுதல் - நிரப்புதல்.*

பொறைகொண்ட வாழைப் பொதும்புவை புன்சடை ஏகம்பனார்
நறைகொண்ட பூங்கச்சி நாடெங்கும் இவ்வண்ணம் நன்னுதலே. 78

970. நன்னுத லார்கருங் கண்ணுஞ்செவ் வாயுமிவ் வாறெனப்போய்
மன்னித ழார்திரு நீலமும் ஆம்பலும் பூப்பவள்ளை
என்னவெ லாமொப்புக் காதென்று வீறிடும் ஏகம்பனார்
பொன்னுத லார்விழி யார்கச்சி நாட்டுள்இப் பொய்கையுளே. 79

971. உள்வார் குளிர நெருங்கிக் கருங்கிடங் கிட்டநன்னீர்
வள்வா ளைகளொடு செங்கயல் மேய்கின்ற எங்களையாட்
கொள்வார் பிறவி கொடாதவே கம்பர் குளிர்குவளை
கள்வார் தருகச்சி நாட்டெழில் ஏரிக் களப்பரப்பே. 80

---

*வள் - கூரிய. தலையும், வாலும், 'ஆட் கொள்வாரும், (எமக்குப்) பிறவியைக் கொடாதவரும் ஆகிய ஏகம்பரது கச்சி' என்க. கள் வார் - தேனை ஒழுக்குகின்ற. 'ஏரியது களம்' என்க. களம் - இடம். ஏரி - பெரிய நீர்நிலை. 'இப்பெயர் இப்பொருளில் வருமிடத்தில் வேற்றுமைப் புணர்ச்சியிலும் வல்லெழுத்து மிகுதல் இல்லை' என்பர்.*

***972. குறிப்புரை :*** *"பொலி நுதலாய்" என வந்தமையால் இப்பாட்டினைத் தலைவன் தலைவிக்குப் பதி பரிசு உரைத்த தாகவே கொள்க. பொலி - விளங்குகின்ற. பணை - வயல்கள். வயல்களில் பாசியும், நீர்ச் சேம்பும் அடர்ந்திருத்தல் வானத்தில் கருமுகில் படிந்தது போலக் காணப்படுகின்றது. கரா ஒருத்தல் - ஆண் முதலை. பொருதல் - தாக்குதல். 'பொருவதாக, அதனைப் பார்' என்க. 'கச்சியின் கண்' என்னும் ஏழாவது இறுதிக்கண் தொக்கது.*

***973. குறிப்புரை :*** *"மகிழ் திரு ஏகம்பர் தேவி மகிழ" என்பதை முதலிற் கொள்க. 'ஏகம்பர் மலைமகளுக்கு அருள் புரிந்தது, - அவள் தம் தேவி - என்னும் அன்பு பற்றி' என்றற்கு, "தேவி மகிழ" என்றார். "மலைமகள் கண்" என்பதில் கண், ஏழனுருபு. ஆர - பொருந்த. 'வைத்தார்' என்பது எதுகை நோக்கி, "வைச்சார்" என மருவிற்று. 'விண்ணோரும், விச்சா தாரும் தொழுகின்ற அவள் விமானமும்' என்க. பரப்பு - நிலப் பரப்பு. ஆங்கு - அப்பரப்பின் மேல் மாடங்கள் - மேல் மாடங்கள். இதனால் கச்சிக் காமக் கோட்டத்தது சிறப்பு உணர்த்தப்பட்டது.*

***974. குறிப்புரை :*** *ஊரகம் - உலகளந்த பெருமாள் கோயில். பாடகம் - பாண்டவ தூதப் பெருமான் கோயில், இவை கச்சியில் உள்ளவை. தெவ் -*

972. பரப்பார் விசும்பிற் படிந்த கருமுகில் அன்னநன்னீர்
தரப்பா சிகள்மிகு பண்பொடு சேம்படர் தண்பணைவாய்ச்
சுரப்பார் எருமை மலர்தின்னத் துன்னுக ராவொருத்தல்
பொரப்பார் பொலிநுத லாய்செல்வக் கம்பர்தம் பூங்கச்சியே. 81

973. கச்சார் முலைமலை மங்கைகண் ணாரஎண் ணான்கறமும்
வைச்சார் மகிழ்திரு ஏகம்பர் தேவி மகிழவிண்ணோர்
விச்சா தரர்தொழு கின்ற விமானமுந் தன்மமறா
அச்சா லையும்பரப் பாங்கணி மாடங்கள் ஓங்கினவே. 82

974. ஓங்கின ஊரகம் உள்ளகம் உம்பர் உருகிடமாம்
பாங்கினில் நின்ற தரியுறை பாடகம் தெவ்இரிய
வாங்கின வாட்கண்ணி மற்றவர் மைத்துனி வான்கவிகள்
தாங்கின நாட்டிருந் தாள்அவர் தன்மனை ஆயிழையே. 83

---

*பகை; பகைவர்; அசுரர். இரிய - தோற்று ஓட. கன்னி - துர்க்கை. மற்று, அசை அவர் - மேலெல்லாம் சொல்லி வருகின்ற கம்பர். வான் கவிகள் - தெய்வப் புலவர்கள். தாங்கிய நாடு - உயர்த்துக் கூறிய உலகம். அது சத்தி தத்துவ புவனம். அதில் இருந்தவள் சத்தி. "அரி" என்பதை "ஓங்கின" என்பதனோடும் கூட்டுக. 'அரி ஓங்கின (நின்ற கோலமாய் உள்ள) ஊரகம் (அவர் கச்சியில்) உள்ளகம்; ஓர் உட்பகுதி. அரி உறைகின்ற (இருந்த கோலமாய் உள்ள) பாடகம் உம்பர் உருகிடமாம். பாங்கினில் (கச்சியில் ஒரு பக்கத்தில்) நின்றது. தெவ் இரிய வாங்கின வாளையுடைய கன்னி அவர் மைத்துனி. (மனைவிதன் தங்கை) எல்லாப் புவனங்கட்கும் மேலதாகிய சத்தி தத்துவ புவனத்தில் உள்ள சத்தி அவருக்கு மனைவி. (அவர் சத்தி தத்துவத்திற்கு மேல் உள்ள சிவ தத்துவ புவனத்தில் இருப்பவர்). இங்ஙனம் திருவேகம்பரது பெருமை விளக்கப்பட்டது. சத்தியை 'மனைவி' என்றதனால் அவர் அத்தத்துவத்திற்கு மேலேயிருத்தல் குறிப்பால் உணர்த்தப்பட்டது.*

*975. குறிப்புரை : இதுவும் உடன் போக்கு இறுதியில் தலைவன் பதிபரிசு உரைத்தது "பொன்னே" என்பதை முதலிற் கொள்க. பொன் இலக்குமி. இஃது உவமையாகு பெயராய்த் தலைவியைக் குறித்தது. 'இன்ன பிறங்கல் நம் பிராட்டியது. உது சூலத்தள் பொழில்; (ஆதலின்) நமக்குத் தளர்வில்லை' என முடிக்க. இழை - அணிகலம். ஆர் - நிறைந்த. 'இழையாக அணி' என ஆக்கம் வருவிக்க. சத்திக்குச் சொல்வதும் போலச் சிவனுக்கும் வலக் கண்ணில் திருமகளையும், இடக்கண்ணில் கலைமகளையும், நெற்றிக் கண்ணில் ஞான மகளையும் தருதல் கூறப்படும். ஞானமகள் சத்தியின் கூறே ஆதலாலும், சத்தி மலைமகளாகச் சொல்லப்படுதலாலும், "இன்ன பிறங்கல்" என மலையை,*

**975.** இழையார் அரவணி ஏகம்பர் நெற்றி விழியின்வந்த
பிழையா அருள்நம் பிராட்டிய தின்ன பிறங்கலுன்னும்
நுழையா வருதிரி சூலத்தள் நோக்கரும் பொன்கடுக்கைத்
தழையார் பொழில்உது பொன்னே நமக்குத் தளர்வில்லையே. 84

**976.** தளரா மிகுவெள்ளம் கண்டுமை ஓடித் தமைத்தழுவக்
கிளையார் வளைக்கை வடுப்படும் ஈங்கோர் கிறிபடுத்தார்
வளமாப் பொழில்திரு ஏகம்பம் மற்றிது வந்திறைஞ்சி
உளரா வதுபடைத் தோம்மட வாயிவ் வுலகத்துள்ளே. 85

---

*"நம் பிராட்டியது" எனவும், 'காடுகிழாள் மாயோன் தங்கை' என வைத்து 'மாயோள்' எனப்படுதலின் கடுக்கைப் பொழிலை, (கொன்றைச் சோலையை) "திரிசூலத்தள் பொழில்" என்றும் கூறினான். பிறங்கல் - மலை.*

***976. குறிப்புரை :*** *இப்பாட்டும் முன் பாட்டின் துறையதே. "ஈங்கு" என்பதை "மடவாய்" என்பதன் பின்னர்க் கூட்டி, அவ்விரண்டையும் முதலிற் கொள்க. கிறி படுத்தார் - பொய்யை உண்டாக்கினார். தடத்தங்களெல்லாம் இறைவனது நாடகமாகக் கூறுதல் பற்றி ஏகம்பர் உமையது வளைத் தழும்பைப் பெற்றதைத் தலைவன் "கிறி" என்றான். கிளை - இனம். 'கிறிபடுத்தாரது ஏகம்பம் இது. இங்கு வந்து இதனை இறைஞ்சினமையால் நாம் இவ்வுலகத்துள்ளே உளர் ஆவதன் (வாழ்வதன்) பயனைப் படைத்தோம்' என முடிக்க. மற்று, அசை.*

***977. குறிப்புரை :*** *இப்பாட்டு வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைவன் கார் கண்டு தன்னுட் கூறியது. 'முகிலாகிய மத யானைகள் இடியாகிய பிளிறுதலைச் செய்து, மின்னலாகிய பாசத்தை அறுத்துத் தள்ளி, வானமாகிய களத்தில் வருமாயின், பின்னர்த் தலைவி என்னாவாள்' என்பதை நினைத்துப் பார்மின் - எனத் தோழி கூறியதை நினைந்து, ஏகம்பர் கோயில் வாசலில் உள்ள கொடி அலைவதுபோல மனம் அலமரும் நீர்மையை யுடையனானேன் யான் என இயைத்து முடிக்க. வானத்தைக் 'களம்' என்னாமை ஏகதேச உருவகம். முகில்களைப் போர்க்களத்து யானைகள் போல்வனவாகக் கண்டு தலைவி இறந்துபடும் நிலைமையை அடைவாள் என்பதாம். "வலவிய யானைகள்" என இயையும். வார் குழல் - நீண்ட கூந்தலை யுடையவள். "யானை" என வருதலின் முழங்குதல் பிளிறுதலாயிற்று.*

***978. குறிப்புரை :*** *இது கார்ப் பருவம் கண்டு ஆற்றாளாய் தலைமகளை, 'தலைவனது தேர் இனி வருதல் தப்பாது' எனக் கூறி வற்புறுத்தும் தோழி அதனை முகில்கள் முன்னிலையாகக் கூறியது. '(நீவிர் பெய்வது*

977. உலவிய மின்வடம் வீசி உருமதிர் வுள்முழங்கி
வலவிய மாமதம் பாய்முகில் யானைகள் வானில்வந்தால்
சுலவிய வார்குழல் பின்னரென் பாரிர் எனநினைந்து
நிலவிய ஏகம்பர் கோயிற் கொடியன்ன நீர்மையனே. 86

978. நீரென்னி லும்அழுங் கண்முகில் காள்நெஞ்சம் அஞ்சலையென்(று)
ஆரென்னி லுந்தம ராயுரைப் பார்அம ராவதிக்கு
நேரென்னி லுந்தகும் கச்சியுள் ஏகம்பர் நீள்மதில்வாய்ச்
சேரென்னி லுந்தங்கும் வாட்கண்ணி தானன்பர் தேர்வரவே. 87

979. வரங்கொண் டிமையோர் நலங்கொள்ளும் ஏகம்பர் கச்சியன்னாய்
பரங்கொங்கை தூவன்மின் நீர்முத்தம் அன்பர்தம் தேரின்முன்னே

---

*மழையேயாயினும்) தலைவியது அழும் கண்கள் போலும் முகில்காள்! - கச்சியுள் ஏகம்பர் நீள் மதில் வாய்ச்சேர் - (சேர்ந்திருப்பன) என்னிலும் தகுவனவாகிய வாள்போலும் கண்களையுடைய இவள், - நெஞ்சம் அஞ்சலை - என்று அன்பர் தேர்வரவு உரைப்பார் ஆர் என்னிலும் - தமர் - என்பாள் - என இயைத்து, 'ஆதலின், நீவிர் அதனைக் கூறுவீர்' என்னும் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க. அமராவதி - இந்திரன் நகர்.*

*979. குறிப்புரை : இது, தோழி பருவங் காட்டித் தலைவியை வற்புறுத்தியது. "கச்சி அன்னாய்" என்றது தோழி தலைவியை விளித்தது, "பரங் கொங்கை தூவல்" என்பதை இறுதியில் வைத்து, 'கார் முகில், நீராகிய முத்தினைத் தாரமாகக் கொண்டு, கொன்றை மரம் பூக்களைக் கொண்டு பொன்னாய் நிற்க, காந்தட் பூவின் கொத்தாகிய கைகளில் அன்பர் தேரின்முன் பொற்சுண்ணம் ஏந்த வேண்டிப் போந்தன. ஆகவே, நீ நின் கொங்கைகளைப் பாரமாக (சுமையாக)ச் சுமக்க வேண்டா' என முடிக்க. 'பரமாக தரமாக' என ஆக்கம் வருவிக்க. தூவல் - தாங்கற்க; சுமவற்க. 'மின்னலின்கண் நீர்' என ஏழாவது விரிக்க. "ஏந்தவும்" என்னும் உம்மை சிறப்பு. 'கார் முகில் போந்தன; கொங்கை சுமவல் எனப் பருவங் காட்டி வற்புறுத்தினாள். 'சுமவல்' என்றது 'தனிமை காரணமாகச் சுமையாக எண்ண வேண்டா' என்றபடி. இயற்கையாய் வந்த கார்ப் பருவத்தை அன்பர் தேரின் முன் சென்று வரவேற்க வந்ததாகக் கூறியது தற்குறிப்பேற்ற அணி.*

*980. குறிப்புரை : இது, பகைவயிற் பிரிவின்கண் தலைமகள் கார்ப் பருவம் கண்டு ஆற்றாது தோழியொடு புலம்பியது. "நேரிழை" என்றது தலைவி தோழியை விளித்தது; அதனை முதலிற் கொள்க. கார்முகம் - வில். 'கை ஆரக் கொண்டு' என்க. சென்றார் - சென்ற தலைவர். 'நம்மை நினையார்'*

தரங்கொண்டு பூக்கொண்டு கொன்றைபொன் னாகத்தண் காந்தட்கொத்தின்
கரங்கொண்டு பொற்சுண்ணம் ஏந்தவும் போந்தன கார்முகிலே. 88

980. கார்முகம் ஆரவண் கைக்கொண்ட கம்பர் கழல்தொழுது
போர்முக மாப்பகை வெல்லச்சென் றார்நினை யார்புணரி
நீர்முக மாக இருண்டு சுரந்தது நேரிழைநாம்
ஆர்முக மாக வினைக்கடல் நீந்தும் அயர்வுயிர்ப்பே. 89

981. உயிரா யினவன்பர் தேர்வரக் கேட்டுமுன் வாட்டமுற்ற
பயிரார் புயல்பெற்ற தென்னநம் பல்வளை பான்மைகளாம்
தயிரால்பால் நெய்யொடும் ஆடிய ஏகம்பர் தம்மருள்போல்
கையிரா வளையமுந் தக்கச் சிறுத்தன கார்மயிலே. 90

982. கார்விடை வண்ணத்தன் அன்றேழ் தழுவினும் இன்றுதனிப்
போர்விடை பெற்றெதிர் மாண்டார் எனவண்டர் போதவிட்டார்
தார்விடை ஏகம்பர் கச்சிப் புறவிடைத் தம்பொன்நன்பூண்
மார்விடை வைகல் பெறுவார் தழுவ மழவிடையே. 91

983. விடைபாய் கொடுமையெண் ணாதுமே லாங்கன்னி வேல்கருங்கண்
கடைபாய் மனத்திளங் காளையர் புல்கொலி கம்பர்கச்சி

---

*என்க. புணரி - கடல். 'அது மேகமாகி இருண்டு சுரந்தது' என்க. நீர் முகமாக - யார் ஆற்றுவிப்பாராய் நிற்க. வினை - தீவினையின் விளைவு; ஆகுபெயர். அயர்வுயிர்பு - இளைப்பாறுதல். 'வினைக் கடலை நீந்துதலாகிய அயர்வுயர்ப்பை ஆர்முகமாகப் பெறுவேம்' என ஒரு சொல் வருவித்து முடிக்க.*

***981. குறிப்புரை :*** *இது வரைவொடு வந்த தலைமகனது தேர்வரவு கேட்டுத் தலைவி மகிழ்ந்த மகிழ்ச்சியைத் தோழி செவிலிக்கு உணர்த்தியது. புயல் - மேகம். இஃது ஆகுபெயராய் மழையைக் குறித்தது. பல் வளை - பலவாகிய வளையலை யணிந்த தலைவி. 'பல் வளைக்கு' என்னும் நான்கன் உருபு தொகுக்கப்பட்டது. 'தயிரையும், பாலையும் நெய்யோடு ஆடிய ஏகம்பர்' என்க. 'நம் பல் வளைக்கு முன்பு கையில் இராது கழன்ற வளையல்கள் அழுத்தமாகி விடத் தனங்கள் கச்சினை இறப் பண்ணும் பான்மைகள் ஏகம்பர் அருள்போல் கார் மயில் ஆம்' என இயைத்து முடிக்க. 'இறுக்கும்' என்பதில் சாரியை தொகுக்கப்பட்டு "இறும்" என நின்றது. "அருள்" என்பது ஆகு பெயராய் அதன் பயனைக் குறிக்க, கார் மயில் பண்பு பற்றிய உவமையாய் நிற்றலின் அவை தம்முள் வேறாதல் அறிக.*

***982. குறிப்புரை :*** *இது முல்லை நிலத்துக் கைக்கிளையாகிய 'ஏறு தழுவிக் கோடல்' என்னும் ஆசுர மணத்தில் தழுவ விடப்பட்ட ஏற்றினைக் கண்டோர்*

மடைபாய் வயலிள முல்லையின் மான்கன்றொ டான்கன்றினம்
கடைபாய் தொறும்பதி மன்றில் கடல்போற் கலந்தெழுமே. 92

984. எழுமலர்த் தண்பொழில் ஏகம்பர் கச்சி இருங்கடல்வாய்க்
கொழுமணப் புன்னைத் துணர்மணற் குன்றில் பரதர்கொம்பே
செழுமலர்ச் சேலல்ல வாளல்ல வேலல்ல நீலமல்ல
முழுமலர்க் கூரம்பின் ஓரிரண் டாலு முகத்தனவே. 93

985. முகம்பாகம் பண்டமும் பாகமென் றோதிய மூதுரையை
உகம்பார்த் திரேலென் நலமுயர் ஏகம்பர் கச்சிமுன்நீர்
அகம்பாக ஆர்வின் அளவில்லை என்னின் பவளச்செவ்வாய்
நகம்பால் பொழில்பெற்ற நாமுற்ற வர்கொள்க நன்மயலே. 94

---

*கூறியது. 'அன்று கார் வண்ணத்தன் விடை ஏழ் தழுவினும், இன்று அண்டர் தனி விடை ஏகம்பர் கச்சிப் புறவிடை போதவிட்டார்; போர் விடை பெற்று எதிர் (சென்று) மாண்டார் என அம் மழவிடையை (எவரேனும்) தழுவினால் (அவர்) அண்டரது பொன்னின் பூண் மார்பிடை வைகப் பெறுவார்' என இயைத்து முடிக்க. 'கண்ணன் ஏழு ஏறுகளைத் தழுவிக் கொன்றே ஆயர் மகளாகிய நப்பின்னையை மணந்தான்' என்பது புராணம். அண்டர் - ஆயர். தனி - ஒற்றை. புறவு - முல்லை நிலம். போத விட்டார் - வர விட்டார். போர், இங்கு ஏறுதழுவல், விடை - அதற்கு ஆயர்தரும் ஆணை. தார் விடை - மணி யணிந்த இடபம். தம் பொன் - ஆயர்களுக்கு மகளாகிய இலக்குமி போல்பவள். மார்வு - அவளது மார்பு. வைகல் - தங்குதல்.*

***983. குறிப்புரை :*** *இதுவும் முன்பாட்டின் துறையதே. விடை - ஆயர் வரவிட்ட ஏறு. அது தன் கொம்பால் தம் மார்பிற் பாய இருக்கின்ற கொடுமையை நினையாமல், மேலான ஆயர் கன்னியது வேல்போலும் கரிய கண்ணின் கடை பாய்கின்ற மனத்தினையுடைய காளையர் இனம், முல்லை நிலத்தின் பதியில் (ஊரில்) உள்ள மன்றின்கண் கடல் போற் கலந்து எழும் என்க. புல் - புலி. கொலி - கொல்லி; கொன்றவன்; பன்மை யொருமை மயக்கம். கச்சி முல்லை - அடையடுத்த ஆகுபெயர். முல்லைக் கொடி வளரும் பாத்தியை "வயல்" என்றார். கடைதொறும் பாய் - வாயில்கள் தோறும் துள்ளுகின்ற. 'காளையர் இனம்' என மாற்றிக் கொள்க.*

***984. குறிப்புரை :*** *இது நெய்தல் நிலத்துக் களவியலில் தலைவன் இயற்கைப் புணர்ச்சிப்பின் தலைவியைப் புகழ்ந்தது. இது 'நலம்புனைந் துரைத்தல்' எனப்படும். துணர் - பூங்கொத்துக்களையுடைய. 'மணற்குன்றில் நிற்கும் பரதர் கொம்பே' என்க. பரதர் - வலைஞர். 'உன் முகத்தன சேல்*

முதலியன அல்ல; கூரிய இரண்டு அம்புபோல ஆலும்', (பிறழும்) என்க. ஆவதாக உணர்ந்தன்றி 'அன்று' என்றல் கூடாமையின், 'சேல் முதலியன அல்ல' என்றானாயினும் இது கண்ணுக்கு அவன் சொல்லிய பலபொரு ளுவமையேயாம். "செழுமலர்" என்பதில் மலர் தாமரை மலர். 'செழுமலரின் கண் பிறழும் சேல்' என்க. "முழுமலர்" என்பதில் மலர், மன்மதன் அம்பு.

*985.* குறிப்புரை : இது, காட்சியின் பின் தலைவியை ஐயுற்று. மானுடமகளே எனத் துணிந்த தலைவியது குறிப்பை உணர்கின்றுழிக் கூறியது. "உயர் ஏகம்பர் கச்சி முன்னீர்" என்பதை முதலிற் கொள்க. கச்சி முன்னீர் - கச்சிப் புறத்தில் நிற்கின்றவரே. தலைவியைத் தலைவன் இங்ஙனம் முன்னிலைப் படுத்தினானாயினும் அவள் கேட்ப இங்ஙனம் கூறாது தன்னுள்ளே இங்ஙனம் கூறினான். பாகம் - பாதி. "முகம் பாதி; பண்டம் பாதி"* என்பது ஒரு பழமொழி - என்பது இப்பாட்டால் அறியப்படுகின்றது. 'ஒருவருக்கு ஒன்றைக் கொடுத்து உதவும் உதவி கொடுப்பவரது முகத்தாற் பாதியும், கொடுக்கப்படும் பொருளாற் பாதியுமாக முழுமை பெறுகின்றது' என்பது இதன் பொருளாகும். முகமாவது, தம்பால் வருபவரைத் தொலைவிற் கண்டபொழுதே இன்முகங் காட்டி வரவேற்றல். பண்டமாவது, அவர் பின் அணுகியவழி அவர் விரும்பும் பொருளை நல்லனவாகக் கொடுத்தல். இன்சொல் முகத்திலே அடங்கிற்று. "சேய்மைக்கண் கண்டுழி இன்முகமும், அது பற்றி நண்ணியவழி இன்சொல்லும் அது பற்றி உடன்பட்ட வழி நன்றாற்றலும் என, விருந்தோம்புவார்க்கு இன்றியமையாதன மூன்று"[1] என்னும் பரிமேலழகர் உரையாலும் அம்மூன்றனுள் ஒன்று இவ்வழியும் உதவி முழுமையடையாமை விளங்கும். ஆகவே, 'பொழிலின் கண் பவளச் செவ்வாயைப் பெற்ற நாம் உற்றவர் (நம்மால் உறப்பட்டவர் - விரும்பப்பட்டவர்; தலைவி) தம் உள்ளத்திலும் நம் போலக் காமத்தை உடையராதல் வேண்டும்' என்றான். பவளச் செவ்வாயைப் பெற்றமையாவது, "நோக்கினாள் நோக்கெதிர் நோக்கப் பெற்றது[2]. அந்நோக்கு அன்பை மட்டுமே வெளிப்படுத்தியல்லது காமக் குறிப்பினை வெளிப்படுத் தாமையின், நாம் உற்றவர் நன் மயல் கொள்க" என்றான். "கொள்க" என்பது வேண்டுதற் பொருட்டு "வினைகலந்து வென்றீக மன்னன்"[3] என்பதில், "வென்றீக" என்பது போல "உற்றவர்" என்பது தன்னுட் சொல்லிய சொல்லிடத்து என முன்னிலைக்கண் படர்க்கை மயங்கிற்று. மூதுரை - பழமொழி. உகம் - ஊழி.

---

* திருக்குறள் - 90 - பரிமேலழகர் உரை.
1. திருக்குறள் - 90
2 திருக்குறள் - 1082
3. திருக்குறள் - 1268

**986.** மயக்கத்த நல்லிருள் கொல்லும் சுறவோ டெறிமகரம்
இயக்கத் திடுசுழி ஓதம் கழிகிளர் அக்கழிதார்
துயக்கத் தவர்க்கரு ளாக்கம்பர் கச்சிக் கடலபொன்உன்
முயக்கத் தகல்வு பொறாள்கொண்க நீர்வரும் ஊர்க்கஞ்சுமே. **95**

**987.** மேயிரை வைகுஅக் குருகுண ராமது உண்டுபுன்னை
மீயிரை வண்டோ தமர்பு கடிய விரிகடல்வாய்ப்
பாயிரை நாகம்கொண் டோன்தொழும் கம்பர்கச் சிப்பவ்வநீர்
தூயிரை கானல்மற் றாரறி வார்நந் துறைவர்பொய்யே. **96**

---

*இது புனைந்துரை வகையால் காலத்தின் நெடுமையைக் குறித்தது. 'மூதுரையை நெடுங்காலமாக உணர்ந்தீராயினும் அதனால் பயன் என் என்பான். "மூதுரையை உகம் பார்த்திரேல் நலம் என்" என்றான். 'பார்த்திரேனும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. அகம் பாக ஆர்வு - முகம்போல் அகத்தின் பாகமாகிய நிறைவு. நிறைவு - காம நிறைவு. அளவு இல்லை - அதன் அளவு வரையறைப்படவில்லை. 'முகத்தால் இயைந்த இவர் அகத்தாலும், இயைதல் வேண்டும்' என்றபடி. 'அகத்தால் இயைந்தமை - கண்ணொடு கண் இணை நோக்கு ஒக்கின்....[4] அறியப்படும், அதனை யான் இன்னும் பெற்றிலேன்' என்பதாம். நகம் - மலை. 'நகப்பால்' என்பது மெலிந்து நின்றது.*

***986. குறிப்புரை :*** *இது, 'களவு நீங்கி வரைதல் வேண்டும்' எனக் கூறுந் தோழி அதனைக் கூறாமல் இரவுக் குறி விலக்கியது. தலைவன் இரவுக் குறி நீக்கிப் பகற் குறி வேண்டுவானாயின் அதனையும் எவையேனும் சொல்லித் தோழி விலக்குவாள். கொண்கன் - நெய்தல் நிலத் தலைவன், கொண்க! கடல் பொன் உன் முயக்கத்து அகல்பு பொருள்; (ஆயினும்) நீ இரவில் வரும் இவ்வூர்க்கு (இவ்வூரின் இயல்பிற்கு) அஞ்சும். இவ்வூரின் இயல்பு மயக்கத்த நள்ளிருளில் உப்பங் கழியில் கொல்லும் சுறாவோடு முதலைகள் வெளிப் போதும். இயக்கத்துக் கழி கிளிர் ஓதும் இடு சுழிகள் மிகுதியாம். அக்கழியே முடிவில்லாத நீட்சியது' என இயைத்து முடிக்க. எனவே, 'இரவில் இவன் வருதலை ஒழிக' என்பது குறிப்பெச்சமாம். கடல், ஆகுபெயர். அதன் கரைக்கண் உள்ள பாக்கத்தைக் குறித்தது. அதன்கண் உள்ள பொன், நெய்தல் நிலத் தலைவி. முயக்கத்து அகல்வு - தழுவலின் நீக்கம் - மகரம், இங்கு முதலையைக் குறித்தது. 'சுறாவும் மகரமும் வெளிப்போதும்' என ஒரு சொல் வருவிக்க. இயக்கம் - வழி, துறை. ஓதம் - அலை. "சுழி" என்னும் எழுவாய்க்கு, 'மிகுதி' என்னும் பயனிலை வருவிக்க. தார் மாலையாகலின் அது நீட்சியைக்*

---

*4. திருக்குறள் - 1100*

**988.** பொய்வரு நெஞ்சினர் வஞ்சனை யாரையும் போகவிடா
மெய்வரும் பேரருள் ஏகம்பர் கச்சி விரையினவாய்க்
கைவரும் புள்ளொடு சங்கினம் ஆர்ப்பநம் சேர்ப்பர்திண்தேர்
அவ்வரு தாமங் களினம்வந் தார்ப்ப அணைகின்றதே. **97**

**989.** இன்றுசெய் வோமித னில்திரு ஏகம்பர்க் கெத்தனையும்
நன்றுசெய் வோம்பணி நாளையென் றுள்ளிநெஞ் சேயுடலில்
சென்றுசெ யாரை விடும்துணை நாளும் விடாதடிமை
நின்றுசெய் வாரவர் தங்களின் நீள்நெறி காட்டுவரே. **98**

---

*குறித்தது. தார் உடையதனை, "தார்" என்றல் உபசாரம். துயக்கத்தவர் - அறிவு கலங்கியவர்.*

***987. குறிப்புரை :*** *இது தலைவன் வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிந்த காலத்துப் பிரிவு நீட்டிப்பத் தலைவி தலைவனைத் தெரியாது தலைவனை இயற் பழித்துக் கூறியது. இது நொதுமலர் வரைவு கேட்டுக் கூறியதுமாம். "தினைத்தா ளன்ன சிறுபசுங் கால" என்னும் குறுந்தொகைப் பாட்டு, "யானுந் தோழியும் ஆயமும் ஆடுந் துறை நண்ணி" என்னும் பழம் பாட்டு முதலியவற்றோடு இதனை ஒப்பிட்டுக் காண்க. இரைமேய் வைகு அக்குருகு உணரா - இரையையே விரும்பி அதன் வரவு பார்த்திருத்தலின் கொக்குக்களும் பார்த்திருக்க மாட்டா. புன்னை மீ மது உண்டு (ஒலிக்கின்ற) வண்டுகளோ எனின் அமர்பு கடிய - மதுவிலே படிந்து எழமாட்டா. எனவே, அவைகளும் பார்த்திருத்தற்கில்லை. பாய் இரை கடல் வாய் நாகம் கொண்டோன் - பரந்துபட்டு ஒலிக்கின்ற கடந்து பாம்பளையைக் கொண்டோன்; திருமால், பவ்வம் நீர் தூய் இரை கானல் - கடல் நீரைத் தூவி ஒலிக்கின்ற கரையிடத்து. நம் துறைவர்பொய் மற்று ஆர் அறிவார் - நமது நெய்தல் நிலத்துத் தலைவர் 'உன்னைப் பிரியேன்' என்று சூளுரைத்து அதனைப் பொய்த்தமைக்குச் சான்று சொல்வார் வேறுயாவர்! "குருகு" எனவும், "புன்னை மீ வண்டு" எனவும், "கானல்" எனவும் கூறினமையால் தலைவன் கூடிப் பிரிந்தது கடற்கரைக் கண்ணே என்பதும், "மற்று ஆர் அறிவார்" என்றதானால், 'கூடியது களவினால்' என்பதும் குறிக்கப்பட்டன.*

***988. குறிப்புரை :*** *இது, வரைவிடை வைத்துப் பிரிந்த தலைவன் நீட்டிப்புப் பற்றி வருந்திய தலைவிக்குத் தோழி தலைவனது தேர்வரவைக் கூறியது. பொய் வரு நெஞ்சினர் - பொய் சொல்லும் எண்ணம் வருகின்ற நெஞ்சையுடையவர். 'நெஞ்சினரொடு' என்னும் எண்ணொடு தொகுத்தலாயிற்று. உம்மை - இறந்தது தழுவிய எச்சம். போக விடாமை -*

தப்ப விடாமை அஃதாது, 'தப்பாது ஒறுப்பவர்' என்பதாம். 'கச்சியின் கண் அணைகின்றது' என்க. விரையின - விரைவாகப் பறப்பன. கை வருதல் - எப்பக்கத்திலும் வருதல். 'புள்ளினம் வானத்திலும் சங்கு கடலினும் ஆர்ப்ப' என்க. அதிர்வு கேட்டு இவை ஆர்க்கின்றனவாம். புள் - நீர்ப் பறவை. தாமங்கள் இனம் - தேரிலும், குதிரைகளிடத்திலும் உள்ள மணி ஒழுங்கின் இனம்.

***989. குறிப்புரை :*** "நெஞ்சே" என்பதை முதலிற் கொள்க. திருஏகம்பர்க்கு நாளும் விடாது அடிமை நின்று செய்வார் அவர்பால் நின்று நீள்நெறி காட்டுவர். எத்தனையும் (மிகச் சிறிதாயினும் பணி) இன்று செய்வோம் (இன்றே செய்வோம். இதனில் நீங்கி, - பணி நாளை நன்று செய்வோம் (மிகுதியாகச் செய்வோம்) - என்று உள்ளி (நினைத்து) உடலில் (உடல் வளர்க்கும் செயலிலே) சென்று, ஒரு நாளும், ஒன்றும் செயாரைத் துணை விடு' என இயைத்து முடிக்க. பணி சிறிதளவாயினும் அப்பொழுதே செய்தல் வேண்டும். 'நாளை மிகுதியாகச் செய்வோம்' என்று விடுதல் கூடாது என்பதாம்!

***990. குறிப்புரை :*** இஃது ஆசிரியர் திருவேகம்பர் தமக்குச் செய்த திருவருளை வியந்து போற்றியது. 'காதல் வெள்ளம் ஈட்டி வைத்தார் தொழும் ஏகம்பர், ஏதும் இலாத எம்மை, யாம் தம்மைக் கடிப் பூப்பெய்யக் காட்டி வைத்தார்; அன்பு பூட்டி வைத்தார்; அது பெற்றுப் பதிற்றுப்பத்துப் பாட்டு இவைத் தார்ப்பரவி அவர்பாதங்கள் தொழுதாம்' என இயைத்துக் கொள்க. காதல் வெள்ளம் ஈட்டி வைத்தார், திருத்தொண்டர்கள். ஏதும் இலாத - நல்லது ஒன்றும் இல்லாத. கடி - நறுமணம். "பூப்பெய்ய" என்பது 'பூசிக்க' என்னும் பொருட்டாகலின் அது. "தம்மை" என்னும் இரண்டாவதற்கு முடிபாயிற்று. காட்டி - அறிவித்து. பூட்டி - பூண்பித்து. அது - அவ்வன்பை "பதிற்றுப் பத்து" என்பது 'நூறு' என்னும் பொருட்டு. நூறு பாட்டாகிய இவையாகிய தாரால் (மாலையால்) அவர் பாதங்களை யாம் பரவி (துதித்து)த் தொழுதாம்' என்க. 'யாம் அறிவையும், அன்பையும் பெற்று அவரை பூசித்ததும், நூறு பாடல்களாலாகிய பாமாலையால் அவர் பாதங்களைப் பரவித் தொழுததும் எல்லாம் அவர் செய்விக்கவே' என்றபடி. 'வைத்தல்' என்பது துணை வினையாகலின், "காட்டி வைத்தார்" முதலிய மூன்றும் ஒருசொல் நீர்மைய!

***991. குறிப்புரை :*** இப்பாட்டு, 'இப்பிரபந்தத்தை அடியார்கள் ஏற்றருள வேண்டும்' என அவையடக்கம் கூறியது, அடியார் ஏற்ற பின்பே ஆண்டான் ஏற்பன் ஆகலின், பாதம் பரவி - தமது பாதங்களைத் துதிக்கும் துதியாக. ஓர்

**990.** காட்டிவைத் தார்தம்மை யாம்கடிப் பூப்பெய்யக் காதல்வெள்ளம்
ஈட்டிவைத் தார்தொழும் ஏகம்பர் ஏதும் இலாதவெம்மைப்
பூட்டிவைத் தார்தமக் கன்பது பெற்றுப் பதிற்றுப்பத்துப்
பாட்டிவைத் தார்பர வித்தொழு வாமவர் பாதங்களே. **99**

**991.** பாதம் பரவியொர் பித்துப் பிதற்றினும் பல்பணியும்
ஏதம் புகுதா வகையருள் ஏகம்பர் ஏத்தெனவே
போதம் பொருளால் பொலியாத புன்சொல் பனுவல்களும்
வேதம் பொலியும் பொருளாம் எனக்கொள்வர் மெய்த்தொண்டரே. **100**

*திருச்சிற்றம்பலம்*

---

*பித்துப் பிதற்றிதும் - பித்தன் ஒருவன் பிதற்றுதல் போலச் சிலவற்றைப் பிதற்றினாலும், 'அது குற்றம் ஆகாதபடி அருள் செய்பவர் திருவேகம்பர்' என்பதாம். இதனை, "முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழ வைப்போன்"* என்பதனோடு ஒப்பிட்டுக் காண்க. இதனால், இத்தகைய ஏகம்பரது ஏத்து (துதி) என்பது, ஞானம் பொருளாய் நிற்க விளங்குதல் இல்லாத புன் சொற்கள் நிறைந்த பாத் தொடையாயினும் அதனை மெய்த் தொண்டர்கள் வேதப் பொருள் பொலிகின்ற பாத் தொடையாகவே மதித்து ஏற்றுக் கொள்வார் என்பதாம். எனவே, 'எனது புன்சொற் பனுவலாகிய இதனையும் அவர்கள் அவ்வாறு ஏற்றுக் கொள்வார்கள்' என்பது குறிப்பெச்ச மாயிற்று. "வகையருள் ஏகம்பர்" என்றதனால், 'வகையருள்பவர் ஏகம்பர்' என்பது அனுவாதத்தால் பெறப்பட்டது. "போதம் பொருளால் பொலியாத" என்றது, 'போதம் பொருளாக, அதனாற் பொலியாத' எனப் பொருள் தந்தது.*

***திருஏகம்பமுடையார் திருவந்தாதி முற்றிற்று.***

---

* *கந்தர் அலங்காரம் - 22.*

## கச்சி ஏகம்பத்தின் தலச்சிறப்புகள்

*(தெய்வச் சேக்கிழார் மூலமும் அதற்கு சி.கே.எஸ் அவர்களின் விளக்கமும்)*

இவ் வளந்தரு பெருந்திரு நாட்டிடை என்றும்
மெய் வளந்தரு சிறப்பினால் உலகெலாம் வியப்ப
எவ் உகங்களும் உள்ளது என்று யாவரும் ஏத்தும்
கை விளங்கிய நிலையது காஞ்சி மா நகரம். 1130*

ஆனதொல் நகர் அம்பிகை, தம் பெருமானை
மான அர்ச்சனையால் ஒரு காலத்து வழிபட்டு
ஊனம் இல் அறம் அனேகமும் உலகுஉய்ய வைத்த
மேன்மை பூண்டஅப் பெருமையை அறிந்தவர் விளம்பில். 1131

வெள்ளி மால்வரைக் கயிலையில் வீற்றிருந்தருளித்
துள்ளு வார்புனல் வேணியார் அருள்செயத் தொழுது
தெள்ளு வாய்மையின் ஆகமத் திறன்எலாம் தெரிய
உள்ளவாறு கேட்டருளினாள் உலகை ஆளுடையாள். 1132

எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும்
உண்மையாவது பூசனை என உரைத்தருள
அண்ணலார்தமை அர்ச்சனை புரிய ஆதரித்தாள்
பெண்ணின் நல்லவள் ஆயின பெருந்தவக் கொழுந்து. 1133

நங்கை உள்நிறை காதலை நோக்கி,
நாயகன் திருஉள்ளத்து மகிழ்ந்தே
அங்கண் எய்திய முறுவலும் தோன்ற
அடுத்தது என்கொல்நின் பால்? என வினவ,
இங்கு, நாத! நீ மொழிந்த ஆகமத்தின்
இயல்பினால் உனை அர்ச்சனை புரியப்
பொங்கு கின்றதுஎன் ஆசைஎன்று இறைஞ்சிப்
போகம் ஆர்த்தபூண் முலையினாள் போற்ற. 1134

தேவ தேவனும் அதுதிரு வுள்ளம்
செய்து, தென்திசை மிக்கசெய் தவத்தால்
யாவரும் தனை அடைவது மண் மேல்
என்றும் உள்ளது காஞ்சி, மற்று அதனுள்

---

* *எண்கள் - பெரியபுராணச் செய்யுள் எண்கள்*

மாஅ மர்ந்தநம் இருக்கையில் அணைந்து
        மன்னு பூசனை மகிழ்ந்து செய்வாய் என்று
ஏவ, எம்பெரு மாட்டியும் பிரியா
        இசைவு கொண்டு எழுந்தருளுதற்கு இசைந்தாள். 1135

ஏதம்இல்பல் யோனி எண்பத்து
        நான்குநூறாயி ரந்தனுள் வைத்த
பேத மும்புரந் தருளும் அக் கருணைப்
        பிரான்மொழிந்த ஆகமவழி பேணிப்
போது நீர்மையில் தொழுதனள் போதப்
        பொருப்பில் வேந்தனும் விருப்பில் வந்து எய்தி
மாத வம்புரிந்தருளுதற்கு அமைந்த
        வளத்தொடும் பரிசனங்களை விடுத்தான். 1136

துன்னு பல்உயிர் வானவர் முதலாச்
        சூழ்ந்து உடன்செலக் காஞ்சியில் அணையத்
தன்னை நேர்வுஅரும் பதுமமா நாகம்
        தம்பி ராட்டிதாள் தலைமிசை வைத்தே
அன்னையாய் உலகு அனைத்தையும் ஈன்றாய்!
        அடியனேன் உறை பிலம்அத னிடையே
மன்ன கோயில்கொண்டு அருளுவாய் என்ன
        மலை மடந்தைமற்று அதற்கு அருள் புரிந்து. 1137

அங்கு மண்ணுல கத்துஉயிர் தழைப்ப
        அளவுஇல் இன்பத்தின் அருள்கரு இருத்தித்
திங்கள் தங்கிய புரிசடையார்க்குத்
        திருந்து பூசனை விரும்பினள் செய்ய,
எங்கும் நாடவும் திரு விளையாட்டால்
        ஏக மாமுதல் எதிர்ப்படாது ஒழியப்
பொங்கு மாதவம் செய்து காண்பதற்கே
        புரிவு செய்தனள் – பொன் மலை வல்லி. 1138

நெஞ்சம் ஈசனைக் காண்பதே விரும்பி
        நிரந்தரம் திரு வாக்கினில் நிகழ்வது
அஞ்செழுத்துமே ஆக, ஆளுடைய
        அம்மை செம்மலர்க் கைகுவித்தருளித்
தஞ்சம் ஆகிய அருந்தவம் புரியத்
        தரிப்பரே? அவள் தனிப்பெருங் கணவர்

வஞ்சம் நீக்கிய மாவின் மூலத்தில்
வந்து தோன்றினார் – மலைமகள் காண. 1139

கண்டபோதில் அப்பெருந்தவப் பயன்ஆம்
கம்பம் மேவிய தம் பெருமானை
வண்டு உலாம் குழல் கற்றைமுன் தாழ
வணங்கி, வந்துஎழும் ஆசைமுன் பொங்கக்
கொண்ட காதலின் விருப்பு அளவு இன்றிக்
குறித்த பூசனை கொள்கைமேல் கொண்டு
தொண்டை அம்கனி வாய்உமை நங்கை
தூய அர்ச்சனை தொடங்குதல் புரிவாய். 1140

உம்பர் நாயகர் பூசனைக்கு அவர்தாம்
உரைத்த ஆகமத்து உண்மையே தலைநின்று
எம்பிராட்டி அர்ச் சனைபுரி வதனுக்கு
இயல்பில் வாழ்திருச் சேடியாரான
கொம்பு அனார்கள் பூம்பிடகைகொண்டு அணையக்
குலவு மென்தளிர் அடிஇணை ஒதுங்கி
அம்பி காவனம் ஆம்திரு வனத்தில்
ஆன தூநறும் புதுமலர் கொய்தாள். 1141

கொய்த பல்மலர், கம்பைமா நதியில்
குலவு மஞ்சனம், நிலவுமெய்ப் பூச்சு,
நெய்த ரும்கொழும் தூபதீ பங்கள்
நிறைந்த சிந்தையில் நீடிய அன்பின்
மெய்த ரும்படி வேண்டிய எல்லாம்
வேண்டும் போதினில் உதவமெய்ப் பூசை
எய்த ஆகம விதிஎலாம் செய்தாள்
உயிர்கள் யாவையும் ஈன்ற எம்பிராட்டி. 1142

கரம்தரும் பயன் இது என உணர்ந்து
கம்பம் மேவிய உம்பர் நாயகர் பால்
நிரந்த காதல்செய் உள்ளத்தள் ஆகி,
நீடுநன்மைகள் யாவையும் பெருக
வரம் தரும் பொரு ளாம்மலை வல்லி
மாறிலா வகை மலர்ந்த பேரன்பால்
சிரம் பணிந்துஎழு பூசை, நாள் தோறும்
திருவு ளம் கொளப் பெருகியது அன்றே. 1143

நாதரும் பெரு விருப்பொடு நயந்து
நங்கை அர்ச்சனை செய்யும் அப்பொழுதில்
காதல் மிக்கஓர் திரு விளையாட்டில்
கனங்குழைக்கு அருள் புரிந்திட வேண்டி,
ஓதம் ஆர்கடல் ஏழும் ஒன்றாகி
ஓங்கி வானமும் உட்படப் பரந்து
மீது செல்வது போல் வரக் கம்பை
வெள்ளமாம் திருவுள்ளமும் செய்தார். 1144

அண்ணலார் அருள் வெள்ளத்தை நோக்கி
அங்கயற்கண்ணி தம்பெருமான் மேல்
விண் எலாம் கொள வரும்பெரு வெள்ளம்
மீது வந்துறும் எனவெருக் கொண்டே,
உள் நிலாவிய பதைப்பு உறு காதல்
உடன் திருக்கையால் தடுத்தும் நில்லாமை
தண்ணிலா மலர் வேணியினாரைத்
தழுவிக் கொண்டனள், தன்னையே ஒப்பாள். 1145

மலைக் குலக்கொடி பரிவுஉறு பயத்தால்
மாவின் மேவிய தேவ நாயகரை,
முலைக்கு வட்டொடு வளைக்கையால் நெருக்கி,
முறுகு காதலால் இறுகிடத் தழுவச்
சிலைத் தனித்திரு நுதல் திரு முலைக்கும்
செந்தளிர்க் கரங்களுக்கும் மெத் தெனவே
கொலைக் களிற்றுஉரி புனைந்ததம் மேனி
குழைந்து காட்டினார், விழைந்த கொள்கையினார். 1146

கம்பர் காதலி தழுவமெய் குழையக்
கண்டு, நிற்பவும் சரிப்பவும் ஆன
உம்பரே முதல் யோனிகள் எல்லாம்
உயிரும் யாக்கையும் உருகி ஒன்றாகி
எம்பிராட்டிக்கு மெல்லியர் ஆனார்
என்றும் ஏகம்பர் என்றுஎடுத்து ஏத்த
வம்புஉலா மலர் நிறையவிண் பொழியக்
கம்பை யாறுமுன் வணங்கியது அன்றே. 1147

பூதி ஆகிய புதினநீறு ஆடிப்
பொங்கு கங்கைதோய் முடிச்சடை புனைந்து

காதில் வெண்குழை கண்டிகை தாழக்
கலந்த யோகத்தின் மருவிய கருத்தால்
ஆதி தேவனார் ஆயும் மாதவம் செய்
அவ்வரம் கொலோ! அகிலம் ஈன்று அளித்த
மாதுமெய்ப்பயன் கொடுப்பவே கொண்டு
வளைத்தழும்புடன் முலைச்சுவடு அணிந்தார். 1148

கோதுஇலா அமுதுஅனையவள் முலைக்குக்
குழைந்ததம் மணவாளநற் கோலம்
மாதுவாழவே காட்டிமுன் நின்று,
வரங்கள் வேண்டுவ கொள்க என்று அருள
வேற காரணர் ஆய ஏகம்பர்
விரைம லர்ச்செய்ய தாமரைக் கழல்கீழ்
ஏதம் நீங்கிய பூசனை முடிந்தது
இன்மை தான் அறிவிப்பதற்கு இறைஞ்சி. 1149

அண்டர் நாயகர் எதிர்நின்று கூறும்
அளவினால் அஞ்சிஅஞ்சலி கூப்பிக்
கொண்ட இற்றைஎன் பூசனை இன்னும்
குறைநிரம்பிடக் கொள்க என்று அருள,
வண்டுவார் குழல் மலைமகள் கமல
வதனம் நோக்கி, அம்மலர்க்கண்நெற் றியின்மேல்
முண்ட நீற்றர், நின் பூசனை என்றும்
முடிவது இல்லை, நம்பால் என மொழிய. 1150

மாறுஇலாத இப்பூசனை என்றும்
மன்ன, எம்பிரான் மகிழ்ந்து கொண்டருளி,
ஈறுஇலாதஇப் பதியினுள் எல்லா
அறமும் யான்செய அருள்செய வேண்டும்
வேறு செய்வினை திருவடிப் பிழைத்தல்
ஒழிய, இங்குஉளார் வேண்டிய செயினும்
பேறு மாதவப் பயன்கொடுத் தருளப்
பெறவும் வேண்டும் என் றனள்பிறப்பு ஒழிப்பாள். 1151

விடையின் மேலவர் மலைமகள் வேண்ட,
விரும்பு பூசனை மேவி வீற்றிருந்தே,
இடை அறாஅறம் வளர்க்கும் வித்து ஆக
இக பரத்துஇரு நாழிநெல் அளித்துக்

கடையர் ஆகியும் உய்த்தவ ராயும்
காஞ்சி வாழ்பவர் தாம்செய் தீவினையும்
தடைபடாது மெய்ந் நெறிஅடை வதற்காம்
தவங்கள் ஆகவும் உவந்துஅருள் செய்தார். 1152

எண்ணரும் பெரு வரங்கள் முன்பெற்று அங்கு
எம்பிராட்டி தம்பிரான் மகிழ்ந்தருள
மண்ணின் மேல் வழிபாடு செய்தருளி
மனை அறம்பெருக் கும்கரு ணையினால்
நண்ணும் மன்னுயிர் யாவையும் பல்க
நாடு காதலின் நீடிய வாழ்க்கைப்
புண்ணியத் திருக் காமக் கோட்டத்துப்
பொலிய முப்பதோடு இரண்டு அறம் புரக்கும். 1153

அலகில் நீள்தவத்து அறப்பெருஞ் செல்வி
அண்ட மாம் திருமனைக்கு இடும் தீபம்
உலகில் வந்துறு பயன் அறிவிக்க
ஓங்கும் நாண்மலர் மூன்றுடன் ஒன்று
நிலவ ஆண்டினுக்கு ஒருமுறை செய்யும்
நீடு தொன்மையால் நிறைந்தபேர் உலகம்
மலர் பெருந்திருக் காமக் கோட்டத்து
வைத்த நல்லறம் மன்னவே மன்னும். 1154

தீங்குதீர்க்கும் நல்தீர்த்தங்கள் போற்றும்
சிறப்பினால் திருக்காமக் கோட்டத்தின்
பாங்குமூன்று உலகத்தின் உள்ளோரும்
பரவு தீர்த்தமாம் பைம்புனல் கேணி
வாங்குதெண் திரைவேலைமே கலைசூழ்
வையகம் தனக்கு எய்திய படியாய்
ஓங்கு தன்வடி வாய்நிகழ்ந்து என்றும்
உள்ளது ஒன்று உலகாணி என்று உளதால். 1155

அந்தம் இன்றிநல்லறம் புரிந்து அளிக்கும்
அன்னை தன்திருக் காமக்கோட் டத்தில்
வந்து, சந்திர சூரியர் மீது
வழிக் கொளாது, அதன் மருங்கு போதலினால்
சந்த மாதிரம் மயங்கிஎம் மருங்கும்
சாயை மாறிய தன்திசை மயக்கம்

இந்த மாநிலத்தவர் எலாம் காண
என்றும் உள்ளதுஒன்று இன்றும் அங்கு உளதால். 1156

கன்னி நல்நெடுங் காப்புடை வரைப்பில்
காஞ்சியாம் திரு நதிக்கரை மருங்கு,
சென்னியில் பிறைஅணிந்தவர் விரும்பும்
திருப்பெரும் பெயர் இருக்கையில் திகழ்ந்து,
மன்னுவெங்கதிர் மீதுஎழும் போதும்
மறித்து மேல்கடல் தலைவிழும் போதும்
தன் நிழல் பிரியாதவண் காஞ்சித்
தானம் மேவிய மேன்மையும் உடைத்தால். 1157

மறைகளால் துதித்து அருந்தவம் புரிந்து,
மாறு இலாநிய மம்தலை நின்று,
முறைமையால் வரும் பூசனைசெய்ய
முனிவர் வானவர் முதல் உயிர் எல்லாம்
நிறையும் அன்பினால் அர்ச்சனை செய்ய
நீடு காமங்கள் அவர்அவர்க்குஅருளி,
இறைவர்தாம் மகிழ்ந்து அருளிய பதிகள்
எண்இறந்த அத் திருநகர் எல்லை. 1158

மன்னுகின்ற அத்திருநகர் வரைப்பின்
மண்ணில் மிக்கது ஓர் நன்மையினாலே
துன்னும் யானையைத் தூற்றிவாழ் முயல்முன்
துரக்க எய்திய தொலைவுஇல் ஊக்கத்தால்
தன் நிலத்து நின்று அகற்றுதல் செய்யும்
தானம் அன்றியும் தனுஎழும் தரணி
எந்நி லத்தினும் காண்புஅரும் இறவாத்
தானம் என்றுஇவை இயல்பினில் உடைத்தால். 1159

ஈண்டு தீவினை யாவையும் நீக்கி,
இன்பமே தரும் புண்ணிய தீர்த்தம்,
வேண்டினார் தமக்கு இட்ட சித்தியதாய்
விளங்கு தீர்த்தம் நன்மங்கல தீர்த்தம்
நீண்ட காப்புடைத் தீர்த்தம், மூன்று உலகில்
நிகழ்ந்த சாருவ தீர்த்தமே முதலா
ஆண்டு நீடிய தீர்த்தம் எண்ணிலவும்
அமர நாட்டவர் ஆடுதல் ஒழியார். 1160

தாளது ஒன்றினில் மூன்றுபூ மலரும்
தமனியச் செழுந் தாமரைத் தடமும்
நீளவார்புனல் குடதிசை ஓடி,
நீர்கரக்கு மாநதியுடன் நீடு
நாள்அலர்ந்து செங்குவளை பைங் கமலம்,
நண்பகல் தரும் பாடலம், அன்றிக்
காள மேகம் ஒப்பாள் உறைவரைப்பில்
கண் படாத காயாப் புளி உளதால். 1161

சாயை முன்பிணிக் கும்கிணறு ஒன்று,
தஞ்சம் உண்ணின்நஞ் சாம்தடம் ஒன்று,
மாயை இன்றிவந்து உள்அடைந் தார்கள்
வானரத்து உருவாம் பிலம் ஒன்று,
மேய அவ்உரு நீங்கிடக் குளிக்கும்
விளங்கு பொய்கையும் ஒன்று, விண்ணவரோடு
ஆய இன்பம்உய்க் கும்பிலம் ஒன்றோடு
அனைய ஆகிய அதிசயம் பலவால். 1162

அஞ்சுவான் கரத்து ஆறுஇழி மதத்துஓர்
ஆனை நிற்கவும் அரைஇருள் திரியும்
மஞ்சுநீள்வது போலும் மாமேனி
மலர்ப் பதங்களில் வண்சிலம்பு ஒலிப்ப,
நஞ்சு பில்கு எயிற்று அரவ வெற்று அரையின்
நாம மூன்று இலைப் படைஉடைப் பிள்ளை
எஞ்சல் இன்றி முன் திரியவும் குன்றம்
எறிந்த வேலவன் காக்கவும் இசையும். 1163

சத்தி தற்பர சித்த யோகிகளும்
சாதகத் தனித் தலைவரும் முதலா
நித்தம் எய்திய ஆயுள்மெய்த் தவர்கள்
நீடு வாழ்திருப் பாடியும் அநேகம்
சித்தர் விஞ்சையர் இயக்கர் கந்தருவர்
திகழ்ந்து மன்னுவார் செண்டு கை ஏந்தி,
வித்தகக் கரி மேல்கொளும் காரி
மேவு செண்டு அணை வெளியும் ஒன்று உளதால். 1164

வந்து அடைந்தவர் தம் உருமாய
மற்றுளாரைத் தாம் காண்பிடம் உளது

சிந்தை யோகத்து முனிவர் யோகினிகள்
சேரும் யோகபீ டமும் உளது என்றும்
அந்தம் இல்அறம் புரப்பவள் கோயில்
ஆனபோகபீடமும் உளதாகும்
ஏந்தை யார்மகிழ் காஞ்சி நீடு எல்லை
எல்லை இல்லன உள்ள, ஆர் அறிவார்? 1165

தூண்டு சோதி ஒன்று எழுந்து இருள் துரக்கும்
சுரர்கள் வந்துசூழ் உருத்திர சோலை
வேண்டி னார்கள்தம் பிறப்பினை ஒழிக்கும்
மெய்ந்நெறிக்கண் நின்றார்கள்தாம் விருக்கும்
தீண்டில் யாவையும் செம்பொன் ஆக்குவது ஓர்
சிலையும் உண்டு, உரை செய்வதற்கு அரிதால்
ஆண்ட நாயகி சமயங்கள் ஆறும்
அகில யோனியும் அளிக்கும் அந்நகரம் 1166

என்றும் உள்ளஇந் நகர்கலி யுகத்தில்
இலங்கு வேல்கரி காற்பெரு வளத்தோன்
வன்தி றல்புலி இமயமால் வரைமேல்
வைக்க ஏகுவோன் தனக்குஇதன் வளமை
சென்றுவேடன்முன் கண்டுஉரை செய்யத்
திருந்து காதம்நான்கு உட்பட வகுத்துக்
குன்றுபோலும் மாமதில் புடைபோக்கிக்
குடி இருத்தின கொள்கையின் விளங்கும். 1167

தண்காஞ்சி மென்சினைப்பூங் கொம்பர் ஆடல்
சார்ந்துஅசைய, அதன் மருங்கு கரும்புதாழ்ந்து
பண்காஞ்சி இசைபாடும் பழன வேலிப்
பணைமருதம் புடைஉடைத்தாய்ப் பாரில் நீடும்
திண்காஞ்சிநகர் நொச்சி இஞ்சி சூழ்ந்த
செழுங்கிடங்கு திருமறைகள் ஒலிக்கும் தெய்வ
வண்காஞ்சி அல்குல் மலைவல்லி காக்க
வளர்கருணைக் கடல்உலகம் சூழ்ந்தால் மானும். 1168

கொந்துஅலர்பூங் குழல்இமயக் கொம்பு கம்பர்
கொள்ளும்பூ சனைகுறித்த தானம் காக்க
மந்திரமா மதில்அகழி அவர்தாம் தந்த
வாய்மை ஆகம விதியின் வகுப்புப் போலும்

அந்தம்இல்சீர்க் காஞ்சியைவந்து அடைந்தார்க்கு அன்றி
அடைகளங்கம் அறுப்புஅரிது என்றுஅறிந்து சூழ
வந்துஅணைந்து தன்கறுப்பும் உவர்ப்பும் நீக்கும்
மாகடலும் போலும்மலர்க் கிடங்குமாதோ. 1169

ஆங்கு வளர் எயிலினுடன் விளங்கும் வாயில்
அப்பதியில் வாழ் பெரியோர் உள்ளம் போல
ஓங்கு நிலத் தன்மையவாய் அகிலம் உய்ய,
உமைபாகர் அருள்செய்த ஒழுக்கம், அல்லால்
தீங்குநெறி அடையாத தடையும் ஆகிச்
செந்நெறிக்கண் நிகழ்வாய்மை திருந்து மார்க்கம்
தாம்குலவ நிலவிவளர் ஒளியால் என்றும்
தடநெடுவான் அளப்பனவாம் தகைய ஆகும். 1170

மாறுபெறல் அருங்கனக மாடம் நீடு
மணிமறுகும் நெடுந்தெருவும் வளத்தில் வந்த
ஆறுபயில் ஆவணவீ திகளும் மற்றும்
அமைந்தநகர், அணிவரைகள் நடுவு போக்கிக்
கூறுபடு நவகண்டம் அன்றி, மல்கக்
கொண்ட அநேகம் கண்டம் ஆகி அன்ன
வேறொரு மண்ணுலகதனில் உளதாம் என்ன
விளங்கியமா லோக நிலை மேவிற்று அன்றே. 1171

பாகமருங்கு இருபுடையும் உயர்ந்து நீண்ட
படர்ஒளிமா ளிகைநிரைகள் பயில்மென் கூந்தல்
தோகையர்தம் குழாம்அலையத் தூக்கு முத்தின்
சுடர்க்கோவைக் குளிர்நீர்மை துதைந்த வீதி
மாகம்இடை ஒளிதழைப்ப மன்னி நீடு
மருங்கு தாரகை அலைய வரம்பில் வண்ண
மேகம்இடை கிழித்துஒழுகும் தெய்வக்கங்கை
மேல்நதிகள் பல மண்மேல் விளங்கி ஒக்கும். 1172

கிளர்ஒளிச்செங் கனகமயம் தானாய் மாடு
கீழ்நிலைஓர் நீலச் சோபானம் பூணக்
கொள அமைத்துமீது ஒருபால் கன்ன சாலை
குல வயிரத்தால் அமைத்த கொள்கையாலே
அளவு இல் சுடர்ப்பிழம்பு ஆனார் தம்மைத் தேடி
அகழ்ந்து, ஏனம் ஆனானும் ஆகி

வளர் விசும்பில் எழுந்தானும் போல நீடு
மாளிகையும் உளமற்று மறுகு தோறும். 1173

மின்பொலிபல் மணிமிடைந்த தவள மாட
மிசைப் பயில்சந் திரகாந்தம் விசும்பின் மீது
பொன்புரையும் செக்கர்நிறப் பொழுது தோன்றும்
புனிற்று மதி கண்டுஉருகிப் பொழிந்த நீரால்
வன்புலியின் உரிஆடைத் திருஏ கம்பர்
வளர்சடையும் இளம் பிறையும் கண்டு கும்பிட்டு
அன்பு உருகி மெய்பொழியக் கண்ணீர் வாரும்
அடியவரும் அனையஉள அலகு இலாத. 1174

முகில் உரிஞ்சும் கொடி தொடுத்த முடிய ஆகும்
முழுப் பளிங்கின் மாளிகைகள் முற்றும் சுற்றும்
நிகர்இல் சரா சரங்கள் எல்லாம் நிழலி னாலே
நிறைதலினால் நிறைதவம்செய் இமயப் பாவை
நகில் உழுத சுவடும்வளைத் தழும்பும் பூண்ட
நாயகனார் நான்முகற்குப் படைக்க நல்கும்
அகில யோனிகள் எல்லாம் அமைத்து வைத்த
அரும் பெரும் பண்டார நிலை அனைய ஆகும். 1175

பொன்களப மாளிகைமேல் முன்றில் நின்று
பூங்கழங்கும் மணிப்பந்தும் போற்றி ஆடும்
வில்புருவக் கொடிமடவார் கலன்கள் சிந்தி
விழுவனவும் கெழுவுதுணை மேவும் மாதர்
அன்புமுதிர் கலவியினில் பரிந்து சிந்தும்
அணிமணிச்சே டியர்தொகுக்கு மவையும் ஆகி,
நல்கனக மழைஅன்றிக் காஞ்சி எல்லை நவமணி
மாரியும் பொழியும் நாளும் நாளும். 1176

பூமகளுக்கு உறையுள்எனும் தகைய வான
பொன்மாடத்து அரமியங்கள் பொலிய நின்று
மாமகரக் குழைமகளிர் மைந்தர்அங்கண்
வந்துஏறு முன்நறுநீர் வண்டல்ஆடத்
தூமணிப்பொன் புனைநாணத் துருத்தி
சுடர்விடுசெங் குங்குமநீர்த் துவலை தோய்ந்த
காமர்மணி நாசிகையின் மருங்கு தங்கும்
கருமுகில்கள் செம்முகில்கள் ஆகிக் காட்டும். 1177

இமைமலிய எடுத்தநெடு வரைகள் போல்
இலங்கு கதைத் தவள மாளிகை நீள் கோட்டுச்
சிமை அடையும் சோபான நிரையும் விண்ணும்
தெரிவு அரிய தூய்மையினால் அவற்றுள் சேர்ந்து
தமர்களுடன் இழிந்து ஏறு மைந்தர் மாதர்
தங்களையும் விசும்பிடை நின்று இழியா நிற்கும்
அமரரையும் அரமகளிர் தமையும் வெவ் வேறு
அறிவு அரிதாம் தகைமையன அநேகம் அங்கண். 1178

அரவநெடுந்தேர் வீதி அருகு மாடத்து
அணிமணிக் கோபுரத்து அயலே வியல் வாய்நீண்ட
விரவு மரகதச் சோதி வேதித் திண்ணை
விளிம்பின் ஒளி துளும்பு முறைப்படிமீது ஏறும்
குரவு அலரும் குழல்மடவார் அடியில் ஊட்டும்
குழம்பு அடுத்த செம்பஞ்சின் சுவட்டுக் கோலம்
பரவை நெடுந்தரங்க மிசை விளங்கித் தோன்றும்
பவளநறுந் தளிர்அனைய பலவும் பாங்கர். 1179

வேம்புசினக் களிற்று அதிர்வும் மாவின் ஆர்ப்பும்
வியன் நெடுந்தேர்க்கால் இசைப்பும் விழவு அறாத
அம்பொன் மணி வீதிகளின் அரங்கில் ஆடும்
அரிவையர் நூபுர ஒலியோடு அமையும் இம்பர்
உம்பரின் இந்திரன் களிற்றின் முழக்கும் தெய்வ
உயர் இரவி மாக் கலிப்பும் அயன் ஊர்தித் தேர்
பம்பு இசையும் விமானத்துள் ஆடும் தெய்வப்
பாவையர் நூபுர அரவத் துடனே பல்கும். 1180

அரு மறை அந்தணர் மன்னும் இருக்கை ஆன
ஆகுதியின் புகைஅடுத்த அம்பொன் மாடப்
பெருகுமறுகு தொறும்வேள்விச் சாலை எங்கும்
பெறும்அவிப்பா கம்கொடுக்கும் பெற்றி மேலோர்
வருமுறைமை அழைக்கவிடும் மந்திரம் எம் மருங்கும்
வானவர் நாயகர் திரு ஏகம்பர் முன்றில்
திருமலி பொன் கோபுரத்து நெருங்கும் எல்லாத்
தேவரையும் அணித்து ஆக்க கொண்டு செல்லும். 1181

அரசர்குலப் பெருந்தெருவும் தெற்றி முற்றத்து
ஆயுதங்கள் பயிலும் வியல் இடமும் அங்கண்

புரசை மதக் கரிகளொடு புரவி ஏறும்
பொற்பு உடைய வீதிகளும் பொலிய எங்கும்
விரைசெய் நறுந்தொடை அலங்கல் குமர் செய்யும்
வியப்பு உறுசெய் தொழில் கண்டு நெஞ்சை விண்ணோர்
நிரைசெறியும் விமான ஊர்திகளின் மேலும்
நில மிசையும் பல முறையும் நிரந்து நீங்கார். 1182

வெயில் உமிழும் பல மணிப்பூண் வணிக மாக்கள்
விரவு நிதிவளம் பெருக்கும் வெறுக்கை மிக்க
வயின்நிலவு மணிக்கடைமா நகர்கள் எல்லாம்
வனப்பு உடைய பொருள் குலங்கள் மலிதலாலே
கயிலை மலையார் கச்சி ஆலயங்கள்
கம்பமும் மேவிய தன்மை கண்டு போற்றப்
பயிலும் உருப் பல கொண்டு நிதிக் கோன் தங்கப்
பயில் அளகாபுரி வகுத்த பரிசு காட்டும். 1183

விழவு மலி திருக் காஞ்சி வரைப்பின் வேளாண்
விழுக் குடிமைப் பெருஞ்செல்வர் விளங்கும் வேணி
மழஇளவெண் திங்கள் புனை கம்பர் செம்பொன்
மலை வல்லிக்கு அளித்த வளர் உணவின் மூலம்
தொழ உலகு பெறும் அவள் தாள் அருளப் பெற்றுத்
தொல் நிலத்து மன்னு பயிர் வேத வாய்மை
உழவு தொழிலால் பெருக்கி உயிர்கள் எல்லாம்
ஓங்க வரும் தரும வினைக்கு உளரால் என்றும் 1184

ஓங்கிய நாற்குலத்து ஒவ்வாப் புணர்வில் தம்மில்
உயர்ந்தனவும் இழிந்தனவும் ஆன சாதி
தாம் குழுமிப் பிறந்த குலபேதம் எல்லாம்
தம் தகைமைக்கு ஏற்ற தனி இடங்கள் மேவி
ஆங்கு நிறைகிளை பயின்று மரபின் ஆற்ற
அடுத்த வினைத் தொழில் முறைமை வழாமை நீடு
பாங்கு வளர் இருக்கை நிலை பலவும் எல்லாம்
பண்பு நீடிய உரிமைப் பால அன்றே. 1185

## கலி விருத்தம்

ஆதி மூதெயில் அந்நகர் மன்னிய
சோதி நீள்மணித் தூபமும் தீபமும்

கோது இல் பல் இயமும் கொடியும் பயில்
வீதி, நாளும் ஒழியா விழா அணி. 1186

வாயில் எங்கணும் தோரணம், மா மதில்
ஞாயில் எங்கணும் சூழ்முகில், நாள்மதி
தோய் இல் எங்கணும் மங்கலம், தொண்டர் சூழ்
கோயில் எங்கணும் உம்பர் குலக் குழாம். 1187

வேத வேதியர் வேள்வியே தீயன
மாதர் ஓதி மலரே பிணியன
காதல் வீதி விலக்கே கவலைய
சூத மாதவியே புறம் சூழ்வன. 1188

சாய லார்கள் நுசுப்பே தளர்வன
ஆய மாடக் கொடியே அசைவன
சேய ஓடைக் களிறே திகைப்பன
பாய சோலைத் தருவே பயத்தன. 1189

அண்ணலார் அன்பர் அன்பே முன் ஆர்த்தன
தண் நறுஞ் செழுந் தாதே துகள்வன
வண்ண நீள் மணிமாலையே தாழ்வன
எண்ணில் குங்குமச் சேறே இழுக்கின. 1190

வென்றி வானவர் தாம் விளையாடலும்
என்றும் உள்ளவர் வாழும் இயற்கையும்
நன்றும் உள்ளத்து நண்ணினர் வேட்கைகள்
ஒன்றும் அங்கு ஒழியா வகை உய்ப்பது. 1191

புரம் கடந்தவர் காஞ்சிபுரம் புகழ்
பரம்பு நீள் புவனம் பதினான்கினும்
வரம்பு இல் போக வனப்பின் வளம் எலாம்
நிரம்பு கொள்கலம் என்ன நிறைந்ததால். 1192

## காஞ்சி மாநகரம்

*இப்பெருந் திருநாட்டின் தலைநகரமாய் உலகெலாம் வியப்ப என்று முள்ளதாகிய நகரம் காஞ்சிபுரமாகும். அஃது உமையம்மையார் தன்னிடத்தே எழுந்தருளித் தவஞ்செய்து ஏகம்பநாதரைத் தழுவப்பெற்ற சரிதப் பெருமையுடையது.*

*திருக்கைலாயத்தில் ஆகமங்களையெல்லாம் இறைவர் அருளிச் செய்ய அம்மையார் கேட்டருளினர். எண்ணில் ஆகமங்களை அருளிய இறைவர் தாம் விரும்பும் உண்மையாவது பூசனையேயாகும் என்றருளிச் செய்ய, அவ்வாறே தாம் பூசை செய்ய அம்மையார் மனங் கொண்டனர். அதற்கேற்ற இடம் காஞ்சிபுரத்தின் மாவடியேயாகும் என்று இறைவர்பால் அறிந்து இறைவியார் அங்கு நின்றும் போந்து, மலையரசன் வந்து விடுத்த பரிசனங்களுடன் சென்று காஞ்சியில் பதும மா நாகம் வேண்டியபடி அதன் பிலத்துவாரத்தில் எழுந்தருளியிருந்து, கம்பை யாற்றின் கரையில் மாவின் மூலத்தில், தவஞ்செய்து, சிவனுரு வெளிப்படக்கண்டு, பூசிக்கத் தொடங்கி மெய்ப்பூசை யெய்த ஆகம விதியெலாஞ் செய்தருளினர். அப்போது இறைவனார் ஒரு திருவிளையாட்டினால் அம்மையாருக்கு அருள்செய்யத் திருவுளங்கொண்டு கம்பையாற்றிற் பெரு வெள்ளம் வர அருளினர். ஆறு பெருக்கெடுத்து மேலெழுந்துவரக் கண்டு தம் திருக்கையாற் றடுத்து நில்லாமையால் அம்மையார் வெருக்கொண்டு காதலால் முலைக்குவட்டொடு வளைக்கையால் நெருங்கி இறுகச் சிவபெருமானைத் தழுவிக் கொண்டனர். இறைவர் அதனை விரும்பியவராய் யானையை உரித்துப் போர்த்த தமது திருமேனி குழைத்து காட்டி முலைச்சுவடும் வளைத்தழும்பும் அணிந்து கொண்டு அத்திரு மேனி காட்டி வெளிப்பட்டருளினர். உம்பரே முதல் யோனிகள் உயிரும் உடம்பும் உருகி ஒன்றாகி இறைவரருளை ஏத்தின. கம்பையாறு முன் வெள்ளந் தவிர்ந்து வணங்கிற்று. "மணவாள வரங் கொள்க" என்றருள, அம்மையார், இறைஞ்சிநின்று, "இற்றை என்பூசை இன்னும் முடிந்ததில்லையாதலின் அதனைக் குறை நிரம்பிடக் கொண்டருளல் வேண்டு"மென்று விண்ணப்பிக்க, அதற்கு இறைவனார் "நம்பால் நின்பூசனை என்றும் முடிவதில்லை" என்றருளவே, அம்மையார் இறைவர்பால் வரங் கேட்கலாயினர். அவையாவன:- ''இந்தப் பூசை என்றும் மாறாது நிலைத்திருக்கும்படி தேவரீர் மகிழ்ந்துகொண்டருளுதல் வேண்டும்; இந்தப் பதியில் எல்லா அறங்களும் யான்செய்யும்படி அருளுதல் வேண்டும்; திருவடிப் பிழைத்தல் ஒன்றொழிய இங்குள்ளவர் வேறு செய்வினை எதுவேயாயினும் மாதவப்பயன் கொடுத்தருளப் பெறவும் வேண்டும்" என்ற மூன்றுமேயாம். எல்லா வுயிர்களின் பிறப்பையும் ஒழிக்கும் பேரருட் செல்வியாகிய அம்மையார் கேட்டருள, அவ்வாறே இறைவனார் அந்தப் பூசனையை விரும்பி வீற்றிருந்தும், இடையறாத அறங்களையெல்லாம் வளர்க்கும் விதமாக இகபரத்து இருநாழி நெல்லை அளித்தும், காஞ்சி வாழ்பவர் செய்தீவினையும் தடையின்றி மெய்ந்நெறியடையச் செய்யும் தவங்களாகவும் வரங்களை மகிழ்ந்து தந்தருளினர்.*

*தலவிசேடம் :- திருஏகாம்பரம். இஃது உலகத்திற்கெல்லாம் தாயாகிய அம்மையார் இறைவரிடத்துக் கேட்டருளிய ஆகமவழி உலகமுய்ய இறைவரைப் பூசிக்கும் பொருட்டுக் கயிலையினின்றும் இங்குப் போந்தருளிக் கம்பையாற்றின் கரையில் மாவடியில் திருவருளால் முளைத்தெழுந்த சிவலிங்கக்குறி கண்டு பூசித்துத் திருக்காமக்கோட்டத்தில் எழுந்தருளியிருந்து அறம் வளர்த்து உலகுயிர்களைக் காத்துவரும் பெருமையுடைய தலம். தாம் பூசை செய்யும்போது கம்பையாறு பெருகிவர, அம்மையார் நடுங்கி இறைவரைத் தழுவிக்கொண்ட காரணத்தால் கோயில் ஏகம்பம் எனப் பெயர் பெற்றது. (கம்பம் - நடுக்கம்). அம்மை வளைக்கையால் நெருக்கி இறுகிடத் தழுவ இறைவனார் தமது திருமேனி குழைந்து காட்டி வளைத்தழும்பும் முலைச்சுவடும் அணிந்து கோலங்காட்டி யருளித் தழுவக் குழைந்த நாத ராயினர். ஏகாம்பரம் என்ற பெயரும் இத்திருக்கோயிலுக்கு வழங்கும். அது வேறு பொருள் கொண்டது. (ஏகாம்பரம் - ஏகம் - ஒன்று; ஆம்ப்ரம் - மாமரம். ஒற்றை மாமரமுடையது. அம்ப்ரம் - ஆம்பரம் எனத் தற்பவமாயிற்று). மாவடியில் இறைவனார் அமர்ந்து இருக்கை கொண்டதனால் இப்பெயர் வழங்குவதாகும். முத்தித் தலங்க ளேழனுள் முதன்மை பெற்றது. ஐம்பூதப் பெருந்தலங்களுள் முதலாவது; பிருதுவித்தலம் என்பது. இதன் எல்லையுள் திருக்காமக் கோட்டம், திருக்குமர கோட்டம், கச்சபேசம் முதலிய விளக்கமான எண்ணிறந்த தளிகள் உள்ளன. திருவேகம்பத்தில் தெற்குத் திருவாயிலில் ஆயிரக்கான் மண்டபத்தின் முன்புறம் விகடசக்கர விநாயகர் விளக்கமாக எழுந்தருளியுள்ளார். முதலை வாயினின்றும் காப்பாற்றப்பட்டு மீட்கப்பட்ட யானை அத்திகிரி என்னும் மலையாக அமைய, திருமால், வரதராஜர் என்ற பெயருடன் கோயில் கொண்டுள்ளார். திருவொற்றியூரில் சபதம் பிழைத்த காரணமாக இரண்டு திருக்கண்களும் மறையப்பெற்ற ஆளுடைய நம்பிகளுக்கு இடதுகண் கொடுத்தருளிய தலம். இப்புராண சரிதமுடையாராகிய திருக்குறிப்புத் தொண்ட நாயனார் தொண்டு செய்து திருவடியடைந்த வரலாறு இப்புராணத்துட் கூறப்பட்டது. அன்றியும் சாக்கியநாயனாரும், ஐயடிகள் காடவர்கோன்நாயனாரும் அருள் பெற்ற தலமுமிதுவாகும். முறையே பிரமா, விட்டுணு, உருத்திரர் பூசித்த வெள்ளைக் கம்பம், கள்ளக்கம்பம், நல்ல கம்பம் என்ற இலிங்கமூர்த்திகள் ஏகாம்பரத்தில் தெரிசிக்க உள்ளன. ஊழியில் தேவர்களைச் சமிதையாகக் கொண்டு சிவனார் வேள்விசெய்த திருக் கச்சிமயானம் என்ற தலம் (தேவார வைப்புத் தலம்) திருவேகம்பத்தினுள் கொடி மரத்தின் முன் உள்ளது. இதுவன்றிச் சிவசாரூபமெய்தத் தவஞ் செய்திருந்த விட்டுணு, ஆளுடைய பிள்ளையார் திருப்பதிகத்தைக் கேட்டு உருகிச் சிவலிங்க உருவமாய் அமைந்த திருக்கச்சி மேற்றளி என்பதும், ஓணன்,*

*காந்தன் என்ற அசுரர்கள் பூசித்த திருவோணகாந்தன்றளி என்பதும், விநாயகர் குபேரன் முதலியோர் பூசித்த திருக்கச்சியனேக தங்காவதம் என்பதும், இந்திரன், புதன் முதலியோர் பூசித்த திருக்கச்சி நெறிக் காரைக்காடு (காரை வனத்தில் உள்ளது) என்பதும் இத்திருநகர எல்லைக்குள் உள்ள தேவாரப் பாடல்பெற்ற நான்கு தலங்களாம். தொண்டை நாட்டுப் பாடல் பெற்ற தலங்கள் முப்பத்திரண்டனுள் ஐந்து தலங்கள் இந்நகர எல்லையுள் தரிசிக்க உள்ளன. இந்நாயனார் அருள்பெற்ற தலம் முத்தீசர் கோயில் எனப்பெறும்.*

*இறைவர் - திருவேகம்பர். அம்மை - காமாட்சியம்மையார் - ஏலவார்குழலி. விநாயகர் - விகடசக்கர விநாயகர். முருகர் - மாவடிக் குமரநாயகர். மரம் - மா. தீர்த்தம் - சிவகங்கை - கம்பை முதலியன. பதிகம் 12.*

*தீயவை என்பன கனவிலும் நினைவிலாத மனத்தையுடைய தூயமாந்தர்கள் வாழ்வது தொண்டை நன்னாட்டிற்குரிய பெரிய சிறப்பாகும்.*

*மகவின் நோய் தீர்தற் பொருட்டுத் தாய் மருந்துண்ணுதல் போல் உலகுயிர்கள் யாவையும் சிவனை அறிந்து பூசித்து உய்யும் பொருட்டு உலகத்தாயாகிய உமையம்மையார் ஆகமங்களை எல்லாம் இறைவரிடத்துக் கேட்டருளி, அவற்றின் விதிப்படி தவம்செய்து, சிவலிங்கத் திருமேனி கண்டு, ஆகமவிதி வழியே சிவபூசையும் செய்தருளினர். உலகுயிர்களின் பொருட்டே இறைவரிடத்து மூன்று பெருவரங்கள் கேட்டுப் பெற்று அறங்களை வளர்த்து வருவாராயினர். இவை அம்மையாரின் பெருங்கருணை யியல்பாம்.*

*சிவபூசையானது எல்லா மக்களும் என்றும் முடிவில்லாது அறிவும் ஆற்றலும் ஆயுளும் உள்ள அளவும் தங்களால் இயன்ற அளவு நித்தியமாய்ச் செய்துவரக் கடவதொன்று. இவ்வாறு தவறாது பூசை கொண்டருளும்படி இறைவரிடம் வரம் வேண்டிப் பெறுவது அறிவுடையோர் செயல்.*

*காமாட்சியம்மையார் தழுவக் கம்பர் குழைந்தமையால் உலகில் உள்ள எல்லா உயிர்களும் உயிரும் உடலும் உருகி ஒன்றாகி, அன்பு நெறிப்பட்டு வாழ்கின்றன. இஃது எங்கும் நிறைந்த முழுமுதற் கடவுள் சிவபெருமானே என்பதனை விளக்கும் உண்மையாகும்.*

*திருவடிப் பிழைத்தல், கழுவாயில்லாத பெரும்பாவம். அதனைச் செய்ய மனத்தால் நினைத்தலும் பாதகமாம்.*

*கம்பர், காமாட்சியம்மையாருக்கு அளித்த உணவின் மூலமாகிய இரு நாழி நெல், உலகுயிர்க்கெல்லாம் அறம் வளர்க்கும் வித்தாக ஓங்கி உலகங் காத்து இகபர சாதனங்களை அளித்து வருகின்றது.*

*புண்ணியத் திருக்காமக் கோட்டத்தி னெல்லையுள் இன்றும் காண நிற்கும் திசைமயக்கம் முதலிய பல அற்புதங்களையும், விம்மிதமாகிய மரங்கள் தீர்த்தங்கள் முதலியவற்றையும் கண்டு நல்வழிப்பட்டுப் பேறுபெற முயலுதல் அறிவுடை மக்களின் கடமை.*

*தெய்வங்களாற் காவல் செய்யப்படும் சிறப்பு ஒரு நகரின் பெருமைக்கு ஏதுவாகும். (1158-1159).*

*உயிர்களின் பொருட்டு உலகத்தாயாகிய காமாட்சியம்மையார் அறம் வளர்த்தும், தவமும் பூசையும் புரிந்தும் திருக்காமக் கோட்டத்தில் காமபீடத்தில் நித்தியமாக எழுந்தருளியிருக்கும் கருணைத்திறனைக் கண்டு வழிபட்டு உய்வது அறிவுடைய மாந்தர் கடன்.*

*பழஞ்சரிதப் பெருமையும், மன்னவர்வழிப் பெருமையும் பெற்றுடையது பெருநகரச் சிறப்புக்களுள் ஒன்றாகும்.*

*பெரியோர் உள்ளங்கள் ஓங்கு நிலைத்தன்மை பெற்றுச் சிவனருளில் நல்லொழுக்கமல்லாது தீங்கு நெறியடையாத தடையுமாகி விளங்குவன. மக்களின் மனைவாயில்களும் நகரமதில் வாயில்களும் அவ்வாறே நிற்றல் அமைவுடைத்து. (1165)*

*அந்திச் செக்கர்வானத்தையும் பிறைமதியினையும் கண்டபோது சிவபெருமான் திருச்சடையையும் அதில் வாழ்ந்தோங்கும் வளரிளம் பிறையையும் மனத்துக் கண்டு உருகிக் கும்பிட்டு அன்புருகிக் கண்ணீர் வார நிற்பது அன்புடையோர் தன்மை. இவ்வாறே சராசரங்களையும் காலந் திக்கு முதலியவற்றையும் சிவனுருவமாகவே காண்பது உண்மையன்பின் தன்மை. "காலையே போன்றிலங்கு மேனி" என்ற அற்புதத் திருவந்தாதியில் காரைக்காலம்மையார் விளக்கியருளிய இவ்வுண்மை நெறியினில் மனத்தினைப் பண்படுத்துவது அறிவுடையோர் கடன். (1169)*

*அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நாற்குலத்தோரும், இவர்களுள் ஒவ்வாப்புணர்ப்பில் வந்த குலபேதத்தோரும் எல்லாம் அவ்வவர் தந்தகைமைக்கேற்ற தனியிடங்கள் மேவித் தந்தந் தொழின் முறைமை வழாது பயின்று வளமுற வாழ்ந்திருத்தல் சிறந்த நகர அமைப்பின் இயல்பாகும். இச்சிறப்புக் காஞ்சிமா நகரத்திற்குள்ளது.*

*வீதிகளில் என்றும் விழாக்களின் அணி மலிந்து விளங்குவது பெருநகரின் சிறப்பு.*

# பாட்டு முதற்குறிப்பு அகராதி

## எண் – பாட்டெண்



| பாட்டு | எண் |
|---|---|
| **அ** | |
| அக்காரம் ஆடரவம் | 610 |
| அங்கை மறித்தவ | 545 |
| அஞ்சரத் தான்பொடி | 910 |
| அடங்காதார் ஆரொருவர் | 544 |
| அடிசார்ந்தவர்க்கு | 883 |
| அடிநின்ற சூழல் | 897 |
| அடியமர்ந்துகொள் | 502 |
| அடியாயிரந் தொழில் | 888 |
| அடியார்தம் ஆருயிரே | 560 |
| அடியொன்று பாதலம் | 815 |
| அடியோமைத் தாங்கியோ | 534 |
| அடிவலப் பாலது | 935 |
| அடுத்தபொன் அம்பலமே | 682 |
| அடைந்துன்பால் அன்பாய் | 667 |
| அடையுந்திசையீசன் | 744 |
| அடையும்படைமழுவும் | 707 |
| அந்தணாளர் | 772 |
| அந்திமதி முகிழான் | 520 |
| அமையாமென் தோள் | 624 |
| அமைவும் பிறப்பும் | 683 |
| அம்பரங் காலனல் | 925 |
| அம்பலவர் அங்கணர் | 840 |
| அயமால் ஊண் | 577 |
| அரசுமாய் ஆள்விக் | 580 |
| அரனே அணியாரூர் | 743 |
| அரன்காய நைவேற் | 575 |
| அரிதன் திருக்கண் | 909 |
| அரியாருங் | 571 |
| அருளின் கடலடியேன் | 851 |
| அருளு வாழி | 841 |
| அருளைத் தருகம்பர் | 906 |
| அருள்சேரா தாரூர் | 664 |
| அருள் நம்பாற் | 626 |
| அருள்பழுத் தளிந்த | 856 |
| அலங்கல் மணிகனகம் | 803 |
| அலங்காரம் ஆடரவம் | 620 |
| அலராளுங் கொன்றை | 561 |
| அல்லல் வாழ்க்கை | 829 |
| அழகறி விற்பெரி | 927 |
| அறமாய்வ ரேனும் | 746 |
| அறமானம் நோக்கா | 566 |
| அறிவில் ஒழுக்கமும் | 825 |
| அன்பு தவச்சுற்று | 795 |
| அன்பே உடைய | 718 |
| அன்றமரர் உய்ய | 724 |
| அன்றினர் புரங்கள் | 877 |
| அன்றும் பகையடர் | 921 |
| அன்றென்றும் ஆமென் | 878 |
| **ஆ** | |
| ஆக்கூர் பனிவாடா | 614 |
| ஆங்குரைக்க லாம் | 673 |
| ஆட்டும் அரவர் | 653 |
| ஆதரித்த மாலும் | 814 |
| ஆம்பரிசே செய் | 670 |
| ஆயம் அழிய | 584 |
| ஆயன்றமரர் | 704 |
| ஆய்ந்துன்தன் பாதம் | 716 |
| ஆரணம் நான்கிற்கும் | 852 |
| ஆர்துணையா ஆங்கிருப் | 701 |
| ஆல நிழற்கீழ் | 695 |
| ஆலையங்கார் | 956 |
| ஆவா மனிதர் | 647 |

| பாட்டு | பாட்டு எண் | பாட்டு | பாட்டு எண் |
|---|---|---|---|
| ஆழும் இவளையுங் | 578 | இனியாரும் ஆளாக | 633 |
| ஆளானம் சேர்களிறு | 618 | இன்றியாம் உற்ற | 592 |
| ஆளெனப் புதிதின் | 833 | இன்றிருந்து நாளை | 887 |
| ஆறாவெங் கூற்றுதைத் | 652 | இன்றுசெய் வோம் | 989 |
| ஆறுடையர் நஞ்சுடையர் | 747 | ஈ | |
| ஆனாய னாய | 739 | ஈண்டுமுற் றத்தொற் | 777 |
| ஆனேறே போந்தால் | 846 | ஈயும் பொருளே | 733 |
| இ | | ஈரம் உடைய | 730 |
| இக்கயங்கொள் மூவ | 800 | ஈரவே ரித்தார் | 845 |
| இடப்பாகமும் | 529 | உ | |
| இடமாய எவ்வுயிர்க் | 752 | உடைதலையின் | 764 |
| இடமால் வலமாலை | 628 | உடைப்புலி ஆடை | 934 |
| இடர்தரு தீவினைக் | 771 | உடைமணியின் ஓசை | 872 |
| இடவம் கறுக்கென | 941 | உடையோடு காடாடி | 590 |
| இடைக்குமின் தோற்கும் | 943 | உணரா வளைகழலா | 675 |
| இடைதரில் யாமொன் | 759 | உத்துங்க யானை | 924 |
| இதுநீர் ஒழிமின் | 762 | உந்தத் தளரா | 792 |
| இயங்குந் திரிபுரம் | 917 | உமைகங்கை என்றி | 722 |
| இயலிசை நாடக | 543 | உயிராய மூன்றொடுக் | 638 |
| இருக்கும் மருதினுக் | 885 | உயிரா யினவன்பர் | 981 |
| இருந்தவா காணீர் | 352 | உய்யாதென் ஆவி | 591 |
| இருளார் மிடற்றால் | 225 | உருவியலும் செம்பவ | 605 |
| இலமலரஞ் சேவடியார் | 617 | உருவுபலகொண்டொரு | 749 |
| இலர் கொலாம் என் | 776 | உரையா இருப்பதும் | 715 |
| இலவவெங் கானுனை | 963 | உரையின் வரையும் | 813 |
| இலவிதழ்வாய் வீழ் | 818 | உரைவந் துறும்பதத் | 535 |
| இல்லை பிறவிக் | 524 | உலவிய மின்வடம் | 977 |
| இவளப் பனிமால் | 765 | உலவு சலதி | 832 |
| இழையார் அரவணி | 975 | உவரச் சொல்வேடு | 966 |
| இறைக்கோ குறைவில்லை | 523 | உவவா நறுமலர்க் | 627 |
| இறைத்தார் புரமெய்த | 950 | உழப்பின் வாரார் | 871 |
| இனியவர் இன்னார் | 939 | உழிதரல் மடிந்து | 781 |
| இனியவா காணீர் | 723 | உளதள வில்லதோர் | 507 |

| பாட்டு | பாட்டு எண் |
|---|---|
| உளமால் கொண் | 559 |
| உள ரொளிய கங்கை | 767 |
| உள்வார் குளிர | 971 |
| உறாவேயென் சொற் | 581 |
| உறுகின்ற வெவ் | 958 |
| உறுமுந்த முன்னே | 756 |
| உற்றுரையாய் நன் | 666 |
| **ஊ** | |
| ஊனொன்றும் இல் | 686 |
| ஊருமதொற்றியூர் | 562 |
| ஊர்வதுவும் ஆனே | 752 |
| **எ** | |
| எமையாள வந்தார் | 753 |
| எம்மையும் எம்மை | 905 |
| எரியாடி ஏகம்பம் | 678 |
| எழுமலர்த் தண்பொழில் | 984 |
| எளியமென் றெள்கி | 782 |
| எனக்குவளை நில்லா | 622 |
| எனவே உலகெலாம் | 785 |
| எனவே எழுந்திருந்தாள் | 860 |
| என்றும் மலர்தூவி | 661 |
| என்நாம் இனிமட | 836 |
| என்னே இவளுற்ற | 662 |
| **ஏ** | |
| ஏகம்பனே யென் | 893 |
| ஏத்தியே என்னுள் | 510 |
| ஏத்துற்றுப் பார்த் | 671 |
| ஏறு தழீஇயவெம் | 807 |
| ஏறேய வாழ்முதலே | 713 |
| **ஒ** | |
| ஒருநெடுங் கங்கை | 787 |
| ஒழிந்த தெங்களுரை | 828 |
| ஒளியார் சுடர்மூன் | 567 |
| ஒளிவந்த வாபொய் | 855 |
| ஒன்றினோ டொான் | 865 |
| ஒன்று முதலாக | 557 |
| ஒன்றுரைப்பீர் போல | 657 |
| **ஓ** | |
| ஓங்கின ஊரகம் | 974 |
| ஓராதே அஞ்செழுத்து | 875 |
| **க** | |
| கச்சார் முலைமலை | 973 |
| கடலான காமத்தே | 857 |
| கடனாகக் கைதொழுமின் | 691 |
| கடனாகம் ஊராத | 573 |
| கடியரவர் அக்கர் | 568 |
| கணங்கொண்ட வல் | 508 |
| கண்டங் கரியன்உமை | 564 |
| கண்டம் நிறங்கறுப் | 554 |
| கண்ணி இளம்பிறை | 530 |
| கண்ணொன்றும் நந் | 866 |
| கண்திறந்து காயெரி | 676 |
| கரதலம் நுழைத்த | 766 |
| கரத்தத் தமருகத் | 937 |
| கரத்தினில் மாலவன் | 891 |
| கரியார்தாஞ் சேருங் | 719 |
| கரியானும் நான்முகனும் | 738 |
| கருதுங் கருத்துடை | 532 |
| கருத்துடைய ஆதி | 677 |
| கருப்புச் சிலையரங் | 522 |
| கருமுதல் தொடங்கிப் | 853 |
| கரையேனு மாதர் | 705 |
| கலம்பெரியார்க் காஞ் | 593 |

| பாட்டு | பாட்டு எண் |
|---|---|
| கலைகாமின் ஏர்காமின் | 582 |
| கலைமான் கைஏனப் | 742 |
| கவவுமணிக் கேடகக் | 796 |
| களியானைக் கன்றை | 518 |
| களிவந் தமுதூறிக் | 812 |
| கற்றானஞ் சாடுகா | 646 |
| கற்றைப் பவளச் | 929 |
| கனன்றாழி நன்னெஞ்சே | 604 |
| கனிய நினைவொடு | 505 |
| **கா** | |
| காக்கைவளை என் | 623 |
| காட்டிவைத் தார்தம் | 990 |
| காணங்கை இன்மை | 612 |
| காணாய் கபாலி | 668 |
| காணீர் கதியொன்றுங் | 873 |
| காதலைக் கும்வலத் | 932 |
| கார்மிக்க கண்டத் | 967 |
| கார்முகம் ஆரவண் | 980 |
| கார்விடைவண்ணத் | 982 |
| காலது கையது | 798 |
| காவார் பொழிற் | 737 |
| **கி** | |
| கிடக்கும் ஒருபால் | 928 |
| கிழவருமாய் நோய் | 822 |
| கிறிபல பேசிச் | 944 |
| **கு** | |
| குடை கொண்டிவ் | 811 |
| குணக்கோடி கோடா | 588 |
| குருகிள வேய்த்தோள் | 644 |
| குறியார் மணிமிடற் | 706 |
| குறையாப் பலியிவை | 783 |

| பாட்டு | பாட்டு எண் |
|---|---|
| **கூ** | |
| கூரால மேயாக் | 586 |
| கூறுபெறுங்கண்ணி | 551 |
| கூறுமின் தொண்டர் | 951 |
| கூற்றும் பொருளும் | 640 |
| **கே** | |
| கேளுற்றி யான்தளர | 806 |
| **கை** | |
| கைக்கும் பிணியொடு | 501 |
| கையா றவாவெகுளி | 594 |
| **கொ** | |
| கொடிக்குல வும்மதிற் | 553 |
| கொடிறு முரித்தன்ன | 547 |
| கொண்ட பலிநுமக்கும் | 538 |
| கொண்டலின் இருண்ட | 889 |
| கொண்டல் வண்ணத்தவன் | 847 |
| கொண்டற் காரெயிற்றுச் | 769 |
| கொம்பார் குளிர்மறைக் | 484 |
| கொழுந்திரள் தெண் | 768 |
| கொள்ளுங் கடுங்கதி | 959 |
| கொற்றத் துப்பில் | 705 |
| **கோ** | |
| கோப்பாடி ஓடாதே | 636 |
| **ச** | |
| சங்கிடத் தாளிடத் | 827 |
| சங்குகோள் எண்ணு | 526 |
| சடைமேல் ஒருத்தி | 884 |
| சடையே நீரகந் | 760 |
| சதுர்முகன் தந்தை | 849 |
| சந்து புனைய | 820 |
| சரணுடை யேனென் | 512 |

| பாட்டு | பாட்டு எண் |
|---|---|
| **சா** | |
| சாராவார் தாமுளரேல் | 680 |
| சார்ந்துரைப்ப தொன் | 663 |
| **சி** | |
| சிரமே விசும்பி | 808 |
| சிவனந்தஞ் செல்லதிக் | 725 |
| சிவன்மாட் டுகவெழுதும் | 651 |
| சிறைவண்டு பாடுங் | 969 |
| **சு** | |
| சுடர்ப் பிழம்பு | 799 |
| சுடர்விடு சூலப் | 886 |
| **சூ** | |
| சூதொன் றுனக்கறிய | 643 |
| சூர்தந்த பொற்குவட் | 809 |
| **செ** | |
| செய்தரு பொலம் படை | 802 |
| செய்ய திருமேனித் | 826 |
| செய்யான் கருமிடற் | 641 |
| செல்லு மளவும் | 726 |
| சென்றுசெருப் புக் | 684 |
| சென்றேறி விண்ணு | 954 |
| **சே** | |
| சேய்தந் தகைமை | 911 |
| சேரும் பிரான் | 720 |
| சேர்கின்ற சிந்தை | 755 |
| சேர்வும் உடையர் | 748 |
| **சொ** | |
| சொல்லாயம் இன்றி | 696 |
| **ஞா** | |
| ஞான்ற புனமாலை | 773 |
| **த** | |
| தம்மைப் பிறவிக் | 916 |
| தரம்பொற் பழியும் | 933 |
| தரித்தேன் மனத்துன் | 894 |
| தருக்கவற்றான் மிக்க | 936 |
| தருமருட் டன்மை | 930 |
| தலையாலங் காட்டிற் | 649 |
| தளரா மிகு வெள்ளம் | 976 |
| தனமிட் டுமைதழு | 902 |
| தன்மையிற் குன்றாத் | 901 |
| **தா** | |
| தாமரைக் கோவும் | 525 |
| தாமரைசேர் நான்முக | 634 |
| தாமென்ன நாமென் | 690 |
| தாமேய ஆறு | 708 |
| தாராய தண்கொன்றை | 579 |
| தாரான் எனினும் | 693 |
| தாரிளங் கொன்றை | 780 |
| தாளார் கமல | 700 |
| தானக்கன் நக்க | 625 |
| தானயன் மாலாகி | 679 |
| **தி** | |
| திரியப் புரமெய்த | 913 |
| திரியும் புரமெரித்த | 669 |
| திருக் கண்ணப்பன் | 498 |
| திருவளர் பவளப் | 850 |
| திருவாக்கும் செய்கருமம் | 500 |
| திறங்காட்டுஞ் சேயாள் | 589 |
| திறமென்னும் சிந்தை | 727 |

| பாட்டு | பாட்டு எண் | பாட்டு | பாட்டு எண் |
|---|---|---|---|
| தீ | | நன்றைக் குறுமிரு | 537 |
| தீயான மேனியனே | 754 | நன்னுத லார்கருங் | 970 |
| து | | நா | |
| துணைத்தா மரையடி | 926 | நாமத்தி னாலென்தன் | 823 |
| துணையொத்த கோவை | 964 | நாமம் நவிற்றாய்மனனே | 881 |
| தெ | | நாமே இடையுள்ள | 876 |
| தெய்வத் தாமரைச் | 862 | நாயனைய என்னைப் | 834 |
| தெருளிலார் என்னாவார் | 598 | நாவாய் அகத்துளதே | 642 |
| தெளிதரு கின்றது | 895 | நானுடைய மாடே | 703 |
| தெளியாய் மடநெஞ்சே | 599 | நானுமென் நல்குரவும் | 542 |
| தே | | நானே பிறந்த | 819 |
| தேடுற் றிலகள்ள | 945 | நி | |
| தேரோன் கதிரென் | 585 | நிலத்திமை யோரில் | 922 |
| தேவனைப் பூதப் | 514 | நிலந்துளங்க மேருத் | 788 |
| தொ | | நிலாவு புகழ்த்திரு | 962 |
| தொக்கு வருங்கணம் | 549 | நிலத்திவ் வுலகனைத் | 729 |
| தொடர நரைத்தங்க | 848 | நிறம் பிறிதாய்உள் | 552 |
| தொழுவாள் இவள் | 858 | நினைமால் கொண்டோடி | 711 |
| ந | | நினையடைந்தேன் சித் | 736 |
| நக்கரை சாளும் | 601 | நினையார் மெலியார் | 838 |
| நஞ்சுமிழ் பகுவாய் | 817 | நினைவார்க் கருளும் | 952 |
| நடமாடி ஏழுலகம் | 816 | நீ | |
| நடனம் பிரானுகந் | 938 | நீயேயாளாவாயும் | 660 |
| நட்டமா கின்றன | 616 | நீரென்னி லுமழுங் | 978 |
| நட்டம் நீ ஆடும் | 546 | நீரேஎருதேறும் | 728 |
| நண்ணிப் பரவும் | 953 | நூ | |
| நயந்தநாள் யானிரப் | 619 | நூறான் பயன் ஆட்டி | 656 |
| நலந்தர நானொான் | 899 | நெ | |
| நலம்பாயு மாக்க | 698 | நெஞ்சார் தரவின் | 962 |
| நல்கும் புகழ்க்கட | 946 | நெஞ்சிற் கொண்ட | 778 |
| நல்லார் பழிப்பில் | 519 | நெறிதரு குழலி | 482 |

| பாட்டு | பாட்டு எண் |
|---|---|
| நெறிதரு குழலை | 824 |
| நெறிவிரவு கொன்றை | 770 |
| நே | |
| நேர்த்தமை யாமை | 968 |
| நோ | |
| நோக்கிற்றுக் காமன் | 879 |
| ப | |
| பகரப் பரியானை | 750 |
| பகனாட்டம் பாட்டயரும் | 648 |
| படியேறும் பார்த்துப் | 734 |
| படையால் உயிர்கொன்று | 923 |
| பட்டாரண் பட்டரங் | 639 |
| பணியாய் மடநெஞ்சே | 574 |
| பண்டந்த மாதரத் | 513 |
| பண்ணாகப் பாடிப் | 751 |
| பண்பாய நான்மறை | 650 |
| பதங்க வரையுயர்ந் | 613 |
| பதியார் பழிதீராப் | 565 |
| பரப்பார் விசும்பிற் | 972 |
| பரமாய பைங்கட் | 717 |
| பரமாய விட்டுநின் | 735 |
| பரவித் தனைகிளை | 940 |
| பரிப்பருந் திண்மைப் | 960 |
| பரியானை ஊராது | 563 |
| பரிவின் தன்மை | 499 |
| பருப்பதம் சார்தவழ் | 949 |
| பருமுத் துதிர்த்திடும் | 908 |
| பலிக்குத் தலையேந் | 583 |
| பவனடியார் விண் | 611 |
| பா | |
| பாங்குடை கோள் | 942 |
| பாதம் பரவியொர் | 991 |
| பாயும் விடையூர்தி | 587 |
| பார்கால்வான் நீர்தீப் | 635 |
| பார்த்துப் பரியாதே | 685 |
| பார்மேவு கின்ற | 709 |
| பாலார் புனல்பாய் | 672 |
| பி | |
| பிரானிடபம் மால்பெரிய | 658 |
| பிறப்பாழ் குழியிடை | 527 |
| பிறிந்தேன் நரகம் | 869 |
| பு | |
| புகலூர் உடையாய் | 702 |
| புண்ணிய புராதன | 880 |
| புலர்ந்தால், யான் ஆற் | 630 |
| புறந்தாழ் குழலார் | 654 |
| புறமறை யப்புரி | 533 |
| புனங்குழை யாதென்று | 919 |
| புனை கடற்குப் பொன் | 600 |
| பூ | |
| பூங்கொத் திருந்தழை | 903 |
| பூமேல் அயனறியா | 810 |
| பெ | |
| பெயரா நலத்தொழில் | 915 |
| பெருங்காதல் என்னொடு | 516 |
| பெறுகின்ற எண்ணிலி | 839 |
| பெற்றமெல் லோதி | 801 |
| பெற்றுகந் தேனென் | 896 |
| பெற்றும் பிறவி | 659 |
| பெற்றோர் பிடிக்கப் | 830 |
| பே | |
| பேசுக யாவரும் | 914 |
| பேசு வாழி | 837 |

| பாட்டு | பாட்டு எண் | பாட்டு | பாட்டு எண் |
|---|---|---|---|
| பேச்சுப் பெருகுவதென் | 665 | மலையார் கலையோட | 699 |
| பேசுறு தகையம் | 790 | மனமாய நோய் செய் | 631 |
| பேதையெங் கேயினித் | 831 | மனையாய் பலிக்கென்று | 595 |
| பேய்ச்சுற்றம் வந் | 555 | மன்னும் பிறப்பறுக்கும் | 556 |
| பேரானை ஈருரிவை | 637 | மா | |
| பொ | | மாட்டும் பொருளை | 714 |
| பொய்நீர் உரைசெய் | 786 | மாயானைஓர் பாகம் | 674 |
| பொய்வரு நெஞ்சினர் | 988 | மாலை ஒருபால் | 558 |
| பொருளாக யானிரந் | 779 | மாறாத ஆனையின் | 732 |
| பொருளும் குலனும் | 863 | மாறுதடுத்த | 758 |
| போ | | மானும் மழுவும் | 854 |
| போகபந் தத்தந்தம் | 509 | மி | |
| போதரங்க வார்குழலார் | 645 | மிடற்றாழ் கடல்நஞ் | 521 |
| போதும் பெறாவிடில் | 861 | மின்களென்றார் சடை | 900 |
| போந்தார் புகவனைந்தார் | 632 | மின்னலிக் கும்வணக் | 965 |
| ம | | மின்னெடுங் கொண்டல் | 793 |
| மகிழ்ந்தன்பர் மாகாளஞ் | 721 | மு | |
| மணிசிந்து கங்கைதன் | 789 | முகம்பாகம் பண்டமும் | 985 |
| மணியமரும் மாமாட | 536 | முதல்வன் வகுத்த | 757 |
| மணியார் அருவித் | 948 | முலைநலஞ்சேர் கானப் | 607 |
| மணிவாய் முகிழ்ப்பத் | 835 | முனிவன்மால் செஞ்சடை | 629 |
| மதந்தந்த மென்மொழி | 804 | முன்னிளங் காலத்தி | 511 |
| மதிமயங் கப்பொங்கு | 531 | மூ | |
| மதியாருஞ் செஞ்சடை | 694 | மூன்றரணம் எய் | 745 |
| மதியால் அடுகின்ற | 602 | மெ | |
| மயக்கத்த நல்லிருள் | 986 | மெய்த்தொண்டர் | 892 |
| மயலான தீரும் | 741 | மெய்யன் பகலாத | 655 |
| மலரணைந்து கொண்டு | 688 | மே | |
| மலர்ந்த படத்துச்சி | 931 | மேய உருமிடற்றர் | 791 |
| மலர்ந்த மலர்தூவி | 540 | மேயிரை வைகக் | 987 |
| மலைசூழ்ந் திழிகின்ற | 797 | | |
| மலையத் தகத்தியன் | 947 | | |

| பாட்டு | பாட்டு எண் |
|---|---|
| மேலாயதேவர் | 681 |
| மேவிய புன்மயிர்த் | 874 |
| **மொ** | |
| மொழியின் மறைமுதலே | 794 |
| **யா** | |
| யாமானம் நோக்கா | 569 |
| யானென்றங் கண்ணா | 570 |
| யானை முகத்தான் | 506 |
| **வ** | |
| வகுப்பார் இவர்போல் | 918 |
| வசையில் காட்சி | 859 |
| வடிவார் அறப்பொங்கி | 606 |
| வணக்கம் தலைநின் | 898 |
| வணங்குமிடை யீர் | 844 |
| வண்ணம் ஐஞ்சுதலை | 763 |
| வந்தார் வளைகழல் | 692 |
| வந்தா றலைக்கும் | 539 |
| வந்திக்கண் டாயடி | 870 |
| வந்தும் மணம்பெறிற் | 912 |
| வரங்கொண் டிமை | 979 |
| வரிநீல வண்டலம்பு | 609 |
| வருகோட் டருபெருந் | 517 |
| வருத்தந் தரும் மெய் | 904 |
| வருந்தேன் இறந்தும் | 864 |
| வரையொன்று நிறுவி | 821 |
| வழிபிழைத்து நாமெல் | 890 |
| வளர்தரு கவட்டின் | 805 |
| வளைகொண்டாய் | 740 |
| வளையார் பசியின் | 882 |
| வனப்பார் நிறமும் | 603 |
| வனவரித் திண்புலி | 961 |
| **வா** | |
| வாய்த்த அடியார் | 689 |
| வாரணிந்த கொங்கை | 710 |
| வாழப் பெரிதெமக் | 957 |
| வாழைக் கனிபல | 503 |
| வாழ்ந்தனம் என்று | 868 |
| வாழ்வாக வும்தங்கள் | 843 |
| வாழ்வார் மலரணை | 731 |
| வானம் மணிமுகடா | 528 |
| வானோர் பணிய | 842 |
| **வி** | |
| விடைபாய் கொடுமை | 983 |
| விண்ணுதல் நுங் | 515 |
| விதிகரந்த வெவ் | 548 |
| விநாயகனே வெவ் | 504 |
| வியந்தாழி நன்னெஞ் | 572 |
| விரையாரும் மத்தம் | 697 |
| விரையார் புனற்கங்கை | 621 |
| **வெ** | |
| வெள்காதே உண்பலிக் | 550 |
| வெறியானை ஊர் | 576 |
| **வே** | |
| வேட்கை வினைமுடித்து | 514 |
| வேதியர் பெரும | 784 |
| வேந்துக்க மாக்கடற் | 774 |
| வேலை முகடும் | 761 |
| வேறுரைப்பான் கேட் | 687 |
| **வை** | |
| வையார் மழுப்படை | 907 |